இந்தியாவில் வரிவிதிப்பு

TAXATION in India

k

ஆசிரியர்

டாக்டர் ப. வ. இராஜகுமார், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

பொருளாதார இணைப்பேராசிரியர்,

மாநிலக் கல்லூரி,

சென்னை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண் — 584

இந்தியாவில் வரிவிதிப்பு

ஆசிரியர்

டாக்டர் ப. வ. இராஜகுமார், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பொருளாதார இணைப்பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை

Author.

Dr. P.V. Rajakumar, M.A; M.Lit; Ph.D.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition— September, 1974

T.N.T.B.S. (C.P.) No. 584

© Tamilnadu Textbook Society

TAXATION IN INDIA

Dr. P. V. RAJKUMAR

Price Rs. 7-25

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Metropolitan Printers
Madras 600002

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்) 12410

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியாவில் வரிவிதிப்பு' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 584 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 619 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

1. இந்தியாவில் வரிவிதிப்பு (Taxation in India) ... 1

இந்திய வரித்திட்டத்தின் வளர்ச்சி—முதல் உலகப் போருக்குமுன் இந்திய வரித் திட்டம்—முதல் உலகப் போரும் இந்தியப் பொது நிதியியலும்—வரி விசாரணைக் குழு — அரசிறைக் கைகோளின் தோற்றம்—இரண்டாம் உலகப்போரும் இந்திய வரியமைப்பும்—மாற்றத்தின்போது இந்திய நிதியம்—கூட்டரசு நிதி இணைப்பு—இந்தியாவில் கூட்டரசு நிதியம் — இணைந்த பட்டியல்—மாநில அரசு பட்டியல்—மத்திய அரசு பட்டியல்.

2. வரிவிதிப்பும், இந்தியப் பொருளாதார முன்னேற்றமும் (Taxation and Indian Economic Development) ... 16

பொருளாதார முன்னேற்றம் — வளப்பொருள்களின் இடப்பெயர்ச்சி—சேமிப்புகளின் ஆதாரம்—வெளிநாட்டு நிதி—பற்றுக்குறை நிதியாக்கம்—தனியார் சேமிப்புகள்—நிறுவனச் சேமிப்புகள்—அரசாங்கக் கடன்கள்—வரிவருவாய்களின் அளவு—வளரும் பொருளாதாரத்தில் அரசிறைக் கைகோளின் முக்கிய நோக்கங்கள்—திட்டங்களும் வரியமைப்பும்—வரி விசாரணைக்குழு—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் இந்திய வரியமைப்பும்—கால்டரின் வரிச்சீர்திருத்தம் — மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்.

3. இந்தியாவில் வருமான வரிச் சீர்திருத்தம் (Reform of Income Tax in India) ... 45

தனிப்பட்டோருக்கு வருமான வரி—அதன் பலன்களும் குறைகளும்—வருமானம் என்ற சொல்லுக்குச் சரியான விளக்கவுரை—இன்றைய வருமான வரிச் சட்டத்தின் குறைபாடுகள்—வருமான வரியின் உயர் வீதங்களின் பயனின்மை—வருமான வரி விதிப்புச் சீர்திருத்தத்திற்காகக் கால்டரின் யோசனைகள்—

இந்தியாவில் வருமான வரி பற்றிய மதிப்புரை—சில வகை முக்கிய வரி விலக்குகள்.

4. வருடாந்திரச் செல்வ வரி (An Annual Tax on Wealth) ... 75

வருடாந்திரச் செல்வ வரி—செல்வ வரியின் அடிப்படைக் காரணம்—செல்வ வரிக்கு எதிரான வாதங்கள்—உலகின் வரித்திட்டங்களில் செல்வ வரியின் இடம்—செல்வ வரியினைப்பற்றி வரி விசாரணைக் குழுவின் கருத்து—இந்தியாவில் செல்வ வரி — செல்வ வரியிலிருந்து விலக்கு — நிறுவனங்களுக்கு உதவி—செல்வ வரி அதிகாரிகள்—வரி வீதங்கள்—செல்வ வரியும் கால்டரின் அறிக்கையும்—செல்வ வரித் திட்டத்தில் மாறுதல்கள்.

5. முதலீட்டு ஆதாய வரி (The Taxation of Capital Gains) ... 90

முதலீட்டு ஆதாயத்தின் விளக்கம்—முதலீட்டு ஆதாயத்தின் தன்மைகள்—முதலீட்டு ஆதாயம் வருவாயாகுமா?—பணமாக்கப்படாத ஆதாயத் தவிர்ப்பு—மற்ற நாடுகளில் முதலீட்டு ஆதாய வரி—இந்தியாவில் முதலீட்டு ஆதாய வரி—வரி விசாரணைக் குழுவும் முதலீட்டு ஆதாய வரியும்—கால்டரின் வரிச் சீர்திருத்தமும் முதலீட்டு ஆதாய வரியும்—இணைப்பு வரியமைப்பும் முதலீட்டு ஆதாய வரியும்—பழைய முதலீட்டு ஆதாய வரியும் புதிய முதலீட்டு ஆதாய வரியும்—முதலீட்டு ஆதாய வரி விதிப்பில் பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்.

6. தனிப்பட்டோர் செலவீட்டு வரி (A Personal Expenditure Tax) ... 106

தனிப்பட்டோரின் செலவீட்டு வரி—இவ் வரியின் வரலாறு—செலவீட்டு வரியின் காரண விளக்கம்—இந்தியாவில் செலவீட்டு வரி பற்றிக் கால்டரின் கருத்து—இந்தியாவில் செலவீட்டு வரி—இந்தியாவில் செலவீட்டு வரி விதிப்பு.

7. பொதுப் பரிசு வரி (A General Gift Tax) ... 117

மரண வரிக்குத் துணையாகப் பரிசு வரி—மரண வரியும் வருமான வரியும்—மரண வரியிலிருந்து

தப்புதல்—பரிசு வரி—பரிசு வரியையும் மரண வரியையும் இணைத்தல்—இந்தியாவில் எஸ்டேட் வரி—பரிசு வரி பற்றிய வரி விசாரணைக்குழு—இந்தியாவில் பரிசு வரி—வரி வீதங்கள்—கால்டரின் சீர்திருத்தத்தின்படி பரிசு வரி பற்றிய மதிப்பீடு.

8. நிறுவன வருமான வரி விதிப்பு (Taxation of Company Income) ... 130

நிறுவனங்களின்மீது வருமான வரி—கார்ப்பரேஷன் வரி—அதிகப்படி இலாப வரி—வியாபார இலாப வரி—சுதந்திரத்திற்குப் பிறகு நிறுவனங்களின்மீது வரிவிதிப்பு—இந்தியாவில் நிறுவன வரி பற்றிக் கால்டர்—கால்டரின் சீர்திருத்தத்திற்குப் பின்னர் இந்தியாவில் நிறுவன வரிவிதிப்பு—நிறுவன வரிவிதிப்பின் சிரமைப்பு—மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிறுவன வரிவிதிப்பில் ஏற்பட்ட மாறுதல்கள்.

9. இந்திய அரசாங்கத்தின் மறைமுக வரிவிதிப்பு (Indirect Taxation of the Government of India) ... 148

இந்திய அரசாங்கத்தின் மறைமுக வரிவிதிப்பு—சுங்கத் தீர்வைகள்—இறக்குமதி வரிகள்—ஏற்றுமதி வரிகள்—ஆயத்தீர்வைகள்—உப்பு ஆயத்தீர்வை—இதர ஆயத்தீர்வைகள்—ரயில் பிரயாணிகள் செலுத்தும் கட்டணத்தின்மீது வரி.

10. வரியல்லாத வருவாய் (Non-Tax Revenues) ... 161

வரியல்லாத வருவாய்—இரயில்வே நிதியம்—தபால் தந்தி இலாகா—செலாவணியும் நாணயச் சாலையும்—மாநிலங்களில் பொதுத்துறைத் தொழில்கள்—இதர பொதுத்துறைத் தொழில்கள்.

11. இந்திய அரசாங்கச் செலவு (Public Expenditure in India) ... 177

மத்திய அரசின் செலவினங்கள்—வருவாய்க் கணக்குக்கான செலவு—சமுதாயப் பணிகளும் முன்னேற்றப் பணிகளும்—முதலினச் செலவு—மாநிலங்களின் செலவு—வருவாய்க் கணக்குச் செலவு—முதலினச் செலவு—செலவீட்டுக்

பக்கம்

கொள்கைத் தீர்மானிகள்—இரண்டாவது உலகப் போர்—திட்டங்கள் — திட்டங்களில் முதலீடுகளின் அளவும் வகையும்.

12. இந்தியப் பொதுக்கடன் (The Indian Public Debt) ... 202

இரண்டாவது உலகப்போருக்கு முன்னர் இந்தியப் பொதுக்கடன்—இரண்டாம் உலகப்போரின்போது இந்தியப் பொதுக்கடன் — பாகிஸ்தானுடன் நிதி உடன்பாடு — இந்தியாவில் பொருளாதார முன்னேற்றமும் திட்டங்களும் — நாட்டு வருமானத்தில் உள்நாட்டுக் கடன் வீதம்—கடனுக்கான வட்டியும் நாட்டு வருமானமும்—வரிவருவாயும் கடன் பணிகளும் — அரசாங்கச் செலவும் வட்டிக்கான செலவும்—திட்டங்களில் உள்நாட்டுக் கடன்—முதல் ஐந்தாண்டுத் திட்டம் — இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்—நாட்டின் வெளிநாட்டுக் கடன்.

13. பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing) ... 221

பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பற்றுக்குறை நிதியாக்கம்—பற்றுக்குறை நிதியாக்கமும் பணவீக்கமும் — பற்றுக்குறை நிதியாக்கத்தின் வரையறை—முதல் திட்டத்தின்கீழ்ப் பற்றுக்குறை நிதியாக்கம்—இரண்டாவது திட்டத்தில்பற்றுக்குறை நிதியாக்கம்—மூன்றும் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம்—ஆண்டுத் திட்டங்களின்கீழ்ப் பற்றுக்குறை நிதியாக்கம்—பற்றுக்குறை நிதியாக்கமும் விலைமட்டமும்.

14. நிதி நிருவாகம் (Financial Administration) ... 229

வரவு செலவுத் திட்டத்தின் பங்கு—இந்தியாவில் வரவு செலவுத் திட்டம்—வரவு செலவுச் சீர்திருத்தம்—வரவு செலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பிரிவினை—செயல்முறை வரவு செலவுத் திட்டம்—செலவினங்களின் கட்டுப்பாடு—பாராளுமன்றம்—அரசாங்கக் கணக்கீட்டுக்குழு—மதிப்பீட்டுக் குழு—அரசாங்கத் தொழிலீடுபாட்டுக் குழு—நிதி அமைச்சு—நிருவாக அமைச்சுகள்—தணிக்கை.

பக்கம்

15. மாநில அரசு வரிகள் (Taxes of the State Governments ... 244

நில வருவாய்—விவசாய வருமான வரி—மாநில ஆயத்தீர்வைகள்—விற்பனை வரி—மோட்டார் வண்டி வரி—முத்திரை வரிகளும் பதிவு வரிகளும்—பொழுது போக்கு வரி அல்லது கேளிக்கை வரி.

16. இந்தியாவில் தலநிதி (Local Finance in India) ... 266

தலநிதியும் இந்திய அரசியல் அமைப்பும்—தலநிதி விசாரணைக் குழுவின் அறிக்கை, 1951—வரி விதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கை, 1953 - '54 — இந்தியாவில் வளர்ச்சித் திட்டமும் தலநிதியும்—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நாட்டு விஸ்தரிப்புத் திட்டங்கள்பற்றிய தேர்வுக் குழுவின் அறிக்கை, 1957—பஞ்சாயத்து நிதிகள் — மாநிலச் சட்ட திட்டங்களுக்கேற்ப, பஞ்சாயத்து ஆட்சியின் வெவ்வேறு பிரிவுகளால் விதிக்கப்படும் கட்டணங்கள் —பஞ்சாயத்து ஆட்சி நிதிபற்றிய ஆய்வுக்குழு— நகர்ப்புறத் தல உறுப்புகளின் நிதி.

17. மத்திய - மாநில அரசுகளின் நிதித்தொடர்பு (Centre - State Financial Relations) ... 281

நிதிக்குழு—முதல் நிதிக்குழு—இரண்டாம் நிதிக் குழு—மூன்றாவது நிதிக்குழு—நான்காவது நிதிக் குழு—ஐந்தாவது நிதிக்குழு—நிதிபற்றி மத்திய மாநில அரசுகளின் தகராறு—மத்திய மாநிலத் தொடர்புக்காக இராஜமன்னர் குழு—ஆறாவது நிதிக்குழு—குழுவிற்கு ஒதுக்கப்பட்ட வேலைகள்—வரிப்பங்கீடு.

18. இந்திய வரி அமைப்பு (Indian Tax Structure) ... 298

வரி விதிப்பின் வளர்ச்சி—மறைமுக வரி விதிப்பின் முக்கியத்துவம்—நேர்முக வரிவிதிப்பு — விவசாயப் பகுதியில் குறைவான வரி விதிப்பு—வாஞ்சூ குழுவின் அறிக்கை—இந்திய அரசின் வரவு செலவுத் திட்ட நிலை—பொதுச் செலவினப் போக்குகள்—மாநிலங்களின் நிதிகள்—மாநிலப் பரிசு சீட்டுத் திட்டங்கள்—தமிழ்நாட்டில் நகர்ப்புற நிலவரி — மாநில வரிவருவாய்ப் பற்றுநிலை.

மேற்கோள் நூற்பட்டியல் ... 362

1. இந்தியாவில் வரிவிதிப்பு
(Taxation in India)

1.1. இந்திய வரித்திட்டத்தின் வளர்ச்சி (Evolution of Indian Tax System) : இந்தியாவின் தற்போதைய வரித்திட்டத்தைப் பற்றி அறியவும், மதிப்பிடவும் வேண்டுமானால் கடந்த சில ஆண்டுகளில் இந்திய வரித்திட்டத்தின் வளர்ச்சியை ஆராய்தல் அவசியமாகும். தற்காலத்திய இந்திய வரிவிதிப்புமுறை, ஆங்கிலேய நிருவாகிகளுக்குக் கடமைப்பட்டிருப்பதால், இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியில் இந்திய வரித்திட்டம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதைப்பற்றிச் சிறிதளவாகிலும் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

முன்னுள் இந்திய வரி அமைப்பினை, தர்க்கரீதிக்குப் புறம்பான (illogical) ஆனால் காலத்திற்கேற்ற வளர்ச்சிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு எனலாம். வரலாற்றின் மாறுதல்களோடு நமது வரி அமைப்பும் வளர்ந்து வந்துள்ளது. 'அஃது அவ்வப்போது ஏற்படும் அரசியல் முன்னேற்றம், நமது பொருளாதாரத்தின் மாறும் தன்மை, வரிவருவாயைப் பெருக்கத் திரும்பத் திரும்ப ஏற்படும் தேவைகள் இவற்றைச் சமாளிக்க அமைக்கப்பட்ட திட்ட முடிச்சாகும்' (It is a bundle of expedients designed to meet the periodical constitutional developments, the changing character of our economy and the recurring need to expand revenues)[1]. ஐக்கிய நாடுகளுக்கென (United Nations) செய்த ஓர் ஆராய்ச்சியில், 'இங்கிலாந்தில் பொதுநிதியியல் வளர்ச்சி பெற்று, இந்தியாவிலும், மற்றும் சில குடியேற்ற நாடுகளிலும் சிறு மாறுதல்களுடன் நடைமுறைக்கு வந்ததால், ஆங்கிலப் பரம்பரையின் அடையாளச் சின்னங்களை இந்தியப் பொதுநிதியியலின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம்' என்று திருமதி அர்சுலா ஹிக்ஸ் (Mrs. Ursula Hicks) கூறுகிறார்

[1] Indian Taxation, Editorial No. 7. Vol. III, July 1952.

(Indian Public Finance bears on every page the imprint of the British tradition, as it was developed at home and transplanted with minor adjustments to India and other colonial territories)[2].

1.2. முதல் உலகப்போருக்குமுன் இந்திய வரித்திட்டம் (Indian Tax System before First World War, 1914 - '18) : 1914ஆம் ஆண்டிலிருந்து 1918ஆம் ஆண்டு வரை நடந்த முதல் உலகப் போருக்குமுன், இந்தியப் பொதுநிதியியல், வருவாயை மட்டுமே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. அதாவது இடைக்கால விக்டோரியக் (Mid. Victorian) கொள்கைப்படி, 'வருவாய்க்காக மட்டுமே வரிவிதிப்பு' (Taxation for revenue) என்று இருந்தது. வரித்திட்டம் அதன் விளைவுகளைப் பொறுத்தவரை பாரபட்சமற்றதாக இருக்க வேண்டுமெனவும் கூறப்பட்டது.

அன்றைய இந்திய அரசியல், பொருளாதார நிலை, இன்றைய நிலையிலிருந்து வேறுபட்டிருந்தது. அன்று, இந்தியா, இங்கிலாந்தின் ஆட்சியின்கீழ் இருந்தது. அப்போதைய இந்தியாவில், இப்போதைய இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய மூன்று நாடுகளின் மொத்தப் பரப்பும் அடங்கியிருந்தது. அதோடுகூட, ஆங்கிலேயருக்குட்பட்ட இந்தியாவில் இருந்த பொதுநிதியியல் அமைப்புடன், இந்திய இராச்சியங்களின் வரித்திட்டங்கள் ஒன்று சேரவில்லை. 'பொதுநல அரசினை' (Welfare State) உருவாக்க ஒருவித முயற்சியும் இல்லை. வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலவச் செய்தல், உள்நாட்டு நிருவாகத்தை நடத்துதல் ஆகிய மூன்று முக்கிய வேலைகளை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உதவ வருமானத்தைக் கொடுப்பதே வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாக விருந்தது. சமுதாயத்தில், சொத்திலும், வருமானத்திலும் இருந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்கப் பொதுநிதியியல் பயன்படுத்தப்படவில்லை. உண்மையில், இந்தியாவின் முதல் ஆங்கிலேய நிதியமைச்சரான திரு. ஜேம்ஸ் வில்சன் (Mr. James Wilson) என்பவரும், மற்றொரு திறமைவாய்ந்த ஆங்கிலேய நிதியமைச்சரான திரு. சாமுவெல் லெயிங் (Mr Samuel Laing) என்பவரும் வரிவிதிப்பில் சமுதாயக் கொள்கைகள் சேர்க்கப்படுவதை எதிர்த்தனர். மேலும், சமூகச் சீர்திருத்தங்களுக்கு வரிவிதிப்பு ஒரு கருவியாக எண்ணப்படவேயில்லை. அப்போது பொருளாதார முன்னேற்றத்திற்காக எந்தவொரு திட்டமும் கிடையாது. ஆங்கில ஆட்சியில், பொதுநிதித் திட்டத்தில், மத்திய அரசின் வருவாயில் சுங்கவரிகளும் ஆங்கில

[2] U. K. Hicks — The Public Finance Survey of India, United Nations, 1951, p. 1.

ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களின் வருவாயில் நிலவரியும் முக்கிய இடத்தை வகித்தன. மத்திய அரசின் வருவாய்க்கு உப்பு ஒரு முக்கிய ஆதாரமாக இருந்தது. ஆங்கில ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில், மதுபானங்களின்மீது விதிக்கப்பட்ட ஆயத் தீர்வைகள் (excise) இரண்டாவது இடத்தை வகித்தன. மத்திய அரசின் வருவாய்க்கு வருமானவரி முக்கிய ஆதாரமாக இல்லை. மாநிலங்களில் அப்போது விற்பனைவரியும் இல்லை. வரித்திட்டமும் தேய்வு (regressive) வீதத்தில் இருந்ததால், வரிச்சுமை நியாயமற்ற முறையில் பங்கிடப்பட்டிருந்தது.

1.3. முதல் உலகப்போரும் இந்தியப் பொதுநிதியியலும் (First World War and Indian Public Finance) : மந்தநிலையிலிருந்த இந்தியப் பொதுநிதியியலுக்கு, முதல் உலகப்போர் (1914—'18) அதிர்ச்சியைக் கொடுத்தது எனலாம். இந்திய தேசியக் காங்கிரஸ் ஏற்படுத்திய விடுதலை இயக்கம் (Independence Movement) இந்தியப் பொதுநிதித் திட்டத்தில் கண்ட குறைபாடுகளை எடுத்துக் காட்டியது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள், அவர்களது அரசியல் கொள்கைகளுக்கேற்ப அமைத்த புதுமையான, பொதுநிதித் திட்டமே, இந்திய மக்களின் ஏழ்மை நிலைக்குக் காரணமென இந்திய தேசியத் தலைவர்கள் கருதினர். உண்மையில், வளர்ந்து வந்த நம் நாட்டின் தொழில்கள் ஆங்கில ஆட்சியில் வீழ்ச்சியுறக் காரணம், ஆங்கிலேயரது கெடுதி விளைவித்த அரசிறைக் கைக்கோள் (Fiscal Policy) ஆகும். மூலப்பொருள்களை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்துவிட்டு, அங்கிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்தியாவைக் கொண்டுவரவேண்டுமென்பதே அக் கொள்கையின் நோக்கமாகும். இங்கிலாந்தில் லங்காஷயர் துணித்தொழில் வளர்ச்சியடைந்ததற்கு, இக் கொள்கையே காரணமாகும் என்று இந்திய தேசியத்தலைவர்கள் சலிப்பின்றிக் கூறிவந்தனர். இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்படக் காரணம், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கைகளே எனச் சில தீவிரவாதிகள் கூறினர். ஆங்கிலேயர் இரக்கமற்ற முறையில், பொருளாதாரத்தை அவர்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள இக் கொள்கை உதவியது. இதனை எதிர்த்து, முதல் உலகப்போருக்குப் பின் ஒரு தேசிய இயக்கம் தோன்றியது. முதன் முதலாக, இந்தியச் சட்டசபை வரிவிதிப்புக் கொள்கைகளையும், வரிப்பங்கீட்டு முறைகளையும்பற்றி ஆராய வேண்டியதன் அவசியத்தை அது நிருவாகத்திற்கு உணர்த்தியது.

1.4. வரிவிசாரணைக்குழு (Taxation Enquiry Committee, 1924—'25) : ஆகவே, மக்களின் இத்தகைய பரவலான

அதிருப்தியைப் போக்க, இந்திய அரசு 1924ஆம் ஆண்டு ஒரு வரி விசாரணைக் குழுவை நியமித்தது. இக் குழுவின் தலைவர் சர். சார்லஸ் டாட்ஹண்டர் (Sir Charles Tod Hunter) என்பவராவார். இக் குழு: (1) மக்கள் தொகையில் பல்வகைப்பட்ட பிரிவினரிடையே வரிச்சுமை எவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது என்பதை ஆராயவும், (2)மத்திய, மாநில, தல வரிவிதிப்பு முறைகளை முற்றிலும் ஆராய்ந்து அவை பொருளாதார முறைகளுக்கு ஏற்றதாக உள்ளனவா, இல்லையென்றால் எவ்விதத்தில் குறைபாடுகளைக் கொண்டுள்ளன என்பதை ஆராயவும், (3) வரிவிதிப்புக்கு வேறு வழிகளைக் கூறவும் ஏற்படுத்தப் பட்டது.

1925ஆம் ஆண்டில், இக் குழு அறிக்கையை வெளியிட்டது. இவ் வறிக்கை, இந்திய வரித்திட்டத்தை முன்னேற்றுவதற்கு முதல் முயற்சியாக அமைந்தது. இருந்தபோதிலும், ஆங்கில அரசு சில காரணங்களின் அடிப்படையில் குழுவின் ஆலோசனைகளில் பெரும்பாலானவற்றை நடைமுறையில் கொண்டு வரவில்லை.[1] ஆகவே, இரண்டாம் உலகப்போர் தொடங்கும்வரை இந்தியப் பொதுநிதியியலின் நிலை பெரும்பாலும் முன்பு இருந்ததுபோலவே இருந்தது. மேனாடுகளில் பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டு வந்த பொதுநிதியியலில் வெடிகுண்டினை வீசிப் புரட்சியை உண்டாக்கிய 1929–'30ஆம் ஆண்டுப் பெரும் மந்தம் (Great Depression) கூட, இந்தியாவில் ஒருவித மாறுதலையும் விளைவிக்கவில்லை.

1.5. அரசிறைக் கைக்கோளின் தோற்றம் (Emergence of Fiscal Policy): 1929-'30 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமந்தம் பொதுநிதியியலின் கோட்பாட்டிலும், நடைமுறையிலும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம். பரம்பரைப் பொதுநிதியியலைப் பற்றிய விவரங்கள் 1870 ஆம் ஆண்டுக்கும், 1930 ஆம் ஆண்டில் ஏற் பட்ட பெரு மந்தத்துக்கும் (Great Depression) இடையே வளர்ச்சி யுற்றன. அக் காலத்தில் பொதுநிதியியல், வரிவருவாய் சேகரிப்பது சாத்தியமாகுமா என்பதைப்பற்றியும், தனிப்பட்டோர் வரிகளின் பளுவைப்பற்றியும் முக்கியமாகக் கவனித்தது. வரியமைப் பினால் ஏற்பட்ட விளைவுகள், வரிச்சலுகைகளுக்கு (Revenue Considerations) இரண்டாவதாகத்தான் முக்கியத்துவத்தைக் கொடுத்தன. மொத்தத்தில், வரியமைப்பின் நடுநிலையே (neutrality) முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டுமெனப் பல பொருளாதார நிபுணர்கள் கருதினர்.

பரம்பரைப் பொதுநிதியியல், வரவுசெலவுத் திட்ட நிரு வாகத்தில் குறைவான கவனமே செலுத்தியது. 1930ஆம் ஆண்டின்

[1] K. V. Rangaswamy Ayyangar, Some Trends of Modern Public Finance, 1936—p. 13.

பெரும் மந்தமும், 1936ஆம் ஆண்டு ஜான் மேனர்டு கீன்ஸ் (John Maynard Keynes) வெளியிட்ட, 'வட்டி, தொழில், பணம் பற்றிய பொதுக்கோட்பாடு' (General Theory of Interest, Employment and Money) என்ற நூலும், பொதுநிதியியல் கோட்பாட்டிலும், நடைமுறையிலும் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தின. இதன் பயனாக, பொதுநிதியியல் மாறி அரசிறைக் கைக்கோள் (Fiscal Policy) வந்தது. கீன்ஸ் என்பவரின் சீடர்களில் ஒருவரான பேராசிரியர் ஆல்வின் எச். ஹான்சன் (Alvin H. Honsen) எழுதிய 'அரசிறைக் கைக்கோளும், வியாபாரச் சகடமும்' (Fiscal Policy and Business Cycle) என்ற நூலினால், 'அரசிறைக் கைக் கோள்' என்ற சொல் பரந்த அளவில், சிறந்த முறையில் பயன் படுத்தப்படலாயிற்று. பெரும் மந்தத்தின் காரணமாக, வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரித்தது; பொருளாதாரம் சீர் குலைந்தது.

பணவீக்கம் இன்றி நிறைவுடை வேலைவாய்ப்பைப் பெற (Full Employment), அரசின் வரிவிதிப்பு, செலவிடும் உரிமை, கடன் வாங்கும் உரிமை இவற்றை இணைந்த முறையில் பயன் படுத்துவதே அரசிறைக் கைக்கோள் (Fiscal Policy) ஆகும். இதனால் பொருளாதார நிலையை மாறுமல் பாதுகாக்கலாம். பொருளா தாரக் கட்டுப்பாட்டிற்கு ஒரு கருவியாக உதவும் அரசிறைக் கைக் கோளின் முக்கியத்துவம்பற்றி கீன்ஸ் (Keynes) பெருமைப்படுத்திக் கூறியுள்ளார். சமீப ஆண்டுகளாக அரசாங்க வரவுசெலவுகள் மிக அதிகமாகியுள்ளன. அரசாங்க வரிவிதிப்பு நடவடிக்கைகளும், செலவின நடவடிக்கைகளும் பொருளாதாரத்தில் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அரசு, பொதுநிதியியலின் சக்திகளை நியாயமான முறையில் கையாண்டு பொருளாதாரத்தில் நன்மைகள் ஏற்படும்படி செய்யலாம். அரசிறைக் கைக்கோளால் ஏற்படும் வியத்தகு மாற்றமே இதில்தான் அடங்கியுள்ளது. வியாபாரச் சகடத்தில் மந்தம் ஓர் அங்கமாக இருப்பதால், மந்தத்தை எதிர்க்கக் கையாளப்படும் அரசிறைக் கைக்கோள், எதிர்ப்புச் சகட அரசிறைக் கைக்கோள் (Anti-Cyclical Fiscal Policy) எனக் கருதப்பட்டது. பொரு ளாதாரத்தில் ஏற்படும் பணவீக்கத்தையும் (Inflation), பணவாட் டத்தையும் (deflation) எதிர்க்க, சரிக்கட்டப்படாத (Unbalanced) வரவுசெலவுகள் அடங்கிய, வேண்டும்போது மாற்றக்கூடிய வரவு செலவுத் திட்டக் கொள்கையினை, எதிர்ப்புச் சகட அரசிறைக் கைக் கோள் புகுத்தியது. பொருளாதாரத்தில் மந்தம் ஏற்படும்போது, வேலைவாய்ப்பினை அதிகரிக்க, பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டமே (Deficit Budgeting) சிறந்தது எனக் கீன்ஸ் கருதினார்.

கீன்ஸ் காலத்திற்குமுன் புகழோடு விளங்கிய பொருளாதார நிபுணர் ஏ. பி. லர்னர் (A. P. Lerner) கூறிய நடைமுறை நிதியியல் (Functional Finance) கோட்பாட்டில், பொருளாதாரத்தை நல்ல முறையில் கட்டுப்படுத்த வரிவிதிப்பு முறையைப் பயன்படுத்த வேண்டுமென்ற கருத்துச் சரியாகக் காணப்படுகிறது. அதன்படி பணத்தை ஈட்டுதல் வரிவிதிப்பின் நோக்கமாகாது. ஆனால், வரி கொடுப்போரிடம் குறைவாகவோ அதிகமாகவோ பணத்தை விட்டு வைப்பதே அதன் நோக்கமாகும் (The purpose of taxation is never to raise money but to leave less or more money in the hands of the tax payer).[1]

மேனாட்டுப் பொருளாதாரத்தில் கண்ட மேற்கூறிய முன்னேற்றங்கள், இந்தியப் பொதுநிதியியலை அவ்வளவாகக் கவரவில்லை. 'போருக்குமுன இருந்த நிலையைப் பின்னோக்கிப் பார்த்தோமானால், அரசிறைக் கைக்கோள், அச் சமயம் மிகமிக எளிதாக இருந்தது. தற்காலப் பொதுநிதியியல் கோட்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் அக் காலக் கோட்பாட்டில் இல்லை. ஆனால், அடிக்கடி பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு இருந்தன. போர் தொடங்கியதும், பொதுநிதியியலில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன' (A retrospective assessment of the pre-war position reveals that the approach then to fiscal policy was extremely naise. It had none of the sophistications of the modern theories of Public Finance.....But great changes were in the offing. The war broke out, revolutionising the complexion of public finances)[2].

1.6. இரண்டாம் உலகப்போரும் இந்திய வரிஅமைப்பும் (Second World war and Indian Tax Structure) : இந்திய வரியமைப்பில், இரண்டாம் உலகப்போர் கணிசமான அளவிற்கு மாற்றங்களை உண்டாக்கியது. 1939ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து நடந்த போரிலபோது போர் முயற்சிகளே இன்றியமையாதனவாக இருந்தன. வரிவிதிப்பின்மூலம் போருக்காக வருவாயினை அதிகரிக்கும் முயற்சியில், வரியமைப்பு மாற்றப்படவேண்டியிருந்தது. யுத்தத்தின் விளைவாக வெண்ணெயிலிருந்த முக்கியத்துவம் துப்பாக்கிக்குத் தாவியது. வளப்பொருள்கள்

1 A. P. Lerner., Economics of Control, 1946.

2 Dr. R. Balakrishna, Recent Trends in Indian Finance, 1955, p. 28.

(resources)இராணுவமல்லாத (Civilian) பகுதியிலிருந்து,பாதுகாப்புப் பகுதிக்கு மாற்றப்பட்டன. இதனால் பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களில் பற்றுக்குறை ஏற்பட்டு அவற்றின் விலைகள் அதிகமாயின. பொருளாதாரத்தில் பணவீக்கம் பரவியது. இன்றியமையாத பொருள்கள் கள்ளச்சந்தையில் புகுந்தன. வியாபாரிகளும், சொத்துடையவர்களும் பெருவாரியான இலாபமடைந்தனர். குறிப்பிட்ட சில பிரிவுகளிலே உண்டான உபரிவருவாய் மேன்மேலும் அப் பிரிவுகளிலேயே குவிந்ததால், நாட்டின் வருவாயிலும், செல்வத்திலும் இருந்த சமமின்மை அதிகரித்தது. வரிவிதிப்பு முறையில், அரசு ; வருமான வரிகளைப் பெருமளவில் நம்பியிருந்தது. இதுவரை மத்திய வரிவருவாயில் சுங்கவரிகள் (Customs) தாம் முக்கிய இடத்தை வகித்துவந்தன. இப்போது வருமானவரி, கூடுதல் வரி (Surtax), கார்ப்பரேஷன் வரி ஆகியவற்றின் வீதங்கள் உயர்த்தப்பட்டு, அளவுக்கு மீறிப் பெருகிய வியாபார வருமானத்தைச் சரிக்கட்ட, முதன்முதலாக மிகை இலாபவரி (Excess profits Tax) விதிக்கப்பட்டது. பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரி வீதங்களில் ஏற்பட்ட குறைவும், வருமானவரி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதுவரை இல்லாதவாறு, வரிப்பளுவினைச் சிறந்த முறையில் பங்கிட உதவின.

பின்வரும் அட்டவணையிலிருந்து, போரினால் வரியமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களைக் காணலாம் :-

அட்டவணை 1

(மொத்த வரி வருவாயின் சதவீதம்)[1]

	1938 - '39	1944 - '45
சுங்கவரி	54·8	15·7
வருமானவரி	21·4	64·9
ஆயத்தீர்வைகள்	11 7	15·0
உப்புவரி	11·0	3·7

[1] Souree : R. N. Poduval, Finance of the Government of India since 1935.

நேர்முக வரிவிதிப்பில் மற்ற நாடுகளைவிட இந்தியா சிறந்து விளங்கியதைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது :

அட்டவணை 2.

(மொத்த வரி வருவாயின் சதவீதம்)[1]

	1938-'39		1943-'44	
	நேர்முகம்	மறைமுகம்	நேர்முகம்	மறைமுகம்
அமெரிக்கா	53	47	86	14
இங்கிலாந்து	55	45	63	37
கனடா	33	67	63	37
ஆஸ்திரேலியா	22	78	66	34
இந்தியா	22	78	64	36

பழைமை முறைக்கு அப்பாற்பட்ட வரவுசெலவுகளைச் சரிக்கட்டாத வரவுசெலவுத் திட்டத்தை அமைத்தது, போர்க்காலத்தில் ஏற்பட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க மாறுதலாகும். ஆனால், போர்க்காலத்தின் பற்றுக்குறை (Deficit) வரவுசெலவுத் திட்டங்களை, மேனாடுகளைப் போன்று, அடிப்படைக் கொள்கை யளவில் செய்யப்பட்ட மாற்றம் எனக் கருதமுடியாது. இந்திய அரசு, போருக்கென நிதியைப் பெற, பணவீக்கத்தை உண்டாக்கி மக்களைப் பாதிக்கும் பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டத்தை நாட வேண்டியதாயிற்று. 'பொருளாதாரத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதைவிட, அவசரச் செலவுகளைச் சமாளிப்பதற்காகவே வரவுசெலவுகளைச் சரிக்கட்டாத (Unbalanced) வரவு செலவுத் திட்டம் தேவைப்பட்டது. இதனால் தொன்மைநிதியியலின் விதிகள், தாமாகவே அல்லாமல், கட்டாயத்தின் பேரில் மீறப்பட்டன' (The Unbalancing of Budgets was necessiated by the urgency to spend rather than the desire to fill a lacuna in the

[1] Source : World Eeonomic Survey (1942-'44) League of Nations p. 170

economy. The rules of orthodox finance was broken not by choice but by compulsion)[1].

1.7. மாற்றத்தின்போது இந்திய நிதியம் (Indian Finance in Transition): இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப் பின், பண வீக்கம் (Inflation), பணவாட்டம் (deflation) ஆகியவற்றால் ஏற்படும் தீமைகளை அகற்றும் பிரச்சினையை இந்தியா எதிர்க்க வேண்டியிருக்குமென இந்திய அரசின் அந் நாள் நிதி உறுப்பினரான சர் ஆர்ச்பால்ட் ரோலண்ட்ஸ் (Sir Archibald Rowlands) கூறினார்.[2] நாட்டில் வரிவிதிப்பின்கீழ் அகப்படும் வளப்பொருள்களை (resources) முழுமையாகப் பயன்படுத்தும் நோக்கத்தோடு, உலகப்போர் முடிந்ததும், வரிவிதிப்பு முறையில் உருவான திட்டத்தையமைக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய அரசு உணர்ந்தது. இதை மனத்திற் கொண்டுதான், நிதி உறுப்பினர், வரி விசாரணைக் குழுவை அமைக்கும் நோக்கத்தைத் தெரிவித்தார். 'நாடு முழுவதிலும், வரிவிதிபபு முறையில் மாற்றங்களோ, திருத்தங்களோ எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை ஆராயவும், முறையான சரிசம வரி அமைப்பினைக் கொண்டுவர நடைமுறையில் ஆராயவும் குழுவை அமைக்கலாம் என எண்ணப்பட்டது' (To ascertain what adjustments and modifications of the tax system of the country as a whole would be required and could from the practical administrative point of view be introduced in order to produce a properly balanced and scientific tax structure).[3] ஆனால் அச் சமயத்தில் அத்தகைய குழு அமைக்கப்படவேயில்லை. வரியமைப்பும், உருவான திட்ட மேதுமின்றி வளரும்படி விடப்பட்டது.

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் இந்திய நிதி அமைச்சரான திரு. ஆர். கே. சண்முகம் செட்டியவர்கள் மிகக் குறைந்த காலமே பதவியில் இருந்ததால், வரித்திட்டத்தில் ஒரு சில மாறுதல்களையே செய்ய முடிந்தது. வரவுசெலவுத் திட்ட இரகசியங்கள் வெளியான தெனக் குற்றம் சாட்டப்பட்டதால், அவர் பதவியிலிருந்து விலக நேர்ந்தது. அவருக்குப்பின் பதவி ஏற்ற இடைக்காலக் கூட்டரசு நிதி அமைச்சரான திரு. லியாகத் அலீகான், 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரவுசெலவுத் திட்டத்தில் திரு. சண்முகம் செட்டியவர்களின் வரிக்கொள்கைகளை மாற்றி வரியமைப்பில் வியக்கத்தக்க மாறுதல்களைப் புகுத்தினார். அதைப் பொதுவுடைமை (Socialistic) வரவுசெலவுத் திட்டமெனக் கூறினர். முதன்முதலாக, வியாபார

1 Dr. R. Balakrishna, Recent Trends in Indian Finance, 1955-p. 49.
2 Budget Speech, Central. Parliament, 1946-'47.
3 Budget Speeeh of the Finance Member, Govt. of India, 1946-'47.

இலாபவரியையும், மூதலீட்டு ஆதாய வரியையும் (capital gains tax) விதித்தார். வருமானவரி விலக்கு எல்லையை ரூ. 2500-க்கு உயர்த்தி, உப்புவரியை நீக்கினார். பணவீக்கத்தைத் தவிர்க்கவும், சமத்துவ சமுதாயத்தை அமைக்கவும் மேற்கூறிய நடவடிக்கைகள் கோட்பாட்டளவில் (Theoreical) நியாயமெனப்பட்டாலும், நடைமுறையில் அவை பொருளாதாரத்திற்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்ததோடு, தனியார்துறையின் ஊக்கத்தினையும் பெருமளவில் பாதித்தது. ஆகவே அடுத்த இரண்டு ஆண்டுகளில் பெரும்பான்மையான புதிய வரிகள் சட்டப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டன. அவ்வாறு செய்யும்போது பொருள் வரிவிதிப்பினைப் (Commodity Taxation) பெரிதும் நம்பவேண்டியிருந்தது. பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு, நேர்முகவரியின் விகிதப்பங்கு (proportion) குறைக்கப்பட்டதால், இந்திய வரியமைப்பின் வளர்வீதத் தன்மை குறையலாயிற்று. நாட்டின் முன்னேற்றத்திற்கென இது தவிர்க்க முடியாததாயிற்று.

அட்டவணை 3

ஆண்டு	வருமானவரி (கார்ப்பரேஷன் வரி) உட்பட (1)	மொத்தவரி வருவாய் (2)	மொத்தவரி வருவாயில் வருமானவரியின் சதவீதம் (3)
1946—'47	130·72	274·46	47·6
1948—'49	139·78	319·26	43·7
1949—'50 (திருத்தியமைக்கப்பட்டது)	103·26	296·78	34·7
1950'—51 (வரவுசெலவுத்திட்டம்)	127·42	310·78	41·0

இக் காலத்தில் நிலவிய வரிக்கொள்கையில், ஒருவிதத் திட்டமும் (Planning) இல்லாமலிருந்தது. வரிக்கொள்கையின் நோக்கங்களில் தொடர்ந்து மாறுதல்கள் ஏற்பட்டதால், அந் நோக்கங்களுக்கிடையே தொடர்பில்லாமல் இருந்தது. 1947ஆம் ஆண்டிற்கும், 1950ஆம் ஆண்டிற்குமிடையே மத்திய அமைச்சரவையில் மூன்று நிதியமைச்சர்கள் மாறினர்கள். விற்பனை வரிவிதிப்பு முறையில்

முன்னேற்றம், மோட்டார்வண்டி வரிவிதிப்பு, விவசாய வருமான வரிவிதிப்பு இவைகளைப் பொறுத்த கொள்கைகளில் ஒற்றுமை இல்லாத காரணத்தால், மாநில வரிக்கொள்கைகளிலும், பொதுத் திட்டமோ, ஒற்றுமையோ இல்லாமலிருந்தது.

1.8. கூட்டரசு நிதிஇணைப்பு (Federal Finance Integration) : தனித்தனியாக இயங்கிய பல இராச்சியங்களை ஒரு குடியரசின் கீழ்க் கொண்டு வந்தது, விடுதலைக்குப்பின் இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுள் முக்கியமானதாகும். இவ்வரசியல் இணைப்பிற்குப்பின் எழுந்த அடுத்த பிரச்சினை யாதெனில், மத்திய அரசுடன் மாநிலங்களுக்கு இருந்த நிதித்தொடர்புகளை மாற்றியமைப்பது பற்றியதாகும். ஒரே மாதிரியான கூட்டரசு நிதிதிட்டத்தை ஏற்படுத்துவதற்காக, இந்தியாவின் இதர பகுதிகளோடு, இந்திய மாநிலங்களின் நிதியையும் இணைக்கமுடியுமா என்பது பற்றி, 1948ஆம் ஆண்டின் இந்திய மாநில நிதி விசாரணைக்குழு (The Indian States Finances Enquiry Committee) பரிசீலித்தது. அக் குழு, கூட்டரசின் வருவாய், மாநிலச் செலவினங்கள் ஆகியவற்றை மத்திய அரசோடு இணைப்பதற்கு நடவடிக்கைப் பங்கீட்டினை (functional division) அடிப்படையாகக் கொண்டது. இவ்விணைப்பு, 1950ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

1.9. இந்தியாவில் கூட்டரசு நிதியம் (Federal Finance in India) : முற்றிலும் ஒன்று சேர்க்கப்பட்ட நிலையிலிருந்து, இன்றைய கூட்டரசுமுறை வரை, நம் நாட்டு நிதிமுறை பல நிலைகளைக் கடந்துள்ளது. மத்திய, மாநில நிதித் தொடர்புகளின் தோற்றத்தை நான்கு காலங்களாகப் பிரிக்கலாம் : (1) 1919ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தின்படி நடந்த சீர்திருத்தங்களுக்கு முந்தின காலம், (2) 1919ஆம் ஆண்டின் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தக் காலம், (3) 1935ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தினால் கவரப்பட்ட காலம், (4) அரசியல் அமைப்பின் தொடக்கத்திற்குப்பின்.

1919ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்கு (Moutague Chelmsford Reforms of 1919) முன்னர், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே வரிவிதிப்பு அதிகாரத்தில் பாகுபாடு இல்லை. நிலவரி அல்லது சுங்கவரி அல்லது ஏதாவது வரி மூலமாக கிடைத்த வருவாய் ஆங்கில முடியரசின் வருவாயாகக் கருதப்பட்டது. 1918ஆம் ஆண்டிலிருந்து, வருவாய்ப் பகுப்பு முறையில், பிரிக்கக்கூடியவை (Divided Heads) என்ற வருவாய்த் திட்டம் வந்தது. இருந்தபோதிலும், ஆங்கில ஆட்சிக் குட்பட்ட இந்தியாவில் எல்லா வரிவிதிப்பும், பொதுச் செலவினங்

களும், மத்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. மாநில அரசுகளுக்குக் கடன்வாங்கும் உரிமையும் இல்லாதிருந்தது. இவ்வாறு நிதிமுறை பிரிக்கப்படாத (unitary) நிலையில் இருந்தது.

1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தின்படி, பணிகளிலும், நிதி முறையிலும் ஒருவிதப் பகுப்புமுறை (division) புகுத்தப்பட்டது. மத்திய அரசுக்கெனச் சில பிரிவுகளும் மாநில அரசுகளுக் கெனச் சில பிரிவுகளும் வகுக்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள அரசினைக் கொடுப்பதற்கென, மாநிலங்களுக் கெனக் கொடுக்கப்பட்ட பிரிவுகள் ஒதுக்கப்பட்டவை, மாற்றப் பட்டவை என்று வழங்கப்பட்டன. இம் முறை, 'இரட்டை முறை' (Dyarchy) யாகும். இதன்படி, நீதி, சட்டம், ஒழுங்கு இவற்றின் நிருவாகம், நிதிநிலை மாறுமல் பாதுகாத்தல் இவை ஒதுக்கப்பட்டவையின் (Reserved)கீழ் வந்தன. நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய மற்றப் பிரிவுகள் மட்டுமே தேர்ந் தெடுக்கப்பட்ட அமைச்சுகளிடம் கொடுக்கப்பட்டன. வருவாய்களை மத்திய, மாநில அரசுகளிடையே சரிவரப் பிரிப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்படி வருமானவரி, பொது முத்திரை வருவாய் ஆகியவை மத்திய அரசுக்கும், ஆயத் தீர்வை, நீதிமன்ற முத்திரைகள், நிலவரி, நீர்ப்பாசன வருவாய் ஆகியவை மாநிலங்களுக்கும் பிரிக்கப்பட்டன. இவ்வகையான பங்கீடு மாநில அரசுகளை, மத்திய அரசினிடப் பணவசதி மிக்கதாகச் செய்தது. மாநில அரசுகள், மத்திய அரசுக்கு நிதி கொடுக்கவேண்டும் என்ற திட்டமும் கொண்டுவரப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. இதைப்பற்றி ஆராய மெஸ்டன் பிரபு என்பவரின் தலைமையில் ஒரு நிதி உறவுக்குழு அமைக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரைகள் மெஸ்டனின் அளிப்பு எனப்பட்டது. அவற்றுக்கு மாநில அரசுகள் எதிர்ப்பைத் தெரிவித்தன. மெஸ்டன் குழு எதிர்பார்த்ததைப் போல மாநில அரசுகளின் வருவாய் கூடவில்லை. மாநில அரசுகள் தொடர்ந்து பற்றுக்குறையையே அனுபவித்தன. ஆகவே, மாநில அரசுகளின் பங்கு 1927—'28ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டு, இறுதியாக 1928—'29ஆம் ஆண்டில், அறவே விலக்கப்பட்டது.

1919ஆம் ஆண்டில் ஏற்பட்ட இம் முறை 1935ஆம் ஆண்டின் இந்திய அரசுசட்டம் 1937ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரும்வரை மாற்றம் ஏதும் இல்லாமல் இருந்தது. அதன்படி இந்திய நிதிமுறை மேலும் பரவலாக்கப்பட்டது. அச் சட்டப்படி, மாநில அரசுகளின் வருவாய்களுக்காக நிலவரி, நீர்ப்பாசனவரி, மதுபானங்களின் மீது ஆயத்தீர்வைகள், விவசாய வருமானவரி, முத்திரைவரி, பதிவுவரி ஆகியவை ஒதுக்கப்பட்டன. மத்திய கூட்டரசுக்குக் கார்ப் பரேஷன் வரி, சுங்கவரிகள், இரயில்வே, தபால் இலாகா

வரவுகள், பணச்செலாவணி (Currency), காசு அச்சிடுதல் (Coinage), இராணுவ வரவுகள் (Military receipts) ஆகிய யாவும் அளிக்கப் பட்டன. அச் சட்டத்தின்படி சில வரிகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு அவ் வருவாய் மாநில அரசு களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டியதாயிற்று. சில வரிகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, அவ் வருவாய் மாநில அரசு களுக்கும், மத்திய அரசுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதாயிற்று. முதலில் கூறப்பட்ட பிரிவில், விவசாய நிலங்களைச் சந்ததியினர் பெறும்பொழுது அவற்றின்மீது விதிக்கப்படும் வரிகள், மாற்றுஉண்டியல் (Bill of Exchange), காசோலை (Cheque) இவைகளுக்கான முத்திரைவரி (Stamp duty), இரயில்வே கட்டணவரி, பொருள்களின் மீது பயண முடிவில் விதிக்கப்படும்வரி ஆகியவை அடங்கும். இரண்டாவது பிரிவில் விவசாய வருமானம் தவிர மற்ற வருமான வரிகள், உப்புவரி, சுங்கவரி, ஏற்றுமதி வரிகள் ஆகியவை அடங்கும். இதைத் தவிர உதவி வேண்டிய போது சில மாநிலங்களுக்கு உதவி மானியம் அளிக்கலாம் எனவும் இச் சட்டத்தில் காணப்பட்டது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தை நிறைவேற்ற சில நடைமுறைகளை உருவாக்க வேண்டி யிருந்தது. இதைப்பற்றி ஆராய்ந்து ஆலோசனைகள் கூற, இங்கிலாந்தின் கருவூலத்தைச் (Treasury) சேர்ந்த நிதியியல் நிபுணரான சர் ஆட்டோ நைமேயர் (Sir Otto Niemever) என்பவரை வரவழைத்தனர். இவரது பரிந்துரைகளினால்தான் மத்திய அரசிடமிருந்து வருமானப் பொறுப்புரிமை மாநிலங் களுக்குக் கிடைத்தது. மேலும், வருமானவரி வருவாயில், பிரிக்கப் படவேண்டிய தொகையில், மாநிலங்களுக்கு 50% பங்கு தரவேண்டு மெனவும் அவர் கூறினார். அவரது பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு செயற்படுத்தியது.

இதுவே இந்திய நாடு விடுதலை பெற்றபோது இருந்த நிதிமுறை யாகும். நாடு விடுதலைபெற்ற பிறகு இதே அடிப்படையில், மத்திய மாநில அரசுகளின் நிதித் தொடர்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. 1950ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 26 ஆம் தேதி இந்தியா குடியரசு நாடானதும், புதிய அரசியல் நிருணயச்சட்டம் செயற்படுத்தப் பட்டது. இச் சட்டம், 1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தைப் போலவே, மத்திய, மாநில அரசுகள் வருவாயைப் பகிர்ந்துகொள்ள வழிவகுத்திருந்தது, அச் சட்டப்படி மத்திய, மாநில அரசுகளின் பணிகளும், வருவாய்களும் வரையறுக்கப்பட்டன. வரி வருவாயை மத்திய அரசு பட்டியல், மாநில அரசு பட்டியல், இரண்டிற்கும் இணைந்த பட்டியல் (Concurrent List) என்று இச் சட்டம் பிரித்துள்ளது.

1. 10. இணைந்த பட்டியல் (Concurrent List) : இதில் பலவிதப் பணிகள் விவரமாகக் காணப்படுகின்றன. ஆனால், வரிவிதிப்பில் மத்திய மாநில அரசுகளின் சிக்கல்களைத் தீர்க்கும் விதத்தில் எவ்வித வரிவிதிப்புரிமையும் இதில் காணப்படவில்லை.

1. 11. மாநில அரசு பட்டியல் (The State List) : மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்ட வரிவருவாய்கள் பின்வருவன: (1) நிலவரி வருவாய், (2) விவசாய வருமானவரி, (3) விவசாய நிலங்களைச்சந்ததியினர் பெறும்போது அவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள், (4) விவசாய நிலசம்பந்தமான எஸ்டேட்வரி, (5) நிலம், கட்டடங்கள் மீது விதிக்கப்படும் வரிகள், (6) கனிவள உரிமைகளின்மீது வரிகள், (7) மருந்துகள் நீங்கலாக, மது, அபினி போன்ற பொருள்களின் மீது ஆயத்தீர்வைகள், (8) மாநிலங்களுக்குள் வரும் பொருள்களின் மீது வரிகள், (9) மின்சார வரிகள், (10) செய்தித்தாள்களைத் தவிர பிற பொருள்களை வாங்கி விற்பதற்குரிய வரிகள், (11) வாகன வரிகள், 12) மிருகங்கள், படகுகள்மீது வரிகள், (13) பிரயாணிகள், பொருள்களை ஏற்றிச்செல்வதற்குரிய வரிகள், (14) தொழில், வாணிக வரிகள், (15) மூலதன வரி, (16) பொழுதுபோக்குகள், சூதாட்டம், பந்தயம் இவற்றின் மீது வரிகள், (17) முத்திரை வரிகள் (18) மாநிலப் பணிகளுக்குரிய கட்டணங்கள், (19) மீன்துறை, (20) காடுகள், (21) நீர்ப்பாசனம். மாநில அரசுகள் ஏற்றுமதிமீதும், இறக்குமதி மீதும், மாநிலங்களுக்கிடையே வாணிகம் செய்யப்படும் பொருள்களின் மீதும், சமூகத்திற்கு இன்றியமையாத பொருள்களின் மீதும் வரி விதிக்கக்கூடாது.

1. 12. மத்திய அரசு பட்டியல் (Union List): மத்திய அரசு பட்டியலில் உள்ள 12 இனங்களை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) முற்றிலும் மத்திய அரசுக்கே உரியது: இதன்கீழ், சுங்கத் தீர்வைகள், கார்ப்பரேஷன் வரி, விவசாய நிலங்களைத் தவிர இதர சொத்துகளின் முதல் மதிப்புகளின் (Capital value) மீது விதிக்கப் படும் வரி, வருமானவரியின்மேல் விதிக்கப்படும் கூடுதல்வரி (Surcharge) ஆகியவை அடங்கும். (2) விவசாய வருமானத்தைத் தவிர பிற வருமானங்களின் மீதுவரி; மத்திய அரசுதான் வருமான வரியை விதித்து வசூலிக்கிறது. ஆனால், நிதிக் குழுவின் (Finance Commission) பரிந்துரைக்கேற்ற ஓர் அடிப்படையின்படி, அவ் வருவாய் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் (3) சாராயம், அபினி இவற்றின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகளைத்தவிர, இதர ஆயத்தீர்வைகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படலாம். ஆனால், அவ் வருவாயை மாநிலங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென நாடாளுமன்றம்

(Parliament) விரும்பினால் அவ்வாறு செய்யவேண்டி நேரிடும். (4) சில வரிகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப் படுகின்றன. ஆனால், அவ் வருவாய் முழுவதும் நாடாளுமன்றத்தினால் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. வாரிசுரிமைவரி, எஸ்டேட் வரி, பயணிகள், பொருள்கள் இவற்றின்மீது விதிக்கப்படும் பயணம் முடியும் இடத்தில் செலுத்தும் வரி(Terminal tax), இரயில்வே கட்டணங்கள், சுமைகூலி (freights) ஆகியவற்றின் மீது வரி, செய்திச் தாள்களின் விற்கும்போதும், வாங்கும்போதும் விதிக்கப்படும் வரி, மத்திய,மாநில வாணிகத்தின்போது, பொருள்களை வாங்கும்போதும் விற்கும்போதும் அவற்றின்மீது விதிக்கப்படும்வரி இவை அடங்கும். (5) மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, மாநில அரசுகளால் வசூலிக்கப் பட்டு அவைகளின் உபயோகத்துக்காக வைத்துக்கொள்ளப்படும் வரிகள்; இவற்றுள் மாற்றுஉண்டியல், காசோலைகள் (Cheques) புரோநோட்டுக்கள் ((Promissory Notes) இவற்றின்மீது முத்திரை வரிகள், போதைப் பொருள்கள் கலந்த மருத்துவப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் இவற்றின்மீது ஆயத்தீர்வைகள் ஆகியவை அடங்கும். இவ்விதமாக, மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வருமானங்களை மாற்றும் அவசியத்தை இந்திய அரசியல் சட்டம் உணர்ந்து, அதற்கான வழிவகைகளையும் செய்தது, மற்றும் மாநிலங்களுக்கு உதவி மானியங்கள் (Grants-in-aid) அளிக்கும் அவசியத்தையும் உணர்ந்திருந்தது. உதவிமான்யங்கள் எவ்வாறு அளிக்கப்படவேண்டுமென்பதைச் சட்டத்தின் இரு பிரிவுகளின் கீழ்க் காணலாம், (1) 275ஆவது பிரிவின்படி (article) நாடாளுமன்றத்தின் தீர்மானத்தின்படி சில மாநிலங்களுக்கு உதவிமானியங்கள் அளிக்கப் படலாம். நிதிக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, இவ்வுதவி மானியங்கள் தீர்மானிக்கப்படுகின்றன (2) 282ஆவது பிரிவின் படியும் உதவிமானியங்கள் அளிக்கப்படுகின்றன. இதன்மூலம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு நிதி அளிக்கப்பட்டது. நிதியுதவி இவ்வாறு இரு கூறு களிலிருந்தும் வந்ததன் பயனாக, மத்திய, மாநில உறவுகளில் பல பிரச்சினைகள் எழுந்தன.

இந்திய அரசியல் சட்டத்தின் 293ஆவது பிரிவின்படி, மத்திய அரசு, மாநில அரசுகளுக்குக் கடன் கொடுக்கலாம். மாநில அரசுகள் உள்நாட்டில் கடன்பெற அதிகாரம் பெற்றுள்ளன. ஆனால், மாநில அரசுகள், மத்திய அரசுக்குக் கொடுக்கவேண்டிய கடன்தொகை பெருமளவில் இருந்தால், மத்திய அரசிடமிருந்தும், ரிசர்வ் பாங்கிட மிருந்தும் அனுமதி பெறவேண்டும். மாநில அரசுகளுக்குக் கடன் தருவதன்மூலம் மத்திய அரசு அவற்றின் மீது ஓரளவு செல்வாக்கான ஆதிக்கம் பெற்றுத் திகழ்கின்றது. மாநில அரசுகள், மத்திய அரசிட மிருந்து பெற்றுள்ள கடன் தற்போது பெருமளவுக்கு வளர்ந்துள்ளது.

2. வரிவிதிப்பும், இந்தியப் பொருளாதார முன்னேற்றமும்

(Taxation and Indian Economic Development)

2. 1. பொருளாதார முன்னேற்றம் (Economic Development): நாடு விடுதலை பெற்ற பின்னர், இந்திய அரசினால் பின்பற்றப் பட்ட வளர்ச்சித்திட்டக் (Development Planning) கொள்கையே, இந்திய வரியமைப்பைப் பெரிதும் பாதித்தது எனலாம். இந்தியா, பொருளாதார முன்னேற்ற முறைகளைப் பின்பற்றும் ஒரு முன்னேற்ற மடையாத நாடாகக் கருதப்படுகிறது. இந்தியா, குறைந்த வருவாயுள்ள நாடாகும். நீண்டகால அளவில் ஒரு பொருளாதார அமைப்பின் (economy) உண்மையான வருவாயை (real income) உயர்த்துவதற்கு உதவும் முறைகளைப் பொருளாதார முன்னேற்றம் எனலாம். ஆகவே, இந்தியாவைக் குறைந்த வருவாயுள்ள நாடாக இருந்து, அதிக வருவாயுள்ள நாடாக மாற்றுவதற்கு முயற்சி செய்யும், ஒரு வளரும் பொருளாதார அமைப்பு எனக் கூறலாம்.

பொருளாதார முன்னேற்ற வீதமானது, முக்கியமாகச் சமுதாய வருமானத்தில் சேமிப்புக்கும், முதலாக்கத்துக்கும் ஒதுக்கப்படும் வீதாச்சாரத்தைப் பொறுத்துள்ளது. முதலாக்கம் என்பது இருவகைப்பட்ட சமூக சம்பந்தமான முறையாகும். (1) முழு உற்பத்தியைவிடக் குறைவாக நுகரவேண்டுமென மக்கள் தூண்டப் படவேண்டும். அதாவது, மக்கள் நேர்முகமாகவோ, மறைமுக மாகவே சேமிக்கத் தூண்டப்படவேண்டும். (2) மொத்த உற்பத்தியில் மொத்த நுகர்வுபோக மீதத்தை, தொடர்ந்துவரும் ஆண்டுகளில் நாட்டின் உற்பத்தித் திறமையை அதிகரிக்கும் வகையில் உற்பத்தி முதலீட்டுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டும். இதைச் சேமிப்பு சம்பந்தமான நடவடிக்கை எனவும், முதலீடு சம்பந்தமான நடவடிக்கை எனவும் கூறலாம்.

1950-'51ஆம் ஆண்டில், இந்தியாவின் முதலீடு 4·9% ஆக இருந்து 1955-'56இல் 7·3%-ஆகவும் 1960-'61இல் 10·7% ஆகவும் உயர்ந்தது. அதேசமயத்தில் மேற்கு ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளின் முதிர்ந்த பொருளாதார அமைப்புகளில், வருடாந்திர முதலீடு தேசிய வருமானத்தில் 15% ஆகவோ அதற்கு அதிகமாகவோ இருந்தது. இரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பிற பொதுவுடைமை நாடுகளிலும், முதலீட்டின் வருடாந்திர வீதம் இதைவிட அதிகமாகவே இருந்தது. ஆகவே, 'ஆண்டொன்றுக்கு 1½% வீதம் அல்லது அதற்கு அதிகமாக மக்கள்தொகை பெருகும் நாடுகளில், அந் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ, வாழ்க்கைத்தரம் தாழ்ந்த நிலையை அடைவதிலிருந்து தடுக்கவோ, தேசிய வருமானத்தில் ஆண்டொன்றுக்கு 5% அல்லது அதற்குக் குறைவான முதலீடு போதாது. அந் நிலையில் ஆசிய நாடுகளில் ஆண்டு முதலீடு 15% அல்லது அதற்கு அதிகமாக இருந்தாலொழிய, இக் குறைவான முதலாக்கவீதம், மேலை நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்திற்கும், ஆசிய நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் உள்ள வேறுபாட்டினை ஆண்டிற்காண்டு அதிகரிக்கச் செய்யும்,' என்று ECAFE[1] அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது ('in countries where population is increasing at 1½% per annum or more, an annual net investment of 5% or less of national income is not enough to raise the standard of living and may not even be enough to prevent the standard of living from falling. At such a low rate of capital formation, the gap between the standard of living in Asia and in the West must continue to widen year by year unless capital formation in Asia approximates 15% per annum net or more')[2] முதலாக்கத்தின் (Capital formation) வீதத்தைப் பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடாகக் கொண்ட, பேராசிரியர் ராஸ்டவ் (Rostow) முதலீடு தேசிய வருவாயில் 5%-ஆக இருந்து 10% ஆகவோ அதற்கு மேலாகவோ அதிகரித்தால்தான், தொன்றுதொட்டு உள்ள சமுதாயமானது முதிர்ந்ததோர் சமுதாயமாக மாறமுடியும் எனக் கூறுகிறார்.

முன்னேற்றமடைந்துள்ள மேலைநாடுகளில், தனியார் துறைத் தொழிலில் பொருளாதார முன்னேற்றமுறை ஆரம்பிக்கப்

[1] Economic Commission for Asia and Far East.
(ஆசியாவுக்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்குமான பொருளாதாரக் குழு)

[2] U. N. ECAFE Secretariat :- Some Financial Aspects of Development Programms in Asian Countries.-Economic. Bulletin for Asia and the Far East, Vol. II, Nos 1&2, January to June 1952 pp 1&2

பட்டுக் காப்பாற்றப்பட்டும் வருகிறது. அரசின் நடவடிக்கை ஓரளவுக்குட்பட்டதாகவே இருந்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் இருந்த நிலைமை தற்காலத்திய வளர்ச்சி குறைந்த நாடுகளில் இல்லை. வளர்ச்சி குறைந்த நாடுகளில், அரசாங்கந்தான் முன்னேற்றத் திட்டங்களை ஊக்குவிக்கும் கருவியாக இருக்கவேண்டியதாயிற்று. சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறிவுள்ள நாடுகளில், நாடு பெருமளவில் பங்குகொண்டு, முன்னேற்றத்தைத் தொடங்கி வளர்த்திருப்பதைக் காணலாம். ஜப்பான், ஜெர்மனி, இரஷ்யா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றத்தில் நாடு பெரும் பங்கு எடுத்துக்கொண்டது என்பதைப் பொருளாதார வரலாறுமூலம் அறியலாம். முன்னேறிய நாடுகளில் ஏற்பட்ட தன்னிச்சை வளர்ச்சிக்கு எதிராக, வளர்ந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்ட வளர்ச்சியாகவுள்ளது. ஆகவே, இந்திய அரசு, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வேலையை மேற்கொண்டு, அதைத் திட்டமிட்டுச் செயற்படுத்தியும் வருகிறது. பொருளாதார முன்னேற்றத் திட்டம், தனியார்துறை, பொதுத்துறை இவற்றின் உதவியோடு, 1950ஆம் ஆண்டு முதலாக, இந்தியாவில் தலா வருமானத்தை உயர்த்துவதற்காக, நடை முறையில் இருந்து வருகிறது.

2.2. **வளப்பொருள்களின் இடப்பெயர்ச்சி** (Mobilisation of Resources):- போரைப் போன்ற பொருளாதார வளர்ச்சிக்கு நிதிச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, கிடைக்கும் நிதிச்சாதனங்களை உச்ச அளவில் பயன்படுத்திப் பல திட்டங்களுக்குப் பங்கிட்டு, சிறந்த பயனை அடைவதே திட்டத்தின் நோக்கமாகும். இதனைப் பொருளாதார வளர்ச்சிவீதம், முதல் ஆக்கத்தைப் (Capital formation) பொறுத்தது என்பதிலிருந்து அறியலாம். முதல் ஆக்கத்திற்குச் சேமிப்புகளின் இடப்பெயர்ச்சி தேவைப்படுகிறது

'5 சதவீதம் சேமித்து வந்த ஒரு சமுதாயமானது, எம்முறையில் நோக்கங்கள், நிலையங்கள் (Institutions), நுட்பவினை முறைகள் (Techniques), ஆகியவற்றில் மாற்றங்களுடன், 10% சேமிக்கும் சமுதாயமாக மாற்றப்படுகிறதோ, அம் முறையை உணர்வதே பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படைப் பிரச்சினையாகும்.' இவ்விதமாகச் சேமிப்பின் அளவு முன்னேற்றத் திட்டத்தின் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மக்கள் தாமே அவ்வளவுகூடச் சேமிக்கத் தொடங்குவதில்லை. பெரும்பாலும், சேமிப்புகள் கட்டாயத்தினால் செய்யப்பட்டுச் சீராக அமைக்கப் பட்ட வழிகளின்மூலம் இடப்பெயர்ச்சி செய்யப்படுகின்றன.

2·3. சேமிப்புகளின் ஆதாரம் (Sources of Savings):- ஒரு பொருளாதார அமைப்பில் சேமிப்புகள் அதிகமாக்கப்பட, துய்ப்புத் தவிர்ப்பு (abstinence) ஒரு நெம்புகோலாகும். நாட்டின் உற்பத்திப் பொருள்கள் முழுவதையும் துய்ப்பதைத் தவிர்த்துச் சேமிப்புமூல மாகச் சிறிதளவாவது விட்டுவைக்க மக்கள் முன்வர வேண்டும். ஒரு சமுதாயத்தில் முதலாக்கத்திற்காகச் சேமிக்கப்படும் வருமானத்தின் வீதம், தலா உண்மை வருவாயைப் பொறுத்ததாகும். இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த ஒரு நாட்டிலே தலா உண்மை வருவாய் மிகவும் குறைவாகவுள்ளது. பெரும்பாலான மக்களின் வரவுக்கும், செலவுக்கும் அதிக வேறுபாடு இல்லாததால், துய்ப்புத் தவிர்ப்புமூலம் சேமிப்பை அதிகரிப்பது கடினமான காரியமாகும். வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பையுடைய இந்தியாவிலும் வருமான மட்டங்களில் உயர்வு ஏற்பட்டாலும், சேமிப்புவீதத்தில் உயர்வு இருக்காது என்பதை அனுபவம் காட்டியுள்ளது.

சேமிப்புகளின் இடப்பெயர்ச்சி முறையினை இருவகைகளில் நோக்கலாம். அவை (1) இயக்கமற்ற நிலை, (2) இயக்க நிலை என்பனவாம். வளர்ச்சி குறைந்த நிலையிலேயே ஒரு நாடு இருக்கும்போது, அதிக சேமிப்பு என்பது, ஏற்கெனவே குறைந்த நிலையிலுள்ள நுகர்வில் (Consumption) மேலும் குறைப்பை ஏற்படுத்துகிறது. இதுவே இயக்க மற்ற நிலையாகும். இயக்க நிலையில், முன்னேற்றத்தின் விளைவாக உண்டாகும் அதிகப்படி வருமானத்தில் அதிக அளவினைச் சேமித்து முதலீடு செய்வதாக, கொள்கையின் முடிவு உறுதியளிப்பதாக இருக்கலாம். மூலதன ஆக்கத்தை அதிகரிக்க, இத்தகைய திட்டத்திற்கு, அதிக அளவு வறுமையும், துன்பமும் இல்லாத எளிய வாழ்வு தேவைப்படுகிறது.

தற்காலத்தில், சேமிப்புக்கு முக்கிய சாதனங்கள் மூன்று உள. அதாவது தனியார் சேமிப்பு (Personal Savings), கார்ப்பரேஷன் சேமிப்பு, அரசாங்கச் சேமிப்பு (அதாவது வரவுசெலவுத்திட்ட உபரி). உள்நாட்டுச் சேமிப்புகள் போதாவிடில். பொருளாதார முன்னேற்றத்திற்கு நிதியளிக்க, பணத்தை அச்சிட்டு வெளியிடவேண்டும். அதாவது, பற்றுக்குறை நிதியாக்கத்தைப் (Deficit Financing) பின்பற்ற நேரிடும். மேலும், வளர்ந்து வரும் ஒரு நாடு, அதன் நிதிக்குத் துணையாக அயல்நாட்டுக் கடன்களையும் நாடலாம். அயல் நாட்டினரின் சேமிப்பே, நாம் பெறும் அயல்நாட்டுக் கடன்களாகும். இந்த நிதி ஆதாரங்களைப்பற்றிப் பரிசீலித்துப் பொருளாதார முன்னேற்றத்தில் அவைகளின் முக்கியத்துவத்தை அறியலாம்.

2.4. வெளிநாட்டு நிதி (External Finance):- பல நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில், அந்நிய நாட்டு மூலதனம் பெரும்

பங்கு வகித்துள்ளதென்பதில் ஐயமேதுமில்லை. 19ஆம் நூற்றாண்டில், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளிலும், சில ஆண்டுகளாக ஜப்பானிலும், அவற்றின் பொருளாதார முன்னேற்றத்தில், பன்னாட்டு முதலீடு பெரும்பங்கு வகித்துள்ளது. ஆனால், பல முன்னேறிய நாடுகளில், முதலாக்கத்தில் பெரும்பகுதி, உள்நாட்டு முதலாக்கத்திலிருந்தே பெறப்பட்டது என்பதுதான் உண்மையாகும். 1948ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலும், மேற்கு ஐரோப்பாவில் மார்ஷலின் திட்டத்தின்கீழ் அந்நிய நாட்டு உதவியின் அளவு, நாட்டுவருமானத்தில் சுமார் 6% ஆகத்தான் இருந்தது. சீனாவைத்தவிர, ஆசியாவிலும், தூரக் கிழக்கிலும் உள்ள இதர வளர்ச்சி குறைந்த நாடுகளில் இதில் 1%-க்கும் குறைவாகவேயுள்ளது. ECAFE நாடுகளுக்கு அயல்நாட்டு உதவி பற்றுமல் இருக்கும் நிலையில், 'அந் நாடுகள் முன்னேற வேண்டுமெனில், அவைகளாகவே முன்னேற வேண்டும்' (It is therefore necessary for those countries to pull themselves up by their bootstraps, if they are to pull themselves at all) என ஐக்கியநாட்டுச் செயற்குழு (U.N. Agency) முடிவாகக் கூறியுள்ளது.

2.5. பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing) : பொருளாதார வளர்ச்சிக்கு நிதியளிக்கப் பணத்தை அச்சிட்டு, பாங்குச் செலாவணியைச் சிருட்டித்தல், அதாவது பற்றுக்குறை நிதியாக்கம், வளர்ச்சி குறைந்த நாடுகளின் அரசாங்கத்தைக் கவரும் ஓர் எளிய முறையாகத் தோன்றுகிறது. பொருளாதார மந்தத்தினால் துன்புறும் ஒரு முதிர்ந்த பொருளாதார அமைப்பில், பயனுள்ள தேவையைத் (effective demand) தூண்டுவதற்காகக் கீன்ஸ் (Keynes) என்பவரால், பற்றுக்குறை நிதியாக்கம் பரிந்துரைக்கப்பட்டது. பயனுள்ள தேவையை ஊக்குவிப்பதால், பயனற்று உறங்கும் வளப்பொருள்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு, வேலைவாய்ப்புகளை உண்டாக்குகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில், உற்பத்தியைப் பெருக்கும் பிரச்சினைகள், பொருளாதார மந்தத்தின்போது முதிர்ந்த பொருளாதார அமைப்புக்களில் உள்ள பிரச்சினைகளிலிருந்து வேறுபடுகின்றன. அவைகளுக்கு, வேலைவாய்ப்புக் குறைவையும், வருமானக் குறைவையும் சரிப்படுத்தும் அளவுக்கு அவ்வளவு அதிகமாகப் பற்றுக்குறை நிதியாக்கம் தேவைப்படுவதில்லை. முதலில் (Capital) ஏற்பட்ட குறைவைச் சரிக்கட்டுமளவுக்கே தேவைப்படுகிறது. ஆகவே, வளர்ச்சி குறைந்த ஒரு நாட்டில், அவசர உற்பத்திப் பெருக்கத்தைக் கொண்டுவரப் பற்றுக்குறை நிதியாக்கத்தினால் இயலாது. அளவுக்கு மீறினால் அது பணவீக்கத்திலும் முடியும். ஆகவே, மிருகத்திற்குக் கொடுக்கும் மருந்தின் அளவுகளைப் போலல்லாது, மனிதனுக்குக் கொடுக்கப்படும் மருந்தின் அளவுகளைப் போல, வளர்ந்து வரும் ஒரு

பொருளாதாரத்தில் பற்றுக்குறை நிதியாக்கம், செயற்படுத்தப்பட வேண்டும்.

2.6. தனியார் சேமிப்புகள் (Personal Savings): செலவழிக்கப் படும் வருவாயிலிருந்து விரும்பிச் சேர்க்கப்படுபவைகளே தனியார் சேமிப்புகளாகும். இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாட்டில் அச் சேமிப்புகள் ஒரு குறிப்பிடத்தக்க அளவாக இல்லை. ECAFE நாடுகளில் தனியார் சேமிப்புகள், நாட்டுவருமானத்தில் 1% ஆகவோ அதற்கும் குறைவாகவோகூட இருக்கலாமென ECAFE மதிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மொத்த முதலீடு, மொத்த நாட்டுவருமானத்தில் 18%இலிருந்து 20% வரை இருந்த போதிலும், தனியார் சேமிப்பு 4%-ஐ ஒரு போதும் தாண்டவில்லை. அஞ்சலகச் சேமிப்புத்திட்டம், இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், சேமிப்புப் பாங்கு வசதிகள் இவற்றின் மூலமாகத் தனியார்சேமிப்புகளை ஊக்குவிப்பதோடு கட்டாயச் சேமிப்புகளை அதிகரிக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படவேண்டும். தனியார் வாணிக இலாபத்தைத் (Private business profits) திரும்பவும் முதலீடு செய்யும்படிச் செய்தல் அல்லது வரி விதிப்புமூலமாகக் கட்டாயச் சேமிப்புகளை நடைமுறையில் கொண்டுவர வேண்டும்.

2.7. நிறுவனச் சேமிப்புகள் (Corporate Savings) : பங்குதாரர் களுக்குப் போய்ச்சேராமல், தொழில்மூலம் கிடைத்த இலாபங்களைத் திருப்பி எடுக்கும் முறையிலிருந்து, நிறுவனச் சேமிப்பு கிடைக் கின்றது. நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்களைத் திரும்பவும் முதலீடு செய்தல் ஒருவகையாகும். 19ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் தனியார் முதலீட்டுத் துறையிலிருந்து பெறும் இலாபத்தின் அளவு அதிகரித்ததும், சமீப காலத்தில் இரஷ்யாவில், அரசாங்க முதலீட்டுத் துறையிலிருந்து பெறும் இலாபம் அதிகரித் ததும், இவ்விரு நாடுகளிலும் தொழில்மயமாக்கலின் (Industrialisation) முக்கிய காரணிகளாகும். 1938-க்கும் 1956-க்கும் இடைப்பட்ட காலத்தில், நாட்டு வருமானத்தில் நிறுவன இலாபத்தின் சதவீதம், ஜப்பானில் 8·7%உம், ஆஸ்திரேலியாவில் 10·3%உம், அமெரிக்காவில் 11.9%உம், இங்கிலாந்தில் 19.5% ஆகவும் இருந்தன. ஆனால் அதே வீதம் (ratio) இந்தியாவில் பத்தாண்டுக் காலத்தில் (1948—'58), 2%க்குமேல் இல்லை. இதேபோன்று நிறுவன சேமிப்பும், அமெரிக் காவில் 2·5%, ஆஸ்திரேலியாவில் 3.9%, ஜப்பானில் 4%, இங்கிலாந்தில் 8.4% ஆகவும், இந்தியாவில் ½%க்கு மேலாகவும்

இருந்தது.[1] நம் நாட்டின் தொழில் நிறுவனத்துறையின் வளர்ச்சிக் குறைவை, மேலே கூறப்பட்ட புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசாங்கச் சேமிப்புகள் (Government Savings): இதர சேமிப்பு வகைகள் போதாமல் போனால், வளர்ந்துவரும் நாட்டில், முதலாக்கத்தைப் பெருக்க, வரவுசெலவுக்கு மேற்பட்ட உபரிகளான அரசாங்கச் சேமிப்புகளை நம்ப வேண்டியுள்ளது. முதலீட்டுச் செலவுக்காக நிதியளிக்க வரிவிதிப்பு முறைகளைப் பயன்படுத்துவதற்கு 'வளர்ச்சிக்கான வரிவிதிப்பு' (taxation for development) என்று பெயர். வரிவிதிப்பு, கட்டாயச் சேமிப்பின் முக்கிய வகையாகும். வளர்ச்சிக்கான வரிவிதிப்பு, சேமிப்புகளைப் பொதுவுடைமையாக்குதல் (Socialisation) எனப்படும்.[2]

இந் நாடுகளின் பரிதாபமான குறைந்த அளவு உற்பத்தியிலிருந்து போதுமான அளவு சேமிப்பைப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு வாங்கிக்கொடுக்கும் வேலை, அரசிறைக் கைக்கோளின் தலையாய கடமையாயிற்று[3]. பொருளாதார முன்னேற்றத்தில், அரசிறைக்கைக்கோள் (Fiscal Policy) இன்று பெரும்பங்கு வகிக்கின்றது என்கிறார் பேராசிரியர் நர்க்ஸே (Prof. Nurkse). இருப்பினும், வரிவசூலிப்பதைவிட, அவ்வாறு வசூலிக்கப்பட்ட வரி வருவாய் எவ்வாறு முதலாக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதே முக்கியமானதாகும்.

2.8. அரசாங்கக் கடன்கள் (State Loans): வெளிச்சந்தைகளிலிருந்தோ, சிறுசேமிப்புகள் மூலமாகவோ பெறும் கடன்களும், இதர கடன்களும், அரசாங்கத்திற்குத் தனியார் (Private) வருவாயிலிருந்து அவர்கள் விரும்பிக் கொடுப்பதாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் கடன்கள் ஓர் அளவுக்குட்பட்டதேயாகும். இந்தியாவில், சிறுசேமிப்புகள், நாட்டுவருமானத்தில் ½%க்கும் குறைவாகும். இலாபமடைய பல்வேறு வாய்ப்புகள் இருப்பதால், தனியார் சேமிப்பு, வாணிகச் சேமிப்பு இவற்றின் பெரும்பங்கு, பத்திரங்களுக்குக் (bonds) கொடுக்கப்படும் வட்டியால் கவரப்படு

[1] Dr. ( ) Kishari C. Shah :— Pattern of Corporate Savings and Investments, 1959.

[2] P. T. and B. S. Yaney :— The Economics of under developed countries, 1957, p. 190.

[3] United Nations :— Taxes and Fiscal Policy in Under—Developed Countries, New York, 1954, p. 3.

வதில்லை. தகுந்த பணச்சந்தைகள் இல்லாத காரணத்தால், பெரும்பாலான பத்திரங்களுக்கான பணம், வாணிகப் பாங்குகள் (Commercial Banks), மையப்பாங்கு இவற்றுல் கொடுக்கப்படுவதால் தனியார் சேமிப்பின் இடமாற்றத்திற்கு அவை இடமளிக்கவில்லை. ஆகவே, வரிவிதிப்புமூலம் போதுமான அளவு கட்டாயச் சேமிப்பு தவிர்க்க முடியாததெனத் தோன்றுகிறது.

2.9. வரிவருவாய்களின் அளவு (Magnitude of Tax Revenues) : பொருளாதார வளர்ச்சிக்கு நிதியளிக்க உதவும் வரிவிதிப்பு, நாட்டு வருவாய்க்கும், வரிகளுக்கும் உள்ள விகிதப்பொருத்தத்தைப்பற்றி ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் இவ்விகிதம் மிகக் குறைவாகவுள்ளது. முன்னேறிய நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகளைவிட அதிக வருவாயை வரி விதிப்பின் மூலம் பெறுகின்றன.

நாட்டு வருமானத்திற்கும், வரிவருவாய்க்குமுள்ள விகிதம் உயர்வாக இருப்பின், அதை ஒரு பெரிய வரவுசெலவுத் திட்டம் எனலாம். நாட்டுவருமானத்திற்கேற்ற வரவுசெலவுத் திட்டத்தின் அளவே, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய முக்கிய காரணி யாகும். 1950ஆம் ஆண்டுக்குமேல், 1960ஆம் ஆண்டுக்குள்ளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளில், வரிவருவாயானது நாட்டு வருமானத்தில் எவ்வளவு சதவீதமாக இருந்ததென்பதைப் பின்வரும் அட்டவணைகளில் காணலாம்:

அட்டவணை எண் 4

வளர்ச்சி குறைந்த நாடுகளில் நாட்டுவருமானம், அரசாங்க வருவாய் இவற்றின் விகிதம் (Ratio of Current Government revenues to National income in under-developed countries)[1]

பிலிப்பைன்ஸ்	...	6%
இந்தியா	...	8%
மலேயா	...	11%
பர்மா	...	15%
சிலோன்	...	19%

[1] Source :— 'Some Financial Aspects of Development Programmes in Asian Countries' - Economic Bulletin for Asia and the Far East, Nov. 1952.

அட்டவணை எண் 5

குறிப்பிட்ட சில நாடுகளில் நாட்டுவருமானத்தின் சதவீதப்படி வரிவருவாய் (Tax Revenue as a percentage of National Income in certain countries).[1]

மேற்குஜெர்மனி	...	33%
இங்கிலாந்து	...	33%
அமெரிக்கா	...	27%
பெல்ஜியம்	...	24%
கனடா	...	24%
ஆஸ்திரேலியா	...	22%
ஜப்பான்	...	21%
இஸ்ரேல்	...	18%
இந்தியா	...	7%

இந்தியாவில், நாட்டுவருமானத்தில், வரிவருவாயின் விகிதம் (ratio) குறைவாகவே உள்ளது. மேலும், அவ்விகிதம் பல ஆண்டுகளாக மிக மெதுவாகத்தான் அதிகரித்து வருகிறது.

அட்டவணை எண் 6

தற்போதைய விலைவாசிகளுக்கேற்ப வரிவருவாய்[2]
(நாட்டு வருமானத்தில் சதவீதப்படி)

ஆண்டு	வரிவருவாய்
1948—49	5·7
1949—50	5·7
1950—51	6·5
1951—52	7·5
1952—53	6·9
1953—54	6·4
1954—55	—
1955—56	7·4

[1] Economic Survey of Asia and Far East, U. N. Publication, 1957, p. 72.

[2] Source :— R, N. Tripathy :— Fiscal Policy and Economic Development in India, 1958, p. 139.

நாட்டுவருமானத்தில், வரிகளின் பங்கை அதிகமாக்குவதில் உள்ள பிரச்சினைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. வரியைத் திருத்தியமைத்தல் (Tax Revision)
2. போதுமான அளவுக்கு வரிவிதிப்பை அமுலுக்குக்கொண்டு வருதல் (Adequate enforcement of Tax)
3. போதுமான அளவு வரிவிதிப்புப் பரப்பு (Adequate range of taxes)
4. போதுமான அளவுக்கு வரிவிதிப்பைத் தரப்படுத்துதல் (Adequate gradation of taxes)
5. வரியைப் பற்றிய மக்களின் சாதகமான நோக்கம் (favourable attitude)

2.10. வளரும் பொருளாதாரத்தில் அரசிறைக் கைக்கோளின் முக்கிய நோக்கங்கள் (Objectives of fiscal policy in a developing economy):- முன்பு குறிப்பிட்டவாறு, வளரும் பொருளாதாரத்தில், அரசிறைக் கைக்கோளின் முக்கிய நோக்கம் முதலாக்கத்தை அதிகரிப்பதேயாகும். அத்துடன் நாட்டுவருமானத்தில் வரிகளின் பங்கை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கமும் உள்ளது. மேலும் இதர நோக்கங்களும் உள. வளரும் பொருளாதார அமைப்புகளில் பணவீக்கத்தின் பாதிப்புக்கு (Pressure) அதனை எதிர்க்க வரிவிதிப்பு தேவைப்படுகிறது. மேலும் வளரும் நாட்டில், வரிவிதிப்பு வளப்பொருள்களைச் சரிவர ஒதுக்கி, திட்டமிட்டபடி முக்கியமான காரியங்களை நிறைவேற்றுவதாக உறுதியளிக்க வேண்டும். பல்வேறு தனிநபர்களுக்கும், பிரிவினர்களுக்கும் (Groups) இடையே, பொருளாதார முன்னேற்றத்தின் பயன்கள் பங்கிடப்படுவதை, வரிவிதிப்பு முறை பாதிப்பதாகும். வளர்ந்துவரும் பொருளாதாரத்தில், தனிநபர்களுக்குச் சொந்தமான சொத்து விரைவாகவும், சமமற்ற நிலையிலும் பெருகுகிறது. எனவே, வருவாய், சொத்து இவற்றின் சமமற்றநிலையைக் குறைப்பதே அரசிறைக் கைக்கோளின் நோக்கமாக இருக்கவேண்டியுள்ளது. தனித்துறை நிதிகளைப் பொதுத்துறைக்கு மாற்றுவதே வரிவிதிப்பின் வேலையாகும். அதனால், அது ஏற்கெனவேயுள்ள வளப்பொருள்களோடு செய்யப்பட்ட கூடுதல் மட்டுமாகாது. பொருளாதார அமைப்பில், தனியார்துறையிலிருந்து நிதி சேகரிப்பதன் எதிர்விளைவைப் (Repercussion) பற்றிய விவாதம், முன்னேற்றத்துக்கான வரிவிதிப்புப் பரிசிலனையில் அடங்கியுள்ளது. வரிவிதிப்பு, பொருளாதார வளர்ச்சிக்கு மூலகாரணிகளான தூண்டுகோள்களைப் பாதிக்கக்கூடாது. முன்னேறிய நாடு

களில் பொதுநிதியியல் (Public Finance) தூண்டுதலுக் கொடுக்கும் வரிவிதிப்பில் (Incentive taxation) அதிக கவனத்தைச் செலுத்தி வந்துள்ளது. ஆகவே, வளரும் பொருளாதாரத்தில், தூண்டு கோல்களுக்கு முக்கியத்துவம் இதைவிட அதிகமாக இருக்க வேண்டும். ஏனெனில், நிலையான வளர்ச்சி முறையைப் பலப்படுத் துதல், அம் முறை ஆரம்பிப்பதைவிட எளிதாகும்.

முதலாக்கத்தை அதிகரித்தல், பணவீக்கத்தைத் தடுத்தல், வளப் பொருள்களைச் சரியானபடி ஒதுக்கீடு செய்தல் (Allocation), வருவாய், சொத்து இவற்றின் சமமற்ற நிலையைக் குறைத்தல், ஆகிய மேற்கூறிய நோக்கங்கள், வெற்றிதரும் இணைப்புகளாகும். இக் கருத்துக்களில் ஒன்றை நிறைவேற்றிய வரித்திட்டம், இன் னொன்றை நிறைவேற்றுமல் போகலாம். ஒரு கொள்கையைக் குறிப் பிட்ட ஓர் அளவுக்கு விட்டுக்கொடுப்பது அவசியமாகலாம். ஆனால் எந்த ஒரு கொள்கையையும் அலட்சியப்படுத்தக் கூடாது. பொரு ளாதார வளர்ச்சியில், வரிவிதிப்பு முடிவான அம்சமாக (Element) இல்லாதுபோனாலும், அது ஒரு முக்கிய காரணியாக (factor) உள்ளது. அதனால் பொருளாதார வளர்ச்சிக்கும், இதர சமுதாய நோக்கங்களுக்கும் பயன்படும் புத்திசாலித்தனமான வரித்திட்டம் நமக்குத் தேவைப்படுகிறது.

2.11. திட்டங்களும், வரி யமைப்பும் (Planning and Tax Structure): விடுதலைக்குப்பின்னர், இந்திய வரியமைப்பைப் பெரும்பாலும் பாதிப்பது, இந்திய அரசினால் பின்பற்றப்பட்டுள்ள முன்னேற்றத் திட்டத்தில் (Developmental Planning) கொள்கையேயாகும். 1951-52ஆம் ஆண்டிலிருந்து, முதல் ஐந்தாண்டுத் திட்டத்துடன், மத்திய அரசின் வருவாயும், செலவும் அதன் வரலாற்று மட்டங்களிலிருந்து அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. அது முதலாக, நாட்டின் வளப் பொருள்கள் (Resources) நாட்டுநிதிப்பிரச்சினையில் முக்கிய இடத்தை வகித்தன.

முதல் ஐந்தாண்டுத் திட்டமே இரு முக்கிய இலக்குகளை (Targets) கொண்டுள்ளது[1]. போரினாலும், நாட்டுப் பிரிவினை யாலும், ஏற்பட்ட சமமற்ற நிலையைத் (disequilibrium) திருத்துதல் (2) சில காலத்திற்குப் பிறகு, வாழ்க்கைத் தரங்களில் ஒரு நிலையான அபிவிருத்தியையும், நாட்டுவருமானத்தின் அதிகரிப்பையும் ஏற்படுத்த உறுதியளிக்கும் வகையில், எல்லாத் துறைகளிலும் சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்தும் முறையைத் தொடங்குதல். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 1951ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், 1956ஆம்

[1] Review of the First Plan (May 1959) p.1

ஆண்டு மார்ச் வரை, பொதுத்துறையில் மொத்த முதலீடு ரூ. 2069 கோடிகளாகும் எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் 1957ஆம் ஆண்டு மே மாதம், திருப்பிக் கணக்கு பார்த்ததில், ஐந்தாண்டு களுக்குமான உண்மையான முதலீடு, ரூ 1960 கோடிகளெனத் தெரிய வந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், பொதுத்துறைக்கான நிதித்திட்டத்தை அடியிற் காணலாம்:-

அட்டவணை எண் 7

(முதல் திட்டத்திற்கான பொதுத்துறை நிதி)[1]

	ரூ. கோடியில்	மொத்தத்தில் %
1. வரிவிதிப்பும், இரயில்வேக்களிலிருந்து வந்த உபரியும் (Surplus)	752	38
2. சந்தைக்கடன் (Market Borrowing.)	205	10
3. சிறு சேமிப்புகள்	304	16
4. இதர முதலீட்டு வருவாய்கள் (Capital Receipts)	91	5
5. வெளிநாட்டு உதவி	188	10
6. பற்றுக்குறை நிதியாக்கம்	420	21

இவ்வட்டவணையிலிருந்து, பொதுத் துறைக்கான நிதியின் பெரும்பகுதி வரிவிதிப்பிலிருந்தும், இரயில்வேக்களிலிருந்தும் கிடைத் திருப்பதை அறியலாம். திட்டங்களுக்கான நிதிக்கு ஆதாரமான வரிவிதிப்பைப்பற்றி முதல் ஐந்தாண்டுத்திட்ட அறிக்கை கூறுவதா வது:- 'நாட்டுவருமானத்தில், வரிவிதிப்பின் வீதம் இந்தியா வில் இன்று உள்ளதுபோல் இவ்வளவு குறைவாக இருப்பின், பொதுத்துறை தனது சேமிப்பை அவ்வளவு விரைவில் வருங் காலத்தில், எந்த ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கும் பெருக்கிக் கொள்ள முடியாது' (If the proportion of the national income covered by taxation is as small as it is in India today, the Public

[1] Source-- Review of the First Five Year plan, (May, 1957)

Sector cannot in the immediate future increase its savings to any significant extent)[1]. உலகத்திலேயே மிகக் குறைந்த வீதமான, 7 சதவீத நாட்டுவருமானத்தை வரிவிதிப்பின்மூலம் பெறுவதில் இந்தியா திருப்தியடைந்துவிடக்கூடாது என்ற கருத்தே வலியுறுத்திக் காட்டப்பட்டுள்ளது. சமுதாயத்தின் சில குறிப்பிட்ட பிரிவுகளிலிருந்து மொத்த வரியில் மூன்றிலொரு பாகம் அல்லது அதற்கு மேலாக வசூலிக்கப்படுவதால், இதர பிரிவினரைக் குறைவாகவே வரிச்சுமை பாதிப்பதால், அப் பிரிவினருக்கான வரி வீதங்களைச் சிறிதளவு அதிகரிப்பதன்மூலம், மொத்த வரிவருவாயைக் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கலாம் என முதல் ஐந்தாண்டுத் திட்டம் கண்டறிந்தது. சில வரிகளுக்கு, உதாரணமாக, ஜப்பானில் முன்னேற்றத்திற்கான சாதனங்களுக்கும் தொடக்கத்தில் நில வரிவிதிப்பு எவ்வாறு பயனளித்தது என்பதையும் முதல் திட்டம் எடுத்துக்காட்டியது. வரிவிதிப்பைப் பொறுத்தவரை, சமுதாயத்தில் வருவாயைச் சமநிலைப்படுத்தும் வகையில், வரிவிதிப்பின் சுமையின் பெரும் பங்கினை, உயர்ந்த வருவாய்ப் பிரிவினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அத் திட்டம் கூறியது.[2]

இந்த ஆலோசனைகளை, நிதித்திட்டத்தில் வரிவிதிப்புக்கு முக்கிய இடத்தை அளிக்கவேண்டுமெனத் திட்டக்குழுவினைத் தூண்டிவிட்டிருக்கவேண்டும். அதற்குப் பதிலாக, மொத்த நிதித் தேவைகளுக்குப் பயன்படாத, சிறிதளவு மாற்றங்கள் கொண்ட முயற்சிகளிலேயே, குழு திருப்தியடைந்துவிட்டது.

முதல் ஐந்தாண்டுக் காலத்தில் பரம்பரை முறைப்படி அமைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமே வழக்கத்திலிருந்தது. முதல் திட்டக்காலத்தில் மத்திய அரசின் வரவுசெலவுத்திட்டத்தில், ஏற்றுமதி வரிகள், ஆயத்தீர்வைகள் இவைகளை மேலோடு சரிக்கட்டவும், கூடுதல் வரிகளை ஆங்காங்குப் புகுத்துவதற்கும், சில சிறு வரிவிடுதலைக்கும் (Tax reliefs) ஆன யோசனைகள் கூறப்பட்டன. அந்த யோசனைகளே மாநில அரசின் வரவுசெலவுத் திட்டத்திலும் காணப்படுகின்றன. இந்திய வரியமைப்பைச் சீர்திருத்த, முதல் திட்டக்காலத்தில் ஒரு தீவிர முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதன்பயனாக வரிவிதிப்பைப் பொருளாதாரத் திட்டத்தோடு பொறுத்துவது முடியாமல் போய்விடும்[3].

'விடுதலைக்குப் பின்னர், முன்னேற்றத்திற்கான நிதித்தேவைகள் அதிகரித்ததால், இந்திய வரியமைப்பு வளர்ந்து வந்ததோடு, முக்கியமாகச் செலவுகளின்மீது (Outlay) வரிவிதிப்பைக் கொண்டதாகவுள்ளது. இதன் விளைவாக, இந்திய வரியமைப்புத் திட்டத்தில்

[1] The First Plan. p. 49.
[2] Ibid p. 50
[3] Alak Ghorh, Indian Economy, 1958, p. 336.

நெகிழ்ச்சி அவ்வளவாகக் காணப்படவில்லை. அதனால், வரியமைப்பு பெருகும் நாட்டு வருமானத்தில் அதிக அளவைப் பொதுவருவாயில் (Public Revenue) தானாகவே செலுத்தக் கூடியதாக இல்லை. வளர்ந்து வரும் வருவாய்க்கு ஏற்ப வரிவீதங்களை மாற்றியமைத்து, வரியால் பாதிக்கப்படும் பகுதியைப் பெருக்குவது அவசியமாகிறது. இதனை வரி செலுத்துவோர் எதிர்க்கின்றனர்' (The Indian Tax-Structure as it has developed after Independence, under the impact of the increasing needs of development Finance has been marked by the predominance of taxes on outlay and as a result, it has been characterised by the absence of a strong element of built - in - flexibility. As such the tax structure has not automatically tended to siphon off an increasing proportion of the expanding national Income into public revenues. It has demanded revision of rates and extension of coverage to keep up with the increasing income and this has met with stiff tax-payer resistance[1]). முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இந்தியா முழுவதிலும் (மத்திய, மாநில அரசுகளில்), முதலீடு, வருமானம் இவற்றின்மீது வரிகளைப்பற்றிய வரியமைப்புத் தொகுப்பினை அடியிற் காணலாம்.

அட்டவணை எண் 8

இந்திய வரியமைப்பு

ஆண்டு	முதலீட்டு வரி (மொத்த வரியில்%)	வருமானவரி (மொத்த வரியில்%)	மொத்தம்
1948'-49	58·0	42·0	100
1949'-50	62·0	38·0	100
1950'-51	63·5	36·5	100
1951'-52	67·3	32·7	100
1952'-53	64·1	35·9	100
1953'-54	64·7	3·53	100
1954'-55	67·0	33·0	100
1955'-56 (R.E.)	65·6	34·4	100

[1] R. N. Tripathy :— Fiscal Policy and Economic Developmet in India, 1958, p. 144.

அட்டவணை எண் 9.

மத்திய அரசின் வரியமைப்பு[1].

ஆண்டு	முதலீட்டுக்கான வரி (மத்திய அரசின் மொத்த வரியின் %)	வருமானவரி (மத்திய அரசின் மொத்த வரியின் %)	மொத்தம்
1948-'49	49·9	50·1	100
1949-'50	55·0	45·0	100
1950-'51	56·7	43·3	100
1951-'52	62·9	37·1	100
1952-'53	58·2	41·8	100
1953-'54	60.8	39·2	100
1954-'55	64·8	35·2	100
1955-'56	63·8	36·2	100

அட்டவணை எண் 10

மாநில அரசுகளின் வரியமைப்பு[2]

ஆண்டு	முதலீட்டு வரி (மொத்த மாநில வரியின் %)	வருமானவரி (மொத்த மாநில வரியின் %)	மொத்தம்
1948-'49	79·8	20·2	100
1949-'50	78·9	21·1	100
1950-'51	75·4	24·6	100
1951-'52	77·2	22·8	100
1952-'53	77·8	22·2	100
1953-'54	76·0	24·0	100
1954-'55	70·8	29·2	100
1955-'56	68·7	31·3	100

[1&2] Source:— R. N. Tripathy, Fiscal Policy and Economic Development in India, 1958. pp. 145—146.

மேற்கண்ட அட்டவணைகளிலிருந்து, மாநில வரியமைப்பைவிட, மத்திய வரியமைப்பு, அதிக அளவு நெகிழ்ச்சியுடையதாக இருப்பதை அறிகிறோம். இதற்குக் காரணம், மொத்த வரிவருவாயில் வருமான வரி பெரும்பங்கு வகிப்பதேயாகும். வரித்திட்டத்தின் நெகிழ்ச்சி என்பது, வருமானம் அதிகரிக்கும்போது, வரிவீதங்களை அதிகரிக்காமலோ புதுவரிகளை விதிக்காமலோ, தானாகவே முன்னைவிட அதிக அளவு வருவாயை அளிக்கும், வரித்திட்டத்தின் திறமையைக் குறிக்கும்.

1953ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த, எஸ்டேட் வரிச்சட்டம், முதல் திட்டக்கால நேர்முக வரியமைப்பில் ஏற்பட்ட முக்கியமான மாறுதலாகும். எஸ்டேட் வரியானது, வருமானவரிக்குத் துணைக் கருவியாகும். வருமானவரியோடு சேர்த்து எடுத்துக்கொண்டால், வருமானவரியை மட்டுமே எடுத்துக் கொள்வதைவிட, எஸ்டேட் வரியானது சிறந்த திறமைக்குறியீடாக அமைகிறது.

2.12. வரி விசாரணைக்குழு (The Taxation Enquiry Commission): முன்னேற்றத் திட்டங்களுக்காக வரியமைப்பைச் சீராக அமைத்து, ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, 1953ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி டாக்டர் ஜான்மதாய் (Dr. John Mathai) என்பவரின் தலைமையில், ஒரு வரிவிசாரணைக் குழு அமைக்கப் பட்டது. அதாவது சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு, மொத்த இந்தியவரித் திட்டமும் வரிவிசாரணைக் குழுவினால், பரிசீலிக்கப் பட்டது. குழுவின் வேலைகள் பின்வருமாறு :—

1. வெவ்வேறு மாநிலங்களில், பல்வகைப்பட்ட வகுப்பினரை, மத்திய, மாநில, தல வரிவிதிப்புகள் எவ்வாறு பாதிக்கின்றன என்று பரிசீலிக்க,

2. நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள், அவற்றுக்கான சாதனங்கள், வருமானம், செல்வம் இவற்றிலுள்ள சமமற்ற நிலையைக் குறிக்கும் நோக்கம், இவற்றுக்கு ஏற்றவாறு, தற்போதைய மத்திய, மாநில, தல வரிவிதிப்புத் திட்டங்கள் உள்ளனவா என்று பரிசீலிக்க,

3. உற்பத்தித் தொழில்களின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றையும், முதலாக்கத்தையும் வருமான வரிவிதிப்பின் மட்டமும் (level), அமைப்பும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பரிசீலிக்க,

4. பணவீக்க, பணவாட்டக் காலங்களில், வரிவிதிப்பை ஓர் அரசிறை ஆயுதமாகப் (fiscal instrument) பயன்படுத்தலாமா என்பதைப் பரிசீலிக்க.

5. இதர அவசியமான காரியங்களைப்பற்றி ஆலோசிக்க,

6. தற்போதைய வரித்திட்டத்தில் தேவையான சீர்திருத்தம், வரிவிதிப்புக்கான புதுவழிகள் இவைகளைப் பொறுத்தமட்டிலும், சில பரிந்துரைகள் கூற.[1]

1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம், வரிவிதிப்புக் கொள்கையின் எல்லா அம்சங்களையும் தன்னுள் அடக்கிய அறிக்கை ஒன்று, அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டது. குழுவின் பரிந்துரைகளில் மிக முக்கியமானவற்றை அடியிற் காணலாம்:

வரிவிதிப்பின் நிலைப்பாட்டுக் (Incidence) கேள்வியினை ஆராய்ந்த குழு, எல்லா வருவாய் மட்டங்களிலும், மொத்தத்தில் நகர வரி விதிப்பு மட்டம், கிராம வரிவிதிப்பு மட்டத்தைவிட அதிகமாக இருப்பதைக் கண்டறிந்தது. நகர மறைமுகவரி, கிராமவரியைவிட அதிகப்படியாக வளர்வீதத்தில் உள்ளது. நகர்ப்புறத்தில், வரி விதிப்பை அதிகமாக்க வழி இருந்தபோதிலும், உயர்ந்த அளவு கிராம வருவாய்களின்மீது, வரியின் நிலைப்பாட்டினை உயர்த்த அதிக இடமுள்ளது. பொதுத்துறையில், முன்னேற்றத்துக்கு நிதியுதவ வரிவிதிப்பு, கடன் இவற்றின் பங்கினைப் பெருக்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டியதன் தேவையைக் குழு வற்புறுத்தியது. ஒரு பொதுவரிக் கொள்கையைத் தீட்டும்போது, வரித்திட்டமானது, தனித்துறை முதலீட்டினைப் பாதிக்காத வகையில், பொதுத்துறை முதலீட்டினை அதிகரித்தல், வருமானம், சொத்து ஆகியவற்றின் சமமற்ற நிலையைக் குறைத்தல், வளர்ச்சிக்குத் தேவையான அதிகப் படியான சாதனங்களை அளித்தல் போன்ற மூன்று நோக்கங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். வரி அதிகரிக்கப்பட்டபின், நிருவாகச் செலவிலும் அதிகரிப்பு ஏற்படாமல், எல்லா வகுப்பினரது நுகர்விலும் (consumption) குறைப்பு ஏற்பட்டாமல் இந் நோக்கங்கள் நிறைவேறும். இதற்கு ஆடம்பரப் பொருள்களின்மீது அதிக அளவு வீதத்தில் வரிவிதிப்பும், பெருமளவில் நுகரப்படும் பொருள் களின்மீது குறைந்த வீதத்தில் வரிவிதிப்பும் தேவைப்படுகின்றன. நுகர்வு மட்டங்களில் (consumption levels) உள்ள ஏற்றத்தாழ்வு பெரும்பான்மையான தொழிலாளிகளுக்குக் கேடு விளைவிக்கும் எனக் குழு கண்டறிந்தது. ஆதலால், வரிபோக மீதியுள்ள தனிப்பட்டோர் வருவாய், நம் நாட்டில் தற்போதுள்ள குடும்ப சராசரி வருவாயைப் போல் 30 பங்குக்கும் மேல் போகக்கூடாது என ஓர் எல்லைக்கோடு இருக்கவேண்டும்.

[1] Report of the Taxation Enquiry Commission Vol. I, p. 2.

முன்னேற்றத்துக்காக, பொதுத்துறையில் அதிகப்படியான வருவாய்க்கு, கார்ப்பரேஷன் வரியைக் குறைத்து வருமானவரியை அதிகரித்தல், சேமிப்புக்கும், முதலீட்டுக்கும் சில சலுகைகள் அளித்தல், ஆயத்தீர்வைகளைப் போதுமான அளவுக்கு அதிகரித்தல், நிலவருவாய்மீது கூடுதல்வரி, விற்பனைவரி வீதத்தை உயர்த்துதல், விற்பனைவரியைப் பரப்புதல், சொத்து வரிவிதிப்பு, சொத்துகள் கைமாறும்போது தல அதிகாரிகளால் விதிக்கப்படும் வரி, பொதுத் தொழில் நிறுவனங்களுக்காகத் தகுந்த விலைமதிப்பிடும் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு வரியில்லாத வருவாயை அதிகரித்தல் ஆகிய யோசனைகளைக் குழு கூறியது. பொருள்களின்மீது வரிவிதிக்கும் போது, மத்திய, மாநில அரசுகளை, ஒருமுகப்படுத்தி, ஒன்றை யொன்று உணர்ந்தறிவதை முன்னேற்றுவதற்காக, ஓர் அகில இந்திய வரிவிதிப்பு ஆலோசனைக்குழுவினை (All India Taxation Council) நியமிக்கலாமெனவும் வரி விசாரணைக்குழு பரிந்துரைத்தது.

அதிகப்படியாக வருவாய் தேவைப்படும்போது தான், வரியல்லாத வருவாய்ப் பிரசினையைப்பற்றிக் கவனிக்க வேண்டும். அரசாங்க நிறுவனங்களின் விலைமதிப்பீட்டுக் கொள்கைகளுக்குச் சலுகை காட்டப்படலாமெனவும் அக் குழு கூறியது. அரசாங்க நிறுவனங்களின்மூலம் நீண்ட நாள்களுக்குப் பிறகு கிடைக்கும் உபரியை அடைவதையே குறிக்கோளாகக் கொண்ட கொள்கையை அக் குழு ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. இரயில் பயணத்தைப் பிற பொருள்கள், பணிகளைப் போன்று வரிவிதிப்புக்கு உதவும் பொருள்களாக பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு இருக்கக் கூடாதெனவும், அதை வருமானத்தை ஈட்டும் சாதனமாகக் கருத வேண்டுமெனவும் குழு தனது நோக்கத்தைத் தெரிவித்தது.

மாநில நிதியின் நெகிழ்ச்சியற்ற தன்மையும், பற்றுக்குறையும், முன்னுளில் இந்தியவரித்திட்டத்தில் இருந்த குறைகளுள் இரண்டாகும். மத்திய அரசின் வருவாயிலிருந்து, மாநில அரசுகள் முன்னுளில் பெற்றதைவிட அதிகப்படியான பங்கினைப் பெறுவதாலும், போதுமான மத்திய அரசின் உதவிகளைப் பெறுவதாலும் மத்திய அரசின் வருவாயில், அதிக ஈடுபாடு உடையனவாகவுள்ளன. இதன் காரணமாக ஓர் இணைக்கப்பட்ட பொதுநிதியியல் உடன்படிக்கை (An Integrated treatment of Public finance) அவசியமாகி விட்டது. இவ்விதமாக, ஒரு வளரும் பொருளாதாரத்தின் வரித் திட்டத்தில் ஒருவித இணைப்புப் பிரச்சினையும் இருக்காது என அக்குழு எண்ணியது. வேறுசில கூட்டரசுகளைப் (federations) போலல்லாமல், இந்தியாவில் விவசாயத்திலிருந்து பெறும் வருவாயைத் தவிர வேறு வருவாய்மீது வருமான வரிவிதிக்க, மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லாதலால், நேர்முக வரிவிதிப்புத் துறையில்

ஒருவித இணைப்புப் பிரச்சினையும் இருக்காது எனவும் குழுஎண்ணியது. மாநிலங்கள் விவசாய வருவாய்க்கு வரிவிதிக்க வேண்டுமானால், இணைப்பிற்குத் (Co-ordination) தேவை ஏற்படுகிறது. விவசாய வருவாய், அதைத் தவிர வேறு வருவாய் ஆகிய இரண்டும் சேர்க்கப் படவேண்டுமென்பதற்குக் குழு ஆதரவு காட்டியது. பொருள் களின்மீது வரிவிதிக்கும் துறையில், தெளிந்தறிதலும் (Understanding), இணைப்பும் தேவையெனக் குழு வற்புறுத்தியது.

வரிவிசாரணைக் குழுவின் அறிக்கை, இந்தியப் பொதுநிதியியல் துறையில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். முன்னேற்றத் திட்டத்தின் தேவைகளுக்கு உதவும்படி வரிக்கொள்கையை வகுக்க, குழு முயற்சி செய்தது.

2.13. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும், இந்திய வரி யமைப்பும் (The Second Five Year Plan and Indian Tax Structure):- வளர்ச்சித் திட்டங்களுக்குத் தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்த முதல் ஐந்தாண்டுத்திட்டம், 1956ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடிந்தது. 1956ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலி ருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகியது. இது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைவிடப் பேராசை கொண்டதாக இருந்தது. இதில், பொதுத்துறை முதலீடு ரூ 4800 கோடிகளாகும். இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.[1]

அட்டவணை எண் 11.

	ஆரம்பமதிப்பீடுகள் (Initial Estimates)		இறுதி மதிப்பீடுகள் (Final Estimates)	
	தொகை (ரூ. கோடியில்)	மொத்தத்தில் சதவீதம்	தொகை (ரூ. கோடியில்)	மொத்தத்தில் சதவீதம்
1. தற்போதைய வருவாயில் மீதி (அதிகப்படியான வரி தவிர.)	350	7	-50	-1
2. இரயில்வேக்களிலிருந்து பெற்ற வருவாய்.	150	3	150	3

[1] Third Five Year Plan Report, p. 95.

3. பொது மக்களிட மிருந்து கடன்	700	15	780	17
4. சிறு சேமிப்புகள்	500	11	400	9
5. செலுத்தப்படாத இதர முதலீட்டு வருவாய் இருப்பு (Balance of Capital Receipts over non-disbursement)	250	5	230	5
6. பொதுத்தொழில் நிறுவனங்களின் உபரியைப் பெருக்குவதற்கான நட வடிக்கையுட்பட அதிகப்படியான வரிவிதிப்பு	450	9	1052	23
7. அயல்நாட்டு உதவிமூலம் கிடைக்கும் வரவு செலவுத் திட்ட வருவாய்கள்	800	17	1090	24
8. பற்றுக்குறை நிதி யாக்கம்	1200	25	943	20
9. உள்நாட்டு வரு வாயை அதிகரிப் பதற்கான முயற்சி களால், சமாளிக்கப்படும் இடைவெளி	400	8	—	—
10. மொத்தம்	4800	100	4600	100

2.14. கால்டரின் வரிச்சீர்திருத்தம் (Kaldor Tax Reforms)

இந்த அளவுக்கு வருவாயை அதிகரிக்கும்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகள் திட்டக்குழுவின் கவனத்தை ஈர்த்தன. கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கால்டர் (Prof.

Kaldor) என்பவரை, நிதிக்குழு வரவேற்று, இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தின் தேவைகளின் அடிப்படையில், இந்திய வரியமைப்பினைப் பரிசீலித்து ஆலோசனை கூறும்படி குழு ஒன்றினை அவரது தலைமையில் அமைத்தது. 1956ஆம் ஆண்டில் அக் குழு அறிக்கையை வெளியிட்டது.

கால்டர், இந்திய வரியமைப்பினைத் திறமையற்றதெனவும், சமமற்றதெனவும் (Inequitable) கூறினார். வரிசெலுத்துவோரால் அளிக்கப்படும் ஒரு சில செய்திகளும் (Information), சொத்து மாற்றங்கள், சொத்து வருவாய் இவற்றைப் பற்றித் தெரிவிக்கும் சரியான திட்டங்கள் இல்லாத காரணமும், சொத்துகளைப் பதுக்கி, அடைந்த இலாபங்களின் அளவைக் குறைத்துக் கூறுவதன்மூலம் வரியிலிருந்து தப்புவதற்கு உதவியதால், இந்திய வரியமைப்பு திறமையற்றது எனக் கால்டர் கூறினார்.

ஆண்டொன்றுக்கு ரூ. 200 கோடி முதல் ரூ. 300 கோடி வரை வரியிலிருந்து தப்பியதாகக் கால்டர் கணக்கிட்டார். இந்திய வரிவிதிப்பின் முக்கிய அடிப்படையான 'வருமானம்' குறை பாடுள்ளது. ஏனெனில், வருமானத்தைக் கொண்டு வரிசெலுத்தும் திறனைக் கணக்கிட முடியாது எனவும், இந்தியாவில் சட்டங்களில் வருமானத்திற்குக் கொடுக்கப்படும் விளக்கவுரை சரியானதன்று எனவும் கால்டர் கூறி, இதனால் இந்திய வரிவிதிப்பு சமமற்ற நிலையிலுள்ளது என்பதையும் விளக்கினார். இதன் விளைவாகப் பலர் வரி செலுத்தாமல் தப்புகின்றனர் என்பதும் அவர் கருத்தாகும்.

மேலை நாடுகளில் தேசியவருமானத்திலும், உற்பத்தியிலும் பெருக்கம் ஏற்பட்டால் தானாகவே வரிவருவாயும் அதிகரிக்கும் வீதத்தில் வரியமைப்பு உள்ளது என்றும், இந்திய வரியமைப்பில் அந்த அம்சம் காணப்படவில்லை என்றும் கால்டர் கூறினார்.

ஆகவே, கால்டர் இந்திய வரியமைப்பைச் சீர்திருத்தப் பின் வரும் தீர்மானங்களைக் கூறினார். வருமான வரிமீது விதிக்கப்படும், கூடுதல் வரிக்குப் பதிலாக, தனியார் செலவீட்டு வரி என ஒரு வரி விதிக்கப்படவேண்டுமென்றும் மூலத்தனத்தின்மீது வருடாந்திர வரி, முதலீட்டி ஆதாயவரி, பரிசு வரி இவற்றையும் புகுத்த வேண்டுமென்றும் கூறினார். சொத்து மாற்றங்கள் சொத்துக்களி லிருந்து பெறும் வருவாய் இவற்றைப்பற்றி விளக்கமாக அரசாங் கத்துக்கு அறிவிப்பதற்கான திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால், வரியிலிருந்து தப்புவதன் அளவுகுறையும் எனவும் அவர் கூறினார்.

வருமான வரியைப் பொறுத்தவரை தற்போது 90% ஆகவுள்ள உச்ச வீதம் 45% ஆக ஆக்கப்படவேண்டுமெனவும் கால்டர் கூறினார்.

தற்போதுள்ள வருமானவரி, அதன்மீது கூடுதல் வரி இவற்றுக்குப் பதிலாக, தனிநபர்களையும், பங்குதாரர்களையும் பாதிக்கும் வகையில், ஒரு தனிப்பட்ட வருமானவரி விதிக்கப்படலாம் எனவும் கூறினர். அவ் வரிவீதம் ரூ. 25,000 வரை வளர்வீதத்திலும், அதற்கு மேற்பட்டால் எல்லா வருவாய்க்கும் ரூபாய்க்கு 7 அணுக்கள் என விதிக்கப்படவேண்டுமென்றார். மேலும் தற் போதுள்ள நிறுவன வரிக்குப் பதிலாக, நிறுவனங்களின் மொத்த வருமானத்தின்மீது ரூபாய்க்கு 7 அணுவீதம் ஒரேயொரு வரியை விதிக்கலாமென்றார். தனிநபரின் நிகர செல்வத்தின்மீது விதிக்கப் படும் வரிவீதங்கள் ரூ. 1 இலட்சத்திற்கு மேற்பட்டால் ஆண்டொன் றுக்கு ·5% வீதமும், ரூ. 15 இலட்சங்களுக்கு மேற்பட்டால் 1·5% வீதமும் வருடாந்திரச் செல்வவரி இருக்கவேண்டுமெனவும் கால்டர் சொன்னார். பரிசுவரி, பரிசுகள் ரூ. 10,000-க்கு மேற்பட்டால் 10% முதல் 80% வரை விதிக்கப்படலாமெனவும், எஸ்டேட் வரிகளுக்குப் பதில் பரிசுவரி விதிக்கப்படவேண்டுமெனவும் கூறினர். வருமான வரியைப் போலவே, முதலீட்டு ஆதாயவரியும் 45%க்கு மேற் படாமல் இருக்கவேண்டும். தனிநபரின் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 10,000-க்கு மேற்பட்டால் 25%உம், ரூ. 50,000-க்கு மேற்பட்டால் 300%உம் அதன்மீது செலவீட்டு வரியை விதிக்கவேண்டுமெனவும், கால்டர் கூறினர். மேற்கூறியவைகளே, கால்டரின் கருத்துப்படி இந்திய நேர்முக வரியமைப்புத் திட்டமாகும். அவரது கருத்துக்களை நடைமுறையில் பின்பற்றினால் பல நன்மைகளைப் பெற லாம் எனவும் எடுத்துக்காட்டினர். அவரால் கூறப்பட்ட வருமான வரி, முதலீட்டு ஆதாயவரி, வருடாந்திரச் செல்வவரி, தனியார் செலவீட்டுவரி, பரிசுவரி இவற்றைப் புகுத்தினர்; மக்கள் வரியிலி லிருந்து தப்புவது எளிதன்று என்றார். இரண்டாவதாக, வரிவீதங்கள் குறைவாக இருப்பின், வரியிலிருந்து தப்பும் முயற்சியும் குறையும் என்றார். மூன்றுவதாக, செல்வந்தர்களின் முக்கியமல்லாத செலவு களும் இதனால் தவிர்க்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. நான்காவதாக, வருமான வரி வீதங்கள் குறைக்கப்பட்டால், உழைப்பு, சேமிப்பு, நிருவாகத்திறமை இவை பாதிக்கப்படமாட் டாது. மேலும், தனியார் செலவீட்டு வரி, மக்களின் சேமிப்பைத் தூண்டும். ஐந்தாவதாக, தற்போதுள்ள வரியமைப்பைவிடக் கால்டரின் திட்டம் அதிக வளர்வீதமுடையதாகவும், எல்லோரையும் சமமாகப் பாதிக்கும் வகையிலும் அமையும் என்றார். இறுதியாக, கால்டரின் திட்டம் முன்னைவிட அதிக வருமானத்தை ஈட்டும் எனப்பட்டது. அதாவது, கால்டரால் சுமாராகக் கணக்கிட்டதற் கேற்பத் தனியார் செலவீட்டுவரி ஆண்டொன்றுக்கு ரூ 100 கோடி அல்லது அதற்கு மேற்பட்ட வருவாயைச் சில ஆண்டுகளுக்குப் பின்

சட்டும் என்பது அவர் கருத்து. இதற்கும் மேலாக வருமானம் தேவைப்பட்டால் அதை நிலவரி, எஸ்டேட் வரி மூலமாகத் திரட்டலாம் எனக் கூறினர்.

கால்டரால் தீர்மானிக்கப்பட்ட வரிகள் பலரால் குறை கூறப் பட்டன. 1957—'58, 1958—'59ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டங் களில், அவரது யோசனைகளின்படி எல்லா வரிகளும் புகுத்தப் பட்டன. ஆனல், கால்டர் கூறியவாறு, அவை ஓர் ஒருங்கிணைந்த திட்டமாகப் (Integrated Scheme) புகுத்தப்படவில்லை. கால்டரின் யோசனைப்படி வருமானவரி வீதம் குறைக்கப்படவில்லை. மற்ற வரி வீதங்களும் அவரது யோசனைக்கு மாறுபட்டதாகவே இருந்தன. இருப்பினும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளித் துள்ள வழி முறைகளிலிருந்து, வரிவருவாய் ஓரளவுக்கு அதிகரித்திருப் பதைக் காணலாம். தற்போதைய வருவாயிலிருந்து, திட்டச் செலவுக்காகக் கையிருப்பு ஒன்றுமில்லை. பற்றுக்குறை ரூ. 50 இலட்சங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முழு வரிவருவாயும் திட்டத்திலல்லாத செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் முதலில் போடப்பட்ட மதிப்பீட்டினைவிட அதிக மாகவே, சேர்க்கப்பட்ட வரிகளிலிருந்து வருவாய் கிடைத்து, நிதித் திட்டத்தில் காணப்பட்ட ரூ. 400 கோடி இடைவெளியை நிரப்பியது.

2.15. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் (The Third Five Year Plan): இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்பட்ட வேலைகளைத் தொடர்ந்து நடத்த, மூன்றுவது திட்டம் தீட்டப்பட்டது. மூன்றும் ஐந்தாண்டுத்திட்டம், 'தன்னிறைவு பெற்ற, தானே வளரும் பொருளாதாரத்தைக்' (Self-reliant and self-generating economy) குறிக்கோளாகக் கொண்டது. இக் குறிக்கோளை நிறைவேற்ற, மூன்றும் திட்டம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைவிட அளவில் பெரிதாக இருந்தது. நாட்டுவருமானத்தை ஆண்டொன்றிற்கு 5%-க்குக் குறையாமல் உயர்த்தும் வகையிலும் திட்டம் தீட்டப் பட்டது. 'நாட்டுவருவாயை ஆண்டுக்கு 5%-க்கு மேல் உயர்த்த வேண்டுமானல், நாட்டு வருமானத்தில் தற்போது 11·5% ஆகவுள்ள நிகர முதலீட்டினை 14%-க்கும் மேலாக ஆக்க வேண்டுவது அவசியம்'' என மூன்றுவது திட்டம் கூறியது (For achieving a rate of growth of over 5% per annum, it will be necessary to undertake net investment to the extent of more than 14% of the national income as compared to the present level of 11·5%)[1]. மூன்றும் திட்டக் காலத்தில் பொதுத்துறையில் ரூ. 7500 கோடி செலவிடத் தீர்மானிக்கப்பட்டது.

பின்வரும் அட்டவணையில் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் வரவினங்களைக் காணலாம் :—

[1] Third Five Years Plan, p. 51.

அட்டவணை எண் 12.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதிவரவுகள்
(Financial resource for the Third Plan)

	ஆரம்ப மதிப்பீடு		உண்மையில் கிடைத்த நிதி	
	தொகை (ரூ. கோடியில்)	மொத்தத்தில் சதவீதம்	தொகை (ரூ. கோடியில்)	மொத்தத்தில் சதவீதம்
1. தற்போதைய வரி வருவாயில் இருப்பு (அதிகப்படியான வரி விதிப்பு நீங்கலாக)	550	7	—419	—4
2. இரயில்வேக்களின் மூலம் கிடைப்பது	100	1	62	1
3. இதர பொது நிறுவனங்களின் உபரி	450	6	373	4
4. பொது மக்களிடமிருந்து கடன்	800	11	823	10
5. நிகர சிறு சேமிப்புகள்	600	8	565	7
6. வருங்கால வைப்பு நிதி	265	4	336	4
7.	105	1	34	—
8. இதர முதலீட்டு வரவிருப்பு	170	2	238	3
9. கட்டாய வைப்புகள், ஆண்டுத் தொகை வைப்புகள், பரிசுப் பத்திரங்கள், தங்கப்பத்திரங்கள்	—	—	117	1
10. அதிகப்படி வரிவிதிப்பு	1710	23	2892	33
11. வெளிநாட்டு உதவி	2200	29	2423	28
12. பற்றுக்குறை நிதியாக்கம்	550	8	1133	13
13. மொத்தம்	7500	100	8577	100

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், செலவு ரூ. 7500 கோடிகளிலிருந்து ரூ. 8577 கோடிகளை எட்டியது. தற்போதைய வரி வருவாய் இருப்பு இருக்குமென எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, திட்டமிடப்படாத பாதுகாப்புக்கான செலவு அதிகரித்ததால், ரூ. 419 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது. அதிகப்படி வரிவிதிப்பிலிருந்து பெறும் வருவாயைப் பொறுத்தவரை, மதிப்பீட்டிற்கும் மேலாக, 1963ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட வரிகளின் விளைவாகக் கிடைத்தது. இதன்மூலம் உச்ச அளவு வருவாயைப் பெற, வரி ஒரு கருவியாக இருப்பதைக் காண்கிறோம்.

ஆண்டுத் திட்டங்கள் (Annual plans) :– மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு, மூன்று ஆண்டுத் திட்டங்களின் நிதிவரவின் மதிப்பீட்டினைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

மூன்று ஆண்டுத்திட்டங்களின் நிதிவரவின் மதிப்பீடு

(Estimate of Resources for the Annual Plans of 1966-'67, 1967-'68 & 1968-'69)

	(ரூ. கோடியில்)
1. தற்போதைய வரி வருவாய் இருப்பு (1965-66ஆம் ஆண்டு வரி வீதப்படி)	362
2. இரயில்வேக்களின் மூலம் வரவு (1965'-66ஆம் ஆண்டுகளின் கட்டணங்களின்படி)	—119
3. இதர பொதுநிறுவன உபரி	467
4. அதிகப்படி வரிவிதிப்பு	907
5. பொது மக்களிடமிருந்து நிகரக்கடன்	537
6. சிறு சேமிப்புகள்	348
7. இதர முதலின வரவுகள்	709

8. மொத்த உள்நாட்டு வருவாய் (1-7 வரை)	3211
9. அயல் நாட்டு உதவி	2655
10. பற்றுக்குறை நிதியாக்கம்	723
மொத்த வரவினங்கள் (8+9+10)	6589

நேர்முக வரிச் சட்டங்களைச் சீரமைத்து, எளிதாக்கி இந்திய அரசாங்க நிதியமைச்சகத்தின் முன்னாள் செயலாளரான திரு. பூதலிங்கம் சமர்ப்பித்த அறிக்கை, மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்னர், நேர்ந்த முக்கிய சம்பவமாகும். நாட்டு வருமானத்தில் ஏற்படும் வளர்ச்சி, தானுகவே நாட்டின் வரிவருவாய்களில் பிரதிபலிக்கும் வகையில், வரித் திட்டம் அமைக்கப்படவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். தனிப்பட்டோர் வருமானவரி விதிப்பு எல்லையை ரூ. 4000 லிருந்து ரூ. 7500க்கு உயர்த்த வேண்டுமென்பதும், இந்துக் கூட்டுக்குடும்பங்களின் வருமானவரி விதிப்பு எல்லையை ரூ. 7000-லிருந்து ரூ. 10,000-க்கு உயர்த்த வேண்டுமென்பதும் அவரது முக்கியமான பரிந்துரைகளுள் இரண்டாகும். இதன் விளைவாக, வரிவருவாயில் ரூ. 7 முதல் 8 கோடிவரை நஷ்டம் ஏற்பட்டாலும், விலைவாசி ஏற்றம், பொருளாதாரம், நிருவாகம் இவற்றின் அடிப்படையில் இது நியாயமானதெனக் கூறப்பட்டது. ஆண்டுத்தொகைவைப்புத்திட்டமும் (Annuity Deposit Scheme) (இது 1968—'69ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் நீக்கப்பட்டது)இலாப்பங்கீட்டுவரியும் (இதுவும் 1968—'69-இல் நீக்கப்பட்டது) மற்றப் பரிந்துரைகளாகும். எஸ்டேட் வரிக்குப்பதிலாகப் பரம்பரை வரி (Inheritance tax) யை விதிப்பதும், பரிசு வரியைப் பரிசளிப்பவரிடமிருந்து பரிசு பெறுபவருக்கு மாற்ற வேண்டுமென்பதும் அவரது யோசனைகளாகும்.

2.16. நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் (Fourth Five Year Plan)[1]; நான்காம் ஐந்தாண்டுத் திட்டம், 1969ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஆரம்பமாகியது. 6·5% பொருளாதார வளர்ச்சியைப் பெறவேண்டுமென்பது, நான்காம் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பின்வரும் அட்டவணையில், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி காட்டப்பட்டுள்ளது.

[1] Report on Draft Fourth Five Year Plan, chapter 4.

நான்காம் திட்டத்திற்கான நிதி

(1)	(ரூ. கோடியில்) (2) மத்திய அரசு	(3) மாநில அரசுகள்	(4) மொத்தம்
1. தற்போதைய வரி வருவாய்	2355	100	2455
2. பொதுத் தொழில் உபரி	1175	555	1730
(1) இரயில்வேக்கள்	(265)	(—)	(265)
(2) இதர துறைகள்	(910)	(555)	(1465)
3. ரிசர்வ் பாங்கின் இலாபம்	133	32	165
4. சந்தைக் கடன்கள்	750	416	1166
5. சிறு சேமிப்புகள்	274	526	800
6. மாநில அரசுகளுக்கு இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் தரும் கடன்கள்	—	96	96
7. மாநில அரசாங்க நிறுவனங்கள், இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன், சந்தையிலிருந்து வாங்கும் கடன்கள்	—	247	247
8. இதர முதலின வரவுகள்	2181	-515	1666
9. அதிகப்படி வருவாய் இடப் பெயர்ச்சி	1600	1109	2709
10. மொத்த உள்நாட்டு வரவு செலவுத் திட்ட வருவாய் (1—9)	8468	2566	11034
11. வெளிநாட்டு உதவி	2514	—	2514
12. வரவு செலவுத் திட்டப்படி மொத்த வருவாய் (10+11)	10982	2566	11034
13. பற்றுக்குறை நிதியாக்கம்	850	—	850
14. வருவாய்த் தொகை (12+13)	11832	2566	14398
15. மாநிலத் திட்டங்களுக்கான உதவி	-3500	3500	—
16. நிகர வருவாய்கள் (14+15)	8332	6066	14398

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மேற்கூறிய பல்வேறு வருவாய்ச் சாதனங்களில், பொதுநிதியைப் பொறுத்தவரை, தற்போதைய வரிவருவாயும், பொதுத் தொழில் நிறுவன உபரிகளும், அதிகப்படியான வருவாய் இடப்பெயர்ச்சியும் முக்கியமானவை யாகும். அதிகப்படி வருவாய் இடப்பெயர்ச்சி, திட்டத்திற்கு ரூ. 2700 கோடி வரை தேவையானதால், இதில் ரூ. 1600 கோடி மத்திய அரசினாலும், ரூ. 1100 கோடி மாநில அரசுகளாலும் உண்டாக்கப்பட வேண்டும். அதிகப்படியான வருவாயைச் சேகரிக்க வழிகள் நான்காம் திட்டத்தில் பின்வருமாறு காட்டப் பட்டுள்ளன:—

1 மாநில மின்சார வாரியங்களின் (State Electricity Boards) வரவினங்களை, மொத்த முதலீட்டில் 11% ஆக உயர்த்துதல்.

2 நீர்ப்பாசன வசதியினால் பெற்ற அதிகப்படி வருவாய்களின் மீது, 25% முதல் 40% வரை நீர்ப்பாசன வரிவீதங்களை நிருணயித்தல்.

3 தொழில், வியாபார நிறுவனங்களுக்கான (பொதுத்துறை நிறுவனங்கள் நீங்கலாக) முதலீடுகளிலிருந்து பெறும் வருவாயை, மொத்த முதலீட்டில் 15% ஆக உயர்த்துதல்.

4. அதிகப்படியான வருவாயை இடப்பெயர்ச்சி செய்தல்

5. மாநிலங்களில், விவசாய வருமானவரியைப் பெருக்குதல்

6. பொருள்கள்மீது வரிவீதிப்பை அதிகரித்தல்

7. நகரிலுள்ள நிலங்களின்மீது வரிவிதித்தல்

8. வரிச்சலுகைகளை எடுத்துவிடுதல்

இவ்வாறு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு நிதியளிப்பதில் பொருளாதாரத்தின் பளு அதிகரித்து, நாட்டின் வரித்திட்டமும் பாதிக்கப்பட்டது. நாட்டின் வரிவிதிப்புக் கொள்கை, அரசாங்கத்தின் கொள்கைகளுக்குத் துணையாக இருக்க வேண்டியுள்ளது. வளரும் பொருளாதாரத்தில், தனிநபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் வாங்கும் திறமையை (Purchasing power) வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு இடம் பெயரச் செய்கிறது. அரசாங்கம் அவ்வாறு

அடைந்த நிதியை முதலீட்டுக்குப் பயன்படுத்துகிறது. ஆனால், வரிவிதிப்பு, அதிகப்பளுவானதாக இருந்தால், தனியார் துறையின் சேமிப்புகளையும் முதலீடுகளையும் குறைக்கலாம். ஆகவே, வரி விதிப்பின் இத்தகைய ஊக்கத்திற்கு எதிரான விளைவுகளை முடிந்த வரை குறைக்க வேண்டும். ஒரு சமதர்மச் சமுதாயத்தில் (Socialist Society) வரித் திட்டம் என்பது, செல்வம், வருமானம் இவற்றிலுள்ள சமமற்ற நிலையைக் குறைப்பதாக அமைய வேண்டும். மேலும், திட்டங்களுக்கும், முன்னேற்றத்துக்கும் வருவாய் தேவைப்படுவதோடு, வளர்ந்து வரும் நாட்டின் பாதுகாப்புக்கான செலவுகளையும் சமாளிக்கவும் தேவைப்படுகிறது. ஆகவே, இந்திய வரித் திட்டம் ஒரு சவாலுக்குத் தயாராக இருக்க வேண்டியுள்ளது. அதாவது, பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் இவற்றின் பளுவின் முழுப்பங்கினையும், எல்லா மக்களும் தாங்க வேண்டிய நிலையில், வரியமைப்பும் முடிந்தவரை தற்போதைய சூழ் நிலைக்கேற்றவாறு, பாரபட்சமற்ற சமநிலையிலும், ஊக்கத்தை, முடிந்தவரை, பாதிக்காத வகையிலும் இருக்கவேண்டும்.

3. இந்தியாவில் வருமானவரிச் சீர்திருத்தம்

(Reform of Income Tax in India)

3.1 தனிப்பட்டோருக்கு வருமானவரி — அதன் பலன்களும் குறைகளும் (Personal Income—Tax—its achievements and failings). வரிவிதிப்பிலே வருமானவரி ஒரு சிறந்த அம்சமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. வருமானவரியுடன் சில சிறந்த பண்புகள் இணைந்துள்ளன. முதலாவதாக, வருமானம் என்பது பொதுவாக ஒவ்வொரு வரிசெலுத்துவோரின் செலுத்தும் திறமையை அளக்கும் கருவியாக உள்ளது. இரண்டாவதாக, வருமானவரிப் பளுவை மற்றவர்களுக்கு மாற்றிவிடவும் முடியாது. மூன்றுவதாக, வரிசெலுத்தும் ஒவ்வொரு வரின் சூழ்நிலைக்கேற்றவாறு, வருமானவரி, மாற்றத்திற்கு உள்ளாகும். நான்காவதாக, வருமானவரி வளர்வீதத்தில் (Progressive rates) விதிக்கப்படுவதால், வருமானப் பங்கீட்டில் முன்னேற்றம் ஏற்பட வழியுண்டு. இறுதியாக, பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிக்கு மாறாக, வருமானவரி, பலவிதச் செலவினங்களுக்கிடையே முற்றிலும் பாரபட்சமற்ற ஒரு நடுநிலையை வகிக்கின்றது.

அரசியலில் முன்னேறியுள்ள எல்லாக் குடியரசுகளிலும், வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதோ ஒருவகைப்பட்ட வளர்வீதத் தனிப்பட்டோர் வரிவிதிப்பினைக் காணலாம். வரிப் பளுவைப் பாரபட்சமற்ற முறையில் பங்கீடு செய்வதும், ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதும், தனிப்பட்டோர் வளர்வீத வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாகும்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக, வருமானவரி தொடர்ந்து வழக்குமுறையில் இருந்து வருகிறது. சமீப காலமாக மரணவரிகளும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. வரிக்கொள்கைகளின் மூலமாகச்

சமுதாயத்தில் செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகளைப் போதுமான அளவு குறைப்பதில், ஸ்வீடனைத் தவிர, உலகில் வேறெந்த நாட்டிலும் முடியவில்லை. இந்தியவரிச் சீர்திருத்தத்தைப்பற்றிக் கால்டரின் அறிக்கையில் காணப்படுவதாவது :— 'கடந்த 15 ஆண்டுகளாக இங்கிலாந்தில், வருமானவரி, கூடுதல் வரிவீதங்கள், உச்சவருவாய் மட்டத்தில் 90 சதவீதத்தையும், எஸ்டேட் வரிகள் 80 சதவீதத்தையும் தாண்டியுள்ள போதிலும், இன்னும் அதிக அளவு இலாபங்கள் ஈட்டப்படுகின்றன. செல்வ உடைமைகளின் மீதுள்ள ஈடுபாடும் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை.' (Though in the United Kingdom, the combined income and sur - tax rates for the last 15 years have exceeded 90% in the top brackets and estate duties reached a maximum of 80%, vast new fortunes are still being made and the degree of concentration in the ownership of wealth has not been reduced). இதேநிலைதான் அமெரிக்காவிலும், இதர மேற்கத்திய நாடுகளிலும் காணப்படுகிறது. ஆகவே, வருமானவரியைப் பற்றி நடைமுறையில் ஆராயும்போது, வருமான மறுபகிர்வு (Redistributive effects) முறையில், வருமானவரியின் பங்கு காகித அளவில்தானே ஒழிய, உண்மையில் பயனற்றதென அறியலாம். எதிர்பார்த்த சமத்துவ நோக்கங்களை வருமானவரி விதிப்பினால் அடையமுடியாமற் போனதற்குக் காரணங்களை அடியிற்காணலாம்:-

முதலாவதாக, வரிவிதிப்புக்காக 'வருமானம்' என்ற சொல்லில் என்னென்ன அடங்கியுள்ளது என்பதைப்பற்றித் தெளிவான கருத்து இல்லை. இதன் காரணமாக, மூதலீட்டு ஆதாயங்கள் போன்ற இதர வருவாய்கள், வருமானத்தில் சேர்க்கப்படாமல் போய்விடுகின்றன. மேலும், வருமானவரியைத் தவிர்க்கப் பல வழிகளும் ஏற்படுகின்றன.

இரண்டாவதாக, வருமானவரியைச் செல்வவரியுடன் சேர்த்து நிறைவுபடுத்தாதலால், விற்கக்கூடிய சொத்துக்களின் உடைமை, அச் சொத்துக்கள் அளிக்கும் வருவாய்க்கும் மேலான நன்மையை, அச் சொத்தை உடையவர்க்கு அளிக்கிறது.

மூன்றுவதாக வருமானவரிக்காக, ஒருவரது மொத்த நிதி, நிலைமையிலிருந்து (financial position) ஒரு பகுதியை மட்டுமே பார்த்தால் போதுமென்பதால், வரி ஏய்ப்புகள் ஏற்படக் காரணமாயுள்ளது.

இறுதியாக, வியாபாரச் செலவு, வியாபார நஷ்டங்கள், நேர்மையற்ற முறையில் செய்யப்பட்ட சொத்து மாற்றங்கள் ஆகியவைகளுக்கு இடங்கொடுத்தல் போன்ற பல வசதிகளை வருமான

வரிச் சட்டங்கள் அளிப்பதால், வருமான வரிவிதிப்பின் பளுவைக் குறைத்துக்கொள்ள எளியமுறையில் வரிஏய்ப்புகளுக்கு வழிகாட்டு கின்றன.

3.2. வருமானம் என்ற சொல்லுக்குச் சரியான விளக்கவுரை (Proper definition of 'income') :— வருமானவரி திறமையுடன் செயல்படவேண்டுமானால், வருமானத்தைப் பற்றிய திட்டமான, விரிவான விளக்கவுரை தேவைப்படுகிறது. ஆடம்ஸ்மித்தின் (Adam Smith) காலந்தொட்டு, வருவாயைப் பற்றிய பல கோட் பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. எல்லாக் கோட்பாடுகளையும் இங்குத் திரும்பவும் கூறுவது தேவையற்றபோதிலும், சிறந்த, சமீபகாலத்திய வருமானக் கோட்பாடுகளைப் பற்றித் தொகுத்து ஆராயலாம்.

முதலாவதாக, முதலிருப்பிலிருந்து வரும் பொருள்களையும், சேவைகளையும் (goods and services) பணத்தின்மூலம் அளவிட்டு, அவற்றை வருமானம் எனக் காட்டும் விளக்கவுரைகளும் உள. இதுவே வருடாவருடம் தேசிய வருமானத்தை அளக்கப் பொருளாதார நிபுணர்களால் உபயோகப்படுத்தப்படும் புள்ளியியல் (Statistical) கருத்தாகும். இரண்டாவதாக நுகர்வோரின் திருப்தியை உணர்ந்தறிதலைப் பிரதிபலிக்கும், பொருள்கள், சேவைகள் ஆகிய வற்றின் பணமதிப்பே வருமானமாகும் என்ற விளக்கவுரைகளும் உள்ளன. இந் நோக்கத்திற்கேற்ப, பேராசிரியர் இர்விங்பிஷர் (Irving Fisher) சேமிப்பு என்பது வருமானமாகாது என்று கூறி யுள்ளார். 'செலவழிக்கப்படும் பணமே வருமானமாகும்; ஏனெனில் பணத்தைச் செலவழிக்கும் வரை அதற்கு ஒரு பயனும் கிடையாது' என்று அவர் விளக்கம் தந்துள்ளார்.

மூன்றாவதாக, வரிவிதிப்பிற்காக வருமானம் என்றால், அதில் எல்லாவிதத் தற்செயல் இலாபங்களும் (casual gains), வரவுகளும், வழக்கிலுள்ள (conventional) பல்வகைப்பட்ட வருமானச் செலுத் தினங்களும் அடங்கும் என விரிவான விளக்கவுரையை பொதுநிதி யியலைப் பற்றிய அமெரிக்க எழுத்தாளர்கள் கூறிவருகின்றனர். காலத்தின் இருமுனைகளுக்கிடையே ஒருவனுக்குச் செலவிற்காகக் கிடைக்கும் பணத்தின் அளவே வருமானமாகும் எனக்கூறும் கோட்பாடுகளும் உள. ஒவ்வொரு ஆண்டும், சட்டசபைகளும், நீதிமன்றங்களும், வரிநிருவாகத் துறையினரும், வரிவிதிப்புக்காக (Tax purposes) வருமானத்தைப் பற்றிச் சரியான விளக்கவுரையைக் கூறிவருகின்றன.

3.3. இன்றைய வருமான வரிச்சட்டத்தின் குறைபாடுகள் (Short-comings of Present Income-Tax Laws) :— வரிவிதிப்புக்காக வருமானத்தைப் பற்றிய தெளிவான விரிவான விளக்கவுரை இல்லை.

இதன் காரணமாக, சொத்துரிமையிலிருந்து கிடைக்கும் நன்மைகளை வரிக்கிலக்காகாத வரவினங்களாகச் சரிக்கட்டிக் காட்டுதலைத் தடுக்க இயலவில்லை. இவை வரி செலுத்துவோர்க்குக் கொடிய அநீதியை இழைத்துள்ளன. வரிசெலுத்தும் திறமையின் அளவுகோலாக இருக்கும், வருமானத்தைப் பற்றிய விளக்கவுரையிலுள்ள குறைபாடு களாலேயே, இத் திட்டத்தில் அநீதிகள் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது. வரிவிதிப்பிற்காக வருமானத்தைப் பற்றிய மிக விரிவான விளக்கவுரை இருந்தாலும், 'செலவிடும் சக்தி'யின் (Spending Power) எல்லாப் பகுதிகளையும் வருமானத்தின்கீழ்க் கொண்டு வரமுடியாது என்று விவாதிக்கப்படுகிறது.

செலவிடும் சக்தியின் பகுதிகளைக் கால்டர் பின்வருமாறு தொகுத்து அமைத்துள்ளார்[1] :—

(1) இருப்பின் பகுதிகள் (ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு மனிதனின் விற்கக்கூடிய செல்வம்.)

(2) வருமான ஓட்டத்தின் பகுதிகள். (இலாபஈவு, வட்டித் தொகைகள், கூலிகள், சம்பளங்கள் போன்ற திரும்பத்திரும்ப கிடைக்கும் ஒழுங்கான வரவினங்கள்)

(3) முற்றிலும் எதிர்பார்க்க இயலாத தற்செயல் வரவினங்கள் (casual receipts)

இத்தகைய வரவினங்கள் பலவகைப்பட்டவை. அவை யாவன :—

(1) சொத்துப்பேறு (Inheritance), பூர்வீகச்சொத்துகள், வெகு மதிகள் அல்லது பரிசுகள்.

(2) அசாதாரண ஈட்டங்கள் (exceptional earnings). (உ-ம்.) விற்பனையில் சிறந்து இருக்கும் ஒரு நாவலாசிரியரின் புத்தகம், வெற்றிகரமான ஒரு பொருளைக் கண்டுபிடித்த பின்னர், அக் கண்டுபிடிப்பின் உரிமைக்காப்பின் (Patent right) விற்பனை, ஒருவரது நிலத்தில் தாதுப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அத்தாதுப் பொருள்களின் விற்பனை உரிமை நஷ்டஈட்டிற்காக அல்லது வேலை யிலிருந்து ஓய்வு பெறும்போது கொடுக்கப்படும் தொகை.

(3) பந்தயங்களில் சம்பாதிக்கப்பட்ட பணம், லாட்டரிமூலம் வந்த பணம்.

(4) முதலினைச் சொத்துக்களை விற்றதால் கிடைத்த இலாபங்கள், முதலீட்டு ஆதாயங்கள்.

[1] N. Kalder, An Expenditure Tax, 1955, pp. 30-37.

Sources of Funds		I நிதி ஆதாரங்கள்			
I State Sources:		மாநில ஆதாரங்கள்			
1. Tax Revnnue	1.	வரி வருவாய்	1,252·69	1,315·67	1,418·51
2. Non Tax Revenue	2.	வரியல்லாத வருவாய்	758·35	809·84	861·32
3. Capital Receipts (net)	3.	முதலின வரவு (நிகரம்)	9·70	26·44	—10·93
Total state sources		மாநிலத்தில் மொத்த நிதி ஆதாரங்கள்	2,020·74	2,151·95	2,268·90
II Central sources:-	II	மத்திய அரசின் வருவாய் வகைகள்			
1. Share in taxes	1.	வரிகளில் பங்கு	489·93	613·26	683·49
2. Grants	2.	உதவிகள்	534·93	540·07	504·51
3. Loans	3.	கடன்கள்	782·06	951·69	741·70
Total Central sources		மத்திய அரசின் மொத்த வருவாய் வகை	1,806·92	2,105·02	1,929·70
Total Sources Available		மொத்தத்தில் கிடைக்கும் ஆதாரங்கள்	3,877·66	4,256·97	4,198·60
Surplus (+) or Deficit (-)		உபரி (+) அல்லது பற்றுக்குறை (-)	— 381·61	— 120·03	—200·86

அட்டவணை எண் 64

மாநிலத்திட்டங்கள் : செலவும், மத்திய அரசின் உதவியும்
(State Plans : Outlay And Central Assistance)

ரூபாய் – கோடிகளில்

மாநிலங்கள் State		நான்காவது திட்டம் [Fourth Plan(Draft)] (Total outlay) மொத்தச் செலவு	(Central assistance மத்திய அரசின் உதவி
1. Andhra Pradesh	— ஆந்திரப் பிரதேசம்	360·55	240·00
2. Assam	— அஸ்ஸாம்	225·50	220·00
3. Bihar	— பீஹார்	441·01	338·00
4. Gujarat	— குஜராத்	450·22	158·00
5. Haryana	— அரியாணு	190·49	78·50
6. Jammu & Kashmir	— ஜம்மு, காஷ்மீர்	145·00	145·00
7. Kerala	— கேரளம்	258·40	175·00
8. Madya Pradesh	— மத்தியப்பிரதேசம்	355·96	262·00
9. Maharashtra	— மகாராட்டிரம்	811·80	245·50
10. Mysore	— மைசூர்	327·10	173·00
11. Nagaland	— நாகாலாந்து	35·00	35·00
12. Orissa	— ஒரிஸ்ஸா	180·50	160·00
13. Punjab	— பஞ்சாப்	271·40	101·00
14. Rajasthan	— இராஜஸ்தான்	238·95	220·00
15. Tamil Nadu	— தமிழ்நாடு	502·00	202·00
16. Uttar Pradesh	— உத்திரப்பிரதேசம்	951·00	526·00
17. West Bengal	— மேற்கு வங்காளம்	320·51	221·00
Total	மொத்தம்	6,066·00	3,500·00

Source: Monthly Commentary on Indian Economic Conditions Budget-Number, 1970-March-April, Indian Institte of Public Opinion.

அட்டவணை எண் 68

தனிப்பட்ட மாநில வரிகள்

(Individual State Taxes)

ரூ. கோடியில்

Heads of Revenue வரி வருவாய்த் தலைப்புகள்	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாயில் சதவீதம்	1951-52	(Average in First Plan) முதல் திட்டத்தில் சராசரி	(Average in second Plan) இரண்டாம் திட்டத்தில் சராசரி	(Average in Third Plan) மூன்றும் திட்டத்தில் சராசரி	1966-67	1971-72*	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாய்ச் சதவீதம்
Land Revenue நிலவரி	21	48	65	91	114	90	101	6
Agricultural Income Tax விவசாய வருமானவரி	2	4	5	8	10	11	13	1
Stamps and Registration முத்திரை வரி, பதிவு வரி	11	26	27	37	60	81	130	8
Urban Immovable Property Tax நகர்ப்புற இடம் பெயர்க்க முடியாத சொத்து வரி	1	2	2	2	3	3	5	—

State Excise மாநில ஆயத்தீர்வைகள்	21	49	46	48	75	109	209	13
General Sales Tax பொது விற்பனை வரி	24	54	62	116	246	407	742†	46
Sales Tax on Motor Spirit பெட்ரோல் விற்பனை வரி	2	5	5	10	23	36	53	3
Motor Vehicles Tax மோட்டார் வண்டி வரி	4	10	13	25	53	69	188‡	12
Entertainment Tax கேளிக்கை வரி	3	6	6	10	22	35	58	4
Electricity duties மின்சார வரி	2	4	5	10	26	43	70	4
Other Taxes and Duties இதர வரிகளும், தீர்வைகளும்	9	20	17	32	41	53	38	2
மொத்தம்	100	228	253	389	673	937	1,607	100£

* Budget Estimate † Includes Central Sales Tax ‡ Includes Tax on Passengers & Goods £ Percentage does not add up to 100 because of rounding

வரிப்பொறுப்புகளைத் (Tax Liabilities) திடீரென அதிகரிக்கச் செய்யும். தற்போதுள்ள அதிக அளவிலிருந்து 45%க்கு வருமான வரிவீதங்கள் குறைக்கப்படுவதை ஒப்புக்கொண்டு போற்றவேண்டு மானால், நமக்கு மனப்பூர்வமான அறிவு விளக்கம் (Mental illumination) தேவை. கால்டர் கண்டறிந்தவாறு, 'நாம் இதுவரை அழிவுறும் வரித்திட்டத்தின் விஷப்பாதையில் பயணம் செய்து வந்துள்ளோம்—குறையக் குறைய அதிகமாக வரிவிதிக்கும் பாதை — இருவழிகளிலும் இதை வைத்துக் கொள்ள முடியாது என்பதை அறிந்துணர பெரும் கற்பனைமுயற்சி தேவை. நூறு சதவீத வரிப் பறிமுதல் என்பதைக் காகித அளவில் காணலாமே ஒழிய, நடை முறையில் அதே எண்ணங்களைக் கையாண்டு, அதைச் செயலாற்ற முடியும் என்பது நடவாது' ('We have travelled so far down the vicious path of decadent tax system— the path of charging more and more on less and less—that it requires a great effort of imagination to turn back and realize that one cannot have it both ways. Taxes approaching 100 percent confiscation can exist on paper. But one cannot apply the same notions to a genuine system and expect that it would work')[1].

3.6. இந்தியாவில் வருமானவரி பற்றிய மதிப்புரை (Review of Income—Tax in India) :— வருமானவரி, இந்தியாவில் பழங்காலத் திலிருந்தே இருந்துவரும் வரியாகும். 'இந்தியக் கல்விமுறையில், ஆங்கிலமொழியினைப் புகுத்தியதுபோலவே, இந்திய நிதித் திட்டத்தில், வருமானவரி புகுத்தப்பட்டதும், நம் நாட்டில் ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் நடந்த சில மகிழ்ச்சிதரும் மரபு ரிமைகளில் (heritages) ஒன்றாகும்' ('Like the introduction of the study of the English language in Indian Education, the introduction of income tax in the Indian financial system is one of the few happy heritages of British rule in this country')[2].

தற்காலத்திய வரலாற்று ஆசிரியர்களால் முதல் சுதந்திரப்போர் என அழைக்கப்படும், 1857ஆம் ஆண்டில் நடந்த சிப்பாய்க் கலகத் தினால் ஏற்பட்ட நிதித்துறை ஆபத்தினைச் சமாளிக்க வேளாண்மை வருமானம் உட்பட எல்லாவித வருமானத்தின்மீதும் வருமானவரி புகுத்தப்பட்டது. ஆனால், அது விரைவிலேயே ஒழிக்கப்பட்டது. 1886ஆம் ஆண்டில் வருமானவரி திரும்பவும் விதிக்கப்பட்டது. ஆனால் அதனுள் வேளாண்மை வருமானம் சேர்க்கப்படவில்லை.

[1] N. Kalder :- An Expenditure Tax, 1955, P. 242.
[2] V. K. R. V. Rao :- Taxation of Income in India, 1931, P. 1.

ஆங்கிலேயரது ஆட்சியின்போது, இந்திய வருமானவரியின் அடிப்படை அமைப்பு, ஆங்கிலமுறையைப் பின்பற்றியே அமைக்கப் பட்டது. கடந்த 70 ஆண்டுகளாக, இவ்வரியமைப்பில் ஏராளமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. வருமானவரி அமைப்பின் இன்றைய நிலை, முன்னேறிய மேல்நாடுகளிலுள்ள வருமானவரி அமைப்போடு ஒப்பிடக்கூடிய அளவில் உள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் வருமானவரித்திட்டத்தில் அடிப்படை மாறுதலேதுமில்லை. 1954ஆம் ஆண்டு வரி விசாரணைக்குழு வருமானவரியைப் பரிசீலித்துச் சில சிபாரிசுகளைச் செய்தது. 1955ஆம் ஆண்டில், வருமானவரியை முற்றிலும் பரிசீலனை செய்து வருமானவரித்திட்டத்தைச் சீர்திருத்த புரட்சிகரமான யோசனைகளைக் கூறினர். வருமானவரித்திட்டத்தில் வரிவிசாரணைக்குழுவின் அறிக்கையோ கால்டரின் அறிக்கையோ, எந்தவிதமான குறிப்பிடத்தக்க மாறுதல்களையும் செய்யவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். வருமானவரியோடு இதர நேர்முக வரிகள் சேர்க்கப்பட்டிருப்பது உண்மையே. ஆனால், வருமானவரித் திட்டத்தின் அமைப்பில் ஒருவித மாறுதலுமில்லை.

கால்டரின் அறிவுரைப்படி, இந்திய அரசாங்கம் வரிவிதிப்பின் இணைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. குறைந்த வீதத்தில் வரிகளைப் புகுத்தவேண்டுமென்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். ஆனால், உயர்ந்த வீதத்தில் குறுகிய வரி அடிப்படை மீது விதிக்கப்பட்ட வருமானவரியைப்போல அல்லாமல், இதன் அடிப்படை விரிவாக இருக்கவேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1957—'58-ஆம் ஆண்டில், நிதியமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ண மாச்சாரி தமது 'வரவுசெலவுச் சொற்பொழிவின்' (Budget Speech) போது வருமானவரிவிதிப்பின் அதிக அளவு வரிவீதங்கள் பயனற்றுப் போனதை எடுத்துக் காட்டினர். ஆகவே, 1957-'58ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்படி உழைத்து ஈட்டிய வருமானத் திற்கு வருமானவரி, மேல்வரி வீதங்களை 91·8%லிருந்து 77%க்கும், உழைக்காமல் ஈட்டிய வருமானத்திற்கு 84%க்கும் குறைக்கப்பட்டது. இக் குறைப்பு, கால்டரின் அறிக்கையில் கண்டபடி இல்லாமல், மிகவும் சொற்பமானதாகவே இருந்தது.

இந் நிலையில், இந்தியாவில் தற்போதைய வருமானவரி அமைப்பைப்பற்றி அறிவது பயனுள்ளதாக இருக்கும். விவசாயத் திற்கு வரிவிதிக்கும் உரிமை மாநிலங்களுக்கு மட்டும் சொந்தமான தால், மத்திய அரசினால் விதிக்கப்படும் வருமானவரி, விவசாயமூலம் வரும் வருமானத்தைப் பாதிப்பதில்லை. இவ் விலக்கு நியாயமான

தன்று. இவ்விலக்கினுல், வருமானவரியிலிருந்து தப்பும் வழிகள் அதிகரித்துள்ளன. வரிசெலுத்தும் ஒருவன் தனது வருமானத்தை மறைக்கலாம். அதை நிருவாகிகள் கண்டுபிடித்தால், அவ்வருவாயை விவசாயத்தின்மூலம் கிடைத்ததெனக் காட்டிவிடலாம். ஆனுல், எல்லா மாநிலங்களிலும் வேளாண்மை வருமானவரி விதிக்கப்படுவ தில்லே. அவ்வரி விதிக்கப்பட்ட மாநிலங்களில், விதிப்பு முறையிலும், வரி வீதத்திலும் ஒற்றுமை காணப்படுவதில்லே. அரசியல் அமைப் பாளர்கள், நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் மத்திய அரசுக்குப் பங்கேதுமில்லே என்று கருதினுல், அவர்கள் அவ்வருவாய்மீது விதிக்கப்படும் வரியினே வசூலித்து, நிருவகிக்கும் உரிமையை மத்திய அரசுக்குக் கொடுத்துலிட்டு, அதன்மூலம் கிடைக்கும் வருவாயை மாநிலங்களுக்கு அளிக்கும்படிச் செய்திருக்கலாம். இப்போதுள்ள முறைப்படி, விவசாய வருமானமும், இதர வருமானமும் பாரபட்ச மற்ற முறையில் வரிக்கு இலக்காகவில்லே. வரிவிதிப்புக்காக, இவ் விருவகை வருமானங்களேயும் இணேக்கவேண்டுமென வரி விசாரணேக் குழு சிபாரிசு செய்துள்ளது.

1939ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாளில், 'தொகுதி முறை' (Slab System) புகுத்தப்பட்டது. இதற்குமுன் வழக்கிலிருந்த 'தொடர்ச்சி முறை'ப்படி (Step System) வருமானம் தொகுதி களாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு வீதத்தில் வரிவிதிக்கப்பட்டது. இதனுல் ஒரு தொகுதியிலிருந்து மற்றெரு தொகுதிக்கு வருமானம் உயரும்போது வரிவீதங்கள் உயர்ந்த அளவில் அதிகரித்தன. தொகுதிமுறையில் இத்தகைய பாரபட்சமில்லே. வரிவீதம் ஒரு தொகுயிலிருந்து இன்னெரு தொகுதிக்கு வளர்வீத முறையில் உயர்த்தப்படுகிறது. உயர்ந்த அளவுத் தொகுதிக்கு, உச்சவீதத்தில் வரி விதிக்கப்படுகிறது.

1939ஆம் ஆண்டில், 15,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத் தொகுதிக்கு வருமான வரிவீதம் ரூபாய்க்கு 2½ அணுவாக இருந்தது. போரின்போது, அதிகரித்த அரசாங்கத்தின் தேவைகளேச் சமாளிக்கப் போர்க்காலம் முழுவதும், வரிவீதங்களே வளர்வீதமுறையில் உயர்த் தினர்கள். 1946—'47ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் உச்சநிலே வரிவீதம் மேலும் உயர்த்தப்பட்டு ரூபாய்க்கு 5 அணுவாக ஆனது. அதன்பிறகு, சில சலுகைகள் கொடுக்கப்பட்டு, 1950ஆம் ஆண்டில் அடிப்படை வீதங்கள் பின்வரும் முறையில் இருந்தன :—

1. முழுவருவாயில் முதல் 1,500 ரூபாய்க்கு — வரி இல்லே.
2. அடுத்த 3,500 ரூபாய்க்கு — ரூபாய்க்கு 9 பைசா.

3. அதற்கு அடுத்த 5,000 ரூபாய்க்கு — ரூபாய்க்கு 1 அணு 9 பைசா

4. அதற்கடுத்த 5,000 ரூபாய்க்கு — ரூபாய்க்கு 3 அணு

5. மீதமுள்ள வருவாய் முழுவதற்கும் — ரூபாய்க்கு 4 அணு

அதன்பின்னர், இவ்வீதங்களும், தொகுதிகளும் பலமுறை மாற்றப்பட்டன. போருக்கு முன்பு, வரிவிலக்கு எல்லை ரூ. 2000 ஆக இருந்தது. 1942-'43இலும், 1943-'44இலும் இது தற்காலிக மாக ரூ. 1500-க்குக் குறைக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டிற்குப் பின்னர் குறைந்த வருமானத் தொகுதிகளுக்கு நன்மை செய்யும் வகையில், இந்த எல்லை உயர்த்தப்பட்டது.

இத்துடன் ஒரு சிறப்புக்கூடுதல்வரியும், ஏறத்தாழ எப்போதுமே வழக்கிலிருந்து வந்தது. வருமானவரி, மேல்வரி என்ற இருவகைப்பட்ட வருமான வரிகளை மத்தியஅரசு வரு மானத்தின்மீது விதிப்பது வழக்கமாக இருந்தது. அரசின் போர்க் காலத் தேவைகளை ஈடுசெய்ய முதன்முதலாக 1917-'18ஆம் ஆண்டில் மேல்வரி (Super tax) விதிக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டிற்கு முன்பே, தொகுதி முறையில் (Slab system) மேல்வரி விதிக்கப்பட்டது. 5 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய்த் தொகுதிக்கு உச்ச வரிவீதம் ரூபாய்க்கு 7 அணுவாக இருந்தது. 20,000 ரூபாய்க்குக் குறைந்த வருவாய்க்கு மேல்வரி கிடையாது. இரண்டாம் உலகப்போரின்போது, இவ்வரி வீதம் வளர் வீதத்தில் உயர்த்தப்பட்டு, 1942ஆம் ஆண்டில் ரூபாய்க்கு 10½ அணுவாகியது. 1946-'47ஆம் ஆண்டில் 5 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய்த் தொகுதிக்கு விதிக்கப்பட்ட வருமான வரி, மேல்வரி இவற்றின் இணைப்பு வீதம் ரூபாய்க்கு 15½ அணுவாக இருந்தது. வளர்ச்சி குறைந்த நம் நாட்டிற்கு இவ்வரிவீதம் மிகப் பளுவானதாக இருந்த போதிலும், பண வீக்கச் (Inflationary) சூழ்நிலைகளும், அரசாங்கச் செலவினங்களின் உயர்ந்த மட்டமும், வரியிலிருந்து தப்பும் வழிகளும் இதைத் தாங்குவதற்கு உதவின. 1947-'48ஆம் ஆண்டில் மேல்வரியின் அளவில் மாறுதல் செய்யப்பட்டது. இதனால், உழைத்து ஈட்டிய வருமானம் ரூ. 1·5 இலட்சத்திற்கு மேற்பட்டால் அத் தொகுதியும், 1·2 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட உழைத்து ஈட்டாத வருமானத் தொகுதியும் உச்சவரிவீதத்திற்கு இலக்காயின.

அதன் பிறகு வரிவீதங்கள் குறைக்கப்பட்டுத் திரும்பவும் 1955ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின்படி உச்ச வரிவீதம் ரூபாய்க்கு 9½ அணுவாக ஆக்கப்பட்டது (இத்துடன் 5 சதவீத மத்திய, கூடுதல் வரியும் விதிக்கப்பட்டது). இவ்வரிவீதம் 1·5 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத் தொகுதிக்கு விதிக்கப்பட்டதாகும். அதிலிருந்து பல முறைகள் வரிவீதங்கள் மாற்றப்பட்டு 70,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகுதியே உச்சநிலை கூடுதல்வரிவீதத்திற்கு இலக்காயிற்று.

1957ஆம் ஆண்டிலிருந்து வழக்கிலிருந்து வரும் வரி வீதங்களைப் பின்வரும் இரண்டு அட்டவணைகளிலிருந்து அறியலாம்:-

அட்டவணை எண் 13

இந்தியாவில் வருமானவரிவீதங்கள்

வருமானத் தொகுதி	வரிவீதங்கள் (சதவீதத்தில்)
மொத்த வருவாயில் முதல் 3,000 ரூபாய்க்கு	வரி இல்லை
அதற்கு அடுத்த 2,000 ரூபாய்க்கு	3%
அதற்கு அடுத்த 2,500 ரூபாய்க்கு	6%
அதற்கு அடுத்த 2,500 ரூபாய்க்கு	9%
அதற்கு அடுத்த 2,500 ரூபாய்க்கு	11%
அதற்கு அடுத்த 2,500 ரூபாய்க்கு	14%
அதற்கு அடுத்த 5,000 ரூபாய்க்கு	18%
மொத்த வருவாயில் மீதமுள்ளவற்றுக்கு	25%

(மேற்கண்ட வரிவீதங்கள் மணமானவர்களுக்கும், இந்துக் கூட்டுக் குடும்பங்களுக்கும் விதிக்கப்பட்டன)

Source :- Reserve Bank of india Bulletin, June, 1957, p. 539.

அட்டவணை எண்:- 14

இந்தியாவில் மேல்வரி வீதங்கள்[1]

வருமானத்தொகுதி மொத்த வருவாயில் முதல்	வரிவீதங்கள் (சதவீதத்தில்)
20,000 ரூபாய்க்கு	வரி இல்லை.
அதற்கு அடுத்த 5,000 ரூபாய்க்கு	... 5%
அதற்கு அடுத்த 5,000 ரூபாய்க்கு	... 15%
அதற்கு அடுத்த 10,000 ரூபாய்க்கு	... 20%
அதற்கு அடுத்த 10,000 ரூபாய்க்கு	... 30%
அதற்கு அடுத்த 10,000 ரூபாய்க்கு	... 35%
அதற்கு அடுத்த 10,000 ரூபாய்க்கு	... 40%
மீதமுள்ள வருமானத்திற்கு	... 45%

அட்டவணை எண் 15

வருமானத்தில் சதவீதப்படிச் செலுத்தப்படும் வரி.

(Tax Payable as percentage of Income)

வருவாய்	உழைத்து ஈட்டிய வருவாயில் சதவீத வரி	உழைத்து ஈட்டாத வருவாயில் சதவீத வரி
ரூ.		
3,000	—	—
3,600	2·2	2·2
5,000	2·4	2·4
10,000	5·2	5·9
12,000	6·5	7·1
15,000	7·8	9·0
20,000	10.6	12·1
30,000	19·3	22·1
40,000	26·3	30·1
55,000	35·4	40·4
100,000	51·5	58·8
500,000	71·9	79·0
1,000,000	74·4	82·7

[1] Source :- Reserve Bank of India Bulletin, June 1957, p.539.

மேற்கண்ட அட்டவணைகளிலிருந்து 20,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம், வருமானவரியின் உச்ச வீதத்திற்கும் (25%), 70,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் மேல்வரியின் உச்ச வீதத்திற்கும் (45%) இலக்காகியதைக் காணலாம். இந்த அடிப்படை வீதங்களுக்குக் கூடுதல்வரியும் விதிக்கப்பட்டது. ஓர் இலட்ச ரூபாய்வரை உழைத்து ஈட்டாத வருவாய்க்கு 5 சதவீதமும் அதற்கு மேற்பட்ட வருவாய்க்கு 10 சதவீதமும் கூடுதல் வரி விதிக்கப்பட்டது. உழைத்து ஈட்டாத வருவாய்க்கு (Unearned income) 20% கூடுதல்வரி விதிக்கப்பட்டது. மொத்த வருவாய் 75,000 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், அதற்குக் கூடுதல்வரி கிடையாது. வருமானவரி, மேல்வரி, கூடுதல் வரி இவற்றின் விளைவாக இறுதிநிலை வீதம், உழைத்து ஈட்டாத வருவாயின் உயர்ந்த தொகுதிக்கு 84 சதவீதமாகவும், உழைத்து ஈட்டிய வருவாயின் உயர்ந்த தொகுதிக்கு 77 சதவீதமாகவும் ஆயின. 1961ஆம் ஆண்டில் ஓர் இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட உழைத்து ஈட்டிய வருமானத்தின் கூடுதல்வரியில் 5% அதிகமாகியதால், இறுதிநிலை வீதம் 80·5% ஆகியது

அட்டவணை எண் தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் மட்டங்களுக்கான வரிவீதங்களைக் காட்டுகிறது. இவ்வீதங்களுள் வருமான வரியும், மேல்வரியும், கூடுதல்வரியும் அடங்கியுள்ளன. இவ்வரி வீதங்கள் மணமாகாதவர்களைச் சாரும். மணமானவர்களுக்குப் பொருந்திய வரிவீதங்கள் சற்றே வேறுபட்டவை. 1955இல் வரி இல்லாத தொகுதி ஒன்றினை ஏற்படுத்தி மணமான வரி செலுத்துவோருக்குப் பளு குறைக்கப்பட்டது. மணமானவர்களுக்கு வரி இல்லாத தொகுதி ரூ. 3000-க்கு உட்பட்டது. மணமாகாதவர் இத்தொகுதி ரூ. 1000-க்கு உட்பட்டது. 1957இல் ஒரு குழந்தைக்கு ரூ. 300-வீதம், ரூ. 600 வரை குழந்தைக்கான படி (Child allowance) அளிக்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 20,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுடையோர்க்கு மேற்கூறிய சலுகைகள் எதுவும் கிடையா.

3.7 **சிலவகை முக்கிய வரிவிலக்குகள் :-** தேசியத் திட்டச் சேமிப்புப் பத்திரங்கள் (National Plan Savings Certificates), கருவூலச் சேமிப்பு வைப்புப் பத்திரங்கள் (Treasury Savings Deposit Certificates) இவற்றின் மூலம் கிடைக்கும் வட்டிக்கு வரி இல்லை என ஆக்கப்பட்டது. பிறரிடம் இரக்கம் காட்டுவதை ஊக்குவிப்பதற்காக, தகுதியுள்ள அறநிலையங்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகள் ரூ. 250-க்கு மேற்பட்டால், அவைகளுக்கு 1948ஆம்

ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப் பட்டது. 1960ஆம் ஆண்டில், அறநிலையங்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளின் வரிவிலக்கு எல்லை மொத்த வருவாயில் 7½% அல்லது 1½ இலட்ச ரூபாய் இவற்றுள் எது குறைவானதோ அது வரை உயர்த்தப்பட்டது. 1962ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இது 10% அல்லது 2 இலட்ச ரூபாய்வரை உயர்த்தப்பட்டது. மதச்சார்பு அறநிலையங்களின் வருமானம் வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டிலிருந்து, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களின் உடைமை களுக்கும் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. போருக்குப் பின் தொழில்களைப் புதுப்பிப்பதற்காக, புது முதலீடுகளுக்கு ஆரம்பப்படிகளும் (Initial allowances), இரட்டிப்புத் தேய்மானப் படிகளும் (Double depreciation allowances) வழங்கவேண்டி யிருந்தது. 1946ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலும், இங்கிலாந்தைப் பின்பற்றி படிகளைக் கொடுக்கத் தொடங்கினர்கள். தற்போது, அவைகளுக்கென ஒரு வளர்ச்சி தள்ளுபடி (Development rebate)யும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டு, தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, இந்திய அரசாங்கம், சில குறிப்பிட்ட புதுத் தொழில் நிறுவனங்களுக்கு, 1949ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 5 ஆண்டுகள் வரை, அவை ஈட்டும் இலாபத்தில் 6% வரை வருமானவரி இல்லை எனத் தீர்மானித்தது.

தள்ளுபடிகள் (Abatements) அல்லது வரிவீதங்களில் குறைப்பு ஆகியவைகளும் வழக்கிலிருந்தன. உழைத்து ஈட்டிய வருமானத் திற்குச் சலுகையளிக்கும் வகையில் வருமான வரியில் வேறுபாடு காணப்பட்டது. 1945ஆம் ஆண்டில் வேற்றுமைப்பாட்டுக் கொள்கை (Principle of differentiation) முதன்முதலாகப் புகுத்தப் பட்டது. இதன்படி வருமானவரியிலிருந்து (மேல்வரியிலிருந்து அன்று) விலக்களிக்கும், படி (allowance) புகுத்தப்பட்டது. உழைத்து ஈட்டிய வருமானத்திற்குச் சலுகையளிக்கும் இக் கொள்கையைப் பல விதங்களில் நியாயமெனக் கொள்ளலாம். உழைத்து ஈட்டாத வருமானத்தைவிட உழைத்து ஈட்டும் வருமானம் நிச்சயமல்லாதது; நிலையற்றது. ஏனெனில், உழைத்துச் சம்பாதிப்பவன் இறப்பதாலும், கைகால்களை இழப்பதாலும் அவனது ஊதியம் திடீரென நின்றுவிடு கிறது. முதலினைச் சொத்துக்களுக்குத் (Capital assets) தேய்மானப் படி (Depreciation allowance) அளிக்கப்படுவது போன்று மனித முத லின் (Human capital) தேய்மானத்தை எதிர்நோக்கித் தொழிலாளி களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படுதல் வேண்டும். தொழிலாளி தனது வாழ்க்கையை நடத்த, உடல், உள்ள உழைப்பில் ஓய்வினைத்

தியாகம் செய்கிறான். 1957ஆம் ஆண்டிலிருந்து, உழைத்து ஈட்டாத வருமானத்தின்மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியைவிடக் குறைவான வீதத்தில் உழைத்து ஈட்டிய வருமானத்திற்கு விதிக்கப்பட்டது. மேலும், வருங்கால வைப்புக்காகக் (Provident Fund) கொடுக்கும் தொகைளுக்கும், மொத்த வருமானத்தில் 25% வரை ஆனல், 8,000 ரூபாய்க்கு மேற்படாமல், ஆயுள்இன்ஷூரன்ஸ் கட்டணங்களுக்கும், வருமானவரியிலிருந்து தள்ளுபடி இருந்து வந்தது.

இந்தியாவில் வருமானவரிப் பளுவினைப்பற்றி அறிய இந்திய வருமானவரி, பன்னாட்டு வருமானவரித்திட்டங்களோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டது. இவ்வாராய்ச்சிகள், இந்திய வருமானவரியானது, உலகிலுள்ள மிக முன்னேறிய நாடுகளில் உள்ள வருமான வரிகளோடு ஒப்பிடும் வகையில் இருப்பதை வெளிப்படுத்தின. ஆகவே, 1953-'55ஆம் ஆண்டுகளில், வரிவிசாரணைக்குழு, பல முன்னேறிய நாடுகளிலிருந்த வரி வீதத்தோடு, இந்திய வரி வீதங்களை ஒப்பிட்டுப் பார்த்தது.[1] இந்தியாவில் ஆரம்ப இறுதிநிலை வீதங்கள் (Initial marginal rate) மிகக் குறைவாக இருந்து, 25,000 ரூபாய் மட்டத்திற்குப்பின் இறுதி நிலைவீதம் அதிக அளவில் உயர்ந்து, உலகிலேயே மிகவுயர்ந்த வீதமாக இருந்ததை அக் குழு கண்டறிந்தது. அக் குழுவின் பரிசீலனையின்போது, அதிக அளவு இறுதி நிலைவீதம் 82% ஆக இருந்தது. அதைத் தொடர்ந்து வரிவீதங்கள் உயர்த்தப்பட்டன. 1956ஆம் ஆண்டில், 1,50,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்திற்கு, 91·9% ஆக அதிக அளவு இறுதி நிலை வீதம் உயர்த்தப்பட்டது. 1957இல், கால்டரின் சிபாரிசுகளின்படி வேறு சில புதிய நேர்முக வரிகள் விதிக்கப்படலாமென எதிர்நோக்கி, உழைத்து ஈட்டாத வருமானத்திற்கு இவ்வரிவீதம் 84% ஆகவும், உழைத்து ஈட்டிய வருமானத்திற்கு 77% ஆகவும் குறைக்கப்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, பொருளாதார ஆராய்ச்சிபற்றிய தேசிய ஆலோசனைக்குழு (National Council of Applied Economic Research) அதனுடைய 'வரிவிதிப்பும், தனியார் முதலீடும்' (Taxation and Private Investment, 1961) என்ற வெளியீட்டில், இந்தியாவிலும், இதர முன்னேறிய நாடுகளிலும் £ 1,000-லிருந்து (ரூ. 13,333), £ 25,000 (ரூ. 3,33,333) வரையுள்ள வருமானத் தொகுதியின்மீதுள்ள வரிப்பளுவை ஒப்பிட்டுக் கணக்கிட்டுள்ளது. பின்வரும் அட்டவணைகளையும், வரைப்படத்தையும் காண்க.

[1] Taxation Enquiry Commision Report-Vol. II-p. 133.

Tax Percentage of Earned Income

ஈட்டிய வருமானத்தில் வரியின் சதவீதம்



Source : 'NCAER'
Taxation and Private Investment' 1961.

Tax sa Percentage of Earned Income

ஈட்டிய வருமானத்தில் வரியின் சதவீதம்



Source : NCAER.
Taxation and Private Investment, 1961.

Table - 16. Tax as Percentage of earned income — ஈட்டிய வருவாயில் வரியின் சதவீதம்
India Compared with certain advanced countries
குறிப்பிட்ட முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடப்பட்ட நிலையில் இந்தியா
Married individual with two Children —இருகுழந்தைகளுள்ள திருமணமான தனிநபர்

Income வருமானம் Rs.	£	India *1960-61* (*1* Re=*1*sh 6d) இந்தியா	U. K. *1960-61* இங்கிலாந்து	West Germany (Dm 12=£1) மேற்கு ஜெர்மனி	France NF *13·80* =£1 பிரான்சு	Norway KS *20* = £1 நார்வே	U. S. A. ($ 2·80=£1) அமெரிக்கா	Canada ($ 2·75=£1) கனடா	Japan Yen *1008* =£1 ஜப்பான்
13·333	*1,000*	*6·4*	*7·7*	*10·9*	*3·8*	*11·4*	*2·9*	...	*15·6*
26·666	*2,000*	*16·5*	*18·8*	*18·2*	*9·3*	*30·8*	*11·4*	*7·5*	*23·0*
40,000	*3,000*	*26·3*	*25·1*	*23·1*	*13·7*	*42·1*	*14·8*	*11·8*	*27·5*
53,333	*4,000*	*34·5*	*30·4*	*26·5*	*16·9*	*49·1*	*16·9*	*15·1*	*30·6*
66,666	*5,000*	*40·7*	*35·4*	*29·4*	*20·4*	*54·6*	*18·7*	*18·3*	*33·3*
80,000	*6,000*	*46·0*	*39·6*	*31·9*	*22·9*	*58 3*	*19·9*	*21·6*	*35·3*
93,000	*7,000*	*49·8*	*43·3*	*33·8*	*24·6*	*60·9*	*21 6*	*24·5*	*37·2*
1,06,666	*8,000*	*53·1*	*46·2*	*35·5*	*25·9*	*62 8*	*23·1*	*27·1*	*38·8*
1,20,000	*9,000*	*55·7*	*48·9*	*36·9*	*27·8*	*64·4*	*24·8*	*29·1*	*40·1*
1,33,333	*10,000*	*57·9*	*51·20*	*38·2*	*29 4*	*65·6*	*26·4*	*30·7*	*41·*
2,00,000	*15,000*	*64·2*	*62·0*	*43·2*	*34·3*	*69 2*	*33·8*	*37·1*	*45·7*
2,66,666	*20,000*	*67·4*	*68·7*	*46·5*	*38·3*	*71·0*	*39·9*	*41·4*	*48·0*
3,33,333	*25,000*	*69·3*	*72·7*	*48·6*	*41·2*	*72·1*	*44·5*	*44·5*	*50·4*
Maximum Marginals Rate		*77*	*88·75*	*57·24*	*66*	*76·5*	*91*	*80*	*70*
Applies above the income of Rs.			*1,00,000*	*2,04,000*	*2,52,000*	*2,17,333*	*50,667*	*19,16,000*	*19,53,333*	*5,61,376*

Source: NCAER Taxation and Private Investment, *1961*, p. *87*.

Table - 19. Tax as percentage of earned income — ஈட்டிய வருமானத்தில் வரியின் சதவீதம்
India Compared with developing Countries — முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடப்பட்ட இந்தியா
Married individual with two Children — இருகுழந்தைகள் உள்ள திருமணமான தனிநபர்

Income (வருமானம்) (Rs.)	(£)	India 1960 - 61 (Re. = 1sh 6d) இந்தியா	Pakistan 1959 - 60 (1 Re. = 1s 6d) பாகிஸ்தான்	Ceylon 1959 - 60 (1 Re. = Is 6d) சிலோன்	Kenya 1959 கென்யா	Nigeria (Federal) 1959 - 60 நைஜிரியா
13,333	1,000	6·4	5·8	3·8	3·6	3·2
26,666	2,000	16·5	15·2	10·9	9·3	10·7
40,000	3,000	26·3	23·3	17·9	15·7	16·5
53,333	4,000	34·5	32·0	25·0	21·6	21·2
66,666	5,000	40·7	38·7	30·5	26·4	25·5
80,000	6,000	46·0	45·0	35·2	30·4	30·1
93,333	7,000	49·8	50·0	38·8	34·0	33·9
1,06,666	8,000	53·1	53·9	41·4	37·3	36·7
1,20,000	9,000	55·7	56·7	43·5	40·5	38·8
1,33,333	10,000	57·9	59·0	45·1	43·5	40·6
2,00,000	15,000	64·2	66·0	50·1	54·0	51·7
2,66,666	20,000	67·4	69·5	52·6	59·2	57·5
3,33,333	25,000	69·3	71·6	54·1	62·4	61·6
Maximum Mavginal Rate		77	80	60	75	75
Applies above the income of Rs.		1,00,000	76,000	69,000	1,31,753	1,37,067

Source: NCAER, Taxation and Private Investment, 1961, p. 88.

இத் தொகுதி முற்றிலும், நார்வே நாடு மட்டுமே, இந்தியாவை விடப் பளுவான வரிவீதங்களே விதித்துள்ளது. இத் தொகுதி முழு மைக்கும், அமெரிக்கா, கனடா, பிரான்சு நாடுகளைவிட இந்தியாவில் தான் வரிவிதிப்பின் பயனுள்ள வீதம் (Effective rate of taxation) அதிகமாகவுள்ளது. போருக்குப் பின்னர் பொருளாதார வளர்ச்சியில் அதிக அளவு முன்னேற்றத்தை எய்தியுள்ள ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகளிலும், இந்தியாவில் இருந்த வளர் வீதத்தைவிடக் குறைவான வளர்வீதங்களே இருந்து வந்தன என்ப தையும் இவ்வாலோசனைக்குழு எடுத்துக்காட்டியது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே இந்தியாவைவிட அதிகமான, உச்ச இறுதிநிலை வீதங்கள் விதிக்கப்படுகின்றன என்பது மற்றொரு சுவையான அம்சமாகும். அமெரிக்காவில் உச்ச இறுதிநிலைவீதம் 91% ஆகும். அட்டவணை எண் 16 வரைபடம் பக்கம் 62 இந்தியாவிலும், இதர வளர்ச்சியுறும் நாடுகளிலும் உள்ள வரிப் பளுவினை ஒப்பிட்டுக் காட்டுகின்றன. இந் நாடுகளுள், £ 1,000-லிருந்து £ 6,000 வரை உள்ள தொகுதிக்கு வரிவிதிப்பின் பயனுள்ள வீதம், இந்தியாவில்தான் அதிகமாகவுள்ளது. இதற்கு மேற்பட்ட தொகுதிக்கு வரிவீதங்கள், சிலோன், கென்யா, நைஜீரியா ஆகிய நாடுகளில் இருப்பதைவிட இந்தியாவில் அதிகமாகவும் பாகிஸ் தானில் இருப்பதைவிட இந்தியாவில் குறைவாகவும் உள்ளன.

வரிவீதங்களைப்பற்றிய சர்வதேச ஒப்பீடு ஓர் எல்லைக்குட்பட்ட தென்பதில் ஐயமேதுமில்லை. இருந்தபோதிலும், 'இந்திய வருமான வரி, உலகத்திலுள்ள அதிக அளவு வளர்வீதங்களில் மிக உயர்ந்த அளவினதாக உள்ளது. நமது பரிசீலனைக்குட்பட்ட உயர்ந்த வருவாய் மட்டங்களின் தொகுதியின்மேல் வரிப்பளு மிக அதிகமானதாகவும் உள்ளது' என்ற பொருளாதார ஆராய்ச்சி பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவினரின்[1] பரிசீலனையின் முடிவினை நாம் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ('The Indian income-tax is highly progressive one of the most progressive systems in the world and that the tax burden on the upper-income levels in the range considered by us is one of the highest')[2]. உயர்ந்த வருமான வரிவீதங்கள், இந்தியாவுக்குள் வெளிநாட்டு முதல் வருவதைப் பாதிக்கிறது என்பதையும் இவ்வாலோசனைக்குழு எடுத்துக் காட்டியது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, மேற்கு ஜெர்மனி போன்ற, முதலினங்களை ஏற்றுமதி செய்யும் (Capital exporting) முக்கிய நாடுகளில் இருப்பதைவிட இந்தியாவில் வரிப்பளு அதிக

[1] National Council of Applied Economic Research,
[2] NCAER :- Taxation and Private Investment, 1961, p. 15

மாக இருந்தது. அந்நிய நாடுகளின் முதலீட்டுக்காக இந்தியாவுடன் போட்டியிடும் நாடுகளிலிருந்ததைவிட, இந்தியாவில்தான் இவ்வரி வீதங்கள் அதிகமாக இருந்தன. 1961ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த புதிய வருமானவரிச் சட்டம், இந்தியாவின் வருமானவரி வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டமாகும். இந்தியாவில் வருமான வரியைப் பற்றிய சட்டங்களை அது மாற்றித் தெளிவுபடுத்தித் தொகுத்தது. முதல் வருமானவரிச்சட்டம் 1922இல் இயற்றப் பட்டு, 1939இல் திருத்தியமைக்கப்பட்ட போதிலும், 1961-வரை, வருமானவரிபற்றிய சட்டங்களைத் தொகுக்க ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. மேலும் 1939 ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை இச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் வருமான வரிச்சட்டத்தைக் குழப்பத்திற்குள்ளாக்கின.

1961ஆம் ஆண்டின் வருமான வரிச்சட்டம், சட்டக்குழு, நேர்முகவரி நிருவாகவிசாரணைக்குழு (Direct Taxes Administration Enquiry Committee) ஆகியவற்றின் முயற்சிகளின் பயனுகும். இச் சட்டம் வரிசெலுத்துவோரின் துன்பங்களைக் குறைக் கவும், வரிமுறையினை விளக்கிக் காட்டவும் முயற்சித்தது. இது, வளர்ந்துவரும் பொருளாதார நிருவாகத்தின் தேவைகளைப்பற்றி உணர்ந்திருந்தது என்பது அப் புதிய சட்டத்தின் மிக முக்கிய அம்சங் களில் ஒன்றாகும். வெளிநாட்டு முதலினைக் கவர வரிப்பளுக் குறைப்பும், இதர சலுகைகளும் அளிக்கப்பட்டது மிக முக்கியமான தாகும். உற்பத்தி தொடங்கி 5 ஆண்டுகள் வரை, புதிய தொழில் நிறுவனங்களின் சராசரி வருவாயில் 6%-க்கு வரி கிடையாது என ஆகியது. இந்தியாவுக்கு வந்து மூன்று ஆண்டுகள்வரை, ஒரு வெளி நாட்டு தொழில்நிபுணரால் வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியை மேன்மேலும் பெருக்கவே, புதுச்சட்டங்களும் முறைகளும் எளிதாக்கப்பட்டுத் தொகுத்தளிக்கப் பட்டன.

1965ஆம் ஆண்டிற்கு முன்னர் தனிப்பட்ட வருமானங்களுக்கு (Personal Incomes) வருமானவரியும், மேல்வரியும் விதிக்கப் பட்டன.

1965ஆம் ஆண்டு மார்ச் மாதம், மேல்வரியும் வருமான வரியும் இணைக்கப்பட்டு, வரிப்பொறுப்புக் (Tax liability) கணக்கீடு எளிமையாக்கப்பட்டது. வரிவீதங்கள் பின்வரும் வகையில் விதிக்கப் பட்டன:-

1. மொத்த வருமானம் ரூ. 5000-க்கு மேற்படாமலிருந்தால் வருவாயில் 5·1%

2.	மொத்த வருமானம் ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 வரை இருந்தால்	ரூ. 250 + ரூ. 5000-க்கு மேற்பட்ட வருமானத்திற்கு 10%
3.	மொத்த வருமானம் ரூ. 10,000-க்கும் மேற்பட்டு ரூ. 15,000-க்குக் கீழ் இருந்தால்	ரூ.750 + ரூ.10,000-க்கு மேற்பட்ட வருவாயில் 15%
4.	மொத்த வருமானம் ரூ. 15,000-க்கு மேற்பட்டு ரூ. 20,000-க்குக் கீழ் இருந்தால்	ரூ. 1500 + ரூ. 15,000-க்கு மேற்பட்ட வருவாயில் 20%
5.	மொத்த வருமானம் ரூ. 20,000-க்குமேல், ஆனால் ரூ. 25,000-க்கும் கீழ் இருந்தால்	ரூ. 2500 + ரூ. 20,000-க்கு மேற்பட்ட வருவாயில் 30%
6.	மொத்த வருமானம் ரூ. 25,000-க்கு மேல், ஆனால் ரூ. 30,000-க்குக் கீழ் இருந்தால்	ரூ, 4,000 + ரூ. 25,000-க்கு மேற்பட்ட வருவாய் 40%
7.	மொத்த வருமானம் ரூ. 30000-க்கு மேல், ஆனால் ரூ. 5,0000-க்குக்கீழ் இருந்தால்	ரூ. 6,000 + ரூ.30,000-க்கு மேற்பட்ட வருவாயில்50%
8.	மொத்த வருமானம் ரூ. 50,000-க்கு மேல் ஆனால் ரூ. 70,000-க்குக் கீழ் இருந்தால்	ரூ. 16,000 + ரூ. 50,000 - க்கு மேற்பட்ட வருவாயில்60%
9.	மொத்த வருமானம் ரூ. 70,000-க்கு மேல் இருந்தால்	ரூ. 28,000 + ரூ. 70,000 - க்கு மேற்பட்ட வருவாயில் 65%

1966ஆம் வருடத்திய நிதிச்சட்டம், ஒருவருக்குச் சொந்தமான வருமானத்தின் வரிவிலக்கு ரூ. 4,000-மாகவும், இந்துக் கூட்டுக் குடும்பங்களின் வருமானத்தின் வரிவிலக்கு எல்லையை ரூ. 7,000-எனவும் உயர்த்தியது. வருமானவரிமீது அவ்வப்போது பல கூடுதல் வரிகள் விதிக்கப்பட்டன. 1964இல் இவைகளுக்குப் பதிலாக ஒரு தனிப்பட்ட கூடுதல் வரியொன்று விதிக்கப்பட்டது. 1965இல் இவ்வரி வீதமும் மாற்றப்பட்டுத் தொகுதி முறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. இக் கூடுதல் வரிவீதங்கள் உழைத்து ஈட்டாத

வருமானத்திற்கும், உழைத்து ஈட்டிய வருமானத்திற்கும் வேறு பட்டவையாயிருந்தன.

உழைத்து ஈட்டாத வருமானத்தின்மீது கூடுதல் வரிவீதங்கள் பின்வருமாறு இருந்தன:-

1.	முதல் ரூ. 15000 வருமானத்திற்கு	வரி கிடையாது
2.	அதற்கு அடுத்த ரூ. 14,500-க்கு	20%
3.	அதற்கு அடுத்த மீதமுள்ள வருமானத்திற்கு	25%

உழைத்து ஈட்டிய வருமானத்தின்மீது கூடுதல்வரி வீதங்கள் பின்வருமாறு இருந்தன:-

1.	முதல் ரு. 1 இலட்ச வருமானத்திற்கு	வரி கிடையாது
2.	அதற்கு அடுத்த ரூ. 65,000 வருமானத்திற்கு	5%
3.	அதற்கு அடுத்த ரூ. 65,000 வருமானத்திற்கு	10%
4.	மீதமுள்ள வருமானத்திற்கு	15%

1966ஆம் வருடத்திய நிதிச்சட்டத்தின்படி வருமானவரியின்மீது ஒரு தனி மத்தியக் கூடுதல் வரி (Union surcharge) விதிக்கப்பட்டது. ஒரு வருமானத்திற்குச் செலுத்த வேண்டிய வருமானவரி, கூடுதல் வரித் தொகைக்கு(Aggregate) 10% வீதம் இக்கூடுதல் வரி கணக்கிடப் பட்டது. சொந்த வருமானங்களின்மீது வரிவிதிப்பு 10% என ஒரே வீதத்தில் உயர்த்தப்பட்டது.

1968ஆம் ஆண்டு, மார்ச் மாதம் இந்திய மத்திய நிதி அமைச்சரின் முன்னாள் செயலாளரான திரு. பூதலிங்கம், நேர்முக வரிவிதிப்புச் சட்டங்களை எளிதாக்கிச் சீரமைப்புச் செய்வது பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டார். வருமான வரியைப் பொருத்த வரை, திரு. பூதலிங்கம் அவர்கள் மிக விரிவான சிபாரிசுகளைச் செய்தார். அவையாவன, தனிப்பட்டோர் வருமான வரிவிலக்கு எல்லையை ரூ. 4,000-லிருந்து ரூ. 7,5000-க்கு உயர்த்தவேண்டும் என்பதும், இந்துக்கூட்டுக்குடும்பங்களின் வருமான வரிவிலக்கு எல்லையை ரூ 7,000-லிருந்து ரூ. 10,000 அல்லது 11,000 வரை உயர்த்த வேண்டும் என்பதுமாகும். இதனால் 7 கோடி அல்லது 8 கோடி ரூபாய் வரை அரசாங்கத்திற்கு வருமான இழப்பு நேரிடலாம். ஆனால், விலைவாசிகள் உயர்வு, பொருளாதாரம், நிருவாகம் இவற்றில் ஏற்படும் மோசடிகள் இவற்றை நோக்கின்,

இத் தீர்மானம் நியாயமானதே என அவர் கூறினார். பதிவுப்புத்தகத்தில் (Register) உள்ள வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 17,00,000 ஆகக் குறையுமாதலால், பெருமளவில் வரி செலுத்துவோர் மீது, வருமானவரி அதிகாரிகள் அதிக கவனத்தை செலுத்த முடியும். ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்திய அரசு இச் சிபாரிசுகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

1970ஆம் வருடத்திய நிதிச்சட்டம், வருமானவரிவிலக்கு எல்லையை ரூ. 4,000-லிருந்து ரூ. 5,000-ஆக உயர்த்தியது. அது வரை வழக்கிலிருந்த தனிப்பட்ட படிகள் (Allowances) சிலவற்றையும் நீக்கிவிட்டது. அவையாவன, (1) திருமணப் படிகள் (Marriage allowances) (2) குழந்தைகளை வளர்ப்பதற்கான படிகள் (Children allowances), (3) ஒருவரது ஆதரவின்கீழ் உள்ள பெற்றோரைப் பாதுகாக்கும் படிகள். இதனால், வரி செலுத்துவது ஒரு பதிவு செய்யப்படாத நிறுவனமாகவோ, திருமணமாகாதவராகவோ, திருமணமாகி ஒரு குழந்தையை உடையவராகவோ, ஒரு குழந்தைக்கு மேல் உடையவராகவோ, பெற்றோரை வைத்துக் காப்பாற்றுபவராகவோ எப்படி இருந்தாலும் வரிப்பொறுப்பில் (Liablity) ஒருவித வேறுபாடும் இவர்களிடையே கிடையாது.

மாற்றப்பட்ட வருமானவரிவீதங்களைக் கீழே காணலாம்:

1.	மொத்த வருவாய் ரூ. 5000-க்கு மேற்படாதிருந்தால்	வரி கிடையாது.
2.	ரூ. 5,000-க்கு மேல், ஆனால் ரூ. 10,000-க்குக் குறைவாக இருந்தால்	ரூ. 5,000-க்கு மேற்பட்ட வருவாய்க்கு 10%
3.	ரூ. 10,000-க்கு மேற்பட்டும், ரூ. 15,000க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 500+ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாயில் 17%
4.	ரூ. 15,000-க்கு மேற்பட்டும், ரூ. 20,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 1,350+ரூ. 15000,-க்கு மேற்பட்ட வருவாயில் 33%
5.	ரூ. 20,000-க்கு மேற்பட்டும், ரூ. 25,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 2,500+ரூ. 2,0000-க்கு மேற்பட்ட வருவாயில் 30%
6.	ரூ. 25,000-க்கு மேற்பட்டும், ரூ. 30,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 4,000+ரூ. 25,000-க்குக் மேற்பட்ட வருவாயில் 40%

7.	ரூ. 30,000-க்கு மேற்பட்டும் ரூ. 40,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 6,000+ரூ.30,000-க்கு மேற்பட்ட வருவாயில் 50%
8.	ரூ. 40,000-க்கு மேற்பட்டும், ரூ. 60,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 11,000+ரூ.40,000-க்கு மேற்பட்ட வருவாயில் 60%
9.	ரூ. 60,000-க்கு மேற்பட்டும், ரூ. 80,000-க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 23,000+ரூ.60,000-க்கு மேற்பட்ட வருவாயில் 70%
10.	ரூ. 80,000-க்கு மேற்பட்டும், ஓர் இலட்ச ரூபாய்க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 37,000+ரூ.80,000-க்கு மேற்பட்ட வருவாயில் 75%
11.	ஓர் இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டும், இரண்டு இலட்ச ரூபாய்க்குக் குறைவாகவும் இருந்தால்	ரூ. 52,000+1இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருவாயில் 80%
12.	மொத்த வருவாய் இரண்டு இலட்ச ரூபாய்களுக்கு மேற்பட்டால்	ரூபாய் 1,32,000 + 2 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருவாயில் 85%

ஓர் இந்துக்கூட்டுக் குடும்பத்தின் வருமானம், ரூ. 7,000-ஐத் தாண்டாத நிலையில் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. மத்திய அரசின் தேவைகளுக்காக, மேற்கூறிய வருமானவரிவீதங்களுக்கு 10% வீதம் கூடுதல் வரி விதிக்கப்படலாம்.

வருமானவரி, கூடுதல்வரித்தொகையின்மீது ஒரு தனிக் கூடுதல் வரியை 10% வீதம் விதித்துக் கணக்கிடலாம்.

1971—'72ஆம் ஆண்டு வரவுசெலவுத் தீர்மானங்கள், தனிப்பட்டோரின் வருடாந்திர வருவாய், ரூ. 15,000-க்கு மேற்பட்டால் அவற்றின்மீது விதிக்கப்படும் வருமான வரியின்மீது விதிக்கப்படும் கூடுதல்வரி வீதத்தை அதிகரிக்கலாமென முடிவு செய்தன. கூடுதல்வரி ஒரேவிதமாக 10%-லிருந்து 15-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1970ஆம் ஆண்டின் நிதிச்சட்டத்தின்படி புகுத்தப்பட்ட வருமானவரி வீதங்களில் மாறுதல் ஏதுமில்லை. 1971ஆம் ஆண்டின் நிதிச்சட்டப்படி, வரி செலுத்தும் ஒருவர் தாம் மற்றொருவருக்கு மாதத்திற்கு

ரூ. 5,000-க்கு மேல் ஊதியம் கொடுப்பதாயிருந்தால், அச் செலவினத்தை வரிக்கு இலக்காகும் இலாபங்களிலிருந்து தள்ளுபடி செய்து, அதற்கு வருமானவரிவிலக்கு அளித்து வந்ததை, நிறுத்தி விட்டது. பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு மிகவும் அவசியமான, தனியார் தொகுதியில் உச்ச வருமானத்தை அடக்கிவைப்பதுவே, இதன் நோக்கமாகும்.

ரூ. 5,000-லிருந்து ரூ. 5 இலட்சம் வரை உள்ள வேறுபட்ட வருமானங்களுக்கான, 1950-'51ஆம் வருடத்திய வருமானவரி வீதங்களையும், 1971-'72ஆம் வருடத்திய வருமானவரிவீதங்களையும் பின்வரும் அட்டவணை ஒப்பிட்டுக்காட்டுகிறது:-

அட்டவணை எண் 18

1950-'51இலும், 1971-'72இலும் வருமான வரிவீதங்கள்.[1]

வருமானம் ரூ.	1950-'51 வரி (ரூபாயில்)	1970-'71 வரி (ரூபாயில்)	அதிகரிப்பு (+) அல்லது குறைப்பு (-)
5,000	117	வரி கிடையாது	— 117
7,500	273	275	+ 2
10,000	492	550	+ 58
15,000	1,086	1,485	+ 399
40,000	9,711	12,650	+ 2,939
70,000	26,586	34,500	+ 7,914
90,000	40,492	51,175	+ 10,683
1,00,000	47,680	59,800	+ 12,120
2,00,000	1,24,242	1,51,800	+ 27,558
3,00,000	2,02,387	2,40,550	+ 47,183
5,00,000	3,58,617	4,45,050	+ 86,433

[1] Source:- Eastern Economist, Budget No : June 11, 1971, p. 1010.

7500 ரூபாய் வருமானத்திற்கான வரியில் பெயரளவிற்குத்தான் அதிகரிப்பு இருப்பதைக் காணலாம். உண்மையில், கடந்த சில ஆண்டுகளாக, ரூ. 7,500-க்குக் குறைவான வருவாய் மட்டங்களுக்கு, வருமானவரிப்பளு குறைக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 7500 ரூபாய்க்கு மேற்பட்ட எல்லா வருமான மட்டங்களுக்கும் (Levels of income) வருமானவரியின் நிலைப்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1950-'51-இல் வருடாந்திர வருவாய் ரூ. 40,000-க்கு இறுதிநிலை வரிவீதம் 50% ஆக இருந்தது. தற்போது ரு. 30,000-க்கு இவ்விறுதிநிலைவீதம் விதிக்கப்பட்டுள்ளது.

1950-'51ஆம் ஆண்டில், ஆண்டொன்றுக்கு ஓர் இலட்ச ரூபாயைச் சம்பாதித்த ஒருவர், ரூ. 47, 680-ஐ வருமான வரியாகச் செலுத்தியபின், மீதி ரூ. 52,320:ஐக் கையில் வைத்துக்கொள்ள முடிந்தது. அவருக்கு அதிகப்படியாக ரூ. 4,00,000 வருவாய் கிடைத்தால் அதில் ரூ. 93,763-ஐ அவர் வைத்திருக்கலாம். 1971-'72ஆம் வருடத்திய வருமானவரி வீதங்களுக்கேற்ப தனிப்பட்ட நபரொருவர் ஆண்டொன்றுக்கு ஓர் இலட்ச ரூபாய் சம்பாதித்தாரானால், அதில் 59,800 ரூபாயை வருமான வரியாகச் செலுத்தி வீட்டு மீதி ரூ. 41,200-ஐ அவர் கையில் வைத்திருக்க வேண்டியுள்ளது. அவர் மேலும் 4 இலட்ச ரூபாயைச் சம்பாதித்தாரேயானால், அதில் ரூ. 14, 750 தான் அவர் கையில் தங்கும். அதாவது ஓர் இலட்ச ரூபாய் வருமான மட்டத்தை அடைந்த பின் அதிகப்படியாகச் சம்பாதிக்கும் 4 இலட்ச ரூபாய் மூலம் ஒருவருக்குக் கிடைப்பது ரூ. 14, 750 தான்; அல்லது அவ்வதிகப்படியான வருமானத்தில்3·5 சதவீதந் தான். இந்திய அரசாங்கம் பொதுவுடைமைக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவர, வருமானங்களின் உச்சவரம்பைத் (Ceiling) தீர்மானிக்கும் வகையில் விதிக்கப்பட்ட புது வரிவீதங்களுக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் எதிர்ப்பு காணப்படுகிறது.

பின்வரும் அட்டவணையில், 1970-'71-க்கும் 1971-'72-க்கும் இடையே, தனிப்பட்டோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் மட்டங்களில் (Selected levels of income) வரிநிலைப்பாட்டினை ஒப்பிட்டுக் காணலாம் வரிநிலைப்பாட்டில் (Incidence) ஏற்பட்ட வேறுபாடு, 1971-'72ஆம் வருடத்திய வரவுசெலவுத் திட்டத்தின்படி கூடுதல்வரி அதிகப்படுத்தப்பட்டதாலேயாகும்.

அட்டவணை எண் 19.

தனிப்பட்டோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் மட்டங்களின் வரிநிலைபாட்டின் ஒப்பீடு.[1]

(Comparative Incidence of Tax at selected levels of income in the case of individuals)

வருமானம்	1970-'71ஆம் ஆண்டின் வரி விதத்திற்கேற்ப வரி (கூடுதல் வரியுட்பட)	1971-'72ஆம் ஆண்டின் வரி விதத்திற்கேற்ப வரி (கூடுதல் வரியுட்பட)	வரியில் அதிகரிப்பு
(1)	(2)	(3)	(4)
ரூ.	ரூ.	ரூ.	ரூ.
6,000	110	110	இல்லை
7,000	275	275	இல்லை
10,000	550	550	இல்லை
12,000	1,018	1,018	இல்லை
15,000	1,485	1,485	இல்லை
20,000	2,750	2,875	125
25,000	4,400	4,600	200
40,000	12,100	12,650	550
50,000	18,700	19,550	850
60,000	25,000	26,450	1,150
70,000	33,000	34,500	1,500
80,000	40,700	42,550	1,850
90,000	48,950	51,175	2,225
1,00,000	57,200	59,800	2,600
1,50,000	1,01,200	1,05,800	4,600
2,00,000	1,45,200	1,51,800	6,600
2,50,000	1,91,950	2,00,675	8,725
3,00,000	2,38,700	2,49,550	10,859
5,00,000	4,25,700	4,45,050	10,350
10,00,000	8,93,200	9,33,800	49,600

[1] Source :- Eastern Economist, Budget No; June 11, 1971, p. 1063.

கடந்த பல ஆண்டுகளாக, ஆண்டொன்றுக்கு 1 இலட்ச ரூபாய் சம்பாதிக்கும் வரிசெலுத்துவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. மொத்தம் 14,70,000-இல் அத்தகைய வரிசெலுத்துவோரின் எண்ணிக்கை 1966-'67-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 3,898 ஆகும். இதை அட்டவணை எண் 20-இல் காணலாம். மொத்த வரி செலுத்துவோர் 14,70,000ஆக இருக்கும் போது அதில் 12,522 பேர் மட்டுமே, தமது ஆண்டு வருமானம் ரூ. 60,000-க்கு மேல் எனக் காட்டியுள்ளனர். மாதத்திற்கு ரூ. 5,000-க்கு மேற்பட்ட வருமானங்களுக்குப் புதிய தடை முறைகளை விதிப்பதன்மூலம், இப் போக்கினைத் துரிதப்படுத்தலாம் எனத் தோன்றுகிறது.

அட்டவணை எண் 20

1966-'67இல் தனிப்பட்டோர் செலுத்தியவரி.[1]

வரி செலுத்து மொத்த வருவாய்த் தொகுதி	வரி செலுத்து வோரின் எண்ணிக்கை	வரிக்குட்பட்ட வருவாய் (1000 ரூபாயில்)	செலுத்திய வரி (1000 ரூபாயில்)
ரூ. 4,000-க்குக் கீழ்	50235	1695,17	2653
ரூ. 4,001 - 5,000	376216	1,56,69,76	25939
ரூ. 5,001 - 7,500	421212	2,51,46,10	70516
ரூ. 7,501 - 10,000	2,61,975	2,20,57,44	112175
ரூ. 10,001 - 12,000	98,809	1,08,46,89	72207
ரூ. 12,001 - 15,000	66,083	89,54,98	71241
ரூ. 15,001 - 17,500	54,099	85,54,77	85732
ரூ. 17,501 - 20,000	29,664	55,41,79	60894
ரூ. 20,001 - 25,000	37,784	82,71,58	118426
ரூ. 25,001 - 30,000	20,989	57 02,34	98709
ரூ. 30,001 - 40,000	25,623	87,43,49	194568
ரூ. 40,001 - 50,000	10,232	45,29,14	122984
ரூ. 50,001 - 60,000	6,334	33,90,78	110625
ரூ. 60,001 - 70,000	4,106	26,06,39	89251
ரூ. 70,001 - 1,00,000	4,518	37,21,05	158282
ரூ. 1,00,001 - 2,00,000	2,885	37,90,78	205899
ரூ. 2,00,001 - 3,00,000	513	12,44,65	74332
ரூ. 3,00,001 - 4,00,000	201	6,23,42	44612
ரூ. 4,00,001 - 5,00,000	92	4,13,59	28842
ரூ. 5 இலட்சத்திற்கு மேல்	207	20,49,97	146967
மொத்தம்	14,71,777	14,36,23,31	1900298

[1] Source :- Eastern Economist, Special Budget No; June 11, 1971, p.1013.

4. வருடாந்திரச் செல்வ வரி

(An annual Tax on Wealth)

4.1. வருடாந்திரச் செல்வ வரி (An annual Tax on Wealth) :- சமீபகாலத்தில்தான் இந்தியாவில் செல்வ வரி விதிக்கப்பட்டது. செல்வ வரியின் அனுகூலங்களைப் பற்றிச் சில தவருன கருத்துகள் இன்னமும் மக்களிடையே நிலவி வருகின்றன. நேர்முகவரி அமைப்பில் இவ் வரியின் பங்கை அறிந்து பாராட்ட வேண்டுமானால், வரிசெலுத்துவோரிடையே இவ் வரியைப் பற்றிய அறிவு விளக்கம் தேவை. ஆகவே செல்வ வரியினைப் பற்றி ஈண்டு அனுபவரீதியில் ஆராய்வோம்.

'வேண்டுமானால் வருமானத்திற்கு வரிபோடு; ஆனால் ஒரு போதும் முதல்மீது வரிகூடாது' (Tax income if you like but never capital) என்ற தொன்மையான கருத்துதான் வரிசெலுத்துவோரின் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. அத்தகையோருக்கு முதலை (capital) வரிவிலக்காக்குவது, தங்கமுட்டையிடும் வாத்தையே கொல்வதுபோலத் தோன்றும். இது ஒரு தவருன கருத்தாகும். வரிக்கு இலக்காகும் பொருளும், வரிசெலுத்துதலின் ஆதாரமும் (Source of tax-payment) எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைக் காணத்தவறியதன் காரணமாக, முதலின்மீது வரி விதிக்கப்பட்டால், முதலிலிருந்துதான் வரியைக் கொடுக்கவேண்டியுள்ளது என்று விவாதிக்கப்படுகிறது.[1] 'பீரின் (Beer) மீது விதிக்கப்பட்ட வரியைப் பீரிலிருந்தோ பீரைத் தயாரிக்க உதவும் மூலப்பொருள்களிலிருந்தோ கொடுத்தாக வேண்டும் என்று ஒருவரும் எண்ணுவதில்லை,' ('Nobody maintains that a tax assessed on beer is necessarily paid out of beer or even out of resources which would otherwise have become beer')[2]. ஆகவே முதலின்மீது விதிக்கப்பட்ட வரியை

[1] Gustar Cohn :- Science of Finance, p. 354.

[2] A. C. Pigou :- A Study of Public Finance, 1947, p. 49.

முதலிலிருந்துதான் செலுத்த வேண்டுமென்பதில்லை. வருமானத்திலிருந்தும் செலுத்தலாம். இவ்வாறே வருமானவரியை வருமானத்திலிருந்துதான் செலுத்த வேண்டுமென்பதில்லை, முதலிலிருந்தும் செலுத்தலாம். குறிப்பிட்ட வரி ஒன்று வருமானத்தையோ முதலையோ பாதிக்கிறது என்பதைத் தீர்மானிப்பது அவ்வரி ஒரு தனிப்பட்ட வரியா (Singular) அதாவது ஒரே சமயத்தில் செலுத்தக் கூடிய வரியா அல்லது திரும்பத்திரும்பச் செலுத்த வேண்டிய வரியா (Recurrent) என்ற அடிப்படைக் கொள்கையே தவிர, அவ்வரி வருமானத்தின் மீதோ, முதலின் (Capital) மீதோ விதிக்கப்பட்டது என்பதால் அன்று. இக் கொள்கையைக் கொண்டுதான் கால்டர், முதலின்மீது விதிக்கப்படும் வருடாந்திரவரி, வருமானத்தின் சதவீதமாக அல்லாமல் முதலில் எவ்வளவு வீதம் என்று கூறப்பட்டாலும், இவ்வரி வருமானவரியின் ஒரு தனிப்பட்ட வகையைச் சார்ந்ததுதான் என்று கூறுகிறார். இருப்பினும், இத் தொன்மையான தப்பெண்ணம் பல பொருளாதார அறிஞர்களிடையே இன்றும் உலவி வருகிறது. திரு.மதி. யு. கே. ஹிக்ஸ் (U. K. Hicks) தமது கருத்துகளை, இலாப வருமான வரிவிதிப்பு ராயல் குழுவினருக்கு (Royal Commission on the Taxation of Profits and Income) விளக்கிய போது, முதலின்மீது விதிக்கப்பட்ட வரியை முதலிலிருந்துதான் செலுத்த வேண்டும் என்ற தொன்மைக் கருத்தினையே கையாண்டார்.[1] முதலீட்டு ஆதாயவரிக்கு (capital gains tax) எதிராகச் சிபாரிசு செய்த ராயல்குழு, பழத்திற்கும் மரத்திற்கும் இடையே வேறுபாடு கண்டு, பழத்திற்கே வரிவிதிக்கலாம் என்று கூறியது. அதாவது மரம் வளருமானால், பழங்கள் அதிகமாகக் கிடைக்கும்; அவைகளுக்கு மட்டுமே வரிவிதிக்கவேண்டும். வருமானம் மட்டுமே வளர்வீத தனிப்பட்டவரிக்கு (Progressive Personal Tax) இலக்காகிறது என்ற திருப்திகரமான உணர்ச்சி, வருமானத்திற்கும், முதலுக்கும் இடையே ஓர் உறுதியான இரும்புத்திரை உள்ளது என்ற தொன்மைக் கருத்தின் அடிப்படையில் தோன்றுகிறது.[2] முதலைப் (Capital) பாதிக்கக்கூடாது என்ற 19ஆம் நூற்றாண்டின் நோக்கம் இனிமேல் ஒத்து வராது. பழங்கள், மரம் என்ற உருவணியை (Metaphor) நோக்கின், ஒருவன் பழங்களைப் பறிப்பதோடல்லாமல், அதே மரத்திலிருந்து ஒரு கிளையை வெட்டி விற்கவும் செய்யலாம் என்பதைக் காணலாம். ஆகவே பொதுவாக முதலின்மீது விதிக்கப்படும் வரிக்கும், முக்கியமாகச் செல்வ வரிக்கும் எதிராக நிலவி வரும் தவறான கருத்துகளை அகற்றக் கணிசமான அறிவு விளக்கம் தேவைப்படுகிறது.

1 Minutes of Evidence, Royal Commission on the Taxation of Profits and Income [1954], p. 180

2 N. Kalder, An Expenditure Tax, p. 33

வருடாந்திரச் செல்வ வரியானது, தனிநபரின் நிகர மூலதன மதிப்பிற்கு விதிக்கப்பட்ட போதிலும், உண்மையில் அவ் வரி அசலின் (Principle) மீது விதிக்கப்படுவதில்லை; பெருகிய மூலதனத்திற்கு (accrual) விதிக்கப்படுவதாகும். (உ-ம்) எஸ்டேட்வரி, முதல்வரி (Capital Levy) வருமானவரியைப் போன்று செல்வ வரியும் வளர்வீத வரியானாலும், அவ் வரியைச் சொத்திலிருந்து பெறும் வருமானத்திலிருந்தே செலுத்தும்படியாகக் குறைந்த வீதத்திலேயே விதிக்கப்படுகிறது.

4.2. செல்வ வரியின் அடிப்படைக்காரணம் (Rationale of Wealth Tax) : வருமானத்திற்கு முன்பு, முதலே வரியின் அடிப்படையாக இருந்து வந்ததை வரலாறுமூலம் அறியலாம். பல நூற்றாண்டுகளாக அதற்குப் பாராட்டும் வகையில் வரிசெலுத்தும் திறமை இருந்துவந்தது. ஆனால், வரி செலுத்தும் திறமைக்கு அளவுகோலாகக் கருதப்பட்ட வருமானவரியின் குறைபாடுகளைக் கண்டறிந்ததன் பயனாகச் சமீபகாலத்தில், தனிநபரின் செலவினங்கள், முதலீட்டுச் செல்வம் (Capital Wealth) ஆகிய வரிசெலுத்தும் திறனுடைய பிற குறியீடுகளின் (Indices) மீதும் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. வரி கொடுக்கும் திறனை அளக்க வருமானம் மட்டுமே போதுமான அளவுகோலாகாது என்ற விவாதமே, செல்வத்தின்மீது வரி விதிப்பதையும் நியாயமெனக் காட்டுகிறது. ஏனெனில், தொழில் மூலம் பெறும் வருமானம் சொத்துகளை உடையவர்களின் வருமானம் இவற்றின் வரி செலுத்தும் திறமை ஒரே மாதிரியாக இல்லை. சொத்துகளின் வகைகளைப் பொருத்தும் அவற்றிலிருந்து பெறும் வருமானங்களின் வரிசெலுத்தும் திறமை வேறுபடுகிறது. விற்பனை செய்யக்கூடிய (disposable) சொத்துகளை உடையவரிடம் வரிசெலுத்தும் திறமை இருக்கிறது என்பதே இதன் அடிப்படைக் காரணமாகும். இத் திறமை அச் சொத்திலிருந்து அவருக்கு கிடைக்கும் பணவருவாயிலிருந்து வேறுபட்டதாகும். வருவாயோ, சொத்துகளோ இல்லாத பிச்சைக்காரனின் நிலையையும், ஓர் இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தையும், நகைகளையும் சொத்தாக வைத்திருக்கும் ஒரு மனிதனின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இக் கருத்தினை நன்கு அறியலாம். வருமானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, இவ்விரு வருக்கும் வரிசெலுத்தும் திறமை இல்லை என்று கூறலாம். மேற்கூறிய இரண்டு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட, அதாவது வெவ்வேறு அளவில் சொத்தோ, வருமானமோ உள்ள மக்களிடையே, வரி செலுத்தும் திறமையை அளக்க வருமானம் மட்டும் போதாது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். சொத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒரு வரி, இத் திறமையைப் போதிய அளவிற்கு மதிப்

பிடாது. சொத்திலிருந்து பெறும் வருவாய்க்கு, தொழிலிருந்து பெறும் வருவாயைவிட வரிசெலுத்தும் திறன் அதிகமாகவுள்ளது என்பதைக் காட்டவே, வருமான வரிவிதிப்பில் உழைத்து ஈட்டிய வருவாய்க்குச் சலுகை காட்டப்பட்டுள்ளது. தற்போதைய வருமான வரித்திட்டத்தில் உள்ள இச் சலுகையினால், மூலதனச் செல்வ உடைமையில் (Possession of Capital Wealth) உள்ள வரிசெலுத்தும் திறனைப் பற்றிய பிரச்சினையைப் போதிய அளவிற்குச் சமாளிக்க இயலாது. ஆகவே, வருமான வரியையும், செல்வ வரியையும் ஒன்று சேர்ப்பதால் மட்டுமே, வரிவிதிப்பில் நேர்மையைக் காணலாம். தனிநபரின் வருமானவரியோடுகூட நிகரமதிப்புவரியும் (Net Worth Tax), வரிவிதிக்கும் திறமையின் எல்லையை விரிவடையச் செய்கிறது.

பொருளாதாரப் பயன்களைக் கொண்டு நோக்கும்போது, செல்வ வரியின் பெருஞ்சிறப்பு யாதெனில் அதுவும் வருமானவரியைப் போலவே, மூலதனத்தை ஆபத்தான விளைவுகளில் முதலீடு செய்த போதிலும் அவ்வகை மூலதனத்திற்கும், இதர மூலதனத்திற்கும் இடையே வேறுபாடு காணவில்லை. உதாரணமாக, 10 பவுன் வருமானத்தையளிக்கும் 100 பவுன் முதலீடு கொடுக்கவேண்டிய வரியையே, 5 பவுன் வருமானத்தை அளிக்கும் 100 பவுன் முதலீடு கொடுக்கவேண்டும். இவ்வரியானது, மிகவும் ஆபத்தான வியாபாரத்துறைகளிலும் முதலீடு செய்வதற்குத் தூண்டுகோலாக அமையவேண்டும்[1].

செல்வ வரியானது, தனிப்பட்ட வருமான வரியைப்போல், உழைத்துச் சம்பாதிக்கும் விருப்பத்தைப் பாதிப்பதில்லை. வருமான வரியின் உயர்ந்த இறுதிநிலை வீதங்கள் ஊக்கத்தைக் குறைத்து, வரி ஏய்ப்புகளை மட்டும் ஊக்குவிப்பதால், வருமானவரிக்குப் பதிலாக, உயர்ந்த அளவு வருவாய் மட்டங்களில், செல்வ வரி விதிக்கப்படுவது, பொருளாதார நீதியில் சரியானதெனத் தோன்றுகிறது. ஜப்பானிய வரி அமைப்பினை ஆராய்ந்த ஷூப் (Shoup) குழு, வருமானவரியின் உயர்ந்த வீதங்களைக் குறைத்து, அந்த இடைவெளிச் செல்வ வரியை விதித்து நிரப்பலாம் எனப் பரிந்துரைத்தது.[2]

அளவுக்குமேல் செல்வம் திரட்டுவதைத் தடுக்க, செல்வ வரி பயன்படும் என்ற வாக்குவாதம், இவ்வரியை அனுசரிட்பதற்கென எழுந்ததாகும். இதற்காக, தற்போது வழக்கத்திலுள்ள மரணவரி போன்ற தீர்வைகள் குறைந்தகாலத்திற்குப் (Short periods) போதுமானவையல்ல.

[1] Coswyn Committee on National Debt and Taxation, [1926], p. 304.
[2] Report on Japanese Taxation, Shoup Commission, 1949, pp. 80-82

செல்வ வரியினால் ஏற்படும் மற்றொரு நன்மை யாதெனில், வருமானவரி, எஸ்டேட்வரி, பரிசுவரி ஆகியவைகளைத் தக்கமுறையில் வசூலிக்க, இவ்வரி உதவுகிறது என்பதாகும். ஒருவரது சொத்துகளைப் பரிசீலனை செய்யும்போது மறைத்து வைக்கப்பட்ட வருமானம் ஏதாவது இருப்பின், அது வெளிப்பட்டுவிடும். அதேபோன்று வருமானத்தைப் பரிசீலனை செய்யும்போது, மறைத்து வைக்கப்பட்ட சொத்துகளையும் கண்டுபிடித்துவிடலாம். ஆகவே, வருமானத்தையும், சொத்தையும் வரிகளுக்குக்கீழ், அதே வரி நிருவாகிகளிடம் ஒப்படைத்தால் வரி ஏய்ப்புகளையும், சொத்துகளை மறைத்தலையும் தடுத்துச் செயலாக்கத் திறமைகளை நாளடைவில் முன்னேற்றலாம்.

செல்வ வரியானது, ஒரு மனிதனை உருவாக்குவதற்காகச் (man's training) செலவழிக்கப்படும் முதலினைப் (Capital) பாதிப்பதில்லை. நுகர்வு (Consumption), செல்வம் திரட்டுதல், தன்னை உருவாக்கிக் கொள்ள கல்வி கற்பதற்காகச் செலவழித்தல் (கல்விக்காகச் செய்யப்பட்ட முதலீடு)[1] இவைகளில் ஏதாவது ஒன்றினை ஒருவர் தேர்ந்தெடுக்கிறார். மனித முதலீட்டினைப் (Human Capital) பாதிக்காத செல்வ வரி, கல்விக்கான முதலீட்டை அதிகரிக்கச் செய்கிறது என்பது செல்வ வரியின் இன்றியமையாத நன்மைகளுள் ஒன்றாகும்.[2]

4.3. செல்வ வரிக்கு எதிரான வாதங்கள் (Arguments against Wealth Tax) :— பல எதிர்ப்புகளுக்கு இலக்காகியுள்ள செல்வவரி அநேக நாடுகளில் வரவேற்கப்படவில்லை. வரிசெலுத்தும் திறமையை அளக்கும் நல்ல அளவுகோலாகச் செல்வ வரி புகுத்தப்பட்ட போதிலும் வருமானத்தையும் செல்வத்தையும் சமப்படுத்துவதற்காக அவ்வரியினை மிதமிஞ்சிப் பயன்படுத்திவிடுவார்கள் என்ற பயம் நிலவி வருகிறது. இப் பயம் மிகையானது; உண்மைக்குப் புறம்பானது, செல்வ வரி, முதலீடு செய்யப்படாத சொத்துகளையும் பாதிப்பதால் இது நியாயமற்றது என பிகு (Pigou) விவாதித்தார். ஆனால், இவ் வரியின் விளைவாக, மக்கள் சொத்துகளைச் சும்மா வைத்திருக்காமல், முதலீடு செய்து அதன்மூலம் வருமானம் பெறவே முயற்சி செய்வார்கள்.

வேறு இரு காரணங்களைக் காட்டியும், செல்வ வரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1) அஃது உற்பத்தித் தொழில்களைத் தடை செய்கிறது. (2) அதன் காரணமாக, இவ்வரியின் நிலைப்பாடு (Incidence) வரி செலுத்துவோரிடமிருந்து, முடிவில் நுகர்வோருக்கே

[1] K. E. Poote : Public Finance and Economic Welfare, New York

[2] A. R. Prest : Public Finance in Theory and Practice, Cambridge 1960.

மாற்றப்படலாம். ஒரு வரியும் இல்லாத நிலையில் தொழில்கள் நடை பெறுவது போலவே, செல்வ வரி விதிக்கப்பட்ட பின்பும் அவை களுக்குத் தடைகள் இருக்கக்கூடாது என்று கால்டர் கூறினார். ஆனால், வருமானவரியைவிடச் செல்வ வரியானது மிகக் குறைந்த அளவில் தான் தொழிலாக்கத்தின்மீதுள்ள ஊக்கத்தைப் பாதிக்கின்றது. மேலும், செல்வ வரியின் நிலைப்பாடு, நுகர்வோருக்கு மாற்றப்பட்டு விடும் என்பது தவறான கருத்து என்று கால்டர் எடுத்துக் காட்டினார். செல்வமானது எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளாமல், செல்வ வரி விதிக்கப்படுவதால் அவ்வரியின் நிலைப்பாட்டின் மாற்றத்தைப் பற்றி கேள்வி எழுவதற்கு இடமே யில்லை.

செல்வ வரி, சேமிப்பையும் பாதிக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆனால், வருமானவரியைவிடக் குறைவாகவே செல்வவரி, சேமிப்பைப் பாதிக்கிறது. இறுதியாக, செல்வ வரியைப் பற்றிய கருத்து கவரும் வகையில் இருந்தாலும், அதை நிருவகிப்பது கடினம் என்று கூறப் படுகிறது. செல்வ வரியை, ஒரு தனி வரியாக விதித்தால் நிருவாகத்தில் ஏற்படும் கஷ்டங்கள் அதிகமாக இருக்கலாம் என்று ஜப்பானிய வரிமுறையினை ஆராய்ந்த ஷூப் (Shoup) குழு எடுத்துக் காட்டியது. ஆனால், ஏற்கெனவே உள்ள நேர்முக வரித்திட்டத்துடன் சேர்க்கப்பட்டு, வருமானவரியின் உயர்வீதப் பகுதிக்குப் (high-rate-portion) பதிலியாகச் செல்வ வரி விதிக்கப்பட்டால், அதனால் ஏற்படும் கஷ்டங்கள் அவ்வளவாக இருக்காது.

4.4. **உலகின் வரித்திட்டங்களில் செல்வ வரியின் இடம்** (Place of Wealth Tax in the Tax Systems of the World) : இவ்விதமாகச் செல்வ வரியின் எதிர்ப்புக்கும், ஆதரவுக்கும் காரணங்களை ஆராயும் போது, எந்த ஒரு வளர்வீத வரித்திட்டத்திலும் செல்வ வரியைப் புகுத்தலாம் என்பது தெரிகிறது. இவ்வித வரியைப்பற்றி, அமெரிக்காவில் ஒருவித கருத்தும் கிடையாது. இங்கிலாந்து எப்போதும் இவ்வரிக்கு எதிராக இருந்து வருகிறது. பன்னிரண்டு நாடுகளுக்கும் மேலாக, செல்வ வரியானது வரிச் சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த போதிலும், அவைகளில் சில நாடுகளே, முக்கிய மாக, ஸ்காண்டிநேவியா நாடுகள், செல்வ வரி போன்ற வரிகளை விதிக் கின்றன. ஜப்பான் நாட்டில், 1950 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டுவரை, இவ்வரி வழக்கிலிருந்து, பின்னர் விலக்கப்பட்டது.

4.5. **செல்வ வரியினைப் பற்றி வரிவிசாரணைக்குழுவின் கருத்து** (Taxation Enquiry Commision on Wealth Tax) : — இந்தியவரி அமைப்பில், செல்வ வரிக்கு எதிராகவும், ஆதரவாகவும் உள்ள

காரணங்களைப் பற்றி, 1953ஆம் ஆண்டின் வரி விசாரணைக்குழு ஆலோசித்தது. எழுத்தளவில் செல்வ வரியின் நன்மைகளால் கவரப் பட்ட போதிலும், நிருவாகத்திலுள்ள கஷ்டங்களை அடிப்படையாகக் கொண்டு, வரி விசாரணைக்குழு அவ் வரியினை ஏற்க மறுத்துவிட்டது.

இந்தியாவில் செல்வ வரி பற்றிக் கால்டரின் யோசனைகள் (Kaldor's Proposals for Wealth-Tax for India) :— கால்டர், இந்தியாவிற்கெனத் தொகுத்தளித்த இணைப்பு வரிவிதிப்பு முறையின் (Integrated Pattern of taxation) ஐந்து கூறுகளுள் (Constituents) ஒன்றுகச் செல்வ வரியினைச் சிபாரிசு செய்தார். நேர்மை, பொருளாதார விளைவுகள், நிருவாகத் திறமை இவைகளைக் காரணங்களாகக் காட்டி, இந்தியாவிற்குச் செல்வ வரி வேண்டும் என்று கூறினர். இவைகளுக்காக, விவசாயச் சொத்துகள் போன்று எல்லாவகைச் சொத்துகளையும் பாதிக்கும் வகையில், செல்வவரியை விரிவாக்க வேண்டியது அவசியம் எனக் கால்டர் வற்புறுத்திக் கூறினர். இருப்பினும், இவ்வரிக்கு விவசாய சொத்துகளை இலக்காக்கினால் எதிர்ப்புகள் ஏற்படுமென எதிர்பார்த்த அவர் 'தற்போது விவசாய சொத்துகளின் மீது செல்வ வரி வேண்டாம். ஆனால், வரிவீதத்தை நிருணயிக்கும்போது மட்டும், இதர சொத்துகளோடு விவசாயச் சொத்துகளும் சேர்த்துக் கணக்கிடப்பட வேண்டும் என்ற நிபந்தனையின்கீழ் இச் சலுகை அளிக்கப்படும்' என்று சிபாரிசு செய்தார் ('In the meanwhile that tax could be charged only on non-agricultural propety with a provision that agriculutral property would be combined with the rest of the property for determining the rate at which the tax would become payable'). பாங்கிலுள்ள இருப்புகள் (bank balances), 5,000 ரூபாய்களுக்கு மேற்பட்ட மதிப்புடைய நகைகள், பொருள்கள் ஆகியவையும், நிலம், வீடு போன்ற எல்லாவித இடம் பெயர்க்க முடியாத சொத்துகளும், கூட்டுரிமைப் பங்குகள் (Stocks), பங்குச் சீட்டுகள் (Shares) இவற்றின் உடைமையும் (Ownership) போன்ற சொத்துவகைகள் யாவும் சேர்க்கப்பட வேண்டும் என்பதும் அவர் கருத்தாகும். ஸ்வீடன் நாட்டில் உள்ளவாறு ஒவ்வொரு குடும்ப அங்கத்தினருக்கென ஓர் எல்லையை வகுத்து அவ்வெல்லையை மீறும்வரை வீட்டு மரச்சாமான்கள், துணிமணிகள் போன்றவை இவ்வரிக்கு இலக்காகக்கூடாது என்றும் அவர் கூறினர். உண்மையில் ஸ்காண்டிநேவியா நாடுகளை உதாரணமாகக் கொண்டு தான் கால்டர் செல்வ வரி பற்றிய கருத்தினை வெளியிட்டுள்ளார் என்பதை அறியலாம்.

தனி நபர், இந்துக்கூட்டுக்குடும்பம் ஆகிய இரண்டிற்குமே வரிவிலக்கு எல்லை ஓர் இலட்ச ரூபாயாக இருக்க வேண்டுமெனக்

கால்டர் சிபாரிசு செய்தார். கடைசித் தொகுதிக்கு (அதாவது ரூ. 1,00,000 முதல் 4,00,000 வரை) 0·3%-லிருந்து, உயர்ந்த தொகுதிக்கு (அதாவது சொத்தின் மதிப்பு ரூ. 15,00,000-க்கு மேற் பட்டால்) 1·5% வரை, வருடாந்திர வரிவீதங்களை அமைத்து ஒரு வரிவீதம் அட்டவணையையும் அவர் சிபாரிசு செய்தார். வரிவிலக்கு எல்லையைக் கால்டர் ஓர் இலட்சமெனத் தீர்மானித்தது, வரியை நிருவகிப்பதிலுள்ள கஷ்டங்களைச் சமாளிக்கவே. நிருவாகத்தில் அனுபவமேற்பட்டபின்னர், இவ்வெல்லை குறைக்கப்படலாம் என்றும் அவர் கூறினார். கால்டரால் தீர்மானிக்கப்பட்ட வரிவீதங்கள் பின்வருமாறு:-

சொத்தின் மதிப்பு	வரி வீதம் (சத வீதத்தில்)
ரூ. 1,00,000-க்குக் கீழ்	வரி கிடையாது.
ரூ. 1,00,000-க்கும் ரூ. 4,00,000-க்கும் இடையே	$\frac{1}{3}$
ரூ. 4,00,000-க்கும் ரூ. 7,00,000-க்கும் இடையே	$\frac{1}{2}$
ரூ. 7 இலட்சம் — 10 இலட்சம்	$\frac{3}{4}$
ரூ. 10 இலட்சம் — 15 இலட்சம்	1
ரூ. 15 இலட்சத்திற்கு மேல்	$1\frac{1}{2}$

இந்தியாவில் செல்வ வரியை விதிக்கலாம் என்று எடுத்துக் காட்டிய பின்னர், கால்டர், நாட்டில் இவ்வரியை நிருவகிப்பதில் ஏற்படப்போகும் கஷ்டங்களைப் பற்றி ஆராய்ந்தார். செல்வ வரியை நிருவகிப்பதில், தனிப்பட்ட வரிவிதிப்புப் (Assessment) பிரச்சினைகள் உள்ளன:- (1) சொத்துக்கு உண்மையான உடைமையாளரைக் கண்டு பிடிப்பதிலுள்ள கஷ்டங்கள் (2) சொத்தை மதிப்பீடு செய்வதிலுள்ள கஷ்டங்கள்.

ஒரு மனிதனின் வருமானத்தைக் கண்டு பிடிப்பதன்மூலம், அம் மனிதனின் சொத்துகளையும் கண்டு பிடிக்கலாம் எனக் கால்டர் எடுத்துக் காட்டினார். வருமானவரி எவ்வாறு வருடாந்திரச் செல்வ வரி ஏய்ப்புகளைத் தடுக்க உதவுமோ, அவ்வாறு வரி செலுத்து வோரிடமிருந்து அவரது மொத்த வருமானம், மொத்தச் சொத்து ஆகியவைபற்றி வருடாவருடம் அறிந்து கொள்ளுவது வருமான வரி ஏய்ப்புகளைத் தடுக்க உதவும். வரிவிதிப்பும், வரி நிருவாகமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையதாயிருக்க வேண்டும் என்பது இன்றியமையாததொன்றாகும். வரிசெலுத்து

வோர் கொடுக்கும் விளக்கமான விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அதே வரி உத்தியோகஸ்தர்களால் வரிவிதிப்பு வேலை நடத்தப்படல் வேண்டும். தற்போதைய பதிப்புரிமை (registration) முறைகளைக் கடினமாக்கவேண்டுமெனவும் சொத்துடைமைக்குத் தடை விதிக்கவேண்டுமெனவும் கால்டர் யோசனை கூறினார். அதற்கென சில முக்கியமான சீர்திருத்தங்களையும் அவர் கூறினார். அவை பின்வருமாறு:- (1) உள் நாட்டு நிதி விசாரணைக் குழு (Local Finance Enquiry Committee) வின் பரிந்துரைக்கேற்ப, இந்தியா முழுவதும் உள்ள நகரச் சொத்துகளின் (Urban property) மதிப்பைக் கணக்கிட்டு அட்டவணை தயாரிக்க ஒரு மத்திய ஆவண அலுவலகம் அமைத்தல். (2) கிராமத்திலுள்ள சொத்துகள், விவசாயச் சொத்துகள் இவற்றுக்காகவும், இதே மாதிரி ஒரு அலுவலகத்தை அமைத்தல், (3) இந்தியாவில், தற்போது நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக, 'வெற்று மாற்று உறுதிச் சீட்டுகள்' (Blank Transfer Certificates) மூலம் பங்குச் சீட்டுகளை (Shares) வாங்குதல், விற்றல் போன்ற பழக்கத்தை ஒழித்தல், (4) எல்லா அரசாங்கப் பத்திரங்களின் (Government securities) உடைமைகளையும் ரிசர்வ் பாங்கில் பதிவு செய்தல், (5) பிறர் பெயரில் பெறும் சொத்துகளைப் (Holdings) பொறுத்தவரை உண்மையில் நன்மையடைபவர் யாரெனக் கட்டாயமாக வெளிக்காட்டுதல் (Disclosure).

சொத்துகளை மதிப்பிடும் பிரச்சினைபற்றி ஆராய்ந்த கால்டர் ஒவ்வொருவகைச் சொத்தையும் மதிப்பிடும்போது அச் சொத்துகள் விற்கப்படும்வரை, சாதாரண கணக்கீட்டுச் சட்டங்களைப் (Accounting rules) பின்பற்றிப் புத்தகத்தில் காணப்படும் அச் சொத்துகளின் மதிப்பையே கணக்கில் எடுத்துக்கொள்வதே சிறந்த முறையாகும், என்று கூறினார். இதனால், ஒவ்வொரு உடைமையாரிடமும் உள்ள சொத்துகள் இரண்டே தடவைதான், அதாவது சம்பாதிக்கப்படும் போதும், கைவிட்டுப் போகும்போதும் மதிப்பிடும் பொறுப்பை வரிசெலுத்துவோரிடமே விட்டு, தகராறு நேர்ந்தால், வரிசெலுத்துவோரின் சொத்துகளை அவர்களது மதிப்பீட்டின் படியே அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளும் உரிமையை அரசாங்கம் வைத்துக்கொண்டால், வரிவிதிப்புக்காகச் சொத்துகளை மதிப்பிடும் பிரச்சினையைப் பயன்படும் முறையில் தீர்க்கமுடியும். இவ்வாறு வரிசெலுத்துவோரால் கொடுக்கப்பட்ட சொத்துகளின் மதிப்பீடு.

4.5 இந்தியாவில் செல்வ வரி (The Wealth Tax in India) :- இந்தியவரிச்சீர்திருத்த அறிக்கையில் காணும் கால்டரின் பரிந்

துரைக்கேற்ப, செல்வ வரியை ஏற்றுக் கொண்ட முதல், வளர்ச்சி குறைந்த நாடு இந்தியாவேயாகும். மத்திய நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 1957-58ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் செல்வத்தின்மீது வரி விதிப்பதன் அவசியத்தை வெளி யிட்டிருந்தார்.

1958ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்தேதியிலிருந்து செல்வ வரித் திட்டம் அமுலுக்குவந்தது. இந்தியாவின் செல்வவரிச்சட்டத்தின்படி, ஏற்படுத்தப்பட்ட நிலைகளுக்குள்தான் ஒருவன் தனது வருடாந்திர வருமானத்தைச் சரிக்கட்ட முடியும் என்று இருந்ததால், வரியி லிருந்து தப்ப முயற்சிப்பவன் கடும் தண்டனைக்கு ஆளாகிறான்.

செல்வத்தின் விளக்கம் (Definition of Net wealth.):- செல்வ வரிச்சட்டத்தின்படி தனிப்பட்டோர், இந்துக்கூட்டுக்குடும்பங்கள், நிறுவனங்கள் இவற்றின் செல்வத்தின்மீது வரி விதிக்கப்பட்டது. வரி செலுத்துவோரின் எல்லாக் கடன்களின் மதிப்புக்கு மேலாக அவரது சொத்தின் மதிப்பு எவ்வளவு உள்ளதோ, அதுவே அவரது செல்வமாகும்.

ஜம்மு, காஷ்மீர் உட்பட இந்தியா முழுவதும் இவ்வரி விதிக்கப் பட்டது.

4.7 செல்வ வரியிலிருந்து விலக்கு (Exemption from Wealth Tax):- பின்வரும் சொத்துகளைத் தவிர, இதர இடம் பெயர்க்க முடியாத அல்லது இடம் பெயர்க்க முடிந்த சொத்துகள் யாவும் செல்வ வரிக்கு இலக்காகின்றன:-

1. தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாய நிலங்கள் இவ் வரியிலிருந்து விலக்கப்படுகின்றன. அதே நிலங்களில் புல் அல்லது மரங்கள் வளர்ந்திருந்தாலும் அவைக்குச் செல்வ வரி கிடையாது.
2. விவசாயத்தைக் கண்காணிப்பதற்காக, அந் நிலங்களுக்கு மிக அருகாமையிலுள்ள அந் நிலச் சொந்தக்காரரின் கட்ட டங்களுக்கும் செல்வ வரி கிடையாது.
3. விவசாய உற்பத்தியைப் பெருக்க உதவும் இயந்திரச் சாத னங்களுக்கும், கால்நடைகளுக்கும் செல்வ வரி கிடையாது.

இவைகளைத்தவிர செல்வ வரியிலிருந்து விலக்கப்பட்ட 21 சொத்து வகைகளையும், 5 (1) பிரிவில் காணலாம். வரி வீதத் தைத் தீர்மானிப்பதற்குக்கூட இச் சொத்து வகைகள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அவைகளில் சிலவற்றைக் கீழே காண லாம்:-

1. மதசம்பந்தமான அல்லது அறநிலையங்களுக்குச் சொந்த மான சொத்துகள்,

2. கலைத் தொழில்கள், புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள், விஞ்ஞானம், கலை சம்பந்தப்பட்ட சேகரிப்புகள் முதலியன.
3. கடந்தகால உழைப்புக்காக உபகாரச் சம்பளம் (Pension) பெறும் உரிமை.
4. புத்தகங்களின் பதிப்புரிமை.
5. வீடுகளில் வளர்க்கும் மிருகங்கள், வீட்டிள்ள மரச் சாமான்கள், பாத்திரங்கள், நகைகள் முதலின. ஆனல் இவற்றின்மதிப்பு ரூ. 25,000-க்கு மேற்படாமலிருக்க வேண்டும்.
6. இன்ஷூரன்ஸ் பத்திரங்கள்.
7. ரூ. 2,500-க்கு மேற்படாத, வியாபாரத்திற்கு உதவும் கருவிகள்.
8. 10 வருட சேமிப்புப் பத்திரங்கள், 15 வருட ஆண்டுத் தொகைப் பத்திரங்கள் (Annuity certificates), அஞ்சலக வைப்புகள் (Post office Deposits), ரொக்கப் பத்திரங்கள், தேசீயச் சேமிப்புப்பத்திரங்கள் முதலியன.
9. தொழிலாளியின் எதிர்கால வைப்பு நிதி (Provident-fund)
10. அரசாங்கத்திடமிருந்து, வரி செலுத்துபவர் பெறும் வீரச் செயலுக்காகக் கொடுக்கப்படும் பரிசுபோன்ற சொத்து.

4.8. நிறுவனங்களுக்கு உதவி (Relief to companies):- கூட்டுப் பங்குக் கம்பெனிகளுக்குப் (Joint stock companiess) போதிய அளவு சலுகைகள் கொடுக்கப்பட்டன. 45ஆவது பிரிவின் கீழ், (1) பாங்கு நிறுவனங்கள், (2) இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள், (3) கப்பல் நிறுவனங்கள் (4) தரும நிலையங்கள், கலை, விஞ்ஞானம், வியாபாரம் இவைகளை முன்னேற்றுவதற்கான நிலையங்கள் முதலானவை இவ் வரியிலிருந்து முற்றிலும் விலக்கப்பட்டன. உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளும், சுரங்கத்தொழிலிலும், மின்சாரம் அல்லது அதுபோன்ற வேறு சக்திகளை உற்பத்தி செய்யும் நிறுவனங் களும், அவை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிய வரியிலிருந்து விலக்கப்பட்டன. இஃது இச்சட்டத்தின்கீழ்க் கொடுக்கப்பட்ட ஒரு முக்கியமான சலுகையாகும். இத்தகைய தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களுக்கும் இச்சலுகையளிக்கப் படலாம்.

4.9 செல்வவரி அதிகாரிகள் (Wealth-Tax Authorities.):- செல்வ வரி அதிகாரிகள் அலுவலகத்தில் செல்வ வரி அதிகாரி (Wealth-Tax Officer), மேல் விசாரணை செய்யும் அதிகாரத்தையுடைய உதவிச் செல்வ வரி நிருவாகி (Appellate Assistant Commisioner of Wealth

Tax), பரிசோதனை செய்யும் உதவிச் செல்வ வரி நிருவாகி (Inspecting Assistant Commissioner of Wealth-Tax), செல்வ வரி நிருவாகி Commissioner of Wealth-Tax) முதலியோர் உள்ளனர். மேற் கூறிய அதிகாரிகள், மத்திய வருவாய் வாரியத்திற்கு அடங்கியவர் களாவர். வருமானவரிச் சட்டத்தின்படி, விசாரணை செய்யும் அதிகாரத்தையுடைய உதவிச் செல்வ வரி நிருவாகியிடம், மனு செய்து கொள்ளலாம். வருமானவரிக்குள்ளபடியே, செல்வ வரியின் முறைகளும், சட்டங்களும் உள்ளன. செல்வ வரி செலுத்தப் படும் முறையும், திரும்பப் பெறப்படும் முறையும் (Recovery) ஏறத் தாழ வருமானவரியைப் பொறுத்தவாறே உள்ளன.

4.10. வரிவீதங்கள் (Rate of Tax) : — 1957ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, தனிநபரின் செல்வ வரி விலக்கு ரூ. 2 இலட்சங் களாகவும், ஒரு இந்துக்கூட்டுக்குடும்பத்திற்கு ரூ. 4 இலட்சங் களாகவும், ஒரு நிறுவனத்திற்கு ரூ, 5 இலட்சங்களாகவும் இருந்தன. தனிநபரின் செல்வ வரி வீதமும், இந்துக்கூட்டுக்குடும்பத்தின் செல்வ வரி வீதமும் ½% லிருந்து 1½% வரை இருந்தன. நிறுவனங் களைப் பொறுத்தவரை இவ் வரி வீதமும் ½% ஆக ஒரே மட்டத்தில் இருந்தது.

மேலே கூறப்பட்ட மூவகை வரிசெலுத்தும் பிரிவினருக்கு ஏற்ற வரிவீதங்கள், 1957 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கீழேதரப் பட்டுள்ளன.

	வரிவீதம்
a. ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும்,	
1. முதல் ரூ. 2 இலட்சங்களுக்கு	இல்லை
2. அடுத்த ரூ. 10 இலட்சங்களுக்கு	½%
3. அடுத்த ரூ. 10 இலட்சங்களுக்கு	1%
4. ரூ. 22 இலட்சங்களுக்கு மேற்பட்ட பாக்கியிருப்புக்கு	1½%
	வரிவீதம்
b. ஒவ்வொரு இந்துக்கூட்டுக் குடும்பத்திற்கும்,	
1. முதல் ரூ. 4 இலட்சங்களுக்கு	இல்லை
2. அடுத்த ரூ. 9 இலட்சங்களுக்கு	½%
3. அடுத்த ரூ. 10 இலட்சங்களுக்கு	1%
4. ரூ. 24 இலட்சங்களுக்கு மேற்பட்ட பாக்கியிருப்புக்கு	1½%
c. நிறுவனத்திற்கு,	
1. முதல் ரூ. 5 இலட்சங்களுக்கு	இல்லை.
2. மீதியுள்ள இருப்புக்கு	½%

தொடக்கத்தில் செய்யப்பட்ட சுமார் கணக்கீட்டின்படி, செல்வ வரி 26,000 தனிப்பட்ட நபர்களையும், 4,000 இந்துக்கூட்டுக் குடும்பங்களையும், 6,000 நிறுவனங்களையும் பாதிக்குமெனவும், அதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 15 கோடிகள் வருவாய் வரலாமெனவும் கூறப்பட்டது.

1959-'60ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், நிறுவனங்களின்மீது விதிக்கப்பட்ட செல்வ வரி விலக்கப்பட்ட போதிலும், தனிப்பட்டோர் செல்வ வரி வீதமும், இந்துக்கூட்டுக்குடும்பச் செல்வ வரி வீதமும், ஒவ்வொரு பிரிவிலும் ½% அதிகமாக்கப்பட்டது. ஆகவே, தற்போது அவ் வரி வீதங்கள் 1%லிருந்து 2% வரையுள்ளன.

4. 11. செல்வ வரியும், கால்டரின் அறிக்கையும் (Wealth Tax and Kaldor's Report) : 1957ஆம் ஆண்டின் செல்வ வரிச் சட்டம் கால்டரின் பரிந்துரைகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இந்திய அரசு, தொடக்கத்தில் நிறுவனங்களின்மீது செல்வ வரியை விதித்தது. 1959-'60ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்கீழ், அவ் வரியும் நீக்கப்பட்டது.

விவசாயச் சொத்துகளுட்பட எல்லாவிதச் சொத்துகளின் மீதும் செல்வவரி விதிக்கபபட வேண்டுமெனக் கால்டர் உறுதியாக இருந்தபோது, 1957ஆம் ஆண்டுச் சட்டம், செல்வ வரியிலிருந்து, விவசாய சொத்துகளை (agricultural property) ஒதுக்கிவிட்டது.

மேலும், கால்டரின் பரிந்துரையில் காணப்பட்டதைவிடக் கூடுதலான வரிவிலக்கு எல்லை. 1957 ஆம் ஆண்டுச் சட்டத்தினுல் புகுத்தப்பட்டது. இச் சட்ட வரிவீதங்கள், கால்டர் கூறிய மிதமான வரிவீதங்களிலிருந்து, மிகவும் வேறுபட்டிருந்தன. தனிநபருக்கும், இந்துக்கூட்டுக் குடும்பத்திற்கும். ரூ. 1 இலட்சத்தை ஒரே மாதிரியான செல்வவரிவிலக்கு எல்லையாகக் கொள்ளலாமெனக் கால்டர் கூறினர். ஆனுல், 1957ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, தனிப்பட்டோர் செல்வவரி விலக்கு எல்லை ரூ. 2 இலட்சங்களாகவும், இந்துக்கூட்டுக் குடும்பத்தின் செல்வ வரி விலக்கு எல்லை ரூ. 4 இலட்சங்களாகவும் தீர்மானிக்கப் பட்டது. குறைந்தபட்ச வரிவீதத்தை3% எனவும், சேமிப்பைப் பாதிக்கும் என எதிர்பார்த்ததன் பயனுக, உயர்ந்தபட்ச வரிவீதத்தை ஆண்டொன்றுக்கு 1% லிருந்து 1½%-க்கு மேல் அதிகரிக்கக் கூடாதெனவும் கால்டர்கூறினர். ஆனுல் 1957ஆம் ஆண்டுச் சட்டப்படி, குறைந்தபட்ச வரிவீதம், தனிப்பட்டோர்க்கும், இந்துக்கூட்டுக் குடும்பத்திற்கும் 5% ஆக விதிக்கப்பட்டது. 1959-60ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி இவ் வரிவீதங்களை 1%-லிருந்து 2% வரை திருத்தியமைக்கலாம் என ஆகியது.

வருடாந்திரச் செல்வ வரியை, உயர்ந்த இறுதிநிலை வீதங்களைக் கொண்ட வருமானவரித்திட்டத்தோடு ஒட்டவைப்பது, இந்தியாவில் செல்வ வரிபிலுள்ள குறைபாடாகும். உண்மையில், செலவீட்டு வரியும், செல்வ வரியும் விதிக்கப்படுவதற்குமுன், உயர்ந்தபட்சவரி

வீதத்தை ரூபாய்க்கு 7 அணு அல்லது 45% ஆக ஆக்க வேண்டியது அவசியம் எனக் கால்டர் கூறினர். ஆனால் உழைத்து ஈட்டப்படாத வருமானத்தின்மீது விதிக்கப்பட்ட வருமான வரியின் இறுதி நிலை வீதம் 91. 6%-லிருந்து 84%-க்கும், உழைத்து ஈட்டிய வருமானத்தின் மீது இது 77% க்கும் குறைக்கப்பட்டது. பின்னர் 1961 இல் 1 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட உழைத்து ஈட்டிய வருவாய்க்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரி (Surcharge) 5% அதிகமாக்கப்பட்டதால், இது 80.5% ஆகியது. இதன் விளைவாக, உயர்ந்த வருவாய் மட்டங்களை வருமானவரி, கூடுதல்வரி, செல்வவரி, இவை மூன்றும் எவ்வாறு பாதித்தன என்பதைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம். இக்கணக்கீடு செல்வத்திலிருந்து 5% சராசரி வரவை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அட்டவணை எண் 21

தனிப்பட்டோரின் வருமானம், செல்வம் ஆகியவற்றை வருமான வரி, மேல்வரி, செல்வவரி இவை பாதித்த விதம் (Impact of Income-Tax, Super Tax, and wealth tax on individual's income and wealth)[1]

தனி நபரின் செல்வம் (ரூ. இலட்சத்தில்)	வருமானம்	உழைத்து ஈட்டாத வருவாய் மீது வருமான வரியும் மேல் வரியும்	செல்வ வரி	மொத்தம்	வரி (வருவாயில் சதவீதப்படி)
5	25 000	4,224	1,500	5,724	22·9
15	75,000	37,824	8,000	45,824	61·1
40	2,00,000	1,48,471	42,000	1,90,471	95·2
60	3,00,000	2,26,824	72,000	2,98,824	99·6
70	3,50,000	2,68,824	87,000	3,55,824	101·7
80	4,00,000	3,10,000	1,02,000	4,12,824	103·2
100	5,00,000	3,44,824	1,32,000	5,34,000	105·4
200	10,00,000	8,40,000	2,82,000	1,22,000	112·2

வளரும் பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு எடுத்துக்கட்டாக விளங்கும் ஸ்வீடன் நாடு, ஆண்டொன்றுக்கு ஒருவருக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட, அவர் செலுத்த வேண்டிய மொத்தச் செல்வவரி அதிகமாவதைத் தவிர்க்கும் பொருட்டு, தேசிய

[1] Source:- Eastern Economist-Special Budget No; 1958-59.

வரிகளும் (National taxes), தலவரிகளும் (Local taxes) வரி செலுத்துபவரின் நிகர வருவாயில் 80%-க்கு மேல் போகக்கூடாது என ஏற்படுத்தியது. நார்வே நாட்டிலும் இவ்வேற்பாடு செய்யப் பட்டது. பொருளாதார ஆய்வுக்குரிய தேசீயக்குழு (National council of Applied Economic Rasearch) அதனுடைய வெளியீடான 'வரிவிதிப்பும், தனித்துறை முதலீடும்' (Taxation and Private Investment.) என்ற புத்தகத்தில், இந்தியாவில் வருமானவரியும் செல்வவரியும் சேர்ந்து செயல்படுவதால், ஏற்படும் ஊக்கத்தைப் பாதிக்கும் விளைவுகளை எடுத்துக்காட்டி வரி செலுத்துபவர் செல்வ வரி, வருமானவரி இவற்றுக்காக, அவரது மொத்த வருவாயில் 100%-க்குமேல் செலுத்தும்படிச் செய்யக்கூடாதெனவும் பரிந்துரைத் துள்ளது.

4.12 செல்வவரித்திட்டத்தில் மாறுதல்கள் (Changes in Wealth Tax Act):- 1964-'65ஆம் ஆண்டு முதல், தனிநபருக்கான செல்வ வரி விலக்கு எல்லை இலட்ச ரூபாய்களெனவும், இந்துக்கூட்டுக் குடும்பத்திற்கு ரூ. 2 இலட்சங்களெனவும் குறைக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறையிலிருந்த வரிவீதங்கள் பின்வருமாறு:-

1.	முதல் ஓர் இலட்ச ரூபாய்க்கு (இந்துக்கூட்டுக்குடும்பத்தைப் பொறுத்தவரை முதல் 2 இலட்ச ரூபாய்க்கு.)	வரி கிடையாது.
2.	அடுத்த 4 இலட்ச ரூபாய்களுக்கு (இந்துக்கூட்டுக்குடும்பத்தைப் பொறுத்தவரை அடுத்த 3இலட்ச ரூபாய்க்கு)	0.5%
3.	சொத்திலுள்ள அடுத்த 5 இலட்ச ரூபாய்க்கு	1%
4.	அதற்கடுத்த 10 இலட்ச ரூபாய்க்கு	2%
5.	மீதியுள்ள செல்வத்திற்கு	2.5%

1958ஆம் ஆண்டு முதல், கால்டரால் புகுத்தப்பட்ட வரிகளுள் செல்வவரி போதுமான வருவாயை ஈட்டித் தந்தது. அவ் வருவாய் 1960-61ஆம் ஆண்டில் ரூ. 8·15 கோடிகளாக இருந்து 1969-'70 இல் ரூ. 12 கோடிகளை எட்டியது.

1970-'71ஆம் ஆண்டு முதல் செல்வ வரியின்கீழ் விவசாயச் சொத்துகளையும் கொண்டுவருவதற்காக முயற்சி 1969ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாகச் செல்வ வரி வீதங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

5. முதலீட்டு ஆதாயவரி

(The Taxation of Capital Gains)

5.1. முதலீட்டு ஆதாயத்தின் விளக்கம் (Meaning of Capital Gains) : முதலீட்டு ஆதாயவரி, சமீபகாலத்தில் விதிக்கப்பட்ட நேர்முகவரிகளுள் ஒன்றுனதால், அவ் வரியின் அடிப்படைக் கொள்கையைப்பற்றி அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். தனி நபரின் வருமானவரிவிதிப்பில், முதலீட்டு ஆதாயவரியைச் சேர்ப்பது ஒரு கடினமான பிரச்சினையாகும். முதலினைச் சொத்துகளை (Capital assets), வாங்கிய விலைக்குமேல் விற்று, அதன் பயனுக அடையும் நிதி ஆதாயமே முதலீட்டு ஆதாயமாகும். உதாரணமாக, சரக்கிருப்புகள் (stocks), பங்குகள், பத்திரங்கள், நிலங்கள், வீடுகள், இயந்திரச்சாதனங்கள், நகைகள், ஓவியங்கள், மரச்சாமான்கள் ஆகிய உடைமைகளை விற்பதன் விளைவாக முதலீட்டு ஆதாயம் கிடைக்கிறது. முதல்மதிப்பு (Capital Value) அதிகரிப்பதன் மூலம், இந்த ஆதாயத்தை அடைந்தவன், வரிகொடுக்கும் திறனையும் அடைகிறான். உதாரணமாக, ஒருவர், 10 சரக்கிருப்புகளை ரூ. 5000-க்கு வாங்கி, பிறகு அவற்றை ரூ. 7500-க்கு விற்பதாக வைத்துக் கொள்ளலாம். அவரது ஆதாயமான ரூ 2500-ஐ அவர் அச் சரக்கிருப்புகளை வைத்திருந்தபோது, தமது முதலினைச் சொத்துகளுக்குக் கூடுதலாக ரூ. 2500-ஐப் பெறுவதுபோல் தோன்றலாம். ஒருவர் இலாபத்திற்கு விற்கும்போதுதான் முதலீட்டு ஆதாயம் ஏற்படுகிறது. சாதாரணமாக, இது வருவாய் மூலமாகக் கருதப் படுகிறது. 'அவை நீரூற்றிலிருந்து வரும் வருவாய்ப் பெருக்க மாகா. ஆனால் நீரூற்றையே விற்றுவரும் வருவாயாகும். (They arise not as a flow of income from the fountain but from the sale of the fountain itself.[1]). ஒரு காலணி உற்பத்திச்சாலையின் உரிமை யாளர், காலணிகளை விற்றுப் பெறும் வருவாய் சாதாரண வருவாயாகும். ஆனால் அவர் அக் காலணிகளை உற்பத்தி செய்யும்

[1] H. M. Grooves :- Financing Government, 1955. p. 161

இயந்திரத்தை அதிக விலைக்கு விற்றுப் பெறும் வருவாய் முதலீட்டு ஆதாயமாகும். சொத்துகளை விற்றவிலைக்கும், வாங்கிய விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு, முதலீட்டு ஆதாயம் அளவிடப் படுகிறது. இடைப்பட்ட காலத்தில் மதிப்பிழப்பு ஏற்பட்டிருந்தால், ஓரளவு தொகையை அதிலிருந்து தள்ளுபடி செய்து விடவேண்டும். சில சமயங்களில், முதலீட்டு ஆதாயத்திற்குப் பதிலாக முதலீட்டு இழப்பும் ஏற்படலாம்.

5.2. முதலீட்டு ஆதாயத்தின் நன்மைகள் (Characteristics of Capital Gains) : பொருளாதார நிருவாகத்தில், முதலீட்டு ஆதாயம், ஒரு சிறிய வருவாய் மூலமாக இருந்தாலும், அதை அடையும் சிலருக்கு, அது ஒரு பெரும் வருவாய் மூலமாகவே உள்ளது. அவற்றிலிருந்து பெறும் மொத்த வருவாயை ஒருகாலும் அலட்சியப் படுத்த முடியாது. வருவாய் உயர்ந்த இடங்களில்தான் முதலீட்டு ஆதாயம் பெருமளவில் காணப்படுகிறது. வருவாய் குறைந்த இடங் களில் முதலீட்டு இழப்புகள் தான் அதிகமாகக் காணப்படுகின்றன.[1]

முதலீட்டு ஆதாயம் மாறுபடும் தன்மை உடையது. ஒருவர் இவ்வாண்டு போதிய ஆதாயத்தைப் பெறலாம். மறுபடியும் வாழ்நாள் முழுவதும் ஆதாயத்தைப் பெறமுடியாமலே போகலாம்.

அதிக வரியிலிருந்து தப்ப,கணக்கைச் சரிக்கட்டுவதற்கு முதலீட்டு ஆதாயங்கள் இடமளிக்கின்றன. 'நல்ல ஊதியத்திற்கு அமர்த்தப் பட்ட வழக்கறிஞரின் பெரும்பான்மையான நேரம், சாதாரண வருவாயை முதலீட்டு ஆதாயமாக மாற்றுவதற்கே வீணுக்கப்படு கிறது என்று கூறப்படுகிறது. மேலும் அதிக சக்திவாய்ந்த வளர்வீத வரித்திட்டத்திலிருந்து தப்புவதற்கு இரண்டே வழிகள் உள என்றும் கூறப்படுகிறது. அவையாவன, முதலீட்டு ஆதாயத்தைப் பெறுபவ ராக இருத்தல் வேண்டும். அல்லது எண்ணெய்க் கிணறுகளில் முதலீடு செய்து அதனால் சதவீத இருப்புக்குறைப்பின் (Percentage depletion) நன்மையைப் பெறுபவராக இருத்தல் வேண்டும்' (It is said that much of the time of a very well-paid tax bar is spent in converting ordinary income into capital gains. It is also said that the only two ways to get rid in the face of a high-powered progressive tax system are to become the recipient of capital gains or to invest in an oil well and become the beneficiary of percentage depletion')[1].

5.3. முதலீட்டு ஆதாயம் வருவாயாகுமா? (Are capital gains income?) : 'முதலீட்டு ஆதாயம் உண்மையாகவே வருவா

[1] Lawrence H. Seltzer :- The Nature and Tax Treatment of Capital Gains and Losses, National Bureau of Economic Research, 1951, ch. 8.

யாகுமா?' என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். இக் கேள்விக்குத் திருப்திகரமான விடையளிக்க, வருவாயின் சரியான விளக்கவுரை தேவைப்படுகிறது. முதலீட்டு ஆதாயம் என்பது பெரும்பாலும் ஒருவரது செலவழிக்கக்கூடிய வரவிலோ பொருளாதாரத் திறனிலோ ஏற்படும் மிகுதியைக் குறிப்பதால், அதை அடைபவரின் கொடுக்கும் திறனும் அதிகரிக்கிறது. ஆகவே அவை நீர்மைத் தொகைகளாகின்றன. அவற்றைச் சேமிக்கலாம்; செலவழிக்கலாம்; அல்லது அவற்றின்மீது வரிவிதிக்கப்படலாம். இதனுல் மூலதனத்திலிருந்து தொடர்ந்து கிடைத்துவந்த வருவாய் மட்டத்தின் வருங்காலமும் பாதிக்கப்படமாட்டாது. ஆகவே முதலீட்டு ஆதாயத்தை வருவாய் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

இதற்கு மாறுக, 'முதலீட்டு ஆதாயங்கள் எப்போதுமே வருவாயாக இருக்க முடியாது. ஏனெனில் சில சமயங்களில் அவை பணத்தின் பொய்த் தோற்றங்களாக (Illusory) உள்ளன' என்றும் விவாதிக்கப்படுகிறது. பணவீக்கத்தினுல், பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஏற்றத்தின் காரணமாக, முதலீட்டு ஆதாயம் ஏற்படலாம். இந் நிலையில் அவைகளைப் பணத்தின் பொய்த் தோற்றங்கள் எனலாம். உதாரணமாக, வேறு காரணமின்றிப் பணத்தின் மதிப்புக் குறைவினுலேயே, ஒரு கட்டடம் மிக உயர்ந்த விலைக்கு விற்கப்படலாம். பணவருவாய் அதிகமாகாமல், வட்டிவீதக் குறைப்பின் காரணமாகப் பெயரளவுக்கு ஏற்படும் முதலீட்டு ஆதாயத்தையும் மற்றோர் உதாரணமாகக் கூறலாம்.

ஆனுல், அசல் முதலீட்டு ஆதாயங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக, ஆண்டுதோறும், குத்தகை காலம் முடிவுறும்போது, உண்மைச் சொத்துகளின் மதிப்பில் ஏற்படும் உயர்வு, மீட்டும் நாள் நெருங்கும்போது தள்ளுபடிக்கு விற்கப்பட்ட பத்திரங்களின் (bonds) விலை உயர்வு, இலாபத்தின் காரணமாக எல்லாவகைக் கடன் பத்திரங்களின் (securities) மதிப்புயர்வு, வளர்ச்சியுறும் சுரங்கத்தின் மதிப்புயர்வு இவற்றைக் கூறலாம். ஆகவே, முதலீட்டு ஆதாய வரிவிதிப்பில், பொய்த்தோற்ற முதலீட்டு ஆதாயங்களிலிருந்து, அசல் முதலீட்டு ஆதாயங்களைப் பிரிக்கும் கடினமான பிரச்சினை உள்ளது.

முதலீட்டு ஆதாயம் என்பது ஒரு நிலையற்ற வருவாய் என்பது உண்மையே. ஆங்கிலேயர் முதலீட்டு ஆதாயத்தைத் 'தற்செயல் வருவாய்' (Casual Income) என்பர். முதலீட்டு ஆதாயத்தை எளிதில் சம்பாதிக்கலாம் என்பது உண்மையே. முதலீட்டு ஆதாயத்தின்

[1] H. M. Grooves :- Financing Government, 1955. p. 170

உபயோகம், வருங்கால வருவாயைப் பெறும் திறமையைக் கெடுப்பதில்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

6.4. பணமாக்கப்படாத ஆதாயத் தவிர்ப்பு (Exclusion of Unrealised Gain) : வருவாயைப் பொருளாதாரத் திறன் என நோக்கும்போது, விற்பனை இருந்தாலும் இல்லாவிட்டாலும், பணமாக்கப்பட்ட அல்லது பணமாக்கப்படாத, முதலீட்டு ஆதாயங்கள் வருவாயுடனே சேர்க்கப்படவேண்டும். மூலதனத்தின் மதிப்பு ஆண்டுக்காண்டு மாறுபடுவதால், ஒவ்வொரு வரிக்காலத்திலும், மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கிடுவது, வரி அதிகாரிகளின் பெரிய நிருவாக அலுவலாகும். மேலும் பணமாக்கப்படாத முதலீட்டு ஆதாயங்கள் காகித அளவில் மட்டுமே காணப்படுவதால், அவை புதுவரியைச் செலுத்தும் நீர்மைத்திறமையை அளிக்கவில்லை. இத்தகைய அனுபவ பூர்வமான தொல்லைகளின் காரணமாக, பணமாக்கப்பட்ட முதலீட்டு ஆதாயத்தின்மீது மட்டும் வரிவிதிக்கப்படுவதால், முதலீட்டு ஆதாயவரி சரிவரச் செயல்படவில்லை எனலாம்.

6.5. மற்ற நாடுகளில் முதலீட்டு ஆதாயவரி (Capital gains Tax in other Countries) : 1913ஆம் ஆண்டு முதல், அமெரிக்க ஐக்கிய நாடுகளில், வருமானவரியோடு, முதலீட்டு ஆதாயவரியும் இருந்து வருகிறது. பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்சு, ஹாலண்டு, நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் இவ்வரி விதிக்கப்பட்டுள்ளது. அர்ஜன்டினா, பிரேசில், கியூபா, வெனிசுலா போன்ற மற்றும் பல லாட்டின் அமெரிக்க நாடுகளிலும் முதலீட்டு ஆதாயவரி வசூலிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் முதலீட்டு ஆதாயவரி இல்லை. அங்கு வாணிகத்தைத் தொழிலாகக் கொண்டவர்களைத் தவிர, மற்றவர் அடையும் முதலீட்டு ஆதாயம், முதலின் இயற்கை வளர்ச்சி (accretions of capital)யாகக் கருதப்பட்டு, தற்செயல் வருவாயின் (Casual receipts) கீழ்ச் சேர்க்கப்பட்டு, வரிவிதிப்பிலிருந்து தவிர்க்கப்படுகிறது. இதைப்பற்றி விரிவாக ஆய்ந்தறிந்த இராயல் குழு (Royal Commission), முதலீட்டு ஆதாயத்தின்மீது வரிவிதிக்கக் கூடாது என்று சிபாரிசு செய்தது. அக் குழுவின் விவாதங்களில் நான்கினை அடியிற் காண்போம் :—

1. வரிவீதம் அதிகமாக இருந்தால், சொத்துகள் பணமாக்கப்படமாட்டா. அல்லது பணமாக்கப்படும் காலம் தள்ளிப்போடப்

[1] Royal Commission on the Taxation of Profits and Income, Final Report (1955), Chapter 4.

படும். இழப்புகளோடு ஆதாயத்தைச் சரிக்கட்ட அனுமதிக்கா பட்டால், சில சமயங்களில் ஆதாயத்தோடு இழப்புகளைச் சரிக்கட்டலாம் என்று நினைக்கத் தோன்றும்.

2. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அனுபவமும், பகுத்தறிவின் வாதமும், முதலீட்டு ஆதாயவரி மூலமாகக் கிடைக்கும் தொகை ஆண்டிற்காண்டுப் பெருமளவில் வேறுபடும் என்பதைக் குறிப்பிடு கின்றன.

3. முதலீட்டு ஆதாயத்தின்மீது விதிக்கப்பட்ட எந்தவரியும், எஸ்டேட்வரி (Estate Duty) வசூல் பணத்தில் பெரும் பாகத்தைக் குறைக்க நேரிடும்.

4. இவ் வரி தனிநபரின் சேமிப்பை வெகுவாகப் பாதிக்கிறது. ஏனெனில், பெரும்பாலும் முதலீட்டு ஆதாயம் முழுவதும் சேமிக்கப் படுகிறது.

5.6. இந்தியாவில் முதலீட்டு ஆதாயவரி :- (Capital Gains Tax in India) இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்புதான், இந்தியாவில் முதன்முதலாக முதலீட்டு ஆதாயவரி விதிக்கப் பட்டது. அப்போதைய நிதியமைச்சர் திரு. லியாகத் அலிகான் (Liaquat Alikhan) என்பவர், அவரது 1947-'48ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் படித்தவரியாக (Graduated tax) இவ்வரியைப் புகுத்தினர். இதன்படி முதலீட்டு ஆதாயம் ரூ 5,000-க்கு மேற் பட்டால் அதற்கு முதலீட்டு ஆதாயவரி விதிக்கப்படும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இவ் வரி ஆண்டொன்றிற்கு 3½ இலட்ச ரூபாய் வருமானத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாதிரியை (model) அடிப் படையாகக் கொண்டு இவ் வரியை விதித்துள்ளதாகவும், இவ்வரி உழைப்பிலா (unearned) வருமான உயர்வைத்தான் பாதிக்கு மென்றும், இவ் வரிவிதித்ததற்குத் தற்காப்பாக விளக்கம் கூறினர். இதன்படி, ஒரு நிறுவனம் மூழ்கும் நிலையில் அதன் சொத்துகளைப் பங்கிடும் போதும், சொத்துகள் பரிசாக அளிக்கப்படும் போதும், முதலீட்டு ஆதாயம் ரூ. 5,000-ஐத் தாண்டாதவரையிலும், இவ்வரி விதிக்கப்படாமலிருக்கலாம் என இம்மசோதா (Bill) முயன்றது. ஆயினும், செலக்ட் கமிட்டி (Select committee) இவ்வரிவிலக்கு எல்லையை ரூ. 5,000-லிருந்து, ரூ. 15,000-க்கு உயர்த்தியது. ரூ. 15,000-லிருந்து ரூ. 50,000 வரை, ரூபாய்க்கு ஓர் அணாவீதம் வரிவிதிக்கலாமென்றும், பின்பு ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு அணாவாக அதிகப்படுத்தி, முதலீட்டு ஆதாயம் 10 இலட்சம் ரூபாயை

விட அதிகரிக்கும் போது, ரூபாய்க்கு 5 அணு என வரியை உயர்த்தலா மெனவும் இக் குழு சிபாரிசு செய்தது.

இரு நோக்கங்களின் அடிப்படையில் இவ்வரி நிதியமைச்சரால் புகுத்தப்பட்டது. முதலாவதாக, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இவ்வரி உதவுமென எதிர்பார்க்கப்பட்டது. இரண்டாவதாக, செல்வத்தின் வருவாயை மக்களிடையே சமமாகப் பங்கிட இவ்வரி துணைபுரியும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவ்வரி பெரும் தோல்வியடைந்தது. ஆகவே 1949-இல் பின்வரும் காரணங்களுக் காக, இவ் வரி ரத்து செய்யப்பட்டது :-

1. சொத்துகளின் மதிப்புக் குறைந்ததால், இவ் வரிவசூல் தொகை மிகக் குறைவாக இருந்தது.

2. முதலீடு செய்பவர்களை இவ்வரி வெகுவாகப் பாதித்தது.

3. தொழில் வளர்ச்சிக்கு முன்னேடியான, மூலதன மார்க்கெட்டில் கடன்பத்திரங்களின் நடமாட்டத்தை, இவ் வரி தடை செய்தது.

5.7. வரிவிசாரணைக்குழுவும் முதலீட்டு ஆதாயவரியும் (Taxation Enquiry Commission on Capital Gains Tax) :— முதலீட்டு ஆதாய வரிப் பிரச்சினையை ஆராய்ந்து, முதலீட்டு ஆதாயம், வரி கொடுப்ப வனின், கொடுக்கும் திறமையை அதிகரிக்கச் செய்கிறது என்பதை வரிவிசாரணைக்குழு ஒப்புக் கொண்டது. இவ்வாறுக, முன்னேறி வரும் பொருளாதார அமைப்பில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கின்றன எனவும் அக் குழு கூறியது. ஆயினும், இவ் வரியை ரத்து செய்வதற் காக, 1949ஆம் ஆண்டு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட காரணங்கள், 1953-'54ஆம் ஆண்டிற்கும் பொருந்தும் என அக்குழு உணர்ந்தது. முதலீட்டு ஆதாயவரி விதிக்கப்பட்டால், அது வரியிலிருந்து தப்பிக்கும் முயற்சியைத் தூண்டிவிடலாம் என்பதுவும் அக் குழுவின் கருத்தாகும். முதலீட்டு ஆதாயம் தற்செயல் வருவா யாகவும், நிலையற்ற வருவாயாகவும் இருப்பதால், சாதாரண வருமானவரி, மேல்வரி போன்ற இதர வரிகளைவிடக் குறைந்த வீதத்தில் இவ் வரியை விதிக்க வேண்டியிருப்பதால், சாதாரண வருவாயை முதலீடாடு ஆதாயமாகக் காட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்று அக் குழு எதிர்பார்த்தது. எனவே, அச் சமயத்தில் முதலீட்டு ஆதாயத்தின்மேல் ஒரு தனிப்பட்டவரி விதிக்கப்படுவதை, அக் குழு சிபாரிசு செய்யவில்லை. இருந்த போதிலும், 'நாட்டில் விலை ஏற்றமும், இலாப உயர்வும், மூலதன மதிப்புயர்வும் நீடித்திருக்கும் ஒரு நிலை ஏற்பட்டால், அந் நிலையில், வரிவிதிப்பதற்கேற்ற தனிப்பட்ட, தகுந்த பொருளாக முதலீட்டு

ஆதாயம் மாறலாமெனவும், அப்போது அதை வரி என்னும் வலைக்குள் கொண்டுவரலாம்,' என்றும் அக் குழு எச்சரித்தது (It warned, however, that if any country entered an era of continuously rising prices and profits and of capital values, in that event capital gains may become an eminently suitable subject for taxation and may be brought within the tax net' [1]

5.8. கால்டரின் வரிச்சீர்திருத்தமும், முதலீட்டு ஆதாயவரியும் (Kaldor Tax Reforms and Capital Gain's Taxation) :— கால்டர், தமது இந்திய வரிச்சீர்திருத்த அறிக்கையில், முதலீட்டு ஆதாய வரியைத் திரும்பவும் புகுத்தத் தீவிரமாக முயன்றார். வருமான வரியின் செயல்முறையிலிருந்து, முதலீட்டு ஆதாயத்தைத் தனிப் படுத்துவது சரியான முறையல்ல என்றும், ஏனெனில் இதன் மூலமாக வரி கொடுப்பவக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மற்றவர்களை விடச் சலுகை காட்ட வேண்டி நேரிடும் என்றும் கால்டர் விவாதித் தார். வருமான வரிவிதிப்பிலிருந்து, முதலீட்டு ஆதாயத்தை விலக்குவதால், வருமானவரியை நிருவகிக்கும் திறமை குறைகிறது. ஏனெனில், அது வரி கொடுப்பவர்கள் தமது வருவாயை, வரியில்லாத ஆதாயமாக மாற்றிக் கொள்ளத் தூண்டுகிறது.

1949ஆம் ஆண்டில் இந்தியாவில். இரண்டு வருடங்கள் மட்டுமே இவ்வரி நடைமுறையில் இருந்தபின், இவ் வரியை நீக்கிவிட்டது அவசரமுடிவென கால்டர் எண்ணினர். அவ் வரியை நீக்க அரசாங்கம் காட்டிய காரணங்களில் ஒன்றுகூடக் கால்டருக்குத் திருப்தியளிக்க வில்லை. வரிவிசாரணைக்குழு, இந்த முழுப் பிரச்சினையைப் பற்றி ஒரு அரைப்பக்க அவசர நடவடிக்கை மட்டுமே எடுத்துக் கொண்டது என்பது கால்டரின் கருத்து. முதலீட்டு ஆதாய வரிப்பிரச்சினையை, குறுகியகால வருவாய் என்ற அடிப்படையில் மட்டுமே கையாண்டது பெருந்தவறுகும் என்றும் அவர் கருதினர். முதலீட்டு ஆதாயவரி விதிப்பிற்கு மிக முக்கியமான அடிப்படை நேர்மையே தவிர, வெறும் வருவாயன்று, நீண்ட நாள் வழக்கிலிருந்ததால்தான் முதலீட்டு ஆதாயவரி வருமானத்தைக் காண முடியும். ஆகவே இவ் வரியைத் திரும்பவும் விதிக்கலாம் என்று கால்டர் சிபாரிசு செய்தார். அவ் வரியைத் திரும்பவும் விதிக்கும் போது, 1947ஆம் ஆண்டுச் சட்டத் தின்படி அளிக்கப்பட்ட விலக்குகள் தவிர்க்கப்படவேண்டுமென்று கால்டர் கூறினர். இவ்விலக்குகள் இவ்வரிக்கான அமெரிக்கச் சட்டங்களைப் பின்பற்றி அளிக்கப்பட்டிருந்தாலும், வரிவிதிப்பின் முறையான கொள்கைகளிலிருந்து மாறுபட்டுள்ளன. பணமாக்கப் பட்ட ஆதாயத்திற்கும், பெருகிய (accrued) ஆதாயத்திற்கும்

[1]. Report of the Taxation Enquiry Commission (1953-'54) Government of India. vol. I. chapter VIII pp 163—164.

கொள்கையில் வேறுபாடு எதுவும் இருக்கக் கூடாது என்று கால்டர் எண்ணினார். பணமாக்கப்பட்ட ஆதாயத்திற்கு மட்டுமே வரி விதிப்பது முக்கியமாக நிருவாக வசதிக்காக எனலாம். எல்லாவிதச் சொத்துகளையும், பரிசளிப்பு, வாரிசுமூலம், அல்லது விற்பனை மூலமாகக் கைமாறச் செய்து, பணமாக்கப்பட்ட சொத்துகளின் கீழ்க் கொண்டு வருவது வரியின் நோக்கமாக இருந்தால், காலப் போக்கில் பெருகிய ஆதாயத்திற்கும் பணமாக்கப்பட்ட ஆதாயத் திற்கும் இடையேயுள்ள வேறுபாடு மறைந்துவிடும். இவ்வாறு, பரிசளிப்பாலோ சாசனமூலமாகவோ அடைந்த முதலினைச் சொத்துகளும், முதலீட்டு ஆதாய வரிக்கு இலக்காகின்றன, அதனால், முதலீட்டு ஆதாய வரியிலிருந்து தப்பும் வழி இல்லாது போய், நேர்மையான முறையில் வரி செலுத்தப்படும்.

நகைகளை இவ் வரிவிதிப்பிலிருந்து தவிர்ப்பதைக் கால்டர் ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு குறிப்பிட்ட மதிப்புக்குமேல், அதிகமான நகைகள், ஒரு வகை முதலீடுபோல் ஆவதால், அவற்றையும், முதலீட்டு ஆதாய வரியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பது அவர் கருத்து.

குறைந்த வீதத்தில் தனி முதலீட்டு ஆதாய வரி விதிக்கப் படுவதைக் கால்டர் ஒப்புக் கொள்ளவில்லை. கால்டரின் திட்டத்தில் கூடுதல் வரியின் (Sur Tax) உச்ச இறுதிநிலை வரிவீதம் 45 சதவீதத் திற்குமேல் போகக் கூடாது என்பது ஒரு முக்கிய அம்சமாகும். அந் நிலையில் வருமான வரியுடன் முதலீட்டு ஆதாய வரியையும் இணைத்து ஒரே வரியாக ஆக்கிவிடுவது ஒரு சிறந்த முடிவு என்றார் அவர்.

கால்டர் இவ் வரியின் நீண்டநாள் வரவை (Long term yield) மேலோடு மதிப்பிட்டார். முதலீட்டு ஆதாயத்தின் சராசரி ஆண்டு வருவாயை ரூ. 60 கோடி முதல் ரூ 100 கோடிவரை எனவும், வரி வீதத்தை 40 சதவீதம் எனவும் கொண்டு, இவ் வரியின் நீண்ட நாள் வரவு, சுமாராக ரூ. 25 கோடி முதல் ரூ. 40 கோடி வரை இருக்கு மெனக் கணக்கிட்டார்.

5.9. இணைப்புவரி அமைப்பும், முதலீட்டு ஆதாய வரியும் :— (Integrated Tax Structure and Capital Gains Tax) :- இந்தியாவில் இணைப்பு வரி அமைப்பின்கீழ், முதலீட்டு ஆதாய வரி கொண்டு வரப்பட வேண்டுமென்று கால்டர் கருதினார். இந்திய அரசு கால்டரின் வரிச்சீர்த்திருத்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டு, 1956-இல் முதலீட்டு ஆதாய வரியைத் திரும்பவும் விதித்தது.

பணமாக்கப்பட்ட முதலீட்டு ஆதாயங்களின்மேல் மட்டுமே இவ் வரி விதிக்கப்பட்டது. பெருகிய முதலீட்டு ஆதாயங்கள் இவ்

வரிக்கு இலக்காகவில்லை. இவ்விதமாக, முதலினச்சொத்துகள் (Capital assets) விற்கப்பட்டாலோ கைவிடப்பட்டாலோ கைமாறினாலோ தவிர, இவ் வரியினால் பாதிக்கப்படவில்லை. இவ் வரி, தனிநபர், நிறுவனம் ஆகிய இரண்டினங்களுக்கும் பொருந்தும். ஆனால், முதலீட்டு ஆதாயங்கள் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியன்றே அதற்குப் பிறகோ பணமாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். விவசாய நிலங்கள், வீட்டுப் பொருள்கள் இவைகளை விற்றுப் பெற்ற முதலீட்டு ஆதாயங்கள் இவ் வரியிலிருந்து விலக்கப் பட்டன. முதலீட்டு ஆதாயத்தை அடைந்தவர் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு வரியினைச் செலுத்தலாம் :-

1. முதலினச் சொத்தின் அசல் விலையைவிட விற்ற விலையில் கிடைத்த அதிகப்படியான தொகை.

2. 1956ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியில், அச் சொத்தின் சந்தைவிலைமதிப்பைவிட விற்ற விலையில் கிடைத்த அதிகப்படியான தொகை.

இதன் காரணமாக, 1956ஆம்ஆண்டு சனவரி முதல் தேதிக்குமுன், எல்லாவித முதலின மதிப்புயர்வுகளின் (Capital appreciation) மீது வரிவிதிக்கப்படவில்லை. ஏதாவதொரு கணக்கீட்டு ஆண்டில் முதலீட்டு ஆதாயங்கள் ரூ. 5,000 அல்லது அதற்கு மேலாக இருந்தாலோ முதலீட்டு ஆதாயமும் மற்றவரிக்குட்பட்ட வருவாயும் சேர்ந்து ரூ. 10,000 அல்லது அதற்கு மேலாக இருந்தாலோ, தனிநபர் முதலீட்டு ஆதாய வரியைச் செலுத்தவேண்டும். முதலீட்டு ஆதாய வரிவீதம், தனிநபரின் இதர வருவாயுடன், முதலீட்டு ஆதாயத்தில் மூன்றிலொரு பங்கைச் சேர்த்து, அத் தொகைக்குப் பொருத்தமான வருமானவரிவீதத்திற்குச் சமமாகும். உதாரணமாக ஒருவரின் இதர வருவாய் ஆண்டொன்றிற்கு ரூ. 20,000 ஆகவும், அதே வருடத்தில் அவருக்குக் கிடைத்த முதலீட்டு ஆதாயம் ரூ. 45,000 ஆகவும் இருந்தால், இந்த ரூ. 45,000-க்கு வாங்கப்படும் வரி, ரூ. 35,000-க்குச் சுமத்தப்படும் வருமானவரிக்குச் சமமாகும் (அதாவது, இதர வருவாய் ரூ. 20,000+45,000இல் $\frac{1}{3}$பங்கு). முதலீட்டு ஆதாயங்களுக்கு மேல்வரி (Super Tax) விதிக்க முடியாது. வருமானவரி, கூடுதல்வரி (Sur charge) இவற்றின் உச்சவீதம் 26·5 சதவீதமாதலால், முதலீட்டு ஆதாயவரிவீதம் இதைவிட அதிகமாக இருக்க முடியாது. நிறுவனங்களின் முதலீட்டு ஆதாயங்களின்மீது, ஒரேமட்டத்தில் 26·25 சதவீத வருமானவரி சுமத்தப்பட்டது (1957இல் இது 31·5 சதவீதமாக இருந்தது).

5.10. பழைய முதலீட்டு ஆதாய வரியும், புதிய முதலீட்டு ஆதாய வரியும் (Capital Gains Tax—Old and New) :— 1956ஆம் ஆண்டு

முதலீட்டு ஆதாயவரி, 1947ஆம் ஆண்டு முதலீட்டு ஆதாய வரியை விடச் சிறந்து விளங்குவதைக் காணலாம். 'முதலினைச் சொத்து' என்ற சொல்லின் விளக்கம், பழைய சட்டத்தில் காணப்பட்ட விளக்கத்திலிருந்து மாறுபடவில்லை. விவசாய நிலத்தைத் தவிர, உரிமையாளரின் எந்தவிதச் சொத்துகளையும் முதலினைச் சொத்து எனலாம். இச் சொத்து அவரது வியாபாரம் அல்லது தொழில் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், இதில் வியாபாரத்திற்காக அல்லது தொழிலுக்காக ஒருவர் வைத்திருக்கும் வியாபாரச் சரக்கிருப்புகள், நுகர்வுப்பொருள்கள் அல்லது கச்சாப்பொருள்கள் ஆகியவை சேர்க்கப்படவில்லை. ஆனால், பழைய பிரிவின்கீழ் இருந்த சில விலக்குகள் நீக்கப்பட்டு, அதன் விளைவாக இவ் வரி வலை பெரிதாக்கப் பட்டது. பழைய பிரிவின் சொற்களில் இருந்த பிளவுகள் (lacunae) நீதிமன்றத்தினால் எடுத்துக் காண்பிக்கப்பட்டுச் சரிசெய்யப்பட்டது; வரிவீதமும் கணிசமான அளவில் மாற்றப்பட்டது.

பழைய சட்டப்படி, சொத்துகள் விற்கப்பட்டாலோ கைமாறினாலோ உரிமை மாறினாலோ இவ் வரிக்கு இலக்காயின. சொத்துகளைக் கைவிடுதல் (Relinquishment) இதில் சேர்க்கப்பட வில்லை. ஆனால், புதுச்சட்டத்தின்படி 1956ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் தேதிக்குப் பிறகு முதலினைச் சொத்துகளின் விற்பனை, உரிமை மாற்றம், கைமாற்றம், உரிமை இழப்பு இவற்றின் பயனாக ஏற்பட்ட முதலீட்டு ஆதாயத்தின்மேல் வரிவிதிக்கப்பட்டது. 'உரிமை இழத்தல்' (Relinquish) என்ற வார்த்தைக்கு அகராதியில் 'கொடுத்து விடுதல்' அல்லது 'தானாகவே போகவிடுதல்' என்ற பொருளே காணப்படுகிறது. இவ்விதமாக A, B இருவருக்கும் சொந்தமான ஒரு வீட்டின் பாதிப் பங்கை A, சில ஆதாயங்களை முன்னிட்டு B-க்குக் கொடுத்துவிடுவதாகக் கொண்டால், தன் உரிமை இழப்பினால் A அடைந்த முதலீட்டு ஆதாயம் வரிக்குட்பட்டதாகும். இம் முதலீட்டு ஆதாயம் அம் முதலினைச் சொத்தின் மதிப்புக்கும், உரிமை இழப்பினால் அவர் அடைந்த வருவாய்க்கும் உள்ள வித்தியாசத்திற்குச் சமமாகும்.

பழைய சட்டத்தின்கீழ் விற்பனை, உரிமைமாற்றம் இவற்றோடு சேராத சில சொத்துமாற்றங்கள் முதலீட்டு ஆதாய வரிக்கு உட்பட்டனவாக இல்லை. அவை பின்வருமாறு :

1. பொதுத் தேவைக்காகச் சொத்துகளைக் கட்டாயமாக உரிமைப்படுத்திக் கொள்ளுதல்

2. ஓர் இந்துக்கூட்டுக்குடும்பத்தின் (Hindu Joint Family) பகுதிப் பாகப்பிரிவினை அல்லது முழுப் பாகப்பிரிவினையின் போது ஏற்படும் பங்கீடு.

3. ஒருவரின் நிறுவனம் மூழ்கும் நிலையில் செய்யப்படும் பங்கீடு

4. தன்னிச்சையாகவோ கட்டாயத்தின் பேரிலோ திவாலான ஒரு நிறுவனத்தின் பங்கீடு

5. பரிசு, சாசனம் அல்லது உயில்மூலமாகச் செய்யப்படும் பங்கீடு

6. மாற்றமுடியாத டிரஸ்ட்டுகளின் (Trusts) கைமாற்றத்தால் விளைந்த பங்கீடு

7. தலைமை நிறுவனத்திலிருந்து அதன்கீழ் உள்ள இந்திய நிறுவனமொன்றிற்குச் செய்யப்படும் கைமாற்றம் (Transfer)

8. இறுதியாக, வீட்டுச் சொத்தின் சொந்தக்காரர், விற்பனைக்கு முன் ஏழு வருடங்களுக்குக் குறையாமல் அதை வைத்திருந்து அதன்பின் கைமாறச் செய்தல்.

புதுச்சட்டத்தின்கீழ் மேற்கூறியவற்றுள் 1, 3, 4, 5, 8 ஆவது இனங்களின் (Items) மேல் இருந்த வரிவிலக்குகள் நீக்கப்பட்டு விட்டதால், முதலீட்டு ஆதாய வரி வலையைப் பெருமளவில் விரிக்க முடியும்.

பழைய சட்டத்தின்கீழ், ரூ. 15,000 வரை முதலீட்டு ஆதாயவரியிலிருந்து தவிர்க்கப்பட்டது. ஆனால், புதுச்சட்டத்தின்படி முதலீட்டு ஆதாயம் ரூ. 5,000-க்குக் குறைவாக இருந்தால்தான் வரியிலிருந்து தப்பியது. 1947ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி முதலீட்டு ஆதாய வரிவீதம் பின்வருமாறு இருந்தது :

முதலீட்டு ஆதாயம்	வரிவீதம் (ரூபாய்க்கு)
ரூ. 15,000-க்கு மேல், ஆனால் ரூ. 50,000 க்குள்	1 அணு
ரூ. 50,000-க்கு மேல், ஆனால் ரூ. 2 இலட்சத்திற்குள்	2 அணு
ரூ. 2 இலட்சத்திற்குமேல், ஆனால் ரூ. 5 இலட்சத் திற்குள்	3 அணு
ரூ 5 இலட்சத்திற்குமேல், ஆனால் ரூ 10 இலட்சத் திற்குள்	4 அணு
ரூ. 10 இலட்சத்திற்குமேல்	5 அணு

புதுச்சட்டத்தின்கீழ், முதலீட்டு ஆதாய வரி வருமான வரியின் ஒரு பகுதியாகவுள்ளது.எனவே, முதலீட்டு ஆதாய வரி,மற்ற வருவாய்க்கு விதிக்கப்படும் வரியோடு வரியாக வசூல் செய்யப்படும். ஒருவரால் கொடுக்கப்படும் முதலீட்டு ஆதாய வரி, அவரது மொத்த வருவாயுடன் முதலீட்டு ஆதாயத்தில் முன்றிலொரு பங்கினைச் சேர்த்து, அத் தொகைக்கு விதிக்கப்படும் சராசரி வருமான

வரியாகும். ஆகவே, பழைய சட்டத்தின்கீழிருந்ததைவிடப் புதிய சட்டத்தின்கீழ், பெரும்பான்மையானவற்றின்மேல் இவ் வரி சுமத்தப் பட்டது.

முதலீட்டு இழப்புகளை, அதே ஆண்டிலோ அடுத்து வரும் ஆண்டுகளிலோ முதலீட்டு ஆதாயங்களைக் கொண்டு சரிக்கட்ட அனுமதிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, முதலீட்டு இழப்பினைச் சரிக்கட்டும் காலம் 6 ஆண்டுகளாக்கப்பட்டது. 8 ஆண்டு களுக்குமேல், ஓர் இழப்பையும் தொடர்ந்து காட்டக்கூடாது என 1957ஆம் ஆண்டு நிதி மசோதா தீர்மானித்தது.

1956ஆம்ஆண்டு முதலீட்டு ஆதாயவரிவிதிப்புப் பற்றிய திறனாய்வு (A Critical Appraisal of Capital Gains Taxation of 1956): 1956-இல் புகுத்தப்பட்ட முதலீட்டு ஆதாயவரி, கால்டரின் யோசனைகளி லிருந்து, முக்கியமாக இருவகைகளில் மாறுபட்டிருந்தது. முதலா வதாக, விலைகொடுத்து வாங்காமல் கைமாறிய முதலீட்டு ஆதாயத் திற்கு வரி இல்லை. இரண்டாவதாக, முதலீட்டு ஆதாய வரியின் உச்சவீதம் (maximum rate) கால்டர் கூறியதைப்போல் 45 சதவீதமாக இல்லாமல், 31·5 சதவீதமாக இருந்தது.

முதலீட்டு ஆதாய வரியைப் பொறுத்தவரை, பணமாக்கப்பட்ட முதலீட்டு ஆதாயங்கள்தாம் வரிக்கு இலக்காகின்றன என்று இருந்தால் வரி செலுத்துபவர் பணமாக்குவதைத் தள்ளிப்போடவே விரும்புகிறார் என்பதை அனுபவ வாயிலாக அறிகிறோம். அதனால் ஆதாயமேதுமின்றிக் கைமாறும் சொத்து (உயிருடன் இருக்கும் போதோ இறந்த பிறகோ) பணமாக்கப்பட்ட முதலீட்டு ஆதாயமாகக் கருதப்படாதவரை, என்றென்றும், வரிகொடுப்பவர் முதலீட்டு ஆதாய வரியைக் கொடுக்காமலே தள்ளிப்போடலாம். இத்தகைய குறைபாட்டின் காரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடு களில் முதலீட்டு ஆதாயத்தின் மூன்றில் இரண்டு பங்கு இவ் வரி விதிப்பிலிருந்து தப்பியுள்ளது. இந்த விலக்கு இருக்கும்வரை, கூட்டுக்குடும்பத் திட்டங்களைக் கொண்ட இந்தியாவில், முதலீட்டு ஆதாயத்தின் பெரும்பகுதி வரிக்கு இலக்காகாது என்பதை நம்பு வதற்குத் தகுந்த காரணமிருக்கின்றது.

இரண்டாவது மாறுபாட்டைப் பொறுத்தவரை, முதலீட்டு ஆதாய வரியின் உச்சவீதத்தை ரூபாய்க்கு 7 அணாவாக ஆக்க வேண்டும் என்ற கால்டரின் தீர்மானம், வருமான வரியின் உச்ச வீதத்தை ரூபாய்க்கு 7 அணா அல்லது 45 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்ற அவரது மற்றொரு தீர்மானத்துடன் சேர்க்கப் பட்டது என்பதை இங்குக் குறிப்பிடலாம். ஆனால், 1956ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மூலதன ஆதாயம் வருமான வரிக்கு இலக்காகுமே தவிர, மேல்வரிக்கன்று. வருமானத்தோடு, முதலீட்டு

ஆதாயத்தையும் சேர்த்து ஒரே வகையில் விதிக்கப்பட்டால், பெருமளவில் வேலை குறையும் என்பது கால்டரின் கருத்து. கால்டர் கூறியவாறு உச்சவீதத்தை ஒப்புக் கொண்டிருந்தால், அதனால் கிடைக்கும் வருவாய் அதிகமாக இருந்திருக்கும் என்பதை, 1955ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் நிருணயிக்கப்பட்ட குறைந்த வரிவீதம் விளக்கியது. இவ்வாறு, முதலீட்டு ஆதாயத்தையும், சாதாரண வருவாயையும் வேறுபடுத்தியதன் விளைவு சாதாரண வருவாயை முதலீட்டு ஆதாயமாக மாற்றத் தூண்டியது.

5.11 முதலீட்டு ஆதாய வரிவிதிப்பில் பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் (Later Changes In Capital Gains Taxation):— 1962-63 ஆம் ஆண்டில் முதலீட்டு ஆதாய வரி திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி நீண்டகால ஆதாயம், குறுகியகால ஆதாயம் இவற்றின் மீது வெவ்வேறு வகையில் வரிவிதிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. குறுகியகால முதலினச் சொத்துகளைக் (Short-term capital assets) கைமாறச் செய்ததால் கிடைக்கும் முதலீட்டு ஆதாயத்தின் மீது முதலீட்டு ஆதாயமல்லாத வேறு வருவாய்மீது வரிவிதிப்பதுபோல், விதிக்கப்பட்டது. ஒருவர் தமது சொத்துகளை இன்னொருவர் கைமாறச் செய்யும் நாளுக்கு முன்னால், 12 மாதங்களுக்கு மேற்படாமல் அச் சொத்தை வைத்திருந்தால் அது குறுகிய காலச் சொத்தாகும். மற்ற எல்லா முதலீட்டு ஆதாயங்களும் 25 சதவீத வரிவிதிப்பிற்கோ குறுகிய காலச் சொத்துகளின் மீது விதிக்க பட்ட வரிவீதத்திற்கோ, இரண்டில் எது குறைவோ அதற்கு இலக்காயின. குறுகியகாலச் சொத்துகளைத் தவிர, மற்றச் சொத்து களின்மூலம் அடைந்த முதலீட்டு ஆதாயத்திற்கு மட்டுமே வரி விலக்கு எல்லை ரூ. 5000 என முடிவு செய்யப்பட்டது. நிறுவனங்களைப் பொறுத்தவரை, குறுகிய காலச் சொத்துகளின் வழியாக அடைந்த முதலீட்டு ஆதாயம், முதலீட்டு ஆதாயத்திலிருந்து வேறுபட்ட வருவாயாகக் கருதப்பட்டு, அவ் வருவாயின்மேல் 30 சதவீத வரி விதிக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

முதலீட்டு ஆதாயவரி முதலில் மூன்று குறைகளைக் கொண்ட தாயிருந்தது. முதலாவதாக, ஒருவரது சொந்த முயற்சியாலும், வியாபாரத்தினாலும் சம்பாதிக்கப்பட்ட வருவாய்மீது விதிக்கப்படும் வருமான வரியின் விலக்கு எல்லை ரூ. 3,000 என இருக்கும்போது, முதலீட்டு ஆதாய வரியின் விலக்கு எல்லை ரூ. 5,000 என்று இருந்தது, மிக அதிகமாகக் கருதப்பட்டது. இரண்டாவதாக, அது காலத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. அதனால், ஓர் ஆண்டிலோ 10 ஆண்டுகளுக்குப் பிறகோ கைமாற்றப்பட்ட சொத்துகளால் அடைந்த ஆதாயங்கள் ஒரே மாதிரியாகக் கருதப் பட்டன. மூன்றுவதாக, ஒருவரது சொத்துகளை ஆதாயமேது

மின்றிக் கைமாறச் செய்து (gratuitous transfer) அதன்மூலம் வரி செலுத்துவதிலிருந்து தப்புவதைச் சமாளிக்க இவ் வரி வழியளிக்க வில்லை.

1962-63ஆம் ஆண்டில், குறுகிய காலச் சொத்துகளைப் பொறுத்த வரை, வரிவிலக்கு எல்லை ரூ 5,000 ஆகாது என்று ஆக்கப்பட்டது சரியான நடவடிக்கையேயாகும். இத் திருத்தம் காலத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டது. அதன் விளைவாக, முதலீட்டு ஆதாயம், குறுகியகால முதலீட்டு ஆதாயம், நீண்ட கால முதலீட்டு ஆதாயம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டது.

ஆயினும், இவ் வரியினால், சொத்துகளை ஆதாயமேதுமின்றிக் கைமாறச் செய்து, வரியிலிருந்து தப்புவதைச் சமாளிக்க இயலவில்லை. 'இவ்விலக்கின் காரணமாகக் கிட்டத்தட்ட முதலீட்டு ஆதாயங் களில் மூன்றிலிரண்டு பாகம் வரிவிதிக்கப்படாமலுள்ளது என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அனுபவம் சுட்டிக் காட்டுகிறது' (Experience in U. S. A suggested that because of this exemption, nearly two thirds of the capital gains remains untaxed)[1].

1957-58ஆம் ஆண்டிலிருந்து, முதலீட்டு ஆதாயங்களை அடைந்த வரின் எண்ணிக்கை, வருவாய், கொடுக்கப்பட வேண்டிய வரி ஆகியவற்றைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

ஆண்டு	முதலீட்டு ஆதாயம் அடைந்தவரின் எண்ணிக்கை	முதலீட்டு ஆதாயத்தின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)	கொடுக்கப்பட வேண்டிய வரி (ரூபாய் இலட்சத்தில்)	செலுத்தப் பட்ட வரி (முதலீட்டு ஆதாயத்தின் சதவீதத்தில்)
1957-58	406	100·4	20·85	20·8
1958-59	621	171·0	38·80	22·6
1959-60	982	266·9	62·39	23·4
1960-61	1331	363·7	83·71	23·1
1061-62	2419	631·7	139·84	22·1
1962-63	3154	845·4	209·48	24·8
1963-64	4055	583·4	130·64	22·4

Source :- Financing of Planned Development in India, Sterling Publishers Ltd., Delhi, 1968, p. 204.

[1] S. Guptah, Capital Taxation in a Development Economy, p. 197.

மேலே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களிலிருந்து 1957-58ஆம் ஆண்டிற்கும், 1963-64ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், சொத்துரிமையாளரின் எண்ணிக்கையும், முதலீட்டு ஆதாயமும் கிட்டத்தட்ட பத்து மடங்கு பெருகியுள்ள போதிலும், செலுத்தப் பட்ட வரித்தொகை ஆறு மடங்கு ஆகிய போதிலும், முதலீட்டு ஆதாய வரி மாறுதலேதுமின்றி 25 சதவீதத்திற்குக் குறைவாகவே இருப்பதைக் காண்கிறோம்.

பின்வரும் அட்டவணை, 1957-58ஆம் ஆண்டிலிருந்து, முதலினச்சொத்து வகைகளையும், முதலீட்டு ஆதாயவரிமூலம் அவற்றிலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தையும் காட்டுகிறது :-

ஆண்டு	மூலதன ஆதாயம்			மொத்தம்
	கைமாறச் செய்ய முடியாத சொத்துகளிலிருந்து	இயந்திரச் சாதனங்களிலிருந்து	இதர சொத்துகளிலிருந்து	
	(ரூபாய் இலட்சத்தில்)			
1957-58	21·1	5·2	74·1	100·4
1958-59	40·9	9·8	120·3	171·0
1959-60	59·3	17·3	190·3	266·9
1960-61	85·9	20·0	252·3	358·2
1961-62	169·3	55·0	407·4	631·7
1962-63	312·1	42·9	490·4	845·4
1963-64	259·5	35·0	288·9	583·4

Source :- Financing of Planned Development in India, Sterling Publishers Ltd., Delhi, p. 204.

கைமாற்றம் செய்ய இயலாத சொத்துகளில் முதலீடு செய்தல் அதிக அளவு இலாபத்தைத் தரும் என்பதை நாம் மேல் காணும்

ட்டவணையிலிருந்து அறிகிறோம். ஏனெனில் அதன் விளைவாகக் டைக்கும் முதலீட்டு ஆதாயம் 12 மடங்காகவும், அதே சமயத்தில் யந்திரச் சாதனங்களின் முதலீடுகளின் விளைவாகக் கிடைக்கும் ஆதாயம் 7 மடங்காகவும், மற்றச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் முதலீட்டு ஆதாயம் 4 மடங்காகவும் பெருகியுள்ளதைக் காணலாம். மேலும், உற்பத்தி செய்யும் தன்மையற்ற ஊக வாணிக முதலீடுகளைச் (Speculative investments) சமாளிக்க முதலீட்டு ஆதாய வரி தவறிவிட்டது என்பதையும் காண்கிறோம். இப் பிரச்சினையைச் சமாளிப்பது, முதலீட்டு ஆதாய வரியின் முக்கிய நோக்கமாகக் கருதப் பட்டது. இவ் வரியினால் கிடைக்கும் வருவாய் குறைவாகவே உள்ளது. முதலீட்டு ஆதாய வரி எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடையத் தவறியதற்குக் காரணம், இந்திய முதலீட்டு ஆதாய வரி கால்டரின் சிபாரிசுகளைவிட்டு அப்பால் தள்ளிப் போனதுதான் என்பதை நினைவுகூரவேண்டும்.

6. தனிப்பட்டோர் செலவீட்டு வரி

(A Personal Expenditure Tax)

6.1. தனிப்பட்டோரின்செலவீட்டு வரி (A Personal Expenditure Tax :- செலவீட்டு வரியைச் செயல் முறையில் பரிசீலித்துப் பார்த்த உலகின் இரு நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும். தனிப்பட்டோரைப் பாதிக்கும் வரி, அவரது வரவுகளை அடிப்படையாகக் கொண்டதாக அல்லாமல் அவரது செலவுகளையே அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதே செலவீட்டுவரியின் கருத்தாகும்.

செலவீட்டு வரி, சேமிப்பைப் பாதிக்காததால், அது வருமான வரியிலிருந்து வேறுபடுகிறது. சேமிப்பைத் தவிர, செலவினங்கள் யாவும் இவ் வரிக்கும் இலக்காகின்றன. (உ-ம்.) வரிசெலுத்துவோர் ஒருவரது வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 ஆக இருந்து, அவர் அதிலிருந்து ரூ. 8,000-ஐச் செலவழிப்பதாகக் கொள்வோம். வருமான வரியின் கீழ் அவர் ரூ. 10,000-க்கும் வரிகட்ட வேண்டியிருக்கும். செலவீட்டு வரியின்கீழ் அவர் ரூ. 8,000-க்கு மட்டுமே வரி செலுத்துவார். இவ்வாறின்றி, அவர் மொத்த வருமானத்தையும் செலவழித்து, மேலும் ரூ. 2,000 - ஐக் கடன்மூலமாகவோ, பரிசுச் சீட்டுமூலம் பெற்ற பணத்திலிருந்தோ எடுத்துச் செலவழித்தாரேயானால், செலவீட்டு வரியின்கீழ் அவர் ரூ. 12,000-க்கு வரிகட்ட வேண்டி நேரிடும். ஆனால், வருமான வரியின்கீழ் ரூ. 10,000-க்கு மட்டும் வரி கட்டினால் போதும். ஒருவர் தமது வருமானத்தைவிட அதிகமாகவோ, குறைவாகவோ செலவழிப்பதைப் பொறுத்து, செலவீட்டு வரி அதிகமாகவோ குறைவாகவோ விதிக்கப்படுகிறது.

செலவீட்டு வரி என்பது தேய்வுவீத நிலைப்பாட்டினையுடைய சாதாரண விற்பனை வரியைப் போன்றதேயாகும் என்பது தவறான தொன்மைக் கருத்தாகும். மறைமுக வரியிலிருந்து இவ் வரி வேறுபடுவதை நாம் அறிய வேண்டும். முதலாவதாக, உண்மையில் மறைமுக வரிகள் நுகர்வோரால்ன்றி, ஒரு பொருளின் உற்பத்தியாளர்

அல்லது விற்பனையாளர் இவர்களாலேயே மாநில அரசுக்குச் செலுத்தப்படுகின்றன. ஆனால், வருமான வரியைப் போன்று செலவீட்டு வரியையும், தனிப்பட்டோரால் மாநில அரசுக்கு நேர்முக மாகச் செலுத்தப்படுவதாகும். இரண்டாவதாக, மறைமுக வரிகளுள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஏனெனில் சில பொருள்கள் அல்லது உழைப்புகளின்மீது மற்றப்பொருள்கள் அல்லது உழைப்புகளைவிட அதிகமாக மறைமுக வரிகள் விதிக்கப்படு கின்றன. செலவீட்டு வரியைப் பொறுத்தவரை இவ்வாறு நடப் தில்லை. ஒருவர் ரூ. 100-ஐத் தங்க நகைகளை வாங்கவோ உல்லாசப்ப பயணத்திற்கோ இலற்றுள் எதற்காகச் செலவழித்தாலும் சரி, அவர் அந்த 100 ரூபாய்க்கும் வரி செலுத்தியாக வேண்டுமென்பதே கொள்கையாகும். மூன்றுவதாக, செலவீட்டு வரியைப் போன்று மறைமுகவரிகள் அவ்வளவாக வளர்வீதத்திற்குள் அகப்பட மாட்டா. இக் காரணங்களுக்காக, தற்போதுள்ள மறைமுக வரி அமைப்பைவிட, செலவீட்டு வரியே, வருமானவரி, கூடுதல்வரி இவைகளுக்குப் பதிலாக (Substitute) இருக்கலாமெனக் கூறப்படுகிறது.

6.2 இவ் வரியின் வரலாறு (History of the tax):-

செலவைப் பற்றிய கருத்துப் புதிதாகத் தோன்றியதன்று. மக்களது வருமானத்தின்மீது வரி விதிப்பதற்குப் பதில், அவர்கள் செலவீட்டிற்கு வரி விதிப்பதே நியாயமானது என்பது 300 ஆண்டு களுக்கு முன்பே தோன்றிய கருத்தாகும். J.S. மில் என்பவரின் 'அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்' என்ற புத்தகத்தில் இக் கருத்தே திரும்பவும் எடுத்துக் கூறப்பட்டது. அக் காலத்திலிருந்து, இங்கிலாந்தில் மார்ஷல் (Marshall), பிகு (Pigou), அமெரிக்காவில் இர்வீங் ஃபிஷர் (Irving Fisher), இத்தாலியில் லூயி இனுடி (Luigi Einaudi) போன்ற சிறந்த அரசியல் பொருளாதார நிபுணர்களின் பரம்பரையை இக் கருத்து கவர்ந்துள்ளது. செலவீட்டு வரியை நடை முறைக்குக் கொண்டுவந்தால் பல கஷ்டங்கள் நேரிடும் என்று நம்பியதன் விளைவாகப் பெரும்பான்மையான பொருளாதார நிபுணர்கள், செலவீட்டு வரியின் நன்மைகளைப் பற்றிப் படிப்பதில் மட்டுமே உற்சாகத்தைக் காட்டி வந்தனர். 'உருவாக்கக்கூடிய வருமான வரி விதிப்பு' ('Constructive Income taxation') என்ற தமது புத்தகத்தில் வருமான வரி விதிப்பிலிருந்து செலவீட்டு வரிமீது கருத்தைச் செலுத்திய இர்வீங் ஃபிஷருக்குப் பின்புதான், செலவீட்டு வரியை நடைமுறையில் கொண்டு வரமுடியுமென உணர்ந்தனர். 1942ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், 'போர் நிதிக்காகப் புதிய வளர்வீதச் செலவீட்டு வரியை விதிக்கலாம்' என்ற யோசனை அமெரிக்காவில் காங்கிரசுக்கு எடுத்துக்காட்டப் பட்டுத் தோல்வியடைந்த போதிலும், அதுவே இரண்டாவது

உலகப்போரின்போது, செலவீட்டு வரியைப் புகுத்த எடுத்துக் கொண்ட முயற்சியாகும். நியூயார்க் 'டைம்ஸ்' (Times) என்ற பத்திரிகையில் வந்த தலையங்கத்தில் கண்டவாறு 'அரசு கருவூலத் தினுல் (Treasury) கொண்டு வரப்பட்ட எந்தவொரு வரித் தீர்மானமும், மேல்சட்டசபை நிதிக்குழு உறுப்பினர்களின், இத்தகைய பலத்த, ஒரே மாதிரியான எதிர்ப்புகளுக்கு ஆளான தில்லை' என்று தெரியவருகிறது (No Tax proposal ever put forward by the Treasury received such strong and uniform Condemnation from members of the Senate Finance Committee). தற்போது செலவீட்டு வரியை ஆதரிப்பவர் நிக்கலஸ் கால்டர் ஆவார். 'செலவீட்டு வரி' பற்றிய அவரது புத்தகம், செலவீட்டு வரியின் நன்மைகளின்மீது ஊக்கத்தை உண்டாக்கியுள்ளது. செல வீட்டு வரி, கோட்பாட்டளவில் (Theoretically) வருமான வரியைவிட உயர்ந்ததாக இருப்பதோடு நடைமுறைக்கும் ஒரு குறிப்பிட்ட வகையில் ஒத்துவரும் எனக் கால்டர் கருதுகிறார். 1952ஆம் ஆண்டில், இலாப வரிவிதிப்பு வருமான வரி பற்றிய ராயல் குழு வினரிடம், கூடுதல்வரிக்குப் (Sur-tax) பதிலாகச் செலவீட்டு வரியை விதிக்கலாம் என அவர் எடுத்துக் கூறினர். ஆனல் ராயல் குழு, அதைத் தனது வேலைக்குப் புறம்பானது என்று கூறி, அதிலிருந்து விலகிக் கொண்டது. 'ஞானிகளுக்கு அவர்கள் சொந்த நாட்டில் மதிப்பில்லை' (Prophets are not honoured in their own country) என்ற மூதுரைப்படி, 1956-இல் கால்டரின் 'இந்திய வரிச் சீர்திருத்த அறிக்கை'யில் செலவீட்டு வரியை விதிக்கலாம் என்ற யோசனை, இந்திய அரசினல் அங்கீகரிக்கப்பட்டு, உலகிலேயே முதன்முதலாக, அதாவது 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் செலவீட்டு வரி அமுலுக்கு வந்தது.

செலவீட்டு வரியின் காரண விளக்கம் (Rationale of Expenditure tax):- கால்டர் தமது 'செலவீட்டு வரி' என்ற புத்தகத்தில், வருமானத்தின்மீது வரிவிதிப்பதைவிடச் செலவுகளின்மீது வரி விதிப்பதிலுள்ள நன்மைகளை எடுத்துக் காட்டியுள்ளார். தற்போதுள்ள கூடுதல்வரிக்குப் பதிலாக வளர்வீதச் செலவீட்டு வரியை விதிக்கலாமென அவர் வாதிக்கும்போது வருமான வரி விதிப்பிலுள்ள பெரும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகிறார். செல வீட்டு வரி, சேமிப்பை ஊக்குவிக்கும் என்பது மில் (Mill), பிகு (Pigou), ஃபிஷர் (Fisher) போன்றவர்களின் வாதமாகும். வருமான வரியை விட, செலவீட்டு வரி நியாயமானது எனக் கால்டர் கருதுகிறார். செலவீட்டு வரி பற்றிய நியாய வாதத்தை முதலில் காண்போம்.

புதிதாகத் தோன்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைத் தடுக்க அரசு வரி விதிக்க வேண்டியது அவசியம் என்ற அரசியல் காரணத்துடன் கால்டர் தொடங்குகிறார். வளர்வீத வருமான வரி விதிப்பின் விளைவாக அடைந்துள்ள மறுபங்கீடு (Redistribution.) நியாயமற்றதென்பது யாவரும் அறிந்ததே. வருமான வரி செலுத்தும் திறமைக்கு அளவுகோலாகவுள்ளது என்ற கருத்திலுள்ள அடிப்படை குறைபாடுகளே, இவ்வநீதிகளுக்குக் காரணமாகும். வருமானத்தைப் பற்றிய எவ்வித விளக்கவுரையும், செலவழிக்கும் திறனின் உண்மையான அளவுகோலாகாது என்று கால்டர் எடுத்துக் கூறுகிறார். தற்போதுள்ள, பெருகும் வருமானத்தை (Accrued income) அடிப்படையாகக் கொண்ட வரி விதிப்பு, முதலினை (Capital) வைத்திருப்பவர்கள் அடையும் மறுக்க முடியாத நன்மைகளைக் கணக்கில் கொள்வதில்லை. இலட்சாதிபதி ஒருவன் தான் வைத்துவிட்டுப் போகும் தொகையில் ஒரு மாறுதலும் செய்யாமல், அவனது நிகர வருமானத்தைவிட இரண்டு அல்லது மூன்று பங்கு வருமானமுள்ள நிலையில் வாழ்க்கையை நடத்தலாம் என்பதுதான் மரண வரிகளின் உயர்ந்த நிலைப்பாட்டின் பொருளாகும். சொத்து அல்லது வருமானத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைவிட, நுகர்வில் (Consumption) உள்ள ஏற்றத்தாழ்வு களே, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் பற்றித் தீர்மானிக்க உதவுகின்றன என்று கால்டர் எடுத்துக் கூறினார். இங்கிருந்து செலவீட்டு வரிக்குச் செல்லும் வழியின் நியாயத்தை நாம் தெளி வாக அறிந்து கொள்ளுகிறோம். செலவு வீதத்தை வரிவிதிப்பின் அடிப்படை எனக் கொள்வோம். சுருங்கக் கூறின் செலவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், நாட்டின் முதலீட்டுச் சாதனங்களை வீணுக்காமல் இருப்பதற்கும் செலவுகளை வரிக்கு இலக்காக்குவதே சரியான வழி எனக் கால்டர் முடிவு செய்தார். இதுவே நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட விவாதமாகும்.

பொருளாதார விவாதங்களும், பொதுநல விவாதங்களும் உள. உயர்வீத வருமான வரி சேமிப்புக்கு எதிர்ப்பாகவும், செலவுக்கு ஆதரவளிப்பதாகவும் இருப்பதாகவும், செலவீட்டு வரி, சேமிப்பை ஆதரித்துத் தனிப்பட்டோரின் செலவுகளைக் குறைப்பதாகவும் கூறப்படும் விவாதம் செலவீட்டு வரியை ஆதரிக்கும் இரண்டாவது முக்கிய விவாதமாகும். உயர்வீத வருமான வரிவிதிப்பு, செல்வந் தர்களைச் சேமிப்பதிலிருந்து தவிர்த்துக் கையிலுள்ள முதலிலிருந்து (Capital) அதிக அளவு செலவிடத் தூண்டியுள்ளது எனக் கால்டர் கூறுகிறார்

வருமான வரியைவிட செலவீட்டு வரியே அதிக அளவு ஆபத்து ஏற்பை (Risk bearing) ஊக்குவிக்கும் என்பது அவ் வரிக்கு

ஆதாரமான மூன்றுவது விவாதமாகும். மிக்க உச்சவீதத்தில் வருமான வரி விதிப்பு ஆபத்து ஏற்பினுல் கிடைக்கும் இலாபத்தைக் குறைத்து விடுகிறது. ஆதலால், ஆபத்தை ஏற்பதற்கு முதலீடு செய்யும் வகுப்பினர் முன்வரத் தயங்குகின்றனர். இதைப் பின் பற்றியே கால்டரும், செலவீட்டு வரி வேலை செய்யத் தூண்டும் என்று கூறுகிறார். செலவீட்டு வரியின் கீழ், ஒருவன் அதிக அளவு சேமிக்க விரும்புகிறான். இதனுல் சேமிப்புகள் தொழிலுக்குப் பெருமளவில் உதவுகின்றன.

செலவீட்டு வரி, நடைமுறைக்கு ஒத்துவராது எனவும், அதை நிருவகிப்பதில் பெரும் கஷ்டங்கள் இருக்குமெனவும், பல பொருளாதார நிபுணர்கள் கருதினர். பேராசிரியர் பிகு (Pigou), மார்ஷல், கீன்ஸ் (Keynes), ஹிக்ஸ், மஸ்கிரேவ் (Musgrave) போன்றவர்கள் செலவீட்டு வரி கோட்பாட்டளவில் உயர்ந்ததே தவிர, நடைமுறையில் அது வெற்றியடையுமா என்பதைப்பற்றி ஐயம் கொண்டனர். வருமான வரியின் உயர்ந்த மட்டத்தில் அதற்குப் பதிலாகச் செலவீட்டு வரியைப் புகுத்துவதில் உள்ள அனுபவ ரீதியான கஷ்டங்களைப் பற்றிக் கால்டர் எடுத்துக் காட்டியதை அவர்கள் உணர்ந்ததே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

வரி செலுத்தும் ஒவ்வொருவரும் தமது செலவினங்களைப் பற்றிச் சரியான கணக்கு வைத்திருக்கமாட்டார்கள் என்பது செலவீட்டு வரிக்கு எதிர்ப்பாகும். ஆனுல், தனிப்பட்டோரின் செலவின அறிக்கைகள் அவசியமில்லை எனக் கால்டர் கூறினுர். அவரது கருத்துப்படி செலவினங்களைக் குறிப்பிட்ட சில வரவினங்களுக்கும், செலவினங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கொண்டு கணக்கிடலாம் என்பதாகும். அவரது சூத்திரம் (Formula) பின்வருமாறு:-

செலவு = [(ஆண்டின் தொடக்கத்திலுள்ள ரொக்கப் பணம், பாங்கிலுள்ள இருப்புகள் + பரிசுகள், பந்தயமூலம் கிடைக்கும் இலாபங்கள், பரம்பரைச் சொத்துகள் முதலானவற்றிலிருந்து பெறும் வரவுகள் + கடன் தொகைகள் + முதலீட்டிலிருந்து பெறும் இலாபங்கள்) — (கொடுக்கப்பட்ட கடன்கள் + முதலீட்டிலிருந்து பெறும் இலாபங்கள் + ஆண்டின் இறுதியிலுள்ள ரொக்கமும், பாங்கு இருப்புகளும்)].

ஒரு வரிஅறிக்கை எவ்வாறிருக்குமென நோக்கினுல், இவ் வரி மதிப்பீட்டு முறையைப்பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம். வரிஅறிக்கையைக் கீழே காணலாம் :—

1. ஆண்டுத் தொடக்கத்திலுள்ள ரொக்கமும், பாங்கிலுள்ள இருப்புகளும் =

2. கூலி, சம்பளம், வியாபாரமூலம் பெறும் வருவாய், வட்டி, இலாபப் பங்கீடு, மற்றும் தற்போதுள்ள வருமான வரிக்கு இலக்காகும் வருமானங்கள், பரிசுகள், பரப்பரைச் சொத்து வரவுகள், பந்தயமூலம் பெறும் வருவாய் முதலியன. =

3. கடனுக வாங்கப்பட்ட தொகை அல்லது பிறருக்குக் கொடுத்த கடன் திருப்பித் தரப்பட்ட போது வந்த பணம். =

4. முதலீடுகளை (வீடு உட்பட) விற்பதால் கிடைக்கும் இலாபங்கள் =

மொத்த வரவு =

இதிலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கழித்து,

5. கடன் கொடுக்கப்பட்ட தொகை அல்லது ஏற்கெனவே வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் போது செலுத்திய தொகை. =

6. முதலீடுகளை (வீடு உட்பட) வாங்குதல் =

7. ஆண்டின் இறுதியிலுள்ள ரொக்கமும், பாங்கு இருப்புகளும் =

மொத்தச் செலவினம் =

இதிலிருந்து பின்வரும் செலவினங்களைக் கழித்து.

8. விலக்கப்பட்ட செலவுகள் =

9. நீண்ட நாள் உழைக்கும் பொருள்களின் மீது செலவினங்களைப் பெருக்குவதற்காகக் கொடுக்கப்படும் படிகள் (Allowances). =

இத்துடன்,

10. முந்தைய வருடங்களில் நீண்டநாள் உழைக்கும் பொருள்களின்மீது செல வழித்த தொகையின் ஒரு பகுதி, ஆனல் நிகழும் ஆண்டில் வரிக்குட்பட்ட பகுதி } =

வரிக்கு இலக்காகும் செலவினங்கள் =

ஆதலால், உச்சநிலை வருவாய் உள்ளவர்களில் குறிப்பிட்ட சிலரை மட்டும் பாதிக்கும் வகையில், வருமான வரியுடன் கூடவே செலவீட்டு வரியையும் புகுத்தி எச்சரிக்கையுடன் தொடங்க வேண்டு மெனக் கால்டர் கூறினர். கூடுதல்வரி செலுத்துவோர்மீது செலவீட்டு வரியையும் விதிப்பதால், வளர்வீத வரி விதிப்பிலுள்ள (Progressivc Taxation) அநீதிகளையும் (inequities,), மந்த நிலையையும் (disincentives) தவிர்க்கலாம் எனக் கால்டர் நம்பினர்.

6.4 இந்தியாவில் செலவீட்டு வரி பற்றிக் கால்டரின் கருத்து (Kaldor on Expenditure Tax in India) :— கால்டர் தமது இந்திய வரிச்சீர்திருத்த அறிக்கையில், செல்வ வரி, குறைந்த இறுதிநிலைவீத வருமான வரி (lower marginal rate of tax on incomes) இவற்றோடு செலவீட்டு வரியையும் விதிக்கலாம் எனக் கூறினர். நியாயம், பொருளாதார விளைவுகள், நிருவாகத் திறமை இவைகளை அடிப்படை யாகக் கொண்டு, செலவீட்டு வரி விதிப்புக்குக் கால்டர் ஆதரவளித் தார். கால்டர், 'செலவீட்டு வரி' என்ற அவரது புத்தகத்தில், இதைப் பற்றிய கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

இந்தியாவில் செலவீட்டு வரிக்கு எதிராக என்னென்ன முக்கிய மான விவாதங்கள் இருக்குமென்பதைக் கால்டர் கணக்கெடுத்தார். அவை பின்வருமாறு :—

1. உச்சநிலையில் வருமான வரி செலுத்துவோருக்கு மட்டுமே, செலவீட்டு வரியை விதிப்பது நடை முறையில் இயலாத காரியமாத லால், இவ் வரியினுல் வரிவிதிப்பு முழுவதும் கடுமையானதாக ஆகிவிடும்.

2. வருமான வரிக்குப் பதிலாகச் செலவீட்டு வரியை விதிக்கலா மென்றுல் சேமிப்புக்கு வரிவிலக்கு எனப் பொருள்படும். இதன் விளைவாகச் செல்வந்தர்கள் மேன்மேலும் பணம் சேர்த்து சொத்துகளைச் சேகரிக்க முயற்சிசெய்வார்கள். சொத்துகளைச் சேகரிக் கும் முயற்சிக்கு எதிராகச் சொத்து வரி விதிக்கப்பட்டால், அதன்

விளைவாகச் சேமிப்பை ஊக்குவிக்கும் செலவீட்டுவரியின் நன்மைகள் இல்லாமற் போய் விடும்.

3. வருமான வரியைவிடச் செலவீட்டு வரியை நிருவகிப்பதில் அதிக கஷ்டங்கள் உள.

4. விவசாய வருமானத்திலிருந்து செய்யப்படும் செலவினங் களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டியிருப்பதால், செலவினங் களில் பெரும் பகுதியை, விவசாய வருமானத்திலிருந்தே செலவழித்த தாகக் கணக்கில் காட்டும்படி மக்களைத் தூண்டி விடும்.

மேற்கூறிய எதிர்ப்புகளைப் பரிசீலித்த கால்டர், அவை அவ்வளவு முக்கியமானவையல்ல என்று ஒதுக்கி விட்டார். முதல் எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, வருமான வரிவிதிப்பின் இறுதி நிலை வரி வீதத்தை 45% எனக் குறைத்து, தனிப்பட்டோரின் வருமானத்தின்மீது விதிக்கப்படும் கூடுதல்வரிக்குப் பதிலாகத் தனிப் பட்டோர் செலவீட்டு வரியை விதிக்கலாமென அவர் சிபாரிசு செய்தார்.

இரண்டாவது எதிர்ப்பைப் பொறுத்தவரை இருவகை வரிகளை யும் சேர்ப்பதால் அவற்றின் நல்விளைவுகள் பாதிக்கப்படுவதில்லை. அதன் விளைவாகச் செல்வந்தர்களின் வாழ்க்கைத் தரம் ஓர் எல்லைக்குமேல் போகாமல் தடுக்கப்படுகிறது. இதனால் சொத்து களின் நியாயமான பங்கீட்டு முறைக் கொள்கையும் பாதிக்கப்படுவ தில்லை.[1]

மேலும் செலவீட்டு வரியை நிருவகிப்பதிலுள்ள கஷ்டங்கள் நெருங்கிய தொடர்பற்றவை எனவும் கால்டர் கூறினார். ஏனெனில் செல்வ வரி, வருமான வரி இவற்றோடு சேர்த்துச் செலவீட்டு வரியை யும் புகுத்துவதால் பொதுவாக வரி ஏய்ப்புகள் பெருமளவில் தவிர்க்கப்படலாம் என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

விவசாய வருமானத்தைப் பற்றிப் பார்க்கும் போது, செலவீட்டு வரியை மத்திய அரசுக்கோ மாநில அரசுகளுக்கோ என தனிப்பட்ட ஒரு சட்டத்தின்மூலம் ஒதுக்கும் வரை, அவ் வரி மத்திய அரசுக்கே உரிமையானது என்று கொள்ள வேண்டும்.[2] ஆகவே விவசாய வருமானத்திலிருந்து செலவழிக்கப்படும் தொகைக்கு விலக்கு உண்டா என்ற கேள்விக்கு இடமே இல்லை.

1. N. Kalder—Indian Tax Reform, 1956, p. 40
2. Under iem 97 of list I of the 7th Schedule of the constitution.

இந்தியப் பொருளாதாரத்தில், சேமிப்பை உடனே தூண்டிவிட வேண்டியதன் அவசியத்தைக் கால்டர் வற்புறுத்திக் கூறினார். தற்போதுள்ள கூடுதல்வரிக்குப் பதில் செலவீட்டு வரி விதிக்கப் பட்டால் சேமிப்புகள் அதிகரிக்கும் என்பது அவர் விவாதமாகும். இந்தியாவில், செல்வந்தர்கள் பெருமளவில் சேமிப்பிலிருந்து செலவழிப்பார்கள் எனவும் கால்டர் ஊகித்தார்.

'துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் மாதிரி ஆராய்ச்சியின் அடிப் படையில்கூட, உச்ச வருவாய் உள்ள பிரிவினரின் நுகர்ச்சிச் செல வீடு பற்றிய புள்ளிவிவரங்கள் கிடையா' ('There are unfortunately no statistics available in India, even on a sample survey basis of the consumption expenditure of the top income group') எனக் கால்டர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவில் மேல்வகுப் பினரின் (upper classes) செலவு, ஆண்டொன்றுக்கு ரூ. 500 கோடி களுக்கு மேல் ஆகும் என்று சிலர் மதிப்பிட்டிருப்பதாக அவ்வறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இத் தொகை, ஆண்டொன்றுக்கு ரூ. 10,000-க்குமேல் வருமானமுடையவர்கள், வருமான வரி செலுத் தியது போக, மீதமிருந்த நிகரவருவாயின் மொத்தத்தைவிட அதிக மாக இருந்தது. வருமானவரி செலுத்த வேண்டியவர்கள், அதாவது ஆண்டொன்றுக்கு ரூ. 10,000-க்குமேல் வருவாயையுடையவர்கள் 1,14,000 பேர்கள் எனவும், அவர்களது மொத்த வருவாய் சுமார் ரூ. 263 கோடிகளெனவும், இதிலிருந்து வருமானவரித் தொகையைக் கழித்து விட்டால் மீதமுள்ள நிகரவருமானத்தை ரூ. 200 கோடி களெனக் கொள்ளலாம் எனவும் கால்டரின் அறிக்கையில் காணப் பட்டது. இதிலிருந்து இந்தியாவில் செல்வந்தர்கள் ஆண்டொன் றுக்கு ரூ. 300 கோடிகளுக்கு மேல் சேமிப்பிலிருந்து எடுத்துச் செலவழிக்கிறார்கள் என அறியலாம்.

தனிப்பட்டோர் நுகர்வுக்காக (Personal Consumption) வைக்கப்படும் தொகையே செலவீட்டு வரியின் அடிப்படையாக இருக்கவேண்டுமெனக் கால்டர் கூறினார். இதில் வரி செலுத்துவோர் தங்களுக்காகச் செலவழிக்கும் தொகையோடு, பிறரிடமிருந்து பெற்ற பரிசு முதலியவைகளும், வேலைகொடுத்த முதலாளி, உறவினர், நண்பர் இவர்களால் வரி செலுத்துவோருக்காகச் செய்யப்பட்ட செலவினங்களும் சேரும். ஆனால், இத்தகைய இனங்களுக்கு ஆண்டொன்று ரூ. 2000 வரை வரிவிலக்கு அளிக்கப்படவேண்டும். வரிசெலுத்துவோர் தாம் குடியிருப்பதற்காக வீடு வாங்கும் செலவு, ரூ. 10,000-க்கு மேற்படாத நகைகள், கடனைத் திருப்பிக் கொடுக்க ஆகும் செலவு, முதலீட்டுச் செலவு, கடன்கள் இவையும், பிறப்பு, இறப்பின்போது ஆகும் செலவும், குறிப்பிட்ட அளவுக்குத் தலா

மருத்துவச் செலவும், வெள்ளம், திருட்டு இவற்றால் ஏற்பட்ட நீமைகளைச் சமாளிக்க ஆன செலவுகளும் இவ் வரியின்கீழ் வாராதெனவும் கால்டர் கூறினர்.

அதிக அளவு செலவைத் தவிர்க்க, ஒவ்வொருவரது செலவினைப் பொறுத்து வரிவீதம் மாறவேண்டும் என்றார் கால்டர். வயது வந்தவர் (adult) ஒவ்வொருவரும் வருடத்திற்கு ரூ. 10 000-க்கு மேல் செலவழித்தால், இவ் வரியால் பாதிக்கப்படுவார். அதாவது வரிவீதம் 25%-லிருந்து 300% வரை மாறுபடும். ரூ. 50,000-க்குமேல் செலவழிப்பவருக்கு 300% செலவீட்டு வரி விதிக்கப்படும்.

6.5. இந்தியாவில் செலவீட்டு வரி (Expenditure Tax in India) : கால்டரின் யோசனைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. 1957—'58ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இவ்வரி புகுத்தப் பட்டது. 1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இவ் வரி அமுலுக்கு வந்தது. அநாவசியச் செலவினங்களைக் குறைப்பதே இவ் வரியின் அடிப்படை நோக்கமாகும். சேமிப்பைத் தூண்டுவதும் இதன் நோக்கமாகும். முதன்முதலில் இவ் வரி புகுத்தப்பட்டபோது, இதன் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்பட வில்லை. போதுமான அளவு வருவாய் தொடக்கத்தில் எதிர்பார்க்கப் படவில்லை. 6,000 பேர்கள்தாம் இவ் வரிக்கு இலக்காவார்கள் என மதிப்பிடப்பட்டது.

வரியிலிருந்து விலக்கு :— வரி செலுத்துவோரின் சொந்தச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 30,000-க்கு மேற்படாவிட்டால் வரி இல்லை. வரி செலுத்துவோர் இந்துக் கூட்டுக்குடும்பத்தினைச் சார்ந்தவராக இருந்தால் இவ்வெல்லை ரூ. 60,000 ஆக்கப்பட்டது. பிற வரிக்கான செலவு, வழக்குகளுக்கான செலவு இவையும் விலக்கப் பட்டன. வரி செலுத்துவோர் தமக்காகவோ, தாம் காப்பாற்ற வேண்டியவருக்கோ செய்யும் மருத்துவச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 5,000-க்கு மேற்பட்டால் வரி செலுத்தவேண்டும். பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய செலவுக்கு ரூ. 4,000 வரை வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வரி செலுத்துவோர், தமது குழந்தைகளை வளர்த்து ஆளாக்கியபின், அயல்நாட்டுப் படிப்பிற்காக ரூ. 8,000 வரை செலவுக்கு வரி செலுத்த வேண்டாம். பல வருடங்களுக்கு உதவும் பொருள்களை வாங்கச் செலவழித்த தொகையில் $\frac{4}{5}$ பாகத்திற்கு வரி விலக்குத் தரப்பட்டது.

வரிவீதங்கள் (Tax Rates) :- பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செலவீட்டு வரிவீதங்கள் 10%-லிருந்து 100% வரை வளர்வீதத்தில் விதிக்கப்பட்டன. அவை பின்வருமாறு :-

1.	மொத்தச் செலவு ரூ. 10,000-க்கு உட்பட்டால்	10%
2.	ரூ. 10,000-க்கு மேல், ரூ. 20,000-க்குள் செலவு	20%
3.	செலவு ரூ. 20,000-க்குமேல், ஆனல் ரூ. 30,000-க்குள்	40%
4.	செலவு ரூ 30,000-க்குமேல், ஆனல் ரூ. 40,000-க்குள்	60%
5.	செலவு ரூ. 40,000-க்குமேல், ஆனல் ரூ. 50,000-க்குள்	80%
6.	செலவு ரூ. 50,000-க்கு மேல்	100%

6.6. இந்தியாவில் செலவீட்டு வரிவிதிப்பு (An assessment of Expenditure Tax in India) :- இந்தியாதான் செலவீட்டு வரியைப் புகுத்திய முதல் நாடாகும் என்பது பெருமைக்குரியதாகும். ஆனல், 1958-'59ஆம் ஆண்டில் இந்தியாவில் விதிக்கப்பட்ட செலவீட்டு வரி கால்டரின் பரிந்துரைப்படி செலவீட்டுத் திட்டத்தின் அடிப்படையிலிருந்து வேறுபட்டதாகும்.

ரூபாய்க்கு 7 அணு வருமான வரியாகக் கொடுக்கவேண்டிய பிரிவைச் (Slab) சேர்ந்த வருமானத்தையுடையவர் செலுத்தும் மேல்வரிக்குப் பதிலாகச் செலவீட்டு வரி விதிக்கப்படவேண்டுமெனக் கால்டர் கூறினர். ஆகவே, இறுதிநிலே வீதத்தை (Marginal Rate of Income Tax) 45% ஆகக் குறைக்க வேண்டுமென்பது அவரது முதல் விருப்பமாகும். 1957-'58ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் தனிப்பட்டோர் வருமான வரி, அதற்கான மேல்வரி (Super Tax) இரண்டும் விதிக்கப்பட்டன. அவற்றின் மட்டம் (level) உழைத்து ஈட்டாத வருவாய்க்கு 84% ஆகவும், உழைத்து ஈட்டிய வருவாய்க்கு 77% ஆகவும் குறைக்கப்பட்டது. கால்டர் யோசனேயோடு ஒப்பிட்டால், இக் குறைப்பு மிகச் சொற்பமேயாகும்.

செலவீட்டு வரி வீதங்கள் 25%லிருந்து 300% வரை வளர்வீதமாக இருக்கவேண்டுமெனக் கால்டர் கூறினர். ஆனல், அது 100% வரை விதிக்கப்பட்டது. கால்டரின் திட்டத்தில் காணப்பட்டதைவிட, அதிக அளவில் செலவுகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

செலவீட்டு வரியைப் பலர் குறை கூறினர். 1962ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், நிதியமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் செலவீட்டு வரியை எடுத்துவிட்டார். 1964-இல் இவ் வரி திரும்பவும் விதிக்கப்பட்டது. ஆனல், 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இவ் வரி முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. இவ் வரியைச் சேகரிப்பதற்காக நிருவாகத்திற்குச் செலவழிக்கப்படும் செலவு, நேரம் இவற்றின் பளு, இவ் வரி ஈட்டும் வருவாய்க்கு ஏற்றதாக இல்லே எனக் காரணம் காட்டப்பட்டது. வரி செலுத்துவோரும் இவ் வரியைச் செலுத்துவதில் பல அசௌகரியங்களே (inconvenience) அனுபவித்தனர். எனவே இவ் வரி ஒரு ''தொந்தரவு கொடுக்கும்' வரி' (nuisance tax) என அழைக்கப்பட்டது.

7. பொதுப் பரிசு வரி

(A General Gift Tax)

7.1. மரணவரிக்குத் துணையாகப் பரிசு வரி (Gift Tax as an auxiliary of Death Duty) :- பரிசு வரி, மரண வரிக்குத் துணைவரியாகும். பரிசு என்ற வார்த்தைக்குச் சமீப காலமாக விரிவான பொருள் கூறப்படுவதால், மரணவரியை முற்றிலும் நீக்கிவிட்டு, அந்த இடத்தைப் பரிசு வரியே ஆக்கிரமித்துக் கொள்ளும் என்ற பயம் ஏற்பட்டுள்ளது.

தனிநபருக்குச் செல்வம் மேன்மேலும் பெருகுவது, முதலாளித்துவ வாணிகத்தின் (Capitalist enterprise) தவிர்க்க முடியாத விளைவாகும். இறப்பின்போது பிறருக்கு மாற்றப்படும் சொத்துகளின் மீது வரி விதிக்கும் பழக்கம், வரலாற்றில் புதுமையானதன்று. சொத்துரிமையும், வாரிசு உரிமையும் மனிதனோடு பிறந்த உரிமைகளல்ல. இவ்வுரிமைகள் நாட்டினால் உண்டாக்கப்பட்டு, உத்தரவாதமளிக்கப்பட்டனவாகும். இறப்பின்போது கைமாறும் சொத்துரிமையை நாடு ஒப்புக் கொள்ளுவதே மரண வரியாகும். இறப்பின்போது சொத்துகள் கைமாறும்போது, செலுத்தும் திறமையும் கைமாறுகிறது என்ற கொள்கையின் அடிப்படையில் இவ் வரி நியாயமானதாகக் கருதப்படுகிறது. பரம்பரைச் சொத்தினைப் பெறுபவர், இதர வரிகளைச் செலுத்தும் திறமையிலிருந்து வேறுபட்ட, அரசாங்கத்திற்குச் செலுத்தும் திறமையைப் பெறுகிறார் என்பதை இக் கொள்கை உறுதிப்படுத்துகிறது. பெருமளவு இலாபத்தை நிலைநிறுத்தும் பிரச்சினையைச் சமாளிக்க, வரி விதிப்பினால், பரம்பரைச் சொத்தினைப் பெறும் உரிமையை ஓர் எல்லைக்குள் கொண்டு வருவதே பயனுள்ள வழியாகும்.

7.2. மரண வரியும், வருமான வரியும் (Death Duty and Income Tax):- செல்வத்திற்கும், வருவாய்க்குமிடையே பெருமளவில்

சம நிலையை உண்டாக்க, வருமான வரிக்கு உறுதுணையாக மரணவரி இக் காலத்தில் மதிப்பிடப்படுகிறது. சில ஆண்டுகளாக, மரணவரியையும், வருமான வரியையும் இணைத்து ஒரே வரியாக மாற்றலாம் என்ற எண்ணம் இருந்து வருகிறது. வரித் திட்டத்திலுள்ள இரட்டை வரி விதிப்பை நீக்க இது ஒரு வழியாகும். பரம்பரைச் சொத்துகளின்மீது நெடுநாள்களாகத் தனிப்பட்ட வரி விதிக்கப்பட்டதே தவிர, அவை வருமான வரிக்கு இலக்காகவில்லை. இதற்கு இரு காரணங்கள் உள. முதலாவதாக, இறப்பின் சூழ்நிலை ஒரு தனிப்பட்ட சந்தர்ப்பத்தை உண்டாக்குவதால், அதற்கென ஒரு தனிப்பட்ட வரியும் தேவைப்படுகிறது. இரண்டாவதாக, இவ் வகையில் கைவிடப்பட்ட சொத்துகள், ஒழுங்கற்ற வருமான வகையைச் சார்ந்தனவாக உள்ளன.

7.3. மரண வரியிலிருந்து தப்புதல் (Avoidance of Death Duty):- தப்பும் வழிகள், வருமானவரியில் எவ்வாறு பெரும் பிரச்சினையாக உள்ளனவோ அவ்வாறே மரணவரியிலும் உள்ளன. ஆண்டுக் காண்டு வரிவீதம் அதிகரித்துக் கொண்டே வருவதால், மரணவரியிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற விருப்பமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இறந்தவரிடமிருந்து, உயிரோடிருப்பவருக்கு மாற்றப்படும் சொத்தின்மீது விதிக்கப்படும் வரியே மரணவரியாகும். சொத்துகள் கைமாறுவது பணத்திற்காகவோ இலவசமாகவோ நடைபெறுகிறது. முன்னையது, வியாபார நடவடிக்கையாகும். பின்னையது வியாபார நடவடிக்கையாகாது. இது போன்ற திரும்பப் பெற முடியாத சொத்து மாற்றங்கள் கொடுப்பவர் உயிரோடிருக்கும்போதோ அவரது இறப்பின்போதோ நடைபெறுகின்றன. உயிரோடிருக்கும்போது சொத்து, பிறருக்குக் கொடுக்கப்பட்டால் அது பரிசு எனப்படுகிறது. இறப்பின்போது செய்யப்பட்டால், அது சாசனத்தின்மூலம் செய்யப்பட்ட மாற்றம் எனப்படுகிறது.

மரணவரியிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற அளவுக்குமீறிய ஆசை உடையவர்களுக்கு அச் செய்கை எளிதாகவே இருந்தது. இறப்பை எதிர்நோக்கும் மக்கள், நேரிடையாகவோ பிறரது நிருவாகத்தின்கீழோ (Trusts) தமது சொத்துகளைப் பரிசாகக் கொடுத்துவிடலாம். இவ் வகையில், கொடுப்பவரின் சொத்துகள், அவர் இறக்கு முன்னரே, கணிசமான அளவுக்குக் குறைக்கப்படலாம்.

சாதாரணமாகப் பரிசுகளை நான்கு வகைப்படுத்தலாம். (1) உயிரோடிருப்பவர் ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும்

[1] H. M. Grooves :— Post-War Taxation and Economic Position, 1946, p. 262.

பரிசு, (2) இறப்பினை எதிர்நோக்கித் திட்டமிட்டு வைக்கப்பட்ட பரிசு (3) இறப்பின்போதோ இறப்பிற்குப் பிறகோ நடை பெறும் பரிசளிப்பு (4) மரணப் படுக்கையில் பிறருக்கு அளிக்கப் படும் பரிசு.

இறப்பினை எதிர்நோக்கித் திட்டமிட்டு வைக்கப்பட்ட பரிசினை, ஏறக்குறைய எல்லா மரணவரிச் சட்டங்களும் மரணவரியின் அடிப் படையில் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டுள்ளன. அநேக மரண வரிச் சட்டங்கள் இதற்கென சட்டபூர்வமான காலவரையறை யொன்றினை ஏற்படுத்தி, அதற்குள்ளாக அச் சொத்துகள் இறப்பினை எதிர்நோக்கித் திட்டமிடப்பட்டுப் பரிசளிக்கப்பட்டிருப்பதால், அவைகளை மரண வரிக்கு இலக்காக்கலாம் என்று கூறின. இறக்கும் போதோ இறப்பிற்குப்பிறகோ அளிக்கப்படும் பரிசுகள், பிறரது நிருவாகத்தின் கீழ் (Trusts) வைக்கப்பட்ட சொத்துகளாகவே உள்ளன. பெரும்பான்மையான மரணவரிச் சட்டங்கள் இவ் வகைப் பரிசுகளை வரிக்கு இலக்காக்குகின்றன.

மரணப்படுக்கையில் அளிக்கப்படும் பரிசு, வாயால் சொல்லப் படும் உயிலின்படி பங்கிடப்படுவதால், அதற்கு மரணவரி விதிப்பதில் நியாயமிருக்கிறது.

இவ்வித இறப்பின்போது கைமாறும் சொத்துகளும், இதர மூன்று வகைப் பரிசுகளும் மரணவரிக்கு இலக்காகின்றன. உயிரோ டிருப்பவர் ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் பரிசு மரணவரியி லிருந்து தப்புகிறது. ஆகவே, உயிரோடிருக்கும்போதே முடிந்த வரை பிறருக்குத் தம் சொத்துகளைப் பரிசாகக் கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே தோன்றுவது இயற்கை. தான் சேர்த்து வைத்த சொத்துகளைத் தன் இறப்புக்குப்பின் தனது குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரே விருப்பத்தை யுடைய ஒருவரிடம் தான் இத்தகைய எண்ணம் உண்டாகிறது.

''50,000 பவுனுக்குமேல் மதிப்புள்ள சொத்துகளை உடைய மக்கள் குறைந்தபட்சம் அதில் கால்பங்கைத் தம்முடைய வாரிசு தாரர்களுக்கும், மற்றவருக்கும், தாம் உயிரோடிருக்கும்போதே கொடுத்து விடுகிறார்கள்'' என்பது திரு. ஜோஸியா வெட்ஜ்வுட்டின் கூகமாகும் (''On the average, persons with large estates of say, over £50,000 give away to heirs and others during their life time not less than a quarter of their property)[1]''. ஆகவே, இன்று இதன் அளவு அதிகமாக இருக்கும் என்று நம்புவதற்குத் தக்க காரணம் உள்ளது.

[1] J. Wedgewood :— The Economics of Inheritance 1929, p. 211.

'மேன்மேலும் தந்தையின் சொத்துகள் தந்தையின் இறப்புக்கு முன்னரே மகனுக்குக் கொடுக்கப்பட்டு விடுவதால், பெருமளவு சொத்துகளின் மீது தற்காலத்தில் விதிக்கப்பட்டுள்ள அதிக வீத மரண வரியானது, சொத்துடைமையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை நாளடைவில் குறைக்கச் சரிவரச் செயல்படாது' என்பது மீடு (Meade) என்பவரின் கருத்தாகும் ('Death duties at their present extremely high rates on large properties are likely to become less effective in diministing the inequalities of the ownership of property, since more and more property will be passed from father to son before the death of the father')[2].

7.4 பரிசு வரி (Gift Tax) :— இத்தகைய காரணங்களுக்காகவே, சில ஆண்டுகளாகப் பரிசு வரியைக் கொண்டு வர வேண்டும் என்ற நிலை உண்டாகி இருக்கிறது. அதாவது இறப்பினை எதிர்நோக்கிச் செய்யப்படும் பரிசளிப்புகள் நீங்கலாக, உயிரோடிருக்கும்போதே ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் பரிசுகள் இவ் வரிக்கு இலக்காக வேண்டும். பரிசு வரி என்பது மரண வரியிலுள்ள ஒரு பெரும் குறையை நிவர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். பரிசுக்கும் ஓர் உறவினரால் அளிக்கப்படும் பாதுகாப்புக்குமிடையே வேறுபாடு காணும்போது சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. 'பாதுகாப்பு' (Support) அல்லது 'அடையாளப் பரிசுகள்' (Token gifts) மேல், வரி விதிப்பது, பரிசு வரியின் வேலையன்று. இத்தகைய சொத்து மாற்றங்களை இவ் வரி பாதிப்பதிலிருந்து வரி செலுத்துவோரை இவ் விலக்குகள் பாதுகாக்கின்றன. உயிரோடிருக்கும்போதே சொத்துகள் பெருமளவில் பரிசளிப்பு மூலமாகக் கைமாறுகின்றன என்பதனாலேயே பரிசு வரி கொண்டு வரப்பட்டது. மரண வரிக்கு உறுதுணையாக இருப்பதே பரிசு வரியின் முக்கிய வேலையாகும்.

மரண வரி வழக்கத்திலிருந்து வரும் பல நாடுகளில், சில காலத்திற்குப் பிறகு இறப்பதற்கு முன்னரே தமது சொத்துகளைப் பிறருக்குப் பரிசாகக் கொடுத்து விடலாம் என்ற எண்ணம் மக்களிடையே உண்டாகாமல் தடுக்க, திட்டமான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்ற வரிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது 1924 ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பரிசு வரி சமீபத்தில் வந்த வரியாகும். ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து முதலிய நாடுகளில் பரிசு வரி நடைமுறையிலுள்ளது. ஆனால், இங்கிலாந்து, பரிசு வரியை அவ்வளவு முக்கியமாகக் கருதவில்லை.

2. J. Meade :— Planning and Price Mechanism, 1948, p. 36.

7.5 பரிசு வரியையும், மரண வரியையும் இணைத்தல் (Integration of Gift Tax and Death Duty):- பரிசு வரிச் சட்டமானது சரியான பாதையில் வைக்கப்பட்ட காலடியாக இருந்த போதிலும், இறப்பின்போது நடைபெறும் பரிசளிப்புகள், உயிரோடிருக்கும் போதுநடைபெறும் பரிசளிப்புகளிலிருந்து, அவ்வளவு அதிகமாக வேறுபடவில்லை என்பதை அது புரிந்து கொள்ளத் தவறி விட்டது. உண்மையில் பார்ப்போமானால், பரிசு வரி, மரண வரியிலிருந்து தப்புவதற்கெனக் கொடுக்கப்பட்ட அழைப்பிதழாக ஆகியுள்ளது. உயிருடனிருக்கும் போது நடைபெறும் பரிசளிப்புகளுக்குக் காட்டப்படும் சலுகையோடு கூடிய வரிமுறையினால், வரியிலிருந்து தப்புதலும் இதர நேர்மையற்ற செய்கைகளும் விளைகின்றன. பரிசு வரியும் மரண வரியும் இணைக்கப்படாமல் தனித்தனி வரிகளாக இருக்கும் வரை, இறப்புக்கு முன்னரே சொத்துகளைப் பரிசளித்து விடலாம் என்ற தீவிரமான ஆர்வம் நிலவிட வழியுண்டு. பல வழிகளில் சேமிப்புகள் செய்யப்படுகின்றன.

முதலாவதாக, பரிசு வரி வீதங்கள் குறைவாகவுள்ளன. இரண்டாவதாக, மரண வரியும், பரிசு வரியும் வெவ்வேறாக விதிக்கப்பட்டு, அதனால் சொத்தில் ஒரு பகுதி பரிசாக அளிக்கப்பட்டு விடுவதால், சொத்து இருவகையாகப் பிரிக்கப்பட்டு, முன்னேற்றம் தடைப்படுகிறது. மூன்றாவதாக, இதன் படிநிலை அதிகப்படியான ஒரு விலக்கினையும் (Exemption) அடைகிறோம். அக்கறையுடன் போடப்பட்ட எஸ்டேட் திட்டங்கள் மரண வரிப் பளுவைப் பெருமளவில் குறைக்க முடியும். லாவல் ஹாரிஸ் (Lowell Harris) எடுத்துக் காட்டியுள்ளபடி, வயது முதிர்ந்த பணக்காரர்களுக்கு, எஸ்டேட் வரிச் சுமையைக் குறைக்க வழிகளைக் கண்டு பிடிப்பதைவிட, வேறு சில வழிகள் அதிக நன்மை பயப்பனவாகவுள.[1]

மரண வரியையும், பரிசு வரியையும் வெவ்வேறாகக் கொண்டு, இரண்டுக்கும் வேறுபாடு காட்டுவதே தற்காலப் பழக்கமாகும். உயிரோடிருக்கும்போதே அளிக்கப்படும் பரிசுகளுக்கும், இறப்பின் போது கொடுக்கப்படும் பரிசுகளுக்கும் அடிப்படை வேறுபாடு எதுவுமில்லை என்பதை நாம் உணர வேண்டும். தானாகவே கைவிட்டுப் போகும் சொத்துகள், பரிசுகள் இவை இரண்டினாலும் ஏற்படும் பொருளாதார விளைவுகள் ஏறத்தாழ ஒன்றாகவே உள. இவ்விரு வகைச் சொத்துமாற்றங்களுக்கு இடையேயுள்ள அடிப்படை ஒற்றுமையை அறிந்து கொண்ட பின்னர், இவற்றை வரித்திட்டத் தின்கீழ் ஒரே மாதிரியாகவே நடத்த வேண்டியுள்ளது. எனவே,

[1] B. F. Haley (Ed.) "Public Finance"—A survey of contemporary Economics, 1952, p. 289.

பரிசு வரியையும், எஸ்டேட் வரியையும் ஒன்று சேர்த்துத் தனிப்பட்ட கைமாற்ற வரித்திட்டமாக ஆக்கலாம் என்று பலர் கூறுகிறார்கள்.

இணைப்புத் திட்டம் பின்வருமாறு இருக்கும் :-

1. இணைப்பு வரி மட்டம், தனிப்பட்ட இணைப்பு மட்டமாக இருக்கும். இம் மட்டம், கொடுப்பவர் தம் வாழ்நாளிலும், இறப்பின்போதும் செய்த சொத்து மாற்றங்களின் குவியலாகும்.

2. சேர்க்கப்பட்ட வரியின் அடிப்படைகளுக்கு ஏற்றவாறு, வளர்வீதத்தில் சரிக்கட்டப்பட்ட வீத அமைப்பின்கீழ் இத் திட்டம் வேலை செய்யும்.

3. இணைப்புவரியினுல் சேர்க்கப்பட்ட இருவரிகளுக்கும் ஒரே மாதிரியான விலக்குகளே அனுமதிக்கப்படும்.

இவ் வகை இணைப்பு, எஸ்டேட் வரியையும், பரிசு வரியையும் சரியான அடிப்படையில் மாற்றியமைக்க உதவுகிறது. தற்போதுள்ள குறைகளும் நீக்கப்பட்டு, இறப்புக்குமுன் பரிசளித்துவிட வேண்டு மென்ற செயற்கைத் தூண்டுதலும் நீக்கப் படலாம். இறுதியாக இவ் வரிகளிலிருந்து பெறும் வருவாயும், போதுமான அளவுக்குப் பெருகும்.

7.6 இந்தியாவில் எஸ்டேட் வரி (Estate Duty in India) :- 1953ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் எஸ்டேட் வரியின் உருவில் இந்தியாவில் மரண வரி புகுத்தப்பட்டது. மரண வரி எஸ்டேட் வரியாகவோ சொத்துப்பேறு வரியாகவோ (Inheritance Tax) உருவெடுக்கலாம். இறப்பின்போது கைமாறும் மொத்தச் சொத்துகளின் மீதும் விதிக்கப்படும் வரி எஸ்டேட் வரியாகும். எந்தெந்த வாரிசுகளுக்குச் சொத்தின் பங்கு எவ்வளவு சேருகிறது என்பதை இது கணக்கிலெடுப்பதில்லை. ஆனுல், சொத்துப்பேறு வரி, ஒவ்வொரு வாரிசுக்கும் கிடைத்த சொத்தின் மீது விதிக்கப்பட்ட வரியாகும். பொதுவாக, சொத்துப்பேறு வரியை விட அதிக வருவாயை ஈட்டித் தருவதும், எளிதில் நிருவகிக்கக் கூடியதும் எஸ்டேட் வரியேயாகும்.

இந்திய எஸ்டேட் வரி, இங்கிலாந்து எஸ்டேட் வரியை மாதிரி யாகக் கொண்டு அமைக்கப்பட்டது. வரியிலிருந்து தப்பும் வாய்ப் பினைக் குறைக்க, இந்திய எஸ்டேட் வரியில் வழிவகுக்கப்பட்டுள்ளது. சொத்துகளைக் கொடுக்கும் வகையில் வேறுபாடுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதாவது இந்திய எஸ்டேட் வரி இரு வகைப் பரிசுகளை வேறுபடுத்திக் காட்டுகிறது. (a) மரணப்படுக்கையில் அளிக்கப்

படும் பரிசுகள் (Gifts Mortis causa), (b) உயிரோடிருப்பவரிடையே நடைபெறும் பரிசளிப்பு (Gifts Interiwos) மரணப்படுக்கையில் நடைபெறும் பரிசளிப்புகள் எஸ்டேட் வரியிலிருந்து தப்ப முடியாது. உயிரோடிருப்பவர்களிடையே நடைபெறும் பரிசளிப்புகளைப் பொறுத்தவரை, இந்தியச் சட்டத்தின்கீழ் இருவகைப்பட்ட கால வரையறை நிருணயிக்கப்பட்டுள்ளன. ஒன்று, தருமத்திற்கென அளிக்கப்படும் பரிசுக்கெனவும், மற்றொன்று இதர பரிசுக்கெனவும் நிருணயிக்கப்பட்டதாகும். தருமப் பரிசுகளுக்கு 6 மாதக் காலவரையறையும், இதர பரிசுகளுக்கு 2 ஆண்டுகள் காலவரையறையும் வகுக்கப்பட்டது. 1958-59ஆம் ஆண்டு வரவுசெலவுதிட்டத்தில் ஈந்த இரண்டு ஆண்டுகள் 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது- இச் சட்டக் காலவரையறைக்குள் நடைபெற்ற பரிசளிப்புகள், இறப்பை எதிர்நோக்கிச் செய்யப்பட்ட பரிசளிப்புகளாகக் கருதப் பட்டு, வரிக்கு இலக்காகின்றன. அச் சமயத்தில் மற்றக் குடியரசு நாடுகளில் நிலவி வந்த முறைகளால் பாதிக்கப்பட்ட காரணத்தால், இந்திய அரசாங்கம் பரிசளிப்புக்கான காலவரையறையை 5 ஆண்டு களெனத் தீர்மானித்தது. அச் சமயத்தில் பிரிட்டிஷ் குடியரசு நாடு களில் இருந்த, உயிரோடிருப்பவரிடையே நடைபெறும் பரிசளிப்பு களுக்கான சட்டக் கால வரையறைகளைக் கீழே காணலாம்[1] :-

நாடு	தருமப்பரிசளிப்பு களுக்கான சட்டக்கால வரையறை	இதர பரிசளிப்பு களுக்கான சட்டக்கால வரையறை
இங்கிலாந்து	1 ஆண்டு	5 ஆண்டுகள்
ஆஸ்திரேலியா	முற்றிலும் விலக்கப் பட்டது	1 ஆண்டு
கனடா	முற்றிலும் விலக்கப் பட்டது	3 ஆண்டுகள்
சிலோன்	1 ஆண்டு	5 ஆண்டுகள்
நியூசிலாந்து	முற்றிலும் விலக்கப் பட்டது	3 ஆண்டுகள்
பாகிஸ்தான்	3 மாதங்கள்	1 ஆண்டு
தென் ஆப்பிரிக்கா	முற்றிலும் விலக்கப் பட்டது	5 ஆண்டுகள்

வெவ்வேறு நாடுகளில் நிலவிவரும் இக் காலவரையறையிலுள்ள வேறுபாடுகள், அந்தந்த நாடுகளின் விருப்பப்படி அவை அமைக்கப் பட்ட காரணத்தால்தான் காணப்படுகின்றன. இச் சட்டக் காலவரை யறைக்கு முன்பு நன்கொடையளிப்பதால் ஏற்படும் நன்மைகள்

[1] Source :—I. S. Gulati, Capital Taxation in a Developing Economy, 1957. p. 146.

காரணமாக, உயிரோடிருப்பவரிடையே நடைபெறும் பரிசளிப்பு களின் அளவும், எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. பல நாடுகளில் சில காலம் மரணவரி நடைமுறையிலிருந்து வந்தது. அதன் விளைவாக இறப்புக்கு முன்பே பரிசளிப்புகள் நடைபெற்றன. இதைத் தவிர்ப்பதற்காகச் சில அரசுகள், இறப்புக்குமுன் பரிசாகக் கொடுக்கப்பட்ட எஸ்டேட்டுகளின்மீது பரிசு வரி என்ற தனிவரியை விதிக்க முயற்சிகளை மேற்கொண்டன. ஆயினும், மரண வரியோடு பரிசு வரியைச் சேர்த்தாலொழிய, தனிப்பரிசு வரியினால், வரியிலிருந்து தப்புவதைத் தவிர்க்க முடியாது.

எஸ்டேட் வரி விதிக்கப்பட்ட போதும், அதன் பின் பல ஆண்டுகள் கழித்தும், இந்தியாவில் உயிரோடிருப்பவரிடையே நடைபெறும் பரிசளிப்புகளின்மீது வரிவிதிக்கப்படவில்லை. இதன் விளைவாக, குறிப்பிட்ட சட்டகாலவரையறைக்கு முன்பாகவே, உயிரோடிருக்கும் போது பரிசளிப்புகள் நடைபெற்று, வரி செலுத்த வேண்டிய வர்கள் பெருமளவில் வரியிலிருந்து தப்புவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

7.7 பரிசு வரி பற்றிய வரி விசாரணைக் குழு (Taxation Enquiry Commission on Gifts Tax) :- 1953-54ஆம் ஆண்டு வரி விசாரணைக் குழு, இந்தியாவில் பரிசு வரியை விதிக்க முடியும் என்றாலும் அதை விதிக்க வேண்டாம் எனத் தீர்மானித்தது. பரிசு வரி கவர்ச்சிகரமான தீர்மானமாக இருந்தபோதிலும், அவ் வரி விதிக்கப்படுமுன், எஸ்டேட்வரி செயற்படும் முறையை அனுபவ வாயிலாகக் கண்டறிய வேண்டுமென அக் குழு கருதியது.

இந்தியாவில் பரிசு வரிபற்றிக் கால்டரின் கருத்து (Kaldor on Gifts Tax for India):- கால்டர் தமது இந்திய வரிச்சீர்த்திருத்த அறிக்கையில் எஸ்டேட் வரிக்குப் பதிலாக, ஒரு பொதுவான பரிசு வரியை விதிக்கலாம் என்று சிபாரிசு செய்தார். ஒருவரிடமிருந்து மற்றொருவர் கைமாறிய, ரூ. 10,000-க்குமேல் மதிப்புள்ள எல்லா விதமான பரிசளிப்புக்களின்மீதும் இவ் வரி விதிக்கப்படலாம் என அவர் கூறினார். ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் பரிசு களுக்கும், சாசனமூலம் எழுதிவைக்கப்படும் பரிசுகளுக்கும் வேறுபாடு காட்டுவது நியாயமற்றது என்பது அவர் வாதமாகும். பரிசுகளைப் பெற்றவரே (பரிசுகளைக் கொடுத்தவரல்லர்) வரி செலுத்துபவராக வேண்டும் என்று அவர் மேலும் விவாதித்தார். இந் நிலையில், கால்டர், எஸ்டேட்வரிக்கும். வாரிசுரிமை வரி அல்லது பரம்பரைச் சொத்துவரிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினையும் பரிசீலனை செய்தார்.

நாம் அறிந்தவரை, மரண வரி, எஸ்டேட் வரி, வாரிசுரிமை வரி என இருவகைகளாகப் பிரிக்கலாம். இவ்விரண்டுடனே ஏதாவது ஒன்றுடனே பரிசு வரியைச் சேர்த்து விதிக்கலாம். வாரிசுரிமை வரி (Succession Duty) என்பது, பல வாரிசுதாரர்களும் அடைந்த எஸ்டேட்டின் பங்குகளின்மீது விதிக்கப்படுவதாகும். வாரிசுரிமை இரட்டிப்பு வகையில் முன்னேற்றமடையலாம். அதாவது வாரிசுமூலம் அடையும் சொத்தின் அளவுடன் வரிவீதங்களும் அதிகரிக்கின்றன. இறந்தவருக்கும், வாரிசுதாரர்களுக்கும் உள்ள உறவின் இடைவெளியைப் பொறுத்தும் இவ் வரிவீதங்கள் அதிகரிக் கின்றன. வரிப்பளு, இறந்தவர்களையே போய்ச் சேரும் என்பது எஸ்டேட்வரியின் ஊகமாகும்.

சமீபத்தில் புகுத்தப்பட்ட எஸ்டேட் வரிக்குப் பதிலாக, பரிசு வரியை, வாரிசுரிமை வரியுடன் சேர்த்துவிடலாமெனக் கால்டர் சிபாரிசு செய்தார். இவ் வரியை அதிகரிக்கச் செய்வதற்குக் கால்டர் தமது அறிக்கையில் கூறியதாவது :— பரிசின் அளவையோ பரிசு கொடுத்தவரின் சொத்துகளின் அளவையோ பொறுத்து வரி வீதம் இருத்தல் கூடாது; பரிசைப் பெற்றுக் கொண்டவனின் மொத்தச் சொத்துகளைப் பொறுத்து இருக்கவேண்டும் என்பதேயா கும். கையில் ஒன்றுமில்லாத ஒருவர், ஒரு கணிசமான தொகையைப் பரிசாகப் பெறும்போது, அதன்மேல் விதிக்கப்படும் பரிசுவரியைவிட, ஏற்கெனவே 10 இலட்ச ரூபாய்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஒருவர் பரிசாக மற்றோர் இலட்சத்தைப் பெறுவாரேயானால், அதன் மேல் விதிக்கப்படும் பரிசுவரி, கண்டிப்பாய் அதிகமாக இருக்க வேண்டும்.

வரிவீதத்தைப் பொறுத்துக் கால்டர் குறிப்பிட்ட வரிவிலக்கு எல்லை பின்வருமாறு:— தனி நபரொருவர் பெறும் பரிசு ரூ 10,000-க்குக் குறைவாக இருந்தால் அது வரிக்கு இலக்காகாது. பரிசு பெறுபவரின் நிகர சொத்து 1 இலட்சத்துக்குக் குறைவாக இருந்து பரிசின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேல் போனால், அப் பரிசு 10 சதவீத வரிக்கும், பரிசு பெறுபவரின் எஸ்டேட் மதிப்பு, 1 இலட்சத்திற்கு மேல் இருந்து, அவர் பெறும் பரிசு ரூ. 10,000-க்கு மேல் போனால், அப் பரிசினங்கள், தற்போதுள்ள எஸ்டேட் வரியின் இரு மடங்கிற்கும் இலக்காகின்றன. 1 இலட்சத்திற்கும் 1½ இலட்சத் திற்கும் இடையே வரிவீதம் 15 சதவீதமாகவும், 1½ இலட்சத்திற்கும் 2 இலட்சத்திற்கும் இடையே வரிவீதம் 20 சதவீதமாகவும், 2 இலட்சத்திற்கும் 3 இலட்சத்திற்குமிடையே வரிவீதம் 25 சதவீத மாகவும் உயர்ந்து கொண்டே போய், பரிசு பெறுபவரின் சொத்தின் மொத்த மதிப்பு 20 இலட்சத்தத்தைத் தாண்டும்போது வரிவீதம் 80 சதவீதத்தை அடைகிறது. வருடாந்திரச் சொத்துவரி நடை

முறையிலிருந்து, வருடாந்திர நிகரச் சொத்துகளிலிருந்து கணிசமான தொகையை இலாபமாக அடையும் நிலையில், எஸ்டேட் வரியை எடுத்துவிட்டுப் பதிலுச்குப் பரிசு வரியை விதிக்கலாமெனக் கால்டர் யோசனை கூறினர்.

பரிசு வரி மூலம் கிடைக்கும் வருவாயை விரிவான முறையில் கால்டர் மதிப்பிட்டார். அதாவது ஓர் இலட்ச ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துகளை உடையவர்களது வேளாண்மைக் குதவாத சொத்து மதிப்பின் மொத்த அளவை ரூ. 4,000 கோடி களெனக் கொண்டு, வருடா வருடம் அதிலிருந்து $\frac{1}{25}$ பாகத்தைப் பரிசளிப்பு, வரதட்சிணை, பதிவுரார்ஜிதம் மூலமாக மாற்றிவிடுவ தாகவும், சராசரி வரிவீதம் 20 சதவீதம் எனவும் கொண்டால், இவ் வரி மூலம் கிடைக்கும் வருமானம் ரூ. 30 கோடியாகலாம் எனவும் அவர் கணக்கிட்டார். இதன் விளைவாக எஸ்டேட் வரியில் ஏற்படும் நஷ்டம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2 கோடி ரூபாயாக இருக்கலாம்.

7.8. இந்தியாவில் பரிசு வரி (Gift Tax in India) : பொதுப் பரிசு வரி, இணைப்பு வரி முறைக்கான கால்டரின் திட்டத்தோடு முக்கிய தொடர்புடையதாகவுள்ளது. நிதியமைச்சரவையின் தற்காலிகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த பண்டித நேருவினுல், நாட்டுக்கு அளிக்கப்பட்ட 1958—'59 ஆம் ஆண்டு வரித் தீர்மானங் களில் முக்கியமான இடத்தைப் பரிசு வரி ஆக்கிரமித்துக் கொண் டிருந்தது. 1957-58ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியினுல், செலவுவரி, தீர்மானத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, செலவு வரி சரிவரச் செயல்படப் பரிசு வரியும் பின்னுல் புகுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. பரிசு வரியின் மூலம் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 3 கோடி ரூபாயை வரித்தொகையாகப் பெறலாமெனப் பிரதம மந்திரி கணக்கிட்டார். எஸ்டேட் வரியிலிருந்து சட்டபூர்வமாகத் தப்புவதைத் தவிர்ப்பதே இப் புதுவரியின் நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பாகக் கூறினர்.

1958ஆம் ஆண்டு பரிசுவரிச் சட்டத்தின்கீழ், ஆண்டொன்றுக்கு ரூ. 10,000-க்கு மேற்பட்ட பரிசுகளுக்கு மட்டுமே, இப் புது வரி விதிக்கப்பட்டது. முந்திய ஆண்டில் அளிக்கப்பட்ட பரிசுகளின்மீது, குறிப்பிட்ட வீதத்தில் வரிவிதிக்சப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட வரிவிலக்குகள் பின்வருமாறு :—

1. இந்தியாவின் எல்லைக்கு அப்பாற்பட்ட இடத்தில் உள்ள இடம் பெயர்க்க முடியாத சொத்து,

2. இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட சேமிப்புப் பத்திரங்களின் உருவத்திலுள்ள சொத்து.

3. அரசுக்கு அல்லது ஏதாவது உள்நாட்டு ஆட்சிக்குக் (Local authority) கொடுக்கப்பட்ட சொத்து.

4. தருமநிலையங்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள்.

5. தமது ஆதரவின்கீழ் உள்ள உறவினரின் திருமணத்தின் போது அளிக்கப்பட்ட ரூ. 10,000-க்குச் சமமான பரிசு.

6. ஒருவர் தமது வாழ்க்கைத் துணைவிக்குக் கொடுக்கும் ஓர் இலட்ச ரூபாய் வரை மதிப்புடைய பரிசு.

7. ரூ. 10,000 வரை மதிப்புள்ள இன்ஷூரன்ஸ் பாலிஸிகள்.

8. உடலிலுள்ள பரிசளிப்பு.

9. இறப்பை எதிர்நோக்கி அளிக்கப்படும் பரிசு.

10. அதிகப்படிச் சம்பளமும் (Bonus), உபகாரத்தொகையும் (Grauity).

11. தமது குழந்தைகளின் கல்விக்காகச் செலவழிக்கும் தொகை.

12. தொழில் அல்லது வியாபாரத்தை நடத்த தேவைப்படும் தொகை.

13. பூதானம் மூலமாக அளிக்கப்படும் பரிசு நிலங்கள்.

14. அரசர்களது சொந்தச் செலவுக்கென ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து (Pricy-Purse) அளிக்கப்படும் பரிசு.

7.9. வரி வீதங்கள் (Rates of Taxes) :— எஸ்டேட் வரியிலிருந்து தப்புவதைத் தவிர்ப்பதற்கென்றே பரிசு வரி விதிக்கப்பட்டது. பரிசு வரியின்கீழ் விலக்கு அளிக்கப்பட்ட தொகையும், எஸ்டேட் வரியின்கீழ் விலக்கு அளிக்கப்பட்ட தொகையும் சமமாக இல்லாத ஒரு மாநிலத்தைத் தவிர, மற்ற இடங்களில் பரிசு வரிவீதங்களும், எஸ்டேட் வரிவீதங்களும் ஒன்றுகவே இருந்தன. 1958—'59ஆம் ஆண்டு வரவுசெலவுதிட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட எஸ்டேட் வரி வீதத்தையும், பரிசு வரி வீதத்தையும் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

1958-59-ம் ஆண்டு எஸ்டேட் வரி வீதங்களும், பரிசு வரி வீதங்களும்.[1]

எஸ்டேட் வரி வீதங்கள்	பரிசு வரி வீதங்கள்
1. எஸ்டேட்டின் மதிப்பில் முதல் ரூ. 50,000 வரை இல்லை	எஸ்டேட் மதிப்பின் முதல் ரூ. 50,000 வரை 4%
2. அடுத்த ரூ. 50,000-க்கு 6%	அடுத்த ரூ. 50,000-க்கு 6%
3. அடுத்த ரூ. 50,000-க்கு 8%	அடுத்த ரூ. 50,000-க்கு 8%
4. அடுத்த ரூ. 50,000-க்கு 10%	அடுத்த ரூ. 50,000-க்கு 10%
5. அடுத்த ஓர் இலட்ச ரூபாய்க்கு 12%	அடுத்த இலட்ச ரூபாய்க்கு 12%
6. அடுத்த 2 இலட்ச ரூபாய்க்கு 15%	அடுத்த இலட்ச ரூபாய்க்கு 15%
7. அடுத்த 5 இலட்ச ரூபாய்க்கு 20%	அடுத்த 5 இலட்ச ரூபாய்க்கு 20%
8. அடுத்த 10 இலட்ச ரூபாய்க்கு 25%	அடுத்த 10 இலட்ச ரூபாய்க்கு 25%
9. அதற்கடுத்த 10 இலட்ச ரூபாய்க்கு 30%	அதற்கடுத்த 10 இலட்ச ரூபாய்க்கு 30%
10. அடுத்த 20 இலட்ச ரூபாய்க்கு 35%	அடுத்த 20 இலட்ச ரூபாய்க்கு 35%
11. அதற்கு மேற்பட்ட எஞ்சிய தொகைக்கு 40%	அதற்கு மேற்பட்ட எஞ்சிய தொகைக்கு 40%

7.10. **கால்டரின் சீர்திருத்தத்தின்படி பரிசு வரியைப் பற்றிய மதிப்பீடு (Appraisal of Gift Tax in India in the light of Kaldor Reforms) :** — இந்தியப் பரிசு வரி கால்டரின் திட்டத்திலிருந்து பெருமளவுக்கு மாறுபட்டதாகவுள்ளது. எஸ்டேட் வரிக்குப் பதிலியாகப் பரிசு வரியைப் புகுத்தும்படிக் கால்டர் சிபாரிசு செய்தார். ஆனால், ஏற்கெனவே உள்ள எஸ்டேட் வரிக்குமேல் பரிசு வரி விதிக்கப் பட்டுள்ளது. 1958ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் இந்தியாவுக்கு வந்த கால்டர், இந்தியப் பரிசு வரி தமது யோசனைகளின் மங்கிய நிழலாகத்தான் உள்ளது என்று குறிப்பிட்டார். பரிசுவரிச் சட்டத் தின்கீழ் ஏராளமான விலக்குகள் உள்ளன. ஆனால், அதே மாதிரி விலக்குகள் எஸ்டேட் வரிச்சட்டத்தில் இல்லை. இதன் விளைவாகப்

[1] Source :— Budget of Government of India, 1958-'59

பரிசளிப்புகளைச் சில காலம் தள்ளிப் போடும் முறையைப் பின்பற்றி, பரிசளிப்பவன் தன்னைப் பரிசு வரியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். பரிசு வரியிலுள்ள இக் குறைபாடுகள், இவ் வரிமூலம் கிடைக்கும் வருமானத்தைப் பெருமளவில் குறைத்துள்ளன.

1964ஆம் ஆண்டில், பரிசு வரி வீதங்கள் உயர்த்தப்பட்டன. மனைவிக்குக் கொடுக்கப்படும் பரிசளிப்புக்கிருந்த விலக்கு ஓர் இலட்ச ரூபாயிலிருந்து ரூ. 50,000-மாகக் குறைக்கப்பட்டது. பரிசு வரியின் விலக்கு எல்லை ரூ. 10,000-லிருந்து ரூ. 5,000-மாகக் குறைக்கப் பட்டது. 50 இலட்ச ரூபாய்களுக்குமேல், மீதமுள்ள பரிசளிப்பு களுக்கு இதுவரை 40% ஆக இருந்த உச்ச வரி வீதம் 50% ஆக உயர்த்தப்பட்டது. பரிசு வரியின்மூலம் கிடைத்த வருமானத்தைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

ஆண்டு	பரிசு வரி வருமானம்
	(கோடியில்) ரூ.
1958-'59	0 · 98
1959-'60	0 · 81
1960-'61	0 · 89
1961-'62	1 · 01
1962-'63	0 · 97
1963-'64	1 · 12
1964-'65	2 · 22
1965-'66	3 · 00

8. நிறுவன வருமான வரிவிதிப்பு

(Taxation on company Income)

8.1. நிறுவனங்களின்மீது வருமான வரி (Income Tax on Companies):- இந்தியாவிலுள்ள நிறுவனம் அல்லது கார்ப்பரேஷன்மீது இருவித வரிகள் உள்ளன. அவை (1) வருமான வரி (2) மேல்வரி (Super Tax) என்பனவாம்.

நிறுவன வருமான வரி என்பது, பங்குதாரர்களுக்காக, நிறுவனத்தால் செலுத்தப்படுவதாகக் கருதப்படுகிறது. பங்குதாரர்கள் பெறும் இலாபஈவு (dividend), அவர்களது மொத்த இலாப ஈவிலிருந்து (Gross dividend) அதன்மீது உச்ச இறுதிநிலை வீதத்தில் விதிக்கப்பட்ட வருமான வரியைக் கழித்த பின் உள்ள தொகைக்குச் சமமாகிறது. பின்பு, ஒவ்வொரு பங்குதாரரும், தாம் பெரும் மொத்த இலாபஈவுக்கெனச் செலுத்த வேண்டிய வருமான வரி கணக்கிடப்படுகிறது. பங்குதாரர் தமது மொத்த வருவாய்க்காகச் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு மேலாக, நிறுவனம் செலுத்தியிருந்தால், அந்த அதிகப்படி வருமானவரி, பங்குதாரருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், பங்கிடப்படாத இலாபங்களுக்கென நிறுவனத்தால் செலுத்தப்பட்ட வருமான வரியினால் பங்குதாரர்களுக்குப் பலனேதுமில்லை. பங்கிடப்படாத இலாபத்திற்கான வரியை நிறுவனமே செலுத்த வேண்டியுள்ளது.

1957ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிவரை, நிறுவன வருமான வரி ஒரே வீதத்தில் விதிக்கப்பட்டது. இவ் வரிவீதம், தனிநபரின் வருமான வரி (மேல்வரி நீங்கலாக)யின் உச்ச இறுதிநிலை வீதத்திற்குச் (Maximum marginal rate) சமமாக இருந்தது. அதாவது, நிறுவனங்களின்மீது ரூபாய்க்கு 4 அணா அல்லது 22% வரி விதிக்கப்பட்டது. இவ் வரிவீதம் 1950-'51-லிருந்து, 1956-'57ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது. 1950-'51ஆம் ஆண்டில், வருமான வரிக்குக் கூடுதல்வரி (Sur-charge) இல்லை. ஆனால்

1951-'52-இல், வருமான வரியில், $\frac{1}{6}$ பங்குக்குச் சமமான கூடுதல் வரி விதிக்கப்பட்டது.

1957-58ஆம் ஆண்டிலிருந்து, நிறுவன இலாபங்களின் மீது விதிக்கப்பட்ட வருமானவரி 25% லிருந்து 30% ஆக உயர்த்தப் பட்டது. வருமான வரியில் $\frac{1}{6}$ பங்குக்குச் சமமான கூடுதல் வரியும் இருந்தது. 1955ஆம் ஆண்டுவரை, பங்கிடப்படாத இலாபங்களில் ஒரு ரூபாய்க்கு ஓர் அணு தள்ளுபடி செய்யப்பட்டு, எஞ்சிய இலாபமே வருவான வரிக்கு இலக்காகியது. நிறுவனங்கள் திரும்பவும் இலாபத்தை அடைய முயற்சி செய்ய ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் இத் தள்ளுபடி புகுத்தப்பட்டது. 1956ஆம் ஆண்டில் இத் தள்ளுபடி நீக்கப்பட்டது. வெவ்வேறு வீதங் களில் கார்ப்பரேஷன் வரியை விதித்து இலாபஈவுகளைப் பங்கிட்டுக் கொடுப்பதைக் குறைப்பதெற்கெனப் புதுத்திட்டம் ஒன்று புகுத்தப்பட்டது.

8.2. கார்ப்பரேஷன் வரி (Corporation Tax.):- வருமான வரியைத் தவிர, நிறுவனங்கள் மேல்வரி அல்லது கார்ப்பரேஷன் வரியைச் செலுத்த வேண்டியுள்ளன. நிறுவனத்தின் மொத்த வருமானத்திற்காகக் கார்ப்பரேஷன் வரி செலுத்தப்படுகிறது. ஆனால், வருமான வரியைப் போல, இதில் ஒரு பகுதிகூடப் பங்கு தாரர்களுக்குத் திருப்பியளிக்கப்படுவதில்லை. 1951-'52ஆம் ஆண்டி லிருந்து 1952-'53 வரை, ரூபாய்க்கு 2·5 அணுவாக இருந்த கார்ப்ப ரேஷன் வரிவீதம், 1953-'54-இல் ரூபாய்க்கு 2·75 அணுவாக உயர்த்தப்பட்டது. 1939ஆம் ஆண்டுவரை, தனிநபரின் மேல் வரியைப் போன்று, இம் மேல்வரிவீதங்களும் வளர்வீதத்திலேயே (Progressive) இருந்தன. கார்ப்பரேஷன் வரிக்கு விலக்கு எல்லையும் இருந்தது. 1939ஆம் ஆண்டில், வருமான வரிவிதிப்புச் சட்டத்தில், கார்ப்பரேஷன் வரிக்கு இருந்த விலக்கு எல்லை நீக்கப்பட்டது. நிறுவனங்களின்மீது ஒரே வீதத்தில் மேல்வரி விதிக்கப்பட்டது. மேலும் கார்ப்பரேஷன்களின் மொத்த வருவாயின்மீது முதல் முதலாக விதிக்கப்பட்ட வரி, கார்ப்பரேஷன் வரியாகும். தொடக் கத்தில், வியாபாரத்திலிருந்தும், கார்ப்பரேஷன்களிலிருந்தும் கிடைத்த வரி வருவாய், வருமான வருவாயுடன் சேர்க்கப்பட்டு, வரவுசெலவுத்திட்டத்தில் வருமான வரியின்கீழ் காட்டப்பட்டது. 1931ஆம் ஆண்டு முதல் கார்ப்பரேஷன் வரி வருவாயைத் தனிப்படக் காட்டும்படி நேர்ந்தது.

இந்தியக் கார்ப்பரேஷன்வரி என்பது, நிறுவனங்களின்மீது விதிக்கப்பட்ட மேல்வரியாகும். இரண்டாவது உலகப்போரின் போதும், அதற்குப் பின்பும் மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டங்களில், கார்ப்பரேஷன் வரி வருவாய் என்ற தலைப்பின்கீழ்

நிறுவன மேல்வரியுடன் அதிகப்படி இலாப வரித்தொகையும், முதலீட்டு ஆதாய வரித் தொகையும் காட்டப்பட்டன.

வருமான வரியைப் போலவே, கார்ப்பரேஷன் வரியும் இரண்டாவது உலகப்போருக்குமுன், மத்திய அரசின் வருவாய்க்கு, ஒரு சாதாரண ஆதாரமாகக் கருதப்பட்டது. 1936-'37ஆம் ஆண்டில் அதன்மூலம் கிடைத்த வருவாய் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாகவே இருந்தது. நாளடைவில், அது முக்கியத் துவமடைந்தது. முதல் உலகப்போரின் தொடக்கத்தில், அவ் வரி மூலம் கிடைத்த வருவாய் இரண்டு கோடி ரூபாய் வரை எட்டியது.

இரண்டாம் உலகப்போரின்போது, கார்ப்பரேஷன் வரி முக்கியத்துவத்தைப் பெற்று, அதன்மூலம் கிடைத்த வருவாய், வருமான வருவாய் வரிக்கு அடுத்தபடியாக, இரண்டாவது இடத் தைப் பெற்றது. அச் சமயத்தில் மத்திய அரசின் வருவாயில் பெரும்பகுதி, வருமான வரிமூலமாகவும், கார்ப்பரேஷன் வரி மூலமாகவும் கிடைத்த வருவாயாக இருந்தது.[1]

இரண்டாம் உலகப்போரின்போது இருந்த மத்திய அரசு வரிகளுள், கார்ப்பரேஷன் வரி பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம்.

கார்ப்பரேஷன் வரியிலிருந்து கிடைத்த வருவாய்.
(The yield from corporation tax.)[2]

ஆண்டு	வருவாய் (ரூபாய் கோடியில்)	மத்திய அரசின் மொத்த வருவாயில் சதவீதம்
1939-'40	2·38	1·9%
1940-'41	4·14	2·9%
1941-'42	11·65	8·0%
1942-'43	31·40	13·4%
1943-'44	51·28	16·9%
1944-'45	84·19	21·1%
1945-'46	75·73	21·1%

(அதிகப்படி இலாப வரிமூலம் கிடைத்த வருவாயும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது).

[1] Dr. L. Sundaram and V. V. Babu, Union Finance, p.125.
[2] Source:- Government of India-Budgets for relevant years

இரண்டாம் உலகப்போருக்குமுன் மிகச் சாதாரண நிலையி லிருந்த கார்ப்பரேஷன்வரி, போர் நடந்தபோது மத்திய அரசின் வருவாய்க்கு இன்றியமையாத ஆதாரமாக மாறியதை, மேற்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம். கார்ப்பரேஷன் வரிமூலம் கிடைத்த வருவாய், 1939-'40-இல் இருந்ததைவிட, 1940-'41-இல் 74% அதிகமாகியது. போர்க்காலத்தில் கார்ப்பரேஷன் வரி வருவாய் இரு காரணங்களையொட்டி அதிகரித்தது. (1) நிறுவனங் களின் மேல்வரிக்கும் (Super-tax) கூடுதல்வரி (Sur-Tax) விதிக்கப் பட்டது. (2) 1940-இல் அதிகப்படி இலாபவரி விதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது கார்ப்பரேஷன்வரி, கார்ப்ப ரேஷன் கூடுதல்வரி, அதிகப்படி இலாபவரி இவற்றின்மூலம் கிடைத்த வருவாயைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

இரண்டாம் உலகப்போரின்போது கார்ப்பரேஷன் வரி வகைகளின்மூலம் கிடைத்த வருவாய் (Yield from components of Corporation Tax during world war II)[1] :

ஆண்டு	கார்ப்ப ரேஷன் வரி	கார்ப்ப ரேஷன் கூடுதல் வரி	அதிகப்படி இலாப வரி	மொத்த வருவாய்
	(கோடிக்கணக்கில்)			
1939-'40	2·38	—	—	2·38
1940-'41	2·49	0·57	1·08	4·14
1941-'42	3·57	1·06	7·02	11·65
1942-'43	7·58	0·32	23·50	31·40
1943-'44	11·18	0·05	40·50	51·28
1944-'45	15·26	1·49	67·44	84·19
1945-'46	5·77	1·63	68·33	75·46

8.3 அதிகப்படி இலாப வரி (Excess profits Tax.):-

இருவகை அதிகப்படி இலாபங்களுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினை நாம் முதலில் அறிய வேண்டும். முதலாவதாக, தொழிலில் அல்லது வியாபாரத்தில் எதிர்பார்த்த நியாயமான இலாபத்தைவிட அல்லது மற்ற தொழில்களில் கிடைப் பதைவிட அதிகமான இலாபம் கிடைக்கலாம். இரண்டா

[1] Source:- Government of India, Budget for 1941-'42 to 1947-48.

வதாகப் போர் அல்லது வேறு ஏதாவது தற்காலிக அவசர நிலை காரணமாக எதிர்பாராத அளவு அதிக இலாபம் கிடைக்கலாம். ஆகவே, அதிகப்படி இலாபவரி என்பது போர்க்கால இலாப வரியைப் போன்று தற்காலிகமானதே. கார்ல்ப்ளென் (Carl Plehn) போன்ற ஆசிரியர்கள், அதிகப்படி இலாப வரியை நிலையாக விதிக்கப் படுவதைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.[1] அதிகப்படி இலாபவரி நிலையானதாக விதிக்கப்பட்டால் அது ஆடம்ஸ்மித்தின் ஒவ்வொரு வரிப்புனிதவிதிக்கும் (Canon of taxation) எதிராகச் செயல்படும் என்று ப்ளென் கூறுகிறார். முதன்முதலில், 1919-இல், ஓர் ஆண்டுக்கு மட்டும், அதிகப்படி இலாப வரி விதிக்கப்பட்டது. பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் அவ் வரி விதிக்கப்பட்டது:-

1. அரசு கருவூலங்களுக்கு அதிகப்படி வருவாயைச் சேர்க்க,

2. போரின் காரணமாகச் சம்பாதிக்கப்பட்ட அதிக இலாபங் களின் ஒரு பகுதியைக் கைக்கொள்ள,

3. நாட்டில் இருந்த பணவீக்க நிலையை அதிகமாகாமல் தடுக்க,

4. தனிநபர் பிரிவில் (Private Sector) அதிகப்படியான செலவுகள் ஏற்படாமல் தடுக்க,

5. தனிநபர் பிரிவினர் கைகளில் உள்ள செலவுக்கு உதவும் வருவாயைக் குறைக்க.

1940ஆம் ஆண்டு அதிகப்படி இலாப வரிச் சட்டத்தின் முக்கிய அம்சங்களைக் கீழே காணலாம் : —

1. 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் போர் தொடங்கிய தால், செப்டம்பர் முதல் தேதியிலிருந்து அதிகப்படி இலாப வரி விதிக்கப்பட வேண்டியிருந்தது,

2. திட்டமான இலாபத்திற்கு அதிகமான இலாபம் கிடைக்கு மானால், அதற்கு 50% வரி விதிக்கப்பட வேண்டும்.

3. இவ் வரியின் விலக்கு எல்லை ரூ. 36,000 எனத் தீர்மானிக்கப் படவேண்டும்.

1942–'43ஆம் ஆண்டில், இவ் வரி வீதம் 62½% ஆக உயர்த்தப் பட்டது. இதில் 6⅔ சதவீதத்தைப் போர் முடிந்ததும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். 1943ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம்நாள், இவ்வரித் தொகையில் ⅓ பாகத்தைக் கட்டாய வைப்பாக வைத்திருக்க

[1] Carl Plehn-Excess Profits Tax, p. 302.

வேண்டுமென ஓர் அவசரச்சட்டம் கொண்டுவரப்பட்டது, 1944ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து இது வரித்தொகையில் $\frac{19}{64}$ பாகமாக உயர்த்தப்பட்டது. இக் கட்டாய வைப்பு ஆண்டொன்றுக்கு 2 சதவீத வட்டியுடன் போருக்குப்பின் திருப்பியளிக்கப் படுவதாக இருந்தது.

1946ஆம் ஆண்டு போர் முடிவடைந்தவுடன், இவ் வரி விலக்கப் பட்டது போர்க்காலமுழுவதும் இவ் வரி நல்ல வருவாயை அளித்து வந்தது. இருப்பினும், இந்தியாவில் இவ் வரி விதிப்பில் இரு குறைகள் இருந்தன. அவை யாவன: (1) இவ் வரியிலிருந்து, மருத்துவர், சட்ட ஆலோசகர், கணக்குப்பரிசோதகர் ஆகியோர் விலக்கப்பட்டனர். அதிகப்படி இலாபவரி பற்றிய அமெரிக்க நிபுணரான H. C. ஆடம்ஸ் என்பவர், இவ் விலக்குகளை ஆதரிக்கவில்லை.[1] (2) இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியத் தொழில்களில் ஏற்பட்ட முழு வேலை நிறத்தத்துக்குக் காரணமாக இருந்த மதிப்பிழப்பு, இதர காப்புகள் (Reserves) இவற்றுக்கு அளிக்கப்பட்ட பற்றுக்குறை ஆதரவு.[2]

அதிகப்படி இலாபவரிமூலம் கிடைத்த வருவாய்.

(The yield from Excess Profits Tax)[3]

ஆண்டு	வருமான வரி வருவாய்	கார்ப்பரேஷன் வரி வருவாய்	மொத்தத் தொகை
1940-'41	0·47	1·08	1·55
1941-'42	1·67	7·02	8·69
1942-'43	5·75	23·51	29·26
1943-'44	13·71	39·86	53·57
1944-'45	24·71	67·44	92·15
1945-'46	11·18	68·33	79·51

போர்க்கால முழுவதும் அதிகப்படி இலாப வரி பற்றிய நிருவாகக் குழு திறமையற்றதாக இருந்தது. இவ் வரி வருவாயின் மதிப் பீட்டிற்கும், உண்மையாகக் கிடைத்த வரித்தொகைக்கும் இடையே

1. H. C. Adams-The Science of Finance, p. 97.
2. Dr. M. H. Gopaul, The Theory of Excess Profits Taxation, p. 319.
3. Source :— Statistical Abstracts of Government of India, 1966-'67.

இருந்த அகன்ற வேறுபாடுகளே நிருவாகக் குழுவினரின் திறமைக் குறைவினைச் சுட்டிக்காட்டப் போதுமானவையாக இருந்தன. 1940ஆம் ஆண்டிற்கும் 1946ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வரித் தொகையின் மொத்த மதிப்பீடு (estimate) ரூ 316 கோடியாகவும் உண்மையில் கிடைத்த தொகை 350 கோடியாகவும் இருந்தன. அதாவது இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடு 10·8 சதவீதமாக இருந்தது. இங்கிலாந்தில், இதே சமயத்தில் (1939-'46) மதிப்பீட்டு வரித்தொகைக்கும், உண்மை வரித் தொகைக்கும் இடையேயிருந்த வேறுபாடு 1·5 சதவீதமே.[2]

நிறுவனங்களிலிருந்து வேறுபட்ட இடங்களிலிருந்து கிடைத்த அதிகப்படி இலாபவரி வருவாய், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே பங்கிடப்பட்டது. நிறுவன இலாபவரி வருவாய் மத்திய அரசுக்கு மட்டுமென ஒதுக்கப்பட்டது. மொத்த அதிகப்படி இலாபங்களும் பின்வருமாறு, செலாவணியிலிருந்து நீக்கப்பட்டன :—

	ரூ - அ - பை.
1. அதிகப்படி இலாபவரி 66⅔ சதவீதப்படி	66 - 10 - 8
2. வருமானவரி — ரூபாய்க்கு 4½ அணு வீதம் 33⅓ ரூபாய்க்கு	9 - 6 - 0
3. கார்ப்பரேஷன்வரி — ரூபாய்க்கு 2 அணு வீதம் 33⅓ ரூபாய்க்கு	4 - 2 - 8
4. கட்டாய வைப்பு — ஒரு ரூபாயில் 19/64 பங்கு வீதம் 66⅔ ரூபாய்க்கு	19 - 12 - 8
மொத்தம்	100 - 0 - 0

இதிலிருந்து வரி செலுத்துபவர் போருக்குப்பின் பின்வருமாறு ரூ 26 - 7 - 4-ஐத் திரும்பப் பெறுவதாக இருந்தது.

	ரூ - அ - பை
1. கட்டாயவைப்பு	19 - 12 - 8
2. அதிகப்படி இலாப வரியில் அரசு அளிக்கும் 1/10 பங்கு	6 - 10 - 8
மொத்தம்	26 - 7 - 4.

இவ் வரியின்மூலமாகச் சுமார் ரூ 408 கோடிகள் வருவாயாகக் கிடைத்தன. போர் முடிந்ததும், அவ் வரியை அடியோடு நீக்கியது ஓர் அவசர முடிவாகும். ஒரு வேளை, அச்சமயம் நிதி அமைச்சராக இருந்த ஆர்ச்சிபால்ட் ரோலண்ட்ஸ் (Archibald Rowlends) என்பவர்,

[2] Dr. M. H. Gopaul, Theory of Excess Profits Taxation, p. 345.

நாட்டில் பொருளாதாரத்தில் பணவாட்ட நிலையைக் கொண்டுவர விரும்பியதும் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்:

8·4 வியாபார இலாபவரி (Business Profits Tax) :

1947-'48ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், நிதி அமைச்சர் திரு. லியாகத் அலிகான், ஓர் இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வியாபார இலாபத்தின்மீது 25% தனிப்பட்ட வருமான வரியை விதிக்கலாம் எனத் தீர்மானித்தார். இதனால், ரூ. 30 கோடியை வருவாயாகப் பெறலாம் எனவும் மதிப்பிடப்பட்டது. இதற்கு முந்தின ஆண்டில் அதிகப்படி இலாப வரியை ஒழித்ததைக் காலத்திற்குமுந்திய (Premature) செய்கை என எடுத்துக்காட்டி வியாபார இலாப வரிவிதித்தலே நியாயமானதென்று எடுத்துக் காட்டினார். இறுதியாகச் சட்டத்தின்மூலம் வழக்கத்தில் வந்த இவ் வரி 16⅔% ஆகக் குறைக்கப்பட்டது. அதிகப்படி இலாபவரிப் பளுவைவிட இவ் வரிப்பளு குறைவாக இருக்குமென்றும், ஆகவே இவ் வரி எளிதில் செயற்படும் என்றும் நிதிமந்திரி கூறினார். ஆனால் இவ் வரி நாளடைவில் நியாமற்றதென நிரூபிக்கப்பட்டது. 1948ஆம் வருடத்திய நிதிச்சட்டம், வியாபார இலாப வரிவீதத்தை 10% எனக் குறைத்து, வரிவிலக்கு எல்லையை ரூ 2 இலட்சங்களென உயர்த்தியது. 1950-'51ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், இந் நியாயமற்ற வரி முற்றிலும் விலக்கப்பட்டது என நிதிமந்திரி அறிவித்தார். இவ் வரிமூலம் கிடைத்த வருவாய் சமார் 31 கோடி ரூபாயாக இருந்தது.

8.5 சுதந்திரத்திற்குப் பிறகு நிறுவனங்களின்மீது வரிவிதிப்பு (Post Independence Taxation of Companies) :— பொதுவாக, ஒரு கார்ப்பரேஷன் வருமானவரிக்கும், மேல்வரிக்கும் இலக்காக இருந்தது. ஆனால், சில சமயங்களில் கார்ப்பரேஷன்களின்மீது, அதிகப்படி இலாப வரி, வியாபார இலாபவரி, முதலீட்டு ஆதாயவரி, வருடாந்திரச் செல்வ வரி, கார்ப்பரேஷன் வருமானங்களின்மீது விதிக்கப்படும் கூடுதல் வரி (Surcharge) முதலான வரிகளும் விதிக்கப் படுகின்றன. சுதந்திரத்திற்குப் பின்னர், மேற்கண்ட வரிகளின் வாயிலாக மத்திய அரசு வருவாயைப் பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வத்தியாயத்தில், கார்ப்பரேஷன் வருவாய்களுக்கு விதிக்கப்படும் வருமான வரி, மேல்வரி ஆகியவற்றைப்பற்றிப் படிப்பதே நமது முக்கிய நோக்கமாகும்.

வெகுநாள்களுக்கு முன்பே நிறுவன வருமான வரி இருந்ததென அறிகிறோம். சுதந்திரத்திற்குப் பின்னர் நிறுவன வருமான வரியில் கொண்டு வரப்பட்ட மாறுதல்களை வரிசைப்படுத்திப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

1. Budget Speech, dated February 28, 1947.

சுதந்திரத்திற்குப் பின்னர் நிறுவன வருமான வரியில் ஏற்பட்ட மாறுதல்கள்

(Changes in Company Income Tax During Post Independence Period).[1]

ஆண்டு (1)	நீக்கப்பட்ட பழைய வரியும், புது வரிகளும் (2)	வித அமைப்பில் மாறுதல்கள் (3)
1948-'49	அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களுக்கும், தரும நிலையங்களுக்கும் அளிக்கப்படும் நன்கொடைகள் வரியிலிருந்து விலக்கப் பட்டன. இவ்விலக்கு அந்நிறுவனத்தின் வரிக்கு உட்பட்ட வருமானத்தில் 5%க்கு மேற்படாததாக இருந்தது. அந்நிறுவனத்தின் மொத்த உச்ச வருவாயும் ரூ. 2½ இலட்சத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். வரிக்குட்பட்ட வருவாயிலிருந்து, சொத்துகளின் மீது விதிக்கப்பட்ட முனிசிபல் வரிகளைக் கழித்து விடுதல். பங்கிடப்படாத இலாப வரியில் ஒரு ரூபாய்க்கு ஓர் அணா தள்ளுபடி. அதாவது பங்கிடப் பட்ட இலாபங்களுக்கு ரூபாய்க்கு 5 அணா வருமான வரியும், பங்கிடப்படாத இலாபங்களுக்கு ரூபாய்க்கு 4 அணா வருமான வரியும் விதிக்கப்பட்டன. இதற்கு முன்பு ரூ. 1 இலட்சம் அல்லது முதலீட்டில் 6% என இருந்த வரிவிலக்கு எல்லை, ரூ. 2 இலட்சம் அல்லது மொத்த முதலீட்டில் 6% இரண்டில் எதுகுறைவோ அதைப் பின்பற்றலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.	ரூ. 25,000 அல்லது அதற்குக் குறைவான வருவாயுள்ள நிறுவனங்களுக்கு வருமான வரி, வழக்கமான வரி விதத்திலிருந்து பாதியாகக் குறைக்கப்பட்டது.
1949-'50	ஒரு மாறுதலுமில்லை.	ஒரு மாறுதலுமில்லை.
1950-'51	மாறுதலேதுமில்லை	நிறுவன வருமான வரி ரூபாய்க்கு 5 அணாவிலிருந்து, ரூபாய்க்கு 4 அணாவாகக் குறைக்கப்பட்டது.

[1] Source:— Finance Acts, Government of India, 1948-60.

1951-'52	கார்ப்பரேஷன் வருமானவரி விதங்களுக்கு 5% கூடுதல் வரி விதிக்கப்பட்டது.	கூடுதல் வரியுடன் சேர்த்து, வரி விதம், ரூபாய்க்கு 4½ அணா வாக ஆகியது.
1952-'53	1951ஆம் ஆண்டு மே மாதம், 152 கோடி ரூபாய்க்கு ஆன வருமான வரி பாக்கியை, வசூலிக்க விஷேச இயக்கம் ஒன்று நடந்தது.	மாறுதலேதுமில்லை.
1953-'54	மாறுதலேதுமில்லை	வருமான வரிவிதம் ரூபாய்க்கு 4½ அணா வாக ஆக்கப் பட்டது.
1954-'55	மாறுதலேதுமில்லை	மாறுதலேதுமில்லை.
1955-'56	புதிய தொழில் நிறுவனங் களுக்கு முதல் 5 ஆண்டுகள் வரை வருமான வரி கிடையாது. ஆனால், இது மொத்த முதலீட் டில் 6%க்கு மேற்படக்கூடாது. நிறுவனங்கள் முன்னேறும் வரை 25% தள்ளுபடியும், அதனை 8 ஆண்டுகள் வரை அனுமதிக்கலாமெனவும் செய் யப்பட்டது. இயந்திரச்சாதனங்கள், கட்ட டங்கள் இவைகளில் முதலீடு செய்த பணத்திற்கு, முதல் 5 ஆண்டுகளுக்கு, மதிப்பிறக்கத் தள்ளுபடி (depreciation allowance) அனுமதிக்கப்பட்டது.	மாறுதலேதுமில்லை.
1956-'57	பங்கிடப்படாத இலாபங் களுக்கு இருந்த தள்ளுபடி நீக்கப்பட்டது.	கூடுதல் வரியோடு சேர்த்து, வருமான வரி விதம் 26·25% என திருணயிக்கப்பட்டது.
1957-'58	மாறுதலேதுமில்லை	கூடுதல் வரியோடு சேர்த்து வருமான வரி 31·5% என திருணயிக்கப்பட்டது.
1958-'59	மாறுதலேதுமில்லை	மாறுதலேதுமில்லை.
1959-'60	மாறுதலேதுமில்லை	வருமான வரி விதம் 20% என ஆக்கப்பட்டது.
1960-'61	பங்கிடப்பட்ட இலாபங்களுக் குச் செலுத்தும் வருமான வரி, நிறுவனங்கள் அவற்றின் பங்கு தாரர்களுக்காகச் செலுத்துவ தாகக் கருதப்பட்ட, அதற்கு இருந்த சட்டபூர்வமான திருணயம் (legal fixation) விலக் கப்பட்டது.	மாறுதலேதுமில்லை.
1961-'62	மாறுதலேதுமில்லை	மாறுதலேதுமில்லை.
1962-'63	மாறுதலேதுமில்லை	மாறுதலேதுமில்லை.

கார்ப்பரேஷன் வரிவீதம், 1951-52-இல் ரூபாய்க்கு 2·5 அணுவாக இருந்தது. 1953-'54-இல் ரூபாய்க்கு 2·75 அணுவாக உயர்த்தப்பட்டது.

கார்ப்பரேஷன்வரி பலதரப்பட்ட தள்ளுப்படிகளுக்கு உட்பட்ட தாக இருந்தது. பெரிய நிறுவனங்களோவிடச் சிறிய நிறுவனங்கள் குறைந்த விதத்தில் இவ் வரிக்கு இலக்காயின. உள்நாட்டு வியாபாரத்தை ஊக்குவிக்க, அயல்நாட்டு நிறுவனங்களுக்கு அல்லாமல், இந்திய நிறுவனங்களுக்கு மட்டுமே தள்ளுபடிகள் அளிக்கப்பட்டன. போனஸ் பங்குகளையும் (Bonus Shares), மிதமிஞ்சிய இலாபஈவுகளையும் கொடுப்பதாகக் கணக்குக் காட்டுவதைத் தடுக்க, 1956ஆம் ஆண்டு நிதிச் சட்டம், மற்றொரு தள்ளுபடியைக் கொண்டு வந்தது. எல்லா நிறுவனங்களுக்கும், கார்ப்பரேஷன் வரிக்குமேல், மேல்வரி உச்ச தத்தில் நிருணயிக்கப்பட்டது. குறிப்பிட்ட சதவிதத்துக்கு அதிகமாக இலாபஈவுகளைப் பங்கிடாத அல்லது போனஸ் பங்குகளைக்கொடுக்காத நிறுவனங்களுக்கு ஏற்றவாறு தள்ளுபடிகள் அனுமதிக்கப்பட்டன. 1955-'56ஆம் ஆண்டில், நிறுவன வருமான வரிவீதம் ரூபாய்க்கு 4 அணு 9 பைசாவாக அல்லது சுமார் 30% ஆக இருந்தது. மேற்கூறிய இரண்டு தள்ளுபடிகளும் அதில் அனுமதிக்கப்பட்டிருந்தன. 1956-57-இல், ரூபாய்க்கு 6 அணு 9 பைசாவென அதாவது சுமார் 43% ஆக உயர்த்தப்பட்டது. அப்போது மூன்று வகைத் தள்ளுபடிகள் இருந்தன. இவ்வாறு, 1956-'57 ஆம் ஆண்டில் ஒரு நிறுவனம் (வரி செலுத்த வேண்டிய இலாபத்தில் 6%-க்கு அதிகமாகப் பங்கிடாத நிறுவனம்) செலுத்த வேண்டிய மொத்தவரி 43·43% ஆக இருந்தது. இதில் 26·25% வருமானவரியும், அதற்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரியுமாகும். 17·18% கார்ப்பரேஷன் வரியாகும். வருமான வரியைச் சரிக்கட்டுவதற்காகப் பங்குதாரர்களுக்குத் திருப்பித்தர வேண்டிய தொகை, வரிசெலுத்த வேண்டிய நிறுவன வருவாயில் 10·67% என மதிப்பிடப்பட்டது. ஆகவே, இது நீங்கலாக, 1956-'57 இல் நிறுவன வருவாயின் வரிப்பளு 32.76% மட்டுமேயாகும் எனக் கணக்கிடப்பட்டது.

1957-'58-ஆம் ஆண்டிலிருந்து, நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கார்ப்பரேஷன் வரி 50% என உயர்த்தப்பட்டது. ஆனால் பல்வேறு தள்ளுபடிகள் அனுமதிக்கப்பட்டதன் காரணமாக, வெவ்வேறு நிறுவனங்களுக்கும் பொருத்தமான வீதங்கள் பின் வருமாறு இருந்தன:

நிறுவனங்கள்	மேல்வரிவீதம்.
வரிக்குட்பட்ட மொத்த வருமானம் ரூ. 22,000-க்கு மேற்படாத இந்திய நிறுவனங்கள்	15%
வரிக்குட்பட்ட வருவாய் ரூ. 25,000-க்கு மேலாகக் கொண்ட இந்திய நிறுவனங்கள்	20%
அந்நிய நாட்டு நிறுவனங்கள்	30%

1957-'58ஆம் ஆண்டில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய மொத்தவரி, மொத்த இலாபத்தில் 51·50%ஆக இருந்தது. அதாவது, 31·5% வருமானவரியும், அதற்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரியுமாகும்; 20% கார்ப்பரேஷன் வரியாகும். வருமான வரியைச் சரிக்கட்டுவதற்காகப் பங்குதாரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் தொகை 13·80% என அனுமதிக்கப்பட்ட பின்னர், அவ்வாண்டு நிறுவன வருமான வரி 37·70% ஆகக் கணக்கிடப்பட்டது. 1956-'57-இல் இது 32·76% ஆக இருந்தது.

போனஸ் அளிப்பு, அதிகப்படியான இலாப ஈவுகள் இவற்றின் மீது 1957-'58ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட கார்ப்பரேஷன் வரி வீதத்தைக் கீழே காணலாம் :—

போனஸ் அளிப்பு	30%
6% க்கு அதிகமாக, பங்கிடப்பட்ட இலாப ஈவுகளுக்கும், 10% க்குக் குறைவான செலுத்திய மூலதனத்திற்கும் (Paid-up Capital)	10%
10% க்கு அதிகமாக, பங்கிடப்பட்ட இலாப ஈவுகளுக்கும், 18% க்குக் குறைவான செலுத்திய மூலதனத்திற்கும்	20%
செலுத்திய மூலதனத்தில் 18% க்கு அதிகமான பங்கிடப்பட்ட இலாப ஈவுகளுக்கு	30%

நிறுவன வியாபார முதலீடுகளை அதிகரிக்கச் செய்ய இன்னும் சில சலுகைகளும் காட்டப்பட்டன. முதலாவதாக, புதிய தொழில்

நிறுவனங்கள், தொடங்கிய நாள் முதல், 5 ஆண்டுகள் முடிய அவற்றின் முதலீட்டில் 6%க்குச் சமமான இலாபங்களுக்கு வரி செலுத்தத் தேவையில்லை. அந் நிறுவனங்களின் இலாபஈவுகளும் இவ் விலக்கிலுக்கு உட்பட்டதாயிருந்தன. இரண்டாவதாக, வியாபாரத் திற்கென இயந்திரச் சாதனங்களை நிறுவச் செலவழித்த முதலீட்டில் 25%-க்கு முன்னேற்றத் தள்ளுபடி அளிக்கப்பட்டது. கிடைத்த இலாபம் பற்றுக்குறையுடையதாயிருந்தால், இத் தள்ளுபடி 8 ஆண்டுக் காலத்திற்கு அனுமதிக்கப்பட்டது. மூன்றுவதாக, முதல் 5 ஆண்டுக் காலத்திற்கு, இயந்திரச் சாதனங்களை நிறுவவும், கட்டடங்கள் கட்டவும் உதவிய முதலீட்டிற்கு மதிப்புக்குறைப்புப் படிகள் (allowances) அனுமதிக்கப்பட்டன.

நிறுவன இலாபங்களுக்கு வரிவிதிக்கும்போது அது மிகவும் குழப்பும் வகையிலும், பல குறைபாடுகளைக் கொண்டதாகவும் இருந்திருப்பதைக் காணலாம். வருமான வரியைவிட, நிறுவன இலாப வரி குறைவாக இருந்த காரணத்தால், பல செல்வந்தர்கள், வருமான வரியின் உயர்ந்த வரி வீதத்திலிருந்து தப்புவதற்கெனவே, நிறுவனங்களை நிறுவினர். அத்தகைய தனிநபர் நிறுவனங்கள் 23A நிறுவனங்கள் என்றழைக்கப்படுகின்றன. அவை எண்ணிக்கையில் அதிகமானவை. பெரும்பான்மையானவற்றுக்குச் சிலரே சொந்தக் காரர்களாக இருந்தனர். 1953-இல் வரிவிசாரணைக்குழு கொடுத்த மதிப்பீட்டின்படி அத்தகைய கம்பெனிகளில் 86%, 4 நபர்கள் அல்லது அதற்குக் குறைவானவர்களுக்குச் சொந்தமாகவும், அதில் 30% நிறுவ னங்கள் ஒரேயொரு நபருக்குமட்டுமே சொந்தமாகவும் இருந்த தெனவும் கணக்கிடப்பட்டது. இவ்விதமாக, நிறுவனங்களை நிறுவும் பழக்கம், வரியிலிருந்து தப்ப வழிகாட்டியது. அத்தகைய நிறுவனங் களின் சொந்தக்காரர்கள் அல்லது பங்குதாரர்கள், தனிநபரின் வருமான வரியிலிருந்து தப்ப, இலாபத்தின் பெரும் பகுதியைப் பங்கி டாமலே வைத்திருந்தனர். அத்தகைய நிறுவனங்களின்மீது விதிக்கப் பட்ட வரிகளுக்கென தனி விதிகள் இருந்த போதிலும், அத் திட்டம் வரித்திட்டத்தை மேலும் சிக்கலாக்கியது. வரிவிலக்குகளையும், தள்ளுபடிகளையும் பொறுத்தவரை, அவ் விதிகளில், நாட்டிற்கு இன்றியமையாத தொழில்களை ஊக்குவிப்பதற்கேற்ற வசதிகள் இல்லை. எல்லா விதமான தொழில்நிறுவனங்களுக்கும் பொருத்தமான முன்னேற்றத் தள்ளுபடிகள் முக்கியமல்லாத உற்பத்திகளையும் ஊக்குவித்தன.

8.6. இந்தியாவில் நிறுவன வரி பற்றிக் கால்டர் (Kaldor on Company Taxation in India) :- இந்தியாவில் நிறுவன வரி அமைப்பு, அநாவசியக் குழப்பமளிக்கக் கூடியதாகவும், தர்க்க முறைக்கு அப்பாற் பட்டதாகவும் (illogical) இருந்ததைக் கால்டர் கண்டறிந்தார்.

ஆகவே, இந்தியாவில் நிறுவன வரிவிதிப்புத் திட்டத்தைச் சீரமைப்புச் செய்து, தெளிவுபடுத்த வேண்டுமெனக் கால்டர் யோசனை கூறினார். முதலாவதாக, முதலீட்டு ஆதாய வரிவிதிப்பும், உயர்ந்த வட்டாரங்களில் (higher ranges) மேல்வரிக்குப் பதிலியாகச் செலவீட்டு வரி விதிப்பும், தனிநபரின் நிறுவனங்களுக்கு எதிராகவுள்ள 23A பிரிவின் கீழ் உள்ள சட்ட அமைப்பு முழுவதையும் தேவையற்றதாக்குகின்றன. இரண்டாவதாக, முதலீட்டு ஆதாய வரி, செலவீட்டு வரி ஆகியவற்றினுல், அதிகப்படி இலாபப் பங்கீட்டு வரிக்கு இடம் இல்லாமல் போகிறது. மூன்றுவதாக, நிறுவன வரிவிதிப்பும் தனிநபரின் வரி விதிப்பும் தனித்தனியாக ஆக்கப்படவேண்டும் எனக் கால்டர் கேட்டுக் கொண்டார். அவரது யோசனைப்படி, நிறுவனங்கள் வருமான வரிக்கு இலக்காகக் கூடாதென்பதுவும், அவைகளுக்குத் தனிப்பட்ட நிறுவன வரி விதிக்கப்பட்டால் போதுமென்பதுமாகும். நான்காவதாக நிறுவன வரிவீதத்தில் வேறுபாடோ படிப்படியான உயர்வோ (graduation) இருக்கத் தேவையில்லை எனவும், நிறுவனத்தின் மொத்த இலாபத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், நிறுவன வரிவீதம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமெனவும் கால்டர் கூறினர்.

இத்தகைய சலுகைகளை மனதில் கொண்ட கால்டர், தற்சமயம் நிறுவன வருவாய்களின்மீது விதிக்கப்பட்டுள்ள பல்வேறு வரிகளுக்குப் பதிலாக, நிறுவனங்களின் மொத்த வருவாய்களின்மீது ஒரு ரூபாய்க்கு 7 அணு வீதம் ஒரு தனிப்பட்ட வரியை விதிக்கலாமெனச் சிபாரிசு செய்தார். நிறுவனங்களின் முதலீட்டு ஆதாயங்கள் இவ் வரிக்கு இலக்காக வேண்டும். இவ் வரி மொத்தமும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. பங்குதாரர் பெறும் எல்லா இலாப ஈவுகளிலிருந்தும், ரூபாய்க்கு 7 அணு வீதம் வருமான வரிக்காகக் குறைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

8.7. **கால்டரின் சீர்திருத்தத்திற்குப் பின்னர் இந்தியாவில் நிறுவன வரிவிதிப்பு** (Company Taxation in India after Kaldor's Reforms) :- நாடு சுதந்திரமடைந்த பின்னர், நிறுவன வரிவிதிப்பு வீதங்கள் அதிகப்படியாக இருந்ததால், அவை நாட்டின் முதலீட்டினைப் பெருமளவில் பாதித்தன. இவ் வரிவீதங்களைக் கால்டரும் ஒப்புக் கொள்ளவில்லை. கால்டரின் சீர்திருத்தங்களைப் பின்பற்றி, இந்திய வரித் திட்டத்தைப் புதுப்பிக்க, 1957-'58ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம், புரட்சிகரமான முயற்சியை மேற்கொண்டது. முதலீட்டு ஆதாய வரி, செலவீட்டு வரி, செல்வ வரி போன்ற புதுவரிகளைச் சேர்த்துத் தனிநபரின் நேர்முக வரிவிதிப்புச் சீர்திருத்தப்பட்ட போதிலும், வியாபார வரிவிதிப்பு (Business taxation) ஏறக்குறைய மாறுதலேதுமின்றி இருந்ததெனலாம். குறிப்பிட்ட சில நாடுகளில்,

கார்ப்பரேஷன்கள் செலுத்தும் வரி, அவற்றின் மொத்த வருமானத்தில் எவ்வளவு சதவீதம் இருந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்த்ததில், இந்தியாவில்தான் அவ் வரிப்பளு மிக அதிகமாக இருந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது.

அட்டவணை

பின்வரும் நாடுகளில் கார்ப்பரேஷன் வரி, மொத்த வருவாயில் பின்வரும் சதவீதப்படிச் செலுத்தப்பட்டது:[1]

நாடுகள்	ரூ 25,000	ரூ 50,000	ரூ 1,00,000	ரூ 2,00,000	ரூ 5,00,000	ரூ 10,00,000
இந்தியா (1957-'58)	37·2%	44·4%	50·9%	52·2%	52·9%	61·3%
அமெரிக்க ஐக்கிய நாடுகள் (1956-'57)	25·0%	25.0%	25·0%	52·0%	52·0%	52·2%
பிரான்சு (1956-'57)	34·0%	34·0%	34·0%	34·0%	34·0%	41·8%
இங்கிலாந்து (1953-'54)	51·6%	51·6%	51·6%	51·6%	51·6%	51·6%
ஜப்பான் 1957	37·4%	38·7%	39·3%	39·7%	39·9%	39·9%

வியாபாரத் துறையில் முன்னேறிய நாடுகளிலிருந்த நிறுவன வரி விதிப்பு மட்டத்திற்கு இணையாக இந்திய வரிவிதிப்பும் உயர்ந்தது. ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய்க்கான இந்திய வரி விதிப்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து ஆகிய இடங்களிலிருந்ததைவிட அதிகமாக இருந்தது.

'வரிவிதிப்பும், அயல் நாட்டு முதலீடும்' (Taxation and Foreign Investment) என்பதைப் பற்றி ஆராய்ந்த, நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு (National Council of Applied Economic Research) பொதுவாக, அயல்நாட்டு நிறுவன முதலீட்டு வருமானத்திற்கு விதிக்கப்பட்ட இந்திய வரிவிதிப்பு, உலகத்திலேயே மிகவும் அதிகமானது என்ற அதே முடிவுக்கு வந்தது.

8.8. நிறுவன வரிவிதிப்பின் சீரமைப்பு (Rationalisation of Company Taxation) :- மேற்கண்ட நிலையைக் கவனிக்கும்போது,

[1] Source :- Eastern Economists Special Budget Number, March 7, 1958, p. 527.

இந்திய நிறுவன வரிவிதிப்புக்குப் பெருமளவில் மாறுதலும் சீர்திருத்தமும் தேவையெனப் புலப்பட்டது. 1959-'60 ஆம் ஆண்டு வரவு செலவுத் தீர்மானங்களை, 1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிட்ட நிதியமைச்சர், நிறுவன வரிவிதிப்பைச் சீரமைப்புச் செய்யத் தாம் ஒரு திட்டம் வைத்திருப்பதைத் தெரிவித்தார். அதிற்கண்ட முக்கிய மாறுதல்கள் பின்வருவனவாம் :-

முதலாவதாக, 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நிறுவனங்களால் செலுத்தப்படும் வருமானவரி, பங்குதாரர்களுக்காகச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படமாட்டாது. ஆகவே, நிறுவனங்களால், அத்தகைய செலுத்தினங்களுக்காகப் பங்குதாரர்களுக்கு எவ்வித வரவும் (Credit) வைக்கப்படமாட்டாது. வருமான வரி, மேல்வரி என இரு வரிகள் நிறுவனங்களின்மீது விதிக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் அது ஒரு சமவீதமுள்ள திருப்பிக் கொடுக்கப்படாத கார்ப்பரேஷன் வரியாகவே இருக்கும்.

இரண்டாவதாக, அதிகப்படி இலாப ஈவு வரியும், செல்வ வரியும் ஒரே சமயத்தில் நீக்கப்பட்டன.

இவ்விதமாக, நிறுவனங்களின்மீது விதிக்கப்பட்ட அதிகப்படி இலாபஈவுவரி ஒழிப்பும், செல்வ வரி ஒழிப்பும், நிறுவன வருமான வரியும், மேல்வரியும் ஒன்று சேர்க்கப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படாத கார்ப்பரேஷன் வரியாக ஆனதும், தனிநபரின் வரிவிதிப்பும் நிறுவன வரி விதிப்பும் பிரிக்கப்பட்டதும் ஆகிய சீர்திருத்தங்கள் நிறுவன வரி அமைப்பை எளிமைப்படுத்திச் சீரமைப்புச் செய்வதில் பெரும் பங்கு கொண்டன. 1961 ஆம் ஆண்டில், 'வரிவிதிப்பும் தனிநபரின் சேமிப்பும்' (Taxation and Private Saving) என்பதைப் பற்றி ஆராய்ந்த, நாட்டு விஞ்ஞியல் பொருளாதார ஆராய்ச்சிக் குழு (The National Council of Applied Economic Research) 1959 ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட நிறுவன வரிவிதிப்பின் புதுத்திட்டம், நிறுவன வரிவிதிப்பில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டியது. இந்த வரிச்சீர்திருத்தத்தின்கீழ், நிறுவன இலாபங்களுக்கு விதிக்கப்பட்ட 45% வரி வீதம், நியாயமானதெனக் கருதப்பட்டது. இருந்த போதிலும் பல்வேறு நிறுவனங்களது இலாபஈவுகளின் மீது இருந்த வரிப்பளுவைப்பற்றிய நாட்டு விஞ்ஞியல் பொருளாதார ஆராய்ச்சிக் குழுவின் (Ncaer) ஆய்வு கவனத்தைக் கவர்ந்தது. மேலும் அதிகப்படி இலாப வரி நீக்கப்பட்டபின்னர், போனஸ்வரி தொடர்ந்து நடை

முறையிலிருப்பது நியாயமற்றது என்ற அடிப்படையில், போனஸ் வரியை ஒழிக்க வேண்டுமென, அவ்வாய்வு கேட்டுக் கொண்டது.

8.9. மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தின்கீழ் நிறுவன வரிவிதிப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் (Changes in company Taxation during the Third Plan):- வரி அமைப்பை எளிமைப்படுத்தவும், உற்பத்தியை ஊக்குவிக்கவும், ஏற்றுமதியைப் பெருக்கவும், வருவாயை அதிகரிக்கவும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிறுவன வரி விதிப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றுள் முக்கியமான மாறுதல்கள், மேல்வரியைக் குறைப்பது, போனஸ் தொகைகளின் மீது விதிக்கப் பட்ட மேல்வரி வீதத்தை 30 சதவீதத்திலிருந்து 12·5% ஆகக் குறைப்பது, இவை சம்பந்தப்பட்டதாக இருந்தன.

1962-'63ஆம் ஆண்டில், இந்திய நிறுவனங்களின்மீது விதிக்கப் பட்ட கார்ப்பரேஷன் வரி வீதம் 45% லிருந்து 50% ஆக உயர்த்தப் பட்டது. ஏற்றுமதியைப் பெருக்குவதற்காக, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதால் இந்திய நிறுவனங்கள் அடைந்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு வருமான வரியிலிருந்தும் மேல்வரியி லிருந்தும் விலக்கப்பட்டது.

1963'64ஆம் ஆண்டில், ரூ. 20 கோடியை வருடாந்திர வருவா யென மதிப்பிட்டு, இலாப மேல்வரி (Super Profits Tax) விதிக்கப் பட்டு, நிறுவன வரி விதிப்பு மேலும் கடினமாக்கப்பட்டது. வருமான வரியையும், மேல்வரியையும் செலுத்திய பின்னர், நிறுவனங்களின் மீத வருவாய், அவற்றின் முதலீட்டுப் பணம், ரொக்கக் காப்பு இவற்றில் 6 சதவீதத்திற்குமேல் இருந்தால், அதற்கு இலாப மேல்வரியைச் செலுத்த நேரிடும். 1964-'65ஆம் ஆண்டில், இலாப ஈவு வரி விதிக்கப்பட்டும், பல்வேறு நிறுவன இலாபஈவுகளின்மீது மேல்வரியை நீக்கியும், முதன்மையான தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகளைக் காட்டியும், நிறுவனவரிவிதிப்பில் மாறுதல்கள் புகுத்தப் பட்டன. 1965-66.ஆம் ஆண்டில், நிறுவன வரிப்பளுவைக் குறைத்து, உற்பத்தியை ஊக்குவிக்க, நிறுவன வரி அமைப்பு திருத்தியமைக்கப் பட்டுப் பல்வேறு மாறுதல்கள் புகுத்தப்பட்டன.

பின்வரும் அட்டவணையிலிருந்து, கார்ப்பரேஷன் வரிமூலம் கிடைக்கும் வருவாய்த் தொகையையும், அவ்வப்போது தீர்மானிக்கப் பட்ட மாறுதல்களின் விளைவாகக் கிடைக்கக் கூடிய, வருவாய் மதிப் பீட்டையும் கண்டறியலாம்:[1]

[1] Source :- Pinan.ing of Planned Development in India by Sitesh Prakash Sterling Publishers P, (Lon.) Delhi-6, p. 180.

அட்டவணை 20

ஆண்டு	வரவுசெலவுத் திட்டத் திர்மானங்களின் விளைவாக வருவாய் மதிப்பீடு (ரூ. கோடியில்)	கார்ப்பரேஷன் வரி வருவாய் (ரூ. கோடியில்)	மொத்தவரிவருவாயில் கார்ப்பரேஷன் வருவாயின் பங்கு (சதவீதம்)
1951-'52	+ 2·50	41 41	4·53
1952-'53	—	43·80	5·14
1953-'54	—	30·40	3·52
1954-'55	—	37·33	3·99
1955-'56	—	37·04	3·58
1956-'57	+ 6·50	51·18	4·41
1957-'58	—	56·13	4 05
1958-'59	—	54·33	3·61
1959-'60	—	106·56	6·32
1960-'61	—	111·05	5·81
1961-'62	+ 1·00	156·46	7·41
1962-'63	+ 10·25	221·50	8·17
1963-'64	+ 26·00	274·59	8·23
1964-'65	+ 11·00	314·05	8·45
1965-'66	— 14·40	330·00	8·95

1957ஆம் ஆண்டிலிருந்து, கார்ப்பரேஷன் வரி காரணமாக, வரித் தொகை நிலையான, மிக அதிக வளர்ச்சியைக் காட்டிக் கொண்டிருந்தது. கார்ப்பரேஷன் வரிவீதம் திரும்பத்திரும்ப உயர்த்தப் பட்டதாலும், அதிகப்படி இலாபவரி, இலாப மேல்வரி ஆகியவைகள் புகுத்தப்பட்டதாலும், வரித்தொகை வருவாய் மேன்மேலும் பெருகியதெனலாம். இதற்குப் பதிலாக, வியாபாரம் பெருகியதையும் இதற்குக் காரணமாகக் கூறலாம்.

9. இந்திய அரசாங்கத்தின் மறைமுக வரிவிதிப்பு

(Indirect Taxation of The Government of India)

9.1 இந்திய அரசாங்கத்தின் மறைமுக வரி விதிப்பு (Indirect Taxation of the Government of India):- இந்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட மறைமுக வரிகள் பொருள்களின் மீதும் வியாபாரத்தின் மீதும் விதிக்கப்பட்ட வரிகளைக் கொண்டதாகும். உலகிலுள்ள முன்னேறிய நாடுகளைப் போலல்லாது, இந்தியாவின் வரித்திட்டத்தில் மறைமுக வரிகளே இன்றும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றன. ஏனெனில், இந்தியாவின் தலா வருமானம் மிகவும் குறைவாக இருப்பதால், வரி செலுத்துபவர்களில் பெரும் பான்மையோர் வருமான வரிக்கும், அதுபோன்ற இதர நேர்முக வரிகளுக்கும் இலக்காவதில்லை. ஆகவே, மறைமுக வரிகளின் மூலமாகவே அரசாங்க வருவாய்க்காக மக்களின் வருவாயிலிருந்து வசூலிக்கப்படவேண்டியுள்ளது. உதாரணமாக, 1952 - 53ஆம் ஆண்டில் வருமான வரிக்கு இலக்கானவர்கள் 5,32,306 மக்கள்தாம். 1962-63-இல் இத் தொகை 11,04,209-வரைதான் உயர்ந்தது. இத் தொகை மொத்த மக்கள் தொகையில் 0·0025 சதவீதமாகும். அதாவது 400 மக்களில் ஒருவர் வருமான வரி செலுத்துபவர் என்று கணக்கிடப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், மறைமுக வரிகளை நம்பவேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. அவசியப் பொருள்களை விட்டுவிட்டு, ஆடம்பரப் பொருள்களின்மீது வரிகள் விதித்ததால், அவ் வரிகள் செல்வந்தர்களைப் பெரிதும் பாதித்தபோதிலும் இதைத் தவிர வேறு வழி இல்லாமற் போயிற்று.

சுங்கத் தீர்வைகள் (Customs Duty), ஆயத்தீர்வைகள் (Excise Duties), இரயில்வே கட்டண வரிகள் ஆகியவை இந்திய அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட முக்கியமான மறைமுக வரிகளாகும். பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரிமூலமாக மத்திய அரசாங்கத்துக்குக்

கிடைக்கும் பங்கு, காலத்திற்குக்காலம் வேறுபட்டு வந்தது. இறக்குமதி சுங்கவரிகளின் (Import tariffs) முன்னேற்றம் காரணமாக, 1920-21ஆம் ஆண்டு முதல் 1925-'26ஆம் ஆண்டு வரை, வரித் தொகையில் போதுமான அளவு பெருக்கம் ஏற்பட்டது. 1925-'26ஆம் ஆண்டு முதல் 1938-'39 வரை பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரிகளால் கிடைத்த வருவாயில் சிறிதளவு மாறுதல் இருந்தது. ஆனால், அதேசமயத்தில் இறக்குமதி வரிகள், உப்புவரி, ஆயத்தீர்வைகள் இவைகளுக்கிருந்த முக்கியத்துவம் அடிக்கடி மாறுபட்டு வந்தது. 1948-'49ஆம் ஆண்டில் புதிய ஆயத்தீர்வைகள் விதிக்கப்பட்டபோது மத்திய அரசுக்கு, மறைமுக வரி மூலம் கிடைக்கும் பங்கு பெருமளவில் குறைந்துவிட்டது. இதற்குக் காரணமாக இருந்தவை போர்க்காலத்தில் ஏற்பட்ட நேர்முக வரி முன்னேற்றம், இறக்குமதி வரி விதிப்புக் குறைப்பு, வியாபார முறையில் ஏற்பட்ட மாறுதல்கள், உப்பு வரி ஒழிப்பு ஆகியவைகளேயாகும். அதற்குப் பிறகு, இறக்குமதி வரி உயர்வினாலும், இறக்குமதி பெருக்கத்தினாலும், ஆயத்தீர்வைகள், மத்திய ஆயத் தீர்வை (Central Excise) இவற்றின்மூலம் கிடைத்த போதிய வருவாய்ப் பெருக்கத்திலும், மத்திய அரசின் பங்கு அதிகரித்தது. மத்திய அரசின் வரி வருவாயில், சுங்கத்தீர்வை, ஆயத்தீர்வை இவற்றின் பங்கு 1920-'21ஆம் ஆண்டில் 63·5% ஆக இருந்து 1938-'39 இல் 75·3% ஆக உயர்ந்தது. 1948-'49-இல் அது 47·3% ஆகக் குறைந்தது. ஆனால், 1953-'54-இல் 60·8% ஆக உயர்ந்தது.

இந்தியாவில் திட்டக்காலத்தில் பொருள் வரி விதிப்பின் பங்கு (Role of Commodity taxation.), நாட்டு வளர்ச்சிக்காக வரி விதிக்கப்படவேண்டும் என்ற கொள்கைக்குச் சிகரமாக அமைந்தது. இப்போது, பொருளாதார வளர்ச்சிக்காக, வரி வருவாயைப் பெருக்க, பொருள் வரி விதிப்பின்மீது பெருமளவு நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது.

9·2 சுங்கத் தீர்வைகள் (Customs duties):- சாதாரணமாக, இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி ஆகியவையே சுங்கத் தீர்வைகள் எனப்படும். ஒரு நாட்டிற்குள் புகும் அந்நிய நாட்டுப் பொருள்கள் மீதுதான் சுங்கத்தீர்வை விதிக்கப்படுகிறதே ஒழிய, நாட்டை விட்டுச் செல்லும் வீட்டுப்பொருள்களின் மீதன்று. பொருளாதார காரணங்கள் சிலவற்றை முன்னிட்டு, இறக்குமதி வரிகளைவிட ஏற்றுமதி வரிகள் குறைவாகவே உள்ளன. 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம், ஏற்றுமதி இறக்குமதி வரிகளைக் கூட்டரசிடம் (Federal government) ஒப்புவித்தது. ஆனால் சணல்

ஏற்றுமதி வரியின் ஒரு பகுதியை, சணல் உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென ஏற்பாடு ஆயிற்று. 'ஏற்றுமதி வரியோடு நுகர்வோர் மீது வரிகள்' (Duties on consumers including export duties) என்ற சட்டதிட்டத்தின் (Constitution) கீழ் கூட்டரசிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவ் வரித்தொகையில் மாநிலங்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா என்பதைப்பற்றி ஒருவித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

பாதுகாப்புக்கெனவும், வரித்தொகையைப் பெருக்கவும், இந்தியாவில் சுங்கத்தீர்வைகள் விதிக்கப்பட்டன. கூட்டு அரசின் வரவு செலவில் நெடுநாள்களாகவே சுங்கத்தீர்வைகளின் மூலம் வந்த வரித்தொகை, முக்கியமான இடத்தை வகித்து வந்தது. ஆனால் அதைத் தற்போது ஆயத்தீர்வைகள் வென்றுவிட்டன. இறக்குமதிகளின்மீது போடப்பட்ட கடுமையான தடைகளின் காரணமாக, இதன்மூலமாக கிடைத்த வருவாய், ஓரளவு குறைந்துள்ளது. ஆகவே, ஒரு காலத்தில் சுங்கத்தீர்வைகள் தாம் பெற்றிருந்த இடத்தைத் திரும்பவும் பெறும் என்று நம்ப இடமில்லை.

9·3 இறக்குமதி வரிகள் (Import duties):- வருவாயைப் பெருக்கவோ உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவோ இறக்குமதி வரிகள் விதிக்கப்படுகின்றன. எது எப்படி இருந்தாலும் அரசாங்கத்திற்குச் சிறிதளவு வருவாய் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனினும் பாதுகாப்பு வரிகளின்மூலம் கிடைக்கும் வரித்தொகை நாளடைவில் குறைகிறது. 1923ஆம் ஆண்டு வரை இந்தியச் சுங்கவரியில் ஏற்பட்ட மாறுதல்கள் வரிச் சலுகைகளின் விளைவாகவே ஏற்பட்டன. ஆனால் சில வரிகள் பாதுகாப்புக்கென, மிக உயர்ந்த வீதத்தில் இருந்தன. 1924ஆம் ஆண்டு முதலாக இந்தியா தேர்ந்தளிதொழிற்காப்பு (Discriminating protection) என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. இதன்படி, பல பொருள்களின்மீது இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. இதில் இரும்பு, எஃகு, காகிதம், பருத்தித்துணி, தீக்குச்சி, சர்க்கரை ஆகியவைகளும் சேர்க்கப்படவேண்டும் என்பதற்காக இக் கொள்கை விரிவாக்கப்பட்டது. இப்பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரிகளால் கிடைத்த வருவாயின் அளவைக் கொண்டு இக் கொள்கை எந்த அளவிற்கு வருவாயில் செயலாற்றியுள்ளது என அறியலாம். இவ் வரிகள் 1926-'27ஆம் ஆண்டில் 16·87இலட்ச ரூபாயை வருமானமாக அளித்தன. இத் தொகை அந்த ஆண்டின் மொத்த இறக்குமதி

வருவாயில் 41% ஆக இருந்தது. எனினும், 1936-37-இல் இது 15% ஆகவும், 1965-'66-இல் 7% ஆகவும் குறைந்துவிட்டது.

1933ஆம் ஆண்டிலிருந்து, ஒட்டாவா வியாபார ஒப்பந்தத்தின்படி (Ottawa Trade Agreement), சலுகை வரிகள் புகுத்தப்பட்டுச் சுங்கவரி அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில வகைப் பொருள்களுக்குச் சலுகை காட்டப்பட்டது. இங்கிலாந்து தவிர பிற நாடுகளுடன் செய்யப் படும் வியாபாரம் தடை செய்யப்பட்டது. அதனால், இறக்குமதி வருவாய் இழப்பு ஏற்பட்டது. உதாரணமாக, குடியரசுச் சலுகையின் காரணமாக, இவ்விழப்பு, வரிவிதிப்பு விசாரணைக் குழுவின் (Taxation Enquiry Commision) மதிப்பீட்டின்படி 1952-'53ஆம் ஆண்டில் ரூபாய் 3·5 கோடிகளெனக் கணக்கிடப்பட்டது.

வரிவீதங்கள், 1934ஆம் ஆண்டின் இந்தியச் சுங்கவரிச் சட்டத்தில் காணப்படுகின்றன. பொருள்கள் 22 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 'பாதுகாப்பு' (Protection), 'வருவாய் நோக்கம்' (Revenue) அல்லது 'சலுகை நோக்கம்' (Preferential) என்ற பிரிவுகளின்கீழ் இப் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது பெரும்பான்மையான வரிகள் மதிப்பு வீதத்தில் (Advalorem) உள்ளன. அதாவது, அப் பொருளின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்ட வரியாகும். தனிப்பயன் வரிகளும் (Specific duties) இதில் இடம் பெற்றுள்ளன. பொருளின் அளவில் ஒவ்வொரு அலகிற்கும் (Unit) ஏற்றபடி கணக்கிடப்படுவது தனிப்பயன் வரியாகும். இறக்குமதிப் பொருள்கள் மத்திய ஆயத்தீர்வைகளுக்கு இலக்காகாததால், சில பொருள்களின்மீது விதிக்கப்படும் இறக்குமதி வரியில் ஈடுசெய் இறக்குமதி வரி (Countervailing Import Duty) என்ற அதிகப்படி யான வரியொன்றும் அடங்கியுள்ளது. இவ் வரி, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரியான பொருள்களின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பொதுவாக, மதிப்புவீத (Advalorem) இறக்குமதி வரிகள் 30%க்கும் 40%க்கும் இடையே உள்ளன. எனினும் குறிப்பிட்ட சில ஆடம்பரப் பொருள்கள் அல்லது தேவையற்ற பொருள்களின்மீது இவ் வரி வீதங்கள் அதிகமாகவே உள. உதாரணமாக, புகையிலைப் பொருள்கள், மதுபானவகைகள், பட்டுத்துணிகள், வாசனைச் சாமான்கள், மோட்டார்கள் இவை இறக்குமதி செய்யப்

படும்போது, அவற்றின்மீது 75% முதல் 200% வரை வெவ்வேறு வீதத்தில் வரி விதிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சில உணவுப் பொருள்கள், தொழிலுக்கு உதவும் மூலப்பொருள்கள், விவசாய இயந்திரச் சாதனங்கள் முதலியவை வரியிலிருந்து விலக்கப்பட்டன; அல்லது குறைந்த விகிதத்தில் வரிவிதிப்புக்கு இலக்காயின.

போர் நடக்கும்போதும், நடந்த பிறகும் பல பொருள்களின் மீது இறக்குமதி வரிகள் உயர்த்தப்பட்டன. 1963-'64ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் வெளியிடப்பட்ட, முக்கியமான இறக்குமதி வரிகளின் வீதங்களில் ஏற்படுத்தப்பட்ட உயர்வுகள், ஆண்டொன்றுக்கு 66 கோடி ரூபாய்கள் ஈட்டுமென மதிப்பிடப் பட்டது. இதைத் தவிர வரி விதிக்கப்பட்ட எல்லாப் பொருள் களின் மதிப்பில் 10% என ஓர் ஆண்டிற்குக் கூடுதல் வரி விதிக்கப் பட்டு, அவ் வரிவசூல் ரூபாய் 19 கோடியாக இருக்குமென மதிப்பிடப் பட்டது. சுங்க வரிகளை ஒழுங்குபடுத்தும் வரிகளை 25% வீதம் விதிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடைத்தது. இவ்வாறு 10% கூடுதல் வரியும், ஒழுங்குபடுத்தும் வரிகளை விதிக்க அரசாங்கத் திற்கு அதிகாரமும், தொடர்ந்து வந்த வரவுசெலவுத் திட்டத்தில் பின்பற்றப்பட்டு, 1967 ஆம் ஆண்டில் விலக்கப்பட்டன.

9·4 ஏற்றுமதி வரிகள் (Export Duties):- முன்னுள் சுங்க வரித் திட்டத்தில் ஏற்றுமதி வரிகள் ஒரு முக்கியமான இடத்தை வகித்து வந்தன. ஆனால், அவை நாளடைவில் ஒழிக்கப்பட்டன. 1880 ஆம் ஆண்டு முதல் 1916 ஆம் ஆண்டு வரை, அரிசிமீது மட்டுமே ஒரே ஓர் ஏற்றுமதி வரி இருந்து வந்தது.

1914-'18 ஆம் ஆண்டு, போர் நடந்தபோதும், போருக்குப் பின்னும் புதிய வரிகளைப் புகுத்தப்படவேண்டிய தேவை ஏற் பட்டதால் இத்தகைய வரிகளைத் திருப்பி விதிக்கப்பட வேண்டியதா யிற்று. 1916-இல் சணலும், தேயிலையும் ஏற்றுமதி வரி விதிக்கப் பட்டு 1935ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது. 1924-'25-ஆம் ஆண்டில் ஏற்றுமதி வரி மூலம் கிடைத்த வருவாய் 5·75 இலட்ச ரூபாய்களை எட்டிற்று.

1946ஆம் ஆண்டிலிருந்து, ஏற்றுமதி தீர்வைகள் புதுமுறையில் முக்கியத்துவத்தைப் பெற்றன. தேயிலை, காபி, பருத்தித் துணிகள், நூல், எண்ணெய் வித்துக்கள், தாவர எண்ணெய்கள், மாங்கனீஸ், சுருட்டுகள், சிகரெட்டுகள், இரும்பு, எஃகு, கறுப்பு மிளகு, கச்சாப் பருத்தி, கச்சாக் கம்பளி போன்ற பல பொருள் களின் மீது ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன. பன்னூட்டு விலை

நிலையையும், நமது ஏற்றுமதிகளை நிலைநிறுத்த வேண்டும் என்ற விருப்பத்தையும் மனதில் கொண்டு, ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைத்த வருவாய் 1951-'52-இல் ஏறத்தாழ 91 கோடி ரூபாய்களை எட்டிற்று. அப்போது அவ் வரி, மொத்தச் சுங்கவரி வருவாயில் 40% ஆக இருந்தது.

ஏற்றுமதி வரிகள், வருவாய்க்கு ஆதாரமாக இருந்ததோடல்லாமல், பணவீக்கத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தடுத்தல், உள்நாட்டு விலையை நிலைநிறுத்தல், பாதுகாப்பு ஆகிய சில பொருளாதார நோக்கங்களுக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. 1948ஆம் ஆண்டில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டபோது, பணவீக்கம் ஏற்படாமலிருக்க பலவகைப்பட்ட புதிய ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டு, ஏற்கெனவே இருந்த ஏற்றுமதி வரிகள் உயர்த்தப்பட்டன. சணல் பொருள்கள், பருத்தித் துணிகள், மிளகு இவைகளைப் பாதிக்கும் புறக்காரணிகளின் (External factors) பணவீக்கச்சக்தியைத் தடை செய்வதற்காக, இம் மதிப்புக் குறைப்புச் (Devaluation) செய்யப்பட்டது.

பன்னாட்டு விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் அந்நிய நாட்டுத் தேவையில் ஏற்பட்ட சரிவினாலும் பல பொருள்களின்மீது இருந்த ஏற்றுமதி வரிகள் குறைக்கப்பட்டன; அல்லது நீக்கப்பட்டன. 1955ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேதி ஏற்பட்ட பாகிஸ்தானிய ரூபாயின் மதிப்புக் குறைப்பினைத் தொடர்ந்து சணல் பொருள்களின்மீது நமது அரசாங்கம் ஏற்றுமதி வரியை முதன்முதலாக ஒழித்தது. இரும்பு, எஃகுப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரிகளும் விலக்கப்பட்டன. சில வகைக் கச்சாப்பருத்திகளின்மீது ஏற்றுமதி வரிகள் குறைக்கப்பட்டன. ஏற்றுமதியைப் பெருக்க, 1963-'64ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில், தேயிலைமீது இருந்த ஏற்றுமதி வரி விலக்கப்பட்டது. 1964-,65ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின்படி, கச்சா சணல்மீது இருந்த ஏற்றுமதி வரியும் விலக்கப்பட்டது.

1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் தேதி செய்யப்பட்ட ரூபாயின் மதிப்புக் குறைப்பினால் விளைந்த பொருளாதார மாறுதல்களின் ஒரு பகுதியாக, 12 பொருள்களின் மீது ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றுள் சணல் பொருள்களும், தேயிலையும், காபியும், புகையிலைப் பொருள்களும் அடங்கியிருந்தன.

அட்டவணை

இறக்குமதி வரிகளுக்கேற்ப ஏற்றுமதி வரிகளில் ஏற்பட்ட மாறுதல்களைக் காட்டுகிறது.

சுங்கத்தீர்வை வருவாய்[1]

(குறிப்பிட்ட சில ஆண்டுகளில்)

ஆண்டு	இறக்குமதி வரி	ஏற்றுமதி வரி	மொத்த வரி வருவாய்
		(கோடி ரூபாய்க் கணக்கில்)	
1938-'39	38·91	1·60	40·51
1944-'45	38·43	1·34	39·77
1948-'49	101·16	25·00	126·16
1951-'52	140·95	90·74	231·69
1955-'56	127·98	37·76	167·70
1960-'61	154·61	13·12	170·03
1965-'66	538·79	2·05	531·20
1966-'67	567·40	2·07	560·52

9·5 ஆயத்தீர்வைகள் (Excise Duties.):- அரசியல் சட்டத்திட்டத்தின்படி கூட்டு அரசு சாராயம், அபினி இவற்றைத் தவிர இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருள்களின்மீதும் ஆயத்தீர்வைகளை விதிக்கலாம். அவை மாநில அரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. மருத்துவப் பொருள்களிலும், அலங்காரப் பொருள்களில், சாராயமோ, போதைப்பொருள்களோ கலந்திருந்தால், அவைகளின்மீது மத்திய அரசு ஆயத்தீர்வை விதித்தது. ஆனால், அவ் வரிகள் மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு, அவைகளுக்கென்றே வைத்துக் கொள்ளப்பட்டன. மற்ற மத்திய ஆயத்தீர்வைகளின்மூலம் கிடைத்த வருமானம் மாநிலங்களோடு பங்கிட்டுக் கொள்ளப்பட்டன. முதலாவதுநிதிக்குழுவின் (First Finance Commission) சிபாரிசுகளின் விளைவாக, புகையிலை, தீக்குச்சிகள், காய்கறிகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்கள் இவற்றின்மீது மத்தியஅரசு ஆயத்தீர்வைகளை விதித்தது. இவற்றால்

[1] Source:- Th ory and working of union Finance by R.N. Bhargava, Chaitanya Publishing House, Allahabad, 1967.

கிடைத்த வருவாய், மத்திய மாநில, அரசுகளுக்கிடையே பங்கிட்டுக் கொள்ளப்பட்டன. இரண்டாவது நிதிக்குழு, சர்க்கரை, தேயிலை, காபி, காகிதம், முக்கியமல்லாத தாவர எண்ணெய்கள் இவற்றின்மீது புது ஆயத்தீர்வைகளை விதித்தது. இவற்றிலிருந்து கிடைத்த வருவாயும், மத்திய, மாநில அரசுகளிடையே பங்கிடப்பட வேண்டியிருந்தது. இத்தகைய பங்கிடப்படவேண்டிய ஆயத் தீர்வைகளின் எண்ணிக்கையை, மூன்றுவது நிதிக்குழு, 8-லிருந்து 35ஆக ஆக்கியது. இதில் மோட்டார்ஸ்பிரிட்டைத் தவிர, 1960-'61ஆம் ஆண்டில், தீர்வைக்கு இலக்கான எல்லாப் பொருள் களும் அடங்கியிருந்தன. இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 50 இலட்ச ரூபாய்களோ அதற்கு மேற்பட்டோ வருவாய் கிடைத்து வந்தது. இத் தீர்வைகளின் நிகர வருவாயில் 20% மாநிலங் களுக்குப் போகவேண்டியதாயிற்று. நான்காவது நிதிக்குழு, ஏற்கெனவே இருந்த மத்திய ஆயத்தீர்வைகள் 1966-'67-இல் விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள் யாவற்றையும், மத்திய, மாநில அரசுகள் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென ஏற்பாடு செய்தது. மாநில அரசுகளின் பங்கு முன்போலவே 20% ஆக இருந்து வந்தது.

9 6 உப்பு ஆயத்தீர்வை (Salt Excise):- ஆயத்தீர்வைகளில் மிகவும் பழமையானது, உப்புத் தீர்வையாகும். ஆங்கில ஆட்சிக் கால முழுவதிலும், இருந்த வரியமைப்பில் அது ஒரு முக்கிய பாகத்தை வகித்து வந்தது. அவ் வரி வீதங்களும், வரிவிதிப்பு முறைகளும் அவ்வப்போது மாறிக் கொண்டு வந்தன. 1947ஆம் ஆண்டு அத் தீர்வை நீக்கப்பட்டது. இந்தியாவில், உப்பிலிருந்து வந்த வரித்தொகை, மூன்று முறைகளில் வசூல் செய்யப் பட்டது:- (1) அரசாங்கமே உப்பு விற்பனை செய்தல் (2) இந்தி யாவில் உப்பு உற்பத்தி செய்வதற்காக அதன்மீது ஓர் ஆயத் தீர்வை, (3) அயல் நாட்டிலிருந்து தயாரிக்கப்படும் உப்பு இறக்குமதி மீது ஓர் ஈடுசெய் சுங்கத்தீர்வை (Countervailing customs duty).

உப்புத்தீர்வையிலிருந்து கிடைத்த வருவாய் ஆண்டொன்றுக்கு 8 கோடி ரூபாய்களிலிருந்து 10 கோடி ரூபாய்கள் வரை இருந்தது. இது அரசாங்கத்தின் மொத்த வருவாயில் 2%-லிருந்து 3% ஆக இருந்தது. இவ் வருவாய் 1946-'47ஆம் ஆண்டில் 9 கோடி ரூபாய்களாக இருந்தது.

இந்தியாவில் உப்புத்தீர்வை பெரும் கண்டனத்திற்கு இலக்காக இருந்தது. உப்புத்தீர்வை வாழ்க்கையின் அவசியப் பொருளைப் பாதிக்கிறது என்பதே அக் கண்டனத்தின் முக்கிய அடிப்படை

யாகும். மேலும் மக்களில் பெரும்பாலோர் மிக்க ஏழ்மை நிலையில் இருந்தால் உப்புத்தீர்வை அவர்களுக்குப் பெரும்பளுவாக இருந்தது. தவிர, மக்கள்தொகையில் பெரும் பகுதியினருக்குச் சத்துள்ள உணவு கிடைக்காத நாட்டில், உணவு தயாரிப்பதற்கு உப்பு கட்டாயமாக வேண்டியுள்ளது. மனிதனுக்கு மட்டுமின்றிக் கால்நடைகளுக்கும் உப்பு தேவை. இரசாயனத் தொழில்களிலும் உப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆகவே, மக்கள், கால்நடை, தொழில்கள் இவற்றுக்குத் தேவையான உப்பின் நுகர்வை (Consumption) உப்புத் தீர்வை தடுக்கும் என நம்பப்பட்டது. ஒவ்வோர் ஆண்டுத் தலா உப்பு நுகர்வு (Per capita consumption of salt) சுமார் 15 பவுண்டாக இருந்தது. இதுவே அமெரிக்காவில் 186 பவுண்டாகவும், இங்கிலாந்தில் 124 பவுண்டாகவும், ஜெர்மனியில் 64 பவுண்டாகவும் இருந்ததை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இது மிகவும் குறைவாகவே உள்ளது.[1] ஆகவே, உப்புத் தீர்வை, இந்தியாவில் ஏற்கெனவே குறைவாகவுள்ள உப்பு நுகர்வைக் குறைக்கும் என்று நீர்மானிக்கப்பட்டது.

தாதாபாய் நவ்ரோஜி, 'ஏழ்மையும், இந்தியாவில் ஆங்கிலேய ரல்லாதார் ஆட்சியும்' என்ற தமது புத்தகத்தில், 'இந்தியாவில் ஆங்கிலேயரின் நீண்ட நாள் ஆட்சிக்குப்பின் மக்கள் ஓர் இழிவான நிலையில் உள்ளனர். அதாவது மக்களிடம் அரசாங்கத்தால் வரிவிதிக்கப்படவேண்டிய ஒரு பொருள் கூட இல்லை என்ற இழிநிலையில் உள்ளனர். எனவே, வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளாக இருந்தாலும் அளவுக்கு மீறிய வரியை அரசாங்கம் விதிக்கவேண்டியுள்ளது. இது மனத்தைப் புண்படுத்தும் ஒரு உண்மை' என்று கூறியுள்ளார் ('What is humiliating confession to say that after this length of British rule in India, the people are in such a wretched plight that they have nothing that the Government can tax and that the Government must, therefore, tax an absolute necessity of life to an ordinate extent'). ஒரு மணங்கு உப்பு உற்பத்தி செய்வதற்கு 1½ அணைமட்டுமே செலவானதால், 1 மணங்கு உப்புக்கு 1½ ரூ. உப்புத்தீர்வை விதித்தது. அதன் உற்பத்திச் செலவுக்கு 1000 சதவீதம் வரி வீதித்தது போலாகும் என்று திரு. G. K. கோகலே எடுத்துக் காட்டினார். மகாத்மா காந்தி அவர்கள், வைஸ்ராய் இர்வின்பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில் உப்புத் தீர்வையைப்பற்றி மிகவும் தாக்கியிருந்தார். இத் தாக்குதலே, உப்புத்தீர்வைக்கு எதிராக வந்த தாக்குதல்களில் மிக முக்கியமான தாகும். 1931-இல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தின், உப்புவரிச்

[1] V.K.R.V. Rao :— 'Abolish the Salt Tax'', Mysore Economic Journal October, 1946.

சட்டத்தை மீறுதலே மகாத்மாகாந்தி ஒரு முக்கிய பகுதியாக ஆக்கினார். இதற்காகவே அவர் புகழ்பெற்ற தண்டியாத்திரையை (Dandi March) மேற்கொண்டார். உப்புத்தீர்வையைப்பற்றிக் காந்தியவர்களின் நோக்கங்களினாலும், உப்புச்சட்டத்தை மீறுதல் தேசிய சுதந்திர இயக்கத்தில் ஒரு முக்கிய பாகத்தை வகித்ததாலும், உப்புத்தீர்வைக்குப் பொதுமக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரி தெரிவித்தனர். ஆகவே, 1947ஆம் ஆண்டில் நடந்த உப்புத்தீர்வை ஒழிப்பு, பெரிதும் வரவேற்கப்பட்டது.

ஆனால், உப்புத்தீர்வைக்கு எதிராகச் சொல்லப்பட்ட குறை பாடுகள் பொருளாதாரத்தையும், மக்களின் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. வாழ்க்கைக்கு அவசியமானதும், மிருகங்களுக்குத் தேவையானதுமான உப்பின்மீது விதிக்கப்படும் வரி ஏழைகளைப் பெரிதும் பாதித்தது என்பது பொருளாதார வாதமாகும். மேற்கூறியவாறு, உப்புத்தீர்வை உண்மையாகவே ஏழைகளுக்குப் பெருஞ்சுமையாக இருந்ததா என்பதை நாம் கவனிக்கவேண்டும். 1924ஆம் ஆண்டு இந்திய வரிவிசாரணைக்குழு, உப்புத்தீர்வைச் சுமை, ஆண்டொன்றுக்குத் தலா 3 அணாவிலிருந்து 4 அணாவரை இருந்ததெனக் கணக்கெடுத்துக் காட்டியது. ஆதலால், உப்புத்தீர்வை ஒழிப்பினால் ஏழை மனிதனின் மிகச் சொற்பமான வரிச்சுமை நீங்கி, அரசாங்கத்திற்கு அதன்மூலம் கிடைத்த பெருமளவு வருவாய் இழப்பு நேரிட்டது. 'பழையவரி என்பது வரியேயன்று' என்று மூதுரை உண்டு. உப்புவரி ஒரு பழைய வரியாதலால் அதன் சுமையை யாருமே உணரவில்லை. ஆகவே பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டால் உப்புத்தீர்வைக் கிருந்த எதிர்ப்பு நியாயமானதன்று. அரசியல், மக்களது மனோபாவம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த எதிர்ப்பு நியாயமானது எனக் கொள்ளப்பட்டது. உப்புவரியைத் திரும்பவும் புகுத்தலாம் என்ற எண்ணம் இப்போது தோன்றியுள்ளது.

9·7. இதர ஆயத்தீர்வைகள் (Other Excise Duties):- 1930ஆம் ஆண்டுவரை மத்திய அரசின் ஆயத்தீர்வைகள் முக்கிய இடத்தைப்பெறவில்லை. 1930-க்குப் பின்புதான் அவை முக்கியத்துவத்தைப்பெற்று 1934ஆம் ஆண்டில் சர்க்கரை, தீப்பெட்டி, எஃகு இவற்றின்மீது பல வரிகள் விதிக்கப்பட்டன. இப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் பாதுகாப்பின்கீழ் வளர்ச்சியடைந் திருந்தன. சுங்கத்தீர்வைகளினால் இழந்தவருவாயை சுங்கத் தீர்வை களைக் கொண்டே ஈட்ட வேண்டியதாயிற்று.

இரண்டாவது உலகப்பெரும்போரின்போது, ஆயத்தீர்வை விதிப்பு விரிவடைந்தது. அரசாங்கத்திற்கு அதிக வருவாய்

வேண்டியிருந்தது. நேர்முக வரிவிதிப்பை ஓர் எல்லைக்குமேல் அதிக மாக்க முடியாதலால், ஆயத்தீர்வை மேலும் விரிவாக்கப்பட்டது. டயர் (Tyre), தாவரப் பொருள்கள், புகையிலை, காபி, தேயிலை, கொட்டைப்பாக்கு இவற்றின் மீது ஆயத்தீர்வைகள் விதிக்கப் பட்டன. ஆயத்தீர்வைகளே வருவாய்க்குச் சரியான ஆதாரமெனக் கண்டறியப்பட்டது. இவை போருக்குப் பின்பும் வழக்கிலிருந்தன. 1953-54ஆம் ஆண்டு வரிவிசாரணைக்குழு, அநேக பொருள்களின் மீது போடப்பட்டுள்ள ஆயத்தீர்வைகளைப் போதுமான அளவிற்கு அதிகரிக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது.

1957ஆம் ஆண்டில், துணிகள், சர்க்கரை, புகையிலை இவற்றின் மீது இருந்த விற்பனை வரியை நீக்க எல்லா மாநிலங்களும் ஒப்புக் கொண்டன. ஆனால், மத்திய அரசு இப் பொருள்களின்மீது அதிகப் படியான ஆயத்தீர்வைகளை விதித்தது. பின்பு பட்டுத் துணிகளின் மீதும் விற்பனைவரிக்குப் பதிலாக ஆயத்தீர்வைகள் விதிக்கப்பட்டன. இத் தீர்வைகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, அவ் வருவாய், மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன.

மத்திய ஆயத்தீர்வைகள், வருவாய் பெருகுவதற்கு ஒரு முக்கிய ஆதாரமாக இருந்து வந்துள்ளன. 1950-51ஆம்ஆண்டில் ஆயத்தீர்வை களால் கிடைத்த நிகர வருவாய் ரூ. 67·54 கோடிகளாகும். இது மத்திய அரசின் மொத்த வரித்தொகையில் 19 சதவீதமாகும். 1956-'57ஆம் ஆண்டில் இத் தொகை ரூ. 172·21 கோடிகளாகவும், மொத்த வரித்தொகையில் 34·8 சதவீதமாகவும் ஆயிற்று, 1960-'61ஆம் ஆண்டில் இத் தொகை ரூ. 408 கோடிகளாகவும், மொத்த வரிவருவாயில் 47 சதவீதமாகவும் உயர்ந்தது. 1965-'66-இல் இத் தொகை ரூ. 814·17 கோடிகளாகவும், மொத்த வரித் தொகையில் 49 சதவீதமாகவும் வளர்ந்தது. அதாவது, மொத்த வரித் தொகையில் இந்த ஆதாரத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் ஏறத்தாழ அரைப் பங்கு எனலாம். தற்போது இவ் வரியின்கீழ், மத்திய அரசின் சுங்கவரிப் பட்டியலில் சுமார் 64 பொருள்கள் அடங்கியுள்ளன. 1966-'67ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தின்படி, மத்திய ஆயத்தீர்வைகளின்மூலம் கிடைத்த வரித் தொகை ரூ. 1022 04 கோடிகளாக வளர்ந்து இருக்கிறது. இதைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம். மத்திய அரசின் வரி வருவாய்க்கு ஆதாரமாக வுள்ள இத்தகைய மறைமுக வரிவிதிப்புக்களைப் பெருமளவில் நம்ப வேண்டியிருக்கும் என்ற காரணத்தால், மத்திய அரசின் ஆயத் தீர்வைகளுக்கு மேன்மேலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அட்டவணை-21

மத்திய ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைத்த வருவாய்

(Revenue from Union Excise Duties)[1]

(சில குறிப்பிட்ட ஆண்டுகளில் மட்டும்)

ஆண்டு	வரித்தொகை (ரூபாய் கோடியில்)
1938-'39	8·65
1944-'45	38 14
1948-'49	50·65
1951-'52	85 78
1955-'56	145 25
1960-'61	416·35
1965-'66	861·35
1966-'67	1022 04
1970-'71	1415·20

9.8 இரயில் பிரயாணிகள் செலுத்தும் கட்டணத்தின்மீது வரி (Tax on Railway Passenger Fares):-இரயில் பிரயாணிகள் செலுத்தும் கட்டணத்தின்மீது 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரி விதிக்கப்பட்டது. ஆனால், 1961ஆம் ஆண்டில் இவ் வரி பிரயாணிகள் செலுத்தும் கட்டணத்துடனேயே சேர்க்கப்பட்டுவிட்டது.

சீசன் டிக்கட்டுகளைத்தவிர இதர, அதாவது 15 மைல்கள் அல்லது 15 மைல்களுக்கு மேலாகப் பயணம் செய்ய உதவிய பயணச் சீட்டுகளின் மீது படித்தர வீதத்தில் (Graduated rates) வரி விதிக்கப் பட்டது. இவ் வரிவீதங்கள் மைல்களுக்கு ஏற்ப 5%முதல் 15% வரை மாறுபட்டனவாக இருந்தன. பிரயாணிகளின் பயணச் சீட்டின் மதிப்பில் ஒரு பகுதியாக இவை வசூலிக்கப்பட்டதால், இரயில் பிரயாணத்திற்குச் செலவழித்த தொகைக்குள் இது மறைந்து இருந்தது.

1. Source :- R. N. Bhargava, Theory and Working of Union Taxation —Chaithanya Publishing House, p. 289.

இரண்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப, இவ் வரி மத்திய அரசினால் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டது. மாநில அரசுகளின் வளப்பொருள்களைப் (Resources) பலப்படுத்துவதே இவ் வரியின் நோக்கமாகும். 1959-'60ஆம் ஆண்டில் மாநில அரசுகளுக்கு ரூ. 13·06 கோடிகளும், 1960-'61-இல் ரூ. 13·79 கோடிகளும் கிடைத்தன. இவ் வரியை வசூலிக்கும் வேலையும், கணக்கிடும் வேலையும் அதிகமாக இருந்தது, இவ் வரிக்கு ஓர் எதிர்ப்பாகக் கருதப்பட்டது. ஆதலால், அரசு 1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்நாள் இவ் வரியை இரயில் பிரயாணக் கட்டணத்துடன் ஒன்று சேர்க்கத் தீர்மானித்தது. பின்பு இவ் வரி வசூலிக்கப்பட்டது. இவ் வரிக்குப் பதிலாக, இப்போது மத்திய அரசு ஒவ்வொரு வருடமும் மாநிலங்களுக்கு, ரூ. 12·50 கோடிகளைக் கொடுக்கிறது. நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இத் தொகை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

10. வரியல்லாத வருவாய்

(Non-Tax Revenues)

10.1 வரியல்லாத வருவாய் :- மத்திய அரசும், மாநில அரசுகளும் வரியைத் தவிர வேறு வழிகள் மூலமாகவும் சிறிது வருவாயைப் பெறுகின்றன. இவற்றுள் நிருவாக சம்பந்தமான வரவினங்கள் (Administrative Receipts), பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து பெறும் நிகரவருவாய் இவை அடங்கியுள்ளன. நிருவாக சம்பந்தமான வரவினங்களுள், நீர்ப்பாசனம், மருத்துவம், பொதுமக்களின் ஆரோக்கியம் (Public Health), கல்வி ஆகிய துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாய்கள் அடங்கியுள்ளன. இதன் மூலம் 1963-'64ஆம் ஆண்டில் மத்திய அரசுக்கு ரூ. 48·13 கோடிகளும், மாநில அரசுகளுக்கு ரூ. 108·87 கோடிகளும் கிடைத்தன. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து, மத்திய, மாநில அரசுகளுக்குக் கிடைக்கும் வருவாய், அவற்றின் முன்னேற்றம் காரணமாக அதிகரித்து வருகின்றன. 1963-'64ஆம் ஆண்டில் அவற்றின்மூலம் கிடைத்த வருவாய் மத்திய அரசுக்கு ரூ. 70·25 கோடிகளாகவும், மாநில அரசுகளுக்கு ரூ. 63·48 கோடிகளாகவும் இருந்தன. இவ்வாறு வரியல்லாத வருவாய் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால், அவற்றைப்பற்றி அறிய வேண்டியது அவசியமாகும்.

மற்ற நாடுகளைப் போலவே, நம் நாட்டிலும் மாநில அரசுகளுக்குச் சொந்தமாகச் சில தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் தபால், தந்தி அலுவலகங்கள், செலாவணி (Currency), நாணயச்சாலை (Mint), தேசியமயமாக்கப்பட்டதிலிருந்து இரயில்வே இலாகா ஆகியவைகள் அடங்கியுள்ளன. மாநில அரசுகளால் நிருவகிக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களுள் காடுகள், நீர்ப்பாசனம், மின்சாரம், சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள், நீர்ப் போக்குவரத்துத் திட்டங்கள் போன்றவை அடங்கியுள்ளன. நாட்டின்

திட்டமிடப்பட்ட முன்னேற்றத்திற்கு, வளரும் பொதுத்துறை ஒன்று வேண்டியுள்ளது. எந்தத் தொழில்கள் பொதுத்துறைக்குச் (Public Sector) சொந்தமாக இருக்க வேண்டும், எந்தத் தொழில்கள் தனியார் துறைக்குச் (Private Sector) சொந்தமாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி, அரசு தனது கொள்கையை அவ்வப்போது மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தற்போதைய கொள்கை, 1956ஆம் ஆண்டின் தொழிற்கொள்கைத் தீர்மானத்தைப் (Industrial Policy Resolution) பொறுத்துள்ளது. அதன்படி தொழில்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் வகையில் 17 தொழில்கள் அடங்கியுள்ளன. அவற்றின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மாநிலங்களே பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றுள் முக்கியமானவை, ஆயுதங்கள், பாதுகாப்புத் தொழில்கள், அணுச்சக்தி, இரயில்வே போக்குவரத்து, இரும்பு, எஃகு, நிலக்கரி, தாது எண்ணெய்கள் (Mineral Oils), மின்சாரம் முதலியனவாகும். இரண்டாவது பிரிவில் 12 தொழில்கள் உள. அவற்றுள் தாதுப் பொருள்கள் (Minerals), இயந்திரச் சாதனங்கள், இரசாயனப் பொருள்கள் முதலியன அடங்கியுள்ளன. இப் பிரிவின்கீழ், புது நிறுவனங்களை நிறுவ மாநிலங்களால் முயற்சி எடுத்துக் கொள்ளப் படுகிறது. தனியார் துறை நிறுவனங்களும், அவற்றோடு ஒத்துழைத்து, அவற்றை முன்னேற்ற உதவ வேண்டும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. மூன்றாவது பிரிவின்கீழ், முக்கியமாகத் தனியார்துறை (Private Sector)யினரால் முன்னேற்றப்பட வேண்டிய தொழில்கள் அடங்கியுள்ளன. இத் தொழில்களுக்குப் பல்வேறு வகைகளில் மாநில அரசின் உதவி கிடைத்தல் வேண்டும். இவ்வாறு நம் நாடு தனது தொழில் சம்பந்தமான நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வருவாயையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

10.2 இரயில்வே நிதியம் (Railway Finance):- நம் நாட்டில் அரசால் ஏற்று நடத்தப்படும் முக்கியமான வாணிக நிறுவனம், இரயில்வேக்களாகும். நாட்டின் நிதியமைப்பில், இந்திய இரயில்வேக்களின்மூலம் கிடைக்கும் நிதிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மத்திய அரசின் வரியல்லாத வருவாய்க்கு முக்கியமான ஆதாரம் இரயில்வேக்களேயாகும். 1924ஆம் ஆண்டுக்கு முன்பு, இரயில் நிதி, நாட்டுப் பொதுநிதியில் ஒரு பகுதியாக இருந்தது. இதனால், அரசாங்கப் பொது வரவுசெலவுத்திட்டத்தில் நிச்சயமின்மை (uncertainty) பெருமளவில் இருந்தது. ஆகவே 1924ஆம் வருடத்திய பிரிவு ஒப்பந்தத்தின்படி (Separation Convention), பொது வரவு செலவுக் கணக்கீட்டிலிருந்து (General Budget), இரயில்வே வரவுசெலவினங்களைப் பிரிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த

ஒப்பந்தத்தில் சில குறைகள் காணப்பட்டதால், 1949ஆம் வருடத்திய ஒப்பந்தம் ஏற்படும்வரை அவ்வப்போது அதைத் திருத்தியமைக்க வேண்டியிருந்தது. 1949ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகள் செயல்முறையில் இருந்தது. 1954-இல் இது திருத்தியமைக்கப் பட்டது. 1954ஆம் ஆண்டின் ஒப்பந்தம் (convention), வருங்கால ஒப்பந்தங்களின் காலவரையறை, ஐந்தாண்டுத் திட்டங்களின் கால வரையறையோடு ஒத்துவரலாம் என்ற கருத்தின் அடிப்படையில், திருத்தியமைக்கப்படாமல் 1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தள்ளிப் போடப்பட்டது. 1965-இல் நான்காவது இரயில்வே ஒப்பந்தக் குழு (Railway Convention Committee) வின் பரிந்துரைகள் அனைத்தும் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டன. முதலாவதாக, மதிப்பிழப்புச்சலுகை (Provision for depreciation) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 380 கோடியிலிருந்து, நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் ரூ. 650 கோடிகளுக்கு உயர்த்தப்படவேண்டுமென்பதாகும். இரண்டாவதாக, பயணிகள் கட்டண வரிக்கென மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் நிலையான ரூ. 12·50 கோடிகளுக்குப் பதிலாக, 1964ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி வரை முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு முன்னைவிட 1% அதிகமாகப் பொது வரி வருவாய்க்குச் (General Revenue) செலுத்தப்பட வேண்டும்.

மூன்றாவதாக, முதலீடு செய்யப்பட்ட தொகைகளுக்குக் கொடுக்கப்படும் இலாபப்பங்கீட்டு வீதம் 4%லிருந்து 1964ஆம் ஆண்டுவரை 5·5%க்கும், பின்பு எல்லா வகை முதலீடுகளுக்கும் 6% ஆக ஆக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது.

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில், இரயில்வேக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பயணிகளின் எண்ணிக்கையும், சாமான்கள் போக்குவரத்தும் அதிகரித்து வருவதாலும், பல்வகைப்பட்ட தொழில் நிறுவனங்களின் தேவைகளைச் சமாளிக்கவும், இரயில்வே திட்டத்தைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. இத்துடன் இரயில்வேக்கள், படைகளை இடம் பெயர்க்கவும், அவைகளுக்கு வேண்டியவைகளை எடுத்துச் செல்லவும் வேண்டிய பணிகளைப் புரிந்து, பாதுகாப்பின் (Defence) தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வேண்டியுள்ளது.

பின்வரும் அட்டவணையிலிருந்து இரயில்வே நிதியின் தற்போதைய நிலையை அறியலாம்.

அட்டவணை எண் 22

தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆண்டுகளில் இரயில்வே நிதி

(Railway Finances in Selected years)

(ரூ. கோடியில்)

	1950-'51 (Acc.) 1	1955-'56 (Acc.) 2	1960-'61 (Acc.) 3	1965-'66 (Acc.) 4	1967-'68 (R. E.) 5	1968-'69 (B. E.) 6
I செலவுக்கு உள்ள மூலதனம்	827·04	968·98	1520·87	2680·32	2991·57	3134·57
II மொத்தப் போக்குவரத்து வரவுகள்	263·01	316·29	456·80	733·57	829·55	892·50
(a) பயணிகள் (Passengers)	97·84	107·71	131·59	219·17	255·25	278·00
(b) பயணிகளைச் சார்ந்த பொருள்கள், (Other Coaching)	16·64	20·87	27·21	39·40	39·80	43·00
(c) கூட்ஸ் வண்டிகள் (Goods)	143·01	180·28	286·14	465·49	509 00	545·00
(d) இதர சம்பாதனைகள்	5·52	7·43	11·86	9·51	25·50	26·50
III மொத்தச் செலவுகள் (1+2+3+4)	215·45	265·95	368·93	598·73	711·06	739·49
(1) சாதாரண வேலைக்கான செலவுகள், (Ordinary Working Expenses)	180·23	212·95	313·15	485·85	589·74	614·01
(2) மதிப்பிழப்பு (Depreciation)	30·00	45·00	45·00	85·00	95·00	100·00

(3) புதிதாக அமைக்கப்பட்ட பாதைக்கான செலவு (Payments to Worked lines)	0·25	0·26	0·09	0·19	0·16	0·16
(4) இதர செலவுகள்	4·97	7·74	10·69	15·69	16·23	15·39
(5) உதவிச் சம்பள நிதி (Pension Fund)	—	—	—	12·00	9·93	9·93
IV நிகர வருவாய் (II-III)	47·56	50·36	87·87	134·84	118·49	153·01
V பொது வருவாய்க்கான இலாபப் பங்கீடு (Dividend to General Revenues)	32·51	36·12	55·86	103·78	141·08	152·00
VI இரயில்வே பயணிகள் கட்டண வரிக்குப் பதிலாக பொதுவரி வருவாய்க்குச் செலுத்தப்படும் தொகை				12·50		
VII உபரி, (Surplus) (IV-V-VI)	15·05	14·22	32·01	18·56	22·59	1·00
VIII ஒதுக்கீடு (Appropriation)						
(a) முன்னேற்ற நிதி (Development Fund)	10·00	7·08	32·01	18·56	—	1·00
(b) வருவாய்த் தேக்கநிதி (Revenue Reserve Fund)	5·05	7·14	—	—	22·59	—

Source :- Reserve Bank of India Bulletin, April 1969
Acc :- Account. R. E- Revised Estimate, B. E- Budget Estimate.

செலவுக்கு உள்ள மூலதனம் (Capital at charge) என்பது இரயில் வேக்களில் முதலீடு செய்யப்பட்ட மூலதனமாகும். மொத்தப் போக்குவரத்து வருவாய் என்பது மொத்த வரவினமாகும். மொத்த வருவாய்களின் பிரிவு (break up) மூன்றுவதாகக் காட்டப் பட்டுள்ளது. பொது வருவாயின் இலாபப்பங்கீடு (dividend) என்பது, செலவுக்கான மூலதனத்தின் சதவீதப்படி, அரசாங்கத்தின் பொது வருவாய்க்காக, இரயில்வேக்களால் கொடுக்கப்படும் பங்காகும். இம்மூன்று எச்சமயத்திலுள்ள ஏற்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இரயில் பயணிகளின் கட்டணங்களின் மீது 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரி விதிக்கப் பட்டது. அதன்மூலம் கிடைத்த வருவாய் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இவ் வரி இரயில் கட்டணங்களோடு சேர்க்கப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக, மாநிலங்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக ரூ. 12·50 கோடிகளை, இரயில்வேக்கள் ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய தாயிற்று. பொது வருவாய்க்கு இரயில்வேக்கள் கொடுக்கும் பங்கிற்கும், நிகர வருவாய்க்குமுள்ள வேறுபாடே அவற்றின் உபரி யாகும். இவ்வுபரி, முன்னேற்ற நிதிக்கும், (Development Fund), வருவாய்த் தேக்க நிதிக்கும் (Revenue Reserve Fund) பகிர்ந்தளிக்கப் படுகிறது. வருவாய்த் தேக்க நிதிக்கு அளிக்கப்பட்ட தொகை 1955-'56-இல் நிறுத்தப்பட்டு, தற்போது முழு உபரியும் (Surplus) முன்னேற்ற நிதிக்கே ஒதுக்கப்படுகிறது.

செலவுக்காகவுள்ள மூலதனம் (Capital at Charge) பரிசீலிக்கப் பட்ட ஆண்டுகளில் பெருக்கத்தைக் காட்டியது. 1950-'51 முதல் 1960-'61 வரை இருமடங்காகவும், 1965-'66-இல் மும்மடங்காகவும், 1968-'69-இல் நான்கு மடங்காகவும் ஆகியது. மொத்தப் போக்கு வரத்து வரவுகள் கிட்டத்தட்ட விகிதாச்சாரமாகப் பெருகின. மொத்தச் செலவுகள் மிக நிதானமாகவே அதிகரித்தன. மொத்த வரவுகளைவிட செலவுகள் நிதானமாக அதிகரித்ததால், இரயில்வேக் களின் வருவாய் மேன்மேலும் பெருகியது. 1965-'66-இல் இவ் வருவாய் 1950-'51-இல் இருந்ததைவிட மூன்று மடங்குகளுக்கும் அதிகமாக இருந்தது.

10.3 தபால், தந்தி இலாகா (Post and Telegraphs) :- தபால் தந்தி இலாகாவின் நிதி, மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் (Central Budget) ஒரு பகுதியாகயுள்ளது. 1959-'60ஆம் ஆண்டு வரை, இந்த இலாகா, தனது செலவுக்கென இருந்த மூலதனத்திற்கு (Capital at charge), அரசாங்கத்தால் வாணிக நிறுவனங்களுக்காக விதிக்கப் பட்ட வட்டிவீதப்படி, வட்டித் தொகையைப் பொது வருவாய்க்குச்

(General Revenue) செலுத்தி வந்தது. சீரமைப்புத் தேக்க நிதி (காப்புநிதி) (Renewals Revenue Fund), மூலதனத்திற்கான வட்டி இவையுட்பட எல்லாச் செலவுகளையும் சமாளித்த பின்னர், இவ் விலாகாவின் உபரி, பொது வருவாய்களுக்கும் (General Revenues) தபால், தந்தி இலாகாவிற்குமிடையே 50:50 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. 1960ஆம் வருட ஆரம்பத்தில் இந்த ஏற்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டன. அந்த இலாகாவின் வளரும் முதலீட்டுக்காகப் போதுமான காப்பு நிதிகள் தேவைப்பட்டதால், இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டன. விரைவான நுட்பத்தொழில் முன்னேற்றத்தின் (Technological advance) விளைவாக, சமீப ஆண்டு களாக, மொத்தச் செலவுக்காகவுள்ள மூலதனம், 1948-'49-இல் ரூ. 38 கோடிகளாக இருந்து, 1958-'59-இன் முடிவில் ரூ. 129 கோடி களாகப் பெருகியுள்ளது. 1960-'61-இல் திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி, தபால் தந்தி இலாகாவும், பொது வருவாயைப் பொறுத்தவரை, ரெயில்வேயைப் போன்று அதே நிலையில் வைக்கப் பட்டுள்ளது. அதன் செலவுக்காகவுள்ள மூலதனத்திற்கு வட்டி செலுத்த வேண்டும். இவ்வட்டிவீதம், அவ்வப்போது நடைமுறையி லுள்ள வட்டி வீதத்தைப் பொறுத்து மாறலாம். பொது வருவாய்க்கு இலாபப் பங்கீட்டைச் செலுத்திய பின்னர், கையசமுள்ள மீதிப்பணம் கட்டடக்காப்பு நிதிக்கும், முன்னேற்றத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொது வருவாய்க்கு இந்த இலாகாவின் நிகர பங்கு (Net Contribution) 1950-'51-இல் ரூ. 3·98 கோடிகளாக இருந்து, 1959-'60-இல் ரூ. 5·13 கோடிகளாகியது. பின்பு புது ஏற்பாடுகளின் விளைவாக, இத் தொகை குறைந்து 1961-'62-இல் ரூ. 77 இலட்சங்களாகியது. 1965-'66-இல் அது ரூ. 1·84 கோடிகளாகவும், 1968-'69-இல் ரூ. 2.68 கோடிகளாகவும் உயர்ந்தது.

10·4 செலாவணியும், நாணயச்சாலையும் (Currency and Mint) :— சமுதாயத்திற்கு ஒரு நிலையான செலாவணியை அளிப்பது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். செலாவணியின் பெரும் பகுதி, அடையாளச் சின்னமாக (Token) இருப்பதால், இம் முறையில் அரசு ஆதாயமடைகிறது.

இந்தியாவில், செலாவணியிலிருந்து கிடைக்கும் வருவாயில், ரிசர்வ் பாங்கின் நிகர இலாபங்கள். செலாவணிக் காகிதங்களை (Currency Notes) அச்சிடுவதனல் பெறும் வரவினங்கள், அடையாள நாணயங்கள் மூலம் பெறும் இலாபங்கள் இவை அடங்கியுள்ளன. ரிசர்வ் பாங்கின் (Resvere Bank) இலாபங்கள் பெருகிவிடுவதால்

பொது வருவாய்க்கு (General Revenue) அதன் பங்கு அதிகமாகிக் கொண்டே வருகிறது. இந்தியாவில் எல்லா நாணயங்களும் அடையாளச் சின்னங்களாக இருப்பதால் நாணயச்சாலை (Mint), வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகவுள்ளது. செலாவணியிலிருந்தும், நாணயச்சாலையிலிருந்தும் கிடைக்கும் வருவாய், சமீப ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ச்சியைக் காட்டியுள்ளது. செலாவணியின் சுழற்சிப் (Circulation) பெருக்கம் இதற்குக் காரணமாகும். 1963-64ஆம் ஆண்டில் இதன்மூலம் கிடைத்த வருவாய் ரூ. 40·68 கோடிகளாக இருந்தது. 1965-'66ஆம் வருடத்தியவரவுசெலவுத் திட்டத்தின்படி, இவ் வருவாய் ரூ. 55·29 கோடிகளாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த எண்களைச் கொண்டு, வருவாய்க்கு இந்த ஆதாரம் எவ்வளவு முக்கியமானது என்பதை அறியலாம்.

10·5 மாநிலங்களில் பொதுத்துறைத் தொழில்கள் (Public Enterprises in States.) :— விவசாய நாடான இந்தியாவில், நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி வற்புறுத்தக் கூற வேண்டிய அவசியமில்லை. நீர்ப்பாசன வசதிகளில் பெரும்பகுதி அந்தந்த மாநிலங்களாலேயே அளிக்கப்படுகின்றன. நீர்ப்பாசன வரிவீதங்கள், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. இவ் வரிவீதங்கள் உழுது பயிரிடுபவனுக்கு நியாயமானதாகவும், அதேசமயத்தில் அரசாங்கத்திற்குப் போதுமான வருவாயை அளிக்கக் கூடியனவாகும், இருக்க வேண்டியுள்ளன. அரசாங்கம் நீர்ப்பாசனச் செலவுகளைச் சமாளிக்கவும், மூலதனத்திற்கு வட்டி செலுத்தவும் இவ் வரி உதவுகிறது. இவ் வருவாய் ஆண்டுக்காண்டு மாறுகிறது. நீர்ப்பாசன வசதிகளால் பயனடையும் நிலங்களின்மீது மேம்பாட்டு வரியை (betterment levy.) விதிக்கவும் புதுத் தொழில்களால் அதிகச் செலவை எதிர்நோக்கியதாலும் விவசாயப் பொருள்களின் விலை ஏற்றத்தாலும் தண்ணீர்த்தீர்வைகளை அதிகரிக்கவும், திட்டக்குழு (Planning Commission) சிபாரிசு செய்துள்ளது. சில மாநிலங்களில் மேம்பாட்டுவரி விதிக்கப்பட்டு, ஏற்கனவே இருந்த தண்ணீர்த்தீர்வை (Water Rates)களும் அதிகமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் தாமதமேற்பட்டது. இவற்றின்மூலமாக, மாநிலங்களின் வருவாய் 1950-'51-இல் ரூ, 8·03 கோடிகளிலிருந்து. 1956'57-இல் ரூ. 10·90 கோடிகளாகப் பெருகியது. ஆனால், 1960-61-இல் இது ரூ. 7·60 கோடிகளாகக் குறைந்தது. 1963-'64-இல் இவ் வருவாய் பெருகி ரூ. 10·13 கோடிகளாகியது. 1965-'66 வரவு செலவுத்திட்டம் இவ் வருவாயை ரூ. 13·54 கோடிகளாக இருக்குமெனக் கொண்டது.

இந்தியாவிலுள்ள எல்லாக் காடுகளும் உபயோகப்படுத்தப் படாத போதிலும், அவற்றின் மூலமாகச் சிறிதளவு வருவாய் கிடைத்து வருகிறது. காடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய், மரங்கள், கரி, புல், அரக்கு (Wax), கோந்து (Gum), மூலிகைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கின்றன. காடுகளை முன்னேற்றுவதற்காக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மொத்தம் ரூ. 28·8 கோடிகள் செலவழிக்கப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 51 கோடிகள் ஒதுக்கப்பட்டன. சமீப ஆண்டுகளில் காடுகளிலிருந்து மாநிலங்கள் பெறும் வருவாயில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுகின்றது. 1951-'52-ஆம் ஆண்டில் இவ் வருவாய் ரூ. 12·61 கோடிகளாக இருந்து, பின்னர் 1963-'64-இல் ரூ. 40·16 கோடிகளுக்கு உயர்ந்து, தொடர்ந்த ஆண்டுகளில் மேலும் அதிகரித்துள்ளது.

மின்சாரத் தொழில்கள் மாநிலங்களில், அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளன. இந்த முறை உத்தரப்பிரதேசத்தில் 1947ஆம் ஆண்டிலும், சென்னையில் 1949-லும் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்றின. 1951-'52-இல் எல்லா மாநில மின்சாரத் திட்டங்களிலிருந்தும் கிடைத்த மொத்த நிகர வருவாய் ரூ. 3·41 கோடிகளாகும். 1955-56-இல் இது ரூ 7·46 கோடிகளாகி, 1960-'61-இல் ரூ 3.45 கோடிகளாகக் குறைந்து, 1966-'67 வரவுசெலவுத்திட்டத்தின்படி ரூ 10·45 கோடிகளாக உயர்ந்தது.

1945-'46ஆம் ஆண்டில், மாநில அரசுகள் சாலைப்போக்குவரத்துத் துறையில் புகுந்தன. பல மாநிலங்களில், சாலைப்போக்குவரத்தில் பெரும்பகுதி, பொதுத்துறையின்கீழ் உள்ளன. பல மாநிலங்களில் நீர்ப்போக்குவரத்தும், அரசாங்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விரு போக்குவரத்துகளிலிருந்தும் கிடைத்த நிகர வருவாய் 1951-'52-இல் ரூ 0.77 கோடிகளாக இருந்தது. 1955-'56-இல் ரூ 1.45 கோடிகளுக்கு உயர்ந்து, 1960-'61-இல் ரூ 5·74 கோடிகளாகி, 1966-'67ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின்படி ரூ 6·05 கோடிகளை எட்டியது.

10·6. இதர பொதுத்துறைத் தொழில்கள் (Other Public Enterprises) :— மத்திய அரசின்கீழ் இரயில்வேக்களும், தபால், தந்தி இலாகாவும், மாநில அரசுகளின்கீழ் மின்சார வாரியங்களும் (Electricity Boards), போக்குவரத்துத் தொழிலீடுபாடுகளும் (Transport Undertakings), பரம்பரைப் பொதுத்துறைத் தொழில்

களுள் முக்கியமானவையாகும். 1956ஆம் ஆண்டின் தொழிற் கொள்கைத் தீர்மானப்படி (Industrial Policy Resolution) பொதுத் துறையின்கீழ் மேலும் பல நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இலாபத்தைவிடப் பொதுநலனைப் பற்றிய ஆர்வமே, பொதுத் துறைத் தொழில்களின் நோக்கமாக இருக்க வேண்டுமென்பதே பரம்பரை விவாதமாகும், ஆனால், பொருளாதார முன்னேற்றத் துக்காக, சாதனங்களின் (Resources) இடப்பெயர்ச்சியை அதிக மாக்குவதில் பொதுத்துறைத் தொழில்களின் பங்கு அதிகமாக இருக்கவேண்டும். பொதுத்துறைத் தொழில்கள் ஈட்டும் இலாபம் பொதுத்துறை நோக்கங்களோடு பொருந்தாததன்று, என்று 1955ஆம் ஆண்டின் வரிவிசாரணைக்குழு எடுத்துக் காட்டியது. உண்மையில் இப் பொதுத்துறைத் தொழில்களில் கிடைக்கும் உபரிகள் (Surpluses), முன்னேற்றத்திற்கான முதலீட்டு நிதிகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன.

பொதுத்துறைத் தொழில்களின் உபரிகள், திட்ட நடவடிக்கை களைச் செயற்படுத்தப் பயன்படவேண்டும் என்ற கொள்கையை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் ஆமோதித்தது. இதனால், இரயில்வேயைத் தவிர இதர மத்திய அரசின் பொதுத்துறைத் தொழில்களிலிருந்து ரூ. 300 கோடிகளும், மாநில அரசுகளின் பொதுத்துறைத் தொழில்களிலிருந்து ரூ 150 கோடிகளும், ஆக மொத்தம் ரூ 450 கோடிகள் நிதிக்குக் கிடைக்குமென மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் மதிப்பிட்டது. இத் தொகை, 'அப் பொதுத் துறைத் தொழில் நிறுவனங்கள், அவைகளை நடத்த ஆகும் செலவுகள், சாதாரண ஈடுசெய் செலவுகள், வட்டி, இலாபப் பங்கீடுகள் ஆகியவற்றைக் கொடுத்தபின், அவைகளிடம் உள்ள கையிருப்பேயாகும்' ('The balance of resources available with the public enterprises after providing for their working expenses, normal replacements, interest and devidend')[1].

இரயில்வேக்களைத் தவிர இதர பொதுத்துறைத் தொழில்களி லிருந்து, மூன்றுவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில், கிடைத்த உண்மையான வருமானம் ரூ. 373 கோடிகளாகும். இதில் ரூ. 269 கோடிகள் மத்திய அரசு நிறுவனங்களிலிருந்தும், ரூ. 104 கோடிகள் மாநில அரசுகளின் நிறுவனங்களிலிருந்தும் கிடைத்தனவாகும்.

1968-'69ஆம் ஆண்டில் நிலவிய வீதங்களையும் (rates), விலை களையும் அடிப்படையாகக் கொண்டால், இரயில்வேக்கள் நீங்கலாக இதர பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் உபரி

[1] Third Five Year Plan Repor,tp-. 97

ரூ. 1465 கோடிகளாக இருக்குமென்று, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு (Draft) கணக்கிட்டது. இதில் ரூ. 910 கோடிகள் மத்திய அரசு நிறுவனங்களிலிருந்தும், ரு. 555 கோடிகள், மாநில அரசுகளின் நிறுவனங்களிலிருந்தும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இப் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கினை (Contribution) அதிகரிக்க மேலும் சில முறைகளை இவ்வைந்தாண்டுத் திட்டம் எடுத்துக் கூறியுள்ளது :—

1. மாநில மின்சாரவாரியங்களின் வேலைக்குழுவினுல் (வெங்கட்ராமன் குழு) சிபாரிசு செய்யப்பட்டபடி, மாநில அரசுகளின் மின்சாரத் தொழிலீடுபாடுகளில் (Electricity Undertakings), முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்திற்குக் கிடைக்கும் விளைவு வீதம் (rate of return) 11%-க்குக் குறைவாக இருக்குமிடத்தில் 11% ஆக ஆக்கப்படவேண்டும். இவ் வீதங்களை அதிகப்படுத்தியோ மாற்றியமைத்தோ, வசதிமிக்க நுகர்வோரை, மின்சாரத்திற்கு அதிகப்படியான விலையைக் கொடுக்கும்படிச் செய்யலாம்.

2. நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் நிதிவருவாயை அதிகரிக்க வழிவகைகளைக் கூறுவதற்கென அமைக்கப்பட்ட குழுவின் (நிஜலிங்கப்பா குழு) பரிந்துரைப்படி, நீர்ப்பாசன வசதியினுல் நன்மையடைந்த விவசாயிகளுக்கு, அந் நிகர இலாபத்தில் 25% முதல் 40% வரை நீர்ப்பாசன வீதங்களை விதிக்கலாமெனவும், அத்தகைய நன்மைகளைக் கணக்கிட முடியாத இடங்களில், நீர்ப்பாசன வசதியினுல் விளைந்த தானியங்களிலிருந்து கிடைத்த மொத்த வருவாயில் 5% முதல் 12% வரை இவ் வீதங்கள் இருக்கலாமெனவும், கூறப்பட்டது. குறைந்தபட்சம் பாதுகாப்புச் செலவு, நடவடிக்கைச் செலவு இவற்றைச் சமாளிக்கவாவது, ஒரு கட்டாயக் கூடுதல் வரியும், மேம்பாட்டு வரியும் (betterment levy) விதிக்கப்படலாமென இக் குழு யோசனை கூறியது. இக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றினுல், நீர்ப்பாசனத் திட்டங்களினுல் நேரடியாகப் பயனடையும் விவசாயத்துறையின் பிரிவிலிருந்து வளப்பொருள்களை (resources) இடம் பெயர்க்க முடியும்.

3. பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர, இதர தொழில் நிறுவனங்களுக்கும், வாணிக நிறுவனங்களுக்கும் பயன்படும் முதலீடுகளிலிருந்து பெறும் வருவாயை 15%-க்கு உயர்த்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

நிதியமைச்சர் இலாகாவினைச் சார்ந்த, பொதுத்துறைத் தொழில் நிறுவனச் சபையினுல், மத்திய அரசு நிறுவனங்களின் நிதி விளைவுகள் (financial returns) ஆண்டுதோறும் பிரசுரிக்கப்படு

கின்றன. மாநில அரசுகளின் தொழில் நிறுவனங்களைப்பற்றி இத்தகைய வெளியீடுகள் வருவதில்லை. பொதுத்துறைத் தொழில் நிறுவன கழகத்தின் (Bureau of Public Enterprises) வருடாந்திர அறிக்கையின்படி, 1967-'68ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய அரசின் கீழ் அலுவலக நிறுவனங்கள் (Departmental Undertakings) நீங்கலாக 83 தொழில் நிறுவனங்கள் இருந்தன. இவற்றுள், பாராளுமன்றச் சட்டத்தின்படி 6 நிறுவனங்கள் சட்டபூர்வமான கார்ப்பரேஷன்களாக (Statutory Corporations) நிறுவப்பட்டன. மீதி 77 நிறுவனங்கள் அரசாங்க நிறுவனங்களாக ஆக்கப்பட்டன. மத்திய அரசின் அலுவலக நிறுவனங்கள் நீங்கலாக, இதர தொழில் நிறுவனங்களின் மொத்த முதலீடு 1966-'67-இல் ரூ. 2841 கோடிகளாக இருந்து, 1967-'68-இன் இறுதியில் ரு 3333 கோடிகளாகியது. இதில் நியாய முதலீடு (Equity Capital) ரூ. 1633 கோடிகளாகவும், நீண்டநாள் கடன்கள் (long-term loans) ரு. 1700 கோடிகளாகவும் இருந்தன. இம் முதலீட்டில் பெரும்பகுதி மத்திய அரசிலிருந்து வந்ததாகும். மாநில அரசுகளும், இம் மத்திய அரசு நிறுவனங்களின் முதலீட்டு ஆளிப்பில் பங்கெடுத்துக் கொண்டுள்ளன.

இந்திய அரசாங்கப் பாங்குடன் (State Bank of India) ரொக்கக் கடன் (Cash-Credit) ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட்டு, செலவுக்கு வேண்டிய முதலீட்டுத் தேவைகள் சமாளிக்கப்படுகின்றன. இவ்விதமாக, 1967-'68ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் மொத்த முதலீடு பின்வருமாறு இருந்தது :—

மத்திய அரசு	—	ரூ. 3029·2 கோடிகள்
மாநில அரசுகள்	—	ரூ. 8·6 கோடிகள்
தனித்துறைப் பிரிவினர் (இந்தியா)	—	ரூ. 21·9 கோடிகள்
தனித்துறைப் பிரிவினர் (அயல்நாடு)	—	ரூ. 272·8 கோடிகள்
		ரூ. 3332·5 கோடிகள்
ரொக்கக்கடன் ஏற்பாட்டின்படி கடன்கள்	—	ரூ. 199·6 கோடிகள்
		ரூ. 3532·1 கோடிகள்

முதலீட்டைப் பொறுத்து முதல் 10 இடங்களை வகிக்கும் நிறுவனங்கள் பின்வருமாறு :—

1. இந்துஸ்தான் எஃகு நிறுவனம் (ரூ. 1083 கோடிகள்)
(Hindustan Steel Ltd.)
2. கனரகப் பொறியியல் கார்ப்பரேஷன் (ரூ. 211 கோடிகள்)
(Heavy Engineering Corporation Ltd.)
3. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன் (ரூ. 175 கோடிகள்)
(Neyveli Lignite Corporation Ltd.)
4. எண்ணெய், இயற்கைவாயுக் குழு (ரூ. 168 கோடிகள்)
(Oil and Natural Gas Commission)
5. தேசிய நிலக்கரி முன்னேற்றக் கார்ப்பரேஷன் (ரூ. 167 கோடிகள்)
(National Coal Development Corporation Ltd.)
6. இந்துஸ்தான் விமானப் பகுதிகள் தயாரிப்பு நிறுவனம் (ரூ. 160 கோடிகள்)
(Hindustan Aeronautics Ltd.)
7. இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் (ரூ. 154 கோடிகள்)
(Indian Oil Corporation Ltd.)
8. பாரத் கனரக மின்சாரத் தொழில் (ரூ. 143 கோடிகள்)
(Bharat Heavy Electricals Ltd.)
9. இந்திய எருக் கார்ப்பரேஷன் (ரூ. 137 கோடிகள்)
(Fertilizers Corporation of India Ltd.)
10. கனரக மின்சாரத் தொழில் இந்தியா (ரூ. 104 கோடிகள்)
(Heavy Electricals India Ltd.)

மேற்கூறிய 10 நிறுவனங்களின் மொத்த முதலீடு, மத்திய அரசு நிறுவனங்களின் மொத்த முதலீட்டில் சுமார் 75% ஆகும்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள். இலாபகரமைச் சேர்ந்த நிறுவனங்கள் இவை நீங்கலாக இதர மத்திய அரசு நிறுவனங்களின் நிதி விவரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது. இவற்றுள் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் கணக்கு, ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பொருந்தியிருப்பதை இந்த அட்டவணை காட்டுகிறது. அதே சமயத்தில் நடைமுறையில் இயங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்திருப்பதையும் காணலாம்.

அட்டவணை எண்: 25

மத்திய அரசின் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதிவிளைவுகளின் தொகுப்பு (புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள், இலாகாவைச் சேர்ந்த தொழில்கள் நீங்கலாக)

(Summarised Financial Results of Central Goverment undertakings—Excluding those under construction and departmental undertakings)

(ரூ. கோடிகளில்)

	1967-'68		1966-'67		1965-'66		1964-'65		1963-'64		1962-'63	
	No.	Rs.	No;	Rs.	No.	Rs.	No;	Rs.	No:	Rs.	No;	Rs.
வேலையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் விளைவுகள் (இந்துஸ்தான் எஃகு நிறுவனம் உட்பட)												
(1) மதிப்பிழப்பிற்குமுன் உபரி, வட்டி, வரி	55	175	44	135·5	40	128·6	34	112·2	32	92·4	30	65·9
(2) மதிப்பிழப்பு (depreciation)		119		9·59		74·3		64·5		50·4		47·4
(3) மொத்த இலாபம் (1—2)		56		39·6		54·3		47·7		41·9		18·5
(4) நிகர லாபம் (எல்லாவற்றையும் சரிக் கட்டிய பின்னர்)				-3·15		21·5		0·7		14·9		-7·3
(a) இலாபத்தை ஈட்டும் நிறுவனங்களின் மொத்த நிகர இலாபம்	31	48	27	29·9	32	29·5	30	2·8	29	20·2	27	31·3
(b) நஷ்டத்தில் ஈடுபடும் நிறுவனங்களின் மொத்த நஷ்டம்	24	-83	17	-61·4	8	-7·9	4	-2·1	3	-5·3	3	-24·0

Source :—Adapted from Commerce, June 22, 1963 (Supplement on "The Public Sector in India")

பின்வரும் இரு அட்டவணைகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் இலாப விகிதங்களைக் காட்டுகின்றன. மொத்தத்தில், அரசாங்க நிறுவனங்களைவிட, தனியார்துறை நிறுவனங்களே நல்ல நிதிவிளைவுகளைக் காட்டியுள்ளன.

அட்டவணை எண் 24

தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசாங்க நிறுவனங்களின் இலாப விகிதங்கள்[1]

(Profitability Ratios of Selected Government Companies)

	நிறுவனங்கள் (Giant Companies)			இதர நிறுவனங்கள்		
	1964'-65	1965-'66	1966'-67	1964'-65	1965'-66	1966'-67
1. மொத்த இலாபம் (விற்பனையின் சதவீதப்படி)	4·7	7·5	2·8	9·3	8·5	9·8
2. மொத்த இலாபம் (பயன்படுத்தப் பட்ட மூலதனத்தின் சதவீதப்படி)	1·3	1·8	0·7	6·2	5·2	6·2
3. வரியைக் கொடுத்த பின் இலாபம் (நிகரச் செல்வத்தின் சதவீதப்படி)	0·8	0·5	2·9	6·8	4·6	6·6

அட்டவணை எண் 25

தேர்ந்தெடுக்கப்பட்ட சில தனியார்துறை நிறுவனங்களின் இலாப விகிதங்கள்[2]

(Profitability Ratios of Selected Private Sector Companies)

	1964'-65	1965-'66
1. மொத்த இலாபம் (விற்பனையின் சதவீதப்படி)	9·9	9·4
2. மொத்த இலாபம் (பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் சதவீதப்படி)	10·4	9·9
3. வரியைக் கொடுத்தபின் இலாபம் (நிகரச் செலவின் சதவீதப்படி)	9·3	8·7

[1] Source:- Reserve Bank of India Bulletin, Septr, 1968

[2] Source :- Reserve Bank of India Bulletin, December, 1967

இவ்வாறு பொதுத்துறை நிறுவனங்களுக்குப் பெருமளவில் முன்னேற்றம் தேவைப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்களின் இத்தகைய திருப்தியற்ற நடவடிக்கைகளுக்குக் காரணங்கள் என்ன என்பதைப்பற்றிக் கவனிப்போம். முதலாவதாக, தனியார்துறை நிறுவனங்களின் செய்கைகளைப் பற்றித் தீர்ப்பளிக்க, இலாபம் தெளிவிலக்கணமாகப் (Criterion) பயன்படுகிறது. ஆனால், இது பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றித் தீர்ப்பளிக்கப் பொருந்தி வராது. நிதி சம்பந்தமற்ற, சமூக, பொருளாதார சம்பந்தமான சில கருத்துகளைப்பற்றியும் கவனிக்க வேண்டும். இரண்டாவதாக, சில பொதுத்துறை நிறுவனங்கள், அவற்றின் திறமையை முழு அளவுக்குப் பயன்படுத்துவதில்லை. இதனால், இலாபம் குறைகின்றது. மூன்றுவதாக, பொதுத்துறை நிறுவனங்களைப்பற்றிய பாராளு மன்றக் குழு (Parliamentary Committee on Public Undertakings)வும் அலுவலகச்சீரமைப்புக்குழுவும் (Administrative Reforms Commission) எடுத்துக்காட்டியுள்ளபடி பொதுத்துறை நிறுவனங் களின் அமைப்பும், நிருவாகமும் முன்னைவிட அதிகமாகத் தொழில் திறமையைக் கவனிக்கவேண்டும். 1969ஆம் ஆண்டு மார்ச் மாதம், அப்போதைய நிதியமைச்சர், திரு. மொரார்ஜி தேசாய், பொதுத் துறைத் தொழில்சீர் முன்னேற்றுவதற்கான அரசியல் தீர்மானங்கள் அடங்கிய ஒப்பந்தப்பத்திரம் (Memorandum) ஒன்றினைப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் வைத்தார்.[1] நிறுவனங்களைச் சீர்திருத்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள், பொதுத்துறை நிறுவனங்களின் திறமையைப் பெருக்கி, அதன் விளைவாக அவற்றுள் போதுமான அளவு உபரி ஏற்பட்டு, அவை முதலீட்டுக்கு உதவுமென எதிர்பார்க்கப்பட்டது.

[1] Memorandum on Public Sector Undertakings, presented to Parliament reproduced in Commerce, March 8, 1969.

11. இந்திய அரசாங்கச் செலவு

(Public Expenditure in India)

இந்தியாவில் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே பணிகள் (functions) பிரிக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் 7ஆவது அட்டவணையில், முதல் பட்டியலில் (list) கொடுத்துள்ளபடி, பாதுகாப்பு, ஆயுதப்படைகள், அந்நிய நாட்டு நடவடிக்கைகள், கப்பல், விமானம், இரயில்வேக்கள், தேசீய நெடும்பாதைகள், தபால், தந்தி, தொலைபேசிகள், வானொலி ஆகியவற்றைச் சார்ந்த பணிகள், மத்திய அரசின் முக்கிய பணிகளும் செலவினங்களுமாகும். இரண்டாவது பட்டியலில் கொடுத்துள்ளபடி, நீதியும் ஒழுங்கு முறையும் (Law and Order), காவல்துறை, பொதுநலம், சுகாதாரம், ஆஸ்பத்திரிகள், மருந்தகங்கள் (dispensaries), கல்வி, சாலைகள், விவசாயம், நீர்ப்பாசனம், காடுகள் ஆகியவற்றைச் சார்ந்த பணிகளும் செலவினங்களும் மாநில அரசுகளுடையனவாகும்.

மேலும் மூன்றாவது பட்டியலில், மத்திய அரசும் மாநில அரசுகளும் சேர்ந்து செயலாற்றும் பொருளாதார, சமூகநலத் திட்டங்கள், தொழிலாளர் நலம், சமூகப் பாதுகாப்புப் போன்ற துறைகள் காணப்படுகின்றன.

11.1 மத்திய அரசின் செலவினங்கள் (Expenditure of the Union Government) :- இந்திய அரசின் செலவினங்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை வருவாய்க் கணக்குக்கான செலவு (Expenditure on Revenue Account), முதலினக் கணக்குக்கான செலவு (Expenditure on Capital Account) ஆகும். வருவாய்க் கணக்குக்கான செலவு, வரி வருவாய்கள், ரெயில்வேக்கள், தபால், தந்தி துறைகள் போர்த்துறையல்லாத பிற இலாகாக்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் இவைகளால் சமாளிக்கப்படுகிறது. முதலினக் கணக்குக்கான செலவுக்குக் கடன்களும், இதர வழிமூலம் பெறும் வருமானமும் பயன்படுகின்றன. பாதுகாப்புக்கான செலவு,

வரி வசூலிப்பதற்கான செலவு, மாநில அரசுகளுக்குக் கொடுக்க வேண்டிய பங்குகள் இவை வருவாய்க் கணக்குச் செலவின்கீழ் உள்ள முக்கிய பகுதிகளாகும். கடனைத் திருப்பிக் கொடுத்தல், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்படும் முன்பணம் (advance), பாதுகாப்பு (Defence) போன்ற வளர்ச்சிக்குதவாத செலவினங்களுக்காகச் செய்யப்படும் முதலீடும், இரயில்வேக்கள், விமானப் போக்குவரத்து, நீர்ப்பாசனம், பல்நோக்கு நதித் திட்டங்கள் (Multipurpose River Schemes), போருக்குப் பயன்படாத வேறு தொழில்கள், தொழில் முன்னேற்றம் போன்ற பொருளாதார வளர்ச்சிக்குதவும் இனங்களுக் காகச் செய்யப்படும் முதலீடு ஆகியவையும் முதலீட்டுக் கணக்கின்கீழ் வருவனவாகும்.

பின்வரும் அட்டவணை (எண் 26) தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆண்டுகளில், அதாவது 1950-'51 (முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்தைய ஆண்டு), 1955-'56 (முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு), 1960-'61 (இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு), 1965-'66 (மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு) இவற்றுக்கான மத்திய அரசின் வரவுசெலவுகளையும், 1968-'69ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவுசெலவு மதிப்பீட்டினையும், 1969-'70ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டினையும் காட்டுகின்றது.

11·2 **வருவாய்க் கணக்குக்கான செலவு** (Expenditure on Revenue Account):- இந்திய அரசின் வரவுசெலவுத் திட்டத்தில், பாதுகாப்புக்கான செலவு ஒரு தனிப்பெரும் இனமாகும். 1961-'62ஆம் ஆண்டில், அச் செலவு ரூ. 289·94 கோடிகளாக, அதாவது மொத்த வரவுசெலவுத் திட்டத் தொகையான ரூ. 911·94 கோடிகளில், சுமார் 32% ஆக இருந்தது. இத்துடன் பாதுகாப்புக்காக ரூ. 22·95 கோடிகள் முதலீடு செய்யப்பட்டது. 1962-'63-இல், பாதுகாப்புச் செலவு ரூ. 425·30 கோடிகளாக உயர்ந்ததற்குக் காரணம், 1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியாவின்மீது சீனத் தாக்குதலேயாகும். வரவுசெலவுத் திட்டப்படி இத் தொகை ரூ. 347·37 கோடிகளாக இருக்குமென மதிப்பிடப் பட்டிருந்தது. பாதுகாப்பு முதலீட்டுத் தொகையும் ரூ. 52·75 கோடிகளாக உயர்ந்தது. 1963-'64-இல் பாதுகாப்புச் செலவு ரூ. 704·15 கோடிகளாக (மொத்தச் செலவில் 42%) அதிகரித்தது. பாதுகாப்புக்கான முதலீடும் ரூ. 111·97 கோடிகளாகியது. 1969-'70 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்புக் கான செலவு ரூ. 985·78 கோடிகளெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இச் செலவு, மொத்தச் செலவு ரூ. 2921·38 கோடிகளில், 34% ஆகும்.

அட்டவணை எண் 26

மத்திய அரசின் வருவாய்க் கணக்குச் செலவினங்கள் (ரூ. கோடியில்)

	1950-'51 கணக்கு (Acc)	1955-'56 கணக்கு (Acc)	1960-'61 கணக்கு (Acc)	1965-'66 கணக்கு (Acc)	1968-'69 திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு (R.E.)	1969-'70 வரவு செலவுக்கு உட்பட்ட மதிப்பீடு (B.E.)
1. வரி, தீர்வை வசூல் இதர முக்கிய வருவாய்கள்.	10·24	12·51	22·43	30·07	40·11	44·59
2. ராணுவமல்லாத உள்நாட்டு நிருவாகம் (Civil Administration).	21·29	33·57	58·66	95·40	152·82	164·83
3. பாதுகாப்புப் பணிகள் ...	164·13	172·23	247·55	762·18	943·63	985·78
4. கடனுக்குச் செலுத்தப்படுபவை.	37·36	43·14	77·09	370·62	527·69	568·82
5. சமூகப் பணியும் முன்னேற்றப் பணியும்.	39·50	82·41	236·40	234·79	327·19	372·61
6. மத்திய மாநில அரசுகளின் பங்கீடுகளும், சரிக்கட்டுதல்களும்.	15·57	35·80	48·35	324·07	536·66	596·18
7. இதரச் செலவினங்கள் ...	58·55	68 08	135·73	183·50	182·67	188·57
8. மொத்தச் செலவு. ...	346·64	440·74	826·21	2000·63	2710·77	2921·38

Source : Reserve Eank of India Bulletin, April, 1969. Acc - Account. R.E. - Revised Estimate. B.E. - Budget Estimate.

பாதுகாப்புக்கான முதலீடு ரூ. 124·22 கோடிகளாகவும் ஒதுக்கப் பட்டுள்ளது. இவ்விதமாகப் பாதுகாப்புக்கான மொத்தச் செலவு ரூ. 1110·00 கோடிகளாகின்றன. சீனத்தாக்குதலினாலும், அதற்குப் பின்னர், 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தானின் தாக்கு தலினாலும், நாட்டுப் பாதுகாப்புப் படையினைப் பலப்படுத்த வேண்டிய உடனடித் தேவையின் காரணமாகப் பாதுகாப்புச் செலவில் இவ்வாறு வியக்கத்தக்க அதிகரிப்பு அவசியமாகியது. அப்போது தான், வருங்காலத்தில் நேரக்கூடிய எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க நாம் தயாராக இருக்கலாம்.

நாட்டில் ஆங்கிலேயரது ஆட்சி தொடங்கியதிலிருந்து இந்தி யாவின் பாதுகாப்புச் செலவு எப்போதுமே அதிகமாக இருந்து வருகிறது. 1861ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூ. 16·47 கோடி களாக, அதாவது மொத்தச் செலவில் 63%-க்கும் மேலாக இருந்தது. 1920ஆம் ஆண்டில், முதல் உலகப்போருக்குப்பின், அது ரூ. 87·38 கோடிகளாக உயர்ந்தது. 1939-இல் அது ரூ. 49·5 கோடிகளாகியது (மொத்தச் செலவில் 54·2%).

இந்தியாவில், ஆங்கிலேயர் ஆட்சி செய்தகாலத்தில், பாதுகாப்புச் செலவு மிக அதிகமாக இருந்ததைப் பற்றி மக்கள் ஓயாமல் குறைகூறி வந்தனர். உப்பு வரியை (Salt-duty) எடுத்துவிட வேண்டு மெனக் கூறிய மகாத்மா காந்தி, அதனால் ஏற்படும் நஷ்டத்தை உணராதிருக்க, போர்ப்படைக்கான செலவைக் குறைத்தால் போதும் என்று எடுத்துக் காட்டினார். அந் நாளில் ஏற்பட்ட அதிகப் படியான பாதுகாப்புச் செலவுகளுக்கான காரணங்கள் பின்வருவன வாகும் :- இந்தியர்களின் எண்ணத்திற்கேற்ப அளவசியமெனக் கருதப்பட்ட அளவுக்குப் பெரிய பாதுகாப்புப்படை வைத்திருந்ததும், இந்தியப் படைகள், இந்திய அதிகாரிகள் இவர்களைவிட அதிக அளவு ஊதியம் கொடுக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரிகள், ஆங்கிலப் படைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததுமாகும். இந்தியாவில் படைக்கான இப்பெரும் செலவினைக் குறை கூறிய பேராசிரியர் K. T. ஷா (Prof. K. T. Shah), 'இந்தியாவிலுள்ள படை இவ்விதமாக.....அதிக அளவு செலவைக் கொடுப்பது போலவே, பயனில்லாமலும் உள்ளது. இந்திய மக்களுக்கு, அதனுடைய பணிகள், அதன் செலவுக்கு அப்பாற்பட்டதாக வுள்ளது' என்று கூறினார் ('The army in India is thus.....as expensive as it is useless and the service alleged to be rendered by that instrument to the Indian people is clearly out of all proportion to its costs').[1] பிற்காலத்தில், இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய திரு. ராம்ஸே மாக்டனல்ட் (Mr. Ramsay Macdonald) கூடப் பின்வரு

[1] K. T. Shah, 'Wealth and Taxable Capacity of India', p. 276.

மாறு கூறினர்:- 'இந்தியப்படையில் பெரும் பகுதி—அதில் ஒரு பாதி இந்தியத் தேவைகளுக்கு வேண்டாத, ஏகாதிபத்தியப் படையாகும். ஆகவே, அதற்கான செலவுகள் இந்திய நாட்டு நிதியைப் பாதிக்காமல், ஆங்கில ஏகாதிபத்தியத்தினுடையதாகவே இருக்க வேண்டும்' (A large part of the army in India certainly one half is an Imperial army, which we require for other than purely Indian purposes, and its costs, therefore, should be met from Imperial and not Indian funds).[1] A. J. டாயின்பீ (A. J. Toynbee) 1929-இல் தயாரித்த 41 நாடுகளின் இராணுவச் செலவுப் பட்டியலில், மொத்தச் செலவில் 45·29%-ஐ, இராணுவச் செலவாகக் கொண்ட இந்தியா முதலிடத்தை வகித்தது. அதே ஆண்டில் இங்கிலாந்தில் இச் செலவு 14·75% ஆகவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 16·09% ஆகவும் இருந்தது.

1939ஆம் ஆண்டில் போர் தொடங்கியதும், இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட இந்தியாவும் (இந்திய மக்களின் விருப்பத்தைக் கலந்து யோசிக்காமல்) போரில் சேர்ந்துகொண்டது. போரில் ஜப்பான் நுழைந்தபின், போர்ச் செலவு மிக வேகமாக அதிகரித்தது. 1939-'40ஆம் ஆண்டில் ரூ. 49·54 கோடிகளாக இருந்த போர்ச் செலவு 1940-'41-இல் ரூ. 73·61 கோடிகளாகி, 1941-'42-இல் ரூ. 103·93 கோடிகளாக உயர்ந்து, 1942-'43-இல் ரூ.267·13 கோடிகளை எட்டி, 1943-44-இல் ரூ. 395·86 கோடிகளாகவும், 1944-'45-இல் ரூ. 458·32 கோடிகளாகவும் ஆகியது. போர் தொடங்கியதும், இங்கிலாந்துக்கும் இந்திய அரசுக்குமிடையே ஓர் நிதி உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. பின்வருமாறு பாதுகாப்புச் செலவு, இரு அரசுகளுக்கிடையேயும் பங்கிட்டுக் கொள்ளப்பட வேண்டுமென ஆயிற்று. (1) போருக்கு முன்னர் ஏற்பட்ட பாதுகாப்புச் செலவு, (2) விலை ஏற்றத்தை அனுமதிக்க ஒரு தொகை, (3) இந்தியா தனது நலனுக்கென மேற்கொண்ட போர் நடவடிக்கைகளுக்கான செலவு, (4) கடல் கடந்த நாடுகளில், இந்திய வெளிப்பாதுகாப்புப் படைகளை வைத்திருப்பதற்கான அதிகச் செலவுக்காக மொத்தத் தொகை—இவைகளை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இந்தியப் போர் நடவடிக்கைகளுக்காகப் பெற்ற உதவிகளுக்காகவும், தனது கூட்டு நடவடிக்கைகளின் (Joint measures) பங்குக்காகவும், இந்தியாவின் பாதுகாப்புக்கு உதவிய நிலப்படைகளுக்காகவும், இந்தியா நிதியைத் திரட்டவும், நிதியைச் செலுத்தவும் வேண்டியிருந்தது. இதைத் தவிர, இந்தியாவில் ஏற்பட்ட இதர போர்ச் செலவினை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. நடை முறையில்,

[1] Ramsay Macdonald :- Government of India, quoted in V. C. Kumarappa 'Public Finance and our Poverty', p. 20.

இந்தியா தான் செலவு செய்யவேண்டியதற்கு அதிகமாகச் செலவழித் திருப்பதாகத் தெரிந்தது. ஏனெனில், எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி இந்தியாவைப் பாதுகாக்கவா ஆங்கிலப் பேரரசைப் பாதுகாக்கவா என்று வேறுபடுத்திக் காட்ட முடியாத நிலை, போரில் ஜப்பான் புகுந்ததும் ஏற்பட்டதால்தான்.

போர் முடிந்து, நாடு விடுதலைபெற்ற பின்னரும் விரும்பிய அளவுக்குப் பாதுகாப்புச் செலவினைக் குறைக்க முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்தியா அப்போதுதான் விடுதலை அடைந்ததால், ஒரு குறிப்பிட்ட அளவு பாதுகாப்புப் படைகள் தேவையாக இருந்தன. இந்தியா, கப்பற்படையிலும், ஆகாயப்படையிலும் பிற்பட்ட நிலையில் இருந்தது. கிழக்கிலும், மேற்கிலும் நண்பனல்லாத, விரோதி என்று சொல்லக் கூடிய பாகிஸ்தானின் இருப்பு (Presence), மற்றொரு காரணியாகும். காஷ்மீர்ப் போர், குறிப்பிடத்தக்க அளவுக்குச் செலவை ஏற்படுத் தியது. 1947ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள தகராறு ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டுத் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறதேயொழிய, குறைவதாகத் தெரியவில்லை. இரு நாடுகளுக்குமிடையே எல்லைத்தகராறுகள் அடிக்கடி ஏற்பட்டுள்ளன.

எனினும், முடிந்தவரை பாதுகாப்புச் செலவு குறைந்தபட்ச மாகவே வைக்கப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சராசரி பாதுகாப்புச் செலவு, மொத்தச் செலவில் 33% ஆக இருந்து, அத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டு 1960-61-இல் 27% ஆகக் குறைந்தது. சீனாவோடு ஏற்பட்ட தகராறு அதிகரித்த காரணத்தால், பாதுகாப்புச் செலவுக்கான தொகையும், மொத்தச் செலவில் அதன் சதவீதமும் அதிகரிக்கப்பட வேண்டியிருந்தது. 1962-'63ஆம் ஆண்டில், இந்தியாவின் வடக்கு எல்லைகளில், சீனா, பெரும் முற்று கையில் இறங்கியபோது அதிகரிக்கப்படும்வரை, அது 32% ஆகவே இருந்துவந்தது. நாட்டின் எல்லைகளை வருங்காலத் தாக்குதல்களி லிருந்து காப்பாற்ற அவசியமான ஏற்பாடுகளைச் செய்யவும், முற்றுகையை எதிர்க்கவும் பெரும் முயற்சி வேண்டியிருந்தது. மேற் கூறியவாறு, வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 343·37 கோடிகளாகத் திட்டமிடப்பட்ட பாதுகாப்புச் செலவு, 1962-'63ஆம் ஆண்டில் ரூ. 425·30 கோடிகளாக, அதாவது மொத்தச் செலவில் முன்பிருந்ததைவிட 24% அதிகமாக ஆகியது. 1963-'64ஆம் ஆண்டில் ரூ. 704·15 கோடிகள் அதாவது 65% அதிகரிப்பும் (1962-'63-இல் இருந்ததைவிட), 1961-'62-இல் இருந்ததைவிட 142% அதிகரிப்பும் ஏற்பட்டது. பாதுகாப்புக்கான முதலீட்டிலும் குறிப்பிடத்தக்க

அதிகரிப்பு ஏற்பட்டது. 1961-62ஆம் ஆண்டில் அது ரூ. 22·91 கோடிகளாக இருந்தது. 1962-'63-இல் அதற்காகத் திட்டமிடப்பட்ட தொகை ரூ. 32·63 கோடிகளாகும். ஆனால், அத் தொகை ரூ. 48·61 கோடிகளாகப் பெருகியது. 1963-'64-இல் அது ரூ 111·97 கோடிகள் அதாவது 1962-'63-இல் ஏற்பட்ட செலவைவிட 240% அதிகம், 1961-'62-இல் ஏற்பட்ட செலவைவிட 386% அதிகமாக உயர்ந்தது. வருவாய்க் கணக்கையும் (Revenue account), முதலினைக் கணக்கையும் (Capital account) ஒன்றாக எடுத்துக் கொண்டால், 1961-'62ஆம் ஆண்டில் ரூ. 312·49 கோடிகளாக இருந்த பாதுகாப்புச் செலவின் மொத்தம், 1962-'63-இல் ரூ. 473·91 கோடிகளாகி, 1963-'64-இல் ரூ. 816·12 கோடிகளை எட்டியதைக் காணலாம். இவ்வாறு 1961-'62-இல் ஏற்பட்ட மொத்தப் பாதுகாப்புச் செலவை விட 161% அதிகமாகவும், 1962-'63-இல் ஏற்பட்ட செலவைவிட 72% அதிகமாகவும் உயர்ந்திருக்கிறது.

சீனாவின் பயமுறுத்தல், குறுகிய காலத்தியதன்று. சீனா தன்னை வலிவாக்கிக் கொள்ளுவதால், உண்மையில் அது அதிகரிக்கவும் செய்யலாம். பல காரணங்களின் அடிப்படையில் (சீனாவின், நாட்டைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற பரம்பரை எண்ணம், ஆசிய நடவடிக்கைகளில் அதன் முக்கிய பங்கினைக் காட்டவேண்டுமென்ற விருப்பம், இந்தியாவை ஒரு பலமற்ற நாடெனக் காட்டவேண்டுமென்ற ஆவல், இதுபோன்ற காரணங்கள்), இந்த ஆபத்து உண்மையில் அதிகரிக்கலாம். இத்துடன் 1965ஆம் ஆண்டில் பாகிஸ்தான், இருமுறை, ஒரு முறை கச்சிலும் (Kutch), மற்றொரு முறை ஜம்மு, காஷ்மீரிலும் இந்தியாவைத் தாக்கியுள்ளது. இவ்விதமாக, வடக்கு, மேற்கு, கிழக்கிலிருந்து ஆபத்துத் தொடரலாம். இந்தியாவில், பொருளாதார வளர்ச்சிக்கு முதலிடமும், பாதுகாப்புக்கு இரண்டாவது இடமும் கொடுக்கப்பட்டுள்ளது. திடீர்ச் சீனத் தாக்குதலைச் சமாளிக்க, இந்தியா போர்க் கருவிகள் போன்றவற்றைத் தன்னுடன் நட்புகொண்ட அந்நிய நாடுகளிலிருந்து பெற்றது. ஆனால், பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடரப்பட்ட போர், முடிவில் நாம் நமது சொந்த சாதனங்களையே நம்பியிருக்க வேண்டுமென்பதைக் காட்டியது. ஆகவே, நமது பாதுகாப்புச் செலவு, இன்னும் பல ஆண்டுகளுக்கு அதிகமாகவே இருக்கவேண்டியுள்ளது.

இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சிக் காலம் முழுவதிலும், போரல்லாத இதர சமூக நிருவாகச் செலவினம் அதிகமாகவே இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயரது ஆட்சியில், சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பதே அரசாங்கத்தின் முக்கிய பணியாக

இருந்தது. சமுதாயத்தின் முன்னேற்றத் திட்டங்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தைப்போல், அப்போது கொடுக்கப்படவில்லை. அதன் விளைவாகப் போரல்லாத இதர உள்நாட்டு நிருவாகச் செலவு அதிகமாகி, மொத்தச் செலவில் அதன் சதவீதமும் உயர்ந்தது.

நாடு விடுதலையடைந்த பின்னர், நாட்டின் நோக்கங்களில் மாறுதல் ஏற்பட்டது. சட்ட ஒழுங்குபெற்ற நாட்டை (Law and Order State) நலம் பெற்ற நாடாக (Welfare State) மாற்ற வேண்டுமெனக் கருதப்பட்டது. இவ்வாறு, அரசாங்க நடவடிக்கைகள் விரிவடைந்தன. இதன் விளைவாக உள்நாட்டு நிருவாகச் செலவு மேலும் அதிகரித்தது. அரசாங்க நடவடிக்கைகள் பெருகியதாலோ ஒருவேளை அனுபவக் குறைவினாலோ, செலவு அளவுக்கு மேல், பல வழிகளில் பெருகியது. விடுதலைக்குப் பின்னர், உலகின் பல நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள தொடர்பும், செலவைப் பெருக்கியுள்ளது. 1968-'69ஆம் ஆண்டின், திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி (Revised estimate), உள்நாட்டு நிருவாகச் செலவு ரூ. 152·82 கோடிகளாகும். 1969-'70ஆம் ஆண்டுக்கு அது ரூ 174.83 கோடிகளாகுமென மதிப்பிடப்பட்டது. இச் செலவு 1950-'51-இல் ரூ. 21·29 கோடிகளாகவும், 1955-'56-இல் ரூ. 33·57 கோடிகளாகவும் இருந்தது.

11·3 சமுதாயப் பணிகளும் முன்னேற்றப் பணிகளும் (Social and Developmental Services.):— அறிவியல் துறைகள், கல்வி, மருத்துவம், உடல்நலம், தொழில்கள், விவசாயம், சமூகநல அமைப்புகளுக்கு உதவி, பின்தங்கிய வகுப்பினரின் நலம், பற்றுக் குறையால் அவதியுறும் இடங்களுக்கு உதவி, இயற்கையில் ஏற்படும் அழிவுகளுக்கான உதவி, இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு இடமளிப்பதால் ஆகும் செலவு, வகுக்கப்பட்ட குழுவினரின் (Scheduled tribes) நலம், சமுதாய முன்னேற்றத் திட்டங்கள், நாட்டு நீட்சிப் பணிகள் (National Extension Services) போன்ற குறிப்பிட்ட சில, நாட்டைப் பலப்படுத்தும் முன்னேற்றப் பணிகளும், சமுதாயப் பணிகளும் சமீப ஆண்டுகளாகச் செலவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளன. இந்த அதிகரிப்பு, முக்கியமாக, நாட்டின் நோக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்களால் ஏற்பட்டதாகும். அதாவது, சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் (Law and Order) முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருந்த நாடு மக்களின் நலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்ததும், ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான செலவுகளும் இதற்குக் காரணங்களாகும். 1966-'67ஆம் ஆண்டில் இச் செலவு ரூ. 236·16 கோடிகளாக (திருத்தியமைத்த மதிப்பீடு)

இருந்தது. மதிப்பிடப்பட்ட செலவு, 1967-68-இல் ரூ. 283·96 கோடிகளாக இருந்தது. இச் செலவு 1950-'51-இல், ரூ. 39·50 கோடி களாகவும், 1955-'56-இல் ரூ. 82·41 கோடிகளாவும் இருந்ததைக் காணலாம்.

இச் செலவில், எஞ்சியுள்ள கடனுக்கான வட்டி செலுத்துதலும், கடனைக் குறைப்பதற்கோ கடனிலிருந்து தப்புவதற்கோ செய்யப்பட்ட ஒதுக்கீடுகளும் அடங்கியுள்ளன. சமீப ஆண்டுகளாக இவற்றுக்கான செலவு வளர்ந்து வருகிறது. ஏனெனில் திட்டங்களைச் செயல்படுத்துவதால் ஏற்பட்ட செலவுகளால் அரசாங்கக் கடன் சுமை அதிகமாகியுள்ளது.

வரிவசூல் நிருவாகத்திற்காகவும் அரசாங்கம் செலவு செய்ய வேண்டியுள்ளது. அரசாங்கம் வரிகளை அதிகரித்து வருவதால், இச் செலவும் வளர்ந்துள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் பங்கும், அவற்றுக்கிடையே ஏற்பட்ட இதர சரிக்கட்டுதல்களும் (Contributions and Miscellaneous Adjustments between Union and State Governments) என்ற தலைப்பின் கீழ், மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி உதவி முக்கிய இடத்தை வகிக்கின்றது. மாநிலங்களின் தேவை அதிகரித்து வருவதாலும், அதை மத்திய அரசு சமாளிக்க வேண்டியிருப்பதாலும், இத் தலைப்பின் கீழ் செலவு அதிகரித்து வந்துள்ளது. இதற்கான செலவு 1950-'51ஆம் ஆண்டில் ரூ. 15·59 கோடிகளாக இருந்து, 1956-'57-இல், ரூ. 28·26 கோடிகளாகி, 1968-'69ஆம் ஆண்டில் ரூ. 536·66 கோடி களாக உயர்ந்துள்ளது. 1969-'70ஆம் ஆண்டில் இச் செலவின மதிப்பீடு ரூ. 596·18 கோடிகளாகும்.

11·4 முதலினைச் செலவு (Capital outlay):- இத் தலைப்பின் கீழ் முதலீடுகளும், மத்திய அரசு அளிக்கும் கடன்களும், முன்பணங்களும் அடங்கியுள்ளன. சமீப ஆண்டுகளாக முதலினைச் செலவு குறிப்பிடத்தக்கவாறு பெருகியுள்ளது. 1950-'51ஆம் ஆண்டில் ரூ. 71·03 கோடிகளாகவும், 1955-56-இல் ரூ. 127·36 கோடி களாகவும், 1968-'69-இல் ரூ. 551·41 கோடிகளாகவும் ஆகியது. 1969-'70ஆம் ஆண்டில் ரூ. 769·59 கோடிகளுக்கு இடமளிக்கப் பட்டுள்ளது. நம்முடையதைப் போன்ற ஒரு விரிவடையும் பொரு ளாதாரத்திற்கு, முதலினைச் செலவு மிக முக்கியமானதாகும். நாட்டு உற்பத்தி, வருவாய், வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்தரம் இவற்றைப் பெருக்கவும், பொதுவாகக் கூறின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிக்கல் நாட்டவும், பெருமளவு முதலீட்டுத் திட்டங்களை (large scale capital projects) மேற்கொள்வது அவசிய மாகின்றது. ஆனால் அத்தகைய திட்டங்கள் செலவு மிக்கவை

யாதலால், அவைகளுக்காக, கணிசமான செலவீடு வேண்டியுள்ளது; செலவும் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய திட்டங்களுக்கு முதலின வரவுசெலவுத் திட்டத்திலிருந்து (Capital Budget) நிதியளிக்கப் படுகிறது. மத்திய அரசின் முதலினச் செலவு (Capital outlay) வளர்ச்சிக்கு உதவும் முதலீடு, வளர்ச்சிக்குதவாத முதலீடு (non-developmental outlay) என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கான முதலினச் செலவு, 1950-'51ஆம் ஆண்டில் ரூ. 4·19 கோடிகளாக இருந்து, 1955-'56-இல் ரூ. 17·59 கோடிகளாக அதிகரித்து, 1962-'63-இல் ரூ. 48.61 கோடிகளாக உயர்ந்துள்ளது. பாதுகாப்புச் சாதனங்களில், இந்தியா தன்னிறைவு பெறவேண்டு மென்பதே நோக்கமாக இருந்து வந்துள்ளது. சீனத் தாக்குதலுக்குப் பின்னர், நாட்டுப் பாதுகாப்புப் படையினை வலுப்படுத்த, 1963-'64-இல் இச் செலவு ரூ. 111·97 கோடிகளை எட்டியது. 1968-'69-இல் இச்செலவின மதிப்பீடு ரூ. 107·75 கோடிகளானது. 1969-'70ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், இச் செலவு ரூ. 124·22 கோடிகளென மதிப்பிடப்பட்டது. இது பாதுகாப்பு உற்பத்தித் திறனில் ஏற்பட்ட வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. முன்னேற்றத்திற்கு உதவாத முதலினச் செலவுகளில், ஓய்வு ஊதியம் (pension) கொடுத்தல், மானில வர்த்தகத் திட்டங்கள், செலாவணி, நாணயச்சாலை முதலியனவாகும். 1950-'51ஆம் ஆண்டில் வளர்ச்சிக் குதவாத மொத்த முதலீடு (non-developmental outlay) ரூ. 13·63 கோடிகளாகவும், 1968-69-இல் ரூ. 65·9 கோடிகளாகவும் இருந்து (திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு), 1969-'70-இல் ரூ. 95·74 கோடி களாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்குதவும் முதலீடுகளில், இரயில்வேக்கள், தபால், தந்தி, நீர்ப்பாசனம், உள்நாட்டு விமானப் போக்குவரத்து, பல்நோக்கு நதித்திட்டங்கள், உள்நாட்டுப் பணிகள் (Civil works), தொழில் வளர்ச்சி முதலியவற்றுக்கான முதலீடுகள் அடங்கியுள்ளன. வளர்ச்சிக்குதவும் முதலீடுகளில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட் டுள்ளது. இரயில்வேக்களை விரிவுபடுத்துதல், அணைக்கட்டுகளைக் கட்டுதல், நீர்ப்பாசன, மின்சக்தித் திட்டங்கள், எஃகு, கனப்பொறி ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைத்தல் ஆகியவை நமது முன்னேற்றத் திட்டங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மொத்த வளர்ச்சிக்குப் பயன்படும் முதலீடு 1950-'51-இல், ரூ. 59·40 கோடிகளாகவும், 1955-'56-இல் ரூ. 135·94 கோடிகளாகவும், 1968-'69-இல் ரூ. 544·82 கோடிகளாகவும் (திருத்தி யமைக்கப்பட்ட மதிப்பீடு) இருந்தது. 1969-'70-இல் இம் முதலீடு ரூ. 673·85 கோடிகளை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை எண் 27

குறிப்பிட்ட சில ஆண்டுகளில் மத்திய அரசின் முதலீட்டுப் பிரிவினை [1]

(Capital disbursements of the Union in selected years)

(ரூ. கோடியில்)

	1950-'51 (Acc)	1955-'56	1960-'61	1965-'66	1968-'69	1969-'70
வளர்ச்சிக்குதவாத முதலீடு						
பாதுகாப்பு	4·19	17·59	33·39	122·58	107·75	124·22
மாநில வர்த்தகத் திட்டங்கள்	—2·25	—29·59	33·95	—84·19	—114·64	—36·13
செலாவணி, நாணயச்சாலை, பாதுகாப்பு அச்சகம்	3·26	8·76	6·48	80·30	12·91	6·00
இதர செலவுகள்	8·44	—5·34	61·80	78·03	0·57	1·65
மொத்த வளர்ச்சிக்கு உதவாத முதலீடு	13·63	—8·58	135·62	196·72	6·59	95·74
வளர்ச்சிக்குதவும் முதலீடு						
ரெயில்வேக்கள்	25·41	67·52	89·48	245·09	134·09	132·60
தபால், தந்தி	7·07	9·03	11·26	31 38	30·45	34·16
நீர்ப்பாசனமும் பல்நோக்கு நதித்திட்டங்களும்	2·56	2·98	1 31	20·41	21·71	21·35
போர்ஸ்தாத உள் நாட்டுப் பணிகள்	9·11	24 55	38·92	71·85	56·56	73·83
தொழில் வளர்ச்சி	8·90	11 07	91 27	150·39	245 50	332·67
இதர செலவுகள்	2·93	7·71	27·01	17·31	73·02	68·43
மொத்த வளர்ச்சிக்குதவும் முதலீடு	57·40	135·94	269 38	579 02	544·82	673 85
மொத்த முதலீடு	71 03	127·36	405·50	775 74	551·41	769·59
நிகரான கடனைச் செலுத்துதல்						
உள் நாட்டுக் கடன்	41·74	69·04	109·19	154 96	242 00	397 00
வெளி நாட்டுக் கடன்	4·11	3·22	17·71	80·52	168·15	195 44
மாநிலங்களுக்கு முன்பணம்	61·46	246·71	338·63	840·11	: 15 16	793 74
இதர கடன்களும், முன் பணங்களும்	5·83	32·01	158·30	371·09	594·27	456·60
மொத்தப் பிரிவினை	184·17	478 34	1029·33	2222·42	2472·47	2624·53

[1] Source : Reserve Bank of India Bulletin, April 1969. Acc - Account. R.E. - Revised Estimate. B.E. - Budget Estimate.

அரசாங்கத்தின் முதலின வரவுசெலவுத் திட்டத்தில், முதலீடு கணக்குத் தவிர, வேறு சில செலவுகளும் அடங்கியுள்ளன. நிலையான கடனை ஒழித்தல், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடனைத் திருப்பிக் கொடுத்தல், தனிப்பட்ட குறுங்காலக் கடனைக் (floating debt) கொடுத்தல், மாநிலங்களுக்கு வழங்கப்படும் பலவகை முன்பணங்கள் ஆகியவை அதனுள் அடங்கும். திட்டங்களுக்காக அதிகக் கடன்கள் வாங்கப்பட்டுள்ளதால், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தொகையும் அதிகரித்துள்ளது. இத் தொகைகளிலிருந்து, புதிதாக வாங்கப்பட்டுள்ள வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்கள் பெருகும் அளவின் காரணமாகத் திருப்பிக் கொடுக்கும் சுமையும் அதிகரிப்பதை அறியலாம்.

மத்திய அரசின் முதலின வரவுசெலவுத் திட்டத்தில், இன்னொரு முக்கியமான பிரிவினைத் தலைப்பு (head of disbursement) மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் முன்பணங்களாகும். மொத்தத் திட்டச் செலவில் ஒரு கணிசமான அளவு, மாநிலங்களால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. ஆனால், மாநிலங்களில் அதற்கேற்ற வருவாய் போது மானதாக இல்லை. ஆகவே, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு முன்பணம் கொடுக்க வேண்டியதாகிறது. மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகம் செலவழிப்பதால், இத் தலைப்பின்கீழ் தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறது.

11.5 மாநிலங்களின் செலவு (Expenditure of the States):- மாநில அரசுகளின் செலவு, மத்திய அரசின் செலவைப் போலவே, வருவாய்க் கணக்குச் செலவு, முதலினக் கணக்குச் செலவு என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்குச் செலவு, மாநில அரசு விதிக்கும் வரிகள், பொதுத் தொழில்துறைகளிலிருந்து மத்திய அரசு பெறும் வரி வருவாயில் பங்கு, மத்திய அரசின் உதவி நிதி, இன்னும் வேறு சில பிரிவுகளின்கீழ்க் கிடைக்கும் வருவாய் இவற்றினால் சமாளிக்கப்படுகிறது. முதலினக் கணக்குச் செலவிற்கு, மாநிலக் கடன்கள், மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்கள், வேறு சில முதலின வருவாய்கள் ஆகியவை உதவுகின்றன. மாநில அரசின் செலவுகளில் முக்கிய பிரிவுகளைக் கீழே காணலாம்.

11.6 வருவாய்க் கணக்குச் செலவு (Expenditure on Revenue Account) :- மாநிலங்களின் வருவாய்க் கணக்குச் செலவு, சமூகப் பணி களுக்கும், முன்னேற்றப் பணிகளுக்குமான செலவு, முன்னேற்றத்திற் கல்லாத செலவு என இருவகைப்படுத்தப்பட்டுள்ளது. சமூகப் பணிகள், முன்னேற்றப் பணிகள் ஆகியவற்றுள் கல்வி, மருத்துவம், பொதுமக்களின் உடல்நலம், விவசாயம், கூட்டுறவு, நீர்ப்பாசனம், மின்சக்தித் திட்டங்கள், கிராம சமுதாய முன்னேற்றம், உள்நாட்டுப்

அட்டவணை எண் 28

தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆண்டுகளில், எல்லா மாநில அரசுகளின் வருவாய்க் கணக்கீட்டுச் செலவு (ரூ. கோடியில்)

	1951-'52 (Acc)	1955-'56 (Acc)	1960-'61 (Acc)	1967-'68 (Acc)	1968-'69 (R.E.)	1969-'70 (B.E.)
முன்னேற்றத்துக்கான செலவு						
கல்வி	60·3	104·2	141·0	356·3	422·2	500·6
வைத்தியமும், பொதுமக்கள் உடல்தலனும்	29·2	47·2	79·7	193·3	218·8	271·3
விவசாயம், கால்தடை, கூட்டுறவு	25·9	39·0	62·8	179·0	191·9	210·9
நீர்ப்பாசனம்	17·6	23·5	11·6	22·7	25·0	25·9
கிராம சமுதாய முன்னேற்றம்	0·8	26·9	48·3	53·0	51·5	51·9
போரல்லாத வேறு பணிகள் (Civil Works)	40·9	68·3	63 6	138·7	142 5	161·5
தொழில்கள்	5·8	3·5	23·2	31·7	35·1	38·7
இதர முன்னேற்றத்துக்கான செலவு	15·7	25·3	85·8	301·3	344·8	373·0
மொத்த முன்னேற்றத்துக்கான செலவு	196·2	337·9	516·0	1276·0	1431·8	1633·8
முன்னேற்றத்துக்கல்லாத செலவு						
வரி, நீர்வைகளை வசூலித்தல்	26·9	46·0	56·5	100·8	118·8	134·6
கடன் பணிகள்	8·5	18·8	86·7	271.3	335·5	370·7
உள்நாட்டு நிருவாகம்	106·7	122·4	187·6	372·3	357·2	397·8
பஞ்சம்	3·9	16·6	21·2	86·3	93·7	56·6
இதர முன்னேற்றத்துக்கல்லாத செலவு	52·4	62·4	122·4	227·2	340·1	359·5
மொத்த முன்னேற்றத்துக்கல்லாத செலவு	196·4	266·2	474·4	1057·9	1285·3	1359·2
மொத்தச் செலவு	392·6	604·1	990·4	2333·9	2483·6	2993·0

Source : Reserve Bank of India, Reports on Curreney and Finance and Reserve Bank of India Bulletin June, 1969.

Acc - Accounts, R.E. - Revised Estimates, B.E. - Budget Estimates.

பணிகள், தொழில்கள், அளிப்புகள் இவை அடங்கும். வளர்ச்சிக்கு உதவாத செலவினங்களுள் உள்நாட்டு நிருவாகம், கடன் பணிகள், வரிவசூல், பஞ்சம் முதலியவற்றுக்கான செலவுகள் அடங்கும். அட்டவணை (எண் 28) எல்லா மாநிலங்களின் செலவையும் காட்டுகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதன் விளைவாக, இப் பணிகளுக்கான செலவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இப் பணிகளுள் பெரும்பாலானவை, மாநிலத் திட்டங்களுள் அடங்கியுள்ளன. இப் பணிகளுக்கான தொடக்கச் செலவு அவ்வளவு கணிசமானதாக இல்லாதிருந்ததால், செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு மாநிலங்களின் பொருளாதார வாழ்வினைப் பாதிக்கவில்லை. இருப்பினும், இச் செலவினைச் சரிக்கட்ட அதிக அளவு முயற்சி தேவைப்படுகிறது.

1951-'52 ஆம் ஆண்டிற்கும், 1968-'69-க்கும் இடைப்பட்ட காலத்தில், கல்விக்கான செலவு 600% அதிகரித்துள்ளது. 1960 ஆம் ஆண்டுக்குள், 6 முதல் 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச ஆரம்பக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற மாநிலக் கொள்கையின் நோக்கத்தை ஒட்டிய அரசியல் சட்டத்தின் குறிக் கோளுக்கு, வெகு தொலைவில் நாமிருப்பது, இதுவரை அடைந்துள்ள உண்மையான முன்னேற்றத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மருத்துவம், பொதுமக்களின் உடல்நலம் இவற்றுக்கான செலவும் 600% தான் அதிகரித்துள்ளது. இப் பிரச்சினை வளர்ந்து வருவதால், இன்னும் அதிக அளவு செய்யவேண்டியுள்ளது. பொருளாதாரம் வளர்ச்சி பெறத் தேவையான சமுதாயப் பணிகளுக்கு இதுவரை ஐந்தாண்டுத் திட்டங்கள் குறைந்த அளவு முக்கியத்துவத்தையே கொடுத்து வந்துள்ளன.

விவசாயம், கால்நடை மருத்துவம், கூட்டுறவு இவற்றுக்கான செலவும், 1951-'52-க்கும் 1968-'69-க்கும் இடைப்பட்ட காலத்தில் போதுமான அளவு அதிகரித்துள்ளது. இச் செலவுடன் நீர்ப்பாசனம், கிராம சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் இவற்றுக்கான செலவும் சேர்ந்து கிட்டத்தட்ட 750% அதிகரித்துள்ளது. இதைத் தொடர்ந்து விவசாய உற்பத்தியும் பெருகியது. ஆனால், இப் பெருக்கம் நிலையானதாக இல்லாமல் இடையிடையே இருந்து வந்தது. புது ரக விதைகள், எருக்கள் ஆகியவை அதிக அளவில் உபயோகப்படுத்தப் பட்டதால், இந்தியாவில் விவசாயப் புரட்சி தொடங்கியதுபோலத் தோன்றியது. ஆனால், விவசாயத் திட்டங்களை நிறைவேற்றும் முறையில் முன்னேற்றம் தேவை.

போரல்லாத பிற உள்நாட்டு நிருவாகச் செலவு 1951-52ஆம் ஆண்டில் ரூ. 106·7 கோடிகளாக இருந்து 1968-'69-இல் ரூ. 357·2 கோடிகளாக உயர்ந்தது. ஏற்கெனவே அதிகமாகவுள்ள இச் செலவு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளதைக் காணலாம். மொத்த மாநிலச் செலவில் இச் செலவின் சதவீதம், 1951-'52-இல் 24·5% ஆக இருந்து 1968-'69-இல் 14·5% ஆகக் குறைந்துள்ளது. மாநில அரசுகளின் கடன்கள் பெருகுவதால், கடன் பணிகளுக்கான செலவும் அதிகரித்துள்ளது. வரிவிதிப்பு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, வரிவசூலிப்பதற்கான செலவும் அதிகரித்துள்ளது.

11·7 முதலினச் செலவு (Capital Outlay) :- இச் செலவு, வளர்ச்சிக்கு உதவும் முதலீடு, வளர்ச்சிக்குதவாத முதலீடு என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சிக்குதவும் முதலீட்டில், பல்நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள், நீர்ப்பாசனம், கப்பல் தொழில், விவசாய முன்னேற்ற ஆராய்ச்சித் திட்டங்கள், மின்சக்தித் திட்டங்கள், சாலைப்போக்குவரத்து, தொழில் முன்னேற்றம், கட்டடங்கள், சாலைகள், நீர் வேலைகள் ஆகியவை இடம் பெறுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களில் காணப்பட்டவைகளை நிறைவேற்றியதால், மேற்கூறியவைகளுக்கான முதலீட்டில் குறிப் பிடத்தக்க பெருக்கம் ஏற்பட்டது. மொத்த வளர்ச்சிக்குதவும் முதலீடு எல்லா மாநிலங்களிலும் 1951-'52ஆம் ஆண்டில் ரூ. 100.3 கோடி களாக இருந்து, 1968-'69-இல் ரூ. 489.3 கோடிகளாக அதிகரித்தது. நீர்ப்பாசனம், கப்பல் தொழில், கட்டடங்கள், சாலைகள், தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் அதிக அளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்குதவாத முதலீட்டில், மாநில வர்த்தகமும், ஜமீந்தாரி ஒழிப்பின் காரணமாக நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் ஈடுசெய்தொகையும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இம் முதலீடு 1951-'52ஆம் ஆண்டில் இருந்ததைவிடக் குறைந்துள்ளது.

முதலீடுகளைத் தவிர, மாநில முதலின வரவுசெலவுத் திட்டத்தில் வேறு சில பங்கீடுகளும் உள. நிலையான கடனுக்குச் செலுத்துதல், மத்திய அரசுக்கும், வேறு கடன் கொடுத்தவர்களுக்கும் கடனைத் திருப்பிக் கொடுத்தல் ஆகியவை அவற்றின்கீழ் வருகின்றன. திட்டங் களை நிறைவேற்றுவதன் விளைவாக, மாநில அரசின் கடன்கள் பெருகி, திருப்பிச் செலுத்தப்படும் தொகையும் குறிப்பிடும் அளவுக்கு அதிகரித் துள்ளது. உண்மையில், மொத்த முதலின வரவுசெலவில் சுமார் 25% இவற்றுக்காகச் செலவழிக்கப்படுகிறது (அட்டவணை 29).

அட்டவணை எண் 29

தேர்ந்ததெடுக்கப்பட்ட சில ஆண்டுகளில் எல்லா மாநிலங்களின் முதலீட்டுப் பிரிவினை

(Capital disbursements of all States in selected years) (ரூ. கோடியில்)

	1951-'52 (Acc)	1955-'56 (Acc)	1960-'61 (Acc)	1967-'68 (Acc)	1968-'69 (R.E.)	1969'-70 (B.E.)
முதலீட்டுச் செலவு						
முன்னேற்றத்துக்கான செலவு						
பல்தோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள்	27·6	55·7	46·5	70·3	102·7	83·1
நீர்ப்பாசனம், கடற்பயணம்	24·0	64·4	80·6	114·6	126·5	124·1
விவசாய முன்னேற்றமும் ஆராய்ச்சியும்	0·1	4·1	3·7	17·6	10·9	10·0
மீன்சாரத் திட்டங்கள்	19·9	42·9	25·4	30·1	26·7	30·3
சாலைப்போக்குவரத்து	1·6	2·3	4·8	4 7	0·4	5·5
கட்டடங்கள், சாலைகள், நீர்த்திட்டங்கள்	21·1	29·8	114·8	105·9	122·0	128·2
தொழில் வளர்ச்சி	5·8	7·1	15·5	78 4	95·4	68·0
இதர செலவு	0·2	0·1	2·3	4·9	4·7	3·7
மொத்த முன்னேற்றச் செலவு	100·3	206·4	293·6	426·2	489·3	452·9
முன்னேற்றத்துக்கல்லாத செலவு						
மாநில வர்த்தகம்	25·09	—12·40	9·8	53·1	15·9	7·5
சமீந்தாரி ஒழிப்பினுல், நிலச்சொந்தக்காரர்களுக்கு தஷ்டஈடு	2·03	2·65	14·0	4·8	7·1	9·1
இதர நிதி கொடுக்கல் வாங்கல்	0·16	2·16	0·2	0·1	0·3	0·2
மொத்த வளர்ச்சிக்குதவாத செலவு	27·28	—7·60	24·0	58·0	23·3	16·8
மொத்த முதலீட்டுச் செலவு	127·57	198·78	317·6	484 2	512·6	469·7
நிலையான கடனைச் செலுத்துதல்	1·01	14·77	17·8	57·6	67·0	96·3
மத்திய அரசின் கடனைத் திருப்பிக் கொடுத்தல்	11·37	25·62	105·1	371·0	553 8	566·7
இதர கடன்களைச் செலுத்துதல்	—	—	2 8	24·6	36·5	54·8
மாநில அரசுகளின் கடன்களும் முன்பணங்களும்	48·77	96.75	180·1	456·0	467·2	353·8
மொத்தப் பிரிவினைகள் (Total disbursements)	188·72	335·92	623·4	1393·4	1637·1	1541·3

Source : Reserve Bank of India, Reports on Currency and Finance, and Reserve Bank of India Bulletin, June, 1969.
Acc - Account, R.E - Revised Estimate. B.E. - Budget Bstimate.

செலவினப் போக்குகள்

(Trends in Expenditure)

11.8 செலவீட்டுக் கொள்கைத் தீர்மானிகள் (Determinants of Expenditure Policy) :- ஒரு நாட்டின் செலவீட்டுக் கொள்கை, அந் நாட்டின் பொருளாதார வாழ்க்கை, பொருளாதார வளர்ச்சியின் நிலை, பொருளாதாரத் தத்துவம், அரசாங்கத்தின் எதிர்கால நிலை, தற்போதுள்ள பொருளாதார நிலைமைகள் முதலிய பல காரணிகளைப் பொறுத்துள்ளது. 1947ஆம் ஆண்டுவரை இந்தியா அந்நியராட்சியின் கீழ் இருந்தது. அந்நிய அரசாங்கம் பல நன்மை தரும் செலவு களைச் செய்த போதிலும், வளர்ச்சி, பொதுநலம் இவற்றுக்கான விரிவான திட்டங்களை மேற்கொள்ளவில்லை. 1939ஆம் ஆண்டுக்கும், 1945ஆம் ஆண்டுக்குமிடையே நடந்த போர் அரசாங்கத்தைப் பாதித்தது. போர் முடிந்த பின்னரும் அதன் விளைவுகள் அரசாங்கச் செலவைப் பாதித்துக் கொண்டிருந்தன. நாட்டுப் பிரிவினையும் செலவினங்களைப் பாதித்தது.

விடுதலைக்குப்பின், பொருளாதாரக் கொள்கையில் முக்கியமான மாற்றம் ஏற்பட்டது. அரசாங்கம் உறுதியான பொருளாதார, சமுதாய முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டது. 1950ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட சட்டம், நலஅரசுக்கு (Welfare State) அடிப்படை அமைத்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டதால், பல முன்னேற்றத் திட்டங்களுக்காக, மத்திய, மாநில அரசுகளின் செலவு மிகவும் அதிகமாயிற்று. அதே சமயத்தில், சுதந்திரக் குடியரசு அமைப்பின் காரணமாக வேறு பல செலவுகளும் ஏற்பட்டன. சீனத்தாக்குதலுக்குப் பின்னர், நம் நாட்டில் பாதுகாப்புத் திறமையை வலுப்படுத்துவதுடன், திட்டமிடப்பட்ட வளர்ச்சியும் அரசாங்கச் செலவுகளை வெகுவாகப் பாதித்துள்ளன.

இந்திய அரசின் செலவினப் போக்குகள் கீழே விவரிக்கப் பட்டுள்ளன.

மேலே கூறியவாறு, அரசாங்கச் செலவீட்டுக் கொள்கையில், தலையிடாக் கொள்கை (Laissey faire) பிரதிபலித்தது. வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்துவதுதான் அதன் பொதுக் குறிக்கோளாகும். சமுதாயப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் இவற்றுக்கான செலவு ஓர் எல்லைக்குள்ளாகவே இருந்தது. அடிப்படைப் பணிகளுக்கான (Essential services) செலவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வரவு செலவில் பெரும் பகுதி பாதுகாப்புக்கும், உள்நாட்டு நிருவாகத்திற்கும் (Civil administration) தான் ஒதுக்கப்பட்டது.

பின்வரும் அட்டவணையில், 1930ஆம் ஆண்டுக்கும், 1939ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், சில பணிகளுக்கான இந்திய அரசாங்கத்தின் செலவு (ரூ. கோடியில்) கொடுக்கப்பட்டுள்ளது.

செலவினத் தலைப்பு	1900-01 (ரூ. கோடி)	1913-14 (ரூ. கோடி)	1920-21 (ரூ. கோடி)	1929-30 (ரூ. கோடி)	1939-40 (ரூ. கோடி)
பருப்பொருள் பாதுகாப்பு (Physical Security) (போலீஸ், சிறைச்சாலை, சட்ட நிருவாகம், கடன் பணிகள் உட்பட)	47·1	59·4	142·9	144·8	159·6
பொருளாதாரப் பாதுகாப்பு (ரெயில்வேக்கள், பொதுப்பணிகள், தொழில்கள், திட்டம், விவசாயம், கிராம முன்னேற்றம் உட்பட.)	31·8	34·9	50·8	31·0	29·9
சமுதாயப் பாதுகாப்பு (கல்வி, உடல்நலம் உட்பட)	9·2	8·3	13·1	21·7	18·5

மேலேயுள்ள அட்டவணையில், பாதுகாப்புக்கும், உள்நாட்டு நிருவாகத்துக்கும் ஆகியுள்ள செலவு, பொருளாதாரப் பாதுகாப்பு, சமுதாயப் பாதுகாப்பு இவற்றுக்கான செலவைவிட மிகவும் அதிகமாக இருப்பதை நோக்குப்போது, அவற்றுக்குக் கொடுக்கப் பட்டுள்ள முக்கியத்துவத்தைத் தெளிவாக அறியலாம். மேலும், அட்டவணையில் கொடுத்துள்ளவாறு, 1939-'40ஆம் ஆண்டில் பருப்பொருள் பாதுகாப்பு (Physical security.) என்ற தலைப்பின்கீழ் ஆன செலவு மும்மடங்காகியுள்ளபோது, பொருளாதாரப் பாதுகாப்புக்கான செலவு குறிப்பிடும்படி அதிகரிக்காமலிருப்பதையும், சமுதாயப் பாதுகாப்புக்கான செலவு, இருமடங்காகியிருப்பதையும் காணலாம். இக் காரணங்களினால்தான் மொத்த அரசாங்கச்

செலவு பொதுவாகக் குறைவாகவேயுள்ளது. சமுதாயப் பணிகளுக்கான தலா செலவு (Per capita expenditure) ஏறத்தாழ ரூ. 3% ஆகவே இருந்தது. அவ்வப்போது பொதுமக்களின் அபிப்பிராயத்தின் நெருக்கத்தினாலும், இரண்டு உலகப்போர்களினாலும், பொருளாதார மந்தத்தினாலும் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

1937ஆம் ஆண்டில், மாநிலத் தன்னுரிமையாட்சி (Provincial autonomy) புகுத்தப்பட்டதன் விளைவாக, மாநிலங்களில் அதிகாரத்தை மேற்கொண்ட புகழ்வாய்ந்த அரசுகள், முன்னேற்றப் பணிகளில் அதிக கவனத்தைச் செலுத்தத் தொடங்கின. ஆனால், இந்திய மக்களின் சம்மதத்தைக் கேட்காமல், போரில் இந்திய அரசு புகுந்தது தவறென காங்கிரஸ்கட்சி எடுத்துக்காட்டியதன் விளைவாக, அவற்றில் பெரும்பாலானவை 1939-இல் பதவியை ராஜினமா செய்தன. இவ்வாறு, வளர்ச்சிப் பணிகளை விரிவுபடுத்த முதலில் முயற்சிகள் எடுததுக் கொள்ளப்பட்டபோதிலும், 2½ வருடம் அல்லது 3 வருடகாலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் அனுமதிப்பதற்கு உதவாத குறுகிய காலமாக இருந்தது.

இரண்டாவது உலகப்போர்:- போர்க்காலத்தில், 1939-'40ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூ. 49·54 கோடிகளிலிருந்து, 1944-'45ஆம் ஆண்டில் ரூ. 458·32 கோடிகளாக உயர்ந்தது.

ஆங்கில, இந்திய அரசுகளுக்கிடையே செய்யப்பட்ட நிதி உடன்படிக்கைகள், இந்தியாவில் ஆங்கில அரசின் செலவுக்கான ரூபாய் நிதியைத் (Rupee Finance) திரட்டும் பொறுப்பை, இந்திய அரசாங்கத்திற்கு ஒப்படைத்தது. நாட்டுப் பாதுகாப்புச் செலவையும், இந்தியாவைவிட்டு வெளியே அனுப்பப்பட்ட படைகளுக்கான செலவையும் ஆங்கில அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நடைமுறையில், இப் பொறுப்பின் சரியான அளவினைத்தீர்மானிப்பது கடினமாக இருந்தது. இந்தியாவில் தனது ஏகாதிபத்திய நிலையின் முழு நன்மைகளையும், ஆங்கில அரசு அனுபவித்து வந்தது.

ஆங்கில அரசுக்காகச் செலவழிக்கப்பட்டு, ஆங்கில அரசிடமிருந்து திரும்பப் பெறவேண்டிய தொகை பெருகியது. மேலும் அமெரிக்க ஐக்கியநாடுகளின் நிலக்குத்தகை (Land Lease), எதிரெதிர் உதவி (Reciprocal Aid) ஆகியவற்றினால், இந்தியாவிலுள்ள அமெரிக்கப் படைக்கான செலவுகளுக்கு நாடு ரூபாய் நிதியைத் திரட்ட வேண்டியிருந்தது. ஆங்கில, அமெரிக்க அரசுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இச் செலவு, செலாவணியைப் பெருக்குவதன் மூலம் சமாளிக்கப்பட்டது. இதன் விளைவால் கடுமையான பணவீக்கம் ஏற்பட்டது.

போர்க்கால நிலைமையைச் சமாளிக்க, உதாரணமாக விலைக் கட்டுப்பாடு (Price Control), பங்கீடு (Rationing) உள் நாட்டு அளிப்புகள் (Civil Supplies) போன்ற புது இலாகாக்களை ஏற்படுத்தியதால், உள்நாட்டுச் செலவும் பெருகியது.

இரண்டாம் உலகப்போர் முடிந்ததும், போரின் விளைவாக அரசாங்கச் செலவு பெருமளவில் பாதிக்கப்பட்டது. போரின் பயங்கரமான விளைவுகளில் பணவீக்கமும் ஒன்றாகும். போருக்குப் பிறகு, பணவீக்கத்தின் சக்தி மேலும் பெருகியது. அதனால் அரசாங்கச் செலவில், பணவீக்கத்தை எதிர்த்துச் சில நோக்கங்கள் பின்பற்றப் பட்டன. விரைவில் உற்பத்தியைப் பெருக்காத, செலவு அதிகமான பல திட்டங்கள் கைவிடப்பட்டன; அல்லது அளவில் குறைக்கப் பட்டன. அதிக அளவு உணவுப் பொருள்களைப் பெருக்கும் திட்டங் களுக்கான செலவு அதிகரிக்கப்பட்டது. போர் நடந்தபோது ஏற்படுத்தப்பட்ட பெரிய நிருவாக அமைப்பு, பல துறைகளில் தொடர்ந்து இருந்து வந்ததோடல்லாமல், போர் முடிந்த பிறகும் விரிவடைந்தது போரின் முக்கிய விளைவுகளுள் ஒன்றாகும்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், அரசாங்கச் செலவின் தொகையும், செலவழிக்கப்படும் விதமும் மாறுமென எதிர்பார்க்கப் பட்டது. நாட்டின் பொருளாதார வாழ்வில் அதன் பங்கைப் பொறுத்தவரை, நாட்டு அரசாங்கம் உறுதியான நோக்கத்தைப் பின்பற்றியது. சமுதாய நல முன்னேற்றப் பணிகளுக்கான செலவு அதிகரிக்கப்பட்டு, ஒரு, நலம்பற்றியநாடு (Welfare State) உருவாக்கப் படவேண்டுமெனச் சட்டம் எதிர்நோக்கியது. அரசாங்கப் பணிகள் விரிவடைந்ததால் நிருவாகச் செலவும் அதிகரித்தது. இந்தியா ஒரு சுதந்திர நாடானதால் செலவு பெருகியது. அநேக புதிய செலவுகள் ஏற்பட்டன; பழைய செலவுகள் அதிகரிக்கப்பட்டன. (உ-ம்) பாராளுமன்றம், மற்றக் குடியரசு நிருவாகத்தின் உடைமைப் பொருள் தொகுதி இவற்றுக்கான செலவு (expenses on other paraphernalia of a democratic administration) அதிகரித்தது. மற்ற நாடுகளுடன் அரசியல் சூழ்ச்சித் தொடர்பினை (diplomatic relations) ஏற்படுத்தி, நிருவகிக்கச் செலவிட வேண்டியிருந்தது. தற்போது, இந்தியா பாதுகாப்புக்காகத் தன்னையே நம்ப வேண்டியிருப்பதால், பாதுகாப்புச் செலவும் அதிகரித்துவிட்டது.

விடுதலைக்குப் பின் ஏற்பட்ட இப் புதிய சூழ்நிலைகளைத்தவிர வேறு சில காரணிகளும் செலவைப் பாதித்தன. போரின் விளைவுகள் விடுதலைக்குப் பின் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருந்தன. மற்றொரு காரணி, 1947-இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையாகும்.

பாகிஸ்தானிலிருந்து அனுப்பப்பட்ட அகதிகளுக்கு இடர் உதவியும் (relief), மறுசீரமைப்பு உதவியும் (rehabilitation) செய்வதற்காக அதிகமாகச் செலவழிக்க வேண்டியதாயிற்று. பிரிவினையால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையில், பிரிவினைக்குப் பிறகு உள்நாட்டுத் தகராறுகளும் பெருகி, நாட்டில் நீதியையும், நேர்மையையும் பாதுகாக்கப் பெருமளவில் செலவிடவேண்டியிருந்தது.

11.10 திட்டங்கள் (Plans) :- 1951 ஆம் ஆண்டில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், திட்டமிடப்படாத செலவு பல வழிகளில் பெருகியபோதும், திட்டத்திற்குத் தேவையானவைகளே, மத்திய, மாநில அரசுகளின் செலவைத் தீர்மானித்தன.

11.11 திட்டங்களில் முதலீடுகளின் அளவும், வகையும் (Size and Pattern of Outlays in the Plans) :- ஒவ்வொரு திட்டத்திலும், மொத்தச் செலவும், ஒவ்வொரு தலைப்பின்கீழ் ஆகிய செலவும், குறிப்பிடும் அளவுக்கு அதிகரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவின் கீழும் செலவிடப்பட்ட தொகை அதிகரித்தபோதும், சில பிரிவுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. முதல் திட்டத்தில் விவசாய, சமுதாய வளர்ச்சிக்கான செலவு 15% ஆக இருந்து, இரண்டாவது திட்டத்தில் 11% ஆகக் குறைந்து, திரும்பவும் மூன்றும் திட்டத்தில் 13% ஆக உயர்ந்தது. நான்காம் திட்டத்தில் இச் செலவு திரும்பவும் 15% என ஆக்கப்பட்டது. இவ்விதமாகவே, முதல் திட்டத்தில் நீர்ப்பாசன, மின்சக்தித் திட்டங்களுக்கான செலவு, மொத்தச் செலவில் 29% ஆகும். இச் செலவு இரண்டாம் திட்டத்தில் 19% ஆகவும், மூன்றும் திட்டத்தில் 23% ஆகவும் இருந்தது. நான்காவது திட்டத்தில் 21% என உயர்த்தப்பட்டுள்ளது. தொழிலுக்கான செலவு, முதல் திட்டத்தில் 4% ஆக இருந்து, இரண்டாம் திட்டத்தில் 20% ஆக உயர்ந்து, மூன்றும் திட்டதிலும் 20%ஆகவே இருந்தது. நான்காவது திட்டத்தில் இச் செலவு மொத்தச் செலவில் 22%என உயர்த்தப்பட்டுள்ளது. போக்குவரத்துத் தொடர்பு வசதிக்கான செலவு, முதல் திட்டச் செலவில் 27% ஆகும். இரண்டாம் திட்டத்தில் அது 28% ஆகியது. ஆனால், மூன்றும் திட்டத்தில் 24% ஆகக் குறைந்து, நான்காம் திட்டத்தில் 22% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் மொத்தச் செலவு, குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளன. மத்திய அரசின் வருவாய்க்கணக்கின்

மொத்தச் செலவு, 1950-'51ஆம் ஆண்டில், ரூ. 346·64 கோடிகளாக இருந்து, 1966-'67-இல் ரூ. 2282·30 கோடிகளாக அதிகரித்தது. இது போன்று, மத்திய அரசின் மொத்த முதலினச் செலவும் ரூ. 71·03 கோடிகளாக இருந்து, 1968-'69-இல் ரூ. 2710·77 கோடிகளாக உயர்ந்தது. 1968-'69ஆம் ஆண்டு எண்ணிக்கை, திருத்தப்பட்ட மதிப்பீட்டைப் (Revised) பொறுத்ததாகும்.

செலவின வகையிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. வருவாய் வரவுசெலவுத் திட்டத்தில் (Revenue Budget) சமுதாயப் பணிகளுக்கும், முன்னேற்றப் பணிகளுக்கும் ஆன செலவு, 1950-'51ஆம் ஆண்டின் மொத்தச் செலவில் சுமார் 11·5% ஆக இருந்து 1960-'61ஆம் ஆண்டில் 28·6% ஆக உயர்ந்து, 1968-'69ஆம் ஆண்டில் 12% ஆகியது. இச் செலவினத்தில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட குறைவு, அதிகரித்த பாதுகாப்புச் செலவின் காரணமாக ஏற்பட்டதாகும். 1951-இல் பாதுகாப்புச் செலவு மொத்தச் செலவில் 47% ஆகும். 1960-'61ஆம் ஆண்டில் 30% ஆகியது. 1962-'63ஆம் ஆண்டில் சுமார் 32% ஆகிப் பின் 1963-'64-இல் 42% ஆக உயர்ந்தது. நாட்டின் பாதுகாப்புத் திறமையை வலுப்படுத்தவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. 1968-'69 - இல் இதற்கான செலவு மறுபடியும் 31% ஆகியது. உள்நாட்டு நிருவாகச் செலவு 1950-'51ஆம் ஆண்டில் மொத்தச் செலவில் 6% ஆகவும், 1968-'69-இல் 5·5% ஆகவும் இருந்தது. இவ்வாறு உள்நாட்டு நிருவாகச் செலவு ஒரு நிலையான மட்டத்திலேயே இருந்து வந்துள்ளது முதலினச்செலவைப் பொறுத்த வரை, வளர்ச்சிக்குதவும் திட்டங்களுக்கான செலவு, 1950-'51ஆம் ஆண்டில் ரூ. 57·40 கோடிகளாக (மொத்தத்தில் சுமார்80%)வும், 1965-'66-இல் ரூ. 585·02 கோடிகளாகவும் (மொத்தத்தில் 75%), 1968-'69-இல் ரூ. 544·82 கோடிகளாகவும் (மொத்தத்தில் 98%) இருந்தது. வளர்ச்சிக்கான செலவினத் தொகைகள் அதிகரித்த போது, 1963-'64-வரை அதன் சதவீதம் கிட்டத்தட்ட ஒரே மட்டத்தில் நிலையாக இருந்தது. ஆனால், 1963-'64 ஆம் ஆண்டில், பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டபோது, அதன் சதவீதம் குறைந்தது. 1968-'69-இல் ஏற்பட்ட வளர்ச்சிச் செலவினத்தின் அதிகரிப்பு, சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். 1969-'70ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் அது மொத்தச் செலவில் 87% ஆக உயர்த்தப்பட்டது.

மத்திய அரசின் வருவாய்க் கணக்குச் செலவினத்திலும், முதலினக் கணக்குச் செலவினத்திலும், மாநிலங்களுக்கு

அளிக்கப்படும் நிதியும், கடன்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறு மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அளிக்கும் தொகை, 1950-51'ஆம் ஆண்டில் ரூ. 15·59 கோடிகளாகவும் (மொத்தத்தில் சுமார் 5%), 1968-'69-இல் ரூ. 536·66 கோடிகளாகவும் (சுமார் 20%) இருந்தது. இது போலவே, முதலின வரவுசெலவுத் திட்டத்தில், மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்பணம் 1956-'57-ஆம் ஆண்டில் ரூ. 61·46 கோடிகளாகவும், 1968-69-இல் ரூ 915·16 கோடிகளாகவும் இருந்தது.

மாநிலங்களை நோக்கும்போது, எல்லா மாநிலங்களிலும் வருவாய்க் கணக்குச் செலவு (Expenditure on Revenue Account) 1951-'52 ஆம் ஆண்டில் ரூ. 392·63 கோடிகளாகும். இது 1968-'69-இல் ரூ. 2677·1 கோடிகளாக உயர்ந்துள்ளது. இது போலவே, எல்லா மாநிலங்களின் முதலினச் செலவும் 1951-52 ஆம் ஆண்டில் ரு. 127·57 கோடிகளாக இருந்து, 1968-'69-இல் ரூ. 512·6 கோடிகளாக உயர்ந்துள்ளது.

வெவ்வேறு தலைப்புகளின்கீழ், செலவுப் பங்கீட்டைப் பொறுத்த வரை, 1951-'52 ஆம் ஆண்டின் மொத்த வருவாய்ச் செலவில் (Revenue Expenditure), சமுதாய, வளர்ச்சிப் பணிகளுக்கான செலவின் வீதம் 50% ஆகவும், 1960-61-இல் 58% ஆகவும், 1968-69-இல் 44% ஆகவும் இருந்தது. முதலின வரவுசெலவுத்திட்டத்தில் (Capital Budget), வளர்ச்சிக்கான முதலீடு, ரூ. 100·29 கோடிகளாகவும் (1951-'52-ஆம் ஆண்டின் மொத்த முதலீட்டில் 78%), 1968-69-இல் ரூ. 489·3 கோடிகளாகவும் (மொத்தத்தில் 95%) இருந்தது.

மேற்கூறிய எண்களிலிருந்து, மத்திய, மாநில அரசுகளில், செலவின் மட்டம், வருவாய்க் கணக்கிலும், முதலினக் கணக்கிலும் பெருமளவில் பெருகியிருப்பதை அறியலாம். முன்னேற்றத்துக்கான செலவிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்து வந்துள்ளது என்றும் அறியலாம். வளர்ச்சிக்குதவாத செலவும் அதிகரித்துள்ளது. ஆனால் இச் செலவு வளர்ச்சிக்குதவும் செலவைப் போலப் பெருகவில்லை. வரி விசாரணைக்குழு, எல்லா அரசுகளின் (மத்திய, மாநில) வருவாய்க் கணக்குச் செலவினைக் காட்டும் ஒரு பயனுள்ள அட்டவணை (எண்-30)யைத் தொகுத்துள்ளது. இதில் ஒவ்வொரு பிரிவும் மொத்தப்பிரிவை ஒரு ரூபாயாகக் கொண்டு அதில் எவ்வளவு விகிதம் என்பதும் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை எண் : 30

(மொத்தச் செலவை 1 ரூபாய் எனக் கொண்டு)

		ரூ.	அ.	பை.
I	முன்னேற்றத்துக்கல்லாத செலவு			
	வருவாயின் நேர்முகத் தேவைகள்	0	0	9
	கடன், இதர கடன்பாடுகளுக்கான வட்டி	0	0	10
	கடன் (Debt Retirement)	0	0	3
	நாட்டுப் பாதுகாப்பு	0	3	5
	பொது அரசாங்கம்			
	வெளிப்புற நடவடிக்கைகள்	0	0	1
	பொது நிருவாகம்	0	1	0
	சட்ட நிருவாகம்	0	0	2
	சிறைச்சாலை, தீர்ப்பு உடன்பாடு	0	0	2
	காவல்துறை	0	1	0
	இதர துறைகள்	0	0	9
	இதர இனங்கள்	0	1	2
		0	9	7
II	சமூகப் பணி			
	கல்வி	0	1	5
	பொது மக்களின் நலன்	0	0	3
	மருத்துவம்	0	0	6
	இதர இனங்கள்	0	0	11
		0	3	1
III	பொருளாதார வளர்ச்சி			
	விவசாயம்	0	0	6
	கால்நடை மருத்துவம்	0	0	1
	கூட்டுறவு	0	0	1
	சமுதாய முன்னேற்றத் திட்டம்	0	0	2
	நீர்ப்பாசனமும், காடுகளும்	0	0	5
	தொழில்களும், அளிப்புகளும்	0	0	5
	உள்நாட்டுப் பணிகள்	0	1	5
	இதர இனங்கள்	0	0	2
		0	3	3

இவ்வாறு, நாடு முழுவதிலும் (மத்திய, மாநில அரசுகளில்) ஒரு ரூபாய்க்கு 9 அணு 7 பை அல்லது சுமார் 60% வளர்ச்சிக்குதவாத இனங்களான, பாதுகாப்பு, பொதுநிருவாகம், கடன் பணிகள் ஆகியவற்றுக்காகவும், ஒரு ரூபாயில் 3 அணு 2 பை அதாவது 20%க்குக் குறைவாகச் சமுதாயப் பணிகளுக்காகவும், ஒரு ரூபாயில் 3 அணு 4பைஅல்லது 21% பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. சமூகப்பணிகளுள் முக்கியமான கல்விக்காக 8·8% செலவழிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆய்வு, நமது முன்னேற்றத்திற்கு, அரசாங்கச் செலவின் பங்கு அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் முன்னேற்றத்திற்குதவாத செலவும் கூடவே அதிகரித்து வருவதை நோக்கும்போது, முடிந்தவரை அதைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்டுகிறது. சமுதாய முன்னேற்றப்பணிகள் விரிவடைவதன் காரணமாக, அவற்றை நிருவகிக்கும் இலாகாக்களும் பெருகுவதால், முன்னேற்றத்திற்கு உதவாத செலவுகள் அதிகரிக்கின்றன. தாக்குதல்களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள, பாதுகாப்புச் செலவு அதிகரிக்க வேண்டும் என்பதும் உண்மையே. ஆனால் முடிந்தவரை வளர்ச்சிக்குதவாத செலவைக் குறைக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். முன்னேற்றத்துக்குதவும் செலவுகளால், முன்னேற்றத்துக்குதவாத செலவுகளும் அதிகரித்து வருகின்றன.

12. இந்தியப் பொதுக்கடன்
(The Indian Public Debt)

அரசியலமைப்பு நிலை (Constitutional Position) :— அவ்வப் போது பாராளுமன்றத்தினுல் தீர்மானிக்கப்படும் எல்லைகளுக் குள்ளாக கடன் வாங்கும் உரிமையை நம் அரசியல் சட்டதிட்டங்கள் மத்திய அரசுக்கு அளிக்கின்றன. இவ்விதமாகவே, மாநிலச் சட்ட திட்டங்கள் குறிக்கும் எல்லைக்குள்ளாக, மாநிலங்கள் கடன் பெறலாம். ஆனுல், மத்திய அரசினுல் மாநில அரசுக்கு அளிக்கப் பட்ட அல்லது மத்திய அரசினுல் உத்திரவாதமளிக்கப்பட்ட கடன்கள் தீர்க்கப்படாமல் இருந்தால், இந்திய அரசின் சம்மதமின்றி ஒரு மாநிலம் எந்தக் கடனையும் பெற இயலாது. இதுவரை, மத்திய அரசும், மாநில அரசுகளும் கடன் வாங்கும் எல்லைகள், பாராளு மன்றத்தாலும், மாநிலச் சட்டதிட்டங்களாலும் நிச்சயிக்கப்பட வில்லை.

12.1. இரண்டாவது உலகப்போருக்கு முன்னர் இந்தியப் பொதுக் கடன் (Indian Public debt before Second World War) :— இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்தில், அரசு முக்கியமாகப் போர்த் தேவைகளுக்காகவே கடன் வாங்கிக் கொண்டிருந்தது. ஆப்கானிஸ்தானம் பர்மா, சீனு, பெர்சியா, எகிப்து, அபிசீனியா ஆகிய நாடுகளின்மீது ஆங்கிலேயர் படை யெடுப்புகள், எல்லா அந்நிய நாட்டுப் போர்கள் ஆகியவற்றுக்கான செலவுகளின் சுமையை இந்தியா ஏற்க வேண்டியிருந்தது. இலண்டனில் ஆன வேறு சில செலவுகளும், இந்தியாவைச் சேர்ந்த தாயின. முதல் உலகப்போரின்போது ஆங்கில அரசுக்கு இந்தியா அளித்த 100 மில்லியன் பவுன்கள் வெகுமதி, நம் நாட்டின் பயனிலாக் கடனை மேலும் அதிகப்படுத்தியது.

ஆரம்ப இந்தியப் பொதுக் கடனில் பெரும் பகுதி பயனுடைய தாகவே (Productive) இருந்தது. அது, இரயில் பாதைகள் கட்டுதல், நீர்ப்பாசன வேலைகள் போன்ற முதலீட்டுச் செலவுக்காக வாங்கப்

பட்டது. இக் கடன்களில் பெரும்பகுதி இங்கிலாந்திலிருந்து உயர்ந்த வட்டிவீதத்திற்கு வாங்கப்பட்டன. இரயில்பாதை அமைத்தல், நீர்ப்பாசன வேலைகள் ஆகியவற்றில் அதிக வீண் செலவு ஏற்பட்டது.

1914ஆம் ஆண்டுக்கு முன்பு, பயனிலாக் கடனைப் பயனுள்ள கடனுக மாற்றவேண்டும் என்ற கொள்கையை அரசு பின்பற்றியது. பயனிலாக் கடன்களை ஒழிக்க வரவுசெலவு உபரி (Budget surplus) உபயோகப்படுத்தப்பட்டு, அதற்குச் சமமான தொகை பயன்தரும் திட்டங்களுக்காகக் கடனுக வாங்கப்பட்டது. 1924ஆம் ஆண்டில், ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் பாக்கியுள்ள கடனில் $\frac{1}{80}$ பாகமும், ரூ. 4 கோடிகளும் கடன் மீட்சிக்காக ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படவேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டது.

1939ஆம் ஆண்டு, இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன்பு, இந்தியப் பொதுக்கடன் ரூ. 1205·76 கோடிகளாக இருந்தது. அதில் ரூ. 896·65 கோடிகள் பயனுள்ள கடனுக இருந்தது. அதாவது வட்டிதரும் சொத்துகளாக இருந்தது. கருவூலக்கணக்கின்கீழ் (Treasury Account) ரொக்கமும், பத்திரங்களும் ரூ 30·30 கோடி பெறுமானமுடையதாயிருந்தன. எஞ்சிய ரூ. 278·81 கோடிகள் பயனிலாக் கடனுக (unproductive debt) இருந்தன. இவ்விதமாக, மொத்தத்தில் $\frac{1}{5}$ பாகம்தான் பயனிலாக் கடனுக இருந்தது. மொத்தத்தில் ரூ. 736·64 கோடிகள் இந்தியாவுக்கான கடனுகவும், ரூ. 469·12 கோடிகள் இங்கிலாந்துக்கான கடனுகவும் இருந்தன. 1939-'40-இல் இந்தியப் பொதுக்கடனின் தொகுதியைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

அட்டவணை[1] 31

வட்டி கொடுக்க வேண்டிய கடன்கள்	ரூ. கோடியில்
ரூபாய்க் கடன்கள்	437·87
சிறுசேமிப்புகள்	141·85
கருவூல உண்டியல்கள் (Treasury Bills)	46·30
தூணைநல வைப்பும், அஞ்சலக வைப்பும் (Provident Fund and Post-Office Deposits)	111·20
இந்தியாவிலுள்ள மொத்தக் கடன்கள்	736·64
இங்கிலாந்தில் கடன்	
ஸ்டெர்லிங் கடன்கள்	464·94
இங்கிலாந்தில் இதர கடன் வகைகள்	4·18
	469·12
வட்டி கொடுக்கவேண்டிய, இந்திய அரசின் மொத்தக் கடன்கள்	1205·76

[1] Source :— Report on Currency and Finance [Reserve Bank of India, 1939-'40]

12.2. இரண்டாம் உலகப்போரின்போது இந்தியப் பொதுக் கடன் (Indian Public debt during Second World War) :- 1939ஆம் ஆண்டு, இந்தியாவின் ஸ்டெர்லிங் கடன் ரூ. 464·94 கோடிகளை எட்டியது. பல சந்தர்ப்பங்களின் காரணமாக, ஒரு சிறு பகுதி வெளிநாட்டுக் கடனைத் தவிர, வேறு எல்லாக் கடன்களையும் இந்தியா தீர்க்க முடிந்தது. போரின்போது, பல காரணங்களால், இலண்டனில் இந்தியக் கடன் செலாவணியோடு ஸ்டெர்லிங் கடன்களும் பெருக ஆரம்பித்தன. (1) இந்தியாவில் மூலப்பொருள்களை வாங்கியதற்கான செலவு, இந்தியாவில் செய்யப்பட்ட போர்ச்செலவு இவற்றில் ஒரு பங்காக ஆங்கில அரசு இந்தியாவுக்கு ஸ்டெர்லிங் பத்திரங்களைக் கொடுத்தது. (2) போரின்போது, இந்தியா பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது, போர்க்காலத்தின்போது, பிற நாடுகளிலிருந்து பொருள்களை வாங்க இவ்வுபரிகளை ஆங்கில அரசு பயன்படுத்திக் கொண்டது. இதற்குப் பதிலாக, ஆங்கில அரசு, இந்தியாவுக்கு ஸ்டெர்லிங் பாதுகாப்புப் பத்திரங்களாகக்கொடுத்தது. (3)அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இந்திய ஏற்றுமதிகளுக்காகவும், இந்தியாவில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் படைகளுக்கான ஊதியமும், இதர செலவினங்களுக்காகவும் கொடுக்கப்பட்ட தொகைகள் இந்தியாவினுல் அடையப் பெறுமல், ஆங்கில அரசுக்கு, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து பொருள்களை வாங்குவதற்கு உபயோகப்பட்டது. அதற்குப் பதிலாக, இந்திய அரசுக்கு. ஸ்டெர்லிங் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. இவ்விதமாக ஸ்டெர்லிங் பத்திரங்களின் அளவு பெருகியது.

ஆங்கில அரசுடன் கலந்து ஆலோசித்த இந்திய அரசு இந்த ஸ்டெர்லிங் பத்திரங்களை, இங்கிலாந்துக்குத் திருப்பியனுப்பவோ இந்தியாவின் ஸ்டெர்லிங் கடனைத் தீர்க்கவோ பயன்படுத்தலாமெனத் தீர்மானித்தது. அதன் விளைவாக, இந்தியாவின் ஸ்டெர்லிங் கடன் ரூ. 464·94 கோடிகளிலிருந்து, 1944-'45ஆம் ஆண்டில் ரூ. 34·19 கோடிகளாகக் குறைந்தது. இவ்வாறு ஸ்டெர்லிங் கடனை ஒழித்ததன் விளைவாக, அதேசமயத்தில் ஸ்டெர்லிங் இருப்புநிலைத் திரட்சியினுலும், இந்தியா கடன் வாங்கும் நாடாக இருந்து, கடன் கொடுக்கும் நாடாக மாறியது.

போருக்கு நிதியளிக்க போர்க்காலத்தில் பல கடன்கள் வாங்கப்பட்டன. இக் கடன்கள் பல்வேறு காலங்களுக்கு ஏற்றவாறு வாங்கப்பட்டன. அநேகமாக அவற்றுக்கு வட்டிவீதம் 3% ஆக இருந்தது. போரின் பிற்பட்ட ஆண்டுகளில், பணவீக்கத்திற்கு எதிர் முயற்சியாகக் கடன்கள் வாங்கப்பட்டன. போர் முயற்சிக்கான நிதியளிக்கவும், பணவீக்கற்திற்கு எதிரான முயற்சியாகவும், அரசு சிறுசேமிப்புகளை அதிகரிக்க சில முயற்சிகளை மேற்கொண்டது.

பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்கள் (Defence Savings Certificates) நாட்டுச் சேமிப்புப் பத்திரங்கள் (National Savings Certificates) போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. போரின் முடிவில் இந்தியாவின் பொதுக்கடன் ரூ. 1860·44 கோடிகளாக இருந்தது. அதில் பின்வருபவை அடங்கியிருந்தன :—

ஸ்டெர்லிங் கடன்கள்	...	ரூ 34·19 கோடி
ரூபாய்க் கடன்கள்	...	ரூ 1212·14 ,,
சிறுசேமிப்புகள்	...	ரூ 195·18 ,,
கருவூல உண்டியல்கள்	...	ரூ 86·70 ,,
வட்டி கொடுக்கும் மொத்தக் கடன்கள்	...	ரூ 1860·44 ,,

இதர நாடுகளைவிட, இந்தியாவில் போருக்கான நிதியைப் பெறக் கடன்ஈட்டல் சிறு பங்கையே வகித்தது. உதாரணமாக, இங்கிலாந்தில், 1943ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் பொதுக் கடன் இரட்டிப்பாயிற்று; அதே சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அது மும்மடங்காயிற்று; ஜெர்மனியில் ஐந்து பங்காகப் பெருகியது.[1]

போர் நடந்து முடிந்ததும் இந்தியப் பொதுக்கடன் (Indian Public debt in the Post-War Period) :— 1947ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மொத்தப் பொதுக்கடன் ரூ 2381-39 கோடிகளாக இருந்தது. போர் முடிந்ததும், பணவீக்கத்தை எதிர்க்கும் தேவை காரணமாகக் கடன் வாங்கும் கொள்கை பெருமளவுக்கு முதலிடத்தை வகிக்கின்றது. இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டுதான், பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

12.3. பாகிஸ்தானுடன் நிதி உடன்பாடு (Financial agreement with Pakistan) :— 1947ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினை, பிரிக்கப்படாத இந்தியாவின் சொத்துகளையும் பொறுப்புகளையும் பிரிக்கும் பிரச்சினையை எழுப்பியது.

1947ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைந்த உடன்படிக்கைக்கு ஏற்ப, பிரிக்கப்படாத இந்தியாவின் பொறுப்புகளை அதாவது 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 15ஆம் தேதி இருந்தவாறு, இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. அதன்படி, 1952-லிருந்து தனது மொத்தப் பொறுப்புக்களின் பங்கினை, ஆண்டுத் தவணைகளின் மூலமாகச் செலுத்துவதாகப் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.

[1] Dr. R. C. Saxena and Dr. P. C. Mathur, Public Finance, 1970, P. 441

பிரிக்கப்படாத இந்தியப் பொதுக் கடனின் பங்குகள், இந்தியா, பாகிஸ்தானுக்கென, பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. (1) இரயில்வேக்கள், தொலேபேசி, தந்தி இவற்றுக்கான வட்டி ஈட்டித்தரும் சொத்துகள், அதனுடைய நிலப்பகுதிக்கு ஏற்றவாறு மதிப்பிடப்பட்டுவிட்டன. (2) கருவூலக் கணக்கிலுள்ள (treasury account) ரொக்கம் (Cash), பத்திரங்கள் இவற்றுலான பொறுப்புகளேப் பொறுத்தமட்டில், பாகிஸ்தான் அதற்கு ஒதுக்கப்பட்ட காப்புக் கொடுக்கல் தொகைக்குச் சமமான கடனேப் பெறலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. அத் தொகை ரூ. 75 கோடிகளாகும். (3) கணக்கில் சேர்க்கப்படாத கடனேப் (uncovered debt) பொறுத்தவரை, பாகிஸ்தானின் பங்கு 13·5% ஆகும். பிரிக்கப்படாத இந்தியாவின் மொத்தப் பொதுக்கடனுக்காக முதலேயும், வட்டியையும் செலுத்தும் பொறுப்பினே இந்தியா இவ்வாறு ஏற்றுக் கொண்டது. பாகிஸ்தானின் பங்கு, 1952ஆம் ஆண்டிலிருந்து சமமான ஆண்டுத் தவணைகளாகக் கொடுக்கப்பட வேண்டுமென ஆயிற்று. கடனில் பாகிஸ்தானின் பங்கு ரூ. 300 கோடிகளென மதிப்பிடப்பட்டது. இந்த உடன்பாடு இந்தியாவுக்கு ஒத்து வராததுபோல் தோன்றுகிறது. பாகிஸ்தான், அதனுடைய பங்கினேத் தவணை முறையில் இந்தியாவுக்குச் செலுத்தும் போது, இந்தியா கடனேக் கொடுக்கும் முழுப்பொறுப்பினேயும் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இரு நாடுகளுக்கிடையே உள்ள அரசியல் தொடர்பினே நோக்கும்போது, கடனில் பாகிஸ்தானுடைய பங்கினேப் பெற இந்தியாவுக்கு வாய்ப்பு இல்லே என்பது தெரிகிறது. பாகிஸ்தானும் இதுவரை தனது ஆண்டுத் தவணைகளேக் கொடுக்க ஆரம்பிக்கவில்லே.

12·4 இந்தியாவில் பொருளாதார முன்னேற்றமும், திட்டங்களும் (Economic Development and Planning in India):- பொதுவாக, இரண்டாவது உலகப்போருக்குப்பின்னர், நலம் பற்றியநாடு(Welfare State) என்ற கருத்து தோன்றியதன் விளேவாகப் பொருளாதார நடவடிக்கையில் நாட்டில் நேர்முகப் பங்கு குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்துள்ளது. பல மேலே நாடுகளில் கடந்த சில காலமாக, முதன் முதலாக நாடு சமாதான காலத்தில் நிகர கடனுளியாக (Net borrower) மாறியுள்ளது. இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாடுகளில், முன்னேறிய நாடுகளேவிட, பொருளாதார, சமுதாய விவகாரங்களில், நாட்டின் பொறுப்பு அதிகமாகவுள்ளது. ஏனெனில் இந்த நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தின் வேகத்தை ஊக்குவிக்க நாடு எல்லா விதமான முன்னேற்றம் பற்றிய நடவடிக்கைகளேயும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நடவடிக்கைகளுக்கு வேண்டிய நிதியளிக்க, வரிவிதிப்பின்மூலம் பெறும் வருமானத்தைவிட அதிக வருவாய் வேண்டியுள்ளது. ஆதலால், நாடு பெருமளவில் கடன் வாங்க வேண்டியுள்ளது.

12·5 நாட்டு வருமானத்தில் உள்நாட்டுக் கடனின் விகிதம் (Ratio of Internal Public debt to National Income):- பயன்தரும் சொத்துகள் (Productive assets) வளர்ந்து வரும் வரையிலும், பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் அதிகரித்து வரும்வரையிலும், மக்களின் சேமிப்பிலிருந்து கடன் கிடைக்கும் வரையிலும், பொதுக் கடன்கள் அதிகரித்தாலும் கவலைக்கிடமில்லை. கடனின் அளவினைவிடக் கடன் வாங்கப்படும் முறையும், வாங்கப்பட்ட கடனின் உபயோகமும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். விடுதலைக்குப் பின்னர், இந்திய அரசாங்கத்தின் கடன் இரு மடங்குக்குமேல் அதிகமாகியுள்ளது. இருந்தபோதிலும், நாட்டு வருவாயில், இந்தியப் பொதுக் கடனின் விகிதம், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைவாகவே உள்ளது. நாட்டு வருவாய்க்கேற்ப இந்தியாவின் உள்நாட்டுக் கடன் நிலையைப் பின்வரும் அட்டவணை (எண்-32) காட்டுகிறது.

அட்டவணை 32

நாட்டு வருவாயில் உள்நாட்டுக் கடனின் விகிதம்[1]

ஆண்டு	உள்நாட்டுப் பொதுக் கடன் ரூ. கோடியில்		மொத்தம்	நாட்டு வருவாய் (தற்போதைய விலைப்படி) ரூ. கோடியில்	உள்நாட்டுப் பொதுக் கடன் நாட்டு வருமானத்தில் %
1951	2469	91 (a)	2560	9530	26·9
1956	3082	356	3438	99809	34·4
1961	5494	721	6215	14140	43·9
1962	5864	833	6697	14800	45·2
1963	6320	918	7238	15400	47·1
1964	6921	969	7890	17210	45·8
1965	7431	1012	8443	20430	42·2
1966	8166	1408	9574	20586	46·5
1967	9125	1420	10545	23647	44·6
1968	9754	1576	11330	28792	40·5
1969	10228	1848	12076	.....	.....
1970	10653	1949	12602	.....	.....

[1] Source: compiled from Report on currency and Finance (Various Issues.)

(a) Part A States only.

நாட்டு வருமானத்தில் உள்நாட்டுப் பொதுக்கடன் 1951-இல் 26·9% தான் இருந்தது. 1956-இல் 34·4% வரை அதிகரித்து, 1961-இல் 46% ஆக இருந்து 1968-இல் 40·5% ஆகக் குறைந்தது. வெளி நாட்டுக் கடனின் விகிதத்தோடு, உள்நாட்டுப் பொதுக்கடனின் விகிதத்தையும் சேர்த்து 1968ஆம் ஆண்டின் இறுதியில் 59·5% ஆக இருந்தது. இக் கடன்-வருவாய் விகிதம் இந்தியாவில், மற்றச் சில நாடுகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைவாகவேயுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்நாட்டுக்கடனின் சதவீதம் இங்கிலாந்தில் 78·8%, அயர்லாந்தில் 68·7%, இலங்கையில் 52·0%, நியுசிலாந்தில் 49·5%, பெல்ஜியத்தில் 48·2%, கனடாவில் 47·5%, ரொடீஷியாவில் 43·6%, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 41·2%, ஆஸ்திரேலியாவில் 40·0%, தென் ஆப்பிரிக்காவில் 38·0%, ஆஞல், இந்தியாவில் 32·1% எனவும் சமீபத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சி மூலம் அறிகிறோம்[1].

12·6 கடனுக்கான வட்டியும் நாட்டு வருமானமும் (Interest on the Debt and the National Income) :- வரவுசெலவுத்திட்டத்தைப் பாதிக்கும் நிதிப்பளு, ஆண்டொன்றுக்குக் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைக் கொண்டுதான் அளவிடப்படுகிறது. நாட்டு வருமானத்தில் வட்டித் தொகையின் விகிதம், வரிவிகிதங்களின் மட்டத்தையும் (level), அதைத் தொடர்ந்து சமுதாயத்தின் பளுவையும் அறிய ஒரு குறியீட்டு எண்ணுகப் (Index) பயன்படுகிறது. அட்டவணை எண் 33-ஐக் காண்க.

12·7 வரிவருவாயும், கடன்பணிகளும் (Tax Revenue and Debt Services):- கடன்பளு என்பது, அக் கடன் பணிகளுக்குக் கொடுக்க வேண்டிய கூலிக்காக ஏற்பட்ட வரிவிதிப்புப் பெருக்கமேயாகும். ஆகவே, கடன் பணிகளால் கவரப்படும் வரி வருவாயின் பகுதி பொதுக்கடன் சுமையை மதிப்பிடும் முக்கிய காரணியாகும். பின்வரும் அட்டவணை, (எண்-34) வரி வருவாயில், உள்நாட்டுப் பொதுக் கடனுக்கான வட்டி எவ்வளவு சதவீதமென்பதைக் காட்டு கின்றது.

12·8 அரசாங்கச் செலவும், வட்டிக்கான செலவும் (Public Expenditure and Interest cost):- அரசாங்கச் செலவில், கடனுக்கான வட்டியின் விகிதமும், கடன்பணிகளுக்கான (debt servicing) வரவு செலவுத் திட்டச் சுமையின் எல்லையைக் குறிப்பிடுவதாகும். அதைப் பற்றிய விவரங்களைப் பின்வரும் அட்டவணை (எண்-35) யிலிருந்து அறியலாம்.

[1] Jonathan Levin, "The Management of Public Debt in Developing countries," Finance and Development, June, 1970, p. 32

அட்டவணை எண் : 33

நாட்டு வருமானத்தில் வட்டித் தொகையின் விகிதம்[1]

(Ratio of Interest on Internal Debt to National Income)

ஆண்டு	செலுத்த வேண்டிய வட்டித் தொகை மத்திய அரசு	மாநில அரசு	மொத்தம்	நாட்டு வருமானம் தற்போதைய விலைக்கேற்றபடி ரூ கோடியில்	நாட்டு வருமானத்தில் செலுத்த வேண்டிய வட்டித் தொகையின் %
1951-52	61·86	84·9	70·35	9970	0·70
1952-53	68·26	9·29	77·55	9820	0·79
1953-54	74·39	12·92	87·31	10480	0·83
1954-55	79·17	14·92	94·09	9610	0·97
1955-56	86·70	18·84	105·54	9980	1·05
1956-57	96·10	26·95	123·05	11310	1·08
1957-58	114·37	36·99	151·36	11390	1·30
1958-59	128·81	54·51	183·32	12600	1·20
1959-60	151·65	72·19	223·99	12950	1·70
1960-61	164·61	84·38	248·99	14160	1·70
1961-62	175·69	99·66	275·35	14800	1·80
1962-63	193·43	152·54	345·97	15400	2·20
1963-64	216·68	198·39	415·07	17210	2·40
1964-65	241·78	207·29	449·07	20390	2·20
1965-66	287·17	268·67	563·30	20590	2·70
1966-67	362·29	376·22			
1967-68			738·51	27590	2·60
1968-69	374·70	453·70	828·40	.....	.....
1969-70	405·79	553·49	959·28	.....	.....

1951ஆம் ஆண்டிலிருந்து, மத்திய, மாநில அரசுகளின் செலவுகளில், வட்டித் தொகையின் விகிதம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1951-'52-இல், 9%-லிருந்து, 1955-'56-இல் 9·6%க்கு உயர்ந்து, 1960-'61-இல் 12·9% ஆகவும், 1965-'66-இல் 14·3% ஆகவும், 1967-'68-இல் 15·4% ஆகவும், 1969-'70-லும் அதே நிலையிலும் இருந்து வருகிறது.

1. Source :- Compiled from Explanatory Memorandum on the Budget of the Central Government and Report on Currency and (Finance Various issues)

(a) Includes appropriation for reduction or avoidance of debt; figures from 1962-'63 include charges on capital advanced to commercial Departments.

அட்டவணை எண் : 34

வரிவருவாயில் வட்டியின் விகிதம்[1].

(Ratio of Interest Payment to Tax Revenue)

ஆண்டு	வரி வருவாய் (மத்திய, மாநில அரசு) ரூ. கோடியில்	ஆண்டுச் சதவீத அதிகரிப்பு	உள்நாட்டுக் கடனுக்கான வட்டி (மத்திய, மாநில அரசு) ரூ. கோடியில்	ஆண்டுதோறும் அதிகரிப்பு %	வரி வருவாயில் வட்டியின் விகிதம்
1951-'52	741·04	.....	70·35	.....	9·4
1952-'53	741·06	.....	77·55	10·0	10·4
1953-'54	695·74	.....	87·31	13·0	12·5
1954-'55	705·64	1·4	94·09	8·0	13·3
1955-'56	750·61	6·4	105·54	17·1	14·1
1956-'57	871·03	16·1	123·05	17·1	14·1
1957-'58	1026·99	17·7	151·36	22·7	14·7
1958-'59	1067·38	4·0	183·32	21·1	17·1
1959-'60	1195·42	12·0	223·99	21·8	18·6
1960-'61	1354·92	13·3	248·99	11·2	18·3
1961-'62	1512·79	11·6	275·35	10·8	18·1
1962-'63	1827·37	20·8	345·97	25·4	18·8
1963-'64	2262·50	23·2	415·07	20·8	18·3
1964-'65	2585·22	14·2	449·07	8·2	17·4
1965-'66	2840·32	9·8	563·30	25·3	19·8
1966-'67	3235·65	13·9	687·64	22·0	21·2
1967-'68	3391·89	4·8	738·51	10·7	22·7
1968-'69	3727·22	9·9	828·40	12·1	22·2
1969-'70	4037·05	8·3	959·28	15·8	23·7

12·9 திட்டங்களில் உள்நாட்டுக்கடன் (Internal Borrowing in the Plans):- திட்டங்களுக்கான நிதித்திட்டத்தில், கடன் பெறுதல் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. திட்டங்களுக்கான கடன், சந்தைக்கடன் (Market loans) சிறு சேமிப்புகள் என்ற இரு தலைப்புகளின்கீழ் நடைபெறுகிறது. தனிநபர்களாலும், முதலீடுசெய் நிறுவனங்களாலும் (Institutional Investors) சந்தைக்கடன்கள் அளிக்கப்படுகின்றன. ஆனால், மொத்தத்தில் தனிநபர்களின் பங்கு மிகச் சிறியதே. 1959ஆம் ஆண்டு, மார்ச்சு மாத இறுதியில், மொத்தக் கடனில் தனிநபரின் பங்கு 3·1%. தான் 1968 இல் அது 1·2% ஆகக் குறைந்தது. எஞ்சியுள்ள பாகம், பாங்குகள், பாங்குத் தொழில் இல்லாத நிறுவனங்கள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், வருங்

[1]. Source :- Compiled from Explanatory Memorandum on the Budget of the Central Government and Report on Currency and Finance (Various Issues).

அட்டவணை எண் 36

அரசாங்கச் செலவில், வட்டித் தொகையின் விகிதம்[1].

ஆண்டு	வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு (மத்திய அரசு + மாநில அரசுகள்) (ரூ. கோடியில்)	உள்நாட்டுக் கடனுக்கான வட்டி (மத்திய, மாநில அரசுகள்) (ரூ. கோடியில்)	அரசாங்கச் செலவில் அக் கடனின் சதவீதம்
1951-'52	779·8	70·35	9·0
1952-'53	828·51	77·55	9·3
1953-'54	878·04	87·31	9·9
1954-'55	948·38	94·09	9·9
1955-'56	1083·96	105·54	9·6
1956-'57	1153·12	123·05	10·6
1957-'58	1381·21	151·36	10·9
1958-'59	1516·21	183·32	12·0
1959-'60	1695·15	223·84	13·1
1960-'61	1913·23	248·99	12·9
1961-'62	2147·14	275·35	12·3
1962-'63	2558·27	345·97	13·4
1963-'64	3071·06	415·07	13·6
1964-'65	3396·42	449·07	13·2
1965-'66	3930·85	563·30	14·3
1966-'67	4438·75	687·64	15·4
1967-'68	4928·14	738·51	15·4
1968-'69	5472·92	828·40	15·1
1969-'70	6188·44	959·28	15·4

கால வைப்புகள் (Provident funds), தொழில் நிதிக் கார்ப்பரேஷன்கள் (Industrial Finance Corporations), மாநில நிதிக் கார்ப்பரேஷன்கள், கூட்டுப்பங்குக் கம்பெனிகள் (Joint Stock Companies) போன்ற

1. Source :- Report on Currency and Finance (Various Issues) and Explanatory Memorandum on the Budget of the Central Government (Various Issues.)

பாங்குத் தொழிலல்லாத (non-bank) பிரிவின் முக்கிய பகுதிகளான முதலீடு செய்நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும்.

தனிநபர்கள் அரசாங்கத்துக்குக்கடன் கொடுத்தது பெரும்பாலும் சிறுசேமிப்புகள் மூலமாகத்தான். மக்களில் எல்லாப் பிரிவினருக்கும் இடமளிக்கும் சிறுசேமிப்புத் திட்டங்கள் இந்தியாவில் மிக முக்கியமானதாகவுள்ளன. முன்னேற்றப் பணிகளுக்காக, வளப் பொருள்களையும், வருமானத்தையும் மாற்றி வழிகாட்ட, நுகர்வைக் குறைப்பதற்கு அவசியமான சிறுசேமிப்பு ஒரு முக்கிய வழியாகும். முக்கியமான சிறுசேமிப்புத் திட்டங்கள் பின்வருவனவாகும்:- அஞ்சலகச் சேமிப்புப் பாங்கு வைப்புகள், நாட்டுத் திட்டச் சேமிப்புப் பத்திரங்கள்[1] (Natioanl Plan Savings Certificates), கருவூலச் சேமிப்பு வைப்புப் பத்திரங்கள்[2] (Treasury Savings Deposit certificates), குவிவுத் தவணைத் திட்டம் (Cumulative Time Deposit Scheme).

வருமானத்துக்கும், செலவுக்கும் இடையேயுள்ள பிளவினை நிரப்ப அரசாங்கத்திற்கு வேண்டிய குறுங்கால நிதிகளுக்குக் கருவூல உண்டியல்கள் (Treasury Bills) முக்கிய ஆதாரமாகவுள்ளன. அவை பாங்குகளுக்கு, ஒரு கவர்ச்சிகரமான (attractive) முதலீட்டு வகையாக இருந்து வந்துள்ளன. 1951ஆம் ஆண்டிலிருந்து 1970-க்குள்ளாக கருவூல உண்டியல்களே ரூ. 364·75 கோடிகளிலிருந்து, (மொத்தத்தில் 24%) ரூ. 2233·66 கோடிகள் வரை (மொத்தத்தில் 14·8%) அதிகரித்துள்ளன. மொத்த உள்நாட்டுக்கடனில் (Internal debt) கருவூல உண்டியல்களின் பங்கு, 1958ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியில் உச்ச நிலையை (அதாவது 31·5%) அடைந்தது.

பொதுவாக நோக்கின், இந்தியாவில் உள்நாட்டுப் பொதுக் கடன், ''நிலையாக்கிய கடன்கள்'' (funded debts), ''நிலையாக்கப் படாத கடன்கள்'' (unfunded debts) என இரு வகைப்படுத்தப் பட்டுள்ளன. நிலையாக்கிய கடன்கள் விற்கக்கூடிய பத்திரங்களைக் (marketable Securities) குறிக்கும். விற்கப்பட முடியாத அஞ்சலகச் சேமிப்பு வைப்புகள், வருங்கால வைப்பு (Provident Fund) போன்ற சிறுசேமிப்புகள் நிலையாக்கப்படாத கடன்களின்கீழ் வருகின்றன. நிலையாக்கிய கடன்கள், நெடுங்காலக்கடன் அல்லது நிலையான கடன் எனவும் குறிப்பிடப்படுகின்றன. கருவூல உண்டியல்கள் ''குறுங் காலக் கடன்கள்'' (floating debts) என்ற பிரிவின்கீழ் வருகின்றன. ஆனால், நிலையாக்கப்படாத கடன்கள் குறுகிய காலக் கடன்களாகும். அவ்வப்போதுள்ள இந்திய அரசின் பொதுக் கடன்களைப் பற்றிய முழு

1. தற்போது தாட்டுப்பாதுகாப்புப் பத்திரங்களாகவுள்ளன.
2. தற்போது இவை பாதுகாப்பு வைப்புப் பத்திரங்களாகவுள்ளன.

விவரங்களை, ஒவ்வோராண்டும் வரவுசெலவுத் திட்டத்தோடு வெளி வரும் விளக்கக் குறிப்பில் (Explanatory Memorandum) காணலாம்.

12·10. முதல் ஐந்தாண்டுத் திட்டம் (First Five Year Plan):— முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், மத்திய, மாநில அரசுகளின் கடன் இலக்கு (target of borrowing), ரூ. 385 கோடிகளாக இருந்தது. இதில் கடன்கள், சிறுசேமிப்புகள், மற்ற நிலையாக்கப்படாத (unfunded) கடன்கள் ஆகியவை அடங்கியுள்ளன. ஆனால் கருவூல உண்டியல்கள், இதர குறுங்காலக் கடன்களிலிருந்து பெறும் வருமானம் சேர்க்கப்படவில்லை. மொத்தத்தில் கிடைக்கக்கூடிய தொகை ரூ. 600 கோடிகளாக இருந்தது. அதாவது, சந்தைக்கடன் (Market borrowing) ரூ. 205 கோடிகள், சிறுசேமிப்புகள், நிலையாக்கப் படாத கடன் இவற்றிலிருந்து ரூ. 304 கோடிகள், இதர முதலீட்டு வரவுகளிலிருந்து (Capital receipts) ரூ. 91 கோடிகள்.

12·11. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (Second Five Year Plan):— இரண்டாவது திட்டத்தில் பொதுக்கடன் இலக்கு ரூ. 1200 கோடிகளாக இருந்தது. அதில் சந்தைக் கடன் மூலமாகக் கிடைப்பது ரூ. 700 கோடிகளெனக் கொள்ளப்பட்டது. இரண்டாம் திட்டக் காலத்தில் ரு. 430 கோடிகள் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கென ஒதுக்கப்பட்டது. ஆகவே மொத்தக் கடன் இலக்கு ரூ. 1130 கோடிகளாகியது. தனியார் துறையில் (Private Sector) நிதிக்குத் தேவை ஏற்பட்டபோது, இந்த இலக்கு (target) அவ்வளவு எளிதில் அடையக் கூடியதன்று என உணரப் பட்டது. ஆண்டொன்றுக்குச் சராசரி ரூ. 100 கோடிகள் வீதம் ரூ. 500 கோடிகள், சிறு சேமிப்பின் மூலமாகப் பெறலாமெனக் கணக்கிடப்பட்டது.

இரண்டாவது திட்டக்காலத்தில், நிகர சந்தைக் கடன்கள் (Net market borrowing), ரூ. 780 கோடிகள். அதாவது இலக்குக்கு மேல் ரூ. 80 கோடிகளென மதிப்பிடப்பட்டது. உண்மையில் நிகர சந்தைக் கடன்கள் ரூ. 300 கோடிகளுக்கும் குறைவாகவே இருந்தன. சிறுசேமிப்புகளைப் பொறுத்தவரை, இலக்கு ரூ. 500 கோடிகளாக இருந்தபோதிலும், உண்மை வசூல் ரூ. 400 கோடிகளாகத்தான் இருந்தது.

1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து, ஒரு பரிசுப்பத்திரத் திட்டம் (Prize Bond Scheme) ஆரம்பிக்கப்பட்டது. 5ரூ., 100ரூ. இவற்றில் வட்டியில்லாத பரிசுப்பத்திரங்கள் வெளியிடப்பட்டன. இப் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், குலுக்கலின்போது அடையும் பரிசுகளுக்கு வருமான வரி கிடையாது. 1960-'61ஆம் ஆண்டில்,

பரிசுப்பத்திரங்களின் மூலம் பெற்ற வருமானம் ரூ. 25 கோடிகளென மதிப்பிடப்பட்டது. 1960-61-இல் ரூ. 15·6 கோடிகளும், 1961-'62-இல் ரூ. 3·3 கோடிகளுமாக இருந்தது.

1962ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்குப் பதிலாக, வட்டப் பரிசுப் பத்திரத்திட்டம் (Premium Prize Bond Scheme) தொடங்கப் பட்டது. இதற்குக் குறைந்த வீதத்தில் வட்டியுண்டு. இத் திட்டம் பிரபலமடையாததன் காரணமாக, 1964ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31ஆம் தேதியிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது.

12·13. மூன்றுவது ஐந்தாண்டுத்திட்டம் (Third Five Year Plan):- மூன்றும் திட்டத்தில், பொதுக்கடன் நிகர வருவாய் இலக்கு ரூ. 800 கோடிகளாகவும், சிறு சேமிப்புகளிலிருந்து பெறும் வருவாய் ரூ 600 கோடிகளாகவும் இருந்தது. ஆனால் சந்தைக்கடன் வருவாய் ரூ. 857 கோடிகளாகவுயர்ந்து, சிறுசேமிப்பு வருவாய் ரூ. 585 கோடிகளாகக் குறைந்ததையும் காணலாம்.

1962-இல் சீனத் தாக்குதலினால் ஏற்பட்ட நெருக்கடி நிலைக்குப் (Emergency) பின்னர், பத்தாண்டுக்காலக் கருவூலச் சேமிப்பு வைப்புப்பத்திரங்களுக்குப் (10-Year Treasury Savings Deposit Certificates) பதிலாக, பத்தாண்டுக்காலப் பாதுகாப்பு வைப்புப் பத்திரங்களும் (Defence Deposit Certificates), பன்னிரண்டு ஆண்டுக் கால நாட்டுப் பாதுகாப்புப் பத்திரங்களும் முறையே 4·5%, 4·76% வட்டியளிக்கும்படி, உயர்ந்த வட்டிவீதப் பத்திரங்களாக வெளியிடப் பட்டன. 4½% வட்டிதரும், பத்தாண்டுக்கால நாட்டுப் பாதுகாப்புப் பத்திரங்களும் வெளியிடப்பட்டன. 1962ஆம் ஆண்டில், நவம்பர் மாதம் 12ஆம் தேதி முதல், பொன்பத்திரங்களை (Gold bonds) வெளியிட்டது. நெருக்கடியைச் சமாளிப்பதற்காகச் செய்யப்பட்ட மற்றொரு முயற்சியாகும். இப் பத்திரங்களுக்கான தொகை, பொன், பொன் நாணயங்கள், பொன் நகைகள் ஆகியவை செலுத்தப் படவேண்டும். நாட்டின் பொன்னிலாகிய பொருள்களை இடம் பெயர்க்கும் கொள்கைக்காகவும், நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான சாதனங்களைப் பெறவும் பொன் பத்திரங்கள் (Gold bonds) வெளியிடப்பட்டன.

1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பாகிஸ்தான் தாக்குதலைத் தொடர்ந்து, 1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், நாட்டுப்பாதுகாப்புக்கடன்கள் (National Defence Loans) இரண்டு தொடங்கப்பட்டன. 1980ஆம் ஆண்டு முதிர்ச்சியடையும் (Maturing) நாட்டுப்பாதுகாப்புப் பொன் பத்திரங்களை வெளியிட்டது மற்றொரு முயற்சியாகும். இப் பத்திரங்களுக்குப் பொன், பொன் நாணயங்கள், பொன் ஆபரணங்கள் ஆகியவற்றைச் செலுத்தவேண்டும்.

1963-'64ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட இன்னொரு முக்கியமான திட்டம், கட்டாய வைப்புத் திட்டமாகும் (Compulsary Deposit Scheme). நாட்டுப் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் ஆன தேவைகளை நிறைவேற்ற, மக்களிடையே வீருப்பம் தவிர்க்கும் முயற்சியை (austerity) ஊக்குவிக்க, இத் திட்டம் வரி முயற்சிக்கு உறுதுணையாக அமைந்தது. 1964-'65ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், கட்டாய வைப்புத்திட்டம் விலக்கப்பட்டு, ஆண்டுத் தொகை வைப்புத்திட்டம் (Annuity Deposit Scheme) ஏற்படுத்தப்பட்டது. இதுவும் 1968-'69ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் கைவிடப்பட்டது.

12·14. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (Fourth Five Year Plan) :- நான்காம் திட்டத்தின்படி மத்திய, மாநில அரசுகளின் கடன்கள் ரூ. 1166 கோடிகளெனவும், திட்டக்காலத்தில் சிறுசேமிப்பு வருவாய் ரூ. 800 கோடிகளெனவும் நிருணயிக்கப்பட்டது. இதைத் தவிர, மாநில அரசுகள், வீடுகட்டும் திட்டங்கள், தண்ணீர் வசதித் திட்டங்கள் இவற்றுக்காக, ஆயுள் காப்பீட்டுக் கழகம் (L.I.C.) ரூ. 96 கோடிகள் வாங்கலாமெனவும் கணக்கிடப்பட்டது.

12·15. நாட்டின் வெளிநாட்டுக் கடன் (External Public Debt) :- இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய நிலையில் வெளிநாட்டுக் கடன்கள் இன்றியமையாதனவாகும். முன்னேற்றத் திட்டங்களுக்குத் தேவையான அந்நிய நாட்டுச் செலாவணியைச் சமாளிக்க, வெளிநாட்டுக் கடனை இந்தியா பெருமளவில் நம்பியுள்ளது. விடுதலைக்குப் பின்னர், இந்தியாவின் வெளிநாட்டுக் கடனின் பெருக்கம் குறிப்பிடத்தக்கது. 1951ஆம் ஆண்டிலிருந்து, அரசாங்கத்தின் கடன்நிலையைப் பின்வரும் அட்டவணை (எண். 36) காட்டுகிறது.

1951ஆம் ஆண்டில் ரூ. 49·81 கோடிகளாக இருந்த வெளிநாட்டுக் கடன்1970-இல் ரூ. 6140·62 கோடிகளாகப் பெருகியுள்ளது. மொத்த வெளிநாட்டுக் கடனில், டாலர்களின் பங்கு அதிகரித்துள்ளது, விடுதலைக்குப்பின் பெருகிய வெளிநாட்டுக் கடனில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1970ஆம் ஆண்டு, மார்ச்சு மாத இறுதியில் மொத்த வெளிநாட்டுக்கடனில் 72%, டாலர் கடனாக இருந்தது.

இந்திய அரசுக்குக் கடனுதவி செய்யும் நாடுகளுள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிடத்தை வகிக்கின்றன. தற்போதுள்ள வெளிநாட்டுக்கடனின் உரிமையாளர்களைப் பின்வரும் அட்டவணை (எண்-37)யில் காணலாம்.

1969-'70ஆம் ஆண்டு இறுதியில் இருந்த மொத்த வெளிநாட்டுக் கடனில், (ரூ. 6140·62 கோடிகள்) அமெரிக்காவுக்குக் கொடுக்க

வேண்டிய கடன் ரூ. 3402·37 கோடிகளாகும். அதாவது தற்போதைய இந்திய வெளிநாட்டுக்கடனில் ஏறத்தாழ பாதிப்பாகம் அமெரிக்காவுக்குச் செலுத்தப்படவேண்டியது என்பதையறியலாம்.

அட்டவணை எண் 36

1951-லிருந்து இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்[1]
(ரூ கோடியில்)

ஆண்டு	மொத்த வெளிநாட்டுக்கடன்	டாலர்கடன் (Dollar debt)
1951	49·81	24·60
1956	138·81	117·57
1961	760·96	468·39
1966	2590·62	1748·02
1967	4623·55	3175·01
1968	5400·78	3790·46
1969	5927·10	4287·93
1970	6140·62	4417·83

வெளிநாட்டுக்கடன் இவ்வளவு விரைவில் பெருகியதன் விளைவாக, செலுத்தவேண்டிய வட்டித்தொகையும் பெருகியுள்ளது. செலுத்தவேண்டிய வட்டித்தொகை 1952-'53ஆம் ஆண்டில் ரூ. 2·40 கோடிகளாக இருந்து 1969-'70ஆம் ஆண்டில் ரூ. 157·77 கோடிகளாக உயர்ந்துள்ளதைப் பின்வரும் அட்டவணை (எண். 38) யிலிருந்து அறியலாம்.

இந்திய அரசாங்கக் கடனில் சமீபகாலப் போக்குகள் (Recent Trends in Indian Public Debt) :- இந்திய அரசின் கடனும், செலவினங்களும் பின்வரும் அட்டவணை (எண். 39)யில் காட்டப் பட்டுள்ளன. இரண்டாவது உலகப் போரின்போதும், திட்டக்காலத் திலும் கடன் விரைவில் பெருகிவிட்டது. முதல் திட்டத்திற்கு 1950-'51 ஆம் ஆண்டில் அது ரூ. 2665·40 கோடிகளாக இருந்தது. முற்பட்ட முதல் திட்டக்காலத்தில் ஏற்பட்ட கடன் அதிகரிப்பு

[1] Source :- Report on Currency and Finance [1956-'57 and 1969-'70]

அட்டவணை எண் 37

தற்போதைய இந்திய வெளிநாட்டுக்கடன் உரிமையாளர்கள்[1]

கடன் வாங்கிய இடம்	1950-'51	1955-56	1960-'61	1965-'66	1969-'70 (திருத்தியமைக்கப்பட்ட
1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்	.....	91·72	314·13	1379·21	3402·37
2. உலக பாங்க் (I.B.R.D.)	19·61	19·30	40·19	179·71	252·07
3. பன்னாட்டு முன்னேற்றச் சங்கம் (I.D.A.)	.....	.....	.....	171·09	666·18
4. இங்கிலாந்து	12·37	2·62	121·97	263·45	546·88
5. ரஷ்யா	.....	.....	57·48	243·47	378·72
6. ஜெர்மனி	.....	.....	103·19	206·25	375·83
7. ஜப்பான்	.....	.....	9·93	62·29	222·94
8. கனடா	.....	.....	14·07	17·95	97·26
9. இதர இடங்கள்	.....	.....	.....	67·14	198·37
மொத்தம்	31·98	113·64	660·96	2590·62	6140·62

[1] Source :— Adopted from Explanatory Memorandum on the Budget of the Central Government, [1965-'66 and 1969-'70.]

ரூ. 645·67 கோடிகளாயிருந்த போதிலும், அவ்வளவு குறிப்பிடத் தக்கதன்று 1960-'61-இல், அது ரூ. 6544·24 கோடிகளாக உயர்ந்தது. 1967-'68-இல் அது ரூ. 15859·23 கோடிகளென மதிப்பிடப்பட்டது. இம் மாற்றங்கள், நாட்டில் முன்னேற்றத்துக்கான செலவினங்களின் வளர்ச்சியின் பிரதிபலிப்பேயாகும். 1963-'64ஆம் ஆண்டிலிருந்து, முன்னேற்றத்தோடு பாதுகாப்புச் செலவுகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது.

அட்டவணை எண் 38

வெளிநாட்டுக்கடனுக்கான வட்டி
(Interest on External Public Debt)[1]

ஆண்டு	வெளிநாட்டு அரசாங்கக் கடனுக்கான வட்டி (ரூ. கோடியில்)
1952-'53	2·40
1955-'56	3·33
1960-'61	23·87
1965-'66	79·30
1966-'67	125·87
1967-'68	142·68
1968-'69	147·99
1969-'70	157·77

கடனில் பெரும்பகுதி வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப் பட்டிருப்பதால், நாளடைவில் இந்தியாவின் பொருளாதார உற்பத்தித்திறனைப் பெருக்குமாதலால், அதிகரித்து வரும் கடன் சுமையைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை. ஆனால், சில பிரசினைகளை அலட்சியப்படுத்தக்கூடாது. வளர்ந்துவரும் உள்நாட்டுக் கடனுக்கு, வட்டி செலுத்துவதற்காக வரிச்சுமை அதிகரிக்கப்படுகிறது. வெளிநாட்டுக்கடன் திருப்பிக் கொடுக்கும் பிரசினையை உண்டாக்கு கிறது. இதன் விளைவாக, ஏற்கெனவே காலியாக்கப்பட்டுள்ள அந்நியச் செலாவணி பாதிக்கப்பட்டு, வருங்காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்காக மேலும் கடன்வாங்கும் நிலையை ஏற்படுத்துகிறது. மூன்றும் திட்டத்தில் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற் கென ரூ. 500 கோடிகள் ஒதுக்கப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும், வட்டி செலுத்துதற்காகவும் ரூ. 1216 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

[1] Source :- B. S. Sreekantaradhya, Public Debt and Economic Development in India, 1972, p. 169.

அட்டவணை எண் 39

இந்திய அரசின் கடனும், இதர பொறுப்புகளும்[1]

(Debt and Liabilities of the Government of India)

	1950-'51	1955-'56	1960-'61	1965-'66 (Acc)	1967-'68 (R.E.)	1968-'69 (B.E.)
I. பொதுக்கடன்	2054·33	2442·39	4735·51	8005·49	11956·50	13154·02
A. இந்தியாவில் வாங்கப்பட்ட கடன்	2022·30	2328·76	3974·55	5414·87	6555·72	6928·71
(a) நிலையான கடன்	1444·95	1520·85	2594·08	3462·35	3775·89	3832·39
(1) நடப்புக்கடன்	1438·46	1508·63	2555·72	3417·28	3722·33	3783·58
(2) பரிசுப்பத்திரங்கள்			15·63	11·35	8·56	3·56
(3) திருப்பிச் செலுத்தும்போது கடன்	6·49	12·22	22·73	33·72	45·00	45·25
(b) குறுங்காலக்கடன் (Floating debt)	577·35	807·91	1380·47	1952·52	2779·83	3096·32
B. இந்தியாவுக்கு வெளியே வாங்கப்பட்ட கடன்	32·03	113·63	760·96	2590·62	5400·78	6225·31
(1) இங்கிலாந்து	12·37	2·61	121·97	263·45	572·78	633·43
(2) அமெரிக்க ஐக்கிய நாடுகள்	—	91·72	314·13	1379·16	2913·63	3266·17
(3) ரஷ்யா	—	—	57·48	243·47	349·66	369·00
(4) மேற்கு ஜெர்மனி	—	—	103·19	206·25	368·07	408·69

(5) புனரமைப்பு வளர்ச்சிப் பன்னாட்டுப் பாங்கு (I.B.R.D.)	19·66	19·30	140·19	179·77	261·94	268·89
(6) பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் (I.D.A.)	—	—	—	171·09	565·74	589·10
(7) இதர இடங்கள்	—	—	24·00	147·43	369·96	693·03
II. இதர பொறுப்புகள் (Other Liabilities)	811·07	1068·68	1808·73	3323·63	3902·73	4135·57
A. நிலையாக்கப்படாத கடன் (Unfunded debt)	448·02	758·75	1524·81	2763·58	3273·25	3479·44
(a) சிறுசேமிப்புத் திட்டங்கள்	336·87	575·77	973·44	1541·99	1768·98	1888·98
(b) இதர பொறுப்புகள்	111·15	182·98	551·37	1221·59	1504·27	1590·46
B. காப்பு நிதிகளும், வைப்புகளும்	363·05	309·93	283·92	560·05	629·48	656·13
III. மொத்தக்கடனும், பொறுப்புகளும்	2865·40	3511·07	6544·24	11329·12	15855·23	17289·59

Source : Reserve Bank of India, Reports on Currency and Finance, 1967' - 68
Acc - Account, R.E. - Revised Estimate. B.E. - Budget Estimate.

13. பற்றுக்குறை நிதியாக்கம்
(Deficit Financing)

பற்றுக்குறை நிதியாக்கம் என்றால் என்ன? வரிகள், அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் தொகை, மக்களிடமிருந்து பெறும் கடன்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட அதிகப்படியாக அரசாங்கம் செய்யும் செலவுகளைப் 'பற்றுக்குறை நிதியாக்கம்' என்ற சொல் குறிக்கும்.

பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்துக்கும் (Deficit budgeting), பற்றுக்குறை நிதியாக்கத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறிவது அவசியமாகும். வருவாய்க் கணக்கு (Revenue Account) வரவினங்கள், வருவாயக் கணக்குச் செலவினங்களைவிடக் குறையலாம். அப்போது பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டம் தேவைப்படுகிறது. வரவுசெலவுத் திட்டக்காலத்திற்குள், அதாவது பெரும்பாலும் ஓராண்டுக்குள்ளாக அரசாங்கம் வசூலிக்க நினைக்கும் வருவாயைவிட அதிகப்படியான செலவினங்களையுடைய, அரசின் வரவுசெலவுத் திட்டத்தையே, பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டம் குறிக்கும். மேலை நாடுகளில், பற்றுக்குறை நிதியாக்கத்திற்கும், பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டத்திற்கும் வேறுபாடு கிடையாது. வரவுக்கும், செலவுக்கும் உள்ள இடைவெளியை நிரப்ப அரசாங்கத்தினால் வாங்கப்படும் கடன்களையே அவை குறிக்கின்றன. ஆனால், இந்தியாவில், வருவாய்க் கணக்குப் பற்றுக்குறை அல்லது மூலதனக் கணக்குப் பற்றுக்குறை ஆகியவற்றின் மூலமாக மொத்த, நாட்டுச் செலவினங்களின் நேர்முக மிகுதியைக் குறிப்பிடவே திட்டக்குழு 'பற்றுக்குறை நிதியாக்கம்' என்ற சொல்லை உபயோகித்தது. பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம், அரசாங்கம் வரிவிதிக்காமலோ மக்களிடமிருந்து கடன் பெறாமலோ, நிதி திரட்டலாம். ஆகவே பற்றுக்குறை நிதியாக்கம் என்பது தற்போதுள்ள வரிவருவாயையும், பாங்கு மூலமல்லாத வேறு கடன்களையும் விட அதிகமாக ஆகும் செலவைக் குறிப்பதாகும். பொது

மக்களிட மிருந்து பெறும் கடன், பற்றுக்குறை அளவிலிருந்து ஒதுக்கப் பட்டுள்ளது. அதாவது கீழே குறிப்பிட்ட வழிகளுள் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் பற்றுக் குறைக்கு நிதி திரட்டப்படுகிறது. (1) இந்திய ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் பெறுதல். (2) அரசாங்கம் ரொக்க இருப்புக்களைத் (cash balances) திரும்பப் பெறுதல் (3) வாணிக பாங்குகளிலிருந்து கடன் வாங்குதல் (4) அரசாங்கம் புதுச் செலாவணியை வெளியிடுதல்.

பொருளாதார மந்தத்தைப் போக்குவதற்குப் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பயன்படுத்தலாம் என்று கூறியவர் கீன்ஸ் (Keynes) ஆவார். மூன்று காரணங்களுக்காக, வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நாடுகளில் பற்றுக்குறை நிதியாக்கம் பயன்படுத்தப் பட்டுள்ளது. முதலாவதாக, தொழிலில் முன்னேறிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில், பொருளாதார மந்தத்தின் (Depression) விளைவுகளைச் சரிகட்ட, அதைப் பயன்படுத்தினர். இரண்டாவதாக, பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பணம், போர்ச் செலவின் ஒரு பகுதிக்கு நிதியளிக் கவும், பொருள்களையும் உழைப்பையும் பிற பயன்களிலிருந்து, போருக்கு உதவும்படி மாற்றவும் பயன்படுத்தப்பட்டது. மூன்றா வதாக, கடந்த சில ஆண்டுகளாக, இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்புகளில், பொருளாதார முன்னேற்றத்தை அதிகரிப்பதற்காக, வளப் பொருள்களை இடம் விட்டு இடம் பெயரச் செய்யும் முறையாக, பற்றுக்குறை நிதியாக்கம் பயன்பட்டு வருகிறது.

13.1 பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பற்றுக்குறை நிதி யாக்கம் (Deficit Financing for Economic Development) :- வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில், வளப் பொருள்களை (Resources) இடப்பெயர்ச்சி செய்ய பற்றுக்குறை நிதியாக்கம் பயன்படுத்தப் படலாம். அதன்மூலமாக, அப் பொருளாதார அமைப்பின் சேமிப்பை அதிகப்படுத்தி, அதை முதலீட்டுக்குப் பயன்படுத்தலாம். இச் சேமிப்பு இரு வகைகளில் நடக்கிறது. முதலாவதாக. பற்றுக் குறை நிதியாக்கத்தின் விளைவாகப் பொது விலை மட்டம் உயர்வதால், மக்களின் நுகர்வு (consumption) குறைக்கப்படுகிறது. இரண்டா வதாக, பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் பெற்ற நிதியை, முதலீட்டின் அளவைப் பெருக்குவதற்கு அரசு பயன்படுத்திக் கொள்கின்றது.

வளர்ச்சி குறைந்த (under developed) பொருளாதார அமைப்பு களில் பெரிய முதலீடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தாகிறது. வரிமூலம் கிடைக்கும் வருவாயும், உள்நாட்டு, வெளி நாட்டுக் கடன்களும் இதற்குப் போதுமானவையாக இல்லை. ஆகவே, பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்ற வேண்டியதாகிறது. அதன் மூலம் கிடைக்கும் அதிகப்படியான வாங்கும் திறனின் உதவியோடு, அரசு வருவாயைப் பெற்று முதலீட்டுக்குப் பயன்படும்படிச் செய்கிறது. பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட விலை ஏற்றம், பொருள்கள், பணிகளுக்கான (Services) தனியார் தேவை யைக் குறைத்து, கட்டாயச் சேமிப்புக்கு வழிகாட்டுகிறது. இவ்வாறு தனியார் வருமானம் அரசாங்கத்திற்குப் பயன்படுகிறது டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறியுள்ளபடி, பற்றுக்குறை நிதியாக்கம் கட்டாயச் சேமிப்பை ஏற்படுத்தி மொத்தப் பொருளாதார அமைப்பின் முதலீட்டுக்குப் பயன்படும்படி செய்கிறது.[1]

13.2 பற்றுக்குறை நிதியாக்கமும் பணவீக்கமும் (Deficit Financing and Inflation) :- பற்றுக்குறை நிதியாக்கம், பணஉற்பத்தியைக் குறிப்பதால், வாங்கும் திறன் அதிகரித்து, அதனால் விலை ஏற்றம் ஏற்பட்டுப் பணவீக்கம் ஏற்படலாம். மக்களில் பெரும்பாலோரது வாழ்க்கைத்தரம் தாழ்ந்த நிலையில் இருப்பதால், பற்றுக்குறை நிதியாக்கத்தினால், பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட அதிகப்படி யான வாங்கும் திறன், சேமிக்கப்படுவதற்குப்பதில், செலவழிக்கப் பட்டுவிடுவதால், பொருளாதார அமைப்பின் மொத்த வாங்கும் திறன் மேலும் அதிகமாகிறது.

வளரும் தேவையைச் சரிக்கட்ட, உற்பத்தியை விரைவில் பெருக்க முடியாது. முன்னேறிய நாடுகளில், பொருளாதார மந்தத்தின் போதும், உற்பத்தித்திறன் இருந்து வருகிறது. பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலமாக அரசின் செலவு, தேவைகளைப் பெருக்கு வதால், வீணாக உள்ள திறமை, உற்பத்திக்குத் திரும்பவும் பயன் படுத்தப்படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய வீணாக உள்ள திறமை காணப்படுவதில்லை. ஆகவே, பற்றுக்குறை நிதியாக் கத்தினால் ஏற்படும் வாங்கும் திறன் அதிகரிப்பு உற்பத்திப் பெருக் கத்தை உண்டாக்குவதில்லை. மேலும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் முதலீடுகளில் பெரும்பகுதி, பல ஆண்டுகள் கழித்துப் பயன்தரும் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதனால், தற்சமயம் அரசாங்கச் செலவு அதிகரித்தாலும், உற்பத்திப் பெருக்கம் நீண்ட

[1]. V. K. R. V. Rao, "Deficit Financing, Capital Formation and Price Behaviour in an Underdeveloped Economy," Indian Economic Review, Feb, 1953.

காலத்திற்குப் பின்புதான் ஏற்படுகிறது. எஃகு ஆலைகளையும், நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களையும் இதற்கு எடுத்தக் காட்டாகக் கூறலாம். நுகர்வுப் பொருள்களின் (Consumption goods) இறக்குமதி யையும், அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை (balance of payments) இடர்ப்பாடுகளால், பெருக்கவும் முடியாது. மேற்கூறிய காரணங்களால், தேவையில் அதிகரிப்பு ஏற்பட்டு அதைச்சரிக்கட்டு வதற்கு ஏற்ற உற்பத்திப் பெருக்கமோ, இறக்குமதிப் பெருக்கமோ இல்லாததால், பணவீக்கம் உண்டாகிறது.

பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்பட்ட பணவீக்க அறிகுறிகள், பாங்குகள் உற்பத்தி செய்யும் கடன் செலாவணி (Credit)யினால் பலப்படுத்தப்படுகின்றன. அரசாங்கச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, அதற்கேற்ற தனியார் செலவினங்களில் குறைப்பு இல்லாததால், மத்திய பாங்கில், மற்ற பாங்குகளின் வைப்புகளை அதிகரிக்கின்றது. ஆதலால் வாணிக பாங்கிகளின் ரொக்கநிலை (liquidity) பெருகி, அவை அதிகப்படியான தொகைகளை அளிக்கும் நிலையை அடைகின்றன. அதிகரித்த பாங்குக் கடன் செலாவணி, பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட பணவீக்கச் சூழ்நிலையைப் பலப்படுத்துகிறது.

13.3 பற்றுக்குறை நிதியாக்கத்தின் வரையறை (Limit of Deficit Financing) :- பற்றுக்குறை நிதியாக்கத்தின் பாதுகாப்பு வரையறை யாது என்ற வினா எழுகிறது. சில பொருளாதார அறிஞர்கள், முதலிரண்டுத் திட்டத்தின்போதும் செய்யப்பட்ட பற்றுக்குறை நிதியாக்கத் தொகையை மிக அதிகமானதென்றும், வேறு சிலர் மிதிமானதென்றும் கருதினர். பற்றுக்குறை நிதியாக்கத்தின் பாதுகாப்பு வரையறைக்கு என ஒரு குறிப்பிட்ட எண்ணைக் கூற முடியாது. ஏனெனில், அப் பாதுகாப்பு வரையறை பல காரணி களைப் பொறுத்துள்ளது.

பற்றுக்குறை நிதியாக்கத்தின் பாதுகாப்பான நிலையை, அது விளைவிக்கும் பணவீக்கத்தின் அளவைக் கொண்டு தீர்மானிக்கலாம். நடுத்தரமான அல்லது மிதமான அளவு பற்றுக்குறை நிதியாக்கம் எப்போதும் அபாயமற்றது. விலைகளின்மீது ஆழ்ந்த கவனம் செலுத்திச் சரியான வரையறைகளை மீறி விலைகள் ஏறுமல் பார்த்துக் கொண்டால், பற்றுக்குறை நிதியாக்கம் பாதுகாப்பானதாக இருக்கும்.

பாதுகாப்பு வரையறைகளைத் தீர்மானிக்கும் வேறு காரணி களும் உள. பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்பட்ட பண அளிப்பின் பெருக்கம் ஒரு முக்கிய காரணியாகும். பற்றுக்குறை நிதியாக்கம் பெருமளவில் பண அளிப்பைப் பெருக்கக் கூடாது.

பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவுகளும், அதனால் அதன் வரையறையும் (Limit.), உண்டாக்கப்பட்ட அதிகப்படி வருவாய் அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படும் அளவைப் பொறுத்துள்ளன. உண்டாக்கப்பட்ட வாங்கும் திறன் உபரியை மக்களிடமிருந்து பறிப்பதற்காக, அரசாங்கம் சேமிப்புத் திட்டங்களையும், வரிவிதிப்புத் திட்டங்களையும் ஏற்படுத்தலாம். விலை, கூலி இவற்றை அதிகரிக்கவிடாமல் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் வெற்றி, பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவுகளைத் தீர்மானிக்கும் மற்றொரு காரணியாகும். மக்கள் தாம் செய்ய வேண்டிய தியாகத்தைப் பற்றிய கருத்தும், பொருளாதாரத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் வரையறையை நிருணயிக்கும் மற்றொரு காரணியாகும். போர்க்காலங்களில் அதிக அளவில் வரிவிதிக்கப்படலாம். பெருமளவில் தன்னிச்சைச் சேமிப்பு (Voluntary Savings) எழுகின்றது. திட்டக்காலத்தில் பொருளாதார முன்னேற்றம் இன்றியமையாதது என்பதை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

திட்டம் தீட்டப்பட்டு, நிலைமையை ஏற்றுக்கொள்ள பொது மக்களின் கருத்துகளைத் தயார் செய்யலாம். பின்பு மக்கள் முணுமுணுப்பேதுமின்றி, பெரும் தியாகங்களைச் செய்ய முன்வருவார்கள். இவ்வாறு பெருமளவில் பற்றுக்குறை நிதியாக்கம், அதன் சுமைகளுடனும், தியாகங்களுடனும் கையாளப்படலாம்.

13.4 முதல் திட்டத்தின்கீழ் பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing Under The First Plan):- முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 290 கோடிகளாக இருக்குமெனக் கணக்கிட்டனர். ஆனால், உண்மையில் ரூ. 530 கோடிகள் பற்றுக்குறை நிதியின்மூலம் ஈடுசெய்யப்பட்டது. இது பொதுத்துறை முதலீட்டில் 27% ஆகும். இந்த அதிகரிப்பை, அரசாங்கம் ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் பெற்றும், ரிசர்வ் பாங்கில் அதன் ரொக்க இருப்பைக் குறைத்தும் சரிக்கட்டியது. இத்தகைய கணிசமான பற்றுக்குறை நிதியாக்கம் பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அதன் காரணங்கள் பின்வருவனவாம். முதலாவதாக, முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சாதகமான சீதோஷ்ண நிலை காரணமாகவும், உணவு உற்பத்தியைப் பெருக்க அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகவும், விவசாய உற்பத்தி பெருகிற்று. 1953-'54ஆம் ஆண்டிலும், 1954-'55ஆம் ஆண்டிலும் தானியங்கள் அதிகமாக விளைந்து, விலையும் குறைந்தது. இரண்டாவதாக, கொரியா போரினால் ஏற்பட்ட பொருளாதார வீக்கம் (Boom) அழிந்தபின், பின்னிறக்கம் (Recession) ஏற்பட்டது. மூன்றாவதாக, நாட்டு வருமானத்தின் கணிசமான அதிகரிப்பு, பணத்திற்கான தேவைப் பெருக்கத்தை,

அவசியமாக்கியது. மொத்தத்தில், போர்க்காலத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் பாதுகாப்பான வரையறைக்குட்பட்டதாகவே இருந்தது. இதன் பயனாக, அரசு உற்பத்தியைப் பெருக்கி அடக்கு விலையையும் (Controls), பங்கீட்டு முறையையும் நீக்கி, அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைப் (Balance of payment position) பலப்படுத்தும் நிலையை அடைந்தது.

13.5 இரண்டாவது திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit financing under the Second Plan.):- முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பற்றுக்குறை நிதியாக்கத்தின் தீங்கற்ற விளைவு களினால் உற்சாகம் பெற்ற அரசு இரண்டாவது திட்டத்திலும் அதைப் பின்பற்றத் தீர்மானித்தது. முதலில் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ 1200 கோடிகளாக, அதாவது திட்டத்திற்கான பொதுத்துறை முதலீட்டில் 25% ஆக, இருக்கவேண்டுமென நிருணயித்தது. ஆனால் திட்டக்காலத்தில், உண்மையான பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 948 கோடிகளாக, அதாவது மொத்த முதலீட்டில் 20·6% ஆக இருந்தது. இவ்வாறு, அதிகமான அளவு பற்றுக்குறை நிதியாக்கம் பொருளாதாரத்தில், பணவீக்கத்தின் அழுத்தங்களை ஏற்படுத்தியது. விலைகள் உயரத் தொடங்கின. தொழிற் பொருள்கள், விவசாயப் பொருள்கள் ஆகியவற்றில் பற்றுக்குறை ஏற்பட்டது. நாடு, அயல்நாட்டுச் செலுத்துநிலை இடர்ப்பாடு களுக்கு ஆளாகியது. துரதிர்ஷ்டவசமாக, இரண்டாம் திட்டக் காலத்தில், விரைவில் பெருகிய மக்கள்தொகை காரணமாக எழுந்த தேவையைச் சமாளிக்க, விவசாய உற்பத்தி போதுமானதாக இல்லை. மேலும், முதலீட்டுக்கும், உற்பத்திக்கும் இடைவெளி அதிகமுடைய, பிலாய் (Bhilai) எஃகாலை, ரூர்கேலா (Rourkela) எஃகாலை, துர்காபூர் எஃகாலை போன்ற மூலதனம் செறிந்த (Capital intensive) திட்டங்களை அரசு மேற்கொண்டிருந்தது. இந்திய ரிசர்வ் பாங்கின் பணவாக்கக்கைக்கோள் (Monetary policy) பணச் சந்தையைக் குறிப்பிடத்தக்க முறையில் பாதிக்காததால், வழக்கமான செலாவணி அடக்கு முறைகள் (Methods of Credit Control) பயனுள்ள முறையில் செயலாற்றப்படவில்லை. அதனைத் தொடர்ந்து நாடு பணவீக்கத்தின் பலன்களைக் குறிப்பிடுமளவிற்கு அனுபவிக்கின்றது.

13·6 மூன்றும் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit financing under the Third Plan):- மூன்றாவது திட்டத்தின்போது, பணவீக்கத்தின் காரணமாக ஏற்பட்ட விலையேற்றத்தை அடக்குவதே, பொருளாதாரக் கைக்கோளின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. ஆகவே திட்டக்குழு பற்றுக்குறை நிதியாக் கத்தைக் குறைந்தபட்ச அளவுக்குக் குறைக்க வேண்டுமென

தீர்மானித்தது. முதன்முதலில், அது ரூ. 550 கோடிகளாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் திட்டக்காலத்தில் அத் தொகை ரூ. 1133 கோடிகளை எட்டிவிட்டது (ரூ. 1004 கோடி - மத்திய அரசு, ரூ. 129 கோடி - மாநில அரசுகள்). இந்த அதிக அளவு பற்றுக்குறை நிதியாக்கம், ஏற்கெனவேயுள்ள பணவீக்கத்தின் அழுத்தத்தை அதிகப்படுத்தியது. திட்டக்காலத்தில், பொது விலை மட்டத்தில் ஏற்பட்ட உயர்வு 36·4% ஆக இருந்தது. உணவுப் பண்டங்களின் விலையில்மட்டுமே 48·4% உயர்வு ஏற்பட்டது. அவசியப் பொருள்களின் விலையிலும், குறிப்பிடத்தக்க ஏற்றம் இருந்தது. அரிசி, கோதுமை, துணி, மருந்துகள் ஆகிவற்றின் விலை ஏறியதன் காரணமாக ஏழைமக்களும், நடுத்தர வகுப்பினரும் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்,

13.7 ஆண்டுத் திட்டங்களின்கீழ்ப் பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing under the Annual Plans):- கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்பட்ட தீயவிளைவுகளின் பயனாக, நான்காவது திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தைப்பற்றி அரசு திரும்பவும் சிந்திக்கும்படி யாயிற்று. நான்காம் திட்டக் காலத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் இருக்காதென, நான்காவது திட்டத்தின் சுருக்கக் குறிப்பில் (Draft outline) அறிவிக்கப்பட்டிருந்தது. மூன்றும் திட்டம் முடிந்த சில ஆண்டுகள் வரை ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. இதற்கிடையில் சில ஆண்டுத்திட்டங்கள் இருந்தன. ஆனால், அந்த ஆண்டுத் திட்டங்களிலும் பற்றுக்குறை நிதியாக்கம் இடம் பெற்றிருந்தது. 1966-67ஆம் ஆண்டுத் திட்டத்தில் அது ரூ. 371·5 கோடிகளாகவும், 1967-'68ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 244·5 கோடிகளாகவும், 1968-69ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 274·2 கோடிகளாகவும் இருந்தது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing during the Fourth Five Year Plan):. நான்காம் திட்டம், ரூ. 850 கோடிகள் பற்றுக்குறை நிதியாக்கத்திற்கு இடமளித்தது. ஆனால், இத் திட்டக்காலத்தின் முதலாண்டிலேயே, அதாவது 1969-'70-இல், அது ரூ. 436 கோடிகளை எட்டிவிட்டது. 1970-'71-இல் ரூ. 352 கோடிகளாகியது. ஆகவே இந்த இரண்டு ஆண்டுகளிலேயே, நான்காம் திட்டத்தின் பற்றுக்குறை நிதியாக்க அளவின் எல்லையை எட்டிவிட்டோம்.

13.8 பற்றுக்குறை நிதியாக்கமும், விலைமட்டமும் (Deficit Financing and Price Level):- திட்ட முதலீடு, விலையேற்றத்தின் அளவு ஆகியவற்றுடன் பற்றுக்குறை நிதியாக்கத்திற்குரிய பங்கினைப் பின் வரும் அட்டவணை (எண்-40) காட்டுகிறது. முதல் திட்டத்தின்போது பொதுத்துறை முதலீட்டில் 27% ஆக இருந்த பற்றுக்குறை நிதி யாக்கத்தின் விளைவு வியக்கத்தக்க வகையில் 3·4% விலைச்சரிவு எனக்

கணக்கிடப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவு 21% ஆனால் திட்டக்காலத்தில் விலையேற்றம் 6·3% ஆகியது. மூன்றும் திட்டத்தில், 9·6% ஆக இருந்த பற்றுக்குறை நிதியாக்கம், 7·1% விலை யேற்றத்திற்கு அடிகோலியது. பாதுகாப்புக் காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரசாங்கத்தின் செலவு அதிகரித்ததே இதற்குக் காரணமாகும். 1966-'67-இல் விலையேற்றம் 13·9% ஆகவும், 1967-'68-இல், 11·6% ஆகவும் இருந்தது. 1968ஆம் ஆண்டின் முடிவிலும், அதற்குப் பின்னருந்தான், தொடர்ந்த இரு நல்ல அறுவடைகளின் காரணமாகவும், அதிக அளவு உணவு இறக்குமதியின் காரணமாகவும், விலை விளைவுகள் மிதப்படுத்தப் பட்டன. மறுபடியும் 1970-'71-லிருந்து, விலையேற்றம் இருந்து வருகிறது.

அட்டவணை எண் : 40

பற்றுக்குறை நிதியாக்கம், பொதுத்துறைத் திட்ட மூலதனம், விலையேற்றம்[1]

(Deficit Financing, Plan outlay-Public Sector and Price Rise)

காலம்	பற்றுக்குறை நிதியாக்கம்	பொதுத்துறைத் திட்டமூலதனம்	திட்டமூலதனத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் (சதவீதம்)	மொத்த விற்பனை விலையில் ஏற்றம் (சதவீதம்)
முதல் திட்டம்	530·0	1960	27%	—3·4
இரண்டாம் திட்டம்	981·7	4672	21%	6·3
மூன்றும் திட்டம்	825·5	8573	9·6%	7·1
நான்காம் திட்டம்	850·0	15902	5·4%	—
1966-'67	371·5	2164·5	17·2%	13·9
1967-'68	244·5	2089·8	11·7%	11·6
1968-'69	274·0	2360·5	11·6%	—1·1
1969-'70	435·9	2270·5	19·2%	3·7
1970-'71	360·0	2822·2	12·8%	4·8

தற்காலத்திய சூழ்நிலைகளை உற்றுக் கவனிக்கும் போது, பற்றுக்குறை நிதியாக்கத்தை விலக்க முடியுமா என்பது வியக்கத்தக்க கேள்வியாக இருக்கிறது. நிமை பயக்கும் ஓர் அவசியமான கருவியாக அது தோன்றுகிறது.

[1] Source:. Various Economic Survey Reports.

14. நிதி நிருவாகம்

(Financial Administration)

அரசாங்கத்தின் நிதிபற்றிய கொள்கைகளைத் திறமையுடன் நிறைவேற்றவும், அரசாங்க நிதியைப் பயனுள்ள வகையிலும், சிக்கனமாகவும் உபயோகிக்கவும், ஓர் ஒழுங்கான நிதி நிருவாகத் திட்டம் அவசியமாகின்றது.

ஓர் ஆண்டில் அரசாங்கம் செலவழிக்கும் தொகையும், அச் செலவுக்கு வேண்டிய வரவும், அதாவது வரிவிதிப்பு, கடன் வாங்குதல் மூலம் பெறும் வருவாய் முதலியன ஒவ்வோர் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

14.1 வரவுசெலவுத் திட்டத்தின் பங்கு (The Role of the Budget):- வரவுசெலவுத் திட்டம் என்பது நிகழும் ஆண்டின் அல்லது முந்தைய ஆண்டின் வருடாந்திர நிதிக் கணக்கு அறிக்கையையும் (அல்லது ஈராண்டுகளின் நிதிக்கணக்கு), அடுத்த ஆண்டுக்கான வருவாய்ச் செலவீட்டு மதிப்பீடுகளையும் குறிக்கும். முன்னுள்தொட்டு, வரவு செலவுத்திட்டம் என்பது அரசாங்க நிதி நடவடிக்கைகளை அடக்கும் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற ஆயுதமாக இருந்து வந்துள்ளது. பாராளுமன்ற அல்லது சட்டமன்ற ஒப்புதலைப் பெற்ற பின்புதான் அரசாங்கம் வருவாயைச் சேகரித்துச் செலவுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த ஒப்புதலைப் பெற வரவுசெலவுத் திட்டம் ஒரு கருவியாகும் (அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீட்டின் மூலமாக). அரசாங்கம் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட நிதியின் உபயோகத்தைப்பற்றிய கணக்கையும் (நடைபெறும் ஆண்டிற்கும், முந்தின ஆண்டுகளுக்கும் ஆன கணக்குகளின் அறிக்கையின் மூலம்) கொடுக்க வேண்டியுள்ளது.

ஆனால் தற்காலத்திய வரவுசெலவுத் திட்டம், சாதாரண செலவுக் கணக்கு அறிக்கையைவிட உயர்ந்ததாகவும், பாராளுமன்றத்திற்கு, அரசாங்கத்தின் பொறுப்பைப் பற்றி உறுதியளிக்கும் கருவியாகவும்

விளங்குகிறது. வேறு இரண்டு முக்கிய பணிகளை நிறைவேற்றவும் அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம்.

பல்வேறு வழிகளில் பொருளாதார வாழ்வினைப் பாதிக்க வரிவிதிப்பு முறைகள் அதிகரிக்கப்பட்டு வருவதால், வரவுசெலவுத் திட்டம் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய கருவியாக ஆகியுள்ளது. வரவுசெலவுத் திட்டத்தின் அளவும், உருவமும், உற்பத்திவகை, செல்வப்பங்கீடு, வருவாய்ப் பங்கீடு, நாட்டின் பொருளாதார நடவடிக்கையின் பொதுமட்டம் (General Level) இவற்றின் எல்லையைப் பாதிக்கலாம். திட்டமிட்ட வளர்ச்சியைப் பின்பற்றும் ஒரு நாட்டில், வரவுசெலவுத் திட்டத்தின் செலவினம் வரிவிதிப்பு, கடன் பற்றிய திட்டக்குறிப்புகள் (Programmes) ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நடவடிக்கைகளாக அமைந்துள்ளன.

அரசாங்கத் திட்டங்களைத் திறமையோடும், சிக்கனமாகவும், காலாகாலத்திலும் நிறைவேற்ற உறுதியளிக்கும் ஒரு நிருவாகக் கருவியாகவும் வரவுசெலவுத்திட்டம் பயன்படுத்தப்படலாம்.

ஆகவே, பாராளுமன்றப் பொறுப்பிற்கும், பொருளாதாரக் கொள்கைக்கும், திறமையுள்ள நிருவாகத்திற்கும் உதவும் ஒரு கருவியாக இருக்கும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தை அமைக்க வேண்டும். முதல் பணியை நிறைவேற்ற வேண்டுமானால், ''பல தலைப்புகளின் கீழ்ச் செலவினங்கள் சட்டசபையினால் முடிவு செய்யப்பட்ட தொகையைவிட அதிகப்படாமலும், சட்டசபையின் விருப்பத்திற்கு விரோதமாக இல்லாமலும், வரவுசெலவுத் திட்டம் அமைக்கப்படவேண்டும்'' (The budget has to ensure that the amounts voted by the Legislature under the several heads of expenditure are not exceeded and that they are not spent otherwise than according to the wishes of the Legislatuse'')[1].

பொருளாதாரத்தில் அதன் விளைவுகளை எடுத்துக்காட்ட வரவு செலவுத் திட்டம் என்பது, நாட்டுப் பொருளாதாரம் முழுவதையும், அதன் வெவ்வேறு பிரிவுகளையும், அரசாங்கத்தின் வரவினங்களும், செலவினங்களும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றி விளக்கும் வகையில் இருக்க வேண்டும். வரவுசெலவுத் திட்டம், ஐந்தாண்டுத்திட்டத்திற்கும் வரிவிதிப்பு நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்பினையும் எடுத்துக் காட்டவேண்டும்.

நிருவாகக் கருவியாகவுள்ள வரவுசெலவுத் திட்டமானது, அரசாங்க நடவடிக்கைகளுக்கான செலவுகளையும், அதற்கேற்ப

[1]. Administrative Reforms Commission, Report of the Study Team on Financial Administration, p. 7

அவை எவ்வளவுதூரம் வெற்றி பெற்றுள்ளன என்பதைப்பற்றியும் எடுத்துக் காட்டும் வகையில் அமையவேண்டும்.

14·2 இந்தியாவில் வரவுசெலவுத் திட்டம் (The Budget in India):- இந்தியாவில் ஒரு கூட்டரசும் (federal) பாராளுமன்ற அமைப்பும் (Parliament) உள்ளன. மத்திய அரசின் எல்லா வருவாய்களும், வரவினங்களும் இந்தியாவின் நிலையான நிதியாக (Consolidated Fund) இருப்பதால், எல்லாச் செலவுகளும் இந்த நிதியிலிருந்துதான் சமாளிக்கப்படுகின்றன. இது போன்று, ஒவ்வொரு மாநிலத்திலும் வசூலிக்கப்படும் வரவினங்கள், வரிவருவாய்கள் ஆகியவையால் ஆன ஒரு நிலையான நிதி உள்ளது. இதிலிருந்துதான் மாநில அரசின் செலவுகளுக்குப் பணம் கிடைக்கிறது.

ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும், மாநில அரசின் வரவுசெலவுத்திட்டம் மாநில சட்டசபைக்குமுன் வைக்கப்படுகிறது. மத்திய அரசின் வரவுசெலவுத்திட்டம், பாராளுமன்றத்தின் முன்பு, ஒவ்வோராண்டும் பிப்ரவரி மாதக் கடைசி நாளன்று வைக்கப் படுகிறது. அதில் மூன்று வகையான தொகைகள் (figures) உள்ளன. (1) முந்தின ஆண்டின் கணக்குகள் (2) முடியப் போகும் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகள் (Revised Estimates) (சில காலத்திற்குப் பின்னர்தான் சரியான தொகையின் கணக்கு கிடைக்குமாதலால்), (3) வரும் ஆண்டிற்கு வரவுசெலவு மதிப்பீடுகள்.

இந்திய வரவுசெலவுத் திட்டமானது, வருவாய்க் கணக்கு (Revenue Account), மூலதனக் கணக்கு (Capital Account) என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. வருவாய்க் கணக்கில் வரிவிதிப்பு வருவாய்களும், பொதுத்துறைத் தொழில்களிலிருந்து (Public Enterprises) வரும் வருவாயும், அவற்றிலிருந்து செலவழிக்கப்படும் தொகைகளும் அடங்கியிருக்கும். மூலதனக் கணக்கில், கடன் முதலானவற்றிலிருந்து பெறும் வருவாயும், அதிலிருந்து செய்யப்படும் செலவினங்களும் அடங்கும்.

வரவுசெலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட வரிகளும், செலவினங்களும், பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே (அல்லது மாநிலச் சட்டசபையின் ஒப்புதலுக்குப் பின்), அவைகள் அனுமதிக்கப்பட்ட வகையில், செயல்முறைக்கு வரும்.

ஒவ்வோர் ஆண்டிலும் மே மாதம் அல்லது ஜூன் மாதத்திற்கு முன்னர், வரவுசெலவுத் திட்டத்தில் அடங்கிய பல்வகைப்பட்ட இனங்களுக்கு முடிவு கூறப்படாததால், ஆண்டுத் தொடக்கத்தில் அந்த மூன்று அல்லது நான்கு மாதங்கள் இடைவெளியில், அரசின்

தேவையைச் சமாளிக்க, ஒரு குறிப்பிட்ட தொகைக்கான விசேஷ மதிப்பீடு வெளியிடப்படுகிறது.

ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்போது, பாராளுமன்றத் தினுல், அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கும் மேலாகச் சில சமயங்களில் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமையில், அரசாங்கம் பாராளுமன்றத்திடமிருந்து, இந்த அதிகப்படியான தொகையைச் செலவழிக்கும் அனுமதியைப் பெற ஓர் உதவி மதிப்பீட்டை (Supplementary Estimate) அதன்முன் வைக்கலாம்.

வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பல நிலைகள் உள்ளன. முதன்முதலாக, வெவ்வேறு இலாகாக்களைச் சேர்ந்த தல அதிகாரிகளால் (Local Officials) மதிப்பீடுகள் தயாரிக்கப் படுகின்றன. ஒவ்வோர் இலாகாவின் தலைமையதிகாரியாலும், இந்த மதிப்பீடுகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இந்த மதிப்பீடுகள், அந்தந்த இலாகாவைச்சேர்ந்த மந்திரிகளால் (அல்லது மாநிலங்களில், அந்தந்த இலாகாக்களினுல்)பரிசீலனை செய்யப்பட்டு, நிதிமந்திரிக்குப் பரிசீலனைக்காக (மாநிலங்களில், நிதி இலாகாவுக்கு) அனுப்பப் படுகின்றன. நிதி அமைச்சு (Finance Ministry) எல்லா மதிப்பீடு களையும் இணைத்து (மாநிலங்களில் நிதி இலாகா) பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக (மாநிலங்களில் சட்டமன்றத்தின்) ஒரு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றது.

வரவுசெலவுத்திட்டம் நிதி அமைச்சரால் லோக்சபா (Lok Sabha) வின் முன்பு வைக்கப்படுகிறது. மாநில அரசின் வரவு செலவுத் திட்டம், கீழ்ச்சபைமுன் (Lower house) வைக்கப்படுகிறது. அரசியல் சட்டத்தின்படி, எல்லாவிதப் பண மசோதாக்களும் (Money - bills), (அதாவது எந்தவிதமான வருவாய்க்கும், செலவுக்கும் தொடர்புள்ள மசோதாக்கள்), மத்திய அரசில், லோக்சபாவில் ஆரம்பிக்கப்படவேண்டும். மாநில அரசுகளில் அவை கீழ்ச்சபைகளில் ஆரம்பிக்கப்படவேண்டும். பின்பு அது ராஜ்ய சபைக்குப்போகிறது (மாநிலங்களில், இரண்டு சபைகளில் ஒன்றுன மேல்சபைக்குப் போகிறது).

வரவுசெலவுத் திட்டத்திலுள்ள எல்லா இனங்களும் பாராளு மன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றத்தினுல் விவாதிக்கப்படுகின்றன. ஆனுல் குறிப்பிட்ட சில இனங்கள், அரசாங்கத்தின் மொத்த நிதியிலிருந்து (Consolidated fund) எடுத்துச் செலவழிக்கப் படுகின்றன. இவற்றிற்குப் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற விவாதங்களுக்குப்பின் அனுமதி தேவையில்லை, — உதாரணமாக, ஜனுதிபதி, மாநிலக் குழுத்தலைவர், லோக்சபாவின் சபாநாயகர்,

உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள், போன்றவர்களுக்குக் கொடுக்கப் படும். ஊதியமும், படிகளும், கடனுக்காகத் திருப்பிச் செலுத்துதல் இதுபோன்ற இன்னும் சில செலவினங்களுக்கும் அரசாங்கத்தின் மொத்த நிதியிலிருந்து எடுத்துச் செலவழிக்கப்படுகின்றன.

வரவுசெலவுப் பத்திரத்தில், ஆண்டு நிதி அறிக்கையும், மான்யங்களுக்கான தேவையும் (Demands for Grants) அடங்கி யுள்ளன. ஆண்டு நிதி அறிக்கைகள் (Annual Financial Statements) அடுத்து வரும் நிதி ஆண்டிற்கு, அரசின் மதிப்பிடப்பட்ட வருவாய் களையும், செலவினங்களையும் விளக்கிக் காட்டுகின்றன. அரசின் வரவுகளும், செலவுகளும் ஏற்படுத்தப்பட்ட முக்கிய கணக்குத் தலைப்புகளில் (Major heads of accounts) ஏதாவது ஒன்றின்கீழ்க் காட்டப்பட்டுள்ளன.

மான்யத்தின் தேவை (Demand for Grant) என்பது ஒரு குறிப்பிட்ட அமைச்சு (Ministry) அல்லது இலாகா செயல்படுவதற்கு வேண்டிய ஒரு குறிப்பிட்ட பணத்தொகை வேண்டுமெனப் பாராளு மன்றத்துக்குவிடும் கோரிக்கையைக் (Request) குறிக்கும். இத் தேவை பல தலைப்புகளாகவும், ஒவ்வொரு முக்கிய தலைப்பும், பல சாதாரணத் தலைப்புகளாகவும், ஒவ்வொரு சாதாரணத் தலைப்பும், பல பிரிவுத் தலைப்புகளாகவும் (Group heads) பிரிக்கப் பட்டுள்ளன. தேவைகளைப்பற்றி விவாதம் செய்யப்பட்டு, முடிவானதும் அவைகளை நிறைவேற்ற, நிலையான நிதியிலிருந்து பணத்தை எடுக்க அனுமதியளிக்கும், அங்கீகரிப்பு மசோதா (Appropriation act) ஒன்று வெளியிடப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்குத் தேவையான வரு வாயைச் சேகரிக்க வரிவிதிப்பும், இதர முறைகளும் பாராளுமன்றத் தினுல் கொண்டுவரப்பட்ட நிதி மசோதா (Finance act)வில் அடங்கியுள்ளன. வரவுசெலவுத் திட்டத்தோடு வேறு சில பத்திரங்களும் பாராளுமன்றத்திற்கு ஒப்புவிக்கப்படுகின்றன. இவை முக்கியமாக விளக்கம் தருபவையாகவுள்ளன. மான்யத் தேவைகளோடு (Demand for Grant), முக்கிய திட்டங்களைப்பற்றிய விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மத்திய வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பிரிவுகள் (Economic Classifications of the Central Budget.) என்ற பத்திரம் வரவுசெலவுத் திட்டத்தின் அடிவிவரங்களைச் (Data) சில பொருளாதாரப் பிரிவுகளாகத் திரும்பவும் பிரித்து அமைக்கின்றது. (உ-ம்,)நுகர்வு (Consumption), மூலதன ஆக்கம் (Capital formation), நிதி முதலீடுகள் (Financial investments) முதலியனவாகும்.

14.3 **வரவுசெலவு சீர்திருத்தம்** (Budgetary Reforms.) :— மேற்கண்டவாறு, வரவுசெலவுத்திட்டம் என்பது முன்னுள் தொட்டு,

பாராளுமன்றத்திற்கு அரசாங்கத்தின் பொறுப்புரிமையை நிச்சயப் படுத்தும் ஒரு கருவியாக இருந்துவந்துள்ளது. அதாவது, பாராளு மன்றத்தினுல் அங்கீகரிக்கப்பட்டவாறு, நிதியைச் செலவழித் திருப்பதாக நிச்சயப்படுத்துதல் ஆகும். மேற்கூறிய நோக்கத்தை நிறைவேற்றும் எண்ணத்தோடுதான், வரவுசெலவுத் திட்டத்தில் செலவினத் தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், மேலே கண்டவாறு, நவீன வரவுசெலவுத் திட்டத்தின் நோக்கம், பாராளுமன்றத்திற்கு அரசின் பொறுப் புரிமையை நிச்சயப்படுத்துவதாக இருந்தால் மட்டும் போதாது. பொருளாதாரத்தைப் பாதிப்பதாகவும், நிருவாகக் கருவியாக உதவக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஆகவே, பின்வருவனவற்றைத் தெளிவாகக் காட்டும் முறையில் வரவுசெலவுத் திட்டம் அமைக்கப்படவேண்டும். (1) அது பொருளாதாரத்தைப் பாதிக்கும் முறை, முக்கியமாகத் திட்டங் களுடன்அதன் தொடர்பு. (2) எந்த நோக்கத்திற்காகச் செலவழிக்கப் பட்டுள்ளதோ, அந் நோக்கம் ஈடேறியுள்ள விதம்.

14.4 வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பிரிவினை (Economic Classification of the Budget.):- முன்பு குறிப்பிட்டவாறு, வரவுசெலவுத் திட்டத்தின் வெவ்வேறு தலைப்புகளும், வெவ்வேறு அமைச்சுகளோடும், இலாகாக்களோடும் தொடர்பு கொண்டுள்ளன. ஒவ்வோர் அமைச்சு அல்லது இலாகாவின் செலவினங்களுக்காக பாராளுமன்றத்துக்குத் தன் பொறுப்புரிமையை நிச்சயப்படுத்து வதற்கென இது செய்யப்படுகிறது. ஆனுல் அரசாங்கச் செலவு பொருளாதாரத்தைப் பாதிப்பதைப் பொறுத்தவரை, இத் தலைப்புகள் அவ்வளவு சரியானவையல்ல. இதற்காக, பொருளாதார சம்பந்த மான சரியான வகைகளாக, இச் செலவினங்கள் திருத்தி வகைப் படுத்தப்படவேண்டியது அவசியமாகிறது. நாட்டு வருமானத்தைப் (National income) பற்றிய குறியீடுகள் (Data) போதுமானதாக இல்லாத ஒரு நாட்டில், அரசாங்கத்தின் வெவ்வேறு செலவினங்களைப் பற்றிய திருத்தியமைக்கப்பட்ட திட்டம், ஒரு விரிவான நாட்டுக் கணக்குத் திட்டத்துக்கு (Comprehensive system of national accounts) வழிகாட்டுவதோடு, நாட்டுச் சேமிப்புகள் (National savings), முதலீடு (Investment), நுகர்வு (Consumption) இவற்றுக்கு உதவியாகவும் இருக்கும்.

1957-'58ஆம் ஆண்டு முதலாக, நிதி அமைச்சு, வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பிரிவுகளை (Economic Classifications) வெளியிட்டு வருகிறது. மொத்தத்தில், அரசாங்க நடவடிக்கை களின் விளைவுகளையும், மத்திய, மாநில அரசாங்கங்களின் பங்கினையும்

சரிவரத் தெரிந்துகொள்ள, மாநில அரசுகளின் வரவுசெலவுத் திட்டங்களும் இத்தகைய செய்திகளை வெளியிடவேண்டும்.

தற்போது, வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பிரிவு (Economic classification) ஒரு தனிப்பட்ட அறிக்கையைப்போல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தைப்பற்றி ஆராய்ந்த, நிருவாகச் சீர்திருத்தக்குழு (Administrative Reforms Committee) ஒவ்வொரு இலாகாவின் வரவுசெலவு மதிப்பீட்டைப் பற்றி ஒரு பொருளாதாரத் தொகுப்பு (Economic analysis) நடத்தப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு மான்யத் தேவைக்கும் (Demand for grant) நிதி வேண்டுமாஞல், அதனைச் சார்ந்த ஒரு பொருளாதாரப் பிரிவு இருத்தல் வேண்டுமென, ஆலோசனை கூறியது.[1]

தற்போது,மத்திய, மாநில அரசாங்க வரவுசெலவுத் திட்டங்கள் இரண்டிலுமே, ஐந்தாண்டுத் திட்டங்களில் காணப்படும் வளர்ச்சிக்கான தலைப்புகளுக்கும் (Development heads.), வரவுசெலவுத் திட்டத்தில் காணப்படும் தலைப்புகளுக்கும் இடையே தொடர்பு காணப்படவில்லை. இத் தொடர்பின்மை காரணமாக, பல்வேறு திட்டங்களில் (Plans) காணப்படும் தலைப்புகளுக்கேற்ப, வரவு செலவுத்திட்டத்தில் எவ்வாறு இடமளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. மாநில அரசுகளின் திட்டங்களுக்கு மத்திய அரசு செய்யும் உதவியைப் பற்றிய கணக்கீடும் (Accounting), தணிக்கையும் கஷ்டமாகவுள்ளன. ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ்க் காணப்படும் வளர்ச்சித் தலைப்புகளின் (Development heads) அடிப்படையில் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு உதவியளிக்கின்றது. இறுதிக் கணக்கீடும் (Final accounting), தணிக்கையும் வரவுசெலவுத் திட்டத்தில் காணப்படும் தலைப்புகளுக்கேற்ப (Budget heads) நடக்கின்றன.

வரவுசெலவுத் திட்டத்திலுள்ள தலைப்புகளுக்கும், ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள தலைப்புகளுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கான, உயர்ந்த யோசனைகளை, நிருவாகச் சீர்திருத்தக் குழு கூறியுள்ளது.

14·6 செயல்முறை வரவுசெலவுத் திட்டம் (Performance Budgeting):-செயல்முறை வரவுசெலவுத் திட்டம் என்பது, நிதிச் செலவினங்களை (financial expenditures) ஒரு பக்கமும், அவற்றின் விளைவுகளை இன்னொரு பக்கமும் காட்டி இரண்டுக்கும் ஒரு தொடர்பினை நிலைநாட்டுவதற்கு உதவும் ஒரு நுட்பவினை முறை (technique) ஆகும். அரசாங்கத்தின் செலவின் மூலமாக, எவ்வளவு தூரம் திட்ட நடவடிக்கைகள் செயல்பட்டுள்ளன என்பதையறிய இது உதவுகிறது. தற்போது ஊதியம், சாதனங்களை வாங்குதல்

[1] Report of the A R C Study group on Financial Administration, p. 31

இவற்றுக்கான செலவை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க நடவடிக்கைகள் வகுக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, திட்டக் குறிப்புகள் (Programmes), நடவடிக்கைகள், திட்டங்கள் (Projects) இவற்றுக்கேற்ப வகுக்கப்படவேண்டும்.

நிருவாகச் சீர்திருத்தக்குழுவுக்கேற்ப (Administrative Reforms Committee) செயல்முறை வரவு செலவுத்திட்டத்தின் (Performance Budgeting) முக்கிய நோக்கங்கள் பின்வருவன :

1. எவற்றுக்கென நிதி ஒதுக்கப்பட்டதோ, அந்த நோக்கங்களைத் தெளிவாகக் காட்டுதல்.

2. சட்டத்தின்மூலம், வரவுசெலவுத் திட்டத்தைச் சரி பார்த்தல்.

3. நிருவாகத்தின் பொறுப்பை அதிகமாக்குதல்.

4. செயல்முறைத் தணிக்கையை (Performance audit) மிகவும் பயனுடையதாக்குதல்.

நன்முக அமைக்கப்பட்ட இலாகாக்கள் இருப்பின், செயல்முறை வரவுசெலவுத்திட்டம், வெற்றியடையும். நடைமுறையில் இது முடியாத காரியம். இருப்பினும், இவ் வரவுசெலவுத் திட்டத்தின் நன்மைகள், சில இடர்ப்பாடுகளை மிஞ்சிவிடுகின்றன.

நிருவாகச் சீர்திருத்தக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம், வளர்ச்சித்திட்டங்களை ஏற்று நடத்தும் இலாகாக்கள் செயல்முறை வரவுசெலவுத் திட்டத்தைப் புகுத்த வேண்டுமெனக் கூறியது. 1970-'71ஆம் ஆண்டுக்குள்ளாக அதைப் புகுத்தவேண்டுமென அக் குழு கூறியபோதிலும், பல பிரசினைகளை எதிர்நோக்கிய அரசாங்கம் இதை மெதுவாகவே புகுத்தவேண்டு மெனத் தீர்மானித்தது. 1968-'69ஆம் ஆண்டுக்கான செயல்முறை வரவுசெலவுத் திட்டம் தயார் செய்யப்பட்டது. இத் திட்டம், நான்கு அமைச்சகளுக்கும், அவற்றின்கீழ் உள்ள இலாகாக்களும் தயாரிக்கப் பட்டது. அதன்படி அத் திட்டத்தில், நீர்ப்பாசனவசதி மின்வசதி அமைச்சு, உணவு அமைச்சு, தபால்தந்தி இலாகா, உடல்நல அமைச்சு, குடும்பநலத்திட்டம் (Family Planning), தொழில்கள், வீடுகள், நகர முன்னேற்றம் ஆகிய இலாகாக்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சு, உள்நாட்டு விமானப் போக்குவரத்து இலாகா முதலியன அடங்கியிருந்தன.

14·7 செலவினங்களின் கட்டுப்பாடு (Control of Expenditures;-) பொதுநிதி சரியான வழியில் செலவிடப்படுகிறதா என்பதைக் கவனிக்க, செலவினங்களைச் சரியான முறையில் கட்டுப்படுத்துதல் அவசியமாகும். செலவினங்களைக் கட்டுப்படுத்தும் முக்கிய

செயலகங்கள் பின்வருவனவாகும் : சட்டம், நிதி அமைச்சு, தணிக்கை இலாகா (Audit Department) இவைகளைப்பற்றிக் கீழே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

14.8 பாராளுமன்றம் (Parliament) : பாராளுமன்ற நாடுகளில், செலவுகளைக் கட்டுப்படுத்துதல் பாராளுமன்றத்துக்கு உரியது. இந்தியாவில், பாராளுமன்றம் அரசாங்கச் செலவினைப் பல வழிகளில் அடக்குகிறது. பல்வேறு அமைச்சுகளின் செலவினங்களும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுகின்றன. அடக்குமுறைத் தணிக்கை தலைமை அதிகாரி (Comptroller and Auditor General) மூலமாகவும், அரசாங்கச் செலவினங்களின்மீது, பாராளுமன்றத்தின் மற்றொரு கட்டுப்பாடு நடக்கின்றது. அவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், ஜனாதிபதியினூல், பாராளுமன்றத்தின்முன் வைக்கப்படுகின்றன.

பாராளுமன்றக் குழுக்கள் (Parliamentary Committees), அரசாங்கக் கணக்கீட்டுக்குழு (Public Accounts Committee), மதிப்பீட்டுக்குழு (Estimates Committee), அரசாங்க நிறுவனக்குழு (Committee on Public Undertakings) ஆகியவற்றின் மூலமாகவும் பாராளுமன்றம் அரசாங்கத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துகிறது.

14.9 அரசாங்கக் கணக்கீட்டுக்குழு (The Public Accounts Committee) : லோக்சபாவின் நடைமுறை விதிகளுக்கேற்ப, அரசாங்கக் கணக்கீட்டுக்குழுவின் பணிகளைக் கீழே காணலாம். (1) கணக்கில் காட்டப்பட்டுள்ளபடி அந்தப் பணம் வேண்டிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதா என்பதைக் கவனிக்க, (2) அச் செலவினம், அதனை நிருவகிக்கும் நிருவாகத்துடன் ஒத்துள்ளதா என்பதைக் கவனிக்க, (3) தகுந்த நிருவாகத்தினூல் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கேற்ப ஒவ்வொரு திரும்பிப் பெறுதலும் (reappropriation) நடைபெற்றுள்ளதா என்பதைக் கவனிக்க. இக் குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அரசு ஒப்புக்கொண்டு, நிறைவேற்றியது. ஏற்றுக்கொள்ளாத பரிந்துரைகளுக்குத் தகுந்த காரணங்களையும் அரசு எடுத்துக் காட்டியது. குழுவுக்கும், அரசுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள், புதிய ஆலோசனைகளாலும், விவாதங்களாலும் சரிப்படுத்தப் படுகின்றன. இல்லாவிடில், குழு தனது அறிக்கைகளின்மூலம் அதைப் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றது. இருப்பினும், அதன் அறிக்கைகளைப் பற்றிப் பாராளுமன்றத்தில் ஒரு விவாதமும் நடப்பதில்லை.

14.10 மதிப்பீட்டுக்குழு (The Estimates Committee) : இக் குழுவின் பணிகள் பின்வருமாறு : (1) நிருவாகத்தில் திறமையும், அபிவிருத்தியும் உள்ளனவா என்பதை அறிவித்தல். (2) இல்லையெனில், நிருவாகத்தில் சிக்கனத்தையும், திறமையையும் கொண்டுவர

வேறு கொள்கைகளை எடுத்துக் கூறுதல். (3) மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு பணம் உள்ளதா என்பதைப் பரிசீலித்தல். (4) பாராளு மன்றத்தின்முன் மதிப்பீடுகளை வைக்கும் முறையினை எடுத்துச் சொல்லல்.

இக் குழு, மதிப்பீட்டுக்குழு என அழைக்கப்பட்டபோதிலும், பாராளுமன்றத்தின்முன் வைக்கப்படும் வரவுசெலவு மதிப்பீடுகளைப் பரிசீலிப்பதில்லை. ஆனால், மதிப்பீடுகளில் கண்டபடி, வெவ்வேறு அமைச்சுகள், அரசாங்க இலாகாக்கள் இவற்றின் வேலைகளை ஏற்றுக் கொள்ளுகிறது. ''மதிப்பீடுகளை, பொதுநிதியைச் செலவழிக்கும் போது, வீண்செலவையும், அதிகப்படி செலவையும் தடுக்கவுதவும் கருவியாகப் பயன்படுத்திக்கொள்ளும் பாராளுமன்றத்திற்கு, இக் குழு உண்மையில் ஒரு சிக்கனக் குழுவாகவுள்ளது'' ("It is, in fact, an economy committee of Parliament, which utilises estimates as one of the sources of information in order to prevent waste and extravagance in spending public funds").

வினாத்தொகுதிகளைக் (Questionnaires) கொண்டும், அந்தந்த அமைச்சுகளின் பிரதிநிதிகளிடமிருந்து நேரில் கேட்டறிந்தும், இக் குழு செய்திகளைச் சேகரிக்கிறது. வேண்டுமானால், உதவிக் குழுக்களையும் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வோர் அமைச்சு அல்லது இலாகாவின் வேலைகள், அமைப்பு இவற்றின் சிக்கனம், முன்னேற்றம் இவற்றுக்கான பரிந்துரைகளைக் கொண்ட ஓர் அறிக்கையை இக் குழு தயாரிக்கின்றது. அரசு அப் பரிந்துரைகளில் ஏதாவது ஒன்றினை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதற்குக் காரணத்தைக் காட்டுகிறது. அரசாங்கமும், குழுவும் ஒன்றோடொன்று கலந்தாலோசித்து அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைச் சரிசெய்து கொள்ளுகின்றன.

14.11 அரசாங்கத் தொழிலீடுபாட்டுக்குழு (Committee on Public Undertakings) : இக் குழு 1964ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது. இது மத்திய அரசாங்கத் தொழில்களைப் பொறுத்தவரை, பொதுக்கணக்கீட்டுக்குழு, மதிப்பீட்டுக்குழு ஆகியவற்றின் பணிகளையும் மேற்கொண்டது. இக் குழுவின் வேலைகள் பின்வருவன வாகும் :

(1) அரசாங்கத் தொழில்களின் அறிக்கைகளையும், கணக்குகளை யும் பரிசீலித்தல் (2) இத் தொழில்களைப் பொறுத்த, அடக்குமுறைத் தணிக்கைத் தலைமை அதிகாரி(Comptroller and Auditor General)யின் அறிக்கை ஏதாவது இருப்பின், அதனைப் பரிசீலித்தல். (3) இத் தொழில்கள், சிறந்த வியாபாரக் கொள்கைகள், ஒழுங்கான வணிகச் செயல்முறைகள் (Commercial Practices), இவற்றோடு நடத்தப்

பட்டால், அவற்றின் தன்னுரிமையையும் (autonomy), திறமையையும் பரிசீலித்தல் (4) இம் மூன்றின்கீழ்வராத, அரசாங்கத் தொழில்களைச் சார்ந்த, பொதுக் கணக்கீட்டுக் குழு (Public Accounts Committee) மதிப்பீட்டுக்குழு (Estimates Committee) இவற்றின் வேலைகளை அவ்வப்போது சபாநாயகரால் (Speaker) ஒதுக்கப்படும் வகையில் செய்து முடித்தல். இக் குழுவின் மூலம், அரசாங்கத் தொழில்களின் வேலைகளைப் பற்றிப் பாராளுமன்றம் கண்காணிக்கலாம்.

14.12 நிதி அமைச்சு (Finance Ministry):- பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டம் வைக்கப்படுவதற்கு முன்பும், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்பும், நிதி அமைச்சு செலவினங்களைக் கட்டுப்படுத்துகிறது. எந்த ஓர் அமைச்சு அல்லது இலாகாவினாலும், தயாரிக்கப்படும் செலவினத்திட்டங்கள் யாவும் நிதி அமைச்சினால் பரிசீலிக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் முழுச் செலவினையும் எதிர்நோக்கி, ஒவ்வொரு அமைச்சின் தீர்மானங்களைப் பற்றிக் கவனிக்க வேண்டியிருப்பதாலும், நிதித் துறையில் தேர்ந்த அறிவு இருப்பதனாலும், நிதி அமைச்சு இவ்வாறு செய்கின்றது நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து விவாதித்த பின்னர், வெவ்வேறு அமைச்சுகளின் திட்டங்களும், தீர்மானங்களும் வரவுசெலவுத்திட்டத்தில், சேர்க்கப்படுகின்றன. பாராளுமன்றத்தினால் வரவுசெலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அதற்கேற்ப செலவழிக்கப்படுகின்றனவா என்பதற்கு, நிதி அமைச்சுக்கு உறுதியளிக்க வேண்டும். இதற்கு முன்னர், ரூ. 50 இலட்சங்களுக்கு மேற்பட்ட எல்லாத் திட்டங்களையும், நிதி அமைச்சின் ஒப்புதலுக்குப் பின்புதான் செயற்படுத்த முடியும். ஆனால் தற்போது இந் நிபந்தனை கைவிடப்பட்டுவிட்டது. சில சமயங்களில், காலம் பற்றுத காரணத்தாலோ வேறு காரணத்தாலோ, நிதி அமைச்சின் அங்கீகரிப்பு இல்லாது சில திட்டங்கள், வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதும் நிதியமைச்சின் தலையீட்டுக்கு மற்றொரு காரணமாகும். இத் திட்டங்கள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அவைகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், நிதியமைச்சினால் ஆராயப்படுகின்றன. கஷ்டங்களையும், இடர்ப்பாடுகளையும் தவிர்க்க, வெவ்வேறு அமைச்சுகளும், நிதியமைச்சோடு தாமாகவே தொடர்பு வைத்துக் கொள்வது மற்றொரு காரணமாகும்.

இவ்வாறு நிதி அமைச்சின் அடக்குமுறை அல்லது கட்டுப்பாடு தேவைப்படுவதோடு, பொது நிதி சரியானபடி பயன்படுத்தப் படுகிறதா என்பதற்கு அது உத்திரவாதமளிக்கவும் செய்கின்றது. இத்துடன், செலவழிக்கும் அமைச்சுகள் (Ministries), இலாகாக்கள் (Departments) இவைகளின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் நசுக்கி,

அவை தாமதமாகச் செயல்படுவதற்கும், அவற்றின் திறமைக் குறைவுக்கும், நிதியமைச்சின் கட்டுப்பாடு காரணமாகிறது. பொது நிதியைச் செலவழிக்கும் பிற அமைச்சுகளும், நிதியமைச்சு எப்படியும் குறைத்துவிடும் என்பதை எதிர்நோக்கித் தமது தேவைகளை அதிகப்படுத்திக் காட்டுகின்றன இதன் காரணமாக, நிதியமைச்சினுல் ஆராயப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் நோக்கம் தோல்வியடைகிறது. இக் கஷ்டங்களைத் தவிர்க்க, நிருவாக அமைச்சுகளுக்கு அதிகப்படியான நிதி உரிமைகளும் (financial powers), பொறுப்புகளும் அளிக்கப்படுவது அவசியமாகும். நிதி அமைச்சு செலவீடுபற்றிய விவரங்களில் மூழ்குவதைவிட, அவற்றின் முக்கியத்துவத்தின்மீது கட்டுப்பாட்டினைப் பயன்படுத்த வேண்டும்.

14.13 நிருவாக அமைச்சுகள் (Administrative Ministries):- எல்லாத் திட்டங்களுக்கும் வெவ்வேறு அமைச்சுகளாலும், இலாகாக்களாலும் வரையப்பட்டு, அவற்றால் செயலாற்றப்படுகின்றன. முன்பு கண்டவாறு, அரசாங்கச் செலவினங்களைக் கண்காணித்து வரும் நிதி அமைச்சு, பிற அமைச்சுகளின் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் பாதிக்காமலும், அவைகளின் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுத்துவதற்குக் காரணமாக இல்லாமலும் இருக்கவேண்டும். ஏனெனில் இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறையலாம். அரசாங்க நடவடிக்கைகளும், செலவினங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், நிருவாக அமைச்சுகளிடம் நிதி உரிமைகளை ஒப்படைக்கவேண்டியது அவசியமாகிறது. இதுவே, பொதுக் கணக்கீட்டுக் குழு (Public Accounts Committe.), மதிப்பீட்டுக் குழு (Estimates committee), அடக்குமுறைத் தணிக்கைத் தலைமை அதிகாரி, (Comptroller and Auditor General), பேராசிரியர் பால் ஆப்பில்பி (Prof. Paul Appleby), திரு. ந. கோபாலசாமி அய்யங்கார், முதலியவர்களாலும் வலியுறுத்தப்பட்டது. சமீப ஆண்டுகளாக, இத் துறையில் சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1955ஆம் ஆண்டில், ரூ. 50 இலட்சங்களுக்குக் குறைவாகச் செலவாகும் திட்டமாக இருப்பின் அந்தந்த அமைச்சுகளே அவற்றை அனுமதிக்கலாமென ஆகியது. 1961ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மற்றொரு சீர்திருத்தத்தின்படி, ரூ. 50 இலட்ச எல்லை நீக்கப்பட்டு, அத் திட்டம் ஏற்கெனவே நிதியமைச்சின் அங்கீகாரம், பெற்றதாயிருப்பின் அதற்கென ஆகும் செலவு எவ்வளவானலும், எந்த ஓர் அமைச்சும் அதை அனுமதிக்கலாமென ஆயிற்று. வெவ்வேறு திட்டங்களுக்காகப் பணத்தைத் திருப்பி ஒதுக்கிவைப்பதற்கான (Reallocate) உரிமையும் அதிகமாக்கப்பட்டது. இத் திட்டம் முதலில் நான்கு அமைச்சுகளுக்கும், பின்பு 1962ஆம் ஆண்டில் சில மாறுதல்களுடன் மற்ற அமைச்சுகளுக்கும் செயல்முறைக்குக்

கொண்டுவரப்பட்டது. ஆனால் சீனர்களின் முற்றுகையினால் ஏற்பட்ட நெருக்கடி நிலையினால், 1962ஆம் ஆண்டில் இத் திட்டம் முற்றிலும் செயற்படுத்தப்படவில்லை. இருப்பினும், 1966ஆம் ஆண்டில் திரும்பவும் கொண்டுவரப்பட்டது.

நிதிக்கணக்கினங்கள், தணிக்கைபற்றிய அறிக்கையில் (Report on Finance Accounts and Audit) நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் (Administrative Reforms Committee), பரிந்துரைகள் சிலவற்றைக் கீழே காணலாம்.

நிதியமைச்சு, எல்லா வசதிகளுடனும் கூடிய, உள்நாட்டு நிதிக் கிளைகளை (Internal Finance Branches) அமைத்துக்கொள்ள நிருவாக அமைச்சுகளுக்கு உதவவேண்டும். நிதி ஆலோசகரின் அனுபவ அறிவு, எல்லா நிருவாக அமைச்சுகளுக்கும் பயன்படவேண்டும். ஒரு திட்டத்தைச் (Project) செயற்படுத்த அரசாங்கம் அதாவது நிதியமைச்சு அனுமதியளிப்பதற்கு, ஒரு குறிப்பிட்ட காலவரம்பு, உதாரணமாக 3 மாதங்கள் என வரையறுக்கப்படவேண்டும். இக் கால வரம்புக்குள், அந்த அமைச்சின் முடிவு கிடைக்கவில்லையெனில், நிதியமைச்சருக்கு அது தெரிவிக்கப்படவேண்டும். அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்தபின், நிதியமைச்சர் அதனைச் சார்ந்த நிருவாக அமைச்சுக்குத் தெரிவிப்பார்.

14.14 தணிக்கை (Audit):- முதலாவதாக, பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் பணம் செலவழிக்கப்பட்டுள்ளதெனத் தணிக்கை உறுதியளிக்க வேண்டும். இரண்டாவதாக, அரசாங்கச் செலவினங்களுக்கான நிபந்தனைகள், சட்டங்கள் இவற்றுக்கேற்ப, பணம் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதையும் தணிக்கை எடுத்துக் காட்டவேண்டும். நிதிகளை ஒழுங்கினமாகவும், நேர்மையற்ற முறையிலும் செலவழிப்பதைத் தணிக்கை தடுக்கின்றது. அநியாயமான, அநாவசியான செலவுகளை எடுத்துக் காட்டுவதன்மூலம், தணிக்கை, பொருளாதாரத்தையும் முன்னேற்றுகிறது. இந்தியாவில் தணிக்கையின் வேலைகள் அடக்குமுறைத் தணிக்கைத் தலைமையதிகாரி (Comptroller and Auditor General)யால் செய்யப்படுகின்றன. சட்டங்களின்மூலம் அவருக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய, மாநில அரசுகளின்

கணக்குகள் வைக்கப்படவேண்டிய முறைகளை அவர் குறிப்பிடுகிறார். மத்திய, மாநில அரசுகளின் கணக்கினங்கள் (Accounts) அவரிடம் உள்ளன. மத்திய, மாநில அரசுகளின் வருவாய்களிலிருந்து செய்யப்படும் எல்லாச் செலவினங்களையும் அவர் தணிக்கை செய்வதோடு, கணக்கில் காட்டப்பட்டவாறு பணம் பங்கிடப்பட்டு, நேர்மையான முறையில் தேவைக்கேற்றவாறு கிடைக்கின்றனவா என்பதையும், அவர் உறுதிபடுத்திக் கொள்ளுகிறார். மத்திய, மாநில அரசுகளின் இதர கணக்கீடுகளையும் தணிக்கை செய்கிறார். இறுதியாக, பாராளுமன்றம் அல்லது மாநில சட்டசபைகளுக்குமுன் வைப்பதெற்கெனத் தமது தணிக்கை அறிக்கைகளை (Audit Reports) ஜனுதிபதிக்கும், கவர்னர்களுக்கும் சமர்ப்பிக்கின்றார் (Submits). சட்டத்தின்மூலமாக, அடக்குமுறைத் தணிக்கைத் தலைமை அதிகாரிக்கு ஒரு சுயேச்சை அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவர் ஜனுதிபதியால் நியமிக்கப்படுகிறார். உயர்நீதிமன்றத்தின் (Supreme Court) நீதிபதியைப்போன்று, இவரும் அதேமுறையில் வேலையி லிருந்து நீக்கப்படலாம். இதனால், பாராளுமன்றத்துக்கு நிறைவான (Thorough) தணிக்கையும், ஒரு முழு அறிக்கையும் கிடைக்கின்றது.

பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்தவரை தணிக்கையை நடத்துவதற்கென, அடக்குமுறைத் தணிக்கைத் தலைமையதிகாரியின் (Comptroller and Auditor General) மேற்பார்வைக்குட்பட்ட நான்கு அல்லது ஐந்து தணிக்கை வாரியங்கள் (Audit Boards) ஏற்படுத்தப்பட வேண்டுமென நிருவாகச் சீர்திருத்தக்குழு (Administrative Reforms Committee) பரிந்துரைத்தது. இவ் வாரியங்கள், 5 ஆண்டு களுக்கு ஒருமுறை ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியும் விரிவான முறையில் ஆராய்ந்தறியும் வகையில் அவற்றின் வேலைகளை அமைத்துக்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துடன் தணிக்கை அதிகாரிகளால், சாதாரண வணிகத் தணிக்கையும் (Commercial Audit) ஒவ்வோர் ஆண்டும் நடக்க வேண்டும். இதற்கிடையே, அடக்குமுறைத் தணிக்கைத் தலைமை அதிகாரிக்கு (Comptroller and Auditor General) ஒரு முழுத் தணிக்கையையும் நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்படவேண்டும். இப் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

தணிக்கைக்கான தனி ஒழுங்கு முறைகள் (Formalities) அரசாங்க நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தி, முன்னேற்றத்தை நிறுத்தி வைக்கின்றன என்ற காரணத்தால், தணிக்கை (Audit)

குற்றம் சாட்டப்படுகிறது. பேராசிரியர் பால் ஆப்பில்பி (Prof. Paul Appleby) இந்திய அரசாங்க நிருவாகத்தைப் பற்றிய தமது அறிக்கையில், ''பாராளுமன்றத்துக்குத் தணிக்கையின் முக்கியத்துவத்தைப்பற்றிய அளவுக்கு மீறிய எண்ணம் உள்ளது'' ("The Parliament has a greatly exaggerated notion of the importance of auditing to Parliamentary responsibility'')[1] என்று தமது நோக்கத்தை வெளியிட்டுள்ளார். இருப்பினும், பொது நிதி நேர்மையான முறையில் செலவழிக்கப்படுகிறது என்று உறுதியளிப்பதன்மூலம், தணிக்கை ஒரு முக்கிய பணியைச் செய்கின்றது. அதேசமயத்தில், தணிக்கையின் நோக்கம், ''நிருவாகத்தை உயர்த்திக் காட்டுவதும் சிறந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள திட்டங்களுக்குத் தனி எதிர்ப்புகளை எழுப்புவதுமாக'' ("to show up the administration and to raise technical objections ever in respect of schemes which have been executed with competence and expedition'')[2] இருக்கக் கூடாது.

1 Ashoka Chanda:- Indian Administration, p. 252.

2 Paul H. Appleby, Public Administration in India.

15. மாநில அரசு வரிகள்
(Taxes of the State Governments)

அரசியல் சட்டதிட்டங்களின்கீழ் மாநில அரசுகளால் விதிக்கப் பட்டு, வசூலிக்கப்படும் முக்கியமான வரிகள் பின்வருவனவாம் :- நிலவரி, விவசாய வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரி, பரம்பரைச் சொத்தாகக் கைம்மாறும் விவசாய நிலங்களின்மீது விதிக்கப்படும் வரிகள், நிலங்கள், கட்டடங்களுக்கான வரிகள், மதுபானங்களின் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள், விற்பனை வரி, பொழுதுபோக்கு வரி, மோட்டார்வண்டி வரி, மின்சாரத் தீர்வைகள்.

15.1. நில வருவாய் (Land Revenue) : இந்தியாவில் முன்னூள் தொட்டு,நிலத்திலிருந்து கிடைக்கும் வரி வருவாயை மாநில அரசுகளே வசூலித்து வருகின்றன. நில வருவாயே, ஒரு காலத்தில் மாநிலங் களின் முக்கியமான வருவாயாக இருந்தது. தற்போது அது விற்பனை வரி வருவாய்க்கு அடுத்தபடியாகத்தான் உள்ளது. ஒரு மாநிலத்தின் நில வருவாய்த் திட்டம்,அம்மாநிலத்தின் நில உரிமைத்திட்டத்தைப் (System of Land Tenure) பொறுத்ததேயாம். இந்தியாவில் பல்வேறு இடங்களில் இருந்த நில வரித் திட்டங்களை (System of settlements) இரு வகைகளாகப் பிரிக்கலாம். (1) நிரந்தர நில வரித் திட்டங்கள் (Permanent Settlements) (2) தற்காலிக நில வரித் திட்டங்கள் (Temporary Settlements). 1793ஆம் ஆண்டில் கார்ன்வாலிஸ் பிரபு, நிலக்கிழார்களுடன் ஒரு நிரந்தர உடன்படிக்கையைச் (Permanent Settlement) செய்து கொண்டார். அதன்படி அச் சமயம் சமீந்தார்கள் பெறும் வாரங்களில் (Rents) $\frac{10}{11}$ பங்கு நில வருவாயாகக் கொள்ளப் பட்டது. அப்போது நிச்சயிக்கப்பட்ட நில வருவாய் ஒருபோதும் மாற்றப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நிலையான வருவாய் வருமென நிச்சயிக்கப்பட்டதும், உற்பத்தி பெருகியதாலும் நிலத்தின் மதிப்பு அதிகரித்ததாலும் நிலக்கிழார்கள் பல நன்மைகளை அடைந்தனர். இவ்வாறு நிலக்கிழார்களின் வருவாய் பெருகியபோதும், அரசாங்கத்தின்

வருவாய் முன்போலவே இருந்தது. ஆகவே, அவ்வப்போது நில வருவாயைப் பற்றிய தீர்மானங்களே மாற்றினால், சிறந்த பயனை அடையலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் காரணமாக நிரந்தர நில வருவாய்த் திட்டம் வழக்கிலிருந்து விலக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, 20 முதல் 40 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்ட தற்காலிக நில வருவாய்த் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

நாட்டின் வெவ்வேறு பாகங்களிலும் பின்பற்றப்பட்ட இத் தற்காலிகத் திட்டங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று முக்கியமான விவரங்களில் வேறுபட்டவையாக இருந்தன. உதாரணமாக, கிழக்கு உத்தரப்பிரதேசத்தில் சமீந்தார்களுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. மேற்கு உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் கிராமீய மக்களோடு (Mahals) இவ்வுடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. இவை மகல்வாரித்திட்டங்கள் (Mahalwari Systems) என அழைக்கப்பட்டன. சென்னை, பம்பாய் போன்ற இதர மாநிலங்களில், இவ்வுடன்படிக்கைகள் நேரடியாக உழவர்களுடன் (ryots) செய்துகொள்ளப்பட்டன. இவைகளே ரயட்வாரித் திட்டங்களாகும் (Ryotwary System).

இத்தகைய தற்காலிக உடன்படிக்கைகள், இம் முறையைப் பின்பற்றிய பல இடங்களில் 20 அல்லது 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்துகொள்ளப்பட்டன. நில வருவாயை நிச்சயிக்க வெவ்வேறு முறைகளை வெவ்வேறு மாநிலங்கள் பின்பற்றின. பஞ்சம், வெள்ளம், இவற்றின் காரணமாகத் தானிய விளைவுகள் பாதிக்கப்பட்டால், எல்லா மாநிலங்களும் அச் சமயம் நில வரியைத் திருப்பிக் கொடுத்தன. அல்லது நில வரியைச் சில காலத்திற்கு விதிக்காமல் நிறுத்தி வைத்தன. இதற்காக வெவ்வேறு நிபந்தனைகளை ஒவ்வொரு மாநிலமும் பின்பற்றிய போதிலும், அவை பெரும்பாலும் 1901ஆம் ஆண்டின் பஞ்சக் குழுவின் (Famine Commission) பரிந்துரைகளைப் பின்பற்றியே இருந்தன. அரசாங்கத்தின் தேவை அதிகரித்ததன் விளைவாக நாளடைவில் நில வரியின் முக்கியத்துவம் குறைந்து, பல வகை வரிகள் விதிக்கப்பட்டபோதும் ஆங்கில ஆட்சியின் தொடக்கத்தில் அரசாங்க வருவாயின் பெரும்பகுதியை நில வரிகளே அளித்து வந்தன. 1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தின்படி, நில வருவாய், மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர், மாநில வருவாய்க்கு முக்கிய ஆதாரமாக நில வருவாய் இருந்து வந்தது. 1935ஆம் ஆண்டில் சட்டபூர்வமான சீர்திருத்தங்களின்படி, மாநில சுயாட்சி உரிமை தோன்றிய பின்னர், நாளடைவில் விற்பனை வரி, நில வரியின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டது.

இந்தியாவிலுள்ள நில வரித்திட்டம், நடைமுறையில் வரி விதிப்பின் எல்லாக் கொள்கைகளுக்கும் எதிராகவுள்ளது. அதன் நிலைப்பாட்டில் (Incidence) அநியாயமானதாகவும், செய்முறையில் கொடுமையானதாகவும், நிருவாகத்திற்கு அதிக செலவு கொடுப்பதாகவும், நெகிழ்ச்சியற்றதாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. செல்வந்தர்களைவிட ஏழை விவசாயிகளையே நில வரி பெரிதும் பாதிக்கிறது. நில வரியின் முக்கிய குறைபாடு அதன் நெகிழ்ச்சியற்ற தன்மையாகும். மாநிலங்களின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால்தான் அவற்றின் வருவாய்க்கான தேவையும் கூடவே வளர்ந்து வருகிறது. ஆனால் நிரந்தர உடன்படிக்கைகளைப் பின்பற்றிய இடங்களில், நில வருவாயை அதிகரிக்க வழியில்லை. தற்காலிக உடன்படிக்கைகளைப் பின்பற்றிய இடங்களில் அடுத்த உடன்படிக்கை நடக்கும் வரை நில வருவாயை அதிகரிக்க வழியில்லை. இதனால் அரசாங்கத்தின் வருவாய் குறைய வேண்டும்; அல்லது மற்ற வரிகள் விகிதாச்சார முறைக்குப் புறம்பாக அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் விலையேற்றம், நில மதிப்பின் ஏற்றம் இவற்றின் விளைவாகப் பெறும் முழு நன்மையும், அரசாங்கத்திற்கோ சமுதாயத்திற்கோ ஒரு பங்குகூட இல்லாமல், நிலச் சொந்தக்காரர்களுக்கே போய்ச் சேருகிறது. இவ்வாறு நில வரித்திட்டத்தின் நெகிழ்ச்சியற்ற தன்மை பெரும் குறை பாடாகவுள்ளது.

வரிவிசாரணைக்குழு, இத் திட்டத்தைச் சீர்திருத்துவதற்கான பல யோசனைகளைப் பரிசீலனை செய்தது. தற்போதுள்ள நில வரித் திட்டத்திற்குப் பதிலாக, விவசாய வருமான வரி அல்லது அவ் வருமான வரியோடு சேர்த்து ஒரே மட்டமான குறைவுவீத நில வரி, அல்லது விவசாய உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வோர் விற்கும்போது அவற்றின்மீது விதிக்கப்படும் விற்பனைவரி இவற்றுள் ஏதாவது ஒன்றினை விதிக்கலாம் எனச் சிலர் யோசனை கூறினர். மற்றொரு தீர்மானத்தின்படி, தற்போதுள்ள நில வரித் திட்டம் அப்படியே இருக்கலாமெனவும், ஆனால் விவசாயிகளின் மீதுள்ள பளு, விலைகுறையும் காலத்தில் குறைக்கப்பட்டு, விலை ஏற்றத்தின்போது அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. அதாவது, விலைகளோடு தொடர்புகொண்ட சரிந்து செல்லும் நில வரி அளவு (Sliding Scale of Land Revenue) ஒன்று இருக்க வேண்டுமெனவும், அதை ஆண்டுக்காண்டு அல்லது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை குறைக்கவோ அதிகரிக்கவோ வேண்டும் எனவும் கூறப்பட்டது. இவ் வரிப்பளுவின் சமமின்மையைக் (inequality) குறைக்க, அதிக நிலங்களை உடையவர்

களுக்கும், அதிக விலை மதிப்புள்ள தானியங்களுக்கும் கூடுதல் வரி (Surcharge) விதிக்கலாம் என மற்றொரு யோசனை கூறப்பட்டது.

இரண்டாவது உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட விலையேற்றத்தின் காரணமாக, நில வரிப்பளு பெருமளவில் குறைந்துள்ளதென்பது வரிவிசாரணைக்குழுவின் கருத்தாகும்.[1] பல்வேறு காரணங்களுக்காக, நிலவரித்திட்டத்தை அவ்வப்போது திருத்தியமைக்கவேண்டுமென, அக் குழு நினைத்தது. அக் காரணங்கள் பின்வருமாறு :— (1) வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மாநிலங்களில் நில வரி உடன்படிக்கைகள் நடந்தேறின. (2) இரண்டாவதாக, நில வரி உடன்படிக்கை முறைகளின்.....விலைவாசி....., விலையில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப வரிப்பளுவைச் சரிக்கட்டுவது கடினமாக இருந்தது. (3) நில வரி வளர்வீத முறையைப் (Progressive) பின்பற்றியதன்று. ஆகவே நில வரிச் சீரமைப்புக்கெனப் பின்வரும் சிபாரிசுகளை அக் குழு எடுத்துக் கூறியது :—

(1) வரிவிதிப்புக்காக, ஒவ்வொரு மாநிலத்திலும் நிலங்கள் தரப்படுத்தப்படவேண்டும். இதனால் ஒரு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் நில வரியிலுள்ள வேறுபாடுகளைத் தவிர்க்கலாம். இதன்படி 1880ஆம் ஆண்டிற்கும் 1899ஆம் ஆண்டிற்கும் இடையே நிலவிய விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்ட நில வரித் திட்டம் (settlement) நடைமுறையில் கொண்டிருந்த பகுதிகளில், தற்போதுள்ள வரிவீதங்களை 25%-க்கு உயர்த்த வேண்டுமெனவும், 1900—1919-இல் இருந்த விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்ட பகுதிகளில் 12½%-க்கு உயர்த்த வேண்டுமெனவும், 1920-க்கும் 1939-க்கும் இடையே இருந்த விலைவாசிகளை அடிப்படையாகக் கொண்ட பகுதிகளில் 60%-க்கு உயர்த்தவேண்டுமெனவும், 1940-க்குப் பிறகு உள்ள விலைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களைப் பின்பற்றும் பகுதிகளில் மாறுதலேதும் வேண்டாமென அக் குழு சிபாரிசு செய்தது. (2) வரிவிதிப்பு, பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். (3) உள்நாட்டுச் (Local) செலவுக்காக உள்ளாட்சிச் சபைகள் (Local Bodies) நிலவரிமீது கூடுதல்வரிகளை விதித்துக் கொள்ளலாம். (4) விவசாய வருமான வரியைப் விதிப்பதன்மூலம், நிலவரிப் பளுவின் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கலாம். (5) இறுதியாகப் பல மாநிலங்களில், எவ்விதத் தீர்மானமும் இல்லாமல், நில வரி நடைமுறையில் இருந்ததையும் அக் குழு எடுத்துக் கூறியது. இப் பகுதிகளில், நில அளவைகளும் (Surveys), தீர்மானங்களும் நடைபெற வேண்டுமெனவும் அக் குழு பரிந்துரைத்தது.

[1] Report of the Taxation CEnquiry ommission 1953-'54, Vol. I. p, 188

சமீப காலத்தில், பல மாநிலங்கள் நில வரியை முற்றிலும் ஒழிப்பது அல்லது ஒரு பகுதியை ஒழிப்பது பற்றிய தீர்மானங்களை வெளியிட்டுள்ளன. சென்னை அரசாங்கம் 1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நில வரியை நீக்கும் நோக்கத்தை வெளியிட்டதோடல்லாமல், அதற்கென ஓர் இடைவெளி முயற்சியாக நில வரிமீது போடப்பட்ட கூடுதல் வரியையும், 1965ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வையையும் வழக்கிலிருந்து ஒழித்தது. மத்தியப் பிரதேசத்தில் சிக்கனமற்ற அளவு (Uneconomic) நிலங்களின்மீது நில வரி நீக்கப்பட்டது. உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் சிறு நிலங்களின்மீது விதிக்கப்பட்ட நிலவரி குறைக்கப்பட்டது. மைசூரில், நில வரிமீது போடப்பட்ட கூடுதல் வரி ஒழிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள், மாநில அரசுகளின் வரையிட்ட சாதனங்களை (limited resources) மேலும் பாதிக்கத்தான் செய்கின்றன. நில வரிப் பளு, பொதுவாக அவ்வளவு கடினமானதன்று. விவசாயிகளுக்கு அது பழக்கமாகிவிட்டது. சிறிய நிலத்தையுடைய உழவர்களுக்குக்கூட அவ் வரி விலக்கு அவ்வளவாகப் பளுவைக் குறைப்பதில்லை. அதனால் நில வரியை முற்றிலும் நீக்குவதைவிட, அதைச் சீர்திருத்தி அமைப்பதையே பெரிதும் வரவேற்கின்றனர்.

15.2. விவசாய வருமான வரி (Agricultural Income Tax) :— 1860ஆம் ஆண்டில் முதன்முதலாக வருமான வரி விதிக்கப்பட்ட போது, விவசாய வருமானமும், இதர வருமானங்களும் அதற்கு இலக்காயின. ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, விவசாய வருமானம், வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டது. இந்திய அரசியல் சட்டதிட்டங்களின்படி மாநில அரசுகள், விவசாய வருமானங்களின்மீது வரி விதிக்கும் உரிமையைப் பெற்றுள்ளன.

எல்லா மேலை நாடுகளிலும், விவசாயத்திலிருந்து பெறும் வருவாய், இதர வருவாய் இவற்றின் தொகுப்பு உள்ளது. இதற்குத் தகுந்த காரணங்கள் உள. முதலாவதாக, மேலை நாடுகளில் உள்ள உழவனின் நடவடிக்கைகள், இந்திய விவசாயியின் நடவடிக்கைகளைப் போலல்லாமல், இந்திய வியாபாரியின் நடவடிக்கைகளைப் போன்றுள்ளன. இரண்டாவதாக, நில வரியை வரி எனக் கருதாமல் வாரமாகக் கருதும் இந்திய நில வரித் திட்டம் அந் நாடுகளில்லை. மூன்றுவதாக, அந் நாட்டு மக்கள் கல்வி அறிவு படைத்தவர்களாவர். இந்தியாவில் வருமான வரி விதிக்கப்பட்ட புதிதில், 9 ஆண்டு காலத்தில் (1860-'65, 1869-'73) விவசாய வருமானம், மற்றும் இதர வருமானம் இவற்றின் தொகையைக் கணக்கிட முயற்சித்து, தோல்வியே காண நேரிட்டது. ஏனெனில் அதை நிருவகிப்பதிலுள்ள கஷ்டங்கள், விவசாய வருமானத்தைச் சரிவர மதிப்பிடத்

தேவையான குறைந்தபட்சக் கல்விகூட இல்லாமை ஆகியவைகளே காரணமாகும்.

1924-'25ஆம் ஆண்டின் வரிவிசாரணைக்குழுவும், 1936ஆம் ஆண்டின வருமானவரிவிசாரணைக் குழுவும், வருமான வரிக்கு விவசாய வருமானத்தை இலக்காக்கக் கூடாது என்பதற்கு, நியாயத்தின் (equity) அடிப்படையில் ஒரு காரணமுமில்லை என எண்ணின.

1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, விவசாய வருமானங்களின் மீது வரிவிதிக்கும் உரிமை, மாகாணங்களுக்கு (Provinces) அளிக்கப்பட்டது. நம் நாட்டில் முதன்முதலாக 1938-இல் பீஹார் மாகாணமே இவ் வரியை விதித்தது 1939-இல் அஸ்ஸாம் அதைப் பின்பற்றியது. 1944-இல் வங்காளத்தில் இவ் வரி விதிக்கப்பட்டது. ஒரிஸ்ஸாவில் 1948-இல் இவ் வரி விதிக்கப்பட்டது. பிறகு இதர மாநிலங்களும் பின்பற்றின. தற்போது, அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார், கேரளம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், ராஜஸ்தானம், மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இவ் வரி நடைமுறையில் உள்ளது.

நில வரித்திட்டத்தின் பாரபட்சத்தன்மையைக் குறைக்கவும், மாநிலங்களின் வருவாயை அதிகரிக்கவும், எல்லா மாநிலங்களும், ரூ. 3,300-ஐக் குறைந்தபட்ச வரிவிலக்கு எல்லையாகக் கொண்ட, விவசாய வருமானவரியைக் கையாளலாம் எனவரி விசாரணைக்குழு சிபாரிசு செய்தது.[1] எல்லா மாநிலங்களிலும் இருந்த வேறுபட்ட சூழ்நிலைகளின் காரணமாக, அக் குழு ஒரேமாதிரியான வரிவீதத்தைச் சிபாரிசு செய்யவில்லை. ஆனால் சில மாநிலங்கள் தற்போது குறைந்த வீதத்திலுள்ள வரியை உயர்த்தலாமென அது யோசனை கூறியது.

ஜமீந்தாரி முறை ஒழிப்புக்குப் பின்னர், விவசாய வருமான வரியின் முக்கியத்துவம் பெருமளவில் குறைந்துபோய், அதிக அளவு நிலமுடையவர்கள் மட்டும் இதைச் செலுத்தும்படி நேரிட்டது. சமீப காலமாக, மாநிலங்களில் ஏற்பட்ட விவசாயச் சீர்திருத்தங்களின் விளைவாக, பெரிய நிலங்கள் இவ் வரியிலிருந்து தவிர்க்கப் பட்டுள்ளன. மேலும் கட்டாய நிலப்பங்கீட்டு முறையையும் (Compulsory distribution of holdings) புகுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதன் விளைவாக, பெருநிலச் சொந்தக் காரர்கள் இனிமேல் இல்லாமல் போய் விடுவார்கள்.

பின்வரும் அட்டவணையில் கண்டபடி, விவசாய வருமான வரி மூலம் கிடைக்கும் வருமானம் மாநிலங்களுக்கு உற்சாகமளிப்ப

[1] The Taxation Enquiry Commission Report vol. III. 1953-'54-p. 208.

விவசாய வருமானவரி (மாநில வாரியாக)[1]

(Agricultural Income Tax—State - Wise)

(ரூ. இலட்சத்தில்)

மாநிலங்கள்	1957-'58	1958-'59	1959-'60	1962-'63	1964-'65
ஆந்திரப் பிரதேசம்	—	—	4	349	421
அஸ்ஸாம்	224	299	230	349	421
பீஹார்	14	17	18	46	40
கேரளம்	183	181	161	242	225
மத்தியப் பிரதேசம்	—	1	2	—	—
தமிழ்நாடு	130	85	147	116	116
மைசூர்	54	103	105	76	70
ஒரிஸ்ஸா	3	3	3	11	5
இராஜஸ்தானம்	2	2	3	4	4
மகாராஷ்டிரம்	—	—	—	—	15
மேற்கு வங்காளம்	117	89	68	84	75
உத்திரப்பிரதேசம்	—	—	—	28	49

1 Source : Reserve Bank of India, Bulletin

தாகவே உள்ளது. ஏற்கெனவே கூறிய காரணங்களின்படி, இதற்கும் மேற்பட்ட வருவாயை, இவ் வரிமூலம், எதிர்பார்த்தல் இயலாது.

இத்தகைய குறைபாடுகளிலிருந்த போதிலும், மாநில வரிகளுள் விவசாய வருமான வரி, முக்கிய இடத்தை வகித்து வருகிறது. அவ் வரியுள்ள மாநிலங்களில், அது போதுமான வருவாயை ஈட்டித் தருகிறது. விவசாயிகளின் வரிப்பளுவைப் பாரபட்சமற்ற முறையில் பங்கீடு செய்ய அது ஒரு முக்கிய சாதனமாகப் பயன்படுகிறது.

விவசாயத்தின்மூலம் கிடைத்துள்ள உபரிகள் (Surpluses) அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, ஜப்பான் போன்ற உலகிலுள்ள அநேக நாடுகளின் முன்னேற்றத்துக்குச் சாதனமாக அமைந்துள்ளன. ஆனால் அவை இந்திய முன்னேற்றத்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறவில்லை. நில வரி ஒரு நிலையான (Rigid) வரியாக இருப்பதால், அதிலிருந்து கிடைக்கும் வருமானம், விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரின் வருமானத்தில் ஏற்படும் மாறுதல்களைப் பிரதிபலிப்பதில்லை. விவசாயத்தின்மூலம் பெறும் வருமானம் நமது தேசிய வருமானத்தில் 40% அல்லது 45% ஆகும். ஆனால் தேசிய சேமிப்பில் (National Savings) இம் முக்கிய பிரிவிலிருந்து பெறும் வரி வருவாயின் (Tax receipts) பங்கு அவ்வளவு முக்கியமானதாக இல்லை. வருமானங்களில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப விவசாய வரிவிதிப்பிலிருந்து பெறும் வருமானத்தையும் மாறும்படி செய்வதற்கு விவசாய வருமான வரிக்குத் திறமையுள்ளது. இருந்த போதிலும், விவசாய வரிவிதிப்பில் இவ் வரியின் பங்கு மிகச் சிறியதே. இதனால் பெரும் வருவாயும் இவ் வரி அமுலிலுள்ள பல மாநிலங்களில் குறைவாகவேயுள்ளது. அநேக மாநிலங்களில், சாதாரண விவசாயத் தொழில்களின்மீது அல்லாமல், காபி, தேயிலை போன்ற தோட்டப் பயிர்களுக்கே இவ் வரி விதிக்கப்பட்டுள்ளது.

15.3 மாநில ஆயத்தீர்வைகள் (State Excise Duties.)— சட்டத்தின்படி மாநிலங்கள், மனிதர்களால் நுகரப்படும் சாராய வகைகள், அபினி மீதும், இந்தியச் சணல் மற்றும் தூக்கமருந்துகள்மீதும் தீர்வைகளை விதித்தன. இவ் வகைப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் மருந்து வகைகள், அழகு சாதனங்கள் இவற்றின்மீது மத்திய அரசினால் தீர்வைகள் விதிக்கப்பட்டன. ஆனால் அவை மாநிலங்களால் வசூலிக்கப்பட்டு அவைகளுக்கே கொடுக்கப்பட்டன.

இவ்விதமாக, மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆயத்தீர்வைகள், போதைதரும் பானங்கள், தூக்க மருந்துகள் இவற்றோடு தொடர்பு கொண்டிருந்தன. ஆகவே மாநிலங்களில் வருமானத்திற்காக மட்டு மல்லாது இப் பொருள்களை உற்பத்தி செய்தல், இவற்றின் நுகர்வு (Consumption.) இவைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இவ்வாயத் தீர்வைகள் உதவின.

சுதந்திரத்திற்குப் பின்னர், மதுவிலக்குக் கொள்கை, ஆயத் தீர்வைகள் ஈட்டிய வருவாயைப் பாதித்தது. மதுவிலக்கு, மகாத்மா காந்தியின் தலைமையில், காங்கிரஸ் கட்சியின் மிக முக்கிய கொள்கைகளுள் ஒன்றாயிருந்தது. அமெரிக்காவில் 1920-க்குப் பின்னர் பல முறை மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, முற்றும் தோல்வியடைந்த காரணத்தால், இறுதியில் கைவிடப்பட்டது. சுதந்திரத்துக்குப் பின்னர், குஜராத், பம்பாய், சென்னை ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முழு மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. மைசூரிலும், கேரளத்திலும் ஒருபுடை மதுவிலக்கு (Partial Prohibition) கொண்டுவரப்பட்டது. பீகாரிலும், மேற்கு வங்காளத்திலும் மதுவிலக்குப் பிரசாரக் கொள்கைகள் பரப்பப் பட்டன. இராஜஸ்தானம், டில்லி, இமயமலைப் பிரதேசம் ஆகிய இடங்களில் மதுவிலக்கு அமுலுக்கு வரவில்லை.

இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியின்கீழ், ஆயத்தீர்வை வருவாய் 1912-'13-இல் ரூ. 13 கோடியிலிருந்து, 1980-'31-இல் ரூ. 17 கோடிகளுக்கு உயர்ந்தது. 1938-'39-இல் மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியின்கீழ் ஏற்பட்ட மதுவிலக்கினால், அது ரூ. 13 கோடிகளாகச் குறைந்தது. ஆனால், இரண்டாவது உலகப் போரின் முடிவில் காங்கிரஸ் ஆட்சியிலிருந்து விலகியதாலும், போரின் விளைவுகளி னாலும், 1946-'47-இல், மாநில ஆயத்தீர்வைகள் ரூ. 49 கோடிவரை உயர்ந்தன. 1950-'51-இல் இத் தொகை மதுவிலக்கினாலும், நாட்டுப் பிரிவினையாலும் குறைந்துவிட்டது. மதுவிலக்கு அமுலிலில்லாத மாநிலங்களில் ஆயத்தீர்வைமூலம் கிடைத்த வருவாய் அதிகரித்தது. அதன் விளைவாக ஆயத்தீர்வை வருவாய், மாநிலங்களின் மொத்த வருவாயில் 7% ஆக இருந்தது. இந்திய மாநிலங்களின் ஆயத்தீர்வை வருவாயைப் பின்வரும் அட்டவணை (எண்-41)யில் காணலாம்:-

ஆயத்தீர்வை வருவாயையும், மதுவிலக்கையும் பற்றி வரி விசாரணைக் குழுவும்[1] (1953-'54), திட்டக்குழுவின் மதுவிலக்கு விசாரணைக் குழுவும்[2] ஆலோசித்தன. தேக்சந்த் குழு (Tek Chand

[1] Taxation Enquiry Commission.
[2] The Prohibition Enquiry Committee of the Planning Commission.

அட்டவணை எண் 41

மாநில ஆயத்தீர்வைகள் ஈட்டிய வருவாய் (Collections from State Excises.)

1938-'39-லிருந்து 1951-'52 வரை

(கோடி ரூபாயில்)

ஆண்டு	1938-'39	1946-'47	1947'-48	1948'-49	1949'-50	1950'-51	1951'-52
தொகை	13·08	48·79	39·68	34·32	28·95	24·92	49·41

1952-'53-லிருந்து 1958-'59 வரை

ஆண்டு	1952'-53	1953'-54	1954'-55	1955'-56	1956'-57	1957'-58	1958'-59
தொகை	46·3	44·66	44·56	43·49	42·76	45·73	45·37

1959-'60-லிருந்து 1964-'65 வரை

ஆண்டு	1959-'60	1960-'61	1961-'62	1962-'63	1963-'64	1964-'65
தொகை	43·82	53·1	58·6	62·8	66·75	71·0

Source : Dr. R. Dass. Finances of the Indian Union Since 1947, Central Book Depot, Allahabad, 1966. p. 216.

committee), 1964-இல் மதுவிலக்கு எவ்வாறு செயற்பட்டது என்பதைப் பற்றிச் சமீபத்தில் திரும்பவும் ஆராய்ச்சி செய்தது. வரிவிசாரணைக் குழுவின் அங்கத்தினர்களில் ஒரு பாதியினர் மதுவிலக்குக்கு ஆதரவு தருபவராகவும், பாதி மதுவிலக்குக்கு எதிராகவும் இருந்ததால், அக் கொள்கையைப் பின்பற்றுவதுபற்றி அக் குழு ஒருமித்த சிபாரிசும் செய்யவில்லை. மதுவிலக்கு விசாரணைக்குழு, நாடு முழுவதும் மதுவிலக்கு கொண்டுவரப்படும் இலக்குத் தேதி (Target date), 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி எனச் சிபாரிசு செய்தது. நாடு முழுவதிலும் ஒரேசமயத்தில் மதுவிலக்கைக் கொண்டுவரவேண்டுமென தேக்சந்த் குழு (1964) பரிந்துரைத்தது. அதற்கென 1975-'76-இல் முடியுமாறு ஒரு 12-ஆண்டுத் திட்டத்தையும் சிபாரிசு செய்தது. இதன் விளைவாக, மதுவிலக்கினால் மாநிலங்களுக்கு ஏற்படும் நஷ்டம் 1975-க்குள் ரூ. 80 கோடிகளாகுமென்றும், அதை விற்பனை வரி முதலியவற்றினால் சமாளிக்கலாமெனவும் அக் குழு கூறியது.

இக் குழுவின் திட்டத்தை ஒப்புக்கொண்ட பல மாநிலங்கள், மதுவிலக்கினால் ஏற்படும் நஷ்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலொழிய, அதை அமலுக்குக் கொண்டுவர இயலாதெனத் தெரிவித்தன. ஆகவே மாநில வருவாயை அதிகரிப்பதற்காக மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மதுவிலக்கை ஒழித்தன. 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழ்நாடு மதுவிலக்கை எடுத்துவிட்டது.

15.4 விற்பனை வரி (Sales Tax) :- செய்தித்தாள்களைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களின்மீதும் விற்கும்போதும், வாங்கும் போதும் வரிவிதிக்கும் உரிமை, 1950 ஆம் ஆண்டில், மாநிலங்களுக்குச் சட்டபூர்வமாக அளிக்கப்பட்டது. ஆனால் மாநிலங்கள், (1) இந்தியாவைவிட்டு அயல் நாட்டில் நடைபெறும் வாங்கல், விற்றல் இவற்றின்மீது வரிபோட இயலாது. (2) இன்னொரு மாநிலத்தின் நுகர்வுக்காக அனுப்பப்பட்ட பொருள்களின் விற்பனைமீதும் வரி விதிக்க இயலாது. (3) மாநிலங்களுக்கிடையே வாணிகம் நடைபெறும் போது ஆகும் விற்பனைமீதும் வரி விதிக்க இயலாது.

1938 ஆம் ஆண்டில், மத்தியப் பிரதேசத்தில் பெட்ரோலுக்கு விதிக்கப்பட்ட தேர்வு வரியே (Selective Tax) இந்தியாவில் விதிக்கப் பட்ட முதல் விற்பனை வரியாகும். 1939-இல், சென்னையில் பொது விற்பனைவரி (General Sales Tax) முதன்முதலாகப் புகுத்தப்பட்டது. பின்பு மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்றியதால், தற்போது இந்தியாவில் எங்கும் ஏதாவதொருவித விற்பனைவரி இருக்கிறது.

விற்பனைவரி, ஒருமுனை வரியாகவோ (Single Point) பலமுனை (Multipoint) வரியாகவோ விதிக்கப்படுகிறது. ஒருமுனைத் திட்டத்தின்படி, விற்பனைவரி சில்லறை வியாபாரத்தின் போதும், பல முனைத்திட்டத்தின்படி, பொருள்கள் ஒவ்வொருவர் கைமாறும்

போதும் விதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள விற்பனைவரி பலமுனை வரியாகும். மற்ற மாநிலங்களில் ஒருமுனைத்திட்டம் உள்ளது.

1956ஆம் ஆண்டிலிருந்து, மாநிலங்களிடையே நடைபெறும் வியாபாரத்தின்போது பொருள்கள் வாங்கப்படும் போதும், விற்கப்படும்போதும் அவற்றின்மீது விற்பனைவரி ஒன்றினை மத்திய அரசு விதித்துள்ளது. மத்திய அரசுக்காக, அவ் வரியை நிருவகிப்பது மாநில அரசுகளேயாகும். வரியை வசூலிக்கும் மாநிலங்களே அவ் வருவாயை வைத்துக் கொள்ளலாம்.

விற்பனைவரி மாநிலங்களின் வருவாயில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ் நாட்டின் மொத்த வருவாயில் $\frac{1}{5}$ பங்கு, விற்பனைவரி ஈட்டியதாகும். இது மகாராட்டிரத்தில் $\frac{1}{4}$ பங்காகும். 1944 ஆம் ஆண்டில் எல்லா மாநிலங்களிலும் விற்பனைவரி ஈட்டிய வருவாய் ஒரு கோடி ரூபாயாகும். 1951-52-இல், பொதுவிற்பனைவரி ஈட்டிய வருவாய் ரூ. 58.93 கோடிகளாகும். இது 1968-'69-இல் ரூ. 554·8 கோடிகளாயிற்று. இதைப் பின்வரும் அட்டவணைமூலம் காணலாம்:-

இந்த அட்டவணை, மாநில வருவாயின் நெகிழ்ச்சிக்கு, விற்பனை ஓர் ஆதாரமாக இருப்பதையும், விற்பனை வரியின் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது. விற்பனை வரியின் பெருக்கம், தேசிய வருமானத்தின் பெருக்கத்தைவிட அதிகமாக இருந்து வருகிறது. ஆனல் மத்திய அரசின் ஆயத்தீர்வை ஈட்டும் வருவாய் இதைவிட அதிகமாகியுள்ளது.

தேசிய வருமானம், மத்திய அரசின் ஆயத்தீர்வைகள் விற்பனை வரி இவற்றின் வருவாய்ப் பெருக்கம்.

(Growth of National Income, Union Excise and Sales Tax)

(ரூ. கோடியில்)

ஆண்டு	மத்திய ஆயத் தீர்வை வருவாய்	விற்பனை வரி வருவாய்	தற்போதைய விலையில் தேசிய வருமானம்	மத்திய ஆயத்தீர்வை தேசிய வருமானத்தில்%	விற்பனை வரி வருவாய் தேசிய வருமானத்தில்%
1950-'51	67·5	60·0	9,530	0·7	0·6
1951-'52	85·8	59·0	9,970	0·9	0·6
1952-'53	83·0	55·6	9,820	0·8	0·6
1953-'54	95·0	62·6	10,480	0·9	0·6

1954-'55	108·20	71·6	9,610	1·1	0·7
1955-'56	145·3	78·0	9,980	1·5	0·7
1956-'57	190·4	84·6	11,310	1·7	0·7
1957-'58	273·6	117·3	11,390	2·4	1·0
1958-'59	312·9	123·9	12,600	2·5	1·0
1959-'60	360·7	136·8	12,950	2·8	1·1
1960-'61	416·4	158·8	14,140	2·7	1·1
1961-'62	489·3	181·4	14,800	3·3	1·2
1962-'63	598·3	208·9	15,400	3·8	1·4
1963-'64	729·6	268·3	17,200	4·2	1·6
1964-'65	773·1	297·5	—	—	—
1965-'66	819·2	315·9	—	—	—

Source:- Report of The Finance Commission, p. 232,

பல்வேறு மாநிலங்களின் நிதியில் விற்பனை வரியின் முக்கியத்துவத்தை இந்த அட்டவணை (எண்-42)யிலிருந்து அறியலாம். விற்பனை வரி மொத்த வருவாயில் சராசரி 41% ஆக இருட்பதை அறியலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் விற்பனை வரி வருவாய் மொத்த வருவாயில் 25% (ஜம்மு, காஷ்மீரில்)லிருந்து, மகாராஷ்டிரத்தில் 50% வரை வேறுபடுவதையும் காணலாம் பொதுவாக நோக்கின் தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய தொழில் மயமான மாநிலங்களில், விற்பனை வரிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

எவ்வளவுக்கெவ்வளவு நாம் பொதுவுடைமைச் சமுதாயத்தை நோக்கிச் செல்கின்றோமோ, அவ்வளவுக்கு, விற்பனை வரியை நம்ப வேண்டும். ஏனெனில், பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் (Socialized Economy) வருமான ஏற்றத்தாழ்வுகள் மிகக்குறைந்த அளவுக்குத்தான் இருக்குமாதலால், அங்கு நேர்முக வரிகளின் பங்கு குறைவாகவே இருக்கும்.[1] உதாரணமாக, ருஷ்யாவில், மொத்தத் தேசிய வருமானத்தில் விற்பனை வரி வருவாய் 50%-க்கும் மேலாகவுள்ளது.

1. Report of the Taxation Enquiry Committee, 1953-'54 vol. IV

15·5 மோட்டார் வண்டி வரி (Motor Vehicles Taxation):- எல்லா மாநிலங்களிலும் மோட்டார் வண்டிகளுக்கு வரி விதிக்கப்படுகின்றன. பேருந்துகள் (Buses), லாரிகள், கார்கள் (Cars), ஸ்கூட்டர்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்ற எல்லாவிதமான மோட்டார் வண்டி

அட்டவணை எண் : 42
வரி வருவாயில் ஒரு பகுதியாக விற்பனை வரி
(Sales Tax as a Proportion of Tax Revenue)

1965-'66 ஆம் ஆண்டின் வரவு செலவுதிட்ட மதிப்பீடுகள்
(ரூ கோடிகளில்)

(1) மாநிலங்கள்	(2) விற்பனை வரி வருவாய்	(3) மாநிலங்களின் மொத்த வரி வருவாய்	(4) மொத்த வரி வருவாயில் விற்பனை வரி வருவாயின் சதவீதம்
1. ஆந்திரப் பிரதேசம்	22·0	65·4	34
2. அஸ்ஸாம்	7·4	25·0	30
3. பீகார்	18·5	50·1	37
4. குஜராத்	22·6	44·4	51
5. ஜம்மு-காஷ்மீர்	0·9	3·4	25
6. கேரளம்	17·4	37·0	47
7. மத்தியப் பிரதேசம்	18·9	57·5	37
8. தமிழ்நாடு	34·8	72·2	48
9. மகாராஷ்டிரம்	60·9	111·05	55
10. மைசூர்	17·2	43·0	40
11. ஒரிஸ்ஸா	8·3	18·8	44
12. பஞ்சாப்	17·0	50·0	34
13. இராஜஸ்தானம்	11·7	23·7	35
14. உத்திரப் பிரதேசம்	22·6	82·8	27
15. மேற்கு வங்காளம்	35·7	77·2	46
எல்லா மாநிலங்களிலும்	315·9	764·7	41

[1] Source :—Report of the Finance Commission, 1965, p. 233

களும் இவ் வரிக்கு இலக்காகின்றன. வரி விதிப்பின் அடிப்படையும், வரி வீதமும் மாநிலத்திற்குமாநிலம் வேறுபடுகின்றன. வண்டிகளின் உரிமையைமாற்றிப் பதிவு செய்வதற்காக, வண்டி இயக்குநருக்கு உத்தியோகச் சின்னம் (badges) அளிப்பதற்காக, வண்டியை ஓட்ட அனுமதிச் சீட்டு அளிப்பதற்காக, என வேறு சில கட்டணங்களும் மாநிலங்களால் விதிக்கப்படுகின்றன.

இந்தியாவில் மோட்டார் வண்டிகள்மீது நேர்முக வரி விதிப்பு (Direct Taxation) மாநிலத்தைப் பொறுத்ததாகும். இதன்மூலம் கிடைக்கும் வருவாய் 1951-'52-லிருந்து நாளுக்குநாள் வளர்வீதத்தில் அதிகரித்து வருவதைப் பின்வரும் அட்டவணை (எண்-43)யிலிருந்து அறியலாம்.

அட்டவணை எண் :- 43

மோட்டார் வண்டி வரியிலிருந்து கிடைக்கும் வருவாய்[1]
(Revenue from Motor Vehicles Tax)

(ரூ. கோடியில்)

1951-'52	1952'-53	1953'-'54	1955-'56	1957-'58	1959-'60	1960-'61	1962-'63	1963-'64
10·9	11·76	13·67	14·39	21·08	24·55	34·1	46·3	54·1

வரிவருவாயில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1951-லிருந்து பின்பற்றப் பட்ட அதிகப்படியான வரி விதிப்பின் விளைவாக இருக்கலாம். மேலும், இரண்டாவது உலகப்போர் முடிந்த சிறிது காலத்திற் கெல்லாம் மோட்டார் போக்குவரத்தில் பெரும் வளர்ச்சி இருந்தது. தேசிய வருமான வளர்ச்சிக்கேற்ப, பயணிகள் போக்குவரத்தும், பொருள்கள் போக்குவரத்தும் மேலும் வளர்ச்சியடையும் எனக் கொள்ளலாம்.

1927ஆம் ஆண்டின் சாலை முன்னேற்றக் குழுவிற்குப் (Road Development Committee) பின்னர், சாலைப் போக்குவரத்துப் பிரசினைகள், 1950 ஆம் ஆண்டின் மோட்டார் வண்டிகள் விசாரணைக் குழுவினால், விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்டன. வெவ்வேறு மாநிலங்களிலுள்ள மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பை ஒன்று சேர்ப்பது எப்படி என்பதே அக் குழுவின்முன் வைக்கப்பட்ட முக்கிய பிரசினையாகும்.

1 Source :—Finance of Indian Union since 1947 by Dr. R. Dass Central Book Depot, Allahabad, 1966, p. 227.

நம் நாட்டில் சாலைப்போக்குவரத்து வரிகளைப் பின்வரும் வகைகளாகப் பிரிக்கலாம்.

மத்திய வரிகள் (Central taxes):- (1) மோட்டார் வண்டிகள், தேவையான துணைக்கருவிகள், மோட்டார் ஸ்பிரிட் இவற்றின் மீது சுங்கத் தீர்வைகள். (2) மோட்டார் ஸ்பிரிட், இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட டயர், டியூப் இவற்றின்மீது ஆயத்தீர்வைகள்.

மாநில வரிகள் (State taxes):- (3) (a) மோட்டார் வண்டிவரி. (b) மோட்டார் வண்டிகள், அவற்றின் துணைக் கருவிகள் மீது விற்பனை வரி.

(c) பதிவுக் கட்டணம் (Registration fees) போன்ற இதர கட்டணங்கள்.

தல வரிகள் (Local taxes):- இரு சக்கரவண்டி வரிகள் வழிச் சுங்கங்கள் (Tolls).

மோட்டார் போக்குவரத்தைச் சார்ந்த எல்லா வரிகளையும் நீக்கி விட்டு, மோட்டார் வண்டி வரி, பெட்ரோல் வரி என இரண்டு வரிகளை மட்டும் விதிக்கலாம் என 1950ஆம் வருடத்திய மோட்டார் வண்டிகள் விசாரணைக்குழு சிபாரிசு செய்தது. இந்தியா, சாலை ஊர்திகள் உற்பத்தித் தொழிலுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டுமெனவும் அக் குழு கூறியது. நம் நாட்டு மோட்டார் வண்டி வரி, உலகிலேயே மிகவும் அதிகமானது என்பதையும் அக் குழு எடுத்துக் காட்டியது.

ரயில் போக்குவரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சாலைப் போக்குவரத்துக்கு அதிகமாகச் செலவாவதைப் பின்வரும் உதாரணங்களோடு, அக் குழு எடுத்துக் காட்டியது. 1957ஆம் ஆண்டில் ஒரு மைல் தூரத்திற்கு ஒரு டன் பளுவை ரயில் எடுத்துச் செல்லச் சுமைகூலி (freight) போன்ற இதர கட்டணங்களோடு 11 பைசாவும், சாலைப் போக்குவரத்துமூலம் ஒரு மைல் தூரத்திற்கு ஒரு டன் பளுவை எடுத்துச் செல்ல வரி மட்டுமே 15 பைசாவாகவும் இருந்தது. இவ்வாறு ஒரு பொருளை ரயிலில் எடுத்துச் செல்ல ஆகும் மொத்தச் செலவைவிட, அதே பளுவுள்ள பொருளுக்குச் சாலைப்

போக்குவரத்தில் கொடுக்கப்படும் வரி மட்டுமே 4 பைசா அதிகமாக இருந்தது. வரிவிதிப்பை அதிகரிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாக, 1957-இல் இப் பளுவோடு மேலும் 2 பைசா சேர்க்கப்பட்டது.

மோட்டார்வண்டி வரியிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயை மாநிலங்களின் சாலை நிதிக்குக் (Road Funds) கொடுத்துவிட்டு, அந் நிதிக்குப் பொதுவாக வரி செலுத்துவோர் யாவரும் பணம் தரலாமென ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும், அக் குழு சிபாரிசு செய்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் இந் நிதி அமைக்கப்பட்டால், சாலைகளின் முன்னேற்றமும் பாதுகாப்பும், ஊக்குவிக்கப்பட்டு, அதன் விளைவாக மோட்டார் போக்குவரத்துச் செலவும் குறையும். மோட்டார்வண்டி வரிக்கென ஓர் அட்டவணை தயாரிக்கப்படவேண்டுமென்றும், அதன்படி ஒரு குறிப்பிட்ட வீதத்திற்குமேல் வரிவிதிப்பு போகக்கூடாதெனவும் அக் குழு சிபாரிசு செய்தது. செலவுகளும், வரிகளும் ஒரேமாதிரியாக இருந்தால் மாநிலங்களுக்கிடையே போக்குவரத்தும், வியாபாரமும் பெருகும் என்பது அவர்களது கருத்தாகும்.

வரிவிதிப்பு விசாரணைக்குழுவின் அறிக்கைக்குப் பின்னர் மேற் கூறிய யோசனைகள் மதிப்பிழந்தன. அக் குழு மோட்டார் வண்டிகள் விசாரணைக்குழுவின் இரு வரித் திட்டத்தைப் (Two-Tax Structure) பல காரணங்களுக்காக ஒப்புக் கொள்ளவில்லை. மோட்டார் வண்டிகள், அதன் பகுதிகள், பயணிகள், பொருள்கள் இவற்றின்மீதுள்ள தனி வரிகளை ஒழிக்க முடியாததன் காரணத்தை விளக்கி இவ்வகைப்பட்ட மோட்டார்வண்டிகள்மீது விதிக்கப்படும் பல்வகை வரிகள் இந்தியாவுக்குப் புதிதல்ல என்பதையும் அக் குழு எடுத்துக் கூறியது.[1] மோட்டார் வண்டி வரிவீதங்கள் ஓர் எல்லைக்கு அப்பால் போகக் கூடாது என்பதைப் பொறுத்து, அக் குழு அதன் யோசனைப்படி அமைக்கப்படவேண்டிய சர்வ மாநில வரி விதிப்பு ஆலோசனைக் குழுவிடம் (Inter State Taxation Council) அப் பொறுப்பையும், பளுவையும் ஒப்படைக்க வேண்டுமெனவும் கூறியது.

15·6 முத்திரை வரிகளும் பதிவு வரிகளும்(Stamp-duties and Registration Taxes):- சட்டத்தின்கீழ், மாற்று உண்டியல்கள் (Bills of Exchange) இன்ஷூரன்ஸ் பத்திரங்கள், பங்குச் சீட்டு மாற்றங்கள் (Transfer of Shares) போன்ற நீதி சம்பந்தமான பத்திரங்கள்மீது, பத்திரவரிகள் விதிக்கப்படலாம். அவைகள் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு, மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு, மாநிலங்களிலேயே வைத்துக் கொள்ளப்படுகின்றன.

[1] Taxation Enquiry Commission Report, part III, pp. 87&88.

உயர்நீதிமன்றத்தைத் (Supreme Court) தவிர, மற்ற எல்லா வழக்கு மன்றங்களிலும் (Courts), கட்டணங்களை விதித்து, வசூலிக்க மாநிலங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பத்திர வரியை, சட்ட சம்பந்தமான பத்திர வரி, சட்ட சம்பந்தமற்ற பத்திர வரி என இரு வகைகளாகப் பிரிக்கலாம். சட்ட சம்பந்தமான பத்திர வரியின்கீழ், வழக்குமன்றக் கட்டணங்கள் (Court Fees) வருகின்றன. வியாபார நடவடிக்கைகளில் பயன் படுத்தப்படும் பத்திரங்கள் சட்டசம்பந்தமற்ற பத்திரங்கள் ஆகும். அடிக்கடி மாற்றத்திற்கு ஆளாகிய 1899ஆம் ஆண்டு இந்தியப் பத்திரச் சட்டத்தின்படி சட்டசம்பந்தமற்ற பத்திர வரி வீதங்கள் மாற்றப் பட்டன. 1870ஆம் ஆண்டு வழக்குமன்றக் கட்டணச் சட்டம், அவ்வப்போது மாற்றப்பட்டு அதன்படி வழக்குமன்றக் கட்டண வீதங்கள் தீர்மானிக்கப்பட்டன.

நீதி இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்றும், அதற்காக வழக்குமன்றக் கட்டணங்கள் விதிக்கப்படக்கூடாதெனவும் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. அதாவது இதர முக்கிய சேவைகளைப் (services) போன்று நீதியும் மக்களுக்கு இலவசமாகக் கிடைக்க வேண்டும். ஆனால் வழக்குமன்றக் கட்டணங்கள் இல்லையெனில், அநாவசிய வழக்குகளுக்கு உற்சாகமூட்டியது போலாகும். ஆகவே வழக்குமன்றக் கட்டணங்களை நீதிக்குக் கொடுக்கும் விலையாகக் கருதாமல், வழக்குகளைத் தடுக்கும் வழி என எடுத்துக் கொள்வது நல்லது. வருவாய்களின் தேவை அதிகரித்ததாலும், இக் கட்டணங்களி லிருந்து கிடைக்கும் வருவாயைப் பெருக்கும் வழி எளிதாக இருந்த தாலும், மாநில அரசுகள் வழக்குமன்றக் கட்டண வீதங்களை உயர்த்தும்படி செய்தன.

பத்திரங்களைப் பதிவு செய்யும்போது, பதிவு வரிகள் விதிக்கப் படுகின்றன. அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டோரின் பாதுகாப்புக்காகவும், ஏய்ப்பு முறைகளைக் குறைப்பதற்காகவும், பத்திரங்களைப் பதிவு செய்தல் அவசியமாகும்.

முத்திரை வரிகளையும், பதிவு வரிகளையும் முற்றிலும் வரிகள் எனக் கூறிவிட முடியாது. அவைகளை விலை என்றும் கூறலாம். வரி என்றும் கூறலாம். ஏனெனில் ஒருவருக்காகச் செலவழிக்கப்படும் உழைப்பு அல்லது இன்னொருவர்மீது மாற்றப்படும் உரிமை இவற்றின்மீது அவ் வரி விதிக்கப்படுவதால், அதனுள் விலைமதிப்பு என்ற அம்சமும் அடங்கியுள்ளது. பதிவு இலாகாவும், நீதிமன்றங் களும் இலாப நஷ்டத்தின் அடிப்படையில் நடத்தப்படாததால்,

அவற்றுல் வசூலிக்கப்படும் கட்டணங்களே வரி எனக் கொள்வதும் சரி எனலாம்.

1963-'64ஆம் ஆண்டில், இவ்விரு வரிகளின்மூலம் மாநில அரசுகளுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 61·41 கோடிகளாகும். ஆனல் இவ்விரு கட்டணங்களும் நெகிழ்ச்சியற்ற வருவாய் ஆதாரங்களாகும். நம் நாட்டில் ஜமீந்தாரி ஒழிப்புக்குப் பின்னர், முத்திரைவரி வருவாய் பாதிக்கப்பட்டது. மொத்த வரி வருவாயில், இவ்விரு வரிகளின் மூலம் கிடைத்த வருவாய் 1951-'52-இல் 9% ஆக இருந்து 1962-'63-இல் 6·5% ஆகக் குறைந்தது. இதைப்பின்வரும் அட்டவணை (எண்-44)யிலிருந்து அறியலாம்.

அட்டவணை எண்: 44

மாநிலங்களின் மொத்த வரி வருவாயில், முத்திரை வரி, பதிவு வரியிலிருந்து கிடைத்த வருவாய் சதவீதம்.[1]

(Percentage of yield from Stamps and Registration to the total tax Revenue of all States)

ஆண்டு	1951-52-லிருந்து 1963-'64 வரை முத்திரைவரி, பதிவு வரிவருவாய் மொத்த வரிவருவாயில் %
1951-'52	9·9
1952-'53	8·5
1953-'54	8·3
1954-'55	8·0
1955-'56	8·0
1956-'57	8·0
1957-'58	7·0
1958-'59	6·5
1959-'60	6·5
1961-'62	7·0
1962-'63	6·5
1963-'64	6·4

[1]. Source:- Dr. Radhika Dass, Finances of the Indian Union Service 1947-1966, p. 229.

15.7. பொழுதுபோக்கு வரி அல்லது கேளிக்கை வரி (Entertainment Tax) :- கேளிக்கைகள், பந்தயம் கட்டுதல் (betting), சூதாட்டம் இவை அடங்கிய ஆடம்பர நடவடிக்கைகளின்மீது வரி விதிக்கும் உரிமையை, மாநிலங்களுக்கு இந்தியச் சட்டம் அளித்துள்ளது, எனவே, எல்லா மாநிலங்களும் பொழுதுபோக்கு வரி விதித்துள்ளன. இதன்படி திரைப்படங்கள் பெருமளவில் வருவாயை அளிக்கின்றன.

1953-'54ஆம் வருடத்திய வரி விசாரணைக்குழு, பொழுதுபோக்கு வரித் திட்டத்தை எளிதாக்க வேண்டுமானால், பொழுதுபோக்குகளைத் தொழில் சம்பந்தமான பொழுதுபோக்குகள், தொழில் சம்பந்தமற்ற பொழுதுபோக்குகள் என இரு வகைகளாகப் பிரிக்கவேண்டுமெனக் கூறியது. தொழில் சம்பந்தமற்ற பொழுதுபோக்குகளுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமெனவும் அக் குழு கூறியது. மேலும் விலக்குகளைப்பற்றித் தீர்மானிப்பதில் அரசாங்கத்திற்குத் துணையாக, முக்கியமாகச் சமூகநலவாதிகள் அடங்கிய, தொழில் சம்பந்தமற்ற (non-professional) சிறுசிறு ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டுமெனவும் அக் குழு சிபாரிசு செய்தது.

இந்தியாவில் பொழுபோக்கு வரிமூலம் கிடைத்த வருவாய் 1951-'52-இல் ரூ. 6·39 கோடிகளிலிருந்து 1952-'53-இல் ரூ. 6·14 கோடிகளாகக் குறைந்து பின்னர் 1953-'54-இல் ரூ. 5·85 கோடிகளாக ஆகியது. அதன் பிறகு சிறிதளவு அதிகரித்து 1954-'55-இல் ரூ. 6·22 கோடிகளாகியது. அதற்கடுத்த இரண்டாண்டுகளுக்கு மாறுதலேதுமின்றி இருந்து, 1957-'58-லிருந்து குறிப்பிடத்தக்க வகையில் இவ் வருவாய் அதிகரித்து வருவதைப் பின்வரும் அட்டவணை (எண்-45)யில் காணலாம்:—

பொதுமக்கள் திரைப்படங்களைப் பார்க்கும் பழக்கம் அதிகரித்தாலும், திரைப்படங்கள் பொழுதுபோக்குக்கு முக்கிய ஆதாரமாக இருப்பதாலும், அவ் வரி தற்போது மாநிலங்களில் முக்கியமான வருவாய் ஆதாரமாகவுள்ளது

மின்சார நுகர்வு வரிகளும், வேறு பல வரிகளும் (Duties on Consumption of Electricity and other Miscellaneous Cesses) :— குறிப்பிட்ட சில நுகர்வோர் (consumers) நுகரும் மின்சாரத்தின்மீது வரிவிதிக்கப்பட்டு அவை மாநில அரசுகளுக்குச் செலுத்தப் படுகின்றன அவ் வரி வீதங்களும், வரி விலக்குகளும், வசூலிக்கப்படும்

முறைகளும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. அது அந்தந்த மாநிலங்களில் நடைமுறையிலுள்ள மின்சார வரிச் சட்டங்களைப் பொறுத்ததாகும்.

வரிக்கு இலக்காவதற்கு, வெளிச்சம், சக்தி இவற்றைக் கொடுக்கும் மின்சாரம், மற்ற ஆதாரங்களைவிட மலிவாக இருப்பதைக் காட்டி மின்சாரநுகர்வு வரிவிதிப்பு சரியானது என்று கூறப்படுகிறது. நுகர்வோர்மீது அளவுக்கு மீறிய பளுவைச் சுமத்தாமல், ஒரு சிறு வரியே அரசாங்கத்திற்கு நல்ல வருவாயை ஈட்டித் தரலாம். மின்சார சக்திக்காக ஆன செலவு மொத்த உற்பத்திச் செலவில் சிறு பகுதியாக இருப்பின், தொழில்களுக்காக

அட்டவணை எண் 45

(பொழுபோக்கு வரி வருவாய் எல்லா மாநிலங்களிலும்)[1]

(Receipts from Entertainments Tax—All States)

ஆண்டு	வரி வருவாய் (ரூ. கோடிகளில்)
1951-'52	6·39
1952-'53	6·14
1953-'54	5·88
1954-'55	6·22
1955-'56	6·50
1956-'57	6·53
1957-'58	8·56
1958-'59	10·65
1959-'60	10·42
1961-'62	15·1
1962-'63	18·2
1963-'64	21·4
1964-'65	22·2

[1]Source :- Statement VIII and Reserve Bank of India Bulletin, May 1960.

உபயோகப்படுத்தப்படும் மின்சார சக்தியின் மீது வரிவிதிக்கப்படுவது நியாயமானதுதான் என வரிவிதிப்புவிசாரணைக்குழு கூறியது. உற்பத்திச் செலவில் மின்சார சக்திக்காக ஆன செலவு அதிகமானதாக இருந்தால் அதன்மீது குறைந்தவீத வரி விதிக்கலாமென அக் குழு கூறியது. சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் மிகக் குறைந்த வரி வீதங்களே சரியானது என அக் குழு கருதியது.

சில மாநிலங்கள் மட்டுமே இவ் வரியைப் புகுத்தியுள்ளன. வரி வீதங்கள் மாநிலத்திற்குமாநிலம் பெருமளவில் வேறுபடுகின்றன. உதாரணமாக, பம்பாய் நகரத்தில் 60% ஆகவும், தமிழ்நாட்டில் 6·3% ஆகவும் உள்ளது. உத்தரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களிலும் இவ் வரி நடைமுறையில் உள்ளது.

மாநிலங்களின் வரவுசெலவுத் திட்டத்தில், இதர வரிகள் என்ற தலைப்பின்கீழ், சில வரிகள் தொகுத்துக் கூறப்படுகின்றன. அவை புகையிலை வரிகள், பயணிகள், பொருள்கள்மீது வரி, பரிசுப் போட்டி, பந்தயம் கட்டுதல் (betting) இவற்றின்மீது வரி முதலானவையாகும். சில மாநிலங்களில் கரும்பு வரியும், சணல் வரியும் விதிக்கப்பட்டுள்ளன.

16. இந்தியாவில் தல நிதி

(Local Finance in India)

ஆங்கிலேயரது ஆட்சியின்கீழ், இந்தியாவில் தல சுயாட்சி (Local Self-Government) வரலாறு நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1882ஆம் ஆண்டில், இந்திய வைஸ்ராயாகப் (Viceroy) பணியாற்றிய, ரிப்பன் பிரபு தமது புகழ்பெற்ற தல சுயாட்சித் தீர்மானத்தை வெளியிட்டபோது, முதல் பிரிவு முடிவடைந்தது. இரண்டாவது பிரிவு, 1882ஆம் ஆண்டு முதல் 1919ஆம் ஆண்டுவரை நடந்த அபிவிருத்திகளைக் கொண்டதாயிருந்தது. 1919ஆம் ஆண்டில் தல சுயாட்சி, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினுல் ஓர் உரிமை மாற்றப்பட்ட விஷயமாக (Transferred Subject) ஆக்கப்பட்டது. மூன்றுவது பிரிவு 1935ஆம் ஆண்டுவரை நீடித்தது. 1935ஆம் ஆண்டில், மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட சுயாட்சி உரிமை (autonomy) தல சுயாட்சிக்கு ஊக்கத்தை அளித்தது. 1947ஆம் ஆண்டு, இந்தியா விடுதலை பெறும் வரை, நான்காவது பிரிவு நீடித்தது. இந் நீண்ட காலம் முழுவதும், நிருவாகத்தைப் பரவலாக்கவே (decentralisation) தல சுயாட்சி அலுவலகங்கள் ஏற்பட்டன. தல சுயாட்சி நிறுவனங்களை முக்கியமாக நகர்ப்புற, கிராமப்புற நிறுவனங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். நகர்ப்புற தல சுயாட்சி நிறுவனங்களில் நகராண்மைக்கழகங்களும் (Municipalties), கார்ப்பரேஷன்களும் முக்கியமானவையாகும். கிராம தல சுயாட்சி நிறுவனங்களில் மாவட்ட வாரியங்கள் முதல் (District Boards) கிராமப் பஞ்சாயத்துக்கள் (Village Panchayats) வரை அடங்கியுள்ளன.

இருப்பினும், பரம்பரையாக இருந்துவரும் நகராண்மைக்கழகங்களின் வேலைகளைச் செய்து, தல சுயாட்சியை நிலைநிறுத்துவதற்கும் தல நிதி (Local Finance) போதுமான அளவு பெருகவில்லை. 1925ஆம் ஆண்டு, மத்திய, மாநில அரசுகளின் நிதியுடன் தல நிதிப் பிரசினையைப் பற்றியும் இந்திய வரிவிதிப்பு விசாரணைக்குழு

(Indian Taxation Enquiry Commission) ஆராய்ந்து, பின்வரும் கருத்துக்களை வெளியிட்டது:-

"நாடு முழுவதிலும், தல சுயாட்சி நிறுவனங்களின் நிதி, அவைகள் ஆற்றவேண்டிய பணிகளுக்குப் போதாமலிருக்கின்றன. .....தல வரி விதிப்பைப் பொறுத்தவரை, அதன் தலா நிலைப்பாடு (incidence per head) இந்தியாவில், அமெரிக்காவில் உள்ளதில் $\frac{1}{15\frac{1}{2}}$ பாகமாகவும், இங்கிலாந்தின் வரிநிலைப்பாட்டில் $\frac{1}{12\frac{1}{4}}$ பாகமாகவும், ஜப்பான் நாட்டின் வரிநிலைப்பாட்டில் $\frac{1}{1\frac{1}{8}}$ பாகமாகவும், பிரான்சு நாட்டின் வரிநிலைப்பாட்டில் $\frac{1}{1\frac{1}{4}}$ பாகமாகவும், இத்தாலி நாட்டின் வரிநிலைப்பாட்டில் $\frac{1}{1\frac{1}{8}}$ பாகமாகவும் உள்ளது" ("The finances of local bodies all over the country are inadequate for the services which they have to perform ..... in this matter of local taxation the incidence per head of population in India is $\frac{1}{15\frac{1}{2}}$ of that in the United States of America, $\frac{1}{12\frac{1}{4}}$ of that in the United Kingdom, $\frac{1}{1\frac{1}{8}}$ of that in Japan, $\frac{1}{1\frac{1}{4}}$ of that in France and $\frac{1}{1\frac{1}{3}}$ of that in Italy")[1].

16·1. தல நிதியும், இந்திய அரசியல் அமைப்பும் (Local Finance and the Indian Constitution.):-இந்தியாவில் தலநிதியின் தொடக்கத்திற்கு 1947ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது ஒரு முக்கிய காரணமாகும். இந்தியாவில் தல ஆட்சி (Local Goverment), மாநில அரசுகளால் ஆரம்பிக்கப்பட்டதாகும். அரசியல் சட்ட திட்டத்தில் மாநில அட்டவணையில் (State list) அவை காணப் படுகின்றன. சட்டத்தின்படி, தல ஆட்சி என்பது, தல சுயாட்சியை நடத்தும் நகராண்மைக் கழகங்கள் (Municipalities), நகரசபைக் கார்ப்பரேஷன்கள், மாவட்ட வாரியங்கள் (District boards), பஞ்சாயத்துகள் இவற்றைக் குறிக்கும். மாநில அரசின் பணிகள், நிதிகள், ஆட்சிப் பணிகள், நிதிகள் இவற்றுக்கிடையே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட்டை, சட்டம் ஏற்படுத்தவில்லை. மாநிலத் தலத் தொடர்புகள் சட்டப்படி ஒன்றுகவேயுள்ளன. கூட்டாட்சி (Federal) முறையைச் சார்ந்த, மத்திய, மாநில அரசுகளின் தொடர்புகளுக்கு இவை மாறுகவுள்ளன. மாநிலங்களுக்கும், தல அதிகாரிகளுக்கும் இடையே நிதியையும், பணிகளையும் எவ்வாறு ஒப்படைப்பது என்பது, வரலாற்றின் அடிப்படையில் நிச்சயிக்கப் பட்டதாகும். மாநிலத்திற்குமாநிலம் தல நிதி வகை வேறுபடுகிறது. மாநில அரசு, தல சுயாட்சியை முன்னேற்றுவதற்காகப் பல்வேறு பணிகளை அவைகளிடம் ஒப்படைத்து, கீழ்ப்பட்ட (Below) நிலையிலிருந்து பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானவற்றை அளிப்பதைப் பொறுத்து, தல ஆட்சியின் மதிப்பு உள்ளது.

[1] Report of the Indian Taxation Enquiry Committee, 1925, p. 339-340.

மாநில அரசுகளுக்கப்பால், மத்திய அரசும் உள்ளது. கூட்டரசுகளில், இந்திய அரசு ஒன்றுதான் தல ஆட்சி நிறுவனங்களில் அதிக ஆர்வத்தைக் காட்டுகின்றது.[1] ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்பட ஆரம்பித்ததிலிருந்து நல்ல அறிவுரைகளும், பாதுகாப்புகளும் வழங்கி, மத்திய அரசு, தல ஆட்சி அதிகாரிகளை ஊக்குவித்து வருகிறது. மத்திய உடல்நல அமைச்சில் (Union Ministry of Health) நிறுவப்பட்டுள்ள தல முன்னேற்ற இலாகா, (Local Development Department) நகர்ப்புறத் தல ஆட்சிக்குரிய அகில இந்திய கொள்கைகளை வகைப்படுத்துகின்றது. 1954ஆம் ஆண்டில் அமைக்கப் பட்ட தல சுயாட்சியின் மத்தியக் குழுவின் செயல்களை வகைப் படுத்துவதும் அதன் பணியாகும். பஞ்சாயத்துக்களின் முன்னேற் றத்துக்காக அரசியல் சட்டதிட்டங்கள் வகுத்துள்ள வழிமுறைகளை, மத்திய அரசு மிக்க கவனத்துடன் பின்பற்றுகின்றது சமீப ஆண்டுகளாக, தல ஆட்சி நிறுவனங்களுக்கு உதவி நிதியளிக்கும் திட்டமொன்றை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது. மத்திய அரசுக்கும், தல நிதிக்கும் (Local Finance) உள்ள மற்றொரு தொடர்பு, தல வரி வருவாயின் ஆதாரமாகும். உதாரணமாக பயணம் முடியும்போது செலுத்தும் வரி (Terminal taxes) சட்டப்படி, மத்திய அரசுப் பட்டியலில் அடங்கியுள்ளது.

தல நிதி வெளியீடுகளைப் (Local Financial Issues) பற்றி ஆராய்வதற்கெனப் பின்வரும் குழுக்களை மத்திய அரசு அமைத்தது:-

1. தல நிதி விசாரணைக்குழு, 1951 (Local Finance Enquiry Committee)
2. வரிவிதிப்பு விசாரணைக்குழு, (1953-54)
3. சமுதாய நலத்திட்டங்கள், நாட்டு விஸ்தரிப்புப் பணிகள் இவற்றைப்பற்றிய ஆய்வுக்குழு.

   (The Team for the Study of Community Porjects and National Extension Service, 1957.)
4. பஞ்சாயத்து ராஜ் நிதிபற்றிய ஆய்வுக்குழு, 1963
   (The Study Team on Panchayat Raj Finances.)
5. கிராம, நகரத் தொடர்க்குழு, 1963
   (Rural Urban Relationships Committee.)
6. நகர்ப்புறத் தல ஆட்சி நிறுவன நிதி வளர்ச்சிக்குழு, 1963 (Committee on Augmentation of Financial Resources of Urban Local bodies, 1963.)

[1] Hicks:- V.K. Development from below (Oxford, 1961, p. 151)

16.2 **தல நிதி விசாரணைக் குழுவின் அறிக்கை** (1961) (Local Finance Enquiry Committee Report, 1951.)- வளரும் பொருளாதார அமைப்பொன்றில், தல நிதியின் பங்கினைப்பற்றிய உணர்வினை முதன்முதலில் உருவாக்கியது 1949 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அகில இந்தியத் தல நிதி விசாரணைக் குழுவேயாகும். அக் குழுவின் பணிகள் பின்வருவனவாம்:-

1. தல ஆட்சி நிறுவனங்களின் நிதிபற்றி விசாரணை செய்து, அதன் முன்னேற்றத்துக்காகப் பரிந்துரைக்க,
2. தல ஆட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்து முடிக்க அவைகளிடம் உள்ள நிதி போதுமா எனப் பரிசீலித்து, எத்தகைய வருவாய்களை மேலும் அளிக்கலாம் என்பதைத் தீர்மானிக்க,
3. தல ஆட்சி நிறுவனங்களுக்கு அரசாங்கம் உதவும் முறைகளைப் பரிசீலிக்க,
4. நடைமுறையில் உள்ள வரிவிதிப்பு முறைகள், வரிவசூல் முறைகள் ஆகியவற்றைப் பரிசீலிக்க.

1951 ஆம் ஆண்டில் வெளியான இக் குழுவின் அறிக்கையில் தல ஆட்சி நிறுவனங்களின் நிதி வசதி போதுமானதாக இல்லை எனக் காணப்பட்டது. பின்வரும் அட்டவணை (எண்-46) யில் காட்டப் பட்டுள்ளபடி, 1946-'47 ஆம் ஆண்டில் மக்களின் தலா வருவாயும், தல வரி விதிப்பின் நிலைப்பாடும் (Incidence), நாடு சுதந்திரம் பெற்ற போது, தல நிதியின் ஆபத்தான நிலையைப்பற்றி அறிவிக்கின்றன. எல்லாத் தல நிறுவனங்களையும் ஒன்றாக எடுத்துக் கொண்டால், மக்களின் தலா வரிவிதிப்பு ரூ. 1-0-11 என மிகக் குறைவாக இருப்பதை அறிகிறோம். எல்லா வழிகளிலும் வந்த வருவாயைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், நிலைப்பாடு சற்றே அதிகமாக, அதாவது, ரூ. 1-13-1 ஆக இருப்பதைக் காணலாம். தலா வருவாய் ரூ. 228 ஆக இருக்கும்போது, தல வரிவிதிப்பின் நிலைப்பாடு, தலா நாட்டுவருவாயில் 1/2 சதவீதத்தைவிடக் குறைவாகவுள்ளதை காணலாம்.

தல நிதியின் பற்றாக்குறையைத் தீர்க்க, தல நிதி விசாரணைக் குழு, எல்லா மாநிலங்களிலும் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதற் கேற்ப, கீழ்க்கண்ட வருவாய் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயைத் தல ஆட்சிக்கு மட்டுமே கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமெனக் கூறியது.[1]

மத்திய அரசுப் பட்டியல் (Union list)

1. ரயில், கடல் அல்லது ஆகாயம் மூலமாக எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் அல்லது பிரயாணிகள்மீது விதிக்கப்படும் பயணத்தின் முடிவில் செலுத்தும் வரிகள் (Terminal taxes).

[1] Report of the Local Finance Enquiry Committee, Govt of India pp. 61-62.

அட்டவணை எண் 46

மொத்த மக்கள்தொகை, மொத்த வருவாய், தலா வரி நிர்ணப்பாடு (நகராண்மைக் கழகங்கள், கார்ப்பரேஷன்கள், மாநில வாரியங்கள் ஆகியவற்றில் 1946-'47 ஆம் ஆண்டில்)

தல ஆட்சி நிறுவன வகை	எண்	மக்கள் தொகை	எல்லா வழிகளிலிருந்தும் மொத்த வருவாய்	வரி விதிப்பு வருவாய்		தலா வரி நிர்ணப்பாடு	
				தொகை	மொத்த வருவாயில் சதவீதம்	எல்லா வழிகளிலும் மொத்த வருவாய்	வரி விதிப்பு வருவாய்
			ரூ.	ரூ.		ரூ-அ-பை	ரூ-அ-பை
(1) நகர முனிசிபல் கார்ப்பரேஷன்கள்	3	4,755,547	123,521,810	89,242,505	72·24	25—15—7	18—0—0
(2) நகராண்மைக் கழகங்கள்	628	21,946,887	151,819,055	104,094,627	68·56	6—14—7	4—11—10
(3) மாநில வாரியங்கள்	176	204,522,250	155,531,309	52,228,921	33·58	0—12—2	0—4—1
		231,224,684	430,872,174	245,566,053	56 99	1—13—1	1—0—11

Source:- Report of the Local Finance Enquiry Committee, 1957, p, 38.

மாநில அரசுப்பட்டியல் :-

2. நிலங்கள், கட்டடங்கள்மீது விதிக்கப்பட்ட வரிகள்.
3. தாதுப் பொருள் உரிமைகள்மீது வரிகள்.
4. நுகர்வு (Consumption), உபயோகம் (Use), விற்பனை ஆகியவற்றுக்காகத் தலத்துக்குக் கொண்டுவரப்பட்ட பொருள்கள்மீது வரிகள்.
5. மின்சார விற்பனை அல்லது நுகர்வுக்கான மின்சாரத்தின்மீது விதிக்கப்பட்ட வரிகள்.
6. செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்களைத் தவிர, பிற விளம்பரங்கள்மீது வரிகள்.
7. சாலைகள், உள்நாட்டு வாய்க்கால்கள் இவற்றின் வழியே பயணம் செய்யும் பயணிகள், அனுப்பப்படும் பொருள்கள் ஆகியவற்றின்மீது வரிகள்.
8. இயந்திர மூலமாக இழுக்கப்படும் வண்டிகளைத் தவிர, பிற வண்டிகள்மீது வரிகள்.
9. மிருகங்கள், படகுகள் ஆகியவற்றின்மீது வரிகள்.
10. சுங்கவரிகள் (Tolls).
11. உத்தியோக வரி, வியாபார வரி, உச்சவரம்பு வரி (Taxes on Ceilings), வேலைநியமனவரி
12. நபர்வரி விதிப்பு (Capitation taxes)
13. கேளிக்கை வரி (Entertainments taxes).

16 3 வரிவிதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கை (1953-'54):- இக் குழு, தல ஆட்சி நிறுவனங்களின் நிதியை, நாட்டின் முழு வரி விதிப்பின் ஒரு பகுதியாகக் கருதியது. நாட்டுத் திட்டங்கள் நடை பெறும்போது, நகர்ப்புற, கிராமப்புறத் தல ஆட்சி நிறுவனங்களின் கூட்டுறவு அவசியமென இக் குழு கருதியது. இவ்வெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டால், செய்யவேண்டிய வேலை இரு வகைப் பட்டது எனக் குழு நினைத்தது. அவையாவன :- (1) கிராமப் பகுதி முழுவதும், தகுந்த சுயாட்சியை ஏற்படுத்துவதற்கானவற்றைச் செய்யும் பிரசினை. (2) கிராம, நகர்ப்புறங்களில் அவ்வப்போது அவைகளிடம் ஒப்புடைக்கப்பட்ட வேலைகளைச் செய்வதற்கான நிதியை அளிக்கும் பிரசினை.

வரிவிதிப்பு விசாரணைக்குழு, தலவரிவிதிப்பைப் பற்றிய (Local Txaation) புள்ளிவிவரங்களை (data) விரிவாக வெளியிட்டது. 1952-'53 ஆம் ஆண்டுக்கான இப் புள்ளி விவரங்கள் ஆராய்ச்சியாளர் வேத். பி காந்தி (Ved.P. Gandhi) என்பவரால் தொகுக்கப்பட்டன. அதிலிருந்து, விவசாயப்பகுதிகள், விவசாயம் நீங்கலான பிற்பகுதிகள்

ஆகியவற்றிற்கான தல வரிவிதிப்பின், தலா நிலைப்பாடு (Percapita Incidence) மதிப்பிடப்பட்டது.

1952-'53ஆம் ஆண்டில், விவசாயத் துறையினர் மத்திய, மாநில வரிக்கெனத் தலா ரூ. 8·4-உம், தலவரிக்கெனத் தலா ரூ. 0·6-உம் செலுத்தினர். அதே வருடத்தில், விவசாயம் நீங்கலாக இதர பிரிவினர், அதாவது நகர்ப்புறத்தினர், மத்திய, மாநில வரிக்கெனத் தலா ரூ. 37·6-உம், தல வரிக்கெனத் தலா ரூ. 3·4-உம் செலுத்தினர். வரி விசாரணைக் குழுவின் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்ட, 1952-'53ஆம் ஆண்டுக்கான தல வரி நிலைப்பாட்டைப் பின்வரும் அட்டவணை (எண்-47)யில் காணலாம்.

அட்டவணை எண் ; 47

இந்தியாவில் தல வரி விதிப்பின் நிலைப்பாடு (1952-53)
(Incidence of Local Taxation in India, 1952-'53)

(ரூ. கோடியில்)

தலஆட்சி நிறுவன வகைகள்	விவசாயத்துறை	விவசாயத்துறை நீங்கலாக இதர துறைகள்
கிராமப்பஞ்சாயத்துகள்	2·65	
மாவட்ட, தல வாரியங்கள் (District and Local Boards)	10·50	
நகராண்மைக் கழகங்கள் (Municipalities)	1·10	21·50
கார்ப்பரேஷன்கள்	0·90	17·60
மொத்தம்	15·15	39·10
தலாவரி நிலைப்பாடு	ரூ. 0·60	ரூ. 3·40

பின்வரும் வரிகளைத் தல ஆட்சி நிறுவனங்களின் உபயோகத்துக்கு மட்டுமே ஒதுக்க வேண்டுமென வரிவிதிப்பு விசாரணைக்குழு பரிந்துரைத்தது.

[1]. Source:- Ved. P. Gandhi Tax Burden on Indian Agriculture, Harward Law School, 1966-p. 93.

(1) நில வரிகள், கட்டட வரிகள்.

(2) நுகர்வு(Consumption), உபயோகம், விற்பனை ஆகியவற்றுக்காகத் தலத்துக்குள் கொண்டுவரப்பட்ட பொருள்கள்மீது வரிகள்.

(3) இயந்திரங்களால் ஓட்டப்படாத வண்டிகள்மீது வரிகள்.

(4) மிருகங்கள், படகுகள் ஆகியவற்றின்மீது வரிகள்.

(5) வியாபார வரி, உத்தியோக வரி, வேலை நியமன வரி.

(6) செய்தித்தாள்களைத் தவிர வேறு இடங்களில் செய்யப்படும் விளம்பரங்கள்மீது வரிகள்.

மேற்கண்ட ஆறு வரிகளோடு சினிமா கொட்டகை வரி (Theatre Tax), சொத்துரிமை மாற்று வரி (Duty on Transfer of Property) ஆகிய வேறு இரண்டு வரிகளையும், தல வரி விதிப்புக்கு ஏற்றவையென வரிவிதிப்புக் குழு பரிந்துரைத்தது.

16.4 இந்தியாவில் வளர்ச்சித் திட்டமும், தல நிதியும் (Developmental Planning and Local Finance in India):- தல நிதி விசாரணைக் குழு (Local Finance Enquiry Committee), வரிவிதிப்பு விசாரணைக்குழு (Taxation Enquiry Commission) ஆகியவற்றின் இரண்டு சிறப்பு அறிக்கைகளுக்குப் பின்னர், ஏறக்குறைய பத்தாண்டுகளுக்குத் திட்டம் (Planning) தல நிதியைப் பற்றி அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-'56), தல நிறுவனங்களுக்கென (Local bodies) நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், இதைச் சரிப்படுத்தும் வகையில், தண்ணீர் அளிப்பு (Water Supply), குடிசை சீரமைப்பு (Slum Clearance) இவற்றுக்கான புதிய முயற்சிகள் சேர்க்கப்பட்டன.

இந்தியா விடுதலைபெற்ற பின்னர், தல முன்னேற்றத்துக்காக, கிராம வளர்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சிகள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தோன்றின. கிராம வளர்ச்சித் திட்டத்தின் கொள்கையாவது, தாழ்ந்த நிலையிலிருந்து முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதே. இத் திட்டத்திற்கேற்ப, பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான அரசியல் நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பும் தேவை எனக் கூறப்பட்டது. 1951ஆம் ஆண்டில், ஒவ்வொன்றிலும் 100 கிராமங்களைக் கொண்ட மூன்று பிரிவுகளில், 55 திட்டங்களைக் கொண்ட தலைமைத் திட்டமொன்று முதன்முதலாகத் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும், பின்வரும் முன்னேற்ற வேலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவையாவன: (1) விவசாயமும் கால்நடைப் பராமரிப்பும்

(Agriculture and Animal Husbandry), (2) தொடர்பு வசதிகள் (Communications) (3) கல்வி. (4) ஆரோக்கியம் (Health (5) குடிசைத் தொழில்கள் (Village Industries) (6) வீடுகட்டுதல் (Housing) (7) சமுதாயக் கல்வியும் (Social Education), கிராம வாழ்க்கையும் (8) கூட்டுறவு (Co-operation).

நாடு முழுவதும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களைப் பரப்ப முடியாததன் விளைவாக, அதைவிட எளிமையான, தேசிய வளர்ச்சித் திட்டங்கள் (National Extension Programmes) மூன்றாண்டுகளுக்குப் பின்னர், பின்பற்றப்பட்டன. இவற்றின் செலவு, வரவுசெலவுத் திட்டத்தில் சற்றுக் குறைவாகவே இருந்தது. இருப்பினும், 1964-'65ஆம் ஆண்டுக்குள்ளாக, நாடு முழுவதிலும், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் (Community Development Programmes) பரவின. இத் திட்டங்கள்மீது மேன்மேலும் குறை கூறப்பட்டது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி அரசாங்கத்திடமிருந்தும், மக்களிடமிருந்தும் திரட்டப்படுகிறது. ஆனால் நாளுக்குநாள் இந் நிதியில் மக்களின் பங்கு குறைந்து கொண்டே வருகிறது.

16·5 சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நாட்டு விஸ்தரிப்புத் திட்டங்கள் பற்றிய தேர்வுக்குழுவின் அறிக்கை, 1957. (Report of the Study Team on Community Projects and National Extension Service, 1957):- 1957 ஆம் ஆண்டில், காலஞ்சென்ற பல்வந்த் ராய் மேதா (Balvant Rai Mehta) என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்ட இக் குழு, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நாட்டு விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றின் திறமையைப் பற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்தியாவின் தலநிதி, பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் மேதாவின் அறிக்கை மிக முக்கிய மானதாகும். சமுதாய வளர்ச்சி இயக்கம் (Community Development) ஓர் அலுவலக இயக்கமாக (Official Movement) மாறிவிட்ட தாகவும், நடைமுறையில் அது உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அவ்வறிக்கை எடுத்துக் காட்டியது. ஆகவே, சமுதாய வளர்ச்சித் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்து வதற்காகத் தகுந்த சுயாட்சிப் பகுதிகளை ஏற்படுத்துவது அவசிய மென அறிக்கையில் கூறப்பட்டது. அதாவது, மேதாவின் அறிக்கை (Mehta's Report) பஞ்சாயத்துகளின் வளர்ச்சிக்கே பரிந்துரைத்த தெனலாம். இவ்வாறு, கிராமத்தில் பஞ்சாயத்துகள், தாலுகாவில் பஞ்சாயத்துச் சமீதிகள் (Panchayat Samitis), மாவட்டங்களில் "ஜில்லா பரிஷத்துகள்" இவைகளோடு கூடிய ஒரு மூன்றடுக்கு சுயாட்சிமுறை (Three tier pattern) அமைக்கப்பட வேண்டுமெனவும்

1. Report of the Team for The Study of Community Development Projects and National Extension Service, Vol. I, p. 5.

அவ்வறிக்கை கூறியது. இத் திட்டத்தின்கீழ், வளர்ச்சிக்கு ஆதாரமான பகுதி கிராம மக்கள் யாவராலும் தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளேயாகும். அந்தந்த கிராமத்திற்குட்பட்ட இடங்களில் சமுதாய வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகளை நிறைவேற்றும் அதிகாரம் இப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்பட்டன. கிராம பஞ்சாயத்துகளின் தலைவர்களால் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துச் சமிதி, அப் பகுதி முழுவதற்குமான திட்டங்களை உருவாக்கும் முக்கிய உறுப்பாகும். அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் (allotments) உட்பட சமுதாய வளர்ச்சித் திட்டத்துக்கான இதர வருவாய்ச் சாதனங்கள் (resources) முழுவதும், இதற்குச் சொந்தமாக்கப்பட்டன. பாராளுமன்ற அங்கத்தினர், அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துச் சமிதிகளின் தலைவர்கள் இவர்கள் அடங்கியதே, மாவட்டங்களிலுள்ள ''ஜில்லா பரிஷத்துகளாகும்'' (Zilla Parishads). இந்த ஜில்லா பரிஷத்தின் தலைவர் அம் மாவட்ட (District Collector) ஆவார். மாவட்டத்திற்குள், பஞ்சாயத்துச் சமிதிகளின் பணிகளைப் பார்வையிட்டு, ஒன்று படுத்துதல் பரிஷத்தின் வேலையாகும்,

1959 ஆம் ஆண்டில், பஞ்சாயத்து ஆட்சியினை (Panchyat Raj) முதன்முதலாக நடைமுறையில் புகுத்தியது இராஜஸ்தானுகும். 1966 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக அநேகமாக எல்லா மாநிலங்களிலும் இவ்வாட்சி புகுத்தப்பட்டது.

16·6 பஞ்சாயத்து நிதிகள் (Panchayat Finances):- வரிகள், இதர கட்டணங்கள் ஆகியவற்றோடு சொத்துகள், முதலீடுகள், நிறுவனங்கள் இவற்றிலிருந்து பெறும் வருமானம், அரசாங்கத்திட மிருந்து பெறும் நன்கொடையும், கடன்களும், மக்களின் நன்கொடைகள் இவையும் பஞ்சாயத்துகளின் வருமானமாகும்.

மாநிலங்களின் சட்டங்களுக்கேற்ப, பஞ்சாயத்து ஆட்சியின் வெவ்வேறு பகுதியினால் விதிக்கப்படும் வரிகள், கட்டணங்கள் ஆகியவை பின்வருமாறு:-

1. வீட்டுவரி.
2. தொழில்வரி.
3. சொத்து மாற்று வரி.
4. வண்டி வரி.
5. விவசாய நில வரி.
6. யாத்திரிகர்கள் வரி.
7. சந்தை, விழா, கேளிக்கை இவற்றின்மீது வரிகள்.

8. சுகாதார வரி.
9. வடிகால் திட்ட வரி (Drainage Tax)
10. மின்சார வரி.
11. தோணித்துறை வரி (Tax on Ferries)
12. குறித்தகால வரி (Terminal Tax)
13. தண்ணீர் வரி.
14. மரங்களின்மீது வரி (Timber Tax)
15. எண்ணெய் இயந்திர வரி (Oil Engine Tax)
16. கால்நடைச் சந்தை வரி.
17. விற்பனைக்கான மிருகங்கள்மீது வரி.
18. தீயிலிருந்து பாதுகாப்பு வரி.
19. சினிமாக் கொட்டகை உரிமையாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வரி.
20. கிராமத்தில் விற்கப்படும் பொருள்கள்மீது வரி.
21. நிலவரி (Land Cess)
22. வியாபாரத்திற்கு உதவும் தானியங்கள்மீது வரி.
23. சொத்து வரி.
24. மீன் பிடிக்கும் தொழில் மீது வரி.
25. விவசாயத்திற்குரிய நிலம் வீணுகக்கிடந்தால் அதன்மீது வரி.
26. உழைப்பு வரி (Labour Tax).
27. நிலவரிமீது கூடுதல் வரி (Surcharge on Land cess)
28. கேளிக்கை வரிமீது கூடுதல் வரி.

16 7 மாநிலச் சட்டதிட்டங்களுக்கேற்ப, பஞ்சாயத்து ஆட்சியின் வெவ்வேறு பிரிவுகளால் விதிக்கப்படும் கட்டணங்கள் (Fees leviable by different tiers of Panchayat Raj under the Acts of the state) பின்வருமாறு:—

1. அத்துமீறி நுழையும் கால்நடைமீது வரி (Fees under Cattle Trespass Act)
2. புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்.
3. கிராமங்கள் வியாபாரத்திற்கு உதவும் தானியங்களைக் கொண்டு வந்து விற்பதற்கான கட்டணங்கள்.

4. பஞ்சாயத்துகளின் அதிகாரத்திற்குட்பட்ட கட்டடங்களைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்கள்.

5. விற்பனைக்குக் கொண்டுவரப்பட்ட மிருகங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள்.

6. சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பொருள்களுக்காகச் செலுத்தப்படும் கட்டணங்கள்.

7. வண்டிகள் நிற்குமிடத்துக்கான கட்டணங்கள்.

8. பேருந்துகள் (Buses) நிற்குமிடத்துக்கான கட்டணங்கள்.

9. பஞ்சாயத்து நிலங்களில் கால்நடைகளை மேய்ப்பதற்கான கட்டணங்கள்.

10. குடிசைகளுக்கான கட்டணங்கள்.

11. தோல்களைச் சேகரிப்பதற்காகச் செலுத்தும் கட்டணங்கள்.

12. சிற்றுண்டி நிறுவனங்கள், தங்குமிடங்கள் இவற்றைத் தொடங்கும்போது செலுத்த வேண்டிய உரிமக் கட்டணங்கள்.

13. கட்டடங்களைக் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் மீது கட்டணங்கள்.

14. ஆட்டுத்தொட்டிகளைப் (Slaughter Houses) பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்.

15. தரகர்களின் உரிமக் கட்டணங்கள்.

16. வாகனங்களைப் (Vehicles) பதிவு செய்யக் கட்டணங்கள்.

17. சட்ட விரோதமானதும், அபாயகரமானதுமான உரிமையாளர்கள், வியாபாரங்கள் இவற்றின்மீது விதிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள்.

18. தொழிற்சாலைகளை நிறுவும் அனுமதியைப்பெற கட்டணங்கள்.

19. சினிமாக் கொட்டகைச் சொந்தக்காரர்கள் கட்டவேண்டிய உரிமக் கட்டணங்கள்.

20. யாத்திரிகர்கள் செல்லும் இடங்களில், சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான கட்டணங்கள்.

21. புதிய பாலங்களின்மீது சுங்க வரிகள்.

22. பொது இடங்களில் தற்காலிகமான கட்டடங்களை (Constructions) நிறுவுவதற்கான கட்டணங்கள்.

23. கிராமப் பகுதிகளின் உபயோகத்திற்கான கட்டணங்கள்.

24. சாக்கடைகளைச் (Cesspools) சுத்தப்படுத்துவதற்கான கட்டணங்கள்.

16·8 பஞ்சாயத்து ஆட்சி நிதிபற்றிய ஆய்வுக்குழு (Study Team on Panchayat Raj Finances) :- வளர்ச்சிக்கான பணிகள் அதிகமாக ஆக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் பளு அதிகமானதால், அவற்றுக்குப் போதுமான நிதி அளிக்கப்பட வேண்டிய பிரசினை முதலிடம் பெற்றுள்ளது.

எனவே, 1962ஆம் ஆண்டில், திரு. கே. சந்தானம் அவர்களது தலைமையில், பஞ்சாயத்து ஆட்சி நிதி பற்றிய ஆய்வுக்குழு நியமிக்கப் பட்டது. கீழ் நிலையிலிருந்து (from below) பொருளாதார வளர்ச்சி யைப் பெருக்குவதற்காகப் பஞ்சாயத்து நிதியினை அதிகரிக்க வேண்டு மென அக் குழு பரிந்துரைத்தது. எல்லா மாநிலங்களிலும், பஞ்சா யத்துகள் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி (Vehicle Tax) இவற் றைக் கட்டாயமாக விதிக்க வேண்டுமென அக் குழு கூறியது. நில வரி, முத்திரை வரிக்கான கூடுதல் வரி, கேளிக்கை வரிக்கான கூடுதல் வரி இவற்றின் வருவாயில் ஒரு பங்கு பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட வேண்டுமெனவும், அக் குழு கூறியது. முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னேற்ற வரிகள்(rates) விதிக்கப் பஞ்சாயத்து களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கப் பட்டது. எல்லாப் பொது நிலங்கள், குட்டைகள், மரங்கள், மீன் பிடிக்கும் உரிமை பெற்ற குளங்கள் ஆகியவை பஞ்சாயத்துக்கு வருமானமளிப்பவையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத் துக்கும், குறைந்தபட்சத் தலா பாதுகாப்புத் தொகையாக ரூ. 1 கொடுக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து வரிகளை விதித்து வசூலிப்பதை ஊக்குவிப்பதற்கென, உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்துச் சமிதிகளைப் பொறுத்தவரை, நிறுவனத்தைப் (Staff) பாதுகாப்பதற்கென, ஆண்டுத் தலா வருவாயாக ஒரு ரூபாய் உதவித் தொகையை, ஒவ்வொரு சமிதிக்கும் கொடுக்க வேண்டுமென, ஓர் உடன்படிக்கையின்பேரில் இந்த ஆய்வுக்குழு சிபாரிசு செய்தது. இவ்வுதவிக்காகச் செலவாகும் தொகையினை மத்திய அரசும், மாநில அரசுகளும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். மேலும், ஆரம்பக்கல்வி, பஞ்சாயத்துச் சமிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, செலவு முழுவதும் மாநில அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டு மெனவும் அக் குழு கூறியது. பஞ்சாயத்து ஆட்சி உறுப்புகளுக்கான

கடன் கொள்கையை ஆதரித்து அக் குழு பரிந்துரைத்தது. மத்திய அரசு, மாநில அரசுகள், ரிசர்வ் பாங்கு, கூட்டுறவு பாங்குகள் இவற்றுல் அளிக்கப்படும், ஒரு கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை, அங்கீகரிக்கப்பட்ட (authorised) முதலாகக் கொண்ட, பஞ்சாயத்து ராஜ் நிதிக் கார்ப்பரேஷன்களை ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்க வேண்டுமெனவும் அது பரிந்துரைத்தது. இக் கார்ப்பரேஷன், இலாபத்தை ஈட்டும் திட்டங்களைத் தொடங்க, பஞ்சாயத்து ஆட்சியின் உறுப்புகளுக்குக் கடன் உதவியளிக்கும்.

மத்திய, மாநில அரசுகளின் உதவித் தொகைகள், தலத்திலேயே சேகரிக்கப்படும் வருவாய் ஆகியவற்றை ஒன்று சேர்த்து, பஞ்சாயத்து வளர்ச்சிக்கென ஒரு திட்டமிடப்பட்ட வரவு செலவுக் கணக்கினைத் (Budget) தமிழ் நாட்டில் தொடங்கியுள்ளது போல், இதர மாநிலங்களிலும் தொடங்க வேண்டுமெனவும் இக் குழு பரிந்துரைத்தது.

இந்த ஆய்வுக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பான்மையானவை, மாநிலங்களால் வெவ்வேறு சமயங்களில் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. பெரும்பான்மையான பஞ்சாயத்துக்களில் தலா வரி வருவாய், ஒரு ரூபாய்க்கும் குறைவாகவே இருந்தது. பஞ்சாயத்துச் சமிதிகளில் இது 4 ரூபாயாக இருந்தது. இங்கிலாந்திலும், இதர நாடுகள் சிலவற்றிலும், இத்தகைய தலா வருவாய் ரூ. 50-க்கு மேல் ரூ. 100-க்குள்ளாக உள்ளது.[1]

மேற்கூறிய பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டால், பஞ்சாயத்துக்களின் தலா வருவாய் ரூ. 7 ஆகவும், பஞ்சாயத்துச் சமிதிகளின் தலா வருவாய் ரூ. 11 ஆகவும் உயருமென இக் குழு உறுதியளித்தது.

16·9 நகர்ப்புற தல உறுப்புகளின் நிதி (Finances of Urban Local Bodies):— இவ்வுறுப்புகளின் நிதி வருவாய்ச் சாதனங்களைப் பெருக்க, 1962ஆம் ஆண்டில் இந்திய அரசு, அதிக அதிகாரமுள்ள குழு ஒன்றினை, ஆலோசனை கூறுவதற்கென நியமித்தது. அக் குழுவின் முக்கிய பரிந்துரைகள் பின்வருவனவாகும்:-

பரந்த முன்னேற்றத்திட்டமொன்றினை உருவாக்கி, அதன்கீழ் நகர்ப்புற வளர்ச்சிக்கான எல்லாத் திட்டங்களையும் ஒன்று சேர்த்து, இணைந்தமுறையில் அவற்றினைச் செயற்படுத்த வேண்டும். முக்கியத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுவதற்கேற்ப ஒவ்வொரு தல உறுப்பும் (Local Body) ஐந்தாண்டு நகர

1. Report of The Study Team on Panchayat Raj Finances, 1963, Part I p. 20,

முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். இத் திட்டம், தல உறுப்பு தனது சொந்த வருவாயிலிருந்து எவ்வளவு தொகையளிக்க வேண்டும் என்பதையும், மத்திய, மாநில அரசுகளின் உதவி எல்லை எது என்பதையும் மதிப்பிட வேண்டும்.

வரவுக்கும், செலவுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைச் சரிக் கட்டுவதற்காக, வருவாய்ச் சாதனங்களை அதிகரிக்க வேண்டுமென்ற விருப்பத்தை அக் குழு வெளியிட்டது. இவ் வித்தியாசத்தைச் சரிக் கட்டுவதற்காக, ஏற்கெனவேயுள்ள வருவாய்ச் சாதனங்களை முன்னை விடச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமெனவும் சில மாநில வருவாய்களை இவற்றுக்கென ஒதுக்க வேண்டுமெனவும் உதவித் தொகைகளும், இதர வருவாய்களும் அளிக்கப்பட வேண்டுமெனவும் அக் குழு ஆலோசனை கூறியது. ஏற்கெனவேயுள்ள வருவாய்ச் சாதனங்களைச் சரிவரப் பயன்படுத்துதல் என்பது முன்பே நடை முறையிலுள்ள சொத்துவரி, (Property Tax) தொழில் வரி ஆகியவற் றைச் சீரமைத்து, வரிவசூலின் சதவீதத்தை அதிகரித்தலாகும். வரி வருவாய்களின் ஒதுக்கீடு (assignment) என்பது, நகர்ப்புற தல உறுப்பு களுக்காக (Urban Local Bodies) கேளிக்கை வரி வருவாயில் குறைந்த பட்சம் 25% ஆவது ஒதுக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. இச் சதவீதம் நாளுக்குநாள் அதிகரிக்கப்பட்டு 100%க்கு உயர்த்தப்பட வேண்டும். சினிமாக் கொட்டகைவரி (Theatre Tax), கேளிக்கைவரி (Entertainment Tax), காட்சி வரி (Show Tax), இவற்றின்மீது விதிக்கப்படும் கூடுதல்வரி (Surcharge) மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் இத் தல உறுப்புகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். மோட்டார் வண்டிவரி (Motor Vehicles Tax) வருவாயில் குறைந்த பட்சம் 25% ஆவது, தல உறுப்புகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். மாநிலங்களிலுள்ள வெவ்வேறு வகைப்பட்ட தல உறுப்புகளுக்கு ஏற்ப, ஒவ்வொரு மாநிலமும் அதற்குரிய உதவிமான்யச் சட்டத்தை (Code of grants-in-aid) அமைத்துக் கொள்ள வேண்டுமெனவும் அக் குழு பரிந்துரைத்தது. பிரயாணிகள்மீதும், பொருள்களின்மீதும் விதிக்கப்பட்ட பயண முடிவில் செலுத்தும்வரி (Terminal Tax), இடம் பெயரும் மக்கள்மீது வரி, நகர்ப்புற தல வரி, மின்சார உபயோகத் திற்கான கூடுதல் வரி ஆகியவை இக் குழுவினால் கூறப்பட்ட புதிய வருவாய்ச் சாதனங்களாகும்.

17. மத்திய-மாநில அரசுகளின் நிதித் தொடர்பு
(Central-State Financial Relations)

கூட்டரசு அமைப்பில் மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பு ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்திய அரசியல் நிருணயச் சட்டபடி, மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிதி வருவாய்ப் பங்கீட்டு முறை, நடைமுறையில் பெரும்பாலும் மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதாகவேயுள்ளது. ஆகவே, மாநிலங்களின் வருவாயை அதிகரிக்கவும், மாநிலங்களுக்கிடையே முடிந்தவரை சமத்துவத்தை (equality) வருமானத்தைப் பொருத்தமட்டில் ஏற்படுத்தவும், அரசியல் நிருணயச்சட்டத்தில் குறிப்பிட்ட சில சரிக் கட்டும் காரணிகள் (Balancing factors) காணப்படுகின்றன. இவை, நிதி வருவாயை மத்திய அரசிடமிருந்து, மாநில அரசுகளுக்கு மாற்றுவதற்காகச் செய்யப்பட்ட அரசியல் நிருணயச்சட்ட ஏற்பாடுகளேயாகும்.

1935ஆம் ஆண்டின் இந்திய அரசியல் நிருணயச் சட்டப்படிச் செய்யப்பட்ட நிதிப்பங்கீட்டு முறை பின்வருமாறு:— (1) மத்திய, மாநில அரசுகளிடைய வருமான வரி வருவாய்ப் பகிர்வு (2) சணல் உற்பத்தியாகும் மாநிலங்களுக்கு, சணல் ஏற்றுமதி வரி வருவாயில் ஒரு பங்கு (3) மாநிலங்களுக்குக் குறிப்பிட்ட சில உதவிமான்யத் தொகைகள்.

1950ஆம் ஆண்டின் இந்திய அரசியல் நிருணயச் சட்டத்தில் மூன்று சரிக்கட்டும் காரணிகள் உள. (1) மத்திய, மாநில அரசுகளிடையே வருமான வரி, மத்திய ஆயத்தீர்வை வருவாயில் பகிர்வு, (2) மாநிலங்களுக்கு மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மான்யத் தொகை. (3) மாநிலங்களில் விதிக்கப்படும் வரிகளின்மீது கூடுதல் வரி, மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளித்துக் கொள்ளும் வருவாயைத் தரும் வரிகளின்மீது கூடுதல் வரி (surcharge) இவற்றின்மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் மத்திய அரசையேசாரும்.

17·1 நிதிக்குழு (Finance Commission)— நிதிக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்பவும், ஆலோசனைப்படியும், இச் சரிக்கட்டும் காரணிகள் செயற்படுத்தப்பட்டன. அரசியல் நிருணயச்சட்டத்தின் 280ஆவது பிரிவில் கண்டவாறு, இந்தியக் குடியரசுத் தலைவர் (President) ஐந்தாண்டுகளுக்கொருமுறை நிதிக்குழுவினை அமைக்க வேண்டும், இந் நிதிக்குழு, நிகர வரி வருவாய்களை, மத்திய, மாநில அரசுகளுக்கிடையே எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும், எந்தக் கொள்கைகளின் அடிப்படையில், மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு உதவி மான்யத்தொகை அளிக்க வேண்டும் என்பதைப்பற்றியும், மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்புபற்றிய வேறு சில விஷயங்களைப் பற்றியும் ஆராய்ந்து, குடியரசுத் தலைவரிடம் பரிந்துரைக்கின்றது.

நிதிக்குழு அமைக்கப்படுவதும், அதற்கு அரசியல் நிருணயச் சட்டத்தின் உத்தரவாதமும் பலவகைகளில் ஈடிணையற்றதெனலாம். உலகின் கூட்டரசு நிருணயச் சட்டங்கள் எதிலும் இதற்கு இணை ஏதுமில்லையெனலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற கூட்டரசுகளில், இத்தகைய குழுக்களை அமைக்கவேண்டுமென்பதற்கான உத்தரவாதமும் காணப்பட வில்லை. ஆஸ்திரேலியக் குடியரசின் உதவிநிதிக் குழுவினை மட்டும் (Australian Commonwealth Grants Commission) இதற்கு ஒப்பாகக் கூறலாம். அது சட்டப்படி அமைக்கப்பட்டதால், எப்போது வேண்டு மானாலும் கலைக்கப்படலாம். வரிகளை எவ்வாறு பகிர்ந்து கொள்வது, எந்த அடிப்படையில் வருவாய்ப் பகிர்வு நடைபெறவேண்டும் என்பனவற்றைப்பற்றி எந்தவித மாறுதல்களையும் எடுத்துக் கூற இதற்கு அதிகாரமில்லை. பாராளுமன்றத்தையும் (Parliament) மந்திரி சபையையும் பாதிக்கக் கூடிய அரசியல் நெருக்கடிகளைத் தடுக்கவே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. அரசியல் நிருணயச்சட்டப்படி, அரசிறைத் தொடர்பினைப் பற்றி ஆராய தனிப்பட்ட ஒரு சபையினை (Body) அமைக்கலாம். இவ்வாறு தனிச்சபையொன்று அமைக்கப் பட்டால்தான், கூட்டரசு ஆதிக்கத்தையும் (Federal control), பிராந்தியச் சுயாட்சியையும் ஒருமைப்படுத்தவும், மாநிலத் தேவை களையும், கூட்டரசின் விருப்பங்களையும் ஒருமைப்படுத்தவும் முடியும். நிதிக்குழு, மத்திய, மாநில அரசுகளின் கோரிக்கைகளுக்கு ஒரு பாரபட்சமற்ற நீதிபதியைப் போன்று நடந்து கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

17·2. முதல் நிதிக்குழு (The First Finance Commission) :— 1951ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் திரு கே. சி. நியோகி (K. C. Neogy) யின் தலைமையில் முதல் நிதிக்குழு அமைக்கப்பட்டது. அக் குழு, 1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது அறிக்கையை

வெளியிட்டது. மாநில அரசுகளுக்கு அதிகப்படியான உதவி வேண்டுமென்ற கோரிக்கைக்கு அது முக்கியத்துவம் அளித்தது. அதே சமயத்தில், மத்திய அரசின் நிதிநிலைமையைப் பாதுகாக்க வேண்டுமென்பதையும், அக் குழு உணர்ந்திருந்தது. வரி வருவாய்ப் பகிர்விலும், உதவி மான்யத் தொகையிலும் (Grants-in-aid) சில மாறுதல்களைச் செய்யலாமென அக் குழு கூறியது.

முதலாவதாக, வருமான வரியைப் பங்கிடுவது குறித்து ஆராய்ந்தது. 1936ஆம் ஆண்டு முதல், வருமான வரி வருவாயில் 50% மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டது. இதை 55% ஆக உயர்த்தவேண்டுமென அக் குழு பரிந்துரைத்தது. மாநிலங்களுக்கு இடையே இவ் வருவாயை 20% அவை வசூலித்த தொகையின் அடிப்படையிலும், 80% மக்கள் தொகையின் அடிப்படையிலும் பங்கிடவேண்டும்.

நீண்ட காலமாக வருமான வரி வருவாய் ஒன்றுதான் மத்திய, மாநில அரசுகளிடையே பங்கிடுவதற்குக் கிடைத்தது. இரண்டாவது உலகப்போருக்குப் பின்புதான், மத்திய அரசு விதிக்கும் ஆயத்தீர்வையின் மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவில் அதிகரித்தது. ஆகவே, சில மாநில அரசுகள் அவ் வருவாயிலும் தமக்குப் பங்கு வேண்டுமெனக் கேட்டன. நிதிக்குழு, அந்த ஆயத் தீர்வை வருவாயில், அதாவது புகையிலை, தீப்பெட்டி, காய்கறித் தொடர்புடைய பொருள்கள் (Vegetable Products) இவற்றின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை வருவாயில் மட்டுமே பங்கு தரலாமெனப் பரிந்துரைத்தது. அதாவது, அவ் வருவாயில் 40%-ஐ மாநில அரசுகளுக்கு, மக்கள்தொகையினை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளிக்க வேண்டுமெனவும் யோசனை கூறியது.

மேலும், சணலை ஏற்றுமதி செய்யும் மாநிலங்களுக்கு, சணல் ஏற்றுமதி வரியில், மத்திய அரசு எவ்வளவு மான்யத்தொகை கொடுக்கவேண்டுமென்பதையும் அக் குழு தீர்மானித்தது. குழுவின் பரிந்துரைக்கேற்ப, பின்வரும் தொகைகள் அம் மாநிலங்களுக்குத் தரலாமென ஆகியது :—

மேற்கு வங்காளம்	—	ரூ. 150 இலட்சம்
பீகார்	—	ரூ. 75 ,,
அஸ்ஸாம்	—	ரூ. 75 ,,
ஒரிஸ்ஸா	—	ரூ. 15 ,,

மாநிலங்களுக்கு உதவி மானியத் தொகைகளைக் கொடுக்கும் போது, பின்வரும் கொள்கைகளைத் தீர்மானிக்கும் காரணிகளாகக்

(Factors) கொள்ள வேண்டுமென அக் குழு பரிந்துரைத்தது. முதலாவதாக, வரிகளின் வாயிலாக மாநிலங்கள் பெறும் சுயஉதவி (Self-help)யின் எல்லையையும், மாநிலங்களின் பொருளாதார முயற்சிகளையும் கவனிக்கவேண்டும். இரண்டாவதாக, வெவ்வேறு மாநிலங்களிலும் உள்ள தர வேறுபாடுள்ள (Different Standards) சமுதாயப் பணிகளைச் சமப்படுத்துவதற்கு, உதவி மான்யத்தொகை பயன்படவேண்டும். மூன்றாவதாக, சில மாநிலங்களில், நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் நடைபெற வேண்டியிருப்பதால், அம் மாநிலங்களுக்கு உதவியளிப்பதில், தடையேதுமில்லை. மாநிலங்களில், பஞ்சத்தாலும், வெள்ளங்களாலும் நிதிப்பளு ஏற்படும்போது அவைகளுக்கு உதவி மான்யத்தொகை அளிக்கப் படலாம். இக் குழுவின் பரிந்துரைகள் எல்லாவற்றையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டு செயற்படுத்தியது.

17.3 இரண்டாம் நிதிக்குழு (The Second Finance Commission):- 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம், திரு. கே. சந்தானம் என்பவரின் தலைமையில் இக் குழு நியமிக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் இக் குழு தனது அறிக்கையை வெளியிட்டது. முதல் நிதிக்குழுவின் பரிந்துரைப்படி மாநில அரசுகளுக்குக் கிடைத்த ரூ. 93 கோடிகளை, ரூ. 140 கோடிகளாக உயர்த்த வேண்டுமென இக் குழு கூறியது.

இக் குழு, மத்திய மாநில அரசுகளுக்கிடையே, வருவாயைப் பங்கிடுவதில் ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க முயன்றது. எல்லா மாநிலங்களுக்கும் சமமாகவும், அதே சமயத்தில் அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும் நிதியை அளிக்கும் வழிவகைகளை இக் குழு ஆராய்ந்தது.

முதலாவதாக, வேளாண்மை வருவாய் தவிர, பிற வருமான வரிகளின்மூலம் கிடைக்கும் வருவாயில் 55%-க்குப் பதிலாக, 60% ஆக மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டுமென இக் குழு பரிந்துரைத்தது. இதோடுகூட, பொருளாதார முன்னேற்றம், சமத்துவம் (Equality) இவற்றைச் சார்ந்த போட்டியிடும் கோரிக்கைகளுக்கு இடையே ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தும் வகையிலும் இக் குழுவைச் சார்ந்ததாகும். இரண்டாவது நிதிக்குழு, வசூல்களின் ஆதாரத்தைவிட, மக்கட்தொகைக்கும், நுகர்வுக்கும் அதிக அளவு முக்கியத்துவத்தைக் கொடுத்தது. எனவே, வசூலை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களின் பங்கு 10% ஆகவும், மக்கள்தொகையினை அடிப்படையாகக் கொண்டு 90% ஆகவும் இருக்கவேண்டுமென அக் குழு தீர்மானித்தது. எல்லா வருமான வரி வருவாய்ப் பங்கீட்டின் புதிய அடிப்படை (basis) முன்னைவிட விஞ்ஞான ரீதியாகவும், வேறுபாடு அதிகமில்லாமலும் ஆகியுள்ளது. இந்தியாவைப்போல மாநிலங்களின் தேவை

களைப் பற்றிய பாதுகாப்புக் குறியீடாக மக்கட்தொகையை எடுத்துக் கொள்ளலாம். இதன்படி உத்தரப்பிரதேசத்துக்கு 16·36%உம், பம்பாய்க்கு 15·97%உம், மேற்கு வங்காளத்துக்கு 10·58%உம், பீஹாருக்கு 9·94%உம், தமிழ்நாட்டுக்கு 8·40%உம், ஆந்திரப் பிரதேசத்துக்கு 8·50%உம் கிடைக்கின்றன.

ஆயத்தீர்வைகளின் (Excise Duties) பங்கீடுகளைப் பொறுத்த வரை, முன்னர் மூன்று பொருள்களின்மீது விதிக்கப்பட்ட ஆயத் தீர்வைகளிலிருந்து பங்கீடு பெற்றதை, 8 பொருள்கள்மீது விதிக்கப்பட்ட ஆயத்தீர்வைகளின் வருவாய்ப்பங்கீடாக மாற்றலாமென அக் குழு கூறியது. புகையிலை, தீக்குச்சிகள், தாவரப் பொருள்கள் இவைகளோடு சர்க்கரை, தேயிலை, காபிக்கொட்டை காகிதம், அவசியமல்லாத தாவர எண்ணெய்கள் இவற்றின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை வருவாயிலிருந்தும், மாநிலங்களுக்குப் பங்கீடு தரப்பட வேண்டுமென ஆயிற்று. ஆனால், பங்கீட்டின் சதவீதம் 40%-லிருந்து 25% ஆக ஆக்கப்பட்டது. மத்திய அரசுகளின் வரிவருவாயில் மாநிலங்கள் பெறும் பங்குகள் 90% மக்கள் தொகையையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

இரயில்வே கட்டணங்களைப் பொறுத்தவரை, அந்தந்த மாநில எல்லைகளுக்குள் பயணம் செய்யும் பிரயாணிகளிடமிருந்து பெறும் நிகர வருவாயின் அடிப்படையில், இரயில்வே கட்டண வரிவருவாய் மாநிலங்களுக்கிடையே பங்கிடப்பட வேண்டுமென அக் குழு கூறியது.

உதவி மானியத்தொகைகளைப் பற்றி ஆராய்ந்த அக் குழு மூன்று புதிய கொள்கைகளை வெளியிட்டது. முதலாவதாக, மாநிலத்திற்கு அளிக்கப்படும் உதவி மான்யங்கள் அம் மாநிலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். இரண்டாவதாக மாநிலங்களின் சாதாரண வரிவருவாய்கள், மதிப்பிடப்பட்ட செலவு இரண்டுக்குமுள்ள இடைவெளியை (Gap) வரிப் பங்கீட்டின் மூலமாகவே முடிந்தவரை சரிக்கட்ட முயற்சி செய்யவேண்டும். பெரும்பாலும் உதவிமானியங்கள் (Grants-in aid) உள்ளுக்குள்ளேயே செய்துகொள்ளப்படும் உதவியாக இருக்க வேண்டும். பெரும் திட்டங்களுக்கான உதவித்தொகை அளிக்கப் படலாம். ஆனால் கொடுக்கப்பட்ட தொகை அனைத்தையும், அத் திட்டங்களின் வளர்ச்சிக்காகவே மாநிலங்களால் செலவழிக்கப் படவேண்டும். 14 மாநிலங்களில், 11 மாநிலங்களுக்குப் போதுமான உதவி மான்யம் அளிக்கலாம் என அக் குழு பரிந்துரைத்தது. பம்பாய், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உதவிவேண்டாம் என அக் குழு கூறியது. ஏனெனில், இம் மாநிலங்களுக்கு, தற்போதைய செலவையும், திட்டச் செலவையும்

சமாளிப்பதற்குப் போதுமான வருவாயுள்ளது என்பது அக் குழுவின் அபிப்பிராயமாகும். குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

17.4. மூன்றுவது நிதிக்குழு (The Third Finance Commission):) 1960ஆம் ஆண்டு டிசம்பரில், ஏ. கே. சந்தா (A. K. Chanda) என்பவரின் தலைமையில் இக் குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கை 1961 ஆம் ஆண்டு டிசம்பரில் வெளிவந்தது. முதலாவதாக, வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 60%-லிருந்து 66⅔% ஆக உயர்த்தப்படவேண்டும் எனவும், ஆயத்தீர்வை வருவாயில் மாநிலங்களின் பங்கு 25%-லிருந்து 20% ஆகக் குறைக்கப்படவேண்டுமெனவும் குழு பரிந்துரைத்தது. இரண்டாவதாக, மத்திய, மாநில அரசுகளின் பகிர்வுக்குரிய ஆயத்தீர்வை விதிக்கும் பொருள்களின் எண்ணிக்கை 8-லிருந்து 35 ஆக உயர்த்தப்பட்டது. மூன்றுவதாக, மாநிலங்களுக்கு ஆண்டுதோறும் அளிக்கப்படும் உதவி மானியம் ரூ. 110·25 கோடிகளாக உயர்த்தப்பட்டது. நான்காவதாக, ரயில் கட்டண வரிகளுக்குப் பதிலாக மாநிலங்களுக்கு 12½ கோடி ரூபாய் ரயில் கட்டணத்திலிருந்து அளிக்கவேண்டுமென்று பரிந்துரைத்தது. மாநில அரசுகள், மத்திய அரசின் உதவியை நாளுக்குநாள் அதிகமாக எதிர்பார்ப்பதை அக் குழு கவனித்தது. ஆகவே, அது மாநிலங்களின் நிருவாகப் பொறுப்புணர்ச்சி வளர்வதற்குத் தடையாக இருப்பதையும் உணர்ந்தது.

17.5. நான்காவது நிதிக்குழு (The Fourth Finance Commission) 1964ஆம் ஆண்டு மே மாதம், டாக்டர் பி. வி. ராஜமன்னர் தலைமையில் அமைக்கப்பட்ட அக் குழு 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதன் அறிக்கையை வெளியிட்டது.

அக் குழு வருமான வரிப் பங்கீட்டை 66⅔%-லிருந்து 75% ஆக உயர்த்தியது. அவ் வருவாயை, மூன்றும் நிதிக்குழுவின் பரிந்துரைப்படியே, 80% மக்கள் தொகையின் அடிப்படையிலும், 20% வசூலின் அடிப்படையிலும் பங்கிடவேண்டும் எனவும் கூறியது. 35 பொருள்களுக்குப் பதிலாக, எல்லாப் பொருள்களின்மீது விதிக்கின்ற ஆயத்தீர்வைகளிலும் மாநில அரசுகளுக்கு 20% கொடுக்க வேண்டுமென்றும் கூறியது.

மேலும் எஸ்டேட் தீர்வையின் நிகரவருவாய் முழுவதையும் மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டுமெனவும், இரயில் கட்டண வரியை நீக்கியதன் விளைவாக மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய மான்யத்தொகையை வழங்க வேண்டுமெனவும் அக் குழு பரிந்துரைத்தது.

அட்டவணை எண் 48

நான்கு நிதிக்குழுக்களின் பரிந்துரைகளுக்கேற்ப வருமான வரி, ஆயத்தீர்வைகள் இவற்றின் வருவாய் பங்கீடு
(Statement Regarding Distribution of Income and Excise Taxes—Recommendation by Finance Commissions)

1	2	மாநிலங்களுக்குப் பங்கிட வேண்டிய சதவீதம் 3	பங்கீட்டுக்குரிய அடிப்படை 4	குறிப்புரைகள் (Remarks) 5
முதல் நிதிக்குழு	(விவசாய வருமானம், மத்திய அரசுக்கு உரிய வரி வருவாய், இதர, மத்திய அரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட மாநிலங்களின் (Territories) வருவாய் இவற்றைத்தவிர வருமான வரியிலிருந்து கிடைக்கும் நிகர வருவாய்	(1) வருமான வரி 55%	மக்கள் தொகையில் 80% மொத்தத் தொகையில் 20%	
இரண்டாம் நிதிக்குழு		60%	மக்கள் தொகையில் 90% மொத்தத் தொகையில் 10%	100% உம் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டுமென்றகுறிக்கோள்
மூன்றும் நிதிக்குழு		66⅔%	மக்கள் தொகையில் 80% மொத்தத் தொகையில் 20%	
நான்காம் நிதிக்குழு		75%	மக்கள் தொகையில் 80% மொத்தத் தொகையில் 20%	

முதல் நிதிக்குழு	புகையிலை, தீக்குச்சி' தாவரப் பொருள்கள்	(2) ஆயத் தீர்வைகள் 40%	மக்கள் தொகையில் 100%	அதிக அளவு பயன்படும் பொருள்களின் மீதி விதிக்கப்பட்ட சில ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைக்கும் நிலையான வருவாய் இருக்க வேண்டும்
இரண்டாம் நிதிக்குழு	சர்க்கரை, காபி, தேயிலை, கார்கிதம், அவசியமற்ற தாவர எண்ணெய்கள் இவை சேர்க்கப்பட்டன.	25%	மக்கள் தொகையில் 90% சரிக்கட்டுவதற்காக 10% (Adjustment)	
மூன்றும் நிதிக்குழு	1960-61ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை விதிக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் (இதில் (1) ஆண்டொன்றுக்கு ரூ. 50 இலட்சத்துக்குக் குறைவாகக் காடுக்கும் ஆயத்தீர்வைகளும் (2) மோட்டார் பெட்ரோலும் சேர்க்கப்படவில்லை)	20%	மக்கள் தொகையே முக்கிய அடிப்படையாகும். ஆனால் பொருளாதார நிலையில், வலிமையற்ற நிலையும், சமமற்ற முன்னேற்றமும், அட்டவணையில் கவரப்பட்ட ஜாதியினர், வேறு குலத்தினர் (Scheduled Castesand Tribes) இவற்றின் சதவீதம்	அதிக அளவு மக்களைப் பாதித்தது. ஏனெனில் முன்னைவிட விசாலமான அடிப்படை தேவையாக இருந்தது. விற்பனை வரியோடு தொடர்பு வேண்டியிருந்தது.
நான்காம் நிதிக்குழு	ஒழுங்குபடுத்தும் வரிகள் (Regulatory duties), தனிப்பட்ட ஆயத்தீர்வை, வரிகள் (Special Excise and duties), குறிப்பிடத்தக்க சில வரிகள் தவிர எல்லா வரிகளும்	20%	மக்கள் தொகையில் 80% ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட நிலையில், பொருளாதாரத்தில் அல்லது இதர அம்சங்களில் பின்தங்கிய நிலை (Relative Economic and Special Backwardness) யின் அடிப்படையில் 20%	

பின்வரும் அட்டவணையில், நிதிக் குழுக்களின் அறிக்கைகளுக் கேற்ப, வெவ்வேறு மாநிலங்களுக்கான பங்கீட்டுச் சதவீதத்தைக் காணலாம்:-

அட்டவணை எண் 49

பங்கீட்டுக்கு உரிய மாநிங்களின் பங்கு	நான்காம் நிதிக்குழு 75%	மூன்றும் நிதிக்குழு 66⅔%	இரண்டாம் நிதிக்குழு 60%
ஆந்திரப்பிரதேசம்	7·37	7·71	8·12
அஸ்ஸாம்	2·44	2·44	2·44
பீஹார்	9·04	9·33	9·94
குஜராத்	5·29	4·78	—
ஜம்மு, காஷ்மீர்	0·73	0·70	1·13
கேரளம்	3·59	3·55	3·64
மத்தியப்பிரதேசம்	6·47	6·41	6·72
தமிழ்நாடு	8·34	8·13	8·40
மகாராட்டிரம்	14·28	13·41	—
மைசூர்	5·14	5·13	5·14
ஒரிஸ்ஸா	3·40	3·44	3·73
பஞ்சாப்	4·36	4·49	4·24
உத்திரப்பிரதேசம்	14·60	14·42	16·36
மேற்கு வங்காளம்	10·91	12·09	10·08
நாகாலாந்து	0·07	—	—
பம்பாய்	—	—	15·97

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மாநிலங்களுக்கு வருமான வரியிலிருந்து ரூ. 277·9 கோடிகளும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ரூ. 377·2 கோடிகளும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 353·8 கோடிகளும் கிடைத்தன.

நிதிக் குழுக்களின் அறிக்கைகளின்படி மத்திய ஆயத்தீர்வைகளில் மாநிலங்களுக்கு எவ்வளவு சதவீதம் அளிக்கப்பட்டதென்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை எண் 50

மாநிலங்கள்	இரண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப பங்கீட்டுச் சதவீதம்	மூன்றும் நிதிக் குழுவின் பரிந்துரைக் கேற்ப பங்கீட்டுச் சதவீதம்	நான்காம் நிதிக் குழுவின் பரிந்துரைக் கேற்ப பங்கீட்டுச் சதவீதம்
ஆந்திரப்பிரதேசம்	9·38	8·23	7·77
அஸ்ஸாம்	3·46	4·73	3·32
பீஹார்	10·57	11·56	10·03
குஜராத்	4·17	6·45	4·80
ஜம்மு, காஷ்மீர்	1·75	2·02	2·26
கேரளம்	3·84	5·46	4·16
மத்தியப்பிரதேசம்	7·46	8·46	7·40
தமிழ்நாடு	7·56	6·08	7·18
மகாராட்டிரம்	8·00	5·73	8·23
மைசூர்	6·52	5·82	5·41
ஒரிஸ்ஸா	4·46	7·07	4·82
பஞ்சாப்	4·59	6·71	4·86
ராஜஸ்தான்	4·71	5·93	5·06
உத்திரப்பிரதேசம்	15·94	10·68	14·98
மேற்கு வங்காளம்	7·59	5·07	7·51
நாகாலாந்து	—	—	2·21

மூன்றும் நிதிக்குழுவைவிட, நான்காம் நிதிக்குழு அதிக தாராள மாக மாநிலங்களுக்கு உதவிகளைப் பரிந்துரைத்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தில், வரவுக்கும் செலவுக்கும் இடையேயுள்ள, பிளவினை (gap) நிரப்புவதற்கான நிபந்தனையற்ற உதவிமான்யங்களை அளிக்கும்படி அக் குழு பரிந்துரைத்துள்ளது. மாநிலங்களின் வரிக்கான முயற்சிகள், மாநிலச் சமுதாயப்பணிகளின் நிலை, மாநில அரசுகளின் நிருவாகத் திறன் இவை எவற்றையும் பரிசீலிக்காமல் தற்போது இத்தகைய ''நிதிபற்றிய பற்றுக்குறை உதவிகள்'' (Financial Deficit Grants) கொடுக்கப்பட்டு வருகின்றன.

கூட்டரசு நிதிப்பிரசினைகளைப் பற்றி ஆய்ந்து, நிதியமைச்சுக்கு வேண்டிய செய்திகளை அறிவிப்பதற்கு, மத்திய அரசின் நிதியமைச்சில் ஒரு நிலையான நிருவாகம் அமைக்கப்பட வேண்டுமென நான்காம் நிதிக்குழு ஆலோசனை கூறியது. மாநிலங்களின் கடன் நிலையைப் பற்றி விளக்கமாக ஆய்ந்தறிய ஒரு தேர்ந்த நிறுவனம் (Expert body) அமைக்க வேண்டுமெனவும் அது கூறியது.

17·6 ஐந்தாம் நிதிக் குழு (The Fifth Finance Commission): நான்காம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தும், சாதாரணமாக நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்கால முழுவதற்கும் பொருந்தியதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தொடங்க வேண்டிய நேரத்தில் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படாமல், 1969ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டதாலும், பல மாநிலங்களில் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் அல்லாத ஆட்சி ஏற்பட்டதாலும், 1967ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், கூட்டரசு நிதித் தொடர்பில் ஏற்பட்டுள்ள புதிய பிரசினைகளை ஆய்ந்தறிய ஒரு புது நிதிக்குழுவினை நியமிக்க வேண்டுமென இந்திய அரசு தீர்மானித்தது.

புது நிதிக்குழு 1967ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் நியமிக்கப் பட்டது. 1969ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அக் குழு அறிக்கையை வெளியிட்டது. அது 1969ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து ஆரம்பித்து ஐந்து ஆண்டுக் காலத்திற்கு உரியதாகும்.

அந் நிதிக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, வரிகளிலிருந்து பங்கீடு, உதவிமான்யங்கள் இவற்றின்மூலம் இவ்வைந்தாண்டுகளுக்கு, மாநிலங்களுக்கு மத்திய அரசிலிருந்து ரூ. 4266 கோடிகள் கொடுக்கப் படவேண்டும் என ஆயிற்று. இதில் வரிகளிலிருந்து பங்கீடு ரூ. 3628 கோடிகளும் உதவிமான்யங்கள் ரூ. 637·85 கோடிகளுமாகும். இனி, மாநிலங்கள் வருமான வரி வருவாயில் 75%-ஐப் பங்காகப் பெறும். மூன்றும், நான்காம் நிதிக்குழுக்களின் பரிந்துரைகளுக்கேற்ப 80%

மக்கள் தொகையின் அடிப்படையில் பங்கீடு இருந்தது. இதனை 90% ஆக, ஐந்தாம் நிதிக்குழு உயர்த்தியது.

ஆயத்தீர்வைகளைப் பொறுத்தவரை, மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கில், மூன்றாண்டுகளுக்கு ஒருவித மாறுதலுமிருக்காது. அதற்குப் பின்னர் வேறு சில விசேஷ ஆயத்தீர்வைகளுள் இதுவரை சேர்க்கப்படாதவையும் சேர்க்கப்பட்டுப் பகிர்வுக்குரிய தொகை பெருகும்.

1973-'74-ஆம் ஆண்டில் திருப்திகரமான நிதி நிலையைச் சில மாநிலங்கள் அடையுமென எதிர்பார்த்து, 7 மாநிலங்களுக்கு உதவி மான்யம் கிடைக்காது என அக் குழு கூறியது. அவை பீஹார், குஜராத், ஹரியானு, மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், பஞ்சாப், உத்திரப்பிரதேசம் முதலியனவாகும். அக் குழுவின் கருத்துப்படி, இம் மாநிலங்களில், 1973-,74-ஆம் ஆண்டில் பின்வருமாறு உபரி (Surplus) இருக்கும் எனப்பட்டது:-

மாநிலங்கள்	உபரி (ரூ. கோடியில்)
பீஹார்	199·46
குஜராத்	158.99
ஹரியானு	79·88
மத்தியப்பிரதேசம்	15·09
மகாராஷ்டிரம்	419·29
பஞ்சாப்	117·22
உத்திரப்பிரதேசம்	280·72

பின்வரும் அட்டவணை (எண்-51) யிலிருந்து தெற்கிலுள்ள மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வரி வருமானம், உதவி மான்யம் இவற்றை அறியலாம்.

17·7 நிதி பற்றி மத்திய, மாநில அரசுகளின் தகராறு (Centre-States Conflict on Finances):- ஒரு கூட்டாட்சி (Federation) அமைதியாக நடைபெற வேண்டுமானுல், மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பு மிகவும் இன்றியமையாததாகும். நிதி விவகாரத்தில், கடந்த சில ஆண்டுகளாக மத்திய, மாநில அரசிகளிடையே தகராறு வளர்ந்து வருகின்றது. மத்திய, மாநில அரசுகளை ஆளும் அரசியல் கட்சிகள் வெவ்வேறாக இருப்பதால், இத் தகராறு மேலும் முற்றி வருகிறது. இடையூறு நேரும்போது மாநிலங்களுக்கு உதவவும்,

அட்டவணை எண் : 51

(நான்காவது, ஐந்தாவது நிதிக்குழுக்களுக்கேற்ப மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரி வருமானமும், உதவிமான்யத் தொகைகளும்)1-

மாநிலங்கள்	நான்காவது நிதிக்குழு மொத்தம் (ரூ. கோடியில்)		ஐந்தாவது நிதிக்குழு	
			வரிகள்	உதவிகள்
ஆந்திரப் பிரதேசம்	234·18	339·25	274·24	65·01
அஸ்ஸாம்	144·06	195·21	93·24	101·97
பீஹார்	197·46	407·38	407 38	—
குஜராத்	121·55	182·75	182·75	—
ஹரியாணு	39·19	59·61	59·61	—
ஜம்மு-காஷ்மீர்	66·10	106·84	33·16	73·68
கேரளம்	188·61	193·43	143·78	49·65
மத்தியப் பிரதேசம்	162·03	274·02	274·02	—
மகாராஷ்டிரம்	260·38	383·66	383·66	—
மைசூர்	215·42	197·42	179·43	17·99
நாகாலாந்து	58·46	80·72	2·77	77·95
ஒரிஸ்ஸா	231·85	250·68	146·01	104·67
பஞ்சாப்	57·51	89·16	89·16	—
ராஜஸ்தான்	130·41	221·65	170·16	51·49
தமிழ்நாடு	207·32	295·10	272·29	22·81
உத்திரப் பிரதேசம்	373·02	620·12	620·12	—
மேற்கு வங்காளம்	197·41	369·03	296·41	72·62
மொத்தம்	2,885·86	4,266·04	3,628·19	637·85

வெவ்வேறு பிரிவுகளில் (regions) சீரான வளர்ச்சியை ஏற்படுத்தவும், மத்திய அரசு, மாநிலங்களுக்குக் கடன், உதவிமான்யம் ஆகியவற்றைக் கொடுக்கவேண்டுமென இந்திய அரசியல் சட்டத்தில் காணப்படுகிறது. கடந்த 20 ஆண்டுகளாக, இக் கடன்களையும், உதவிகளையும் பெற்றதன் விளைவாக, மத்திய அரசு, மாநிலங்களை அடக்கியாளுவதோடு, மாநிலங்களில் நிதி பற்றிய பொறுப்பின்மையும் ஏற்படு

வதற்குக் காரணமாகி விட்டது. மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் வருமானத்தின் அளவு மிகவும் பெருகியுள்ளது. சில மாநிலங்களின் தனிநிதிநிலை ஆட்டம் கண்டுவிட்டது.

அரசியல் சட்டத்தின்படி, மாநிலங்களில் சீரான நிலையை ஏற்படுத்த, நிதிக்குழு ஒரு கருவியாகப் பயன்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால், திட்டக்குழு (Planning Commission) ஏற்படுத்தப் பட்ட பின்னர், மேற்கூறிய வேலைக்கு மட்டுமே நிதிக்குழு குறைக்கப்பட்டு மத்திய, மாநிலத் தொடர்பும் பாதிக்கப்பட்டது எனலாம். இவ்வாறு, மத்திய, மாநில நிதித்தொடர்பினைத் திட்டக் குழு பாதித்தது மிகவும் முக்கியமானதாகும். திட்டக்குழுவிடமிருந்து பெறும் கடன் உதவியும் மாநிலங்களின் சுயாட்சியைப் போதுமான அளவில் குறைத்துள்ளது. நடைமுறையில், மத்திய அரசின் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கவேண்டியிருந்ததால், மாநில அரசுகளுக்கு அதிக செலவு ஏற்பட்டது. திட்டத்திற்குள் அடங்காத, மாநில வரவுசெலவுத்திட்டத்தில், வரவுக்கும் செலவுக்கும் உள்ள வித்தியாசத்தைச் சரிக்கட்டும் வேலை, நிதிக்குழுவிற்கு என ஆயிற்று. ஆனால், திட்டக்குழுவின்படி அளிக்கப்பட்ட உதவித்தொகை, போதுமானதாக இருந்தபோதிலும், திட்டக்குழுவின் விருப்பப்படியே அவை செலவழிக்கப்பட வேண்டும்.

17·8 மத்திய, மாநிலத் தொடர்புக்காக இராஜமன்னர் குழு (Raja Mannar Committee on Centre-State Relations);- தமிழ் நாட்டின் முன்னாள் தலைமை நீதிபதியும், நான்காவது நிதிக்குழுவின் தலைவரும் ஆன டாக்டர் பி. வி. இராஜமன்னர் என்பவரின் தலைமையில் தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு குழுவை நியமித்தது. மத்திய, மாநில அரசுகளின் தொடர்புகளை ஆராய்ந்து, மாநில சுயாட்சியை நோக்கத்தோடு கூடியதாகச் செய்வதற்குரிய முயற்சிகளைப் பற்றி யோசனை கூறுவதற்கே அக் குழு நியமிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்புகளைப் பற்றிய அக் குழுவின் புனரமைப்புக்கான பரிந்துரைகள் இன்றியமையாதனவாகும்.

முதலாவதாக, தற்போது மத்திய அரசுக்கு மட்டுமே உரியதான கார்ப்பரேஷன் வரி, சுங்க வரி, சொத்து வரி போன்றவைகளையும் சேர்த்துப் பங்கீட்டுக்குரிய வரிகளை அதிகமாக்க வேண்டுமென அக் குழு பரிந்துரைத்தது. மேலும் வருமான வரிமீது விதிக்கப்படும் கூடுதல் வரியை (surcharge) வருமான வரியின் அடிப்படை வீதத்தோடு (basic rate) சேர்த்துவிட்டு, அவ்வாறு கிடைக்கும் வருமானத்தை மாநிலங்களோடு பங்கிட்டுக் கொள்ளலாம் எனவும் அக் குழு யோசனை கூறியது. இரண்டாவதாக, மத்திய அரசின் விருப்பத்திற்கேற்பப்

பங்கிடப்படும் எல்லா ஆயத் தீர்வைகளும் கட்டாயமாகப் பங்கிடப்பட வேண்டும். அதிகப்படியான ஆயத்தீர்வைகள், மாநிலங்களின் சம்மதத்தோடுதான் விதிக்கப்படவேண்டும். மூன்றாவதாக, மத்திய அரசுக்கு அல்லது இரயில்வேக்களுக்குப் பயன்படுத்தப்படும் அல்லது விற்கப்படும் மின்சாரத்தின்மீது மாநிலங்கள் வரிவிதிப்பதைத் தடுக்கக் கூடாதெனவும் அக் குழு கேட்டுக் கொண்டது. நான்காவதாக, மத்திய அரசின் உதவியைப் பற்றிய பிரசினையை இராஜமன்னர் குழு ஆராய்ந்தது. நிதிக்குழுக்களின் பரிந்துரைக்கேற்ப மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகைகளோடு திட்டக் குழுவின் விருப்பப்படி அவற்றுக்கு அளிக்கப்பட்ட உதவிகளும் உள்ளன. எதனுடனும் தொடர்பற்ற (independent) பாரபட்சமற்ற உறுப்பான நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப, திட்டச் செலவினங்களையும், திட்டமிடப்படாத செலவினங்களையும் சமாளிப்பதற்கான எல்லா உதவிகளையும், மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென இராஜமன்னர் குழு பரிந்துரைத்தது. ஐந்தாவதாக, நிதிக் குழுவின் பரிந்துரைகள் யாவும், மத்திய அரசையும், மாநிலங்களையும் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தியுள்ளன எனவும் அக் குழு கூறியது. மேலும், நிதிக்குழு அதன் தலைமையலுவலகத்தோடு (Secretariat) ஒரு நிலையான நிருவாகமாக (body) இருக்கலாம் எனவும் கூறியது. இறுதியாக, மாநிலங்களின் கடன்நிலை சம்பந்தமான பிரசினையைப் பற்றிக் கவனிக்க, தேர்ந்த அறிஞர்கள் கொண்ட ஒரு குழுவினை நியமிக்க வேண்டுமென்றும், இராஜமன்னர் குழு பரிந்துரைத்தது.

மத்திய, மாநிலத் தொடர்புகளில் சீர்திருத்தத்தின் உரிய பகுதிகளை எடுத்துக்காட்டியதன்மூலம், இராஜமன்னர் குழு ஒரு குறிப்பிடத் தக்க பணியைச் செய்துள்ளது. நாட்டுடன் ஒன்றிய படியே, மாநிலங்களுக்குச் சுயாட்சி கிடைப்பதற்கு அக் குழுவின் பரிந்துரைகள் உறுதி கூறின. அக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து பார்த்தால், அவை மத்திய அரசினை, மாநில அரசுகள் நிதிக்காகச் சார்ந்திருப்பதை ஒரு வழியாக நீக்காவிட்டாலும், மத்திய-மாநில நிதித் தொடர்பினைக் கூடிய அளவுக்குச் சீர்திருத்துவதன்மூலம், குறைக்கும் என்பதைக் காணலாம்.

17.9 ஆறாவது நிதிக்குழு (The Sixth Finance Commission): ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் கே. பிரம்மானந்த ரெட்டி என்பவரின் தலைமையில், 1972ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 28ஆம் நாள், இந்தியக் குடியரசுத் தலைவரால், ஆறாவது நிதிக்குழு

நியமிக்கப்பட்டது. அக் குழுவின் இதர அங்கத்தினர்கள் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் நீதிபதியான திரு. சையது சடட் அபுல் மசூத் (Syed Sadat Abul Masud) திட்டக்குழுவின் உறுப்பினரான டாக்டர் பி. எஸ். மிராஸ்,டாக்டர் ஜே. எஸ். குலாத்தி,திரு. ஜி. ராமச்சந்திரன் முதலியவர்கள் ஆவர்.

திட்டக்குழுவிற்கும் (Planning Commission), நிதிக்குழுவிற்கும் இடையேயுள்ள உறவை உறுதிப்படுத்த திட்டக்குழுவின் உறுப்பினர் ஒருவர் நிதிக்குழுவின் அங்கத்தினராக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

17.10 குழுவிற்கு ஒதுக்கப்பட்ட வேலைகள்:- புதிய பிரசினைகளைப் பற்றிப் பரிசீலிக்கவேண்டியது அக் குழுவுக்கு அளிக்கப்பட்ட புது வேலையாகும். 1978-79ஆம் ஆண்டோடு முடியும். 5 ஆண்டுகளுக்கு, மாநிலங்களுக்கு ஒரே மாதிரியான அடிப்படையில், திட்டத்தில் அடங்காத முதலீட்டுத் தேவையைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியது குழுவின் வேலையாகும். இயற்கையாகவே ஏற்பட்ட நாசங்களினால் (Calamities) பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான ஏற்பாடுகளையும், கொள்கையையும் அக் குழு மாற்றியமைக்கவேண்டும். தேசிய நிதி (National Fund) ஒன்றினை ஏற்படுத்த முடியுமா என்பதை அக் குழு பரிசீலிக்கலாம். அதற்காகத் தங்களது வரி வருவாயில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மத்திய, மாநில அரசுகள் வழங்கவேண்டும்.

திட்டத்திலடங்காத முதலீட்டுத் தேவையைப் பற்றித் தீர்மானிக்கும்போது, இந் நிதிக்குழு மாநிலங்களின் கடன் நிலை, குறிப்பாக மத்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய கடனைப் பற்றிக் கவனிக்கவேண்டும். இதற்காகக் கொடுக்கப்படும் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கான நிபந்தனைகளை மாற்றியமைக்கவும் இக் குழு யோசனை கூறலாம். மத்திய அரசின் தேவைகளைப் பற்றியும், கடன் தொகைகளைச் செலவழிக்கும் விதத்தைப் பற்றியும் குழு யோசனை கூறலாம்.

17.11. வரிப்பங்கீடு (Tax Distribution) :- கார்ப்பரேஷன் வரி மத்திய ஆயத்தீர்வைகள் இவற்றைத் தவிர, வருமான வரி போன்ற மத்திய அரசின் வரி வருமானத்தை, மத்திய, மாநில அரசுகளுக் கிடையே பங்கிடுவது குறித்தும் இக் குழு பரிந்துரைக்கலாம். இந்தியாவின் ஒன்று சேர்க்கப்பட்ட நிதி (Consolidated Fund) யிலிருந்து, மாநிலங்களுக்கு அளிக்கப்படும் உதவி மானியத்

தொகைக்கான கொள்கைகளைப் பற்றியும் அக் குழு யோசனை கூறலாம்.

அரசியல் சட்டத்தில் 275ஆவது பிரிவில் கண்டவாறு, உதவி கோரும் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையையும் அக் குழு தீர்மானிக்கும். அது திட்டக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப திட்டமிடப்பட்டுள்ள தற்கால ஏற்பாடுகளைக் கவனிக்கும். மாநிலங்களின் தேவைகளைப் பற்றிக் கணக்கிடும்போது, அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், தல நிறுவன ஊழியர்கள் இவர்களது ஊதியத்தையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆறுவது நிதிக் குழு, 1974ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்கால முழுவதற்கும் ஆகும். 1973ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் அக் குழு தனது அறிக்கையை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. அப்போதுதான், 1974-'75ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திலும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் உள்ள நிதி பற்றிய திட்டங்களை முடிவாக்கச் சரியான நேரத்தில் அவ்வறிக்கை உதவியாக இருக்க முடியும்.

18. இந்திய வரி அமைப்பு

(Indian Tax Structure)

18·1. **வரிவிதிப்பின் வளர்ச்சி** (Growth of Taxation) :— 1950ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் வரி விதிப்பு வளர்ந்துள்ளது. பெருமளவில் வருவாயை உண்டாக்கு வதற்காக, மத்திய அரசும், மாநில அரசுகளும் வரிவிதிப்பின் வழியாகவே பெருந்தொகைகளைச் சேகரிக்க முயற்சி செய்துள்ளன. அதற்காக, அவை புதிய வரிகளைப் புகுத்தியுள்ளன. ஏற்கனவே யுள்ள வரிவீதங்களை உயர்த்தியுள்ளன. இவ்வாறு இந்தியாவில், 1950-'51ஆம் ஆண்டில் தேசிய வருமானத்தில் வரிவருவாய் 6.6% ஆக இருந்து, தற்போது 14% ஆக உயர்ந்துள்ளது.

அநேகமாகப் பல நாடுகளில், வரிவிதிப்பு மட்டம் (level) இந்தியாவில் இருப்பதைவிட உயர்ந்ததாகும். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவீடன், நார்வே, நெதர்லாந்து, அயர்லாந்து, மேற்கு ஜெர்மனி, பிரான்சு, டென்மார்க், பெல்ஜியம், ஆஸ்திரியா முதலிய நாடுகள், நாட்டு வருவாய் மொத்தத்தில் கால் பங்கு நிகர வரி வருவாயாக உள்ளது. இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் இது மூன்றிலொரு பங்காகவுள்ளது. சிலோன், பர்மா, இத்தாலி, கனடா போன்ற நாடுகளில் இது 20% ஆக உள்ளது.

இவ்வாறு, பன்னாட்டு வரி விதிப்பு மட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாட்டு வருமானத்தில் இந்தியாவின் சராசரி வரிப் பளு 14% ஆக இருப்பினும், சலுகை (Concession) காட்டப்படும் நிலையிலில்லை. ஆனால், பிறநாடுகளைவிட இந்தியாவில் மக்கள்தொகை அதிகமாகவும், தேசிய வருமானம் குறைவாகவும் உள்ளன. இதனால்தான் ஏழ்மை நாடுளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. இந்தியாவின் தலா வருமானமும் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே இந்தியாவில், வரிவிதிப்பின் நிலைப்பாடு (Incidence) அதிகமாகக்

காணப்படுகிறது. ஆனால், தற்போதைய விலைக்கேற்ப, கடந்த 20 ஆண்டுகளாக, தலா வருவாய் சுமார் இரு மடங்காகியுள்ளது. இதே காலத்தில் வரி வருமானம் 800% அதிகமாகியுள்ளது. அதனால் நாட்டு வருமானத்தில், வரி வருவாயின் பங்கு 1950-'51ஆம் ஆண்டில் 6.5% ஆக இருந்து, 1969-'70ஆம் ஆண்டில் 13%-க்கும் மேலாக உயர்ந்துள்ளது. அதாவது வரி வருமானம் ரூ. 626 கோடிகளிலிருந்து ரூ. 3994 கோடிகளாக உயர்ந்தது.

18·2. மறைமுக வரிவிதிப்பின் முக்கியத்துவம் (Importance of Indirect Taxation) :— மறைமுக வரிவிதிப்பைப் பெருமளவில் சார்ந்திருப்பது, இந்திய வரி விதிப்பின் முக்கிய அம்சமாகும். ஆனால், இந்தியாவில் உலகத்திலேயே அதிகமான நேர்முக வரிகளும்

அட்டவணை எண் 52

(குறிப்பிட்ட சில நாடுகளில் நேர்முக வரிகளின் எண்ணிக்கை)[1]

நாடு	தனி நபர்கள் பங்குதாரர் மீது நேர்முகவரி	நிறுவனங்கள் மீது மறைமுக வரி	மொத்தம்
இந்தியா	8	8	16
அமெரிக்கா	6	4	10
சுவீடன்	6	2	8
ஜப்பான்	5	3	8
இஸ்ரேல்	4	3	7
நெதர்லாந்து	4	3	7
கனடா	5	1	6
ஆஸ்திரேலியா	4	2	6
இங்கிலாந்து	3	3	6
சிலோன்	3	3	6
நார்வே	3	3	6
மேற்கு ஜெர்மனி	2	4	6
துருக்கி	2	2	4

[1] Source :— Economic Trends, Vol. VI, October-December. 1957. p. 148.

உள்ளன. கால்டர் (Kaldor) புதிய வரிகளை விதிக்க வேண்டுமெனக் கூறியபோது, வெளியிடப்பட்ட அட்டவணை (எண்-52) இந்தியாவில் உள்ள ஏராளமான நேர்முக வரிகளைப் பற்றி நமக்கு விளக்குகின்றது.

பதின்மூன்று நாடுகளில் நடைமுறையிலுள்ள 19 வித நேர்முக வரிகளில் 16 வரிகளை, 1957ஆம் ஆண்டிலேயே இந்தியா விதித்து விட்டது. மற்ற நாடுகளில் 4 முதல் 10 வரிகள்தான் விதிக்கப் பட்டன. சமீபத்தில், செலவீட்டு வரி (Expenditure Taxes) இந்தியாவில் நீக்கப்பட்டுவிட்டதால், தற்போதுள்ள நேர்முக வரிகள் 15 ஆகும். இவ்வாறு நேர்முக வரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும், இந்தியாவில் அதன்மூலம் கிடைக்கும் வருவாய் மிகக் குறைவாகவேயுள்ளது. 1950-'51ஆம் ஆண்டில், மொத்த வருவாயில் நேர்முக வரி வருவாய் 36·2% ஆக இருந்தது. அது 1956-'57ஆம் ஆண்டில் 30% ஆகவும், 1961-'62-இல் 27·8% ஆகவும், 1968-'69-இல் 24·3% ஆகவும், 1969-'70-இல் 23·9% ஆகவும் இருந்தது.[1] திட்டங்கள் செயல்படுவதற்கு முன்னர் இருந்ததைவிடத் திட்டக் காலத்தில் மறைமுக வரிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தற்போது நம் நாடு பொருள் வரி விதிப்பினைப் பெருமளவில் சார்ந்துள்ளது. இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாட்டில் மக்களில் பெரும்பாலோர் நேர்முகவரிக்கு இலக்காவதிலை. அதனால் மக்களில் பலரைப் பாதிக்கும் மறைமுக வரிகளின்மூலம் வருமானத்தைச் சேரிக்கவேண்டும். ஆனால் மறைமுக வரி தேய்வுவீத வரிவிதிப்பாகும். முன்னேறிய நாடுகளில் பலவும், சில முன்னேறி வரும் நாடுகளும் தமது வருவாய்த் தேவைகளுக்கு, நேர்முக வரிகளையே பெரிதும் நம்பியுள்ளன. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, பர்மா, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா போன்ற நாடுகளின் மொத்த வரி வருமானத்தில் அரைப் பாகத்துக்கு மேல் நேர்முக வரிமூலம் கிடைக்கின்றது. இந்தியாவில் இது, கால் பங்குதான் ஆகும். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் வருமான வரி செலுத்துவோர் மக்கள்தொகையில் 35%-உம், 27%-உம் ஆகும். ஆனால் இந்தியாவில் 450 நபர்களுக்கு ஒருவர் வீதம் வருமான வரிக்கு இலக்காகின்றனர். அதாவது மொத்த மக்கள்தொகையில் 0·2% ஆகும்[2]. மத்திய அரசின் வரிவிதிப்பில், மத்திய ஆயத்தீர்வைகள், வருவாய் தரும் முக்கிய சாதனமாகும். அதாவது மத்திய அரசின் மொத்த வரிவருமானத்தில், இதன் மூலம் கிடைத்த வருவாய் 1950-'51ஆம் ஆண்டில் 16·7% ஆக இருந்து, 1971-'72ஆம் ஆண்டில் 44% ஆக உயர்ந்துள்ளது. அதாவது மத்திய ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைத்த வருவாய் 2963%-உம், சுங்க வரி வருவாய் 240%-உம், வருமான வரி வருவாய் 296%-உம், இதர வரி வருவாய் 66·5%-உம் அதிகரித்தன. இந்த

[1] R. C. Saxena and P. C. Mathur, Public Finance 1970, p. 369.

[2] P. K. Bargava - Indian Tax Structure - A brief review, The Indian Journal of Public Administration, July-Sep, 1972, p. 437

அடிவிவரங்களிலிருந்து (data) இந்திய வரியமைப்பில் மத்திய ஆயத்தீர்வைகளின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதைக் காணலாம்.[1]

18.3. நேர்முக வரி விதிப்பு (Direct Taxation) :- இந்திய வரியமைப்பில் நேர்முக வரியின் பங்கு மிகக் குறைவாக இருந்த போதிலும், இந்தியாவில் அவை அமித வளர்வீதமுடையவை (Over-Progressive) யாகவுள்ளன. இந்தியாவின் நேர்முக வரிகளின் இறுதிநிலை வீதங்களே (Marginal Rate) உலகத்திலேயே உயர்ந்தவை எனலாம். தற்போது, ரூ. 2 இலட்சத்திற்குமேல் வருமான முடையோர்க்கு இறுதிநிலை வருமான வரிவீதம் 97.75% ஆகும். ஆனல், இது பிரான்சில் 45% ஆகவும், ஜெர்மனியில் 53% ஆகவும், சுவீடனில் 65% ஆகவும், அமெரிக்காவிலும், பாகிஸ்தானிலும் 70% ஆகவும் இருப்பதைக் கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் நிறுவன வரிகளின் உச்சவீதங்கள் சில முன்னேறிய நாடுகளில் இருப்பதைவிட அதிகமாவுள. உதாரணமாக, இந்தியாவில் நிறுவனவீதங்கள் 60%-லிருந்து 75% ஆக இருக்கும்போது, ஹாங்காங் (Hongkong) நாட்டில் 12.5%, ஐக்கிய அராபியக் குடியரசில் 18.7%, துருக்கியில் 20%, கொரியாவில் 25%, கனடாவிலும், பிரான்சு, நெதர்லாந்து, பாகிஸ்தானிலும் 50%, ஆஸ்திரியாவில் 52%, இங்கிலாந்தில் 54% ஆகவும் உள்ளன. இவ்வாறு, மற்ற நாடுகளைவிட நம் நாட்டில் இறுதிநிலை வீதங்கள் (Marginal Rates) மிக அதிகமாக இருப்பதால் ஊக்கம் குறைக்கப்பட்டு, வரியிலிருந்து தப்புவதற்கு அதிக அளவில் முயற்சி செய்கின்றனர்.

18.4 விவசாயப் பகுதியில் குறைவான வரிவிதிப்பு (Under taxation of agricultural sector):- தொழில் நடத்தும் ஒருவர் ரூ 2 இலட்சங்களுக்குமேல் சம்பாதித்தால், அதில் 97·75%-ஐ அரசுக்குக் கொடுக்க வேண்டியிருப்பதும், விவசாயி ஒருவர் அதே வருமானத்தைச் சம்பாதித்தாலும் அதில் பெரும்பாகத்தை அவரே வைத்துக்கொள்ளலாம் என்றிருப்பதும், இந்திய வரியமைப்பின் விசேஷ அம்சமாகும். விவசாயிகள் நில வரி, விவசாய வருமான வரி ஆகிய இரு முக்கிய வரிகளைச் செலுத்துகின்றனர் என்பதை அறியவேண்டும். அரசிறை முக்கியத்துவத்தை (Fiscal Importance. இவ்விரு வரிகளும் மிக வேகமாக அழிந்துவருகின்றன. முதல் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், மாநில வரி வருவாயில், நிலவரி, விவசாய வருமான வரி இவற்றிலிருந்து கிடைத்த வருவாய் 27·9% ஆக இருந்தது. இரண்டாம் திட்டக் காலத்தில் இதுவே 26% ஆகவும், மூன்றும் திட்டக் காலத்தில் 18·4% ஆகவும், 1971-'72-இல் 7·1% ஆகவும் குறைந்துள்ளது. இதர வருமான வரி, நிறுவன வரி இவை தேசிய வருவாயில் 4·1%-லிருந்து 4·6% ஆக உயர்ந்திருக்கும் போது, நில வரி, விவசாய வருமானவரி இவை தேசிய வருவாயில்

[1] Ibid-p, 439.

1·63% ஆக இருந்து 0·85% ஆகக் குறைந்துள்ளது. இவ்வாறு, விவசாய வருமானம், இதர வருமானம் என இருவகையாகப் பிரித்ததன் விளைவாக வரியிலிருந்து தப்புதல் (Evasion) அதிகமாகிக் கறுப்புப் பணம், வெள்ளைப்பணமாக மாற்றப்படுவதற்கும் உதவியாக வுள்ளது. இவ்விருவகை வருமானங்களையும் வேறுபடுத்தியிருப்பதைப் பற்றிப் பரிசீலிப்பதற்காக, கே. என். ராஜ் என்பவரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக் குழு, சமீபத்தில் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

18·5 வாஞ்சு குழுவின் அறிக்கை (Wanchoo Committee's Report):- வரியிலிருந்து தப்புதலைத் (Tax evasion) தவிர்க்க வழிவகைகளைக் கூறுவதற்கென, இந்திய அரசு, 1970ஆம் ஆண்டில் நீதிபதி வாஞ்சு (Wanchoo) என்பவரின் தலைமையில் நேர்முக வரி விவாரணைக் குழு (Direct Taxes Enquiry Committee) அமைத்தது. 1972ஆம் ஆண்டு, மார்ச் மாதம் அக் குழு தன் அறிக்கையை வெளியிட்டது.

வரியிலிருந்து தப்பும் முயற்சிகளுக்குக் காரணம் உயர்ந்த இறுதி நிலை வரிவீதங்களே என அக் குழு கூறியது. அக் குழுவின் மதிப்பீட்டுக் கேற்ப, 1968-'69ஆம் ஆண்டுக்கான ரூ. 1400 கோடிகள் வரியாகக் கட்டப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளன. "ஆகவே, கறுப்புப் பணத்தைக் கொண்டு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களின் மதிப்பு ரூ. 7000 கோடிகளுக்குக் குறையாமல் இருந்திருக்கும்" (The money value of deals involving black money may, therefore, be not less than Rs. 7000 crores for 1968-'69). மறைவான வியாபார நடவடிக்கைகளுக்கு, தங்கத்தையும், ஆடம்பரப் பொருள்களையும் கள்ளக் கடத்தல் (Smuggling) செய்வதற்கும், பங்குகளையும் (Quotas), அனுமதிச் சீட்டுகளையும் (Licences), அதிக அளவு பணம் கொடுத்து வாங்குவதற்கும், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கு வதற்கும், இன்னொருவர் பெயரில் சொத்துகளைப் பெறுவதற்கும் (Benami) இக் கறுப்புப் பணம் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அக் குழு குறிப்பிட்டுள்ளது.

கூடுதல் வரியுட்பட, வருமான வரியின் உச்ச இறுதிநிலை வரி வீதம், தற்போது 97·75% ஆக இருப்பதை 75%-க்குக் கொண்டு வரவேண்டுமென அக் குழு பரிந்துரைத்துள்ளது. பின்வரும் வருமான வரி வீதத்தைப் பின்பற்றலாமென அக் குழு யோசனை கூறியுள்ளது. (அட்டவணை 53-ஐக் காண்க).

வரி செலுத்துவோர்க்கு "நிலையான கணக்கீட்டு எண்" ஒன்று கொடுக்கப்படவேண்டுமென்றும், பாங்குகளுக்கும், வருமானவரி இலாகாவுக்குமிடையே ஒற்றுமை இருக்க வேண்டுமெனவும் அக் குழு யோசனை கூறியது. இதர வருவாய்களைப் போலவே, விவசாய வருமானத்தின் மீதும் வரி விதிக்கலாமெனவும் கூறப்பட்டது.

பின்வரும் நான்கு அட்டவணைகளிலிருந்து, மத்திய அரசின் வரி வருவாய் வளர்ச்சி பற்றிய அடிவிவரங்களைக் (Data) காணலாம். இவ்வட்டவணைகளில், (1) மத்திய அரசின் வரிவருவாய், மாநில அரசின் வரி வருவாய், மத்திய அரசின் ஆட்சியின்கீழ் உள்ள இதர

மாநிலங்களின் (Union Territories) வரிவருவாய் (அட்டவணை-54) (2) மேற்கூறிய வரி வருவாய் நாட்டு வருவாயில் எவ்வளவு சதவீதம் (அட்டவணை-55) (3) மத்திய அரசின் மொத்த வரிவருவாயில் வெவ்வேறு வரிகளின் பங்கு (அட்டவணை-56) (4) 1950-'51ஆம் ஆண்டு முதல் 1969-'70ஆம் ஆண்டுவரை இந்திய அரசின் வரி வருவாய்ப் பெருக்கம்பற்றிய குறியீட்டு எண் (Index) (அட்டவணை-57) ஆகியவற்றின் புள்ளியியல் விவரங்களை (Statistics) காணலாம். அதைத் தொடர்ந்துவரும் வரைமுகப்படம் (1)-இல், 1950-'51 முதல் 1969-'70-வரை, வரிவருவாய்ப் பெருக்கக் குறியீட்டு எண்களையும், வரைமுகப் படம் (Graph) (2)-இல், 1960-'61 முதல் 1971-'72 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் வரிவிதிப்பு, முன்னேற்றம் விலைவாசிகள் ஆகியவற்றைப் பற்றியும் அறியலாம்.

அட்டவணை எண் :—53

(வாஞ்சு குழுவின் பரிந்துரைப்படி வருமான வரி வீதங்கள்)

வருமானப்பகுதி (ரூ.)	வரிவீதம், (ரூ.)
0—5,000	—
5,001—10,000	10%
10,001—15,000	500+10,000-க்கு மேற்பட்ட வருவாயில் 15%
15,001—20,000	1250+15,000-க்கு மேற்பட்ட வருவாயில் 20%
20,001—25,000	2,250+20,000-க்கு மேற்பட்ட வருவாயில் 25%
25,001—30,000	3,500+25,000-க்கு மேற்பட்ட வருவாயில் 35%
30,001—40,000	5,250+30,000-க்கு மேற்பட்ட வருவாயில் 45%
40,001—50,000	9,750+40,000-க்கு மேற்பட்ட வருவாயில் 50%
50,001—60,000	14,750+50,000-க்கு மேற்பட்ட வருவாயில் 55%
60,001—70,000	20,250+60,000-க்கு மேற்பட்ட வருவாயில் 60%
70,000—க்கு மேல்.	26,250+70,000-க்கு மேற்பட்ட வருவாயில் 65%

அட்டவணை - 54

Tax Receipts of the Centre, States and the Union Territories
மத்திய, மாநில அரசுகள், மத்திய அரசின்கீழ் உள்ள இதர தனிப்பட்ட மாநிலங்கள் ஆகியவற்றின் வரிவருவாய்

Rs. million (பத்து இலட்சத்தில்)

Type of Tax வரி வகை	1950·51	1955-56	1960-61	1965-66	1966-67	1967-68	1968-69 (R.E.)	1969-70 (B.E.)
மொத்த வரி வருவாய் (Total Tax Revenue.)	6,267	7,676	13,504	29,216	32,612	34.522	37,012	39,939
வருமானவரி Income Tax	1,339	1,320	1,687	2,718	3,087	3,256	3,380	3,623
நிறுவன வரி Corporation Tax	393	365	1,097	3,048	3,289	3,503	3,220	3,262
இதர நேர்முக வரிகள் (Other Direct Taxes.)	574	906	1,237	1,575	1,292	1,437	1,543	1,557
மொத்த நேர்முகவரிகள் (Total Driect Taxes.)	2,306	2,591	4,021	7,341	7,668	7,796	8,143	8,442
மத்திய ஆயத்தீர்வை (Union Excise Duties)	675	1,453	4,164	8,979	10,330	11,485	13,205	15,262
சுங்கவரிகள் (Customs)	1,572	1,667	1,700	5,390	5,854	5,133	4,450	4,352
இதர மறைமுக வரிகள் (Other Indirect Taxes)	1,714	1,965	3,619	7,506	8,752	10,138	11,214	11,883
மொத்த மறைமுக வரிகள் (Total Indirect Taxes)	3,961	5,085	9,483	21,875	24,944	26,756	28,869	31,497

source :- Monthly commentary on Indian Economic conditions, Budget Number 1970, The Indian Institute of Public Opinion, p.69.

அட்டவணை எண் 55

மத்திய, மாநில அரசுகள், இதர தனிப்பட்ட மாநிலங்களின் வரி வருவாய், நாட்டு வருவாயில் சதவீதப்படி
(Tax Revenue of the Centre, States and the Union Territories as per cent of National Income)

Year ஆண்டு	Rupees Million (பத்து இலட்சத்தில்) (National Income at Current Prices) தற்போதைய விலைக்கேற்ப நாட்டு வருமானம்	(Tax Revenue) வரி வருவாய்	(Tax Revenue as percent of National Income) நாட்டு வருவாயில் வரி வருவாயின் சதவீதம்	(Year) ஆண்டு	Rupees Million (பத்து இலட்சத்தில்) (National Income at Current Prices) தற்போதைய விலைக்கேற்ப நாட்டு வருவாய்	(Tax Revenue) வரி வருவாய்	Tax Revenue as percent of National Income நாட்டு வருவாயில் வரி வருவாயின் சதவீதம்
1951-52	99,700	7,387	7·4	1960-61	141,400	13,504	9·6
1952-53	98,200	6,778	6·9	1961-62	148,000	15,430	10·4
1953-54	104,800	6,725	6·4	1962-63	154,000	18,651	12·1
1954-55	96,100	7,204	7·5	1963-64	172,100	23,246	13·5
1955-56	99,800	7,675	7·7	1964-65	203,900	25,968	12·3
1956-57	113,100	8,904	7·9	1965-66	205,900	29,216	13·4
1957-58	113,900	10,450	9·2	1966-67	236,000	32,612	13·0
1958-59	126,000	10,893	8·6	1967-68	275,900	37,012	12·5
1959-60	129,500	12,164	9·4	1968-69	277,224	34,522	13·4
				1969-70	304,115	39,939	13·1

Source: Monthly Commentary on Indian Economic Conditions, Budget Number 1970, The Indian Institute of Public Opinion, p. 69.

அட்டவணை எண் 56

மொத்த வரி வருவாயில் பல்வேறு வரிகளின் பங்கு
(Shares of different Taxes in Total Tax Receipts)

சதவீதம்
(In percent)

வரிவகை (Types of Tax)	1950-51	1955-56	1960-61	1965-66	1966-67	1967-68	1968-69	1969-70
வருமான வரி (Income-Tax)	21·4	17·2	12·5	9·3	9·4	9·4	9·1	9·1
நிறுவன வரி (Corporation Tax)	6·3	4·8	8·1	10·4	10·1	9·0	8·7	8·2
எல்லா நேர்முக வரிகள் (All Direct Taxes)	36·8	33·8	29·8	25·1	23·5	22·5	22·0	21·2
மத்திய ஆயத்தீர்வை (Union Excise Duties)	10·8	18·9	30·8	30·7	31·8	33·2	35·6	38·2
சுங்க வரிகள் (Customs)	25·1	21·7	12·6	18·4	17·9	14·8	12·0	10·9
எல்லா மறைமுக வரிகள் (All Indirect Taxes)	63·2	66·2	70·2	74·9	76·5	77·4	77·8	78·8

Source : Monthly Commentary On Indian Economic Conditions, Budget Number, 1970, The Indian Institute of Public Opinion, p. 69.

அட்டவணை எண் 57

வரி வருமானப் பெருக்கக் குறியீடு—1950-51 to 1969-70

(Index of Growth of Tax Revenues—1950-51 to 1969-70)

(1950-51 = 100)

(Year) ஆண்டு	Total Tax Revenue மொத்த வரி வருவாய்	Income Tax வருமானவரி	Corporation Tax நிறுவனவரி	All Direct Taxes எல்லா நேர் முக வரிகளும்	Union Excise Duties மத்திய ஆயத் தீர்வைகள்	Customs சுங்க வரிகள்	All Indirect Taxes எல்லா மறை முக வரிகளும்
1955-'56	122·5	98·6	92·9	112·4	215·3	106·0	128·4
1960-'61	215·5	126·0	279·1	174·4	616·9	108·1	239·4
1965-'66	466·2	203·0	775·6	318·3	1,330·2	342·9	552·3
1966-'67	520·4	230·5	836·9	332·5	1,531·5	372·4	629·7
1967-'68	551·3	243·2	789·5	338·1	1,701·5	326·5	675·5
1968-'69	590·5	252·4	819·3	353·1	1,956·3	283·1	728·8
1969-'70	637·3	270·6	830·0	366·1	2,261·0	276·8	795·2

Source: Monthly Commentary on Indian Economic Conditions, Budget Number, 1970, The Indian Institute of Public Opinion, p. 69.

(Index of Growth of Tax Revenues: 1950-'51—1969-'70)
1950-'51 முதல் 1969-'70 வரை வரி வருவாய்ப் பெருக்கக் குறியீடு



Source: Monthly Commentary on Indian Economic Conditions, Budget Number, 1970, page 67.

18.6 இந்திய அரசின் வரவுசெலவுத் திட்டநிலை (Budgetary Position of Government of India): பின்வரும் ஐந்து அட்டவணைகளும், 1970-'71-இல் வெளியிடப்பட்ட மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களைக் காட்டுகின்றன. அவற்றுள் 1961-'62ஆம் ஆண்டு முதல், வரலாற்று அடிவிவரங்களும் (Historical data) அடங்கியுள்ளன. அட்டவணை எண் 58, இந்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மொத்த (over all) நிலையைப்பற்றி அறிவிக்கின்றது. அட்டவணைகள் 59-ம், 60-ம், வரி வருமானங்களையும், அவை பங்கிடப்படும் விதத்தையும் விளக்குகின்றன. அட்டவணைகள் 61-ம், 62-ம், வரி வருமானம், முதலீட்டுக் கணக்குப்படி (Capital Account) அவை பங்கிடப்படும் விதம் இவற்றைப் பற்றிய விவரங்களைத் தருகின்றன.

1970-'71ஆம் ஆண்டுக்கான, மத்திய அரசின் மொத்தப் பற்றுக்குறை (deficit) ரூ. 225 கோடிகளெனக் கணக்கிடப் பட்டுள்ளது. முதலீட்டுக் கணக்குப்படி ரூ. 365 கோடிகள் குறைவ தாலும், வரி வருவாய்க் கணக்குப்படி ரூ. 140 கோடிகள் உபரி

வரிவிதிப்பு, வளர்ச்சி, விலைவாசிகள்—1960-'61: 1971-'72
(Taxation, Growth and Prices: 1960-'61—1971-'72)
அடிப்படை ஆண்டு: 1960-'61 = 100



Source: Eastern Economic Budget Number.

வருவதாலும், இப் பற்றுக்குறை காணப்படுகிறது. மத்திய அரசின் இப் பற்றுக்குறை நிலை 1960ஆம் ஆண்டு முதல் இருந்து வருவதையும், அப்போதிருந்து 1970ஆம் ஆண்டுக்குள் பற்றுக்குறை அதிகரித்து வருவதையும் வரலாறு காட்டுகின்றது. பின்வரும் மூன்று வரைபடங்களில் (1) 1961-'62 முதல் 1970-'71 வரை, இந்திய அரசின் மொத்த வரவு செலவுத் திட்ட நிலை (அட்டவணை 58); (2) 1961-'62 முதல் 1970-'71 வரை இந்திய அரசின் வரி வருவாய் (அட்டவணை 59); (3) 1961-'62 முதல் 1970-'71 வரை இந்திய அரசின் வரி வருவாய்ச் செலுத்துதல் (அட்டவணை 60) ஆகியவற்றைக் காணலாம்.

அட்டவணை

இந்திய அரசின் மொத்த வரவு செலவுத்
(Over all Budgetary position of the

(Details) விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
I. Revenue Account (வருவாய்க் கணக்கு)				
(a) Receipts வருமானம்	1,189·14	1,460·39	1,868·92	2,101·74
(b) Disbursements செலுத்துதல்	1,064·29	1,346·95	1,681·31	1,827·87
(c) Surplus(+) / Deficit(−) உபரி(+) / பற்றுக்குறை(−)	+124·85	+113·44	+187·61	+273·87
II. Capital Account : (முதலீட்டுக் கணக்கு)				
(a) Receipts வருமானம்	726·32	899·88	1,134·59	1,257·29
(b) Disbursements செலுத்துதல்	965·68	1,169·46	1,489·06	1,703·50
(c) Surplus(+) / Deficit(−) உபரி(+) / பற்றுக்குறை(−)	−239·36	−269·58	−354·47	−445·71
III. Total ; (மொத்தம்)				
(a) Receipts வருமானம்	1,915·46	2,360·27	3,003·51	3,354·53
(b) Disbursements செலுத்துதல்	2,029·97	2,516·41	3,170·37	3,531·37
c) (Surplus(+) / Deficit(−) உபரி(+) / பற்றுக்குறை(−)	−114·51	−156·14	−166·86	—171·84

R. E. Revised Estimates. B.E. Budget Estimates. * Effect of the Budget
Budget, No. 1970, p. 42.

எண் 58

திட்ட நிலை—1961-'62 முதல் 1970-'71 வரை
Government of India—1961-'62 to 1970-'71)

(Rs. Crores)

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R.E.)	1970-71 (B.E.)
2,344·40	2,500·14	2,385·26	2,793·14	2,965·48	3,166·93
2,024·64	2,272·33	2,481·28	2,712·18	2,976·42	3,152·18
+319·76	+227·81	+104·28	+80·96	−10·94	+ 14·75 +124·76*
1,403·26	1,828·52	1,719·80	1,582·48	1,975·51	1,823·71
1,895·78	2,351·62	2,030·37	1,925·82	2,254·68	2,188·46
−492·52	−523·10	−310·57	−343·34	−279·17	−364·75
3,747·66	4,328·36	4,305·36	4,375·62	4,940·99	4,990·64
3,920·42	4,623·95	4,511·65	4,638·00	5,231·10	5,340·64
−172·76	−295·29	−206·29	−262·38	−290·11	+350·00 +124·76*

Proposals. Source :— Monthly Commentary On Indian Economic Condition,

Details விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
I. Taxes on Income and Expenditure (a+b+c)				
I. வருமானம், செலவு மீது வரிகள் (a+b+c)	322·68	407·66	533·01	581·01
(a) Corporation Tax (a) நிறுவனவரி	160·81	220·6	287·30	313·64
(b) Taxes on Income other than Corporation Tax (b) நிறுவன வரி நீங்கலாக இதர வருமான வரி	161·03	187·40	245·58	266·93
(c) Expenditure Tax (c) செலவீட்டு வரி	0·84	0·20	0·13	0·44
II. Taxes on Property and Capital Transactions (a+b+c+d+e)				
II. சொத்து, முதல் மாற்றத்தின்மீது வரி. (a+b+c+d+e)	18·08	20·03	21·51	23·29
(a) Estate Duty (a) எஸ்டேட் வரி	4·21	3·94	4·64	5·43
(b) Wealth Tax (b) செல்வ வரி	8·26	9·54	10·50	10·52
(c) Gift Tax (c) பரிசு வரி	1·01	0·97	1·13	2·22
(d) Land Revenue (d) நில வரி	0·56	0·58	0·30	0·15
(e) Stamps & Registrations (e) முத்திரை வரி, பதிவு வரி	4·04	5·00	4·94	4·97

எண் 59

1961-'62 முதல் 1970-'71 வரை
Government of India 1961-'62 to 1970-'71)

(Rs. Crores)

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R.E.)	1970-71 (B.E.)
577·06	637·51	636·40	678·24	720·01	765·01
304·84	330·80	310·51	299·77	320·00	342·00
271·80	306·63	325·89	378·47	400·00	+ 423·00
					15·00*
0·42	0·08	—	—	0·01	0·01
26·63	24·83	24·81	27·10	30·22	34·23
6·66	6·26	6·37	6·74	7·50	7·50
12·06	10·73	10·70	11·11	14·00	18·00
2·27	1·75	1·30	1·51	1·50	1·50
0·26	0·18	0·14	0·28	0·15	0·15
5·38	5·91	6·30	7·46	7·07	7·08

Details விவரங்கள்	1961-62 A	1962·63 C	1963-64 C	1964-65 O
III. Taxes on Commodities and services : (a+b+c+d+e+f)				
III பொருட்கள்,				
(a+b+c+d+e+f)	712·97	857·35	1,079·30	1216·38
(a) Customs				
(a) சுங்க வரி	212·25	245·96	334·75	397·50
(b) Union Excise duties				
(b) மத்திய ஆயத் தீர்வைகள்	489·31	598·83	729·58	801·51
(c) State Excise duties				
(c) மாநில ஆயத் தீர்வைகள்	2·02	2·26	1·62	1·44
(d) Taxes on Vehicles				
(d) வண்டிகள் மீது வரிகள்	0·60	0·69	1·12	1·18
(e) Sales Tax				
(e) விற்பனை வரி	5·99	6·65	9·01	11·23
(f) Other Taxes & Duties				
(f) இதர வரிகளும், தீர்வைகளும்	2·80	2·96	3·22	3·52
IV. Transfer to State Governments (a+b+c)				
IV. மாநில அரசுகளுக்கு மாற்றம் (a+b+c)	178·38	224·06	259·50	257·89
(a) Income Tax	93·85	95·27	119·29	123·77
(a) வருமான வரி				
(b) Eastate Duty				
(b) எஸ்டேட் வரி	3·88	3·88	4·22	6·78
(c) Union Excise Duties	80·65	124·91	135·99	127·34
(c) மத்திய ஆயத் தீர்வைகள்				
V. Net tax Revenue (I+II+III+IV)				
V. இதர வரி வருவாய் I+II+III+IV	875·35	1,060·98	1,374·32	1,562·79

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R.E.)	1970-71 (B.E.)
1,456·98	1,644·16	1,691·47	1,804·50	1,981·81	2,167·73
538·97	585·37	513·35	446·50	415·00	+ 445·00 + 20·00*
897·92	1,033·77	1,148·25	1,320·67	1,525·72	1679·34 + 135·06*
1·67	2·49	3·74	4·26	4·36	4·58
1·26	1·37	1·55	1·68	2·31	2·43
12·54	15·97	19·07	23·21	24·53	26·02
4·62	5·19	5·51	8·18	9·85	10·36
276·05	372·55	415·74	490·98	621·67	699·79
123·34	137·10	174·52	194·51	293·18	339·17 + 10·00*
6·79	4·54	6·58	5·54	6·98	7·17
145·92	230·91	234·64	290·93	321·51	353·45 + 35·30
1,784.62	1,933·95	1,936·94	2,018·86	2,110·37	2,267·18 + 124·76

Details விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
VI. Interest Receipts (a+b)				
VI. வட்டி வருவாய் (a+b)	84·92	87·44	166·33	168·34
(a) From State, Union Territory Governments				
(a) மாநிலங்கள், இதர தனிப்பட்ட மாநில அரசுகள்	68·75	68·36	118·75	114·53
(b) From Others				
(b) இதர இடங்களிலிருந்து	16·17	19·08	47·58	53·81
VII. Dividends				
VII. இலாபஈவுகள்	81·13	90·67	104·65	120·53
(a) From Railways				
(a) இரயில்வேக்கள்	75·35	81·26	92·95	104·93
(b) From Post and Telegraphs				
(b) தபால், தந்தி இலாகா	4·98	5·67	7·32	8·71
(c) From other undertakings				
(c) இதர தொழில்கள்	0·80	3·74	4·38	6·89
VIII. Other Receipts				
VIII. இதர வருவாய்கள்	147·74	221·30	223·62	250·08
IX. Total Non-tax Revenue (VI+VII+VIII)				
IX. மொத்த வரியல்லாத வருவாய் (VI+VII+VIII)	313·79	399·4	494·60	538·95
X. Total Revenue Receipts (V+IX)				
X. மொத்த வரி வருவாய்கள் (V+IX)	1,189·14	1,460·39	1,868·92	2,101·74

R. E. Revised Estimates. B. E. Budget Estmates. * Effect of the Budge
Budget No. 1970, p. 42.

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 B	1969-70 (RE)	1970-71 (BE)
211·87	269·49	301·71	383·07	434·08 +	461·42
151·75	184·68	200·02	240·71	264·00	290·00
60·12	81·81	101·69	142·36	170·08	171·42
129·50	149·61	169·65	175·54	185·21	195·76
116·28	132·39	141·53	150·56	158·44	167·10
6·57	9·36	17·99	11·84	12·96	14·80
6·65	7·86	10·13	13·94	13·81	13·86
218·41	150·99	177·26	215·67	235·82	242·57
559·78	566·19	648·12	774·28	855·11	899·75
2,344·40	2,500·14	2,385·56	2,793·14	2,965·48	3,166·93 + 124·76*

proposals. Source : Monthly Commentary on Indian Economic Condition,

இந்திய அரசின் வரிவருவாய்ச் செலுத்துதல்
(Revenue Disbursements of The Government

(Details) விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
I. Developmental Expenditure				
I. வளர்ச்சிக்கான செலவு	182·19	216·26	195·28	220·76
(a) Social Services				
(a) சமூகப் பணிகள்	66·93	78·22	88·00	101·96
(b) Economic Services				
(b) பொருளாதாரப் பணிகள்	112·26	138·04	107·28	118·80
II. Defence Expenditure (Net)				
II. பாதுகாப்புச் செலவு	289·54	425·30	704·15	692·85
III. Grants To States Union Territory Govts:- III மாநிலங்களுக்கு உதவி, இதர தனிப்பட்ட மாநிலங்களுக்கு உதவி	194·98	195·03	229·97	268·68
IV. Other Expenditure :				
IV. இதர செலவுகள்	397·58	510·36	551·91	645·58
(a) Collection of Taxes and duties:				
(a) தொழில் வரி வசூல்	21·16	23·47	23·93	26·30
(b) General services.				
(b) பொதுப்பணிகள்	69·12	75·20	77·37	80·75
(c) Debt services				
(c) கடன் திருப்பிக் கொடுப்பதற்கான செலவுகள்	214·44	245·43	278·35	316·41
(d) Currency & Mint				
(d) செலவாணியும், நாணயச்சாலையும்	11·69	22·03	15·50	14·72
(e) Other services				
(e) இதர பணிகள்	81·17	144·23	156·76	207·40
V. Total Revenue Disbursements				
V. மொத்த வருவாய்ச் செலுத்துதல்	1,064·29	1,346·95	1,618·31	1,827 87

R. E. Revised Estimate. B. E. Budget Estimate Source - Monthly

எண் 60

—1961-'62 முதல் 1970-'71 வரை
of India - 1961-62 to 1970-71)

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R.E)	1970-71 (B.E)
257·64	300·47	323·88	343·41	398·14	467·76
118·65	131·56	151·25	166·62	188·10	216·75
138·99	168·91	172·63	176·79	210·35	251·01
762·18	797·80	862·21	929·05	979·32	1,017·84
324 07	405·89	473·30	535·70	592·06	636·10
680·75	768·17	821·89	904·02	1,006·58	1,030·48
30·06	32·18	35·19	38·69	43·93	48·55
93·78	122·99	142·26	159·32	182·34	195·46
370·62	463·45	501·61	528·02	568·56	597·48
17·19	20·22	22·79	24·31	26·86	26·00
169·10	129·33	120·04	153·68	184·89	162·99
2,024·64	2,272·33	2,481·28	2,712·18	2,976·42	3,152·18

Commentary on Indian Economic Condition, Budget No. 1970, p. 44.

அட்டவணை

Capital Receipts of the Government
1961-'62 முதல் 1970-71 வரை

Details விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
I. Public Debt I. பொதுக்கடன்	320·80	401·17	524·83	597·55
(a) Internal debt (a) உள்நாட்டுக் கடன்	72·09	107·90	203·99	112·24
(b) External debt (b) அயல்நாட்டுக் கடன்	248·71	293·27	320·84	485·31
II. Unfunded debt (Net) II. விற்க முடியாத கடன் பத்திரங்கள்	181·79	163·83	295·72	217·45
(a) P.L. 480 deposits (a) P.L. 480 கையிருப்புகள்	54·13	48·07	87·38	— 1·57
(b) Small Savings (b) சிறுசேமிப்புகள்	87.53	73·91	126·88	127·48
(c) Other Items (c) இதர இனங்கள்	40·13	41·85	81·46	91·54
III. Repayment of Loans & Advances III. கடன்களும், முன் பணமும் திருப்பிச் செலுத்துதல்	200·83	170·87	214·38	289·06
IV. Other Heads (Net)* IV. இதர தலைப்புகள்	2·90	164·01	99·66	153·73
V. Total Capital Receipts V. மொத்த முதலீட்டு வருவாய்	726·32	899·88	1,134·59	1,257·79

* Excludes National Transfer of P.L. 480 Loans to the Special Development
Commentary on Indian Economic Conditions, Budget No. 1970, p. 44.

எண் 61

of India 1961-62 to 1970-71

இந்திய அரசின் மொத்த முதலீட்டு வருவாய்

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R. E)	1970-71 (B. E.)
645·78	1148·86	703·93	549·94	679·43	695·22
163·89	444·02	93·78	72·50	144·87	176·47
481·89	704·84	610·15	477·44	534·56	518·75
376.19	191·75	352·54	77·12	226·20	218·67
133·06	—2·66	93·56	—70·50	71·83	13·27
151·35	118·35	123·41	113·71	125·25	140·20
91·78	76·05	135·57	33·91	29·12	65·20
373·49	418·55	494·44	742·38	880·00	825·00
7·80	69·36	177·89	213·04	189·88	84·82
1,403·26	1,828·52	1,719·80	1,582·48	1,975·51	1,823·71

Fund. R. E. Revised Estimates. B. E. Budget Estimates. Source: Monthly

அட்டவணை

1961-'62 முதல் 1970-71 வரை இந்திய
(Capital Disbursements of the Govern-

Details விவரங்கள்	1961 62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
I Developmental Expenditure (A+B) வளர்ச்சிக்கான செலவு (A+B.)	343·48	495·11	613·60	632·08
A. Social Services (i+ii) சமுதாயப் பணிகள் (i+ii)	1·42	1·74	1·52	1·36
(i) Medical & Public Health மருத்துவமும், பொது நலனும்	0·30	0·47	0·04	0·04
(ii) Broad Casting ஒலிபரப்பு	1·12	1·27	1·48	1·32
B. Economic Services (i to ix) பொருளாதாரப் பணிகள்	342·06	493·47	612·08	630·72
(i) Agriculture & Allied Services விவசாயமும், அதைச்சார்ந்த பணிகளும்	5·31	3·99	1·70	2·86
(ii) Industries தொழில்கள்	93·35	162·40	198·45	179·40
(iii) Atomic Energy Development அணுசக்தி வளர்ச்சி	2·73	3·89	0·51	14·64
(iv) Irrigation and Power நீர்ப்பாசனமும், மின்சக்தியும்	2·65	3·56	8·91	14·31

R.E : Revised Estimates : B.E : Budget

எண் 62

அரசின் முதலீட்டுச் செலுத்துதல்

ment of India 1961-62 to 1970-71)

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969-70 (R.E)	1970-71 (B.E)
579·02	511 48	465·34	498·88	653·60	727·39
1·23	1·59	4·55	3·64	3·41	4·84
0·07	0·23	0·46	0·34	0·19	0·67
1·16	1·36	4·09	3·30	3·22	4·17
577·79	509·89	460·79	495·24	650·19	722·55
2·65	2·46	6·85	7·07	24·35	23·89
116·54	134·34	144·49	190·17	292·94	271·89
31·13	56·69	25·54	37·27	15·40	21·36
20·62	17·18	19·52	25·69	63·73	77·39

Estimates : Source : Ibid.

அட்டவணை எண்

Details விவரங்கள்	1961-62 A	1962-63 C	1963-64 C	1964-65 O
(v) Public Works பொதுத்துறைப் பணிகள்	19·12	19·71	19·90	24·06
(vi) Transport and Communications போக்குவரத்து	51·75	48·59	72·70	67·13
(vii) Railways இரயில்வேக்கள்	144·91	214·89	260·52	275·37
(viii) Post & Telegraphs. தபால், தந்தி இலாகா	11·25	20·95	31·48	30·36
(ix) Grants for Development to State& Union Territory Governments மாநிலங்கள், இதர தனிப்பட்ட மாநிலங்களுக்கு வளர்ச்சிக்கான உதவி	10·99	15·38	17·91	22·59
II Other Expenditure இதர செலவினங்கள்	11·04	—13 99	23·01	29·76
III Defence Expenditure பாதுகாப்புச் செலவு	22·95	48·61	111·97	112·95
IV Loans and Advances (i+ii) கடன்களும் முன்பணங்களும் (i+ii)	588·21	639·73	740·78	928·71
(i) States & Union Territovies மாநிலங்கள், இதர தனிப்பட்ட மாநிலங்கள்	443·47	511·09	583·60	678·70
(ii) Other parties இதர பகுதியினர்	144·74	128·64	156·88	250·01
V Total Capital Disbursements. மொத்த முதலீட்டுச் செலுத்துதல்	965·68	1,169·46	1,489·06	1,703·50

62-தொடர்ச்சி

1965-66 U	1966-67 N	1967-68 T	1968-69 S	1969 70 (R.E)	1970-71 (B E.)
21·94	15·08	21·40	16·73	23·12	41·67
66·35	54·24	44·61	53·11	68·21	100·77
245·09	160·70	135·93	121·47	124·86	150·00
31·38	29·77	26·44	26·72	35·96	35·00
42.09	39·43	36·01	17·01	1·62	0·61
-5 83	322·07	95·04	-175·11	-6·54	-18·04
122·57	119·79	106·22	104·14	125·42	133·67
1,200·02	1,407·28	1,363·77	1,497·91	1,482·20	1,345·44
829·92	930·90	891·94	915·27	1,057·07	878·25
371·10	476·39	471·83	582·64	424·23	467 19
1,895·78	2,351·62	2,030·37	1,925·82	2,254·68	1,88 46

1961-'62 முதல் 1970-'71 வரை இந்திய அரசின் மொத்த வரவு செலவுத்திட்ட நிலை

(Over all Budgetary Position of the Govt. of India 1961-'62—1970-'71)



Source : Monthly Commentary Economic on Indian Condition, Budget No. 1970, p. 39

18·7 பொதுச் செலவினப் போக்குகள் (Trends in Public Expenditure) :- சுதந்திரம் பெற்ற பின்னர் புதிய பணிகளையும், பொறுப்புகளையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, நம் நாட்டில் அரசிறைக் கைக்கோளின் (Fiscal Policy) பங்கு அதிகரித்து வருகின்றது. 1950-'51ஆம் ஆண்டில் ரூ. 914 கோடிகள் அதாவது நாட்டு வருவாயில் 9·6% ஆக இருந்த மத்திய, மாநில அரசுகளின் செலவு, இந்த இருபது ஆண்டுகளில் பத்து மடங்காகப் பெருகி

யிருப்பதிலிருந்து இதனைத் தெளிவாக அறியலாம். 1972-'73ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 9,787 கோடிகள், நாட்டு வருமானத்தில் கிட்டத்தட்ட 25% ஆக இருக்கலாம்.[1] இப்பெருக்கம்

1961-'62 முதல் 1970-'71 வரை இந்திய அரசின் வரி வருவாய்
(Revenue Receipts of the Govt of India 1961-'62—1970-'71)



Source :- Monthly Commentary on Indian Economic Condition, Budget Number, 1970, p. 40.

பெரும்பாலும் வளர்ச்சிக்கான செலவீடுகளினால்தான் எனலாம். 1950-51ஆம் ஆண்டில் ரூ. 534 கோடிகளாக இருந்த வளர்ச்சிக் கல்லாத செலவு 1972-'73-இல் ஏழு மடங்காகப் பெருகி, ரூ. 4,036 கோடிகளானது. இதே சமயத்தில் வளர்ச்சிக்கான செலவு, 15 மடங்காகப் பெருகி, அதாவது ரூ. 380 கோடிகளிலிருந்து ரூ. 5,751 கோடிகளாக ஆகியது. 1950-'51ஆம் ஆண்டில் மத்திய,

[1] Y. B. Chavan "Fiscal Policy for Growth with Social Justice," Capital Annual No. 1972, p. 19.

மாநிலச் செலவுகளில், வளர்ச்சிக்கான செலவு 40% ஆக இருந்தது. 1972-'73ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 60% ஆக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்தச் செலவினங்களில், பொதுத்துறைச் செலவினங்களின் பங்கு, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் இருப்பதைவிட நம் நாட்டில் மிகக் குறைந்த நிலையில் உள்ளது.[9]

1951-'62 முதல் 1970-'71 வரை இந்திய அரசின் வருவாய்ச் செலுத்துதல்

(Revenue Disbursements of the Govt. of India 1961-'62—1970-'71)



Source Monthly Commentary on Indian Economic Condition Budgt No. 1970, p. 41

18·8 மாநிலங்களின் நிதிகள் (The States' Finances): இந்தியப் பொருளாதாரத்தின் மொத்த வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகளில், மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டம் ஒரு பகுதிதான்

[9] Ibid, p. 19.

எனலாம். வரவு செலவு நடவடிக்கைகளைப்பற்றி அறிய வேண்டுமெனில், மாநில நிதிகளின் போக்குகளைப்பற்றிப் படிக்க வேண்டியது அவசியம்.

மாநிலங்களின் வருமான ஆதாரங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன, மாநில வரி வருவாய், மத்திய வரிகளில் மாநில அரசுகளின் பங்கு, வரியில்லாத இதர வருவாய், மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மான்யத் தொகைகள், கொடைகள் (Contributions) பின்வரும் அட்டவணை (எண்-63)இல் மாநில அரசுகளின் மேற்கூறியவருமான ஆதாரங்களின் பங்குகளை (Roles) ஒப்பிட்டு அறியலாம். மாநிலங்களின் வரி வருவாயின் பங்கு (share) 1951-'52ஆம் ஆண்டில் 58% ஆக இருந்து 1971-72-இல் 43% ஆகக் குறைந்துள்ளது. இதே சமயத்தில் மத்திய அரசிடமிருந்து மாநிலங்கள் பெறும் வரி வருவாய் 13% லிருந்து 23% ஆக உயர்ந்துள்ளது, வரியல்லாத இதர வருவாய்களும், 23%-லிருந்து 16%ஆகக் குறைந்துள்ளது. இதே சமயத்தில், உதவி மான்யத் தொகை 6% லிருந்து 18% ஆக உயர்ந்துள்ளது. உதவியாகவோ, கடனுகவோ மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து பெரும் தொகைகளைப் பெறுகின்றன. இதன் விளைவாக, 1970-'71 ஆம் ஆண்டில், மாநிலங்களின் மொத்த வருவாயான ரூ. 4,199 கோடிகளில், ரூ 1,930 கோடிகள் மத்திய அரசிடமிருந்து பெற்றதாகும். இத் தொகையில், ரூ. 683 கோடிகள், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து வரி வருவாய்ப் பங்கீட்டின்படியும், ரூ. 1,246 கோடிகள் உதவியாகவும், கடனுகவும் பெற்றதாகும். 1970-'71ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் அனுமதித்துள்ளபடி மாநில அரசுகளுக்கு மத்திய அரசின் உதவி மேலும் அதிகரிக்குமெனலாம். மேலும், பின்வரும் அட்டவணை (எண்·63)இல், மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களையும் (Sources of Funds) அவை பயன்படுத்தப்படும் விதங்களையும் காணலாம். மாநில அரசுகளின் திட்டச் செலவுக்கான நிதியில் 50% மத்திய அரசின் உதவியிலிருந்து கிடைக்கின்றது. இதை அட்டவணை (எண்-64)இல் காணலாம். இதிலிருந்து, மாநிலத் திட்டங்கள், மத்திய அரசினை எவ்வாறு பெருமளவில் சார்ந்துள்ளன என்பதையும் அறியலாம்.

அட்டவணை எண் 64

மாநிலத்திட்டங்கள் : செலவும், மத்திய அரசின் உதவியும்
(State Plans : Outlay And Central Assistance)

ரூபாய் – கோடிகளில்

மாநிலங்கள் State		நான்காவது திட்டம் [Fourth Plan(Draft)] (Total outlay) மொத்தச் செலவு	(Central assistance மத்திய அரசின் உதவி
1. Andhra Pradesh	— ஆந்திரப் பிரதேசம்	360·55	240·00
2. Assam	— அஸ்ஸாம்	225·50	220·00
3. Bihar	— பீஹார்	441·01	338·00
4. Gujarat	— குஜராத்	450·22	158·00
5. Haryana	— அரியானா	190·49	78·50
6. Jammu & Kashmir	— ஜம்மு, காஷ்மீர்	145·00	145·00
7. Kerala	— கேரளம்	258·40	175·00
8. Madya Pradesh	— மத்தியப்பிரதேசம்	355·96	262·00
9. Maharashtra	— மகாராட்டிரம்	811·80	245·50
10. Mysore	— மைசூர்	327·10	173·00
11. Nagaland	— நாகாலாந்து	35·00	35·00
12. Orissa	— ஒரிஸ்ஸா	180·50	160·00
13. Punjab	— பஞ்சாப்	271·40	101·00
14. Rajasthan	— இராஜஸ்தான்	238·95	220·00
15. Tamil Nadu	— தமிழ்நாடு	502·00	202·00
16. Uttar Pradesh	— உத்திரப்பிரதேசம்	951·00	526·00
17. West Bengal	— மேற்கு வங்காளம்	320·51	221·00
Total	மொத்தம்	6,066·00	3,500·00

Source: Monthly Commentary on Indian Economic Conditions Budget-Number, 1970-March-April, Indian Institte of Public Opinion.

Sources of Funds	I நிதி ஆதாரங்கள்			
I State Sources:	மாநில ஆதாரங்கள்			
1. Tax Revenue	1. வரி வருவாய்	1,252·69	1,315·67	1,418·51
2. Non Tax Revenue	2. வரியல்லாத வருவாய்	758·35	809·84	861·32
3. Capital Receipts (net)	3. முதலின வரவு (நிகரம்)	9·70	26·44	—10·93
Total state sources	மாநிலத்தில் மொத்த நிதி ஆதாரங்கள்	2,020·74	2,151·95	2,268·90
II Central sources:-	II மத்திய அரசின் வருவாய் வகைகள்			
1. Share in taxes	1. வரிகளில் பங்கு	489·93	613·26	683·49
2. Grants	2. உதவிகள்	534·93	540·07	504·51
3. Loans	3. கடன்கள்	782·06	951·69	741·70
Total Central sources	மத்திய அரசின் மொத்த வருவாய் வகை	1,806·92	2,105·02	1,929·70
Total Sources Available	மொத்தத்தில் கிடைக்கும் ஆதாரங்கள்	3,877·66	4,256·97	4,198·60
Surplus (+) or Deficit (-)	உபரி (+) அல்லது பற்றுக்குறை (-)	— 381·61	— 120·03	—200·86

அட்டவணை எண் 64

மாநிலத்திட்டங்கள் : செலவும், மத்திய அரசின் உதவியும்
(State Plans : Outlay And Central Assistance)

ரூபாய் – கோடிகளில்

மாநிலங்கள் State		நான்காவது திட்டம் [Fourth Plan(Draft)] (Total outlay) மொத்தச் செலவு	(Central assistance மத்திய அரசின் உதவி
1. Andhra Pradesh	— ஆந்திரப் பிரதேசம்	360·55	240·00
2. Assam	— அஸ்ஸாம்	225·50	220·00
3. Bihar	— பீஹார்	441·01	338·00
4. Gujarat	— குஜராத்	450·22	158·00
5. Haryana	— அரியாணு	190·49	78·50
6. Jammu & Kashmir	— ஜம்மு, காஷ்மீர்	145·00	145·00
7. Kerala	— கேரளம்	258·40	175·00
8. Madya Pradesh	— மத்தியப்பிரதேசம்	355·96	262·00
9. Maharashtra	— மகாராட்டிரம்	811·80	245·50
10. Mysore	— மைசூர்	327·10	173·00
11. Nagaland	— நாகாலாந்து	35·00	35·00
12. Orissa	— ஒரிஸ்ஸா	180·50	160·00
13. Punjab	— பஞ்சாப்	271·40	101·00
14. Rajasthan	— இராஜஸ்தான்	238·96	220·00
15. Tamil Nadu	— தமிழ்நாடு	502·00	202·00
16. Uttar Pradesh	— உத்திரப்பிரதேசம்	951·00	526·00
17. West Bengal	— மேற்கு வங்காளம்	320·51	221·00
Total	மொத்தம்	6,066·00	3,500·00

Source: Monthly Commentary on Indian Economic Conditions Budget-Number, 1970-March-April, Indian Institte of Public Opinion.

மாநில வரிகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மாநிலத்தின் நிலைமையையும் அறிவது அவசியமாகும். பின்வரும் அட்டவணை (எண்-65) நாட்டின் மொத்த வரிவருவாயில், மாநில வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு சதவீதம் என்பதைக் காட்டுகின்றது. மொத்தமாகப் பார்த்தால், அது குறைந்து வருவதைக் காணலாம். இக் குறைவு, ஒவ்வொரு மாநிலத்திலும் வேறுபட்டுள்ளது. சில முன்னேறிய மாநிலங்களான மகாராட்டிரம், பஞ்சாப், தமிழ் நாடு, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றில் இது 50% முதல் 58%-க்குள்ளாக உள்ளது. குஜராத், தமிழ்நாடு, கேரளம், மைசூர், பஞ்சாப், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக, மொத்த வரி வருவாயில் இம் மாநில வரிவருவாயின் சதவீதம் சில ஆண்டுகளாக அதிகரித்து வருவதைக் கவனிக்கவேண்டும்.

மொத்த வரிவருவாயில், தனிப்பட்ட வரிகளின் (Individual taxes) பங்கினையும், முக்கியத்துவத்தையும் கவனிக்கும்போது அதுவும் வேறுபட்டிருப்பதை அறிய வேண்டும். தொடர்ந்து காணப்படும் அட்டவணை இந் நிலையை விளக்குகின்றது. நிலவரி வருவாய், விவசாய வருமானவரி, முத்திரை வரி (Stamp duty) பதிவுக் கட்டணங்கள் (Registration Charges), நகர்ப்புறத்திலுள்ள இடம் பெயர்க்க முடியாத சொத்துகள்மீதுவரி, மாநில ஆயத்தீர்வைகள் (State Excise) இவற்றிலிருந்து கிடைத்த வருவாய் 1951-'52 முதல் 1971-'72ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலச் சராசரி வருவாயை விடக் குறைவாகவே உள்ளன. சில மாநிலங்கள் நிலவரியை எடுத்து விடலாம் என்று தீர்மானித்ததன் விளைவாக, 1967ஆம் ஆண்டு முதலாக, நிலவரி வருவாய் குறைய ஆரம்பித்தது. பொது விற்பனை வரி, மோட்டார் வண்டி வரி, பெட்ரோல் வரி, கேளிக்கை வரி, மின்சாரவரிகள் இவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் இச் சராசரி வருவாயைவிட அதிகரித்துள்ளது. தனிப்பட்ட வரிகளின் முக்கியத்துவம் மாறும் நிலையை அட்டவணையில் காணலாம். விற்பனை வரிகளும், மோட்டார் வண்டி வரிகளும் மாநில வரி வருவாயில் 50%-ஐ வருவாயாகக் கொடுக்கின்றன. ஆகவே, மாநிலங் களுக்கு அதிக வருமானம் தேவையானபோது அவை இவ் வரிகளையே நாடுகின்றன.

அட்டவணை எண் 66

நாட்டின் மொத்த வரிவருவாயில் மாநில வரிகள்
(State Taxes in Total Revenue of States)

(Rs. Crorres)
(ரூ. கோடிகளில்)

Heads of Revenue வரி வருவாய்த் தலைப்புகள்	1971-72	Percentage சதவீதம்	Average on first Plan முதல் திட்டத்தில் சராசரி	Percentage சதவீதம்	Average in Second Plan இரண்டாம் திட்டத்தில் சராசரி	Percentage சதவீதம்	Average in Third Plan மூன்றாம் திட்டத்தில் சராசரி	Percentage சதவீதம்	1966-67	Percentage சதவீதம்	1971-72	Percentage சதவீதம்
(State Taxes) மாநில வரிகள்	228	58	253	54	389	48	673	46	942	44	1,607	43
Devolutions	53	13	69	15	132	16	234	16	364	17	860	23
வரியல்லாத வருவாயும் இதர வருவாயும் (Non-Tax Revenue miscelaneous·)	90	23	107	23	202	25	313	21	432	20	610	16
உதவி மான்யம் (Grants-in-aid)	25	6	38	8	85	11	247	17	397	19	675	18
மொத்தம் (Total)	396	100	467	100	808	100	1,467	100	2,135	100	3,752	100

* Budget estimates. Source : Bulletins of Reserve Bank of India.

அட்டவணை எண் 67

மாநில வரிகளும் திட்டத்திலுள்ள வளர்ச்சிக்குதவாத செலவும்
(State Taxes and Non-Development Expenditure)

ரூ. கோடிகளில்

(Heads of Revenue) வரி வருவாய்த் தலைப்புகள்	1951-52	(Average in First Plan) முதல் திட்டத்தில் சராசரி	(Average in Second Plan) இரண்டாம் திட்டத்தில் சராசரி	(Average in Third Plan) மூன்றும் திட்டத்தில் சராசரி	1966-67	1971-72*
State Taxes மாநில வரிகள்	228	253	389	673	942	1,607
(Non-Development Expenditure) வளர்ச்சிக்கல்லாத செலவினங்கள்	196	229	344	616	981	1,586
(Surplus) உபரி	32	24	45	57	— 39	21

*Budget Estimates, Source : Bulletins of Reserve Bank of India

அட்டவணை எண் 68

தனிப்பட்ட மாநில வரிகள்

(Individual State Taxes)

ரூ. கோடியில்

Heads of Revenue வரி வருவாய்த் தலைப்புகள்	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாயில் சதவீதம்	1951-52	(Average in First Plan) முதல் திட்டத்தில் சராசரி	(Average in second Plan) இரண்டாம் திட்டத்தில் சராசரி	(Average in Third Plan) மூன்றும் திட்டத்தில் சராசரி	1966-67	1971-72*	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாய்ச் சதவீதம்
Land Revenue நிலவரி	21	48	65	91	114	90	101	6
Agricultural Income Tax விவசாய வருமானவரி	2	4	5	8	10	11	13	1
Stamps and Registration முத்திரை வரி, பதிவு வரி	11	26	27	37	60	81	130	8
Urban Immovable Property Tax நகர்ப்புற இடம் பெயர்க்க முடியாத சொத்து வரி	1	2	2	2	3	3	5	—

State Excise மாநில ஆயத்தீர்வைகள்	21	49	46	48	75	109	209	13
General Sales Tax பொது விற்பனை வரி	24	54	62	116	246	407	742†	46
Sales Tax on Motor Spirit பெட்ரோல் விற்பனை வரி	2	5	5	10	23	36	53	3
Motor Vehicles Tax மோட்டார் வண்டி வரி	4	10	13	25	53	69	188‡	12
Entertainment Tax கேளிக்கை வரி	3	6	6	10	22	35	58	4
Electricity duties மின்சார வரி	2	4	5	10	26	43	70	4
Other Taxes and Duties இதர வரிகளும், தீர்வைகளும்	9	20	17	32	41	53	38	2
மொத்தம்	100	228	253	389	673	937	1,607	100£

* Budget Estimate † Includes Central Sales Tax ‡ Includes Tax on Passengers & Goods £ Percentage does not add up to 100 because of rounding

அட்டவணை எண் 68

தனிப்பட்ட மாநில வரிகள்

(Individual State Taxes)

ரூ. கோடியில்

Heads of Revenue வரி வருவாய்த் தலைப்புகள்	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாயில் சதவீதம்	1951-52	(Average in First Plan) முதல் திட்டத்தில் சராசரி	(Average in second Plan) இரண்டாம் திட்டத்தில் சராசரி	(Average in Third Plan) மூன்றும் திட்டத்தில் சராசரி	1966-67	1971-72*	(Percentage of State Tax Revenue) மாநில வரி வருவாய்ச் சதவீதம்
Land Revenue நிலவரி	21	48	65	91	114	90	101	6
Agricultural Income Tax விவசாய வருமானவரி	2	4	5	8	10	11	13	1
Stamps and Registration முத்திரை வரி, பதிவு வரி	11	26	27	37	60	81	130	8
Urban Immovable Property Tax நகர்ப்புற இடம் பெயர்க்க முடியாத சொத்து வரி	1	2	2	2	3	3	5	—

State Excise மாநில ஆயத்தீர்வைகள்	21	49	46	48	75	109	209	13
General Sales Tax பொது விற்பனை வரி	24	54	62	116	246	407	742†	46
Sales Tax on Motor Spirit பெட்ரோல் விற்பனை வரி	2	5	5	10	23	36	53	3
Motor Vehicles Tax மோட்டார் வண்டி வரி	4	10	13	25	53	69	188‡	12
Entertainment Tax கேளிக்கை வரி	3	6	6	10	22	35	58	4
Electricity duties மின்சார வரி	2	4	5	10	26	43	70	4
Other Taxes and Duties இதர வரிகளும், தீர்வைகளும்	9	20	17	32	41	53	38	2
மொத்தம்	100	228	253	389	673	937	1,607	100£

* Budget Estimate † Includes Central Sales Tax ‡ Includes Tax on Passengers & Goods £ Percentage does not add up to 100 because of rounding

வெவ்வேறு மாநிலங்களில் உள்ள வரிவிதிப்பு மட்டத்தைப் (level) பற்றி அறிவதற்காக, 1967-'68ஆம் ஆண்டுக்கான மாநிலங்களின் முக்கிய வரிவருவாயில், தலா வரி வருவாய்(Per Capita Revenue) பற்றியும், மொத்த வரி வருவாயில் தலா வரி வருவாயைப் பற்றியும் (Total Per Capita Tax Revenue) அடிவிவரங்கள் (data) பின்வரும் அட்டவணை (எண்-69) யில் கொடுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களில், மொத்தவரி வருவாயில் தலா வரி வருவாயில் அதிக வேறுபாடு உள்ளது அதாவது, அது பீகார், ஒரிஸ்ஸா மாநிலங்களில் ரூ. 12 ஆகவும், பஞ்சாப், மகாராட்டிரத்தில் ரூ 37 ஆகவும் இதர மாநிலங்களில் சுமார் ரூ.22 ஆகவும் இருக்கின்றது. சராசரித் தலா வரி வருவாயைவிட, பஞ்சாப், மகாராட்டிரம், குஜராத், தமிழ்நாடு, ஹரியானா, கேரளம். மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அதிகமான தலா வரி வருவாய் கிடைக்கின்றது. இதர மாநிலங்களின் தலா வரி வருவாய், சராசரித் தலா வரி வருவாயைவிடக் குறைவாகவேயுள்ளன.

மாநில வருவாய்க்கும், மாநில வரிவருவாய்க்கும் உள்ள விகிதத்திலும் (ratio) பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மாநிலங்களின் சராசரி வீதம் 5·2% ஆகும். இது ஒரிஸ்ஸாவில் 3·5% ஆகவும், கேரளத்தில் 7% ஆகவும், இதர மாநிலங்களில் இவை இரண்டிற்கு மிடையேயுள்ள வீதங்களாவும் உள்ளது. ஒரேவித வருமானத்தை யுடைய மாநிலங்களும் மொத்த வருமானத்திற்கும், வரி வருவாய்க்குமுள்ள விகிதம் மாறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

18·9 மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டங்கள் (State Lotteries):- பல மாநிலங்களில், 1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், பரிசுச் சீட்டுத் திட்டம், ஒன்றுக்குப்பின்ஒன்றுகத் தொடங்கப்பட்டது. ஆந்திரப் பிரதேசம், குஜராத், நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் இத் திட்டம் இல்லை. இத் திட்டத்தின்மூலம் கிடைக்கும் நிகர வருவாய் ரூ. 15 கோடிகளாக உள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும், இவ் வருவாய் நாளடைவில் குறைந்து வருகின்ற போதிலும், ரூ. 15 கோடிகளுக்குக்கீழ்க் குறையாது என எதிர்பார்க்கப்படுகிறது. சில முன்னேறிய மாநிலங்களில், அதாவது மகாராட்டிரத்திலும், தமிழ் நாட்டிலும், வளர்ச்சி குறைந்த மாநிலங்களைவிட இத் திட்டத்தின் மூலம் அதிக வரிவருவாயைக் காணலாம். மாநிலங்களைப் பொருத்தமட்டிலும், இப் பரிசுத் திட்டம், வரியல்லாத வருமானங்களில் ஒரு நிலையான பகுதியாக ஆகிவிட்டதில் ஐயமேதுமில்லை.

18·10 தமிழ் நாட்டில் நகர்ப்புற நிலவரி (Urban Land Tax in Tamil Nadu):- தமிழ் நாட்டில், சமீபத்தில் புகுத்தப்பட்ட நகர்ப்புற நில வரியைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். 1963 ஆம் ஆண்டில், இதற்கான சட்டம் வெளியான போதிலும், தலைமை நீதிமன்றத்தினால் (Supreme Court) நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்தால், இவ் வரி 1966ஆம் ஆண்டில்தான் நடைமுறைக்கு வந்தது. முதலில் வெளியான சட்டப்படி, இவ் வரி, நகரிலுள்ள நிலங்களின் விலைமதிப்பில் 0·4% ஆகும். 1969 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்ட சட்டப்படி, இவ் வரி வீதங்கள் 0·5% லிருந்து 1% வரை வளர்வீதத்தில் ஆக்கப்பட்டன. முதலில் சென்னை நகரத்தில் மட்டும் விதிக்கப்பட்ட இவ் வரி, தற்போது, தமிழ்நாட்டின் இதர நகரங்களான மதுரை, திருச்சி, கோயம்புத்தூரிலும் புகுத்தப் பட்டுள்ளது. நாளுக்குநாள் நகரத்திலுள்ள நிலங்களின் மதிப்பு உயர்ந்து வருவதால், மாநிலங்களுக்கு இதிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகரித்து வருகின்றது. மேலும் இதன் விளைவாக, நிலங்கள் முன்னைவிட அதிகப் பயனைப் பெறும் விதத்தில் உபயோகப் படுத்தப்படுமென்றும், முன்போல ஒரு சிலரே அதிக அளவு நிலத்திற்கு உடைமையாளராயிருக்கும் நிலை மறையுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

18·11 மாநில வரி வருவாய்ப் பற்றாநிலை (Inadequacy of Tax Revenues):- கூட்டாட்சிகள் ஒவ்வொன்றிலும் மாநிலங்களின் நிதித் தேவை, வருவாய் திரட்டும் திறமை இரண்டுக்குமிடையே சமமற்ற நிலை இருப்பது புதிதன்று. மாநிலங்களின் முன்னேற்றத்துக்கான சில திட்டங்களைச் செயலாற்ற வேண்டியிருப்பதால், இந்தியாவில் சமீப ஆண்டுகளாக, இச் சமமற்ற நிலை பெருமளவில் அதிகரித்துள்ளது. இதனால், மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பு, பாதிக்கப் பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பினைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்ட இராஜமன்னார் குழு இப் பிரசினையை முன்பே கவனித்தது. தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஆறாவது நிதிக்குழு, மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பினை, ஓழுங்கான முறையில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கூற வேண்டும்.

அட்டவணை

தலா வரிவருவாய் (1967-'68)—(1964'65) ஆம்
(Per Capita Tax Revenue (1967-68) As

States மாநிலங்கள்	(Taxes on land) நிலவரி	(State Excise) மாநில ஆயத்தீர்வை	(Taxes on Transport) போக்குவரத்து வரி	(General Sales Tax) பொது விற்பனை வரி	(Inter Sales Tax) இடை விற்பனைவரி
1	2	3	4	5	6
1. Punjab பஞ்சாப்	1·38	11·31	4·43	9·34	3·26
2. Mabarashtra மகாராட்டிரம்	1·91	0·90	5·76	14·09	5·25
3. Gujarat குஜராத்	3·54@	0·26	4·98	12·04	3·15
4. Tamil Nadu தமிழ்நாடு	1·85	0·20	5·89	11·01	2·76
5. Haryana அரியானு	1·57	6·86	4·24	6·15	3·89
6. Kerala கேரளம்	2·64	4·73	4·81	10·39	1·33

எண் 69

ஆண்டின் தலாவருமானத்தில் சதவீதம்

Percentage of Per Capita Incomes (1964-65)

(In Rupees)
(ரூபாயில்)

7 (Stamps and Registration) முத்திரை வரி, பதிவு வரி	8 (Other Taxes and Duties) இதர வரிகளும், தீர்வைகளும்	9 (Total Tax Revenue) மொத்த வரி வருவாய்	10 (Per Capita Income 1964-65) தலா வருவாய்	11 (Per Capita Tax Revenue as% of average for all states) மாநிலங்களின் சராசரியில், தலா வரி வருவாய்ச் சதவீதம்	12 (Per Capita State Incom as% of per Capita average income for all sta es மாநிலங்களின் தலா சராசரி வருவாயில் தலா மாநில வருவாயின் சதவீதம்	13 (Per Capita Tax Revenue as% of per Capital Income தலா வருமானத்தில் தலா வரி வருவாய்ச் சதவீதம்
4·64	3·10	37·46	575	170·9	137·5	6·5
2·44	6·15	36·50	526	166·5	126·8	6·9
1·91	3·71	29·69	523	135·0	125·1	5·7
3·58	4·08	29·37	434	134·0	103·8	6·8
3·96	2·28	28·95	504	132·1	120·6	5·7
2·62	0·92	27·44	393	125·2	94·0	7·0

அட்டவணை

	1	2	3	4	5	6
7.	West Bengal மேற்கு வங்காளம்	2·36	3·21	3·42	6·64	4·79
8.	Mysore மைசூர்	3·42	2·62	4·24	7·80	1·67
9.	Andhra Pradesh ஆந்திரப்பிரதேசம்	1·96	3·96	2·99	6·88	1·08
10.	Rajastan இராஜஸ்தான்	4·25	3·26	2·42	6·94	1·07
11.	Jammu & Kashmir ஜம்மு, காஷ்மீர்	1·49	4·46	9·26	2·57	—
12.	Assam அஸ்ஸாம்	6·10@	2·10	3·04	5·23	0·42
13.	Madhya Pradesh மத்தியப்பிரதேசம்	1·94	3·16	2·21	5·11	1·99
4.	Uttar Pradesh உத்திரப்பிரதேசம்	3·03	2·38	1·70	4·10	0·42
15.	Orissa ஒரிஸ்ஸா	0·83	1·43	1·57	3·69	2·12
16.	Bihar பீகார்	0·64	2·02	1·06	3·70	2·20
	Total மொத்தம்	2·36	2·63	3·28	7·18	2·74

@ Including royalty on mineral oil

Sources : 1. columns 2 to 9.
2. Columns 10 - Central Statistical Organisation, Government of India

எண் 69 - (தொடர்ச்சி)

7	8	9	10	11	12	13
2·56	3·32	26·30	4·98	120·0	119·1	5·3
2·05	1·48	23·28	420	106·2	100·5	5 5
2·01	0·78	19·67	438	89·7	104·8	4·5
0·98	0·58	19·50	356	89·0	85·2	5·5
1·10	0·56	19·44	341	88·7	81·6	5·7
1·01	0·76	18·66	441	85·1	105·5	4·2
1·16	1·37	16·94	373	77·3	89·2	4·5
1·24	1·73	14·60	374	6·66	89·5	3·9
1·02	1·46	12·12	347	55·3	83·0	3·5
1·32	1·12	12·06	299	55·0	71·5	4·0
1·95	1·78	21·92	418	100·0	100·0	5·2

அறிக்கை I

மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டநிலை
(Budgetary Position of Individual State Governments)

(On Revenue Account)
(வரி வருவாய்)

State / Year மாநிலம் / ஆண்டு	Revenue (வரி வருவாய்)						
	State Revenue மாநில வரிவருவாய்			Transfer from Centre மத்திய அரசிடமிருந்து பெறுவது			
	Tax Revenue வரிவருவாய்	Non-tax Revenue வரியல்லாத வருவாய்	Total மொத்தம்	Share-in-Central Taxes மத்திய அரசின் வரிகளில் பங்கு	Grants in Aid உதவி நிதி	Total மொத்தம்	Total மொத்தம்
1	2	3	4	5	6	7	8
Andhra Pradesh ஆந்திரப்பிரதேசம்							
1960-61	37·67	14·74	52·41	14·71	13·44	28·15	80·56
1965-66	69·61	31·14	100·75	21·65	23·92	45·57	146·32
1970-71	136·06	25·95	162·01	57·16	41·17	98·43	260·34

1971-72	138·09	35·25	173·34	71·27	54·55	125·82	299·16
1972-73 R.E.	139·20	39·75	178·95	80·52	59·10	139·62	318·57
1973-74 B.E.	146·32	32·34	178·66	85·15	56·34	141·49	320·15
Assam அஸ்ஸாம்							
1960-61	11·99	5·07	17·06	4·83	10·78	15·61	32·67
1965-66	21·61	5·17	26·78	9·10	25·81	34·91	61·69
1970-71	28·14	5·64	33.78	17·89	47·25	65·14	98·92
1971 72	32·54	6·19	38·73	22·26	54·83	77·09	115·82
1972-73 R.E.	29·29	12·01	41·31	25·15	51·76	76·91	118·22
1973-74 B.E.	32·78	13·41	46·19	26·58	63·13	89·71	135·90
Bihar பீஹார்							
1960-61	31·09	11·48	42·57	15·89	20·11	36·00	78·57
1965-66	56·63	18·65	75·28	26·32	22·70	49·02	124·30
1970-71	79·17	18·97	98·14	84·20	31·60	115·80	213·94
1971-72	87·54	17·01	104·55	103·53	40·34	143·87	248·42
1972-73 R·E·	100·07	32·24	132·31	117·35	58·20	175·55	307·86
1973-74 B.E·	109·61	33·93	143·54	125·22	66·84	192·06	335·60

மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டநிலை — (தொடர்ச்சி)

1	2	3	4	5	6	7	8
Gujarat குஜராத்							
1960-61	20·65	9·24	29·89	17·09	4·87	21·96	51·85
1965-66	50·90	25·20	76·10	16·57	21·07	37·64	113·74
1970-71	108·08	39·23	147·31	37 79	23·82	61·61	208·92
1971-72	125·09	47·16	172·25	47·20	26·80	74·00	246·25
1972-73 R.E.	139·50	40·52	180·02	52·02	53·41	105·45	285·47
1973-74 B.E.	144·37	40·93	185·30	55·83	59·92	115·75	301·05
Haryana அரியானா							
1960-61	—	—		—	—		—
1965-66	—	—		—	—		—
1970-71	44·28	17·73	62·01	12·28	9·52	21·80	83·81
1971-72	51·51	18·83	70·34	13·32	12·17	25·49	95·83
1972-73 R E.	59·34	19·16	78·50	16·92	13·55	30·47	108·97
1973-74 B.E.	65·09	17 84	82·93	18·23	15·99	34·22	117·15

Jammu & Kashmir *ஜம்மு, காஷ்மீர்*							
1960-61	1·71	8·33	10·04	2·12	5·97	8·09	18·13
1965-66	3·16	8·09	11·25	3·64	11·91	15·55	26·80
1970-71	7·10	9·86	16·96	6·99	30·19	37·18	54·14
1971-72	7·91	8·24	16·15	8·67	37·20	45·87	62·02
1972-73	11·96	13 01	24·97	9·83	48·59	58·42	83·39
R.E. 1973-74 B E.	12·07	13·35	25·42	10·44	55·10	65·54	90·96
Kerala *கேரளம்*							
1960-61	20·06	10·97	31·03	6·07	7·20	13·27	44·30
1965-66	38·56	15·46	54·02	11·60	14·71	26·38	80·40
1970-71	67·98	23·36	91·34	30·23	24·68	54·91	146·25
1971-72	74·69	34·44	109·13	36·77	28·21	64·98	174·11
1972-73	83·87	32·99	116·86	43·18	35·17	78·35	195·21
R.E. 1973-74 B.E.	87·63	30·33	117·96	45·56	41·38	86·94	204·90

மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டநிலை — (தொடர்ச்சி)

1	2	3	4	5	6	7	8
Madhya Pradesh மத்தியப்பிரதேசம்							
1960-61	27·09	15·47	42·56	11·89	14·17	26·06	68·62
1965-66	48·96	29·83	78·79	19·27	19·54	38·81	117·60
1970-71	86·59	51·15	137·74	56·32	27·73	84·05	221·79
1971-72	94·90	58·74	153·64	69·64	39·25	108·89	262·53
1972-73 R E.	109·16	60·51	169·67	74·35	59·43	133·78	303 45
1973-74 B E.	112·94	61·33	174·27	83·41	67·70	151·11	325·38
Maharashtra மகாராட்டிரம்							
1960-61	64·24	25·27	89·51	15·70	10·08	25·78	115·29
1965-66	122·43	43·50	165·93	30·58	24·96	55·54	221·47
1970-71	255·56	65·62	321·18	80·40	29·56	109·96	431 14
1971-72	274·57	73·58	348·15	101·03	45·43	146·46	494·61
1972-73 R E.	298·91	74·45	373·36	109·38	97·93	207·31	580·67
1973-74 B.E.	344·49	83·39	427·88	120·93	104·42	225·35	653·23

Mysore மைசூர்							
1960-61	21·24	14·89	36·13	8·93	14·67	23·60	59·73
1965-66	46·45	24·73	71·18	14·81	18·29	32·47	103·65
1970-71	101·74	45·63	147·37	37·72	21·76	59·48	206·85
1971-72	113·59	36·99	150·58	47·39	27·78	75·17	225·75
1972-73 R E.	128·29	45·62	173·91	53·44	37·80	91·24	265·15
1973-74 B.E.	132·95	48·05	181·00	56·74	44·73	101·47	282·47
Orissa ஒரிஸ்ஸா							
1960-61	8·51	8.05	16·56	6·25	10·97	17·22	33·78
1965-66	19·75	22·91	42·66	13·00	20·60	33·60	76·36
1970-71	33·27	16·99	50·26	30·46	38·93	69·39	119·65
1971-72	34·70	18.34	53·04	37·65	44·24	8·89	134·93
1972-73 R.E.	37·32	20·09	57·41	42·27	52·42	94·69	152·10
1973-74 B.E.	39·16	20·70	59·86	45·37	51·93	97·30	157·16

மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டநிலை — (தொடர்ச்சி)

1	2	3	4	5	6	7	8
Punjab பஞ்சாப்							
1960-61	25·52	22·50	48·02	8·71	8·71	17·42	65·44
1965-66	55·91	37·86	93·77	14·97	19·74	34·71	128·48
1970-71	86·02	34·28	120·30	18·24	14·21	32·45	152·75
1971-72	92·24	18·54	110·78	22·88	20·95	43·83	154·61
1972-73 R.E.	105·11	18·25	123·36	25·89	34·25	60·14	183·50
1973-74 B.E.	108·41	20·05	128·46	27·35	28·81	56·16	184·62
இராஜஸ்தான் Rajasthan							
1960-61	17·70	11·38	29·08	7·49	9·20	16·59	45·67
1965-66	35 43	29·17	64·60	12·53	18 51	31·04	95·64
1970-71	60·46	21 13	81·64	34·93	38·97	73·90	155·54
1971-72	65·67	20·63	86·30	43·30	42·02	85·32	171·62
1972-73 R.E.	73·65	25·75	99·40	48·81	62·59	111·40	210·80
1973-74 B.E.	82·50	23·89	106·39	52·37	78·25	130·62	237·01

Tamil Nadu							
தமிழ் நாடு							
1960-61	37·82	23·13	60·95	14·62	13·81	28·43	89·38
1965-66	83·21	35·06	118·27	20·66	23·71	44·37	162·64
1970-71	143·85	49·27	198·12	57·35	25·99	83·34	281·46
1971-72	191·53	63·70	255·23	72·18	36·45	108·63	363·86
1972-73	211·70	72·77	284·47	85·78	42·75	123·53	413·00
R.E.							
1973-74	223·72	61·96	285·68	96·38	54·20	150·58	436·26
B.E.							
Uttar Pradesh							
உத்திரப் பிரதேசம்							
1960-61	56·95	27·19	84·14	29·77	21·41	51·18	135·32
1965-66	95·29	51·34	146·63	37·26	40·34	77·60	224·23
1970-71	152·86	77·57	230·43	127·96	52·55	180·51	410·94
1971-72	155·71	70·87	226·58	157·25	63·29	220·54	447·12
1972-73	161·99	80·10	242·09	176·32	80·01	256·33	498·42
R E.							
1973-74	180·13	89·58	269·71	188·92	148·97	337·89	607·60
B.E.							

மாநில அரசுகளின் வரவுசெலவுத் திட்டநிலை—(தொடர்ச்சி)

1	2	3	4	5	6	7	8
West Bengal மேற்கு வங்காளம்							
1960-61	48·69	15·93	64·62	18·30	12·18	30·48	95·10
1961-62	94·11	24·35	118·96	24·42	23.62	48·04	167·00
1970-71	128·97	18·04	147·01	62·67	46·11	108·78	255·79
1971-72	144·98	18·62	163·60	78·37	170·27	248·64	412·24
1972-73 R.E.	170·76	29·65	200·41	87·47	67·52	154·99	361·00
1973-74 B.E.	177·73	35·25	212.98	92·47	58·31	150·78	363·76
Meghalaya மேகாலயா							
1960-61	—	—	—	—	—	—	—
1965-66	—	—	—	—	—	—	—
1970-71	0·10	0·14	0·24	1·47	10·30	11·77	12·01
1971-72	0·24	0·60	0·84	1·82	25·82	27·64	28·48
1972-73 R.E.	1·04	0·33	1·37	2·04	14·71	16·75	18·12
1973-74 B.E.	0·94	0·35	1·29	2·07	16·97	19·04	20·33

Nagaland நாகாலாந்து							
1960-61	—	—	—	—	—	—	—
1965-66	—	—	—	—	—	—	—
1970-71	0·33	0·35	0·68	0·60	28·13	28·73	29·41
1971-72	0·51	0·33	0·84	0·81	26·01	26·82	27·66
1972-73 R.E.	1·11	0·25	1·36	0·89	34·92	35·81	37·17
1973-74 B.E.	1·19	0·47	1·66	1·14	31·38	32·52	34·18
Tripura திரிபுரா							
1960-61	—	—	—	—	—	—	—
1965-66	—	—	—	—	—	—	—
1970-71	—	—	—	—	—	—	—
1971-72	0·18	0·32	0·50	0·41	16·14	16·55	17·05
1972-73 R.E	0·66	0·45	1·11	2·34	19·51	21·85	22·96
1973-74 B.E.	0·71	(-)0·18	0·53	2·51	20·79	23·30	23·83

மாநில அரசுகளின் வரவுசெலவுத் திட்டநிலை — (தொடர்ச்சி)

1	2	3	4	5	6	7	8
Manipur மணிபூர்							
1960-61	—	—	—	—	—	—	—
1965-66	—	—	—	—	—	—	—
1970-71	0·77	(-) 0·44	0·33	—	13·64	13·64	13·97
1971-72	0·71	(-) 0·25	0·46	0·24	14 34	14·58	15·04
1972-73 R.E.	1·07	0·07	1 14	1·57	14·84	16·41	17·55
1973-74 B.E.	1·21	0·31	1·52	1·69	16·69	18·38	19·90
Himachal Pradesh இமாலயப் பிரதேசம்							
1960 61	—	—	—	—	—	—	—
1965-66	—	—	—	—	—	—	—
1970 71	1·52	0·69	2·21	0·99	9·67	10·67	12·87
1971-72	8·38	6·64	15·02	6·23	26·36	32·59	47·61
1972-73 R.E.	9·09	6·81	15·90	7·39	29·00	36·39	52·29
1973-74 B.E.	9·61	5·47	15 08	7·95	31·74	39·69	54·77

தற்போதைய வரி வருவாயிலிருந்து பாக்கி
(Balance From Current Revenues)

உபரி பற்றுக்குறை
Surplus (+) Deficit (−)
ரூ. கோடியில்
(Rs. Crores)

மாநிலம் / ஆண்டு (State / Year)	மொத்த வரி வருவாய் (Total Revenue Receipts)	மொத்த வரு வாய்ச் செலவு (Total Revenue Expenditure)	மீதி + அல்லது பற்றுதது (−) (Balance Surplus (+)or deficit (−)
1	2	3	4
1. ஆந்திரப்பிரதேசம் (Andhra Pradesh)			
1960-61	80·56	64·24	16·32
1965-66	146·32	154·10	(−) 7·78
1970-71	260·34	260·77	(−) 0·43
1971-72	292·83	296·86	(−) 10·45
2. அஸ்ஸாம் (Assam)			
1960-61	32·67	36·40	(−) 3·73
1965-66	61·69	77·54	(−) 15 85
1970-71	98·92	118·66	(−) 19 74
1971-72	128·99	141·70	(−) 12·71
1972-73	112·45	118·14	(−) 5·69
3. பீகார் (Bihar)			
1960-61	78·57	64·83	14 34
1965-66	124 30	121·63	2·67
1970-71	213·94	233·69	(−) 19·75
1971-72	273 66	302 55	(−) 28 89
1972-73	293 00	298·28	(−) 5·28
4. குஜராத் (Gujarat)			
1960-61	51·85	42·86	8·99
1965-66	113 74	111·80	1·94
1970-71	208·92	206·39	2·53

தற்போதைய வரி வருவாயிலிருந்து பாக்கி — (தொடர்ச்சி)

1	2	3	4
1971-72	232·74	212·02	20·72
1972-73	255·26	234·89	20·37
5. அரியாணு (Haryana)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	83·81	78·02	5·79
1971-72	103·90	89·22	14·68
1972-73	116·29	97·21	19·08
6. ஜம்மு, காஷ்மீர் (Jammu and Kashmir)			
1960-61	18·13	14·58	3·55
1965-66	26·80	27·60	(—) 0·80
1970-71	54·14	57·42	(—) 3·28
1971-72	66·53	77·24	(—) 10·71
1972-73	89·12	94·36	(—) 5·24
7. கேரளம் (Kerala)			
1960-61	44·30	45·01	(—) 0·71
1965-66	80·40	80·13	0·27
1970-71	146·25	159·23	(—) 12·98
1971-72	175·97	182·89	(—) 6·92
1972-73	185·55	204·14	(—) 18·59
8. மத்தியப் பிரதேசம் (Madya Pradesh)			
1960-61	68·62	59·87	8·75
1965-66	117·60	120·21	(—) 2·61
1970-71	221·79	197·70	24·09
1971-72	260·62	229·91	30·71
1972-73	288·89	278·65	10·24
9. மகாராட்டிரம் (Maharashtra)			
1960-61	115·29	103·32	11·97
1965-66	221·47	235·20	(—) 13·73
1970-71	431·14	433·15	(—) 2·01

தற்போதைய வரி வருவாயிலிருந்து பாக்கி — (தொடர்ச்சி)

1	2	3	4
1971-72	489·13	515·82	(—) 26·69
1972-73	543·38	534·49	8·89
10. மைசூர் (Mysore)			
1960-61	59·73	54·42	5·31
1965-66	103·65	108·63	(—) 4·98
1970-71	206·85	212·66	(—) 5·81
1971-72	233·34	236·28	(—) 2·94
1972-73	264·98	257·68	7·30
11. ஒரிஸ்ஸா (Orissa)			
1960-61	33·78	33·05	0·73
1965-66	76·26	87·18	(—) 10·92
1970-71	119·65	123·70	(—) 4·05
1971-72	111·52	164·65	(—) 23·13
1972-73	144·10	159·79	(—) 15·69
12. பஞ்சாப் (Punjab)			
1960-61	65·44	59·99	5·45
1965-66	128·48	113·94	14·54
1970-71	152·75	118·48	34·27
1971-72	157·86	145·42	12·44
1972-73	177·95	165·43	12·52
13. இராஜஸ்தான் (Rajasthan)			
1960-61	45·57	40·18	5·49
1965-66	95·64	99·64	(—) 3·51
1970-71	155·54	206·96	(—) 51·42
1971-72	180·61	196·71	(—) 16·10
1972-73	198·07	214·94	(—) 16·87

தற்போதைய வரி வருவாயிலிருந்து பாக்கி — (தொடர்ச்சி)

1	2	3	4
14. தமிழ்நாடு (Tamil Nadu)			
1960-61	89·38	80·22	9·16
1965-66	162·64	170·50	(—) 7·86
1970-71	281·46	289·05	(—) 7·59
1971-72	342·34	340·60	1·74
1972-73	369·49	367·00	2·49
15. உத்திரப்பிரதேசம் (Uttar Pradesh)			
1960-61	135·32	120·96	14·36
1965-66	224·23	219·91	4·32
1970-71	410·94	339·40	71·54
1971-72	430·49	442·24	(—) 11·75
1972-73	458·93	477·07	(—) 18·14
16. மேற்கு வங்காளம் (West Bengal)			
1960-61	95·10	89·05	6·05
1965-66	167·00	164·72	2·28
1970-71	255·79	294·68	(—) 38·89
1971-72	437·11	478·71	(—) 41·60
1972-73	332·72	359·59	(—) 26·87
17. நாகாலாந்து (Nagaland)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	29·41	23·80	5·61
1971-72	27·24	27·06	0·18
1972-73	29·86	28·29	1·57

தற்போதைய வரி வருவாயிலிருந்து பாக்கி — (தொடர்ச்சி)

1	2	3	4
18. மேகாலயா (Meghalaya)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	12·01	9·19	2·82
1971-72	27·74	24·85	2·89
1972-73	16·98	18·39	(—) 1·41
19. மணிப்பூர் (Manipur)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	13·97	13·92	0·05
1971-72	15·72	15·72	0·00
1972-73	17·62	17·62	0·00
20. திரிபுரா (Tripura)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	—	—	—
1971-72	—	—	—
1972-73	22·49	27·00	(—) 4·51
21. இமாலயப் பிரதேசம் (Himachal Pradesh)			
1960-61	—	—	—
1965-66	—	—	—
1970-71	12·87	12·97	(—) 0·10
1971-72	47·35	52·69	(—) 5·34
1972-73	50·21	57·16	(—) 6·95

மேற்கோள் நூற் பட்டியல்

ADARKAR, B. P., "The Principles and Problems of Federal Finance," London, 1933

ALAK GHOSH, "Indian Economy," Calcutta, 1966

AMBEDKAR, B. R., "The Evolution of Provincial Finance in British India," London, 1925

BALAKRISHNA, R., "Recent Trends in Indian Finance," Madras, 1955

BALAKRISHNA, R., "Indian Economic Problems," Bangalore, 1958

BALJIT SINGH, "Federal Finance and Under-developed Economy" Bombay, 1952

BENJAMIN HIGGINS, "Economic Development," Allahabad, 1966

BHARGAVA, R. N., "The Theory and Working of Union Finance in India," Allahabad, 1967

BRIGHT SINGH, D., "Economics of Development," Asia Publishing House, 1969

BHATTACHARYA, K. N., "India's Fourth Five Year Plan", Asia Publishing House, 1966

BHOURSKAR, K. M., "Municipal Finance in Certain Leading Indian States," Bombay, 1954

BHORKAR, V. V., "Public Finance and Full Employment With Special Reference to Under-developed Areas," University of Bombay, 1959

CHANDA A. K., "Federalism in India," 1965

CHELLIAH RAJA, J., "Fiscal Policy in Under-developed Countries," Allen and Unwin, London

CHIDAMBARAM, S., "Financial Federalism in India." University of Madras, MSS, 1971

CHOPRA, O. A., "Taxation of Gifts and Wealth and Expenditure Tax in India," 1959

DALTON, H., "Principles of Public Finance," London, 1954

DANDEKAR V. M. and NILKANTHA RATH, "Poverty in India," Bombay, 1971

DASGUPTA, B, "Provincial Taxation Under Autonomy," 1948

DATTA, B, "The Economics of Industrialisation" — Calcutta, 1952

DESHMUKH, C. D., "Economic Development in India," Asia Publishing House, Bombay, 1958

D'SOUZA, V. L , "The Changes and Phases of Indian Economy" Madras, 1965

DUE, J. H , "Government Finance", Illinois, 1954

ELHANCE, D. N., Economic Statistics of India Since Independence', Kihab Mahal, Allahabad, 1962

GADGIL, D. R , "Planning and Economic Policy in India", Poona, 1962

GANDHI, V. P., "Tax Burden on Indian Agriculture," Harvard Law School, 1966

GOPAL, M. H., "Financial Policy of The Indian Union", 1947-'57, Delhi

GHOSH, V. K., "The Indian Financial System," Allahabad, 1957

GROVES, H. M., 'Post-War Taxation and Economic Progress", New York, 1946

GROVES, H. M., "Financing Government", New York, 1955

GYAN CHAND, "Federal Finance", Delhi, 1930.

GULATI, I. S. "Capital Taxation in a Developing Economy", 1957

HANSON, A. H., "Fiscal Policy and Business Cycles, London 1941

HANSON, A. H. & PARLOFF, H. S., "State and Local Finance in the National Economy", New York, 1944

HICKS, U K., "Public Finance", London, 1955

HICKS, U. K., "Development Finance", Oxford - 1965

HICKS, U. K., "Development From Below", Oxford University Press, 1951

INDIAN CHAMBER OF COMMERCE, "Objectives of Taxation Policy", Calcutta, 1954

JAYARAMAN, K., "A Study of Panchayats in Madras", Bombay, 1947

KALDOR, N , "An Expenditure Tax", London, 1956

KUMARAPPA, J. C., "Public Finance and our Poverty", Ahmedabad, 1945

KRISHNASWAMY, J., "Studies in Local Finance and Taxation", Local Self-Government Institute, Bombay, 1958

LAKDAWALA, D. T , "Taxation and The Plan," Bombay, 1956

LAKDAWALA, D. T., "Union - State Financial Relations," Bombay 1967

LAKDAWALA, D. T., "Mobilisation of State Resources in India", Madras, 1972

LEUIS, W. A., "The Theory of Economic Growth," London, 1955

MISHRA, B. R., ' Indian Provincial Finance," Bombay, 1960

MUSGRAVE, R. A., "The Theory of Public Finance," Tokyo, 1959

NATIONAL COUNCIL OF APPLIED ECONOMIC RESEARCH — Taxation and Foreign Investment", Delhi, 1961

NATARAJAN, D., "Madras Finance", — Seminar Papers (Unit for training in the methods of Applied Social Science Research University of Madras, 1960 & 61, p. 141)

NURKSE, R , "Problems of Capital Formation in Under-developed Countries", Oxford, 1953

PIGOV, A. C., "A Study in Public Finance", London, 1952

PREST, A R. "Public Finance in Theory and Practice", London, 1960

PREST, A. R., "Public Finance in Under-developed Countries", London, 1962

RAGNEKAR, O. K., "Poverty and Capital Development in India", Oxford University Press, 1957

RAO, U. K. R. V., "Essays in Economic Development," Asia Publishing House, 1964

RAJKUMAR, P. V., "Economics of Wealth Taxation" — Seminar Papers (Unit for training in the methods of Applied Social Science Research, University of Madras, 1960 & 61) p. 75

RAJKUMAR P. V., "Integrated Tax Structure For India," MSS. Thesis for M.Litt Degree, University of Madras, 1962

Dr. RAJKMAR, P. V., "Local Finance and Economic Development in India", Doctoral Thesis, University of Madras, 1972

Dr RAJENDRA JAIN, "State Taxation in India," Bhopal, 1972

SAHOTA, G. S., "Indian Tax Structure and Economic Development" Asia Publishing House, Bombay, 1961

SANTHANAM, K, "Union-State Relations in India", Asia Publishing House, 1960

SAPRE N. B., "Inter Governmental Fiscal Relations and Grants-in-aid with special reference to India" Doctoral thesis of the Poona University, 1963

SASTRI, K.V.S., "Federal State Fiscal Relations in India" 1966,

SONACHALAM, K.S., "State Finances in India" University of Madras, 1973.

SHAH, K. T., "Federal Finance in India"

SHAH, K.T., "Review of Indian Finance," 1927—'34.

SHANMUGASUNDARAM, V., "Recent Trends in Federal Finance" (University of Madras, MSS, 1955).

SHANMUGASUNDARAM, V., "The Finance Commission of India and the Commonwealth Grants Commission of Australia" (Indian year Book of International Affairs, University of Madras, 1956.)

SHIRRAS, G. FINLAY, "Public Finance" London, 1944.

SHIRRAS, G. FINLAY, "Federal Finance in Peace and War," London, 1944.

SINGH, B., "Federal Finance and Underdeveloped Economy" Bombay, 1962

SHROFF, A.D., "On Planning and Finance in India," Lalvani Publishing House, 1966

SIMONS, H.C., "Income Taxation," New York, 1938.

SITESH PRAKASH, "Financing of Planned Development," 1966.

TRIPATHY, R. N., "Fiscal Policy and Economic Development in India," Calcutta, 1958.

THOMAS, P. J., "The Growth of Federal Finance in India." London, 1939.

TAYLOR, "Economics of Public Finance," New York.

VICKNEY, "Agenda For Progressive Taxation," 1947.

VEERA RAGAVACHARI, S. M., Union State Financial Relations in India," Delhi, 1969.

Periodicals

Eastern Economist.

Economy Weekly.

Reserve Bank Bulletins and Reports on Currency Finance & Banking.

Capital.

Commerce.

Indian Economic Journal.

The Indian Journal of Public Administration.

Bank of India Bulletin.

Financial Express.

Economic Times.

Economic Survey of Asia and Far East

Official Reports

National Planning Committee Reports (On Public Finance).

The Report of the Indian Taxation Enquiry Committee, 1924.

The Government of India Act, 1935.

The Report of the Expert Committee on Financial Provisions of the consititution, 1947.

The Report of the Indian States Finances Enquiry Committee, 1949-'50.

The Constitution of India.

The Taxation Enquiry Committee Reports in three Volumes, 1953-'54.

Kaldor's Report on Indian Tax Reforms, 1956.

Reports of Finance Commissions, 1952, 1957, 1961, 1965 and 1969.

Five year Plans (Government of India), 1952, 1956, 1961, 1966-Mid-term appraisals and 1969.

Report of the Direct Taxes Administration Enquiry committee (Sri. Mahabir Thyagi), 1958-'59

Report on Rationalisation and Simplification of the Tax Structure (Sri. S. Boothalingam.), 1968.

Report of the working Group on Central Direct Taxes Administration (Administration Reforms Commission), 1968.

Report of Direct Taxes Enquiry Committee (Sri Justice K.N. Wanchoo), 1972.